THAIVEEDU MARCH 2023 மார்ச் www.thaiveedu.com

# தாய்வீடு



## மக்கள் பணியாளர்
## அன்ரன் சின்னராசா பிலிப்
## 1952 - 2023

## இலங்கைத் தீவில் நிர்வாணமாக நிற்கும் சிங்கள பௌத்தத் தேசியவாதமும் நிர்க்கதியாகும் தமிழர் தேசமும்
- செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை



## ஆறுமுக நாவலரும் மேனாட்டுப் புலமையாளர்களும் - ஓர் அறிமுகக் குறிப்பு
- மைதிலி தயாநிதி

## அழிவின் விளிம்பில் மலையக மக்களின் தேசிய அடையாளம்
- என். சரவணன்




NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Buying Selling Leasing Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
Dir. 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375
(திங்கள் முதல் வெள்ளி 9:00மணி முதல் 5:00மணி வரை)


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
1193A Brimley Rd. #7
Toronto, Ontario, M1C 5G3
T: 416.939.8789
F: 416.439.1965
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
ரமணி (இலங்கை),
சௌந்தர் (இங்கிலாந்து),
றஷ்மி (இங்கிலாந்து).
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
சர்வேசன்,
துசியந்தன் துரைரத்தினம்.

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,
சசி,
மெய்யழகன்.

**மொன்றியால் தொடர்பு**
சுகுமாரன் சின்னையா.

**ஒட்டாவா தொடர்பு**
அலெக்ஸ் சிவசம்பு: 613-276-7253

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel :416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

## பெண்கள் வாழ்கென்று கூத்திடுவோம்!

இம்மாதம் 8-ஆம் நாள் அனைத்துலகப் பெண்கள் நாள் கொண்டாடப்படும். 1975-ஆம் ஆண்டிலே ஐக்கிய நாடுகள் பொதுச்சபை, மார்ச் 8-ஐ அனைத்துலகப் பெண்கள் நாளாக அறிவித்ததிலிருந்து இன்றுவரை இந்நாளானது நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் உத்தியோகபூர்வ நிகழ்வுகளால் அலங்கரிக்கப்படுவதோடு அவற்றுள் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட நாடுகளில் விடுமுறை நாளாகவும் கொண்டாடப்படுகிறது.

வரலாற்றில் கொண்டாடப்பட்ட முதலாவது பெண்கள் நாளெனக் கருதப்படுவது 1909 பெப்ரவரி 28 அன்று அமெரிக்காவின் நியூ யோர்க் நகரில் தையற்றொழிலில் ஈடுபட்டிருந்த பெண்களால் தமது தொழில்சார் உரிமைகள் தொடர்பாக நடத்தப்பட்ட போராட்டமே. அந்தப் போராட்டம் நடைபெற்றபோது அமெரிக்காவில் பெண்களுக்கு முழுமையான வாக்குரிமையே இருக்கவில்லை. அது 1920-இலேயே வழங்கப்பட்டது. வரலாற்றில் மிக முக்கியமான பெண்கள் நாட் கொண்டாட்டமாகக் கருதப்படுவது ஐரோப்பா தழுவிய வகையில் 1911 மார்ச் 19 அன்று இடம்பெற்ற நிகழ்வாகும். பாரிஸ் கம்யூன் புரட்சியின் 40-ஆம் ஆண்டு நினைவாக இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டதாக வரலாறு பதிவுசெய்துள்ளது. இது இடம்பெற்றபோது ஐரோப்பாவின் முக்கிய நாடுகளில் பெண்களுக்கு முழுமையான வாக்குரிமை இருக்கவில்லை. ஐக்கிய இராச்சியத்தில் 1928-ஆம் ஆண்டிலேயே பெண்களுக்கும் ஆண்களுக்குச் சமமான வாக்குரிமை வழங்கப்பட்டது. ஃபிரான்சோ 1944-இலேதான் ஐரோப்பாவின் கடைசி நாடாக பெண்கள் வாக்குரிமையை அங்கீகரித்தது. மார்ச் 8-ஆம் நாள் இடம்பெற்ற முதலாவது பெண்கள் நாள், சோவியத் யூனியனில் 1917-இல் பெண்ணியவாதி அலெக்ஸாண்ட்ரா கொலன்டாய் அவர்களின் முனைப்பினால் நடைபெற்றது. அதன் முக்கியத்துவத்தை அங்கீகரித்து அந்நாளைய சோவியத் யூனியன் அதிபர் லெனின் மார்ச் 8-ஆம் நாளை தேசிய பெண்கள் நாளாகவும் விடுமுறை நாளாகவும் அறிவித்தார். அதே ஆண்டில் சோவியத் யூனியனில் பெண்களுக்கு வாக்குரிமையும் வழங்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட அனைத்துப் பெண்கள் நாள் நிகழ்வுகளிலும் பெண்களுக்கான வாக்குரிமைக் கோரிக்கை வலுவானதாக இருந்திருக்கிறது. சம வாக்குரிமைக் கோரிக்கைச் செயற்பாட்டாளர்களே இந்தப் போராட்டங்கள் பலவற்றையும் முன்னின்று நிகழ்த்தியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் பெண்களுக்கெதிரான ஏனைய ஒடுக்குதல்களையும் முடக்குதல்களையும் வாக்கின் பலத்தால் பெண்களே வீழ்த்திவிடலாம் என்ற எண்ணமே. இந்த எண்ணம் ஓரளவே ஈடேறியிருக்கிறது என்பதே வரலாற்று ஏமாற்றம். இன்று வத்திக்கான் தவிர்த்து உலகின் அனைந்து நாடுகளிலும் பெண்களுக்கு வாக்குரிமை இருக்கிறது. ஆனால் இந்த நாடுகளிலெல்லாம் பெண்கள் ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாக வாழ்கிறார்களா என்று கேள்வி எழுப்பினால், நேர்மையான பதில் - 'இல்லை' என்றே வரும்.

பெண்ணுரிமை உச்சம் பெற்றுவிட்டதாய்ப் பலரும் புளகாங்கிதமடையும் மேற்குலக நாடுகளிற்கூட பெண்ணுரிமைக்கான போராட்டம் இன்னமும் முனைப்புடன் தொடரவேண்டிய விடயமாகவே உள்ளது. அமெரிக்காவின் உச்ச நீதிமன்றமானது கடந்த ஆண்டு அந்நாட்டுப் பெண்களின் இனப்பெருக்க உரிமையைக் களவாடிய நிகழ்வு இதற்குச் சிறந்த உதாரணம். 1973 ஜனவரி 22-ஆம் நாள், அமெரிக்க உச்ச நீதிமன்றம், தாங்கள் விரும்பாத கருவைக் கலைப்பதற்கு பெண்களுக்கு உரிமையுண்டு எனத் தீர்ப்பு வழங்கியது. நீண்டகாலம் போராடிப்பெற்ற உரிமை இது. அப்போது இந்தத் தீர்ப்புக்கு ஆதரவாக ஏழு ஆண்களும் எதிராக இரண்டு ஆண்களும் வாக்களித்தார்கள். உச்ச நீதிமன்றத்தின் அனைத்து ஒன்பது உறுப்பினர்களுமே ஆண்களாக இருந்த காலமது. பெண்களுக்கு தமது உடலின் மீதான அதிகாரத்தை வழங்கியதாகக் கருதப்படும் இந்தத் தீர்ப்பானது அடிப்படைவாதிகளால் எப்போதும் எதிர்க்கப்பட்டே வந்திருக்கிறது. அவர்களின் தொடர் எதிர்ப்பின் விளைவாக இந்த வழக்கு மீண்டும் 2022-இல் உச்ச நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்பட்டதையடுத்து ஜூன் 24-ஆம் நாள் 5 உச்ச நீதிபதிகளின் ஆதரவோடு அமெரிக்கப் பெண்களின் அந்த உரிமை பறிக்கப்பட்டது. அந்த ஐவரில் ஒரு பெண்ணும் அடக்கம்.

அமெரிக்காவில் வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பானது உலகெங்கணும் பெண்களின் கருக்கலைப்புக்கான உரிமையை பாதிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. இதன் தாக்கத்தினால் கனடா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஏற்கனவே கருக்கலைப்பு உரிமைச் சட்டங்களுக்கெதிராக மத அடிப்படைவாதிகள் தங்கள் போராட்டங்களைப் புதுப்பொலிவுடன் முடுக்கி விட்டுள்ளதையும் காணக்கூடியதாயுள்ளது.

ஆகவே, 21-ஆம் நூற்றாண்டின் இந்த எண்ணிம யுகத்திற்கூட பெண்களின் உடல்களைக் கட்டுப்படுத்தவும், உரிமைகளை மட்டுப்படுத்தவும் தொடுக்கப்படும் தாக்குதல்கள் ஓயவில்லை. அவை ஓயாதவரை அனைத்துலகப் பெண்கள் நாளின் முக்கியத்துவமும் குறையப்போவதில்லை.

இந்த நாளை வெறும் சடங்காகக் கடந்துபோகாமல் பெண்ணுரிமைக்கான முன்னுரிமையை வழங்க அனைவரும் உறுதி பூணும் நாளாகக் கொள்வதே இன்றைய தேவை.

தாய்வீடு

# இம்மாதத் தாய்வீட்டில்...


பெண்கள் வாழ்கென்று கூத்திடுவோம்! 3

இலங்கைத் தீவில் நிர்வாணமாக நிற்கும்
சிங்களபௌத்த தேசியவாதமும்
நிர்க்கதியாகும் தமிழர் தேசமும் 5
- செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை

நெத்தன்யாகுவின் நெற்றிக்கண் மீது பாலஸ்தீனம் 9
- ரதன்

ஊடக அதிகாரம்!
நிகழ்ச்சி நிரல்களின் தீர்மான சக்தி! 12
- ரூபன் சிவராஜா

அங்கீகரிக்கப்பட்ட போர் எனப்படும்
கொலைகளும் அவலங்களும் 15
- போல் ஜோசேப்

அழிவின் விளிம்பில்
மலையக மக்களின் தேசிய அடையாளம் 19
- என். சரவணன்

ஏட்டில் எழுதிவைத்தார் - அங்காதிபாதம் 400 30
- பால. சிவகடாட்சம்

மகரக்கட்டு மருத்துவத்தின் புதிய மைல்கல் 33
- பொன்னையா விவேகானந்தன்

வீட்டை உயர்ந்த விலைக்கு விற்பது எப்படி? 35
- வேலா சுப்ரமணியம்

ஒன்ராறியோ வாகனக் காப்புறுதிக் கட்டணம் 39
- செந்தூரன் புனிதவேல்

நில அதிர்வுகள் குறித்த முன்னெச்சரிக்கை? 40
- சுப்ரமணியம் ஜெயசீலன்

காட்சி விளைவுகளும் தொடர் புலம்பெயர்வுகளும் 44
- வேதநாயகம் தபேந்திரன்

கம்போடியாவில் சில நாட்கள் 46
- சி. நற்குணலிங்கம்

அடூரின் திரைப்படங்கள் 49
- ஓவியர் ஜீவா

சர்வதேச பெண்கள் தினம் 52
- குமார் புனிதவேல்

ஈழத்து - கனடிய இலக்கிய ஆளுமை
அமரர் கமலா பெரியதம்பி 53
- வே. விவேகானந்தன்

கடலோரக் கடற்கன்னிகள் 55
- குரு அரவிந்தன்

கலையாக்கங்களூடாக முன்னெடுக்கப்பட்டு வரும்
நூறு கோடி மக்களின் எழுச்சி 59
- து. கௌரீஸ்வரன்

பெண் உறுப்புச் சிதைப்பு
பேச விரும்பாப் பெரும் பொருள்! 61
- மா. சித்திவினாயகம்

மரண மங்கை - மனங்கவர் தூதர் -
ஸ்டாலினின் வீரப்பெண் 64
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

மக்கள் பணியாளர்
அன்ரன் சின்னராசா பிலிப் (1952-2023) 71

நூலியல் - நூலகவியல் துறைகளில்
அயோத்தி நூலக சேவைகள் அமைப்பின் பணி 72
- என். செல்வராஜா

வாணி ஜெயராம்:
எங்கிருந்தோ வந்த ஒரு தேவதையின் குரல் 76
- கந்தசாமி கங்காதரன்

நீண்ட நெடும் பாதையில் 80
- மு. புஷ்பராஜன்

அருந்தொண்டாற்றிய அம்மையார் பிபி அம்துல் சலாம் 84
- கிருங்கை சேதுபதி

படித்தோம் சொல்கின்றோம்
நீறுபூத்திருக்கும் நீண்டகாலப் பிரச்சினையை
நினைவூட்டும் சின்னான் 89
- லெ. முருகபூபதி

மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி
'தேயிலைப் பூக்கள்' காவியம் தந்த சி.
பன்னீர்செல்வம் 91
- மல்லியப்புசந்தி திலகர்

பெரியார் தாத்தா நூல் அறிமுகம் 94
- அருண்மொழி வர்மன்

ஜிஃப்ரி ஹாசனின் சிறுகதைகள் மீதான
ஒரு வாசிப்பு 96
- அஹமட் பிஸ்தாமி

மௌனத்துக்குக் கீழே பல குமுறல்கள்!
மலைகளைப் பேச விடுங்கள் - நூல் 100
- நெல்லை ஜெயசிங்

நெடுந்தீவுக் குறிப்பு 104
- ஜோன் பென்றி லூவிஸ்
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

ஒரு நாவல்-ஹோமோ பாபர்:
தற்செயல்களின் ஒழுங்கமைவு 106
- நடராசா சுசீந்திரன்

விஞ்ஞான மெய்யியலின் வளர்ச்சியும் வரலாறும் 108
ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட
தமிழில்: க. சண்முகலிங்கம்

நினைவு நல்லது
விரிவடைந்த எனது ஊடக அனுபவம் 115
- P. விக்னேஸ்வரன்

அரபுமொழிச் சொற்களும்
சம்மாந்துறை வட்டார வழக்கும் 124
- எம்.ஐ.எம். சாக்கீர்

கிழக்கிலங்கைத் தொல்குடிகளின் நில ஆக்கிரமிப்பும்
குவேனி பழங்குடி அமைப்பின் தோற்றமும் 126
- க. பத்திநாதன்

உலக நுரையீரலின் பாதுகாப்பு கவசமாவோம்! 129
- சதீஸ் செல்வராஜ்

அறிவாட்டி 132
- த. ஜீவராஜ்

சிறுவர் உலகும் போர்க்கால நினைவுகளும் 135
- ஜிஃப்ரி ஹாசன்

புயலாக நுழைந்து பனியாக நின்ற
இராஜேந்திர சோழன் 138
- சு. வேணுகோபால்

நவீன தமிழ்க் கவிதையின் பண்புகள்
ஒரு பார்வை 143
- சின்னத்தம்பி குருபரன்

வெபரின் சிந்தனைகள்
சட்டவழி அதிகாரமும் அலுவலர் ஆட்சியும் 146
- க. சண்முகலிங்கம்

ஆறுமுக நாவலரும் மேனாட்டுப் புலமையாளர்களும் -
ஓர் அறிமுகக் குறிப்பு 149
- மைதிலி தயாநிதி

இசைத் தமிழ்ப் பாடற்பரப்பும்
அவற்றின் சமகாலப் பயன்பாட்டு நிலைகளும் 153
- கௌசல்யா சுப்பிரமணியன்

கம்பனின் கருவூலம் திறந்து... 158
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 161
- நா. சுப்பிரமணியன்

வீணாய்ப் போனவன் 168
- அகரன்

ஆதலால் காதல் செய் 172
- பொன்னையா விவேகானந்தன்

சாம்பரில் திரண்ட சொற்கள் 176
- தேவகாந்தன்

ஒரு பயணிக்கு ஒரு முதியவரின் அறிவுரை 182
- வில்லியம் சரோயன்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

நகரும் காய்கள், வீழும் தேசங்கள் 185
- நிமால் நாகராஜா




அண்மைக்காலத்தில் இங்கையின் அரசியலில் நடப்பது என்ன?

இது தற்செயல் நிகழ்வுகளின் வெளிப்பாடா? இல்லை தடுமாறாத நிகழ்ச்சிநிரலின் தொடர்ச்சியா?

சிறீலங்கா சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் உள்ளவாறே மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்கப்போகின்றேன், யார் எதிர்த்தாலும் அது முழுமையாக நடக்கும் என்று குடியரசின் மாண்புமிகு சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் சனாதிபதிக் கதிரையில் நியமனம் செய்யப்பட்டபோது பிரகடனம் செய்திருந்தார்.

இருந்தும் தற்போது இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார கையறுநிலைகளைக் கையாளுவதற்கு முன்னுரிமையளிக்கவேண்டியிருப்பதனால் மாகாண சபைகளுக்கான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கப்போகின்ற முனைப்புகள் இரண்டுவருடங்களுக்கு மேலான காலநீட்டத்தை வேண்டிநிற்கின்றது எனவும் அவர் குறிப்பிடத்தவறவில்லை.

தனது வாய்மூலப்பிரகடனத்திற்கு சாட்சியாக பாராளுமன்றத்தில் பகிரங்கமாகவே தனது அதிகாரப்பகிர்வு முயற்சிக்கு சம்மதம் வேண்டி அனைத்து கட்சித் தலைவர்களையும் வெளிப்படையாகவே அழைத்திருந்தார். ஒருசில கடுங்கோட்பாட்டு பிரிவினரை விட அனைத்து கட்சித்தலைவர்களும் உடனடியாகவே தங்கள் முழுமையான உடன்பாட்டைத் தெரிவித்திருந்தார்கள்.

முன்னாள் சனாதிபதியும் பிரதமருமாக இருந்த மகிந்த இராசபக்ச ஒரு படி மேலே சென்று 13 பிளஸ் என்று கூட தனது ஆதரவினை வெளிப்படுத்தியிருந்தார்.

இவை நடந்து ஒரு வருடகாலம் கூட கடந்துவிடவில்லை. தற்போது பாராளுமன்றத்தில் சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13-வது திருத்தத்தில் குறிப்பிடப்படும் காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் மாகாணசபைக்கு பகிரப்படமுடியாது. அதற்கு உடன்படமாட்டேன் என சூளுரைத்துள்ளார்.

இதற்கும் மேலாக மகிந்த இராசபக்ச இரு தினங்களுக்கு முன்பு கண்டியில் வைத்து 13-வது திருத்தச்சட்டம் இலங்கைக்கு தேவையற்றது என அறிவித்திருக்கின்றார்.

மற்றுமொரு அமைச்சர் தமிழ் அரசியல்வாதிகள் அவசரப்படக்கூடாது என்று உபதேசம் செய்திருக்கின்றார்.

பிரதமர் தினேஸ் குணவர்த்தனா தமிழ்த் தவைர்கள் இங்கையில் சாத்தியமில்லாத விடயத்தினைக் கேட்கக்கூடாது. என்று தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமானநிலையமாக்கும் திட்டத்தை கூறிக்கொண்டே பலாலிக்கு மாற்றாக வவுனியா விமானநிலையத்தை சர்வதேச விமான நிலையமாக்குவது பற்றி வவுனியாவில் ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்திருக்கின்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் அண்மையில் யாழ்ப்பாணத்து விடுதியொன்றில் சனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினை சந்தித்து யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்குமான பயணிகள் விமான சேவையின் அவசியத்தை வலியுறுத்தியபோது, சனாதிபதி கிழக்கு மாகாணத்தில் பொலனறுவைக்கு அண்மையில் உள்ள கிங்குராங்கொடை விமானநியைத்தினூடாக கொழும்பு - யாழ் பயணிகள் விமானத்திற்கான வாய்ப்புகள் பற்றி பேசியிருக்கின்றார். யாழ்ப்பாணத்து பயணிகளின் பயணக் கட்டணத்துள் கிங்குராங்கொடைக்கான விமான எரிபொருட்செலவினை பகிரவிரும்புகின்றார்.

காங்கேசன்துறை துறைமுகத்தை விரிவாக்கி இந்தியாவுடன் வர்த்தக உறவுகளை விரைவுபடுத்துவது என்ற நிலையில் மன்னார் துறைமுகத்தை பயணிகளுக்கும் சரக்குகளுக்குமான துறைமுகமாக விரைந்து அபிவிருத்தி செய்வதுபற்றி பேசியிருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் காங்கேசன்துறை, பரந்தன் மாங்குளம் பகுதிகளில் கைத்தொழில் வலையங்களை உருவாக்குவது பற்றி பேசினாலும் அவரது ஊடகப்பிரிவு காங்கேசன்துறை என்ற பெயரினை நாசூக்காக தவிர்த்துள்ளது.

2009-ல் யுத்தம் முடிந்த பின்பு யாழ்ப்பாணம் குருநகர் மீன்

பிடி இறங்கு துறையினை நவீனப்படுத்தி அபிவிருத்தி செய் வதாக முன்னெடுக்கப்பட்ட முனைப்புகள், பின்பு மன்னார் சிலாவத்துறை மற்றும் தென்னிலங்கையில் மாத்தறையில் கந் தறை ஆகிய இடங்கள் திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருந் தன. வடபகுதிக்கு மட்டும் என செய்யப்படும் அபிவிருத்தி கள் தென்னிலங்கை சிங்கள மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயங்களை உருவாக்கும் என்றபடியினால் வடபகு திக்கென முன்மொழியப்படும் திட்டங்களுடன் இணைத்து தென்பகுதிக்கான திட்டங்களும் உருவாக்கப்பட்டன. ஆனால், பின்பு குருநகர் மீன்பிடி இறங்குதுறை அபிவிருத்தி யும் சிலாபத்துறை மீன்பிடித் துறைமுக அபிவிருத்தியும் காணாமல் போக, மாத்தறை கந்தறையில் ரூபா 9 பில்லியன் திட்டத்தில் 2023-ல் திட்டம் நிறைவுபெறப் போகின்றது.

2002 - 2006-களில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்றபோது நோர்வே, யப்பான், ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய கூட்டுத்தலைமையினால் போரி னால் அழிந்த வடக்கு கிழக்கில் துரித இயல்பு நிலையினை ஏற்படுத்துவதற்கான உடனடி மனிதாபிமான மற்றும் மனித நேய தேவைகளுக்கான மதிப்பீடு (Immediate Humanitarian and Rehabilitation ed Assessment Report) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் துறைசார் வளிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்டன. இதனை யப்பானில் விசேடமாக ஒழுங்க மைக்கப்பட்ட இலங்கையின் வடக்கு கிழக்கு மீள்கட்டமைப் புக்காக உதவிவழங்கும் நாடுகளின் மகாநாட்டில் முன்வைப் பதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் தனியாக போராட்டத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கிற்கென சர்வதேச நிதியைத் திரட்டுதல் தென்னி லங்கை மக்கள் மத்தியில் தவறான செய்தியாக மாறிவிடும் என்ற காரணத்தால் தென்னிலங்கையின் சில அபிவிருத்தி திட்ட முன்மொழிவுகளையும் தீங்குகளைத் தவிர்த்தல் (Do no Harm) என்ற கருத்துருவாக்கத்தின் அடிப்படையில் இணைக் கவேண்டும் என சிறீலங்கா அரசினால் வலியுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் Regaining Sri Lanka என்ற ஆவணம் மிக அவசரமாக அரசினால் தயாரிக்கப்பட்டு வடக்கு கிழக்கின் உடனடித் தேவை ஆவணத்துடன் யப்பானில் டோக்கியோ வில் நடந்த உதவிவழங்குனர் மகாநாட்டில் சிறீலங்கா அர சாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. என்னும் பிற்காலத் தில் சமாதானப் பேச்சுவார்த்தை முன்செல்ல முடியாத தேக்க நிலைக்கு சென்றபின்பு, வடக்கு கிழக்கிற்கான ஆவணம் செயலிழந்து போக, Regaining Sri Lanka ஆவணத்தின் திட் டங்கள் முழுமையாக வெற்றிபெற்றது. இதுவும் ரணில் விக்கி ரமசிங்கா, மிலிந்த மொரகொட ஆகியோரின் கூட்டுச்சிந்த



னையின் கபடத்தனமான கடந்தகாலமாகும்.

மிக அண்மையில் 13-வது திருத்தத்தின் அமுலாக்கம் பற்றி கேட்ட கேள்வியொன்றுக்கு சுவிஸ்ற்லாந்து நாட்டின் கன் டோன் அரசியல் முறைமையின் பொருத்தப்பாடு பற்றி புலம் பியிருக்கின்றார்.

ஓட்டுமொத்தத்தில் 'வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் துட் டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு' என்று பதிலளித்த கதை யாகவே ரணில் விக்கிரமசிங்காவின் கதைகள் எல்லாம் போய்க்கொண்டிருக்கின்றது.

எங்கள் அரசியல் தலைவர்கள் என்றால் சும்மாவா?

இவற்றையெல்லாம் கடந்ததாக தமிழ்க்கூட்டமைப்பின் தலை வரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தமிழ் மக்களின் எதிர்காலத்தைக் கடவுளிடம் கையளித்திருக்கின் றார்.

முன்னாள் முதமைச்சரும் இன்னாள் பாராளுமன்ற உறுப்பின ருமான விக்னேஸ்வரன் ஐயா அவர்கள் ரணில் விக்கிரம-சிங்கா சனாதிபதியாக பதவியில் தொடர நாங்கள் பாதுகாப் பளிக்கவேண்டும். அவருக்கு பின் வரக்கூடிய சிங்கள தவைர்களின் கடுங்கோட்பாட்டு அணுகுமுறை ஆபத்தான தாக இருக்கும் எனவும் அண்மையில் தன்னிலை விளக்கம் கூறியிருக்கின்றார்.

ரணில் விக்கிரமசிங்காவின் முன்னாள் தோழரும் இன்னாள் எதிரியுமான பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சியின் கூர்வாளுமான சுமந்திரன் உள்ளூராட்சித் தேர்தலை வைக்கா விட்டால் அதனை வைக்கவைப்போம் இலங்கைத் தீவின் சனநாயக சுதந்திரத்தைக் காப்போம் என சத்தியப்போரினை பிரகடனப்படுத்தியுள்ளார்.

இவை ஒருபுறம் நிகழ்ந்து கொண்டிருக்க திடீரென தமிழ்நாட் டின் மூத்த ஈழத்தமிழர் ஆதரவாளரான நெடுமாறன் ஐயா வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்று பிரக டனம் செய்ய அதனை உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன் இனிப்புக்கொடுத்து கொண்டாடியிருக்கின்றார்.

வேறொரு புறம் முக்காடிட்ட பெண்களை வைத்து புலம் பெயர் தேசத்தில் மற்றுமொரு மந்திரவித்தை காட்டப்பட்டிருக் கின்றது.

இவையெல்லாம் தமிழர்களின் அரசியல் அரங்கினை ஆக்கி ரமித்துக்கொண்டிருக்க மறுபக்கத்தில் முல்லைத்தீவு நீதிமன் றக் கட்டளையினையும் மீறி குருந்தூர் மலையில் புத்த கோவில் கட்டுமாணப்பணிகள் நிறைவுக்கு வந்துள்ளதாக அறியமுடி கின்றது.

வடக்கு மாகாணசபையின் நிர்வாக அணிக்கு சிற்றூழியர்க ளாக சிங்கள ஆளணி பெருமளவில் நியமிக்கப்படவிருப் பதாகவும் செய்திகள் வருகின்றன. இவர்கள் பதவியில் சிறிய வர்கள் தான், ஆனால் இவர்கள் பணிபுரியும் அலுவலகங்க ளில் இவர்களுக்கு முன் தமிழதிகாரிகள் எல்லாம் பெட்டிப் பாம்பாய் அடங்கிவிடுவார்கள். ஏனெனில் இச் சிற்றூழியர்க ளில் பெரும்பாலானவர்கள் பௌத்த துறவிகளுக்கும் புல னாய்வுத் துறையினருக்கும் நெருங்கிய நண்பர்களாக இருக் கும் ஆணைகொண்டவர்கள்.

இந்திய மீனவர்களின் மரபுமுறையான மீன்பிடிக்கு வாரத்தில் சில நாட்கள் அனுமதி கொடுப்பதற்கு சிறீலங்கா அரசாங் கம் முடிவு செய்திருப்பதாகவும், அதனை எதிர்த்து போராடப் போவதாகவும் வடபகுதி மீனவர் சங்கங்கள் போர்ப்பிரகடனம் செய்திருக்கின்றன.

மன்னாரிலும் பூநகரியிலும் காற்றாலை மின்னுற்பத்தி திட் டத்தை இந்தியாவின் அதாணி குழுமத்திற்கு வழங்கிய விட யத்தில் மன்னாரின் பிரசைகள் குழு தனது அதிருப்தியை பதிவுசெய்துள்ளது. மக்களிடம் கலந்தாலோசிக்காமல் எடுக் கப்பட்ட தீர்மானம் என கண்டனம் செய்துள்ளது.

ஆஸ்திரேலியா இலங்கையின் கனிமவள பெருளாதாரத் தினை அபிவிருத்தி செய்ய ஆர்வம் கொண்டிருப்பதாக அண்மையில் அறிவித்துள்ளது. ஏற்கனவே மன்னார் தீவில் கனிமவளங்களை அகழ்வதற்கான ஆய்வுகளும் முன்னாயத் தங்களும் மொறிசியஸ்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட ஆஸ்திரே லிய பிரசையின் கம்பனி சுமார் 4000 பரீட்சார்த்த துளை-களை மன்னார் தீவினுள் போட்டு களிமவள இருப்பினை கணிப்பிட்டுள்ளதாக அறியமுடிகின்றது. இது பற்றி மன்னா ரின் மாவட்ட நிர்வாகம் எதுவுமே அறிந்துகொள்ளவில்லை என்பதனை மக்கள் அனைவரும் நம்பவேண்டும் என்பது மற் றுமொரு தவைிதி.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அல கொன்றின் விலை இந்தியாவின் உற்பத்திச்செலவினை விட இரண்டுமடங்கு என அண்மையில் பத்திரிகையில் செய்தி வந்திருந்தது. இலங்கையில் தற்போது தான் தடையற்ற மின் சாரம் வழங்கப்படுகிறது. அதற்காக மின்சாரக்கட்டணத்தை பலமடங்குகளாக கூட்டி குறைந்தளவு மின்சாரத்தைப் பாவிக் கும் ஏழைமக்களின் மீது பெரும் கொள்ளை ஒன்று நிகழ்த் தப்பட்டுள்ளது.

ஆனாலும் விரைவில் இலங்கையிலிருந்து மின்சாரத்தை இந் தியாவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான திட்ட ஒப்பந்தத்தை நிறைவு செய்வதில் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட மிகவும் கடுமையாக உழைப்பதாக உத்தியோக பூர்வசெய்திக்குறிப்புகள் குறிப்பிடுகின்றன.

உள்ளூரில் யாழ்ப்பாண போதனாவைத்தியசாலையின் மருத் துவக்கழிவுகளை எங்கே எரிப்பது என்பது பல மில்லியன் டொலர் வினாவாக மாறியுள்ளது. யாழ்ப்பாண நகரத்தை அண்டியதாக அமைந்துள்ள கோம்பையன் இந்து மயானத் தின் வளாகத்தினுள் நவீன எரியூட்டி அமைத்து கழிவுகளை எரிக்கலாம் என்ற விடயம் அதிகாரிகள் மட்டத்தில் விவாதிக் கப்பட்டதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

மயானம் என்பது வெறும் சடலங்களைப் புதைக்கும் அல்லது

எரிக்கும் இடமல்ல. அதற்கும் அப்பால், மத நம்பிக்கைகள் பண்பாட்டுப்பெறுமதிகள் கொண்ட சூழல் என்பதனை புரிந்து கொள்ள மறுக்கும் அதிகார ஆணவம் இங்கே தலைவிரித்தா டுகின்றது. வேடிக்கை என்னவென்றால் எல்லாம் நம்மவர்கள் தான்.

வன்னியின் பெருநிலப்பரப்பின் ஓரிடத்தில் மருத்துவக்கழிவு-களை எரியூட்டுவதற்கான மையம் அமைப்பது பற்றிய முன் மொழிவும் பேசப்பட்டதாகவும் அதற்கு எதிராக வன்னியின் மக்கள் பிரதிநிதி கோபாவேசம் கொண்டு கிளர்ந்தெழுந்ததா கவும் செய்தித் தலையங்கங்கள் அறியத்தந்துள்ளன.

யாழ்ப்பாணம், மாங்குளம், கிளிநொச்சி என தந்திரோபாய நகரத்திட்டமிடல்கள் பெரும் பணச்செலவிலும் மனித உழைப் பிலும் தயாரிக்கப்பட்டாலும் அவை மக்களுக்கு தெரிந்தபா டில்லை. அத்துமீறல்களும் அடாவடி நில ஆக்கிரமிப்புக ளும் நம்மவர்களாலும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின் றது.

பத்திரிகைகள் காணி விற்பனை விளம்பரங்களால் நிரம்புகின் றது. யார் யாருக்கு எங்கே காணி கைமாறப்படுகின்றது என் பது சகலதும் முடிந்தபின்புதான் தெரியவரும். தந்திரோபாய பிரதேசங்களும் அபிவிருத்தி மையங்களும் பெருமளவு பணத்திற்காக கைமாறப்படுகின்றது. மறுவகையில் கூறுவதா னால் மாற்றாரால் கையகப்படுத்தப்படுகின்றது. விரைவில் மற்றுமொரு கோறைப்படுத்தப்பட்ட பலஸ்தீனத்தினை இங் கும் காணலாம்.

நாங்கள் சில விடயங்களின் ஆழமான பக்கங்களைப் புரிந்து கொள்ளவேண்டும்.

அரசாங்க திணைக்களங்களும் அமைச்சுக்களும் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களும் ஏன் மாகாண அலகுகளும் கூட தேசிய அபிவிருத்தி வழிகாட்டுதல்கள் மற்றும் வரைய றைக்குள் மட்டும் நின்றுகொண்டுதான் தங்களது அபிவிருத்தி திட்ட முன்மொழிவுகளையும் மூலோபாயங்களையும் வகுக் கின்றன. அதில் தமிழ் அலுவலர்களின் செயலளவும் இயல ளவும் விதிவிலக்கானது அல்ல. தமிழ் அமைச்சரும் அபிவி ருத்திக்குழு தலைவரும் கூட இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல.

எனவே வடக்கு கிழக்கினதும் அதன் மக்களினதும் நிகழ்கால மற்றும் எதிர்கால திட்டங்கள் மக்களின் அபிலாசைகளையும் முன்னுரிமைகளையும் கால அட்டவணைகளையும் உள்ளடக் கியதாக, மக்கள் சார்ந்த நிபுணத்துவக் குழுவினால் தயாரிக் கப்படவேண்டும். அது உடனடியானதும் முக்கியமானதுமான எமது கடமையாக உள்ளது.

யுத்தகால இனப்படுகொலைக்காக ஜெனீவாவில் நீதி கேட்க அணிதிரளும் நாங்கள், எங்கள் காலுக்கு கீழே நாமே குழிப றித்துக்கொண்டிருக்கின்றோம் என்பதனை ஏற்க மறுப்பது ஏன்?

போராடுவதற்காகவும் பொருள் சேர்ப்பதற்காகவும் எதிரியைத் தேடிக்கொண்டிருக்கும் நாங்கள், எங்களை மாற்றுவதற்கான விவாதத்தை எப்போது தொடங்கப்போகின்றோம்.

அரசாங்கமும் அரசாங்க அதிகாரிகளும் தயாரிக்கும் அபிவி ருத்தி திட்டங்களும் வள ஒதுக்கீடுகளும் சிங்களபௌத்த நாட்டின் தேசியக்கொள்கையின் விரிவாக்கமென்பதனை நாங் கள் புரிந்துகொண்டால், எங்கள் தாயகத்திற்கான அபிவி ருத்தி மாதிரிகளை நாங்கள் உருவாக்க முன்வரமாட்டோமா?

அத்தகைய முயற்சிகளை எங்கிருந்து, எவ்வாறு, யார் தொடங்குவது எனப் பல கேள்விகள் எம்மிடம் உண்டு.

அதனை இவ்விடத்தில் பேசுவது மிகவும் பொருத்தமான நேர மும் விடயமுமாக இருக்கும் என்று நாங்கள் நம்பிக்கை கொள்ளமுடியும்.

## தமிழர் தாயகத்தைக் கட்டியெழுப்பும் வரைப டத்தை தயாரித்தல்:

இவ்வரைபடம் ஆகக்குறைந்தது ஆறு காரணிகளை உள்ள டக்கியதாக இருக்கும்.

- தாயகம் பற்றிய தொலைநோக்கு (Vision).
- தாயகம் பற்றிய தொலைநோக்குக்கான பயணத்தின் குறிக் கோள்கள் (Objectives).
- விரும்பப்படும் குறிக்கோள்களை எய்துவதற்கு உருவாக் கப்படவேண்டிய தாக்கங்கள், (Impacts/ Outcomes).
- தாயகத்திலும் மக்கள் சமூகத்தின் மீதும் எதிர்பாக்கப்படும் தாக்கங்களைத் தூண்டுவதற்கு வேண்டிய வெளிப்பாடுகள் (OutPuts).
- திட்டமிடப்படும் வெளிப்பாடுகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் (Activities).
- முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு வேவையான உள்ளீடுகள் (Inputs).

தாயகத்தைக் கட்டியெழுப்பம் மூலோபாய ஆவணத்தை எந் தவித அரசியற்கட்சிகள் மற்றும் குழுநிலைவாதங்களுக்கு அப்பால் ஒரு கூட்டு மக்கள் ஆவணமாக முன்னெடுக்க வேண்டும். இத்தகைய முயற்சியினை தனித்தனி ஆணவங்க ளாக உருவாக்கி போட்டித்தன்மையினையும் முரண்பாடுக ளையும் உருவாக்காமல் ஓர் ஆவணத்தினுள் (Single Text Documents) எல்லா ஆலோசனைகளையும் முன்மொழிவுக ளையும் இணைத்து அவற்றை ஒழுங்குபடுத்தும் போது வலி மையானதும் தர்க்கரீதியானதுமான விடயங்கள் முன்னிலைப் படுவதோடு, ஏனைய விடயங்கள் தானாகவே முன்னுரிமையி ழந்து போகும்.

இத்தகைய முயற்சிக்கான ஆரம்பத்தினை இன்றைய நாளி-லேயே ஆரம்பிப்போம். ஆர்வமுடையவர்கள் ஒன்றாக இணைவோம்.



selvin.ireneuss.mariampillai@thaiveedu.com

# நெத்தன்யாகுவின் நெற்றிக்கண் மீது பாலஸ்தீனம்



- ரதன்

தமிழ் ஈழப் போராட்டத்தின் வளர்ச்சியில் பாலஸ்தீனத்துக்கும் முக்கிய பங்குண்டு. ஆரம்ப காலங்களில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் போராளிகளுக்கு பயிற்சியளித்துள்ளார்கள். பல போராளிகள் போர்க்களத்தில் பங்குபற்றியுள்ளார்கள். தமிழ்த் தேசியம் அழிக்கப்பட்டது போல் இன்று பாலஸ்தீன தேசியமும் படிப்படியாக அழிக்கப்பட்டுவருகின்றது. இன்னமும் பத்து வருடங்களில் பாலஸ்தீனம் என்ற நிலம் யூத மக்களின் நிலமாகிவிடும்.

1972-ல் மியுனிக் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற போது எட்டு பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்துடன் இணைந்த அமைப்பான கறுப்பு செப்ரெம்பர் (Black September) அமைப்பினர் ஒலிம்பிக் கிராமத்துக்குள் புகுந்து இஸ்ரேலிய வீரர்களை கடத்தினார்கள். இறுதியில் ஐந்து பாலஸ்தீன போராளிகளும் ஆறு இஸ்ரேலிய பயிற்சியாளர்களும் ஐந்து இஸ்ரேலிய வீரர்களும் ஒரு மேற்கு ஜேர்மனி நகர்காவலரும் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்துக்கு மிகப் பெரிய அவப் பெயரை ஏற்படுத்தியது. ஆனால் அப்போதைய பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் தலைவர் யசீர் அரபாத்தின் முயற்சியில் 1974 பாலஸ்தீனம் ஐ.நா சபையில் பார்வையாளர் அந்தஸ்தை பெற்றது. பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தை பாலஸ்தீனத்தின் அமைப்பாகவும் ஏற்றுக்கொண்டது. அதன் பின்னர் பாலஸ்தீனம் பல ஐ.நா அமைப்புக்களில் அங்கத்தவராக முனைந்தது. ஒவ்வொரு தடவையும் அமெரிக்கா தனது அதிகாரத்தை பயன்படுத்தி பாலஸ்தீனை நிராகரிக்கச் செய்தது.

மத்திய கிழக்கு முஸ்லீம் நாடுகள் பாலஸ்தீனத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவை தொடர்ச்சியாக வழங்கிவந்தது. அரபு லீக் Organisation of the Islamic Conference (OIC) போன்ற அமைப்புகள் தொடர்ச்சியாக பாலஸ்தீனியத்தின் விடுதலையை வலியுறுத்திவந்தன.

இஸ்ரேல் அமெரிக்காவின் ஆதரவில் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தையும் அதன் போட்டி அமைப்பான ஹமாசையும் அழிக்கும் திட்டங்களை கன கச்சிதமாக அரங்கேற்றி வருகின்றது. மியுனிக் ஒலிம்பிக் இஸ்ரேலிய வீரர்களை கொன்றவர்கள், திட்டமிட்டவர்களை அழிக்க அப்போதைய இஸ்ரேலிய பிரதமர், கோல்டா மெயர் எக்ஸ் என்ற அமைப்பை ஏற்படுத்தி அனைவரையும் கொன்றார். 1967, 1973 என தொடர்ச்சியான பாலஸ்தீனம் - இஸ்ரேல் போர்கள் இஸ்ரேலுக்கு சாதகமாக முடிந்தன. 1967 போரின் போது இஸ்ரேல் Sinai Peninsula, Gaza Strip, West Bank, Old City of Jerusalem, Golan Heights ஆகிய பகுதிகளை கைப்பற்றியது. Golan Heights சிரியாவிற்கு சொந்தமான நிலம். இன்னமும் இஸ்ரேலிடமேயுள்ளது. மேற்கு கரை, ஹாசா, ஜெருசலேம் ஆகிய பாலஸ்தீனிய பகுதிகளில் பெரும்பாலான நிலப்பரப்பில் இஸ்ரேல் தனது குடிமக்களை குடியேற்றியுள்ளது. தொடர்ந்தும் இஸ்ரேல் பாலஸ்தீன பிரதேசங்களை ஆக்கிரமித்து தனது நில எல்லையை அதிகரித்துக் கொண்டு சென்றது. பாலஸ்தீனத்தின் இரு பகுதிகளான ஹாசாவிற்கும் மேற்கு கரைக்குமிடையில் இஸ்ரேல் நிலப்பரப்புள்ளது. பாலஸ்தீனர்கள் பிரிக்கப்பட்ட இரு வெவ்வேறு பகுதிகளில் வாழ்கின்றனர். இரு பகுதிகளிலும் இரு வெவ்வேறு அரசுகள் உள்ளன. மேற்கு கரை பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. ஹாசா, ஹமாஸ் அமைப்பின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. ஹமாஸ் அமைப்பு சர்வதேசத்தினால் ஒரு பயங்கரவாத அமைப்பாக முத்திரை குத்தப்பட்டுள்ளது.

உறுதிப்படுத்தப்படாத தரவுகளின் அடிப்படையில் 1948-ல் 31,786 சதுர கி.மீ-ஆக இருந்த பாலஸ்தீனிய நிலம் இன்று 6020 சதுர கி.மீ-ஆக குறைந்துள்ளது. பாலஸ்தீனிய வரைபடங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

பாலஸ்தீனத்தை முழுமையாக தனதாக்கிக் கொள்ள இஸ்ரேல் பல்வேறு வகையில் முயன்று வருகின்றது. இரண்டாம் உலகப் போரில் நாசிகள், யூதர்களை பல் வேறு வழிகளில் கொடுமையாக கொன்றார்கள். ஆனால் இன்று யூதர்கள் சர்வதேச பொருளாதாரத்தை தம்வசம் வைத்துள்ளனர். பெரும்பாலான நாடுகளில் பங்குச் சந்தைகளை தீர்மானிப்பவர்களாக உள்ளார்கள். பல நாடுகளில் அரசியல் கட்சிகளுக்கு நிதியளிப்பதன் மூலம் தங்களுக்கு சார்பான முடிவுகளை எடுக்கச் செய்கின்றார்கள். ரம்பின் ஆட்சிக் காலத்தில் ஜெருசலேத்தை தலைநகராக அமெரிக்கா ஏற்றுக்கொள்ளச் செய்ததன் பின்னால் உள்ள நுண் அரசியலை கவனத்திற் கொள்வது அவசியம். அமெரிக்காவின் போலி அமைப்புக்களான ஐ.நா, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு, ஐ.நா-வின் பாதுகாப்பு

அமைப்பு போன்ற அனைத்தும் இஸ்ரேலிற்கு சார்பாகவே செயல்படுகின்றன.

இஸ்ரேல் தனது ஆயுத பலத்தையும் திட்டமிட்டு அதிகரித்து வந்தது. 1967 பாலஸ்தீன - அரபு நாடுகளுக்கு எதிரான யுத்தம் தொடங்கி, இஸ்ரேலுக்கு எதிரான போர்கள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்துள்ளன. இன்று மத்திய கிழக்கு நாடுகள் இஸ்ரேலை ஒரு அச்சத்துடனேயே நோக்குகின்றன. இதற்கு சவூதி அரேபியாவும் விதிவிலக்கல்ல. ஈரான் ஒன்றே தொடர்ந்து இஸ்ரேலை எதிர்த்து வருகின்றது.

1948-க்குப் பின்னர் முஸ்லீம் நாடுகளில் சியா மற்றும் சுனி இன மக்களிடையேயான பிரிவினையை அமெரிக்க அரசு




எண்ணெய் ஊற்றி எரியவைத்தது. முஸ்லீம் நாடுகள் இரு பெரும் அணியாக இன்று போட்டி போடுகின்றன. வட-ஆபிரிக்க முஸ்லீம் நாடுகளான மொரோக்கோ, ரியுனிசியா, அல்ஜீரியா போன்ற நாடுகள் தொடர்ந்து தங்களது உட் மதப்பிரிவு போட்டிகளை மீறி பாலஸ்தீனியத்துக்கு ஆதரவு வழங்கின. 2020-ன் இறுதிப் பகுதியில் மொரோக்கோ இஸ்ரேலுடன் நட்பு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டது. 2021 செம்ரெம்பர் நடைபெற்ற தேர்தலில் ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட நீதிக் கட்சி தூக்கியெறியப்பட்டது. 2021-ல் தேர்தலில் எட்டாவது இடத்தை நீதிக் கட்சி பெற்றது. ஆபிரிக்க நாடுகளில் இஸ்ரேல் நட்பு ரீதியான உறவுகளை மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தன. ஆபிரிக்க நாடுகளில் ரஷ்யாவினதும், சீனாவினதும் ஆதிக்கம் அதிகளவில் உள்ளன. பெரும்பாலான ஆபிரிக்க நாடுகள் மேற்கினை வெறுக்கின்றன. கடந்த காலங்களில் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பனவற்றின் நடவடிக்கைகளும் இதற்கு ஒரு காரணம். ஆனால் இஸ்ரேலுக்கு ஆபிரிக்க நாடுகளை விட மத்திய கிழக்கு நாடுகளே முக்கியம். இவையே பாலஸ்தீனத்துக்கு ஆயுதங்களையும், நிதியுதவியையும் கொடுக்கின்றன. அத்துடன் இவை செல்வந்த நாடுகளுமாகும். இஸ்ரேல் அங்கே தனது கவனத்தை மிகவும் அவதானத்துடன் திருப்பியது. வெற்றியும் பெற்றுள்ளது.

2022 நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று வருட இறுதியில் மீண்டும் இஸ்ரேலிய பிரதமராக பென்ஞ்சமின் நெத்தன்யாகு பதவியேற்றார். இவர் ஒரு தீவிர வலது சாரி. நீண்ட காலமாக பிரதமராக பதவி வகித்தவர். இவர் வெற்றி பெற்றவுடன் ஈஜிப்ட், ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற நாடுகள் நெத்தன்யாகுவிற்கு வாழ்த்துகள் தெரிவித்தனர். இது மத்திய கிழக்கு நாடுகள் இஸ்ரேல் மீதான ஒரு மென்போக்கை கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டன என்பதை தெரிவிக்கின்றது. ஏற்கனவே சவூதி அரேபியாவிற்கும் இஸ்ரேலுக்குமிடையில் நல்லுறவு பேணப்படுகின்றது. நெத்தன்யாகு தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் குறிப்பிட்ட இரண்டு விடயங்களில் ஒன்று சவூதியுடனான உறவு, இரண்டாவது மேற்கு கரை பிரதேசத்தில் இஸ்ரேலிய குடியிருப்புக்களை ஏற்படுத்துவேன் என்பனவாகும். இதன் பின்னரும் மத்திய கிழக்கு நாடுகள் வாழ்த்துகளை தெரிவிக்கின்றன என்பது, மத்திய கிழக்கு நாடுகள் பாலஸ்தீன ஆதரவிலிருந்து விலகத் தொடங்கிவிட்டன என்பதை தெரிவிக்கின்றது. வணிக ரீதியாக பல இலாபங்களை பெறலாம் என்ற கருத்து இந்த நாடுகளிடம் உள்ளது. சவூதி அரேபியா, ஈரானிடமிருந்து தன்னை பாதுகாக்க அமெரிக்காவை விட இஸ்ரேலே உகந்தது என்று கருதுகின்றது. Abraham Accords ஒப்பந்தம் அரபு நாடுகளுக்கும், இஸ்ரேலுக்குமான நல்லுறவை பேணும் ஓர் ஒப்பந்தம். இது செப்ரெம்பர் 2020-ல் வெள்ளை மாளிகையில் டொனால்ட் டிரம்பின் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது. ஐக்கிய அரபு இராச்சியம், பஹறெயின் ஆகிய நாடுகள் கைச்சாத்திட்டன.

புதிய அமைச்சரவையில் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சராக பென் கவீர் (Ben Gvir) பதிவியேற்றுள்ளார். இவர் கிழக்கு ஜெருசலேத்தில் பாலஸ்தீனியரின் வீடுகள் இடிக்கப்பட்டு யூத குடியிருப்புக்கள் அமைக்கப்பட வழிவகுத்துள்ளார். யூதர்கள் துப்பாக்கி வைத்திருப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளார். யூதர்களைக் கொல்லும் பாலஸ்தீனியருக்கு மரண தண்டனை வழங்கப்படும் என சட்டமாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.

கிழக்கு ஜெருசலேம் தங்களுக்குரியது என பாலஸ்தீனியர்கள் குரல் கொடுக்கின்றனர். ஆனால் முழு ஜெருசலேமும் தங்களுக்குரியது என இஸ்ரேல் கருதுகின்றது. நான்காவது ஜெனிவா மாநாட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் பாலஸ்தீனிய பிரதேசங்களில் இஸ்ரேலின் Israeli Occupying Forces (IOF) கட்டாயப்படுத்தி பாலஸ்தீனியர்களை வெளியேற்றி யூதர்களை குடியமத்துவது சட்ட மீறலாகும். இது வரை மேற்கு கரைப் பிரதேசத்தில் 164 குடியேற்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 650,000 யூதர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். கிழக்கு ஜெருசலேம் பகுதியிலிருந்து பாலஸ்தீனியர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளில் புதிய அரசு செயற்படத் தொடங்கி விட்டது.

பாலஸ்தீனத்தை விழுங்கத் தொடங்கிவிட்டது இஸ்ரேல். மறுபுறம் நெத்தன்யாகு தனக்கு எதிரான ஊழல் வழக்குகளிலிருந்து தன்னை பாதுகாக்கும் முயற்சிகளிலும் இறங்கியுள்ளார். சுப்ரீம் கோட் அதாவது உச்ச நீதிமன்றத்தின் தனித்துவத்தையும் சுதந்திரத்தையும் அரசு கட்டுப்படுத்தும் அதிகாரத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இதனை அங்கீகரித்துள்ளது. நெத்தன்யாகுவின் இந்த நகர்வு தன்னைப் பாதுகாப்பதுடன் பாலஸ்தீனியர்களை மேலும் ஒடுக்க உதவும். ஆனால் அது தங்களுக்கும்

எதிரானது என யூதர்கள் கருதுகின்றார்கள். ரெல் அவிவ்வில் நடைபெற்ற போராட்டங்கள் அவர்களின் அச்சத்தின் வெளிப் பாடாகவுள்ளது.

இஸ்ரேலுக்கு வெளியே அதிகளவு யூதர்கள் அமெரிக்காவி லேயே வாழ்கின்றனர். அவர்களில் 58 வீதமானோர் தொடர்ந்து இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்குகின்றனர். அமெ ரிக்காவில் வாழ்பவர்களில் பெரும்பான்மையினோர் தங்களது யூத மத அடையாளங்களை கடைப்பிடிக்காவிட்டாலும், இஸ் ரேல் தங்களது மூதாதையரின் நாடு என்பதனை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இன்று உலகெங்கும் வாழும் பெரும் பான்மை யூதர்களும் இந்த நிலைப்பாட்டிலேயே உள்ளார் கள். இது தொடர்ந்து நெத்தன்யாகு போன்றோர் பாலஸ்தீ னத்தை அழிப்பதற்கு உதவிபுரிகின்றது.

பாலஸ்தீனம் இன்று இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்களை சந்திக்க முடியாமல் திணறுகின்றது. 2022 - 2023 காலப்பகுதி யில் மேற்கு கரை மற்று கிழக்கு ஜெருசலேம் பகுதிகளில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் பல பாலஸ்தீனியர் கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆங்காங்கே சில உலக நாடு கள் சம்பவங்களை கண்டித்தாலும், பெரும்பான்மை நாடுகள் அமைதிகாக்கின்றன. யசீர் அரபாத்தின் பின்னர் பாலஸ்தீன விடுதலை இயக்கம், பாலஸ்தீன அதிகாரசபை போன்றவை பாலஸ்தீன மக்கள் மத்தியில் ஒற்றுமையை நிலைநாட்டத் தவறிவிட்டன. ஹமாசுடனான முரண்பாடுகள் தீர்க்கப்படாம லேயே உள்ளன. ஊழல்கள் நிறைந்துள்ளன. முறையாக தேர்தல்கள் நடத்தப்படவில்லை. உண்மையில் பாலஸ்தீன விடுதலை இயக்கம், ஹமாஸ் போன்றவற்றின் இயங்கியல், உட்கட்சி பூசல்கள் பற்றி தனிக் கட்டுரையே எழுதவேண்டும். அது மிகப் பெரிய விடயம். முக்கியமானதும் கூட.

பாலஸ்தீன அதிகாரசபை பாலஸ்தீன மக்களால் அங்கீகரிக் கப்பட்ட ஆட்சிச் சபை. பாலஸ்தீன அதிகாரசபை மட்டுப்ப டுத்தப்பட்ட அதிகாரங்களுடன் ஆட்சி புரிகின்றது. நிதி, பாதுகாப்பு போன்றன இன்னமும் இஸ்ரேலிடமேயுள்ளன. ஆனாலும், மத்திய கிழக்கு நாடுகளிடமும் மூன்றாம் உலக நாடுகள் மற்றும் சீனா, ரஷ்யா போன்ற நாடுகளிடமிருந்து அதிகளவு ஆதரவைப் பெற இது தவறிவிட்டது. ஆரம்பத் தில் காசாப் பகுதிக்கு இருந்த நெருக்கடிகள் போல் மேற்கு கரைப் பகுதிக்கு இருக்கவில்லை. ஆனால் தற்சமயம் நிலைமை வேறாகிவிட்டது.

ஒஸ்லோ ஒப்பந்தத்தில் யசீர் அரபாத் பாலஸ்தீனிய பகுதிக ளில் உள்ள யூத குடியிருப்புகளையும் இஸ்ரேலின் பிரதான பெரும் நிலத்தையும் இணைக்க மேம்பாலங்கள் அமைக்க அனுமதி கொடுத்தார். விளைவு அப்போதைய இஸ்ரேலிய பிரதமர் ஏறியல் சரன் மேற்கு கரைப் பகுதியினூடாக ஒரு அதிவேக நெடுஞ்சாலையை அமைத்தார். இன்றும் இஸ்ரேல் யூத குடியிருப்புக்களை மேற்கு கரைப் பகுதியில் அமைக்க இது உதவிபுரிகின்றது. யசீர் அரபாத் தற்காலிகமானது என நினைத்த விடயம் நிரந்தரமாக்கப்பட்டுவிட்டது. ஒஸ்லோ ஒப் பந்த பேச்சுவார்த்தைகளின் போது பாலஸ்தீனிய அரசியல் ராஜதந்திரிகள் பல விடயங்களை கவனிக்கத் தவறிவிட்டனர். கிழக்கு ஜெருசலேத்திலிருந்து பாலஸ்தீனியர்கள் படிப்படி யாக வெளியேற்றப்படுவதற்கு ஒஸ்லோ ஒப்பந்தத்தில் பாலஸ்தீனிய இராஜதந்திரிகள் விட்ட தவறுகளும் ஒரு கார ணம். 1993 ஒஸ்லோ ஒப்பந்தம் கைச்சாத்திட்டதன் பின் முறையாக பாலஸ்தீனிய தலைவர்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவில்லை.

பாலஸ்தின மக்களின் தொடர்ச்சியான எழுச்சிப் போராட்டங் கள்:

- இன்ரபாடா (First Intifada) மார்கழி 8, 1987 - புரட்டாதி 13, 1993 முதலாவது எழுச்சி. பெருமளவு பாலஸ்தீனிய பெண்கள் தலைமை தாங்கி நடைபெற்ற எழுச்சி.
- இரண்டாவது எழுச்சி (Intifada) புரட்டாதி 28, 2000 - மாசி 8, 2005.
- தற்பொழுது நடைபெறுது மூன்றாவது எழுச்சி என கருதப் படுகின்றது.

இந்த இரண்டு எழுச்சிகளும் தோல்வியிலேயே முடிந்தன. அதிகளவு பாலஸ்தீனர்களே கொல்லப்பட்டனர். Break the Wave என்ற பெயரில் இஸ்ரேலிய இராணுவம் தனது புதிய நடவடிக்கைகளை 2022 மார்ச்-ல் ஆரம்பித்தது. இது நேரடி யாகவே பாலஸ்தீன போராளிகளை நோக்கி எனக் கூறப்பட் டாலும் அதிகளவு பெண்களும், குழந்தைகளுமே கொல்லப் படுகின்றனர். மேற்கு கரைப் பகுதியில் புதிய ஆயுதக் குழுக்கள் தோன்றியுள்ளன. Jenin Brigades, Nablus Brigades, the Lions' Den, the Balata Brigades, the Yabad Brigades ஆகிய ஆயுதக் குழுக்கள் தோன்றியுள்ளன. இவற்றிற்கு யார் ஆயு தங்களை வழங்குகின்றார்கள்?. இவர்களின் ஆயுத எழுச்சி, இஸ்ரேலிய இராணுவத்துக்கு மறைமுகமாக ஆதரவு வழங்கு கின்றது. இவர்கள் இஸ்ரேலிய இராணுவத்தை அல்லது நகர் காவலர்களை தாக்கினால், இஸ்ரேல் அங்கு பலரைக் கொல்ல ஏதுவாகின்றது.

மக்கள் எழுச்சிகளில் ஈடுபட்டாலும், பாலஸ்தீனிய தலைமை முறையாக, ஒழுங்காக இல்லை. காசாவிலும் மேற்கு கரையி லும் இரண்டு வெவ்வேறு அரசுகள். பாலஸ்தீனிய விடுதலை இயக்கம். பாலஸ்தீனிய அதிகாரசபை இவ்விரண்டு பிரதேசத் துக்குமுரியது. ஆனாலும், மேற்கு கரையையே அவர்கள் அதிகளவு கவனிக்கின்றார்கள். ஹமாசுடன் உறவைப் பேண முயற்சிக்கவில்லை. ஹமாஸ் இஸ்ரேலை முற்றாக நிராகரிக் கின்றது. பாலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலை அங்கீ கரிக்கின்றது. பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வு எனக் கூறிக் கொண்ட போதும் அமைதியையே மொழியாகக் கொண்டுள் ளது. தற்போதைய பாலஸ்தீனியத் தலைவர்களில் பாலஸ் தீன அதிகாரசபையின் ஜனாதிபதி மொகமட் அபாஸ், அர பாத்தால் தேர்வு செய்யப்பட்டவர். இன்றைய பிரச்சினைக்கு மொகமட் அபாசே காரணம். பல பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர்களை அமெரிக்கா வழிநடத்துவதாக குற் றச்சாட்டுகள் உள்ளன. பல விடுதலை இயக்கங்கள் பாலஸ் தீனத்தில் உள்ளன. இவற்றுக்கிடையில் ஒற்றுமையில்லை. இது போன்ற பல பிரச்சினைகள் மிக விரைவாக தீர்க்கப்படா விட்டால், பத்து வருடங்களின் பின்னர் இஸ்ரேலுக்குள் பாலஸ்தீனத்தை தேடவேண்டி வரும். Al-Aqsa Mosque கிழக்கு ஜெருசலேத்தில் உள்ள பாலஸ்தீனியரின் மிக முக்கிய புனித ஸ்தலம். இதனையும் மிக விரைவில் பாலஸ்தீனியர்கள் இழக்கலாம்.



rathan@thaiveedu.com

# ஊடக அதிகாரம்! நிகழ்ச்சி நிரல்களின் தீர்மான சக்தி!!

– ரூபன் சிவராஜா

தற்போது செய்திகள், தகவல்களை வெளியிடுவதற்கானதும், பெறுவதற்குமானதுமான ஊடகத்தளங்களும் அவற்றின் பரிமாணங்களும் மாறிவிட்டன. இணையத் தளங்கள், இணையத் தொலைக்காட்சிகள், யூரியூப் தளங்கள், பேஸ்புக், ரிவிற்றர் எனப் புதிய டிஜிற்றல் தளங்கள் உச்சமான பயன்பாட்டுக்கு வந்துவிட்டன. ஆனாலும் பாரம்பரிய தொலைக்காட்சிச் சேவைகள் என்று சொல்லக்கூடிய சி.என்.என், பி.பி.சி உட்பட இன்னும் பல சர்வதேச தொலைக்காட்சிகள் சமகாலத்திலும் செய்தி மற்றும் தகவற்பரம்பலுக்கான முக்கிய சர்வதேச ஊடகங்களாக உள்ளன.

இன்று நாம் தகவற் தொழில்நுட்பத்தின் உச்ச வளர்ச்சிக் காலகட்டத்தில் வாழ்கின்றோம். கருத்துருவாக்கங்கள் ஊடகங்கள் வாயிலாகவே அதிகமதிகம் நிகழ்கின்றன. இன்றைய உலகின் அரசியல்-சமூக-பொருளாதார நிகழ்ச்சிநிரலை தீர்மானிக்கும் சக்தியாக ஊடகங்கள் திகழ்கின்றன. குறிப்பாக அரசியல் நிகழ்ச்சிநிரலைத் தீர்மானிக்கின்ற அபார வலிமை ஊடகங்களுக்குண்டு.

## சி.என்.என் விளைவு (CNN effect):

ஊடக அதிகாரம் பற்றிப் பேசும் போது, சி.என்.என் விளைவு (CNN effect) குறித்துப் பேசுவது பொருத்தமான ஒன்று. சி.என்.என் விளைவு அல்லது தாக்கம் என்ற சொல்லாடல் உலகளாவிய ரீதியில் சமூகவியல், அரசறிவியல் மற்றும் ஊடகவியல் சார்ந்த கற்கையில் முக்கியத்துவம் வாய்ந்த பேசுபொருளாக உள்ளது. உலகில் முதன்முதலில் உருவான இந்த 24 மணிநேர தொலைக்காட்சி செய்திச்சேவையை அமெரிக்கா தனது அரசியல் மூலோபாய நலன்களுக்குச் சாதகமான கருவியாக கையாண்டது, கையாண்டு வருகின்றது. குறிப்பாக பனிப்போருக்குப் பிற்பட்ட காலங்களில் நாடுகள் மீதான ஆதிக்கம் செலுத்துதலென்ற இராஜதந்திர காய்நகர்த்தல்களுக்கு ‘CNN effect’ அதிகமதிகம் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது ஆய்வாளர்கள் பலரின் கருத்தாகும்.

சி.என்.என் (CNN - Cable News Network) 1980-ல் தொடங்கப்பட்ட 24 மணிநேரச் செய்திச் சேவை. அமெரிக்காவில் தேசிய அளவில் நேயர்களைக் கொண்டுள்ளதோடு உலக நாடுகளிலும் பரந்த பார்வையாளர்களைக் கொண்டிருக்கின்றது. இவ்வாறாகவே சி.என்.என்-இன் உலகளாவிய முக்கியத்தும் கணிக்கப்படுகின்றது. 1990-களில், குறிப்பாக வளைகுடா யுத்தத்தின் போது, 24 மணிநேரச் செய்திச் சேவையூடாக அது புதிய தாக்கத்தை ஏற்படுத்தத்தொடங்கியது. அதிலிருந்து தொடர்ச்சியாக அமெரிக்காவின் பல்வேறு சர்வதேச அணுகுமுறைகளை சி.என்.என் விளைவின் பின்னணியில் நோக்க முடியும்.

## உதாரணங்கள்:

1992-ல் சோமாலியாவிற்குள் அமெரிக்கப்படைகளை இறக்குவதற்கான பரப்புரைகளுக்கு சோமாலிய அகதிகளின் பட்டிணிச்சாவுகளும் மனித அவலங்களும் ஊடகக் காட்சிப் பொருளாக்கப்பட்டன. அதேவேளை கொல்லப்பட்ட அமெரிக்க இராணுவ வீரன் ஒருவனின் உடல் கட்டப்பட்டு மொகடிசு (Mogadishu) வீதிகளில் இழுத்துச் செல்லப்பட்ட காட்சிகளே அடுத்த ஓர் ஆண்டுக்குள் (1993) அங்கிருந்து தனது படைகளை அமெரிக்கா மீள அழைப்பதற்கும் வழிகோலியது.

1999 காலப்பகுதியில் கொசோவோவிற்குள் நோட்டோ (NATO) படைகள் இறக்கப்பட்ட போது கிழக்கு ஐரோப்பாவில் ஆதிக்கம் செலுத்தும் அமெரிக்க மூலோபாய நகர்வுக்கு ஊடகபலம் கைக்கொள்ளப்பட்டது. பின்னர் ஈராக்-ஆப்கானிஸ்தான் போர்களை நியாயப்படுத்தவும் உலக நாடுகளை அணிசேர்க்கவும் ‘செப்ரெம்பர் 11’ காட்சிகள் எத்துணை கச்சிதமாய் கைக்கொள்ளப்பட்டன என்பதை விளக்கிக்கூறத் தேவையில்லை.

வியட்னாம் போரில் அமெரிக்கா ஆதரவிழந்து தோல்வி கண்டு வெளியேறிய பின்னணியிலும் ஊடகத்தின் பங்கு குறிப்பிடும்படியாய் இருந்தது. 1972-ம் ஆண்டு அமெரிக்க இராணுவத்தினரின் பிடியிலிருந்து உயிர் பிழைப்பதற்காக வியட்னாமி வீதியொன்றில் மரண பீதியுடன் சிறுவர்கள் ஓடுகின்ற காட்சியின் ஒளிப்படத்தில், குறிப்பாக அதில் 9 அகவையுடைய புக் பான் தி (Phuc Phan Thi) என்ற வியட்னாமியச் சிறுமி உடைகளில் தீ பற்றியதால் - பற்றவைக்கப்பட்டதால் வெறும்மேனியுடன் ஓடும் காட்சி அமெரிக்கப் படைகள் வியட்னாமிய மக்களுக்கு ஏற்படுத்திய அவலங்களின் குறியீடாக பார்க்கப்பட்டது. அந்த ஒளிப்படம் அசோசியட்ரெட் பிரஸ் (Associated Press) செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த

படப்பிடிப்பாளர் Nick Ut இனால் எடுக்கப்பட்டதாகும்.

இவ்வாறாக அரசியல் நிகழ்ச்சி நிரல்களைத் தீர்மானிக்கும் சக்தி ஊடகங்களுக்கு உண்டென்பதற்கு உலக வரலாற்றிலிருந்து பல்வேறு எடுத்துக்காட்டுக்களைப் பட்டியலிட முடியும்.

## விரைவான புள்ளிவிபரங்கள் - கறுப்பு வெள்ளைப் பார்வை:

இன்னொரு வகையில் சி.என்.என் விளைவினை உலக மக்கள், சமூகம் மீதும் மற்றும் அரசியல் மட்டத்திலும் கருத்தியல் சார்ந்து ஊடகங்கள் கொண்டிருக்கும் அதிகாரம் என்பதை விபரிக்கும் சொல்லாகவும் புரிந்துகொள்ளலாம். தொடர்ச்சியாகவும் விரைவாகவும் இடைவெளியின்றிச் செய்திகளையும் தகவல்களையும் ஒளிபரப்புவது அதன் இயங்கு முறை. இன்னும் எளிமையாகச் சொல்வதானால் மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் ஒரே விடயத்தை அல்லது தாம் கடத்த, பரப்ப விரும்பும் செய்தியை, நிகழ்வைப் புள்ளிவிபரங்களோடு தொடர்ச்சியாக ஒளிபரப்புவதாகும். கொரோனா காலத்திற்கூட சி.என்.என் விளைவின் மீள் தோற்றத்தைக் காணமுடிந்தது. இறப்பு எண்ணிக்கை, தொற்று எண்ணிக்கை, கொரோனா பரிசோதித்தோர் தொகை, தடுப்பூசி எடுத்துக் கொண்டோர் எண்ணிக்கை என ஊடகங்கள் உலக ரீதியாக, நாடுகள் ரீதியாக, மாநிலங்கள், நகரங்கள், மாவட்டங்கள் ரீதியான தகவல் அட்டவணைகளைப் பதிவேற்றி வந்தன. இது சி.என்.என் விளைவின் மூலத்தை நினைவூட்டக்கூடிய நிகழ்வு.

உலகளாவிய ரீதியிலும் நாடுகள் மட்டத்திலும் சமூகப் பரப்புகளிலும் பலமுனைகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலை வெறும் புள்ளிவிபரங்களாக மட்டும் முன்வைக்கப்படும் போது, அச்சூழ்நிலையின் யதார்த்தபூர்வமான விளைவுகளை உரிய முறையிற் கிரகித்துக்கொள்வது பொதுமக்களுக்கு சிரமமான காரியமாகிவிடுகிறது. தருணங்களில் இத்தகைய சித்தரிப்புகள் ஒரு கறுப்பு வெள்ளைப் புரிதலுக்கும் இட்டுச் செல்லக்கூடியது. அதாவது ஒன்றில் போர்கள், பெருந்தொற்றுகள் உள்ளிட்ட இடர்களின் விளைவுகளை மீள முடியாத பேராபத்துகளாக உணர்த்துவது அல்லது அவை பொருட்படுத்தத் தேவையற்ற விவகாரங்கள் என்ற பார்வையை உருவாக்குவதற்கும் இட்டுச்செல்கின்றது. அவற்றின் பன்முகப்பட்ட பாதிப்புகளையும் விளைவுகளையும் கிரகித்துணர முடியாத நிலைக்குப் பொதுமக்களைத் தள்ளுகின்றது. அன்றேல் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நிகழ்ந்துகொண்டிருக்கின்ற பெருநிகழ்வு மீது அதீத கவனத்தைக் குவிப்பதும், பின்னர் இன்னொரு நிகழ்வு மீது முழுக்கவனத்தினையும் மடைமாற்றித் திருப்புவது என்பதாகவும் பேருடகங்களின் அணுகுமுறை அமைகின்றது.

## கவனக்குவிப்புகளும் திசைதிருப்பல்களும்:

கொரோனாப் பெருந்தொற்று மீதான கவனக்குவிப்புத் திடீரென நிறுத்தப்பட்டு, உக்ரைன் மீதான ரஷ்யப் போரின் மீது கடந்த ஓராண்டுக்கு மேலான ஊடகக் கவனக்குவிப்புத் திசைதிருப்பப்பட்டுள்ளமையைச் சமகால எடுத்துக்காட்டாக முன்வைக்க முடியும். ரஷ்ய - உக்ரைன் போர் மீதான கவனக்குவிப்பு குறைக்கப்பட்டு இன்னொரு பிரச்சினை மீது கவனம் குவிக்கப்படுவதும் அடுத்து நிகழப்போகின்ற ஒன்றுதான். ரஷ்ய - உக்ரைன் நிலைமைகள் உரிய முறையில் நிலைகொள் தீர்வினை எட்டப்பட முன்னர் அத்தகையை கவனத்திசைதிருப்பல் நிகழப்போகின்றது. உக்ரைனின் அழிவுகளும் மக்களின் இழப்புகளும் மறக்கப்பட்ட ஒன்றாக மாற்றப்பட்டுவிடும். இவை சமகால உதாரணங்கள் மட்டுமே. அண்மைய வரலாற்றிலும் அதற்கு முன்னரும் பல்வேறு நிகழ்வுகளைப் பட்டியலிட முடியும்.

பெரிய ஊடகங்கள் மற்றும் செய்தி நிறுவனங்கள் மேற்குலகத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. அவை வெளிப்படுத்தும் பார்வைகளும் தகவல்களும் மேற்குச் சார்பு நிலையுடையவை என்ற விமர்சனங்கள் பல மட்டங்களில் நிலவிவருகின்றன. மேற்கு அல்லாத உலகின் ஏனைய பிராந்திய மக்களின் பார்வைகளையும் கருத்துகளையும் கவனக்குவிப்புடன் மேற்கின் ஊடகங்கள் பிரதிபலிப்பது அரிது. ஆனால் மேற்கின் ஊடகங்கள் உலகளாவிய நிகழ்ச்சிநிரலைத் தீர்மானிப்பதில் பெரும் அதிகாரத்தினைக் கொண்டிருக்கின்றன.

## 'போரின் முதற்பலி உண்மை':

'போரின் முதற்பலி உண்மை' என்பது பரவலாக அறியப்பட்ட ஒரு கூற்று. உலகின் கூர்மையான முரண்பாடுகள், போர்கள் சார்ந்து சுயாதீனமான தகவல்கள், செய்திகள் வெளிவருவதும் அரிது. பெரிய சர்வதேச ஊடகங்கள் உடபட பெரும்பாலான ஊடகங்கள் உத்தியோகபூர்வ ஊடகமாநாடுகளில் அதிகாரம் மிக்க அரசியல், அரசாங்க, இராணுவத்தரப்புகள் வெளியிடும் தகவல்கள், அறிக்கைகளை விமர்சனமின்றி வெளியிடுகின்றன என்பது பலதசாப்தங்களாக முன்வைக்கப்பட்டு வருகின்ற குற்றச்சாட்டு. உலகச் செய்திகளின் பெரும்பகுதிக்கான மூலாதாரமாக இன்னமும் AFP, Associated Press மற்றும் Reuters போன்ற சர்வதேச செய்தி நிறுவனங்களே உள்ளன. பல ஊடகங்கள் ஒரே செய்தி நிறுவனத்திடம் இருந்து செய்திகளைக் கட்டணம் செலுத்தி வாங்குகின்றன. சி.என்.என் மற்றும் பிபிசியின் உலகளாவிய ஒளிபரப்புகளையே பெரும்பாலான அரசியல் தலைவர்களும் நாடுகளின் தலைவர்களும் தகவல் ஆதாரமாகப் பயன்படுத்துகின்றனர். கடந்த பத்தாண்டுகளில் அல் ஜசீரா தொலைக்காட்சி கணிசமான முக்கியத்துவத்தினைப் பெற்றுள்ளது. கட்டாரைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் அல் ஜசீரா, அரேபிய நிலைப்பாட்டிலும் பார்வையிலுமிருந்து செய்திகளை வெளியிட்டுவருகின்றது. மேற்கிற்கு மாற்றான ஊடகப்பார்வையாக இது வளர்ந்து வருகின்றது.

## புதிய தகவல் யுகம்:

ஊடகத்துறையில் தகவல் தொழில்நுட்பத்தின் அபார வளர்ச்சியால் பெரும் பாய்ச்சல் நிகழ்ந்துள்ளது. இணையமும் சமூக ஊடகங்களும் கோலோச்சும் காலத்தில் வாழ்கின்றோம். கூகுள், அப்பிள் மற்றும் ஃபேஸ்புக் ஆகியவை

பாரிய இலாபமீட்டும் நிறுவனங்கள். இணையம் மற்றும் ஸ்மாட் தொலைபேசிகளை மையமாகக் கொண்ட புதிய ஊட கப் புரட்சியின் ஒரு பகுதியாக அவை வெவ்வேறு வடிவங்க ளில் உள்ளன. இவை தனிநபர் சுயவிபரங்கள் உட்பட்ட தக வல்களைக் கண்காணிக்கின்றதும் கட்டுப்படுத்துகின்றதுமான நிலையில் உள்ளன.

ஊடகங்களில் தமது நாடு மற்றும் ஆட்சியைப் பற்றிய நற் பெயருடனான பிம்பத்தினை உருவாக்குவதற்குப் பல நாடு கள் பெருந்தொகை நிதியைச் செலவு செய்கின்றன. அரபு நாடுகளிற் தம்மைப் பற்றிய விளம்பரம் மற்றும் தகவற் பிரச் சாரங்களை முன்னெடுப்பதற்கு அமெரிக்கா பல்வேறு மக் கள்தொடர்பு நிறுவனங்களுடன் (PR Agencies) ஒப்பந்தங்க ளைக் கொண்டிருக்கின்றது. முன்னர் பனிப்போர்க் காலத் தில், கொம்யூனிச நாடுகளை நோக்கியதாக, அமெரிக்க அரசு அமெரிக்காவின் குரல் (Voice of America) வானொலி ஒலிபரப்பினை இயக்கியதான தகவல்கள் உள்ளன. தற் போது அரபு நாடுகளில் இளைஞர்களை இலக்காகக் கொண்டு ரேடியோ சாவா (Radio Sawa) என்ற வானொலிச் சேவையை முன்னெடுத்து வருகின்றது.

## பின்-சி.என்.என் - Post-CNN' - சமூக ஊடகங்கள்:

'பின்-சி.என்.என் - Post-CNN' ஊடகச் சூழலில், தகவற்பரம்ப லின் தொழில்நுட்ப மையச்சாதனமாக சமூக ஊடகங்கள் ஆகியிருக்கின்றன. தனிமனிதர்கள் தமது உணர்வுகளையும் மனப்பதிவுகளையும் கருத்துகளையும் வெளிப்படுத்துவதற் கான தளமாக அவை விளங்குகின்றன. மட்டுமல்லாமல், சாதாரண மக்கள் தகவல்களை அணுகுகின்ற மற்றும் பெறு கின்ற முறைகளிலும் சமூக ஊடகங்கள் பெரும் மாற்றத்தை நிகழ்த்தியுள்ளன. இது அடிப்படையில் ஒரு புதிய திறவு கோல்.

பேஸ்புக், ரிவிற்றர் போன்ற சமூக ஊடகங்கள் அரசியல் சார்ந்து மக்கள் திரளை ஒன்றுதிரட்டுகின்ற கருவிகளாகவும் பயன்படத் தொடங்கியுள்ளன. அதன் தொடக்கமாக அரபு வசந்தம் கணிப்பிடப்படுகின்றது. நிகழ்நேர வலையமைப்புத் தகவல்தொடர்பு மூலம் (Real-time Networked Communication) சமூக ஊடகங்கள் ஒரு சக்திவாய்ந்த முடுக்கியாகச் செயல்பட்டன. சர்வாதிகார ஆட்சிபீடங்களுக்கு எதிரான போராட்டங்களில் மக்களைத் திரட்டுவதற்கான தீர்க்கமான தகவற்பரம்பல்களுக்கு சமூக ஊடகங்கள் துணை புரியத் தொடங்கியுள்ளன. எதிர்ப்பரசியல், ஜனநாயக மக்கள் போராட்டங்களில் மக்களை ஒன்றுதிரட்டவும் ஒருங்கிணைக்க வும் பயன்படத்தொடங்கியுள்ளன. ஆனால், மக்கள் போராட் டங்களை ஒடுக்குகின்ற ஆட்சிபீடங்கள் இணைய இணைப்பு களையும் சமூக ஊடக இணைப்புகளையும் துண்டித்து போராட்டக்காரர்களின் தொடர்பாடல்களை முடக்குகின்ற நிலைமைகளும் உள்ளன.

## மாறிவிட்ட ஊடகத்தளங்களும் பரிமாணங்களும்:

தற்போது செய்திகள், தகவல்களை வெளியிடுவதற்கானதும், பெறுவதற்கானதுமான ஊடகத்தளங்களும் அவற்றின் பரிமா ணங்களும் மாறிவிட்டன. இணையத் தளங்கள், இணையத் தொலைக்காட்சிகள், யூரியூப் தளங்கள், பேஸ்புக், ரிவிற்றர் எனப் புதிய டிஜிற்றல் தளங்கள் உச்சமான பயன்பாட்டுக்கு வந்துவிட்டன. ஆனாலும் பாரம்பரிய தொலைக்காட்சிச் சேவைகள் என்று சொல்லக்கூடிய சி.என்.என், பி.பி.சி உட் பட்ட இன்னும் பல சர்வதேச தொலைக்காட்சிகள் சமகாலத் திலும் செய்தி மற்றும் தகவற்பரம்பலுக்கான முக்கிய சர்வ தேச ஊடகங்களாக உள்ளன. சர்வதேச விவகாரங்களில், முரண்பாடுகளில் அவை முக்கிய பங்கு வகிக்கின்றன என் பது சமூக ஆய்வாளர்களின் பார்வை. முரண்பாடுகளையும் மோதல்களையும் கூர்மைப்படுத்துகின்றன என்ற கருத்தும் நிலவுகின்றது. ஒரு கருத்துக்கு அல்லது அறிக்கைக்கு வேக மாக எதிர்வினை ஆற்றப்படுவதற்கு ஊடகங்கள் தூண்டுகின் றன. மௌனம் காப்பதை ஊடகங்கள் தொடர்புபட்ட தரப்புக ளின் பலவீனம், செயல்வலுவின்மை என்பதாகச் சித்தரக்கும் போக்கினைக் கொண்டுள்ளன. ரஷ்ய - உக்ரைன் போருக் கான புறத்தூண்டுதல்களை ஊடகங்கள் எவ்வாறு கையாண் டன, கையாண்டு வருகின்றன என்பது ஊடகங்களின் போக் கிற்கான அண்மைய உதாரணம். கருத்துக்கு எதிர்க்கருத்து, வாதத்திற்கு எதிர்வாதம், அறிக்கைக்கு எதிரறிக்கை எனவாக முரண்பாடுகள் வளர்க்கப்படத் தூண்டுதலாகவும் நல்லிணக் கத்திற்கான வாய்ப்புகளை நலிவடையச் செய்கின்ற அணுகு முறையும் ஊடகங்கள் மட்டத்தில் நிலவிவருகின்றது.

## அதிகாரத்தின் மூலசக்தி:

அதிகாரத்தின் மூல சக்தியாக தகவல் உள்ளது. யார் அல் லது எந்தத் தரப்பு தகவல்களைக் கொண்டிருக்கின்றதோ அல்லது அவற்றைப் பரப்புவதற்குரிய ஊடகங்களைத் தம்வ சம் வைத்திருக்கின்றதோ அதுவே அதிகாரமுடைய சக்தி. அரசியல், பொருளாதார, சமூக விவகாரங்களை நிகழ்ச்சிநிர லுக்குள் கொண்டுவருகின்றதும் நிகழ்ச்சிநிரலைத் தீர்மானிக் கின்றதுமான சக்தி அது. இன்றைய தகவற்தொழில்நுட்ப யதார்த்தமென்பது, தகவல்களைப் பரப்புவது மட்டுமல்ல, அவற்றைக் கட்டுப்படுத்துவதையும் குறிக்கின்றது. வணிக ஆதாயத்தின் பொருட்டு தகவல்கள், தொழில்நுட்பப் பெரு-நிறுவனங்களாற் கையாளப்படுகின்றன.

அமெரிக்காவும் அதன் சார்பு நிலையுடைய மேற்குமே ஊடக பலம் மிக்க சக்திகளாக விளங்குகின்றன. உலக அரசி யலை, பொருளாதாரத்தை, போர்களை, முரண்பாடுகளை நிர்ணயிக்கின்ற சக்திகளும் அவையே. உதாரணமாக அவர் கள் நடத்துகின்ற போர்கள் சார்ந்து (அண்மைய உதாரணங் கள்: ஆப்கானிஸ்தான், ஈராக், லிபியா, சிரியா, ரஷ்யா - உக்ரைன்) தமக்குச் சாதகமான கருத்துநிலைகள் மேலோங்க வும், பரவவும், நிலைபெறவும் ஏற்ற வகையில் தமது ஊடகங் களைக் கையாள்கின்றன. தவிர உலக அரசியல் நிகழ்ச்சிநிர லைத் தீர்மானிக்கவும், மாற்றவும், நிலைபெறச்செய்யவும் ஊடகங்கள் முதன்மை வகிபாகத்தைக் கொண்டுள்ளன.



rooban.s@thaiveedu.com

# அங்கீகரிக்கப்பட்ட போர் எனப்படும் கொலைகளும் அவலங்களும்

– போல் ஜோசேப்

செலன்ஸ்கி என்ற பந்தயக்குதிரை மீது நம்பிக்கை வைத்து பல பில்லியன் டாலர்களைப் போட்டு, புதின் என்ற குதிரைக்கு எதிராக ஓடவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிற ஓர் ஆபத்தான பந்தயத்தை மேற்குலகம் தொடங்கி பெப்ரவரி 24 உடன் ஓராண்டு நிறைவு பெறுகிறது.

### ஊழிநாள் அழிவுக் கடிகாரத்தின் எச்சரிக்கை:

சில நாட்களுக்கு முன்பு மேற்குலகம் ஆட்டுவிக்கிற ஒரு பொம்மை நிறுவனமான ஐ.நா-வின் பொதுச் சபை கூட்டத்தில் திடீர் ஞானோதயம் வந்தவர்போல இதன் பொதுச் செயலாளர் அன்ரோனியோ குட்டெரெஷ் ஆற்றிய உரையில்

‘ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு புதிய வருடத்திற்கான காலெண்டரை நாங்கள் மாற்றினோம். ஆனால் சில நாட்களுக்கு முன்பு மற்றொரு கடிகாரம் திரும்பியது ‘டூம்ஸ்டே’ கடிகாரம் (Doomsday clock). அந்த குறியீட்டுக் கடிகாரம் 75 ஆண்டுகளுக்கு முன்பு அணு விஞ்ஞானிகளால் மனித கடிகாரம்.

டூம்ஸ்டே கடிகாரம் இப்போது மனித குலத்தின் இருண்ட நேரமான நள்ளிரவை அல்லது உலகளாவிய மனித குல அழிவை நெருங்குவதற்கு வெறும் 90 வினாடிகள் மட்டுமே உள்ளதாக எச்சரிக்கிறது. மனிதகுலத்தின் இருண்ட நேரத்திற்கு இந்தக் கடிகாரம் இதுவரை நிற்காத மிக நெருக்கமான நேரம் இது - பனிப்போரின் உச்சத்தை விடவும் நெருக்கமாக இது உள்ளது நாம் விழித்தெழுந்து செயலாற்ற வேண்டிய நேரம் இது’ என இப்போது தான் உறக்கத்திலிருந்து எழுந்தவர் போல உரையாற்றியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் ‘போர்கள் நசுக்குகின்றன. ஒரு புறம் அதீத செல்வச் செழிப்பும், மறுபுறம் கடும் வறுமையும் தலை தூக்குகின்றன. உள்ளவர்க்கும் இல்லாதவர்க்குமான இடைவெளி, சமூகங்கள், நாடுகள் மற்றும் பரந்த உலகைப் பிளவுபடுத்துகின்றன.

புவிசார் அரசியல் பிரிவுகள் ஒற்றுமையையும் நம்பிக்கையையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன. இப்போது நாம் செல்லும் பாதை ஒரு முட்டுச் சந்து, எங்களுக்கு ஒரு பாடத் திருத்தம் தேவை. மூலோபாயப் பார்வை, நீண்ட காலச்சிந்தனை மற்றும் அர்ப்பணிப்பு தலைவர்களிடத்தில் இல்லை. குறுகிய கால அரசியல் மற்றும் வணிக வாழ்க்கையில் ஒரு சார்பு, அடுத்து அதிகாரத்தில் ஒட்டிக் கொண்டிருக்க தந்திரோபாயமான அரசியல் சூழ்ச்சிகள், வணிக சுழற்சி - பங்குச் சந்தை, எதிர்காலம் என்பது வேறொருவரின் பிரச்சினை போன்ற இந்த சிந்தனைகள் பொறுப்பற்றது மட்டுமல்ல அது ஒழுக்கக் கேடானது’ என்று உலகத் தலைவர்களை கொஞ்சம் பொறுப்பான முறையில் கண்டித்துப் பேசியிருக்கிறார்.

‘இன்று உங்களுக்கு என்ன நேரிடலாம் என்பதில் மட்டும் கவனம் செலுத்தாதீர்கள், நாளை நம் அனைவருக்கும் என்ன நடக்கும் என்பதைப் பரிந்து முடிவெடுக்கும் மனநிலையை மாற்ற வேண்டும்.

அது தன்னைத்தானே தோற்கடிக்கிறது, மேலும் பிளவுபடுத்தக் கூடியதாகவும் ஆபத்தானதாகவும் ஆக்குகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக உலகம், தொழிநுட்பம், காலநிலை அழிவு போன்றவற்றில் படிப்படியாக நகரவில்லை. இது டிங்கரிங் (Tinkering) செய்வதற்கான நேரமல்ல, இது மாற்றத்திற்கான நேரம்’ என்றும் குறிப்பிடுகின்றார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு, ஆழமான உலகளாவிய தாக்கங்களுடன் உக்கிரேனிய மக்களுக்கு சொல்லொணா துன்பங்களை ஏற்படுத்துகின்றது. அமைதிக்கான வாய்ப்புகள் குறைந்து கொண்டே வருகிறது. பெரிய ரத்தக் களரிக்கான வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன என்பது பற்றியெல்லாம் அவரது நீண்ட உரை அமைந்திருந்தது.

ஐ.நா பொதுச் செயலாளரின் உரை நன்றாக இருப்பினும் செயற்பாடுகள் மந்தமான நிலையில், ஒரு பக்கச் சார்பு பின்னணியில் செயற்படுவதாகத் தோன்றுகின்றது. போரின் களச் சூழலில் இரண்டு பிரிவினரையும் இணைத்து மேற்கொள்ள வேண்டிய நேரடியான அமைதிக்கான முன்னெடுப்புகள் வலுவற்றதாக இருப்பதால்தான் ஓராண்டு காலமாகியும் அமைதி யேற்படவில்லை.

### இரண்டு லட்சம் இராணுவ வீரர்களின் உயிரிழப்பு:

ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகள் இரண்டிலும் இரண்டு இலட்சத்துக்கு மேல் இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர். பல ஆயிரம் பொதுமக்கள் பலியாகினர். பல இலட்சம் மக்

கள் இடம்பெயர்ந்துள்ளனர். நகரங்கள் அழிந்து அழகிய பல கட்டடங்கள் எரிந்துபோன எலும்புக் கூடுகளாக காட்சி தருகின்றன. இவற்றையெல்லாம் மீளமைக்க இன்னும் எத்தனை தசாப்தங்கள் ஆகும் என்று தெரியவில்லை. மீளமைக்கவே முடியாத மனிதப் பேரவலமும், உலகளாவிய பொருளாதாரப் பின்னடைவும் இரண்டு நாடுகளையும் அமைதித் தளத்திற்கு அழைத்துவர போதுமான காரணிகளாகும். இரு நாடுகளின் அறிக்கைகளை கடந்த ஓராண்டுகளாக தொடர்ச்சியாக ஆய்வுசெய்ததில் அவர்களின் ஆழ்மனதில் அமைதியைநோக்கிய அணுகுமுறைகளின் ஆசைக்கான குறியீடுகள் தான் மேலோங்கி இருக்கிறது.

ஆனால் அதைத் தடுப்பது யார்? தங்களின் நிகழ்ச்சி நிரல் திட்டத்தை மறைமுகமாக நிறைவேற்றிட பின்புலத்தில் செயற்படுவது யார் என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதில்லை. உலகப் போர்களுக்கு பின்பு உருவான பனிப் போரின் வெடிப்புகளின் தொடர்ச்சியே இன்னும் நீண்டு கொண்டு போகிறது.

## நேட்டோ - அங்கீகரிக்கப்பட்ட ஒரு ‘ஆயுதக்குழு’:

8 முதல் 10-ம் வகுப்பு வரை எனது சமூகக் கல்வி கற்பித்த ஆசிரியை ஒரு முற்போக்கு சிந்தனையுள்ள அருட்சகோதரி. அவர் பாடத்திட்டங்களையும் தாண்டி சமூக நலம் மற்றும் உலக அரசியல் விடயங்களைப் பற்றியும் அறிவூட்டல் செய்வார். நேட்டோ (NATO) என்பது இரண்டாம் உலகப் போருக்கு பின்பு தங்களைப் பாதுகாத்துக் கொள்ள சில மேற்குல நாடுகள் ஒன்றிணைந்து உருவாக்கிய ஒரு இராணுவக் கூட்டமைப்பு, இது ஒரு சமாதானத்திற்கான இராணுவ அமைப்பு என்பது போல இருந்தாலும், செயற்படுவது என்னவோ உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் ‘ஆயுதக் குழு’ போலத்தான் என்று அவர் குறிப்பிட்டது இன்னும் என் நினைவுகளில் உள்ளது.

வடிவேல் பாணியில் சொன்னால் ‘உசுப்பேத்தி... உசப்பேத்தியே ரணகளமாக்கிவிட்டார்கள்’ என்பது போல நேட்டோ நாடுகள் உக்கிரைனுக்கு பல பில்லியன் டாலர்களையும், ஆயுதங்களையும் வாரிவழங்கி வருகிறார்கள்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் கடந்த கிறிஸ்மஸ் காலத்தில் அமெரிக்கா வந்த செலன்ஸ்கி காங்கிரசில் ஆதரவு கேட்டு உரையாற்றினார். அப்போது ‘நாங்கள் போராடுவது நமக்கான விடுதலைக்கு மட்டுமல்ல ஐரோப்பாவுக்கும் மேற்குலகத்துக்குமான விடுதலைக்காகவும்தான். கிரெம்ளினுக்கு எதிரான இந்த போரில் நாம் ஒன்றுபடுவோம். ‘Put in together to fight against putin’ என்று பேசினார்.

மேலும் ‘நீங்கள் கொடுக்கும் பணம் ஏதோ ஒரு தொண்டுக்காக (Charity) அல்ல மாறாக இது ஒரு முதலீடு, உலகப் பாதுகாப்புக்கான முதலீடு’ என்றார். இதில் எவ்வளவோ பொருள் பொதிந்திருப்பதை நாம் உணரமுடியும்.

‘நாங்கள் சமாதானத்திற்கு (Peace Formula) அமைதிச் சூத்திர திட்டத்தை வைத்துள்ளோம். அதை அமெரிக்க அதிபர் தான் முன்னெடுக்க வேண்டும்’ என்று அவர் குறிப்பிட்டதிலிருந்து இது ‘வெள்ளை மாளிகைக்கும் கிரெம்ளின் மாளிகைக்குமான’, வல்லரசுகளின் அதிகாரப் போட்டிக்கானபோர். ஆனால் பலியாவதோ சொற்ப சம்பளத்திற்காக தங்கள் உயிரைப் பணயம் வைத்துப் வேலைசெய்யும் ஒரு இளைய தலைமுறையாகிய இராணுவம்.

## உக்ரைன் அரசின் இனப்படுகொலை:

ஒரு நாடு நேட்டோவில் சேரவேண்டுமென்றால் முதலில் அதன் எல்லைகள் முறையாக வரையறுக்கப்பட்டதாக இருக்க வேண்டுமென்பதில் நேட்டோ இராணுவக் கூட்டமைப்பு கண்டிப்பாக இருக்கிறது. ஆனால் உக்கிரைனின் ரஷ்ய எல்லைப் பகுதியில் இருக்கும் இரண்டு பெரிய மாநிலங்கள் டொனெஸ்க் மற்றும் லூகான்ஸ்க் ஆகியவை தங்களைத் தனித்தனி தேசங்களாக பிரகடனப்படுத்தியுள்ளன. இது கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் ஒரு போராட்டமாகும். இந்த இரண்டு பகுதியிலும் ரஷ்ய மொழி பேசும் இருவேறு பழங்குடி இனக்குழுமங்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு ஆயுதமும் பயிற்சியும், ரஷ்யா நேரடியாக வழங்கி அவர்களின் தனி நாட்டுக்கான போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி வருவது மட்டுமல்ல தனி தேசங்களாக ரஷ்யா சார்பு நாடுகளும் அங்கீகரித்துள்ளன.

இதனை ஏற்காத உக்ரைன் அரசு கடந்த பல ஆண்டுகளாக அந்த இனக்குழுமங்கள் மீது தாக்குதல் நடத்தியதில் பல ஆயிரம் மக்களும் போராளிகளும் இனப்படுகொலை செய்யப்பட்டதாக உக்ரைன் மீது ரஷ்யா ஆதாரங்களோடு குற்றச்சாட்டை சில ஆண்டுகளாகவே ஐ.நா சபையில் தெரிவித்து வந்துள்ளது. ஆனால் இதனை ஏனோ ஐ.நா கண்டு கொள்ளவில்லை. இந்த தேசிய இனக்குழுமங்களைச் சேர்ந்தவர்கள் பலர் உக்ரைனின் மற்றப் பகுதிகளிலும் வாழ்வதால் அவர்கள் மீதும் உக்ரைன் அரசு தாக்குதல் மேற்கொண்டு இனப்படுகொலை செய்வதால் தான் NEO - NAZISM - புதிய நாசிசம் என்ற கிட்லரின் வழிமுறையை செலன்ஸ்கி பின்பற்றுவதாக புடின் குற்றம் சாட்டுகிறார்.

இதில் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டாக வேண்டும் 24 டிசம்பர் 2014-ல் ஐ.நாவும் சர்வதேச மன்னிப்புச் சபையும் உக்ரைன் ராணுவத்தினர் மீது மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றச் சாட்டை முன்வைத்தனர். டொன்ஸ்க் மற்றும் லூகான்ஸ்க் பகுதியிலுள்ள போராடும் இனக்குழுமங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை கண்டிப்பதோடு புதிய நாசிசம் என்ற குழுவினரும் உக்ரைனோடு இணைந்து செயற்படுவதாகவும் அந்தக் குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2014 யூலையில் மலேசிய விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டு 300 பேர் பலியான சம்பவம் எல்லோருக்கும் நினைவிருக்கும். இந்த நிகழ்வு உக்ரைன் தரப்பும், போராளிகள் தரப்பும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டி வருவதும் குறிப்பிடத்தக்கது.

அடுத்தது கருங்கடலின் முக்கிய கேந்திரமான கிரிமியா என்ற தீபகற்பம் முன்பு உக்ரைனின் கட்டுப்பாட்டில் இருந்

தது 2014-ல் தாக்குதல் மூலம் கிரிமியாவை ரஷ்யா கைப் பற்றி கிரிமியக் குடியரசு என்று அறிவித்து தன்னுடைய கட் டுப்பாட்டில் கொண்டு வந்து ஒரு மிகப் பெரிய பாலமும் கட்டி தன்னுடன் இணைத்துக் கொண்டது.

## கிரிமியக் குடியரசு:

கருங்கடல் வழியாக வரும் மேற்குலக மற்றும் நேட்டோப் படைகளால் தனது நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப் பதாகவும் அதனால் தான் கிரிமியாவை குடியரசாக அறி வித்து தன்னுடன் இணைத்துக் கொண்டதாகவும் புடின் அறி வித்தார். உண்மையில் பூகோள ரீதியாக எப்போதும் ரஷ்யா வுக்கு அச்சுறுத்தலான பகுதியென்பது நிபுணர்களின் கருத்து.

உக்ரைன் நேட்டோவில் சேர்ந்தால் நேட்டோப்படைகள் எளி தில் ரஷ்யாவின் எல்லைக்கருகில் வந்து அச்சுறுத்தலை ஏற்படுத்தப் போவது உறுதியானது. இதனால் அமெரிக்கா எப்போதும் ரஷ்யாவை தனது கட்டுக்குள் வைத்திருப்பது என்பது மிகவும் இலகுவான செயல். அது மட்டுமல்ல நேட் டோவின் மிக முக்கியமான தலைமைக் கோட்பாடுகளில் ஒன்று நேட்டோ உறுப்பு நாட்டின் மீது தாக்குதல் நடத்தும் எந்தவொரு நாட்டின் மீதும் எந்த முன்னறிவிப்பும் இன்றி ஆகாய, தரை மற்றும் கடல் வழியாக எந்த வேளையிலும் தாக்குதல் நடத்தி அழிவுகளை ஏற்படுத்தலாம் என்பது தான்.

## அமைதியான பூமியென்பது எப்படிச் சாத்தியமாகும்?

மேற்குலக நாடுகளின் வளங்கொழிக்கும் பொருளாதாரத்தில் ஆயுத விற்பனை முக்கிய இடத்தைப் பெறுகிறது. மேற்குல கில் அறுபது பெரிய தனியார் நிறுவனங்கள் சாதாரண கைத் துப்பாக்கி முதல் போர் விமானங்கள் வரை தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுகின்றன. இந்த வியாபாரத்தில் கொள்ளை இலாப மீட்டும் தரகர்கள், அரசியல்வாதிகள், ஆயுதத் தொழில் முனைவோர் எனப் பலரின் வருமானம் கொழித்துச் செழிக்க வேண்டும் என்றால் ஆயுத விற்பனை அமோகமாக நடைபெற்றே ஆகவேண்டும். அப்படியானால் அமைதியான பூமியென்பது எப்படிச் சாத்தியமாகும்.

இதற்கிடையில் சில வாரங்களுக்கு முன்பு பேசிய உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் நேட்டோ படையில் நாம் இணைவது உறுதி என்று குறிப்பிட்டதை அடுத்து அதிபர் புடின் மேலும் கோபமடைந்து தாக்குதலைத் தீவிரப்படுத்த உத்தரவிட்ட தோடு மட்டுமல்ல ரஷ்யா - பெலாரஷ் இணைந்து கூட்டுப் போர்ப் பயிற்சியும் தொடங்கியுள்ளனர்.

உக்ரைனின் துணைப்பாதுகாப்பு அமைச்சர் நாட்டின் கிழக் குப் பகுதியில் கடுமையான சண்டைகள் நடப்பதை உறுதி செய்வதோடு ரஷ்ய துருப்புகளின் எண்ணிக்கையும் ஆயுதங் களின் எண்ணிக்கையும் அதிக அளவில் குவிக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் அமெ ரிக்கா மேலும் இரண்டு பில்லியன் டொலர் அளவுக்கு ராணுவ உதவிகளை விரைவுபடுத்த திட்டமிட்டு இருப்ப தோடு பல புதிய ரக ஆயுதங்களையும் வழங்கி பரிசோத னைகளை மேற்கொள்ளப்போவதாக அறிவித்துள்ளது.

தென்கிழக்குப் பகுதியில் நீண்ட காலமாக உக்ரைனிய கட் டுப்பாட்டிலுள்ள கோட்டையாகக் கருதப்படும் பக்முட் பகுதி யிலும் ரஷ்யப் படைகள் தாக்குதலைத் தொடங்கியுள்ளன.

இதற்கிடையில் ‘ரஷ்ய அதிபர் உண்மையிலேயே போரை முடிவுக்கு கொண்டுவர விரும்பினால் அதற்கான வழிகளைத் தேடுவதில் ஆர்வம் இருந்தால் புடினுடன் பேசுவதற்கு நான் தயார்’ என்று ஒரு குண்டைதூக்கிப் போட்டிருக்கிறார் ஜோ பைடன்.

அதற்கும் பதிலடியாக புடின் ‘ரஷ்யாவின் கவலைகளை வெள்ளை மாளிகை புறந்தள்ளுகிறது. எம்மை பலவீனப்ப டுத்துவதற்காகவும், கோபப்படுத்துவதற்காகவும் உக்ரைனை போர்களமாக பயன்படுத்துகிறது’ என்று அமெரிக்கா மீது குற்றம் சாட்டியிருக்கிறார்.

மேலும் ‘உக்கிரைனுக்கு எங்கள் கோரிக்கையும் முன்மொழி வுகளும் நன்கு தெரியும். அவற்றை நிறைவேற்றுவது உக்கி ரேனியத் தலைமையிலும் அவரை வழிநடத்தும் மூன்றாம் தலைமைகளின் கையில்தான் உள்ளது. இல்லையெனில் நாமே பிரச்சினையை தீர்மானிப்போம். ராணுவத்தால் தீர்வு காண்போம்’ என்றார்.

இந்தப் போர் முடிவுக்கு வராமல் தொடர்வது இரு நாடு களை மட்டுமல்ல சர்வதேச அளவிலும் பெரும் தாக்கங் களை ஏற்படுத்தி வருகிறது. அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட் ரம்ப் அண்மையில் முன்வைத்த கருத்து பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

நான் அதிபராக இருந்திருந்தால் இந்தப்போர் ஏற்பட்டிருக் காது. புடின் போரைத் தொடங்கியிருக்கமாட்டார். அப்படி ஒரு சூழல் ஏற்பட்டிருந்தால் நானே நேரில் சென்று பேச்சு வார்த்தை நடத்தி 24 மணிநேரத்தில் போரை முடிவுக்கு கொண்டுவந்திருப்பேன். இப்போது இவர்கள் ஆயுதங்களை அள்ளிக் கொடுக்கிறார்கள், அடுத்து என்ன அணு ஆயுதங் களை தரப்போகிறார்களா? என்று ஜோ பைடன் அரசை கடு மையாக சாடியிருக்கிறார்.

ரம்ப்புக்கும் புடினுக்கும் இருந்த ஒரு நட்புறவால் அவரின் கருத்து சாத்தியமானது என எண்ணத் தோன்றுகிறது. அவ ரின் ஆட்சிக்காலத்தில் போர்கள் அல்லது ராணுவ நடவடிக் கைகள் என்று பெரிதாக சொல்லுமளவிற்கு இல்லையென்பது உண்மைதான்.

## நேட்டோ என்பது ஒரு புற்றுநோய்:

கடந்த சில நாட்களுக்கு முன்பு ரஷ்யாவின் வெளியுறவு மற் றும் பாதுகாப்புக் கவுன்சில் தலைவரும் புடினின் ஆலோசகர் களில் ஒருவருமான Sergey Karagnov அவர்கள் பி.பி.சி தொலைக்காட்சிகாக ஸ்ரிபன் சக்குரின் நேர்காணலில் அளித்த பதில்கள் பல ஆச்சரியமும் சற்று அச்சுறுத்தலாக வும் இருந்தது.

குறிப்பாக 'நேட்டோ என்பது ஒரு புற்றுநோய், அதை குண மாக்க மருந்தோ அல்லது கதிர்வீச்சு சிகிச்சையோ பலனற் றது. அதனால்தான் அறுவைச்சிகிச்சை செய்கிறோம்' என்று சொன்னார். அவருடைய அரை மணிநேர நேர்காணலில் 'புற் றுநோய்' என்ற பதத்தை அடிக்கடி பயன்படுத்தினார். 'நாங் கள் நேட்டோ என்ற புற்றுநோய்க்கு எதிராக யுத்தம் செய்கி றோம். அதை தடுக்காவிட்டால், அது தன்னை விரிவாக்கம் செய்து பரவி எங்களுக்கும் ஆபத்தாக வருமுன்னே அதை அறுவைச் சிகிச்சை மூலம் கட்டுப்படுத்திவிடலாம். நேட்டோ உக்கிரைன் ஊடாக எங்களின் பாதுகாப்பு அச்சுறுத்தலாக அமைவதால் உக்கிரைன் நேட்டோவின் பங்காளியாவதை எதிர்க்கிறோம்'




அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவீர்களா என்ற கேள் விக்கு அவர் அளித்த பதில்தான அச்சுறுத்தலானது. 'எந்த யுத்த யுக்தியையும் பயன்படுத்த தயாராக இருக்கிறோம். மேற்குலகம் நரகத்தின் வாசலை தானே தள்ளித் திறக்க முயற்சித்தால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல' என்று மிகுந்த கோபத்தோடு பதிலளித்தார்.

தன்னை ஒரு கதாநாயகனாக சித்தரித்துக்கொண்டு மேற்குல கின் நாடாளுமன்றங்களில் கைதட்டல்களில் மயங்கி சுற்றித் திரிகிறார் செலன்ஸ்கி. அவரின் வாயால் அவருக்கே சூனி யம் வைப்பது போலவுள்ளது.

புடினின் கோபமும், திமிரும், போர் வெறியும் தொடர்ச்சியான அழிவுகளையும் உயிரிழப்புகளையும் உண்டாக்கி வருகிறது. இரண்டு தலைவர்களின் சுயநலம் ஒரு மாபெரும் போரையும் மனித இனப் பேரழிவையும் ஏற்படுத்துவதற்கான செய்தியை 'டூம்ஸ்டே' என்ற அழிவுக்கான ஊழிக்கடிகாரம் மூலம் உல கிற்கு தெளிவுபடுத்தி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டாயிற்று.

மனிதம் அழிவின் விளிம்பில் இருக்கும் நிலையில் பொருளா தார வளர்ச்சியில் பின்தங்கிய நாடுகள் மட்டுமல்ல முன்னே றிய நாடுகளும் பொருளாதார சரிவால் தடுமாறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. எல்லா நாடுகளிலும் பொருளாதார மந் தம், பணவீக்கம், வங்குரோத்து நிலை, விலைவாசியேற்றம் என்று மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

பெரும்பாலான நாடுகள் பல உணவுப்பொருட்களிலும் எண் ணெய் எரிவாயு போன்றவற்றிலும் உக்கிரைனையும், ரஷ்யா வையும் மட்டுமே நம்பி இறக்குமதி செய்கின்றன. குறிப்பாக இதனால் ஆபிரிக்க நாடுகளில் உணவுப் பஞ்சம் தலைதூக் கியுள்ளது.

போரால் ஏற்பட்ட தட்டுப்பாட்டை சமாளிக்க வளரும் நாடுக ளிலும் ஏன் வளர்ச்சி அடைந்த நாடுகளிலும் நடுத்தரக் குடும் பங்களில் நிதிநெருக்கடி, வட்டிவீதம் அதிகரிப்பு, கடன் சுமை, விலைவாசி ஏற்றம் என்று பெரும் தலைவலியாகி நெருக்கடியைச் சமாளிக்க முடியாத நிலையுள்ளது.

இதை உலகத் தலைவர்கள் உணர்ந்தாலும் யார் பூனைக்கு மணிகட்டுவது, மேற்குலகம் இறங்கிவரத் தயாராக இல்லை. இரு நாடுகளையும் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைக்க யாரும் தயாராக இல்லை என்பது கண்கூடு.

புதின் ஒரு புனிதருமல்ல!
செலன்ஸ்கி ஒரு செயின்டுமல்ல!

போர்களும் யுத்தங்களும் அங்கீகரிக்கப்பட்ட கொலைகளும் அவலங்களும் தானே! இப்போது உலகமும் அதை அங்கீக ரித்துவிட்டதோ என்ற ஏக்கமே எஞ்சி நிற்கின்றது.



*paul.joseph@thaiveedu.com*

# அழிவின் விளிம்பில் மலையக மக்களின் தேசிய அடையாளம்

- என். சரவணன்

இந்திய வம்சாவழி மக்களை இலங்கையில் சகல அரச பதிவுகளிலும், புள்ளிவிபரத் தொகை மதிப்புகளிலும் அதிகார பூர்வமாக இந்தியத் தமிழர்கள் (Indian Tamils) என்று அழைக்கப்பட்டாலும், வெகுஜன மட்டத்தில் தோட்டத் தமிழர், பெருந்தோட்டத் தமிழர், மலையகத் தமிழர் என்றெல்லாம் அழைக்கப்படுவதுண்டு. ஆங்கிலேயர்கள் ஆரம்பத்தில் கூலிகள் என்றும், இந்தியக் கூலிகள் என்றும், கூலித் தொழிலாளர்கள் என்றும் பல ஆண்டுகளாகப் பதிவுசெய்து வந்தார்கள். அதுபோக இம்மக்களை வெறுப்புணர்ச்சிமிக்க நையாண்டியுடன் கள்ளத்தோணி, வடக்கத்தேயான், தோட்டக் காட்டான் என்றெல்லாம்கூட ஏனைய சமூகங்கள் அழைத்து வந்தனர்.

20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் இந்திய வம்சாவழி மக்கள் உறுதியாகத் தமது வேரை இங்கே நிலைநிறுத்தும் வேளைகளில் இறங்கியபோது பேரினவாதத் தரப்பானது அவர்கள் திரும்பிச் செல்லவேண்டிய 'இந்தியர்கள்' என்றே அடையாளப்படுத்தியது. தலைமுறைகளாக இலங்கையில் வேரூன்றிவிட்டபோதும், இந்தியாவுடனான தொடர்பறுந்துவிட்டபோதும் கூட 'இந்தியர்' என்கிற அடையாளத்தையே இலங்கை அரசும், சிங்களத் தேசியவாதிகளும் தந்துகொண்டிருந்தார்கள். அந்த இந்தியர் என்கிற அடையாளம் அவர்களைச் சட்டபூர்வமாக நாட்டை விட்டுத் துரத்தும் வரை பெரிய சிக்கலாக உணரப்பட்டதில்லை. ஆனால் இந்தியர் என்கிற வரையறை இலங்கைப் பிரஜை என்கிற அடையாளத்தைப் பறிக்க முற்பட்டதிலிருந்து 'இந்திய அடையாளம்' தமது இருப்புக்கே அச்சுறுத்தலாகும் ஒரு காரணியாக மாறியது. தேடித் தேடி வேட்டையாடித் துரத்திப்பிடித்து நாடுகடத்தப்பட்ட காலத்தில் இந்தியர் என்கிற அடையாளத்தை மறைக்க படாதுபாடுபட்டனர். பலர் தமது 'சிகப்புப் பாஸ்போர்ட்' என்று அழைக்கப்பட்ட இந்தியக் கடவுச்சீட்டை மறைத்தனர், புதைத்தனர், அழித்தனர்.

இந்திய அடையாளத்தைப் பேணுவதில் இனி எந்த அர்த்தமும் கிடையாது. நடைமுறை யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு அதைக் கைவிடுவது என்கிற முடிவுக்கு வந்தவேளை, அவர்கள் அதற்கு மாற்றாக எந்த அடையாளத்தைத் தமக்குச் சூட்டிக்கொள்வது என்கிற சிக்கலை எதிர்கொண்டனர். இலங்கையில் தமிழர் என்கிற அடையாளத்துக்கு உரியவர்களாக ஏற்கெனவே வடக்கு, கிழக்கில் பெருவாரியாக வாழும் பூர்வீகத் தமிழர்கள் இருந்தார்கள். எனவே இந்தியத் தமிழர் என்கிற பதத்துக்கு மாற்றுப் பதமாக இலங்கைத் தமிழர் என்கிற பதத்தையே ஏற்றுக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

ஆனால் புள்ளிவிபரங்களின்படி மலையகப் பகுதிகளில் வாழ்ந்து வந்த தமிழர்களை இந்தியத் தமிழர் என்றே பதிவு செய்யப்பட்டு வந்தது.

1960-களில் மலையகத்தில் நிமிர்ந்த வெகுஜன எழுச்சிக்கு இலக்கியம் முக்கிய காரணியாக இருந்தது. அந்த இலக்கியச் செயற்பாட்டுத் தளம்தான் 'மலையகம்' என்கிற புதிய இன அடையாளத்தையும், அரசியல் களத்தையும் ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து இந்தியத் தமிழர், இலங்கைத் தமிழர் என்கிற பதத்துக்கு மாற்றாக இந்திய வம்சாவழியினர் தம்மை 'மலையகத் தமிழர்' என்கிற பெயரை இன அடையாளத்துக்கான பெயராக அழைக்கத் தொடங்கினார்கள். காலப்போக்கில் அதை ஏனைய அரசியல் சக்திகளும் உள்வாங்கிக்கொண்டனர்.

## அரச அங்கீகாரத்துக்காக:

இன்று இலங்கையில் சுமார் 17 இலட்சம் சனத்தொகையைக் கொண்டு, இந்திய வம்சாவழியினர் ஒரு தனியானதும், நான்காவதுமான தேசிய இனமாகவும் வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தனியான மொழி, கலை, கலாசாரத்தையும் கொண்டு, நாடளாவியரீதியில் பரந்து வாழ்ந்தாலும் மத்திய மலைநாட்டில் செறிவாக வாழ்ந்துவரும் ஒரு தனியான தேசிய இனம் என்ற உணர்வைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ஒரு தனியான தேசிய இனம் என்று கூறிக்கொள்ள எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன என்று நிச்சயமாகக் கூறமுடியும்.

2015-ம் ஆண்டளவில் புதிய 'நல்லாட்சி' அரசாங்கம் அரச அதிகாரப் பகிர்வு வாயிலாக இனங்களின் உரிமைகளுக்கு அங்கீகாரம் அளிப்பதாகவும், தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பதற்காகவும் அரசியல் அமைப்புக்கு ஊடாக சீர்திருத்தம் மேற்கொள்வதற்கெனப் புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு முனைந்தது. அதற்காக அரசாங்



கம் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரிடமிருந்தும் எழுத்துமூல ஆலோசனைகளைக் கோரியிருந்தது. பல்வேறு அமைப்புகளும் கட்சிகளும் தமது ஆலோசனைகளைச் சமர்ப்பித்தன. மலையகத் தரப்பிலும் அரசியல் நிர்வாக விடயங்கள், உரிமைப் பிரச்சினைகள், கல்வி மற்றும் சுகாதாரம், காணி, வீட்டுரிமை போன்றன தொடர்பாக ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. அப்போது மலையக சிரேஷ்ட சட்டத்தரணி இ. தம்பையா தலைமையிலான சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து ஒரு கோரிக்கையை முன்வைத்தனர்.

'மலையகம் உள்ளடங்களாக இலங்கையின் எப்பாகத்திலும் வசிக்கின்ற இந்திய வம்சாவழித் தமிழர்கள் அனைவரும் மலையகத் தமிழ் மக்கள் என்ற வரைவிலக்கணத்துக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்பதுடன், அவர்கள் ஒரு தனியான தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும். அவர்கள் சம்பந்தப்பட்ட எல்லா ஆவணங்களிலும் அவர்கள் இந்தத் தலைப்பின் கீழேயே (Upcountry Tamil People) சுட்டிக் காட்டப்பட வேண்டும்.' என்றனர்.

அது மட்டுமன்றி இதனை ஒரு பாராளுமன்றச் சட்டமாக வடிவமைத்துப் பாராளுமன்றில் சமர்ப்பித்துச் சட்ட அங்கீகாரத்தைத் தரவேண்டும் என்றும் கோரினர்.

'மலையகத் தமிழர்' என்கிற அடையாளம் இலங்கை வாழ் இந்திய வம்சாவழித் தமிழர்களை இணைப்பதைவிட 'இந்தியத் தமிழர்கள்' என்கிற பதம் நிச்சயம் இணைக்கிறது. இன்னொரு வகையில் சொல்லப்போனால் மலையகத்தவர் என்கிற பதம் உணர்வு பூர்வமாக இணைப்பதைவிட 'இந்திய வம்சாவழி' என்ற பதம் அடிப்படை விஞ்ஞானபூர்வமான யதார்த்த அடையாளத்தை உணர்வுபூர்வமாகக் கொடுக்கிறது. ஆனால் மலையகத்துக்கு வெளியில் வாழும் பலர் 'இந்திய வம்சாவழி' என்கிற பதத்தைக் கைவிட்டு பல காலமாகிறது. அதைத் தொடர்ந்தும் சுமக்கத் தயாருமில்லை. இதற்கு மாற்று என்ன என்பதே கேள்வி.

இலங்கை வாழ் இந்திய வம்சாவழியினர் அனைவருக்கும் 'மலையக' அடையாளத்தைக் கொடுக்க வேண்டும் என்பது மலையகத்தில் இருந்து வரும் குரல்களேயன்றி அதற்கு வெளியில் இருந்து வரும் முன்மொழிவுகள் அல்ல. மலையக அடையாளத்தை முன்மொழியும் பிரிவினர் கூட அதனைத் திணிப்பதாகக் கூறுகின்ற காரணங்கள் அபத்தமானவை.

எழுத்தாளர் சடகோபன் தனது கட்டுரையொன்றில் கூறும்போது,

*'மலையகத் தமிழர்கள் முதலில் வந்து கால்பதித்த இடம் 'கண்டிச் சீமை' என்ற மலையகம் தான். அங்குதான் அவர்கள் கடந்த 200 வருடங்களாகச் செறிந்து வாழ்கிறார்கள். மலையகம் என்பது இவர்களது தாயகம். அதன் பின்னரே தத்தமது வேலைகளின் நிமித்தம் அவர்கள் வேறு இடங்களுக்குச் சென்றார்கள். எனவே வேறு பிரதேசங்களில் வாழ்பவர்கள் கூட தம்மை மலையகத்துடன் இணைத்துக் கொள்ள முடியும்.'*

இதனை ஒரு தர்க்கத்துக்கு எடுத்துக்கொண்டால் கூட இந்திய வம்சாவழியினர் முதலில் வந்தது கண்டிக்கல்ல. அவர்கள் கொழும்புப் பாதை அமைப்பதற்காகக் கொண்டுவரப்பட்டது பெருந்தோட்டத்துறை தொடங்குவதற்கும் முன்னராகும். மேலும் மலையகத்துக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவழியினர் அனைவரும் வேலையின் நிமித்தம் வேறு இடங்களுக்குச் சென்றவர்கள் என்று கூறுவது அடுத்த அபத்தம். மலையகத்துக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவழியினரின் வருகை பூர்வீகம் வாழ்வியல் வழித்தடம் பற்றிய வெகுஜன அறியாமைக்கு அரசியல் தலைமைகள் மட்டுமல்ல இத்தகைய எழுத்தாளர்களும் இலக்கியவாதிகளும் கூட ஒரு வகையில் காரணம்.

மேலும் சடகோபன் கூறுவதாவது,

*'...இதில் முக்கியமானது என்னவென்றால் இது ஒரு புவியியல் ரீதியான கோட்பாடு அல்ல. இது ஓர் அரசியல் ரீதியான கோட்பாடு அல்லது எண்ணக் கருத்தாகக் கருதப்பட வேண்டும். மலையகத்தில் வாழாத வடக்குக் கிழக்கு, வவுனியா, மன்னார், முந்தல், குருணாகல், களுத்துறை, மாத்தறை போன்ற பிரதேசங்களில் வாழ்பவர்கள்கூட மலையகத்தைத் தமது வேர்ப் (Root) பிரதேசமாக அங்கீகரித்து இதில் இணைந்து கொள்ள முன்வர வேண்டும்...'* என்கிறார்.

சிலவேளை மலையகத்திலிருந்து வேலைநிமித்தம் இடம்பெயர்ந்தவர்களும், சிலவேளை கலவரங்களின் போது இடம்பெயர்ந்தவர்களும் கூட அவர் கூறுகின்ற எண்ணக்கருவுக்குப் பொருந்தலாம். ஆனால் நூற்றாண்டுக்கும் முன்னர் இலங்கைக்கு வேலையின் நிமித்தம் வரும்போதே இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் குடியமர்ந்துவிட்ட மலையகத்துடன் தொடர்பற்ற மக்களுக்கு எந்தளவு பொருந்தும் என்பதை சிந்திக்கத் தயாரற்றவர்களாக உள்ளார்கள்.

சடகோபன் வெறும் உதாரணம்தான். இலங்கை - இந்திய வம்சாவழியினரின் பன்முக வழித்தோன்றலையும், பன்முக வழித்தடத்தையும், பன்முக அடையாளச் சிக்கல்களையும், பன்முகத் தேவைகளையும், பன்முக அபிலாசைகளையும் கட்டுடைத்துப் பார்க்கத் தவறுவதன் விளைவுதான் இவை. இலங்கையில் பெரும்பான்மைவாதத்துக்கு அகப்பட்ட நசுங்கிப்போன மக்களில் நாமும் முக்கிய அங்கம் தான். அப்படி இருக்கையில் சிறுபான்மைக்குள்ளும் சிறுபான்மையாக ஆகியிருக்கும் இன்னொரு பிரிவினரிடம் பெரும்பான்மைவாதத்தைப் பிரயோகிப்பது என்ன தார்மீகம்? அவர்களின் அபிலாசைகளை அறிய இதுவரை இவர்கள் மேற்கொண்ட அக்கறை தான் என்ன? பிரக்ஞை தான் என்ன?.

உலகெங்கும் கொண்டு செல்லப்பட்ட இந்தியத் தொழிலா

ளர்கள் அந்தந்த நாடுகளில் அந்தந்த நாட்டுப் பெயர்களை அடைமொழியாகக் கொண்டு அழைக்கப்படுகின்றனர். மலேசியத் தமிழர், சிங்கப்பூர்த் தமிழர், மொரீசியஸ்த் தமிழர், அல்லது மலேசிய இந்தியர் என்றோ, சிங்கப்பூர் இந்தியர் என்றோ, தென்னாபிரிக்க இந்தியர் என்றோ இன்றும் அழைக்கப்படுகின்றனர் என்பதையும் கவனத்திற் கொள்க.

## பெருந்தோட்டங்களுக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவழியினர்:

இலங்கைக்கு இந்தியாவில் இருந்து கூலித்தொழிலாளர்கள் கொண்டுவரப்பட்டபோது பெருந்தோட்டத்துறை ஆரம்பிக்கப்படாத காலகட்டம். ஆரம்பத்தில் வந்த இந்திய வம்சாவழியினர் மத்திய மலைநாட்டுக்கு வெளியில் பல்வேறு தொழில்களுக்காக வந்தவர்கள் தான்.

ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்து பெருவாரியான தமிழர்கள் கட்டுமானப் பணிகளுக்காகக் கொண்டுவரப்பட்டார்கள். குறிப்பாக நாடளாவிய ரீதியில் கட்டுமானப் பணிகளுக்காக அவர்கள் கொண்டுவரப்பட்டார்கள். பாதைகளை அமைத்தல், பாதைகளை செப்பனிடுதல், மலைகளைக் குடைந்து பாதைகளையும், குகைகளையும் அமைத்தல் மட்டுமன்றி இலங்கையின் பல பிரதேசங்களில் உள்ள அரசர் காலத்தில் கட்டப்பட்ட பழமை வாய்ந்த குளங்களை மீள் கட்டுமானம் செய்வதற்கும் இவர்கள் கொண்டுவரப்பட்டார்கள். இலங்கைக்கு இந்திய வம்சாவழியினரின் முதல் வருகை பெருந்தோட்டத்துறைக்காக அல்ல. மத்திய மலைநாட்டுக்கும் அல்ல. 1823-லும் அல்ல. மாறாக முதல் வருகை பாதை செப்பனிடுவதற்காக 1817-ல் கொண்டுவரப்பட்டார்கள். அதன் பின் மேற்படிக் கட்டுமானத் தொழில்களுக்காகக் கொண்டுவரப்பட்டார்கள். அவ்வாறு கொண்டுவரப்பட்டவர்கள் மத்திய மலைநாட்டில் தங்க வைக்கப்படவும் இல்லை. மாறாக அவர்கள் பணிபுரிந்த பிரதேசங்களிலேயே குடியிருத்தப்பட்டார்கள்.

பிற்காலத்தில் இலங்கையில் உட்கட்டமைப்பு வசதிகள் விஸ்தரிக்கப்பட்ட போது, நகரசுத்தித் தொழிலுக்காகத் தமிழகத்திலிருந்து ஏராளமான அருந்ததியர்கள் கொண்டுவரப்பட்டு இலங்கையின் நாடளாவிய ரீதியில் சகல நகரங்களிலும் மோசமான சேரிக் குடியிருப்புகளில் குடியிருத்தப்பட்டு வேலைவாங்கப்பட்டார்கள். இன்றும் இலங்கையில் சகல நகரங்களிலும் இவர்கள் நூற்றாண்டாக நகரசுத்தித் தொழிலாளர் குடியிருப்புகளில் வாழ்ந்து வருகிறார்கள்.

அது மட்டுமன்றி கொழும்புத் துறைமுகத்தை ஆங்கிலேயர்கள் விரிவாக்கிய போது ஆயிரக்கணக்கான தமிழர்களும், மலையாளிகளும் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டார்கள். குறிப்பாகக் கொச்சிக்கடை, கொட்டாஞ்சேனை உள்ளிட்ட கொழும்பு வடக்குப் பகுதியில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழர்கள் இவர்கள்தான்.

தமிழ்க் கூலிகள் சியனே கோறளையைத் (Siyane Korale) தவிர (குறைந்தளவினரே இருந்த பிரதேசம்) நாட்டின் சகல பிரதேசங்களிலும் பெருகினார்கள்.

1911-ல் மேல் மாகாணம், தென் மாகாணம், வடமேல் மாகாணம் ஆகியவற்றில் மாத்திரம் மொத்தப் பெருந்தோட்ட மக்களில் சுமார் 10 வீதத்தினர் இருப்பதாக அந்த அறிக்கை புள்ளிவிபரம் வெளியிட்டிருக்கிறது. அதாவது பெருந்தோட்டத்துறையைச் சாராதவர்கள் நாடு முழுவதும் மலையகத்துக்கு வெளியில் இன்னொரு பெரும் எண்ணிக்கையைக் கொண்டிருப்பார்கள் என்பதையும் அறிதல் வேண்டும்.



ஒப்பாரிக் கோச்சிக்குப் பின்னால் அழுது புரண்டோடிய சொந்தங்கள் மலையகத்தில் இருந்து மாத்திரமல்ல கொழும்பிலிருந்தும், களுத்துறையிலிருந்தும், காலியிலிருந்தும், மட்டக்களப்பிலிருந்தும் தான்.

## இரண்டாவது பெரும்பான்மை இனமாகச் சீனர்கள் ஆகியிருப்பார்கள்:

சூரியன் மறையாத சாம்ராஜ்யமாக இருந்த பிரித்தானியக் காலனித்துவத்தின் கீழ் பல நாடுகள் இருந்தன. சில நாடுகளில் அவர்கள் வருமானத்துக்காக மேற்கொண்ட விவசாய மற்றும் கட்டுமானப் பணிகளுக்காகக் குறைந்த கூலிக்கு ஆள் பிடித்தனர். அவ்வாறு சில நாடுகளில் குறைந்த கூலிக்கு ஆள்பிடிக்க முடியாதபோது அவர்கள் தெரிவு செய்த முக்கிய இரு நாடுகள் சீனாவும், இந்தியாவும், இந்த இரு நாடுகளில் இருந்துதான் பெருமளவு கொத்தடிமைகளை ஆசை வார்த்தை காட்டி, ஏமாற்றிக் கூட்டிச் சென்றனர்.

கரீபியன் நாடுகளுக்கும், தென்னாப்பிரிக்கா, மொரீசியஸ், பீஜித் தீவுகளுக்கும் கரும்புத் தோட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் இந்தியர்கள் மாத்திரமல்லர், சீனர்களும் தான். அதுபோல இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் தேயிலைத் தோட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் தென்னிந்தியர்கள் மட்டுமல்ல, சீனர்களும் தான். மலேசியாவில் அங்கிருக்கும் சுதேசியச் சீனர்களுக்குப் பதிலாக இந்தியர்களைக் கொண்டு வந்தது போல, இலங்கையில் சுதேசியச் சிங்களவர்களுக்குப் பதிலாக தென்னிந்தியத் தமிழர்களைத் தெரிவு செய்தார்கள்.

அதுமட்டுமல்ல இவர்களைக் கொத்தடிமைகளாக நிர்வகிப்பதென்றால் தமது சொந்த மண்ணிலிருந்து தனித்துப் பிடுங்கபட்டிருக்க வேண்டும் என்பது பிரிட்டிஷாரின் அணுகுமுறையாக இருந்தது. மலேசியாவில் சீனர்களைத் தெரிவு செய்யாமல் இருந்ததற்கான காரணமே அவர்களின் பூர்வீகம் அருகாமையிலேயே இருந்தது தான்.

இலங்கைக்குத் தென்னிந்தியாவில் அல்லாமல் சீனாவிலிருந்துதான் பெருந்தோட்டங்களுக்குக் கூலிகளை அழைத்துவரும் திட்டத்தைக் கொண்டிருந்தார்கள் ஆங்கிலேயர்கள். 1850-களில் சீனாவிலிருந்து ஒரு கூலித் தொழிலாளரை வாங்க 25



பவுண்டுகள் செலவழிந்த அதேவேளை ஒரு இந்தியக் கூலியை வாங்க 15 பவுண்டுகள் போதுமானதாக இருந்திருக்கிறது.

இலங்கையின் சுதந்திரத்துக்கு ஈராண்டுக்கு முன்னர்தான் 1946-ல் குடிசன மதிப்பு வெளியானது. இரண்டாம் உலகயுத்த நெருக்கடி காரணமாக 1941-ம் ஆண்டு எடுக்கவேண்டிய குடிசன மதிப்புத் தான் இவ்வாறு ஐந்தாண்டுகள் கழிந்து வெளியானது. இந்த அறிக்கையில் இந்தியத் தமிழர்களின் சனத்தொகை 780,589 என்று குறிபிடப்படும் அதேவேளை சீனர்களின் சனத்தொகை 497 பேர் என்கிற குறிப்புகளும் உள்ளன. இவர்கள் நகரங்களில் சிறு கடைகளையும், சிற்றுண்டிச் சாலைகளையும் நடத்தி வந்தவர்களாகத்தான் இருந்தார்கள்.

கசந்த கோப்பி கொத்தடிமைகள் (Bitter berry Bondage) நூலை எழுதிய டொனோவன் மொல்ட்றிச் (Donovan Moldrich) அந்த நூலில் இலங்கையில் சீனத் தொழிலாளர்களைக் கொண்டு வருவதற்காக மேற்கொண்ட முயற்சிகள் குறித்துத் தனியான அத்தியாயத்தை எழுதியுள்ளார். டச்சுக் காலத்திலும் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட சீனர்களைப் பற்றியும் குறிப்புகளை எழுதியுள்ள அவர் ஆங்கிலேயர் காலத்தில் என்னென்ன பணிகளில் அவர்கள் அமர்த்தபட்டிருந்தார்கள் என்கிற விபரங்களையும் தருகிறார்.

19-ம் நூற்றாண்டின் மூர்ப் பகுதியில் காலிக்கோட்டைக்கு அருகே சீனர்கள் வாழ்ந்த ஒரு சிறிய கொலனி ஒன்று இருந்தது என்றும் பூந்தோட்டப் பராமரிப்பில் வல்லவர்களாக அவர்கள் இருந்ததால் அப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள் என்றும் அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கண்டியைக் கைப்பற்றிய களத்தில் கவர்னராக இருந்தவர் சேர். ரொபர்ட் பிரவுன்றிக். (Sir. Robert Brownrigg). முதலாவது இலங்கை ரெஜிமென்டின் கப்டனாக இருந்த எல். டி புஷ்சே (Capt. L. De Bussche) ‘கண்டி மாகாணம் இந்தச் சொர்க்கத்தின் ஆசனமாக (‘the scat of paradise’) ஆகப்போவதால் அதை மேற்கொள்வதற்குச் சிறந்த தொழிலாளர்கள் தேவை என்றும் அதற்குத் திறன்மிக்கவர்களாகவும், அமைதியானவர்களாகவும் இருக்கக்கூடியவர்கள் சீனர்களே என்கிற கருத்தை முன் வைத்தார். சீனர்கள் சிங்களவர்களை விட பொருத்தமானவர்கள் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். ஏற்கெனவே அக் கேப்டன் ஜாவாவில் பணிபுரிந்த போது சீனர்களின் வினைத்திறனைக் கண்டவர். ஆனால் ஆளுநர் பிரவுன்றிக் அதை மறுத்துவிட்டார். அவருக்குப் பின் வந்த ஆளுநர் எட்வர்ட் பார்ன்சும் அக் கேப்டனின் முன்மொழிவை ஏற்கவில்லை. சீனர்கள் சனத்தொகையை மட்டுமே அதிகரித்துக் கொண்டு இருக்கப் போகிறார்கள் என்பது அவர்களின் கருத்தாக இருந்தது.

பின்னர் சீனத் தேயிலை இலங்கையில் பயிரிடத் தொடங்கிய போது தேயிலை உற்பத்தியில் கைதேர்ந்த சீனர்களை அதில் ஈடுபடுத்துவதே சரியானது என்கிற கருத்து தொடர்ச்சியாக உரையாடப்பட்டது. ஆனால் இறாத்தல் தேயிலை உற்பத்தி செய்வதற்கு 5 பவுண்டுகள் வரை செலவாகலாம் என்று கணித்ததன் பின்னர் அந்த யோசனையை மொரிஸ் வோர்ம் (Maurice Worms) கைவிட்டார். இலாபத்தை ஈட்டக் கடினம் என்கிற முடிவுக்கு வந்தார்கள்.

டொரிங்டன் (Torrington) ஆளுநராக வந்தபோது சீனர்களைப் பெருந்தோட்டங்களுக்கு மட்டுமன்றி வடக்கு, வடமத்திய, வடமேற்கு மாகாணங்களில் நெற்பயிர்ச்செய்கையிலும் ஈடுபடுத்துவதற்கான சாத்தியங்களை ஆராயப் பணித்தார்.

ஹொங்காங்கில் வெளியுறவுத்துறைச் செயலாளராக இருந்த ஜோன்சன் டொரிங்டனுக்கு இது பற்றிய தனது அபிப்பிராயத்தை எழுதி அனுப்பியிருக்கிறார். சீனர்களைத் தொழிலுக்கு அமர்த்துவதில் உள்ள பிரதானமான நான்கு காரணங்களை அவர் அதில் முன்வைக்கிறார்.

- இரண்டு மூன்று தமிழர்கள் (மலபாரிகள்) உண்ணும் உணவை இரண்டே இரண்டு சீனர்கள் உண்டு விடுவார்கள்.
- தமிழர்களுக்கு அவசியப்படாத ஆடம்பரத் தேவைகள் சீனர்களுக்கு இருக்கிறது.
- சீனாவிலிருந்து சீனர்களை இலங்கைக்குக் கொண்டு போகும் செலவை அரசாங்கமோ, தோட்ட உரிமையாளர்களோ ஏற்க வேண்டிவரும். ஆனால் தென்னிந்தியத் தொழிலாளர்கள் அவர்களின் செலவிலேயே வந்துவிடக் கூடியவர்கள்.

இன்னொரு நான்காவது காரணத்தையும் அவர் குறிப்பிடுகிறார். அதாவது,

- தமது மனைவி குழந்தைகளை விட்டுத் தூரத்துக்குச் சென்று பணியாற்றுவது சாத்தியமில்லை.

சீனர்களைக் கொண்டு வரலாமா என்கிற வாதம் தொடர்ந்தும் இழுபறிபட்டது. அங்கிருந்து ஆண்களைக் கொண்டு வந்தால் அவர்கள் இலங்கைச் சிங்களப் பெண்களைத் திருமணம் முடித்துக் கொள்ளலாம். இவ்வாறு செய்வதன் மூலம் நிரந்தர வதிவிடமாக இலங்கையை ஆக்கிக் கொள்வார்கள். சீனர்கள் சிங்களவர்களை விடவும், இந்தியர்களை விடவும் உடல் உழைப்பில் திறமானவர்கள் என்றும் ஐரோப்பியர்களை விட வெப்பத்தைத் தாங்கக்கூடியவர்கள் என்றும் ரிக்ஸ் (C.R. Rigg) பரிந்துரைத்திருக்கிறார்.

கோப்பிப் பயிர்ச்செய்கை அமோகமாக வளரத் தொடங்கிய போது கண்டியில் பாதைகளை அமைப்பதற்காகத் மர வேலை செய்பவர்கள், கொத்தனார்கள், இரும்பு வேலை செய்பவர்கள் என்போரைச் சீனாவிலிருந்து வரவழைக்கலாம் என்று வீதி அமைப்பதற்கான கொமிட்டி (Provincial Road

Committee) அரசாங்கத்திடம் கோரியது.

1860-ல் சீனாவிலிருந்து கிழக்கிந்தியத் தீவுகளுக்குச் சீனர்களை ஏற்றிக்கொண்டு முதலாவது கப்பல் புறப்பட்டுவிட்டது என்றும் ஏனைய இடங்களுக்கும் இந்தியத் தொழிலாளர்களுக்குப் பதிலாகச் சீனர்கள் அவசியப்படுகிறார்களா என்றும் The Examiner பத்திரிகை கேள்வி எழுப்பியது. அப்பத்திரிகைக்கு எழுதிய ரோவ்டன் பவர் (Rowdon Power) 'ஒரு சீனர் திறமையாகவும் விவேகமாகவும் கண்காணிப்பாளராக இருக்கக்கூடியவர் என்பதால் இரண்டு அல்லது மூன்று தமிழ்த் தொழிலாளர்களின் வேலையை ஒருவரே செய்யக்கூடியவர்' என்றார். China Mail என்கிற பத்திரிகையை ஆதாரம் காட்டி அப்பத்திரிகை வெளியிட்ட ஓர் அட்டவணையும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதுவரை சீனாவிலிருந்து ஏனைய ஆங்கிலேயக் காலனித்துவ நாடுகளுக்குக் கூலித் தொழிலாளர்களாக அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை அது.

| சீனாவிலிருந்து அடிமைகள் | |
|---|---|
| போர்னியோ | 350,000 |
| ஜாவா | 125,000 |
| சிங்கப்பூர் | 50,000 |
| மலாக்கா | 30,000 |
| சியாம் | 50,000 |
| இந்தியா | 5,000 |
| ஆஸ்திரேலியா | 70,000 |
| கலிபோர்னியா | 50,000 |

## பெருந்தோட்டங்களுக்கு வெளியில்...

அன்றைய இலங்கையில், அரசாங்கத்துறைத் தொழிலாளர்களுக்குப் பொதுவாகத் தங்குமிடங்கள் வழங்கப்பட்டன. ஆனால் கொழும்பு மற்றும் ஒரு சில பெரிய நகரங்களைத் தவிர, தொழிலாளர்கள் தங்கள் சொந்தத் தங்குமிடங்களைத் தாமாகத் தேடிக்கொள்ள நேரிட்டது. இருப்பினும் பிற்காலத்தில் இந்த நகர்ப்புறப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டதை விட அதிகமாக இருந்தது. 1900-களின் ஆரம்பத்தில் தொழிலாளர்கள் தொடர்பாக நிலுவையில் இருந்த அனைத்து ஒப்பந்தங்களும் இரத்துச் செய்யப்பட்டன, மேலும் 1922-ம் ஆண்டின் இந்தியக் குடியகல்வுச் சட்டத்தின் (IEA) VII படி இலங்கைக்கான ஒப்பந்தக் குடியேற்றமுறை அங்கீகாரத்தை இழந்தது.

1795-இல் ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு முறையான அரசுக் கட்டடங்களோ, முறையான சாலைகளோ இருக்கவில்லை. கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இருந்த கட்டடங்கள் பெரும்பாலும் ஒல்லாந்தர்களால் கட்டப்பட்ட கோட்டைகளும் தேவாலயங்களும் தங்குமிடங்களும் தான். வீதிகள், முக்கிய நகரங்களுக்கு இடையில் மட்டுமே இருந்தன, அவை காடுகள் அகற்றப்பட்டு உருவாக்கப்பட்ட வழிகள். அவை வறண்ட காலங்களில் கரடுமுரடான போக்குவரத்திற்கு மட்டுமே ஏற்றவை. ஆனால் மழைக்காலங்களில் கடக்க முடியாதவை. இலங்கையின் முதலாவது ஆளுநரான பிரெடெரிக் நோர்த் 1800-ம் ஆண்டு முக்கிய பகுதிகளுக்குச் சுற்றுப்பயணம் செய்தபோது, அவருடன் 160 பல்லக்கு சுமப்பவர்களும், 400 தொழிலாளர்களும், இரண்டு யானைகளும், ஆறு குதிரைகளும், ஐம்பது காலாட்படை வீரர்களும் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இத்தனையும் இன்றி அப்படிப்பட்ட பயணம் அவரால் சாத்தியப்படவில்லை. அதற்கு முன்னிருந்த போர்த்துக்கேய, ஒல்லாந்து ஆளுநர்கள் கூடத் தமது கட்டுப்பாட்டுக்குள் இருந்த கரையோரத் தளங்கள் அனைத்துக்குமே சென்று வந்ததில்லை. அப்பயணங்கள் அவ்வளவு இலகுவானதாக இருந்ததில்லை என்கிற உண்மையை நம்மால் உணர முடியும்.

1820-ம் ஆண்டு லெப்டினன்ட் ஜெனரல் ஜோன் பிரேசர் (Lieut. General John Fraser) தான் இந்தப் பாதை அமைப்புப் பணிகளைத் தொடங்கியவர். 1841 - 1867-க்கும் இடைப்பட்ட காலத்தில் தான் இலங்கை முற்றிலும் இராணுவவாத நிர்வாகத்திலிருந்து வணிக முக்கியத்துவம் வாய்ந்த காலனியாக மாற்றப்பட்டது. அதன் பின்னர் 1820 முதல் 1867 வரையான காலத்தில் சுமார் 5000 கி.மீ வரையான சாலைகளை அமைத்ததில் மேஜர் ஸ்கின்னர் பெரும்பங்கு வகித்திருந்தார். பாதைகளை இணைக்கும் சில பாலங்களும் இவற்றில் அடங்கும்.

## முன்னோடிப்படை:

காடுகளையும் சதுப்பு நிலங்களையும் கடந்து, கடினமான மற்றும் வாழமுடியாத நிலப்பரப்புகளில் கட்டுமானத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு உள்ளூர்த் தொழிலாளர்கள் போதுமான அளவு கிடைக்கவில்லை. அது மட்டுமன்றி அவர்கள் வேலை செய்யவும் விரும்பவில்லை. இதன் விளைவாக, காலனித்துவ அரசாங்கம் 1821-ம் ஆண்டில் 'முன்னோடித் தொழிலாளர் படை' (Pioneer Labour Force (PLF)) என்று அழைக்கப்படும் அரை இராணுவமயமாக்கப்பட்ட ஒரு துணைப்படையை உருவாக்குவதன் மூலம் இந்தியாவில் இருந்து புலம்பெயர்வதை ஊக்குவிப்பதற்கான முன்முயற்சிகளை அறிமுகப்படுத்தியது.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக தென்னிந்தியத் தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதில் பி.எல்.எஃப் ஈடுபட்டது. கிழக்கிந்தியக் கம்பெனி (EIC) 'முன்னோடிகள்' (Pioneers) என்று அழைக்கப்படும் ஒப்பந்த இந்தியத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியது. அதுவரை இப்படியான துணைப்படையாக 'காஃபிர்'கள் (Kaffir) என்று அழைக்கப்பட்ட ஆப்பிரிக்க அடிமைகளையே கிழக்கிந்திய கம்பனி வைத்திருந்தது. 'காஃபிர்'கள் என்றால் இந்தியாவின் மேற்கு கடற்கரையில் இருந்த போர்த்துக்கேய குடியேற்றங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆப்பிரிக்க அடிமைகளையே குறிப்பர். அடிமை முறை ஒழிப்பின் பின்னர் 'காஃபிர்'களை அடிமைகளாகவே பேண முடியாத நிலையில் பெருமளவு இந்திய கூலித்தொழிலாளர்க அரை அடிமைகளாக பயன்படுத்த வாய்த்தார்கள். அடிமைகளின் இடத்தை இந்தியக் கொத்தடிமைகளைக் கொண்டு நிரப்பினார்கள் என்று நாம் கூற முடியும்.

ஆங்கிலேயர் ஆட்சியின் ஆரம்ப நாட்களில் திறமையான தொழிலாளர்களுக்குப் பெரும் பற்றாக்குறை இருந்தது. மேலும் கிடைக்கக்கூடிய தொழிலாளர்கள் பெரும்பாலும் கடி



னமான மாவட்டங்களில் இத்தகைய பணிகளின் கஷ்டங்களை அனுபவிக்கத் தயாராக இல்லை. இதனால்தான் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. 1867-ம் ஆண்டில் இந்த 'முன்னோடிப் படை' 4000 பேரைக் கொண்ட வலுவான தொழிலாளர் துணைப் படையாக இருந்தது. அதன் பின்னர் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்தது. 1942-ல் 30,000 கி.மீ பிரதான வீதிகளும், மாட்டு வண்டில்கள் செல்லக் கூடிய பாதைகளும், 13,000 கி.மீ நீளமுள்ள இரயில் தண்டவாளப் பாதைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

நவீன இலங்கையின் உருவாக்கத்தில் இந்தியத் தொழிலாளர்களின் பங்கானது நிரந்தர வருமானமீட்டும் பெருந்தோட்டத் துறையில் மாத்திரமல்ல, நாடளாவிய உட்கட்டமைப்பின் உருவாக்கத்திலும் பெரும்பங்கு வகித்திருப்பதை நாம் உறுதியாக உணர வேண்டியிருக்கிறது. ஆறேழு தலைமுறைகளாக மலையகத்துக்கு வெளியில் வாழ்ந்துவரும் இவர்கள் நமது ஆய்வுக் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும்.

ஆக இலங்கையில் இந்திய வம்சாவழியினர் ஆங்கிலேயர்களால் முதன் முதலில் கொண்டு வரப்பட்டது பெருந்தோட்டத் துறைக்கும் அல்ல. மத்திய மலைநாட்டுப் பகுதிக்கும் அல்ல. 1823-லும் அல்ல.

பிற்காலத்தில் கோப்பி, கொக்கோ, தேயிலை, இறப்பர் போன்ற பயிர்ச்செய்கைக்காகப் பெருவாரித் தொழிலாளர்கள் இறக்குமதி செய்யப்பட்டபோது பெரும்பாலும் மத்திய மலைநாட்டுப் பகுதியில் நிலைகொள்ளச் செய்யப்பட்டதாலும் அவ்விடங்களில் செறிவாக இருந்ததாலும் அங்குதான் அச்சமூகத்துக்கான ஒன்றுபட்ட பண்பாட்டையும் அபிலாசைகளையும் கொண்டு நடத்த முடிந்தது. தொழிற்சங்கங்களின் வளர்ச்சி அரசியல் இயக்கமாக வடிவெடுத்ததிலிருந்து சமயம், கலாசாரம், உணவு, பழக்கவழக்கம், மொழிப் பேணுகை, அதனூடாக இந்திய அடியொற்றிய பண்பாட்டைப் பேணவும் ஈற்றில் அரசியல் அபிலாசைகளையும் உரிமைகளையும் கோரவும் முடிந்தது. எனவே அங்கேதான் இந்திய வம்சாவழியினருக்கான தனித்துவமான இலக்கியம் பிறக்கவும், பேணப்படவும், கொண்டிழுக்கவும் சாதகமானது.

ஆனால் இந்த மத்திய மலைநாட்டுக்கு வெளியில் வாழ்ந்த இந்திய வம்சாவழியினருக்கு இந்த வாய்ப்பு எட்டவில்லை. அவர்கள் சிங்களவர்கள் செறிவாக வாழ்ந்த பகுதிகளெல்லாம் உதிரிகளாகப் பரந்துவாழ நேரிட்டது. தோட்டப்பகுதிகளில் தமது சமயப் பண்பாட்டு அம்சங்களைப் பேணக் கிடைத்த சூழலும் வாய்ப்பும் இவர்களுக்கு அதே அளவில் இருக்கவில்லை. தமது தொழில்சார் உரிமைகளை வென்றெடுப்பதற்கான பொதுவான தொழிற்சங்கம் இருக்கவில்லை. தமது பொது அரசியல் அபிலாசைகளைக் கோருவதற்கான குறைந்தபட்ச அரசியல் தலைமைகூட இருக்கவில்லை. பல இடங்களில் தமது கல்வியைத் தொடர்வதற்குத் தமிழ்ப் பாடசாலைகள்கூட இருக்கவில்லை. இலங்கையின் தென் மாவட்டங்களிலும் வடமேல் மாகாணத்திலும், மேல் மாகாணத்தில் களுத்துறை, கம்பஹா போன்ற மாவட்டங்களிலும், ஊவா, சப்பிரகமுவா மாகாணங்களின் தென் பகுதிகளிலும் சிங்களப் பாடசாலையில் சிங்கள மொழியில் கல்வி கற்கும் தெரிவுக்குத் தள்ளப்பட்டமையைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. அப்பிரதேசங்களில் இன்றைய தலைமுறையில் ஏராளமானோர் சிங்களவர்களை மணமுடித்து சிங்களவர்களாகவே ஆகிவிட்டமைக்கு யாரிடம் நோக முடியும். அது என்ன அவர்களின் விருப்பத் தெரிவா? அல்லது மாற்றுத் தெரிவற்று நிர்ப்பந்திக்கப்பட்ட தெரிவா?

அது மட்டுமன்றி பிரஜாவுரிமைச் சட்டங்களுக்குப் பலியானவர்கள் இவர்களும்தான். மலைநாட்டுக்கு வெளியில் வாழ்ந்த இவர்களில் ஏராளமானவர்கள் நேரு - கொத்தலாவல, சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தங்களின் போது நாடு கடத்தப்பட்டார்கள். அச்சட்டங்கள் நாடு கடத்துவதற்காகப் பெயர்ப் பட்டியலிட்டுத் தேடித்தேடித் திரிந்தபோது பல வருடங்களாக ஓடி ஓடி ஒளிந்து வாழ்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஈற்றில் முடியாத நிலையில் சரணடைந்து இந்தியா திரும்பியவர்கள் இருக்கிறார்கள். 1958, 1977, 1983 போன்ற கலவரங்களில் இவர்களும் தாக்கப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள், சொத்துக்களை இழந்தார்கள். தமிழ் நாட்டுக்கு அகதிகளாகத் திரும்பிச் சென்றார்கள்.

இந்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பெருந்தோட்டப் பகுதிகளின் இன்னல்களுக்குக் கிடைத்த கவனயீர்ப்புக்கூட இவர்களின் அவலங்களுக்குக் கிடைக்கவில்லை. அதுவே பிற்காலத்தில் இவர்கள் பற்றிய பரவலான அறிதலும் இலங்கைச் சமூகத்தில் இல்லாது போனது. எப்படி மலையகம் பற்றிய பிரச்சினைகள் ஏனைய இலங்கைச் சமூகத்தினருக்குப் போய்ச் சேரவில்லை என்று காலாகாலமாகப் புலம்பிவந்தோமோ, அதைவிட மோசமாக இந்திய வம்சாவழியினரின் இன்னொரு பெரும் பகுதியினர் குறித்து ஏனைய சமூகங்களுக்கு மாத்திரமல்ல மலைநாட்டுவாழ் சொந்தத் தொப்புள் கொடி உறவுகள் மத்தியில் கூடக் கவனயீர்ப்பைப் பெற்றதில்லை என்கிற கசப்பான உண்மையை ஏற்றுகொள்ள எத்தனை பேர் இன்று தயார்?

இவர்களில் ஒரு பகுதியினர் இலங்கையிலேயே மோசமான சாதிய அசமத்துவத்துக்காளாகிய அருந்ததியர் சமூகம். மலையகத் தோட்டங்களில் உள்ள லயன்களைவிட மிகமோசமான குடியிருப்புகளில் நெடுங்காலமாக வாழ்ந்து வந்தவர்கள். இன்றும்கூட அப்படிப் பல இடங்கள் நாட்டில் உள்ளன.

கல்வியறிவு, மாற்றுத் தொழில்கள், சமூக நீதி என்பவற்றை மிகச் சமீப தசாப்தங்களில் தான் அவர்களில் கணிசமானோர்

அனுபவிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். நெடுங்காலமாக அரசியல் தலைமையற்றவர்களாக வாழ்பவர்கள். இந்திய வம்சாவழியினருக்கான குறைந்தபட்ச எந்தச் சலுகைகளும் எட்டப்படாதவர்கள். இலங்கைக்கான இந்தியத் தூதரகம் உருவாகி இந்த நூற்றாண்டுக் காலப்பகுதிக்குள் இந்திய வம்சாவழியினருக்கு வழங்கப்பட்ட ஆயிரக்கணக்கான புல மைப் பரிசில்களில் ஒன்றைக்கூடக் காணாதவர்கள். இன்னும் சொல்லப்போனால், இந்தியத் தூதரகத்தின் கணக்கில்கூட அகப்படாத உதிரிகளாக வாழ்ந்து வந்தவர்கள். சகல இன் னல்களையும் தாமே போராடி எதிர்கொண்டு மீண்டுகொண்டி ருப்பவர்கள்.

இலக்கியங்களைப் படைக்குமளவுக்கு வசதிகளையோ, வாய்ப்புகளையோ அடையாததற்குக் காரணம் அவர்கள் சமூ கத் திரட்சியாக வாழ வழியற்றவர்களாக இருந்தமை. சிதறி வாழ்ந்து வந்ததால் அவர்கள் பேரம் பேசும் வலுவற்ற அரசி யல் அனாதைகளாக இருந்தார்கள். செறிவான வாக்கு வங்கி யாக இராததால் பல அரசியல் கட்சிகளும் அவர்களைப் பயன்படுத்திவிட்டு கடப்பவர்களாக இருந்தார்களேயொழிய, சமூகமாக அடையாளம் காணவில்லை. எனவே அரசியல் தலைமையைக் கட்டியெழுப்பும் திராணியில்லாதவர்களாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

80-களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கொழும்பில் தலைமையகம் அமைத்து இந்திய வம்சாவழியினரின் ஏக போக அமைப்பாக நிறுவ முயற்சித்தது. ஆனால் மீண்டும் மேல்மாகாணத் தமிழ் வாக்குகள் மலைநாட்டிலிருந்து வந்தி றக்கப்பட்ட இ.தொ.கா தலைவர்களுக்குப் பயன்பட்டதேயொ ழிய மேல்மாகாணத்தவர்களின் நேரடி பிரதிநிதிகளாக அவர் கள் இருக்கவில்லை. அதன் விளைவு இ.தொ.கா தொடர்ந் தும் பெருந்தோட்டத்துறை மக்களின் தலைமையாக நீடித் ததே தவிர மேல்மாகாண மக்களின் அரசியல் அபிலாஷை களை அடையாளம் கண்டு தீர்க்கும் அமைப்பாக ஆக்கிக் கொள்ளவில்லை. செல்லச்சாமி, பி.பி. தேவராஜ், யோகரா ஜன் ஆகியோர்கூட இம்மக்களின் நேரடிப் பிரதிநிதிகள் அல் லர். இன்னும் சொல்லப்போனால் கொழும்பு உள்ளிட்ட மேல் மாகாணத் தமிழ் மக்களின் நேரடி பிரதிநிதிகளாகப் பாரா ளுமன்றத்துக்கு இதுவரை வரலாற்றில் எவரும் தெரிவு செய் யப்பட்டது கிடையாது. மனோ கணேசனையும் சேர்த்துத்தான் இங்கே குறிப்பிடுகிறேன். ஆனால் அம்மக்கள் தமது பிரதிநி திகளாக அவர்களைத் தெரிவு செய்ததன் ஒரே நோக்கம் தங் களின் அரசியல் தலைமையாக இருப்பார்கள் என்கிற நம் பிக்கையில் தான்.

அவர்கள் நிச்சயம் இம்மக்களின் பிரதிநிதிகளாக இருந்தார் கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள் இம்மக்க ளின் அரசியல் தலைமையாகவோ, அரசியல் அபிலாஷை களை (சலுகைகள், நிவாரணங்கள், தொண்டு நடவடிக்கை கள் அல்ல) நிறைவேற்றுபவர்களாகவோ இருந்தார்களா? அம்மக்கள் உதிரிகளாகச் சிதறியிருக்கிற போதும் தனித்துவ மான அரசியல் சக்தியாகவும், தனித்துவமான அரசியல் அபி லாஷைகளைக் கொண்டவர்களாகவும் அடையாளம் கண்டு அதற்குரிய அரசியல் திட்டத்துடன் எவரும் இருந்திருக்கிறார் களா. இல்லை! மாறாக வெறும் வாக்கு வங்கியாக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறார்கள். மனோ கணேசன் இந்த வாக்கு வங்கியைக் கவனமாக அடையாளம் கண்டவர் களில் ஒருவர். ஆரம்பத்தில் அவரிடம் சில புரிதலும், குறைந்தபட்ச வேலைத்திட்டமும் இருந்ததை அறிவோம். ஆனால் அவரும் சற்று அகலக்கால் வைத்து அரசியல் செய்ய நேரிட்டதும் இந்தத் தனித்துவமான பிரச்சினையும் தூர எறியப்பட்டுவிட்டது என்றால் அது மிகையாகாது.

விரும்பியோ விரும்பாமலோ இலங்கைத் தீவு என்பது பல் வேறு அடையாளங்களைக் கொண்ட, குழுமங்களைக் கொண்ட தேசமாக இருக்கிறது. இனத்துவம், சாதித்துவம், மதத்துவம், பிரதேசத்துவம் என அடையாளங்களுக்குள் அடையாளங்களாகப் பெருகி, விரிந்துபோயிருக்கின்ற தேசம். சமூக அடையாளங்கள் எனும்போது ஒன்றில் ஆதிக்க சமூ



கம் அதிகாரத்துவத்துக்காகத் தன்னை ஒரு பேரடையாளமாக ஆக்கிக் கொள்கிறது. மறுபுறம் ஏனைய சமூகங்கள் குறிப் பிட்ட அடையாளத்தைக் கொண்டிருப்பதாலேயே ஆதிக்க அடையாளங்களால் அநாதரவாக ஆக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்த்தவும், ஈடு செய்யவும் தமது அடையா ளத்தை அறிவிக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இலங்கை யில் சிங்களவர், தமிழர், முஸ்லிம், மலையகம் என்கிற நான்கு தேசிய இனங்களுக்குள் உள்ளடங்காத / உள்ளடக் கப்படாத இன்னொரு பெருவாரி மக்கள் கூட்டமொன்று ஐந் தாவது தேசிய இனம் என்கிற அடையாளத்தை நிறுவ நிர்ப் பந்திக்கப்படுகிறதா என்று பகிரங்கமாக இன்று கேள்வி எழுப்பும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

இந்திய வம்சாவழி என்கிற பதத்துக்கு மாற்றுப் பதமாக 'மலையகம்' என்கிற பதம் மலைநாட்டுவாழ் இந்திய வம்சா வழியினரின் விருப்பாகவும், அலங்காரமான பதமாகவும் இருக்கக்கூடும். ஆனால் அது ஒட்டுமொத்த இந்திய வம்சா வழியினருக்கும் பொருந்துகிறதா என்பதே அடிப்படைக் கேள்வி. மலைநாட்டுக்கு 'மலை' என்று பொருந்துகிறது என்று வாதத்துக்கு கூறும் போது மலையகத்துக்கு வெளியில் உள்ளவர்களுக்கு எந்த வாதத்தால் பொருந்துகிறது?

இதனால் 'மலையகம்' என்கிற அடையாளத்தையோ, பதத் தையோ மறுப்பதாகவோ, நிராகரிப்பதாகவோ எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. 90-களில் மலையக மக்கள் முன் னணி மலையகத் தேசியம், மலையகத்துக்கான சுய நிர்ணய உரிமை, மலையக அதிகார அலகு என்றெல்லாம் முன்னெ டுத்த வேளை இந்த அடையாளம் பற்றிய பிரச்சினை எழுந் தது. இறுதியில் 'மலையகம்' என்கிற அடையாளத்துக்குள்



அனைத்து இந்திய வம்சாவழியினரையும் இணைப்போம் என்று அவர் தெரிவித்தார். அதனை நடைமுறைச் சாத்தியப் படுத்துவீர்களா? என்கிற கேள்விக்கு நிச்சயமாக மேற்கொள் வதாகக் கூறினார்.

அன்று தொடக்கம் இந்திய வம்சாவழி என்கிற பதத்தைக் கைவிட்டுக் கொழும்புவாழ் இந்திய வம்சாவழியான நானும் என்னை மலையகத்தவனாகவே அடையாளப்படுத்தி வந்தி ருக்கிறேன். ஆனால் அதில் ஆனதொன்றும் கிடையாது. என்னை மலையகத்தவனாக என்னைச் சார்ந்தவர்கள் ஏற்றுக் கொண்டார்களோ என்னவோ, ஆனால் குறைந்தபட்சம் மலை யகத்தைச் சேர்ந்தவர்கள்கூட என்னை மலையகத்தவனாக ஏற்றுக்கொள்ளவுமில்லை. சேர்த்துக்கொள்ளவுமில்லை. நான் தான் அதைச் சொல்லிக்கொண்டு திரிகிறேன் என்பதை உணர்ந்துகொண்டேன்.

அதுபோல எழுத்துக்களிலும்கூட மலையகம் என்றே பயன்ப டுத்தி வந்திருக்கிறேன். மலையகத்துக்கான முதலாவது இணையத்தளத்தை ‘நமது மலையகம்’ என்கிற பெயரில் தொடங்கினேன். அதன் உள்ளடக்கக் கனதி காரணமாகச் சிறந்த இணையத்தளத்துக்கான ஜனாதிபதி விருதை 2018-ல் பெற்றுக்கொடுத்தது இன்னொரு கதை.

மலையக மக்கள் முன்னணி மேற்படி அக்கருத்தாக்கத்தைப் பலப்படுத்தவும், பரப்பவும் தவறியது. ‘மலையகம்’ என்கிற அடையாளத்தை ஒட்டுமொத்த இந்திய வம்சாவழியினருக் கான பதமாக அவர்கள் முன்னெடுக்கத் தவறியதன் விளைவு ‘மலையகம்’ என்றும், ‘இந்திய வம்சாவழி’ என்றும் இருவிதப் போக்குகள் தொடர்ந்தும் நீடித்தன. மலையகத்துக்கு வெளி யில் வாழும் இந்திய வம்சாவழியினர் மலையகத்தினரை விட அதிகமாகத் தம்மை இலங்கைப் பிரஜைகள் என்று பதிவு செய்துகொண்டார்கள் என்று நிச்சயமாகக் கூறமுடியும். இப் போது அவர்களைத்தான் ‘மலையகத்தவர்’ என்று பதியுங்கள் என்று கூறப்போகிறோம்.

இப்போது என்ன! 5% வீதத்துக்கும் அதிகமாக எண்ணிக்கை யைக் காட்டுவதற்காக இவர்கள் தேவைப்படுகிறார்களா என் கிற கேள்வியை எழுப்பாமல் இருக்க முடியவில்லை. இதய சுத்தியுடன் சொல்லுங்கள். இதுவரை மலையக அரசியல் நிகழ்ச்சிநிரலில் சேர்த்துக்கொள்ளப்படாத இவர்களை இன்று பிரக்ஞையாகவே சேர்த்துக்கொள்வதற்காகத்தான் இந்த அடையாளப் பெயரிடலை முன்மொழிகிறீர்களா? இன்று எண் ணிக்கையை அதிகரித்துக் காட்டுவதற்காக அடையாளப் பெயர் கோரக் கிள்ளுக்கீரையாகப் பயன்படுத்திவிட்டு அதன் பின்னர் கைவிட எடுக்கப்படும் முஸ்தீபா?

‘இந்திய வம்சாவழி’ என்கிற பதம் ‘இந்திய அடையாளத் தை’ச் சுமக்க வைத்துக்கொண்டிருப்பதால் அதனை கைவிட லாம் என்கிற வாதத்தை ஏற்றுக்கொள்ள பலர் தயாராகவே இருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஏனென்றால் அவர் களை இந்தியர்களாகவும், இந்திய நிகழ்ச்சிநிரலின் ‘பிடி’ என் றும் சிங்களப் பெருந்தேசிய சக்திகள் தமது அரசியல் வச திக்காகப் பிரச்சாரம் செய்து வந்திருக்கிறார்கள் என்பது உண்மையே. அதற்காகவே அவர்கள் ‘மலையகம்’ என்கிற அடையாளத்தை விட ‘இலங்கையர்’ என்கிற அடையாளப் பதிவையே தொடரப் போகிறார்கள் என்பது எனது கணிப்பு. மலையகம் அல்லது இந்திய வம்சாவழி என்கிற பதங்களால் அவர்களுக்கு ஆகப்போவதென்ன என்கிற யதார்த்தக் கேள் விக்கு இதனை முன்னெடுப்பவர்கள் மேற்சொன்ன விபரங்க ளில் இருந்து அரசியல் புரிதலை எட்டவேண்டும்.

## கொழும்புவாழ் இந்திய மேட்டுக்குடிகளின் கோரிக்கை என்கிற திரிபு:

மலையகத்தில் பொதுவான ஒரு உளவியல் புரிதல் வெகுஜ னமட்டத்தில் கட்டமைக்கப்பட்டு பரப்பப்பட்டு வந்திருக்கிறது.

அதாவது ‘மலையக மக்கள்’ என்கிற அடையாளத்தை மறுத்து ‘இந்திய’ அடையாளத்தை வலியுறுத்துபவர்கள் யார் என்கிற ஒரு புனைவு கற்பிதமாகப் பரப்பப்பட்டு நம்பவைக் கப்பட்டு வந்திருக்கிறது. கொழும்பில் வாழும் இந்தியர்கள் என்போர்:

- உயர்வர்க்க வியாபார வர்த்தகர்களே.
- உயர் சாதி மேட்டுக்குடியினரே.
- இந்தியத் தூதரகத்துடனும், இந்தியாவுடனும் நெருக்கமான உறவைப் பேணி இந்திய நலன்களை அனுபவித்து வருப வர்களே.
- இலங்கையில் ஒரு காலும், இந்தியாவில் ஒருகாலும் வைத்துக்கொண்டு இரண்டையும் அனுபவித்துக் கொண்டி ருப்பவர்களே.

இவர்கள் தமது உயர்குடி நலன்களுக்காக ‘இந்தியர்’ என்கிற அடையாளத்தை விட்டுகொடுக்கத் தயாரில்லையாம்.

இந்த வாதம் ஒரு பத்தாம்பசலித்தனமானதும், மிகுந்த அறி வுப் பஞ்சம் உள்ள வாதமும் கூட. சிலர் அறியாமையால் இதை முன்வைக்கிறார்கள். புத்திஜீவிகள் என அடையாளப் படுத்திக்கொள்ளும் இன்னும் பலரோ அறிவதில் அக்க றையே இல்லாமல் இதனைப் பிரச்சாரப்படுத்திக் கொண்டு வருகின்றனர்.

1971 ஜே.வி.பி கிளர்ச்சிக் காலத்திலும் கூட தமது ஐந்து முக் கிய வகுப்புகளில் ஒன்றாக இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் தரகுக் கூட்டமாக இந்திய வம்சாவழியினரைக் கூறியது. அவர்கள் சுட்டிக்காட்டியதும் மேற்படிப் பட்டியலைத்தான். அந்தப் பட்டியல் ஒட்டுமொத்த இந்திய வம்சாவழியினருக் கும் எதிராகப் பயன்படுத்தப்பட்டது. ஆனால் ஜே.வி.பி-யினர் இந்திய வர்த்தக - வியாபாரச் சக்திகளைத்தான் குறிப்பிட்டி

ருந்தார்கள். ஆனால் கொழும்புவாழ் இந்திய வம்சாவழியினர் இவர்கள் மட்டும் தானா? ஒட்டுமொத்தக் கொழும்புவாழ் இந்திய வம்சாவழியினரில் இவர்களின் வீதம் என்ன?

இன்றும் கொழும்புவாழ் உழைக்கும் வர்க்க இந்திய வம்சாவழி மக்களை, இந்தியத்தரகு முதலாளித்துவ மேட்டுக்குடிகளாக நிறுவ முற்படுவதும் ஜே.வி.பி போன்ற சக்திகள் கொண்டிருந்த முட்டாள்தனமான அணுகுமுறையே.

மேற்படி 'இந்திய வம்சாவழி' அடையாளத்தைப் பேணமுனையும் சக்திகள் இல்லாமலில்லை. ஆனால் அவர்கள் எண்ணிக்கையில் மிகச் சிறுபான்மையினரே. ஆனால் மலையகத்துக்கு வெளியில் - குறிப்பாக கொழும்பைச் சூழ வாழ்ந்து வரும் பெருவாரி இந்திய வம்சாவழி மக்கள் என்ன பணக்காரர்களா? உயர் சாதியினரா? வியாபார / வர்த்தகர்களா? அல்லது இந்தியத் தொடர்பைத்தான் பேணுபவர்களா?

நிச்சயமாக இல்லை.

மலையகத்துக்கு வெளியில் வாழும் இலட்சோப இந்திய வம்சாவழி மக்கள் சாதாரண உழைக்கும் வர்க்கத்தினர், ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள். குறிப்பாகக் கொழும்புவாழ் மக்களைக் குறிப்பிடலாம். இந்தியத் தொடர்பற்றவர்கள். இவர்களில் நாடளாவிய ரீதியில் அனைத்து நகரங்களிலும் வாழ்ந்து வரும் அருந்தியர்களும் அடங்குவர். அதைவிட, கொழும்பு வாழ் பரதவர் சமூகமும், மலையாளச் சமூகமும் கூட உள்ளடங்குவர். இந்த உண்மையை வசதியாக மறைத்து மேற்கொள்ளும் தர்க்கங்களால் மலையகத்துக்கு எதைப் பெற்றுக் கொடுக்க முடியும்?

இந்திய வம்சாவழியினராக மலையகத்தில் இருந்த பல அரசியல் பிரச்சினைகளும் வாழ்வாதாரப் பிரச்சினைகளும் இவர்களுக்கும் இருந்தது. பிரஜாவுரிமைப் பறிப்பு, வாக்குரிமைப் பறிப்பு, நாடற்றவர்களாக ஆக்கப்பட்டமை, நாடுகடத்தும் ஒப்பந்தங்களின் மூலம் நாடு கடத்தப்பட்டமை, கலவரங்களில் பாதிக்கப்பட்டமை, அதன் காரணமாக அகதிகளானமை, இடம்பெயர்வு, அகதிகளாக இந்தியா திரும்பியமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை இவர்களும் அதேயளவில் எதிர்கொண்டவர்கள்.

மேலதிகமாக, பெருவாரிச் சிங்களவர்கள் வாழ்ந்த பகுதிகளில் அங்கே தமிழ்மொழிப் பாடசாலை அற்றநிலையும், தமது சமயப் பண்பாட்டை வளர்த்துக்கொள்ள வழியின்றியும் தமக்கான பண்பாட்டைப் பேண வழியின்றித் தமது அடையாளத்தை இழந்து சிங்களவர்களாகக் கரைந்துவிட்டவர்களும் கணிசமான எண்ணிக்கையைக் கொண்டிருக்கிறார்கள்.

பெருவாரி மக்கள் சேரிகளிலும் முடுக்குகளிலும் வாழ்பவர்கள். குறிப்பாக அரசியல் ரீதியில் அநாதரவாக நீண்டகாலம் தனித்து விடப்பட்டவர்கள். வேறு வழியின்றி சிங்களப் பெரும்பான்மை அரசியல் சக்திகளில் தங்கியிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள். மலையக அரசியல் நிகழ்ச்சிநிரலில் இருந்து நெடுங்காலமாக அக்கறை காட்டப்படாதவர்களும் கூட. அதனால் ஏனைய சமூகங்களுடன் கலந்துவிட்டவர்கள். கணிசமானவர்கள் சிங்களவர்களாகவே ஆகிவிட்டவர்கள். மேல்மாகாணத்தில் தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்ட வேளையிலும், அதன் வசதிகள் குறைக்கப்பட்ட வேளைகளிலும் எந்தத் தமிழ்த் தரப்பும் வந்து மீட்டதில்லை. மிக அரிதான சந்தர்ப்பங்களை வேண்டுமென்றால் கூறிக்கொள்ள முடியும். ஆனால் ஒரு கூட்டு அரசியல் பிரக்ஞையாக அது நிகழ்ந்ததில்லை. 80-களின் பின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கொழும்பில் தளமமைத்துப் பணியாற்றியதை எவராவது உதாரணத்துக்குக் காட்டக்கூடும், ஆனால் அது கூட ஒட்டுமொத்த இந்திய வம்சாவழியினரை அரசியல் ரீதியில் இணைக்கின்ற அரசியல் திட்டமாக நிகழவில்லை. ஏனோ தேர்தல் அரசியலுக்குத் தேவைப்படுகின்ற வாக்குவங்கிக்காகச் சில சேவைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

மலையகத்துக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவழியினர் தமக்கான பண்பாட்டையோ, மொழியையோ, மரபையோ, அபிலாசைகளையோ பேணுவதற்கான அரசியல் சக்தியா



கவோ, சமூகத் திரட்சியாகவோ இருக்கமுடியாமல் போனதற்குக் காரணங்கள் என்ன? கூட்டாகச் சமூக சக்தியாகத் தம்மைத் தக்கவைத்துக் கொள்வதற்கு அரசியல் தலைமையோ, வழிநடத்துவதற்கு ஒரு அரசியல் திட்டமோ, நிழ்ச்சிநிரலோ இருந்தது கிடையாது என்பதை 'மலையக அடையாளம்' கோரும் சக்திகள் சுயவிமர்சனமாக ஏற்றுக்கொண்டாக வேண்டும். மலையக அரசியலானது தொழிற்சங்க அரசியலில் இருந்து, தேசிய அரசியலுக்குப் பரிமாற்றம் அடைந்த காலத்தில் இதைச் சரிசெய்ய இ.தொ.கா தவறிவிட்டது என்று தப்பிவிடத்தான் முடியுமா?

## சிங்களத் தரப்பின் முதலாவது துரோகம் தொடங்கிய இடம்:

ஒன்றை இங்கு முக்கியமாக நினைவிற் கொள்ளவேண்டும். இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்றில் முதலாவது துரோகம் எனப் பார்க்கப்படுவது 1918-ம் ஆண்டு இலங்கை தேசிய சங்கம் ஆரம்பிக்கும் போது அருணாச்சலத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம். மேல்மாகாணத் தமிழர்களுக்கு ஒரு பிரதிநிதித்துவத்தைத் தருவதாக ஒப்புக்கொண்டுவிட்டு பின்னர் ஏமாற்றிய கதையையும், அதனால் இலங்கைத் தேசிய காங்கிரசின் முதற் தலைவரான சேர். பொன். அருணாச்சலம் அதில் இருந்து விலகிய கதையையும் நாம் அறிவோம். அந்த மேல்மாகாண மக்கள் யார்? இந்தப் பெரு



வாரி இந்திய வம்சாவழி மக்கள் அன்றி வேறு யார்?.

அந்தளவுக்கு நூற்றாண்டுக்கு முன்னரே இம்மக்களின் எதிர் காலம் பற்றிய சர்ச்சை அரசியல் களத்துக்கு வந்திருக்கிறது. தேசிய காங்கிரசின் துரோகத்தோடு அந்த விவகாரமும் நெடுங்காலமாக கைவிடப்பட்டிருக்கிறது. 2000-ம் ஆண்டுக ளில் இந்த அரசியல் இடைவெளியை நிரப்பவென வந்த மனோ கணேசனின் நிகழ்ச்சிநிரலும் காலத்துக்குக் காலம் வெவ்வேறு அரசியல் நிகழ்ச்சிநிரலால் மடைமாற்றப்பட்டதால் இம்மக்களின் அரசியல் அப்படியே நீர்த்துப் போனதுடன் கூடவே இலங்கைவாழ் சகல இந்திய வம்சாவழி மக்களை யும் இணைக்கக் கிடைத்த வாய்ப்பும் தவறவிடப்பட்டிருக்கி றது.

இன்றைய நிலையில் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான இந் திய வம்சாவழியினர் இலங்கையர்களாகப் பதிவுசெய்யப் பட்டு விட்டார்கள் என்கிற கருத்தை சமீபத்தில் பேராசிரியர் சந்திரபோஸும் குறிப்பிட்டிருந்தார். இதில் பெருவாரி மக்கள் நிச்சயம் மலையகத்துக்கு வெளியில் வாழ்பவர்களாக இருக்க நிறைய வாய்ப்புண்டு. உண்மைதான் 'இந்திய வம் சாவழியினர்' என்கிற அடையாளத்தைச் சுமக்க மலையகத் துக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவழியினர் விரும்ப வில்லை என்பதை எவரிடம் உரையாடினாலும் உணர்ந்து கொள்ள முடியும். அப்படி அவர்கள் தள்ளப்பட்டதற்கு கடந் தகால 'நாடுகடத்தல்' பற்றிய அச்சமும் ஒரு காரணம் என் பது முக்கிய காரணம்தான். ஆனால் அதேவேளை அவர்க ளுக்கு இருந்த மாற்றுத் தெரிவுதான் என்ன?

'மலையகத்தவர் என்று அவர்கள் ஏன் அடையாளப்படுத்திக் கொண்டிருக்கக்கூடாது' என்று கேட்கும் அந்த 'எல்லாம் அறிந்த அறிவாளிகள்' யார்?

பெருந்தோட்டத் தமிழர்களை மலையகத் தமிழர் என்றால், மற்றவர்களை நகரத் தமிழர்கள் என்றும், ஏனையோரையும் அந்தந்தப் பிரதேசத்துக்குரிய அடைமொழியுடன் அழைப் போமா என்று சமீபத்தில் ஒரு வலைத்தளத்தில் கேட்கப்பட்டி ருந்த கேள்வியில் உள்ள ஆழத்தையும் உணரவேண்டியிருக் கிறது.

'மலையக மக்கள்' என்கிற சொல்லாடலுக்கான அர்த்தத்தை மலையகத்துக்கு வெளியில் வாழும் மக்களிடம் விளக்கி ஒப் புதலைப் பெறட்டும். மலையகத்துக்கு வெளியில் ஓர் ஆயி ரம் பேரின் ஒப்புதலைக்கூடப் பெறுவது இலகுவல்ல. ஒரு இன அடையாளத்தைத் திணித்து வென்றதாக உலகில் எந்த வரலாறும் இல்லை. அப்படி ஒரு புதிய வரலாற்றை எவரா லும் படைத்துவிடவும் முடியாது. வெளியில் ஏற்கெனவே தீர் மானிக்கப்பட்ட ஒரு அடையாளத்தை அவர்களுக்கு சூட்டு வது அறிவுபூர்வமான காரியமா? நடைமுறைச் சாத்தியமான காரியமா? அப்படி செய்வதாக இருந்தால்கூட அதனை ஏற் கச் செய்வதற்கான படிநிலை முயற்சிகள் பலவற்றைத் தாண்ட வேண்டுமல்லவா? இது எதுவுமல்லாமல் இன்று கும் பல் பாணியில் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெகுஜன ஒப்புதலற்ற தன்முனைப்பிலான ஒரு ஆர்வக்கோ ளாறு முயற்சி நடக்கிறது.

தொகை மதிப்பிலிருந்து இன அடையாளம் நீக்கப்படக்கூ டிய வாய்ப்பு உள்ளது என்கிற பீதியைக் காட்டியே இந்த முயற்சி நடக்கிறது. அந்த அச்சம் நியாயமானதே. அதற்கு இந்த குறுக்குவழி தீர்வாகிவிடமுடியுமா?

'இந்திய வம்சாவழி' என்கிற அடையாளத்துக்கு ஒரு 'மாற்று' அவசியம் என்பது உண்மையே. அந்த 'மாற்று' அனைத்து மக்களும் எற்கக்கூடியதும், விஞ்ஞானபூர்வமானதுமாக இருத் தல் முன்நிபந்தனை அல்லவா?

இலங்கையில் 'தமிழர்' அடையாளம், இந்திய வம்சாவழித் தமிழரென்றால் அது மலையகத்தில் உள்ளவர்கள் தான் என் றும், பெருந்தோட்டத்துறைக்கு வந்தவர்கள் மட்டும் தானென் றும் ஒரு கருத்து மிக ஆழமாகப் பலர் மத்தியில் குறிப்பாக மலையகத் தமிழர் மத்தியில் பதிய வைக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமன்றி மலையகத்துக்கு வெளியில் வாழும் இந் திய வம்சாவழியினர் என்போர் வியாபார வர்த்தகத்தில் ஈடு பட்டுவரும் உயர் வர்க்கத்தினர் என்றும், உயர்சாதியைச் சேர்ந்தவர்கள் என்கிற கருத்தும் பிரச்சாரப்படுத்தப் பட்டுவந் திருக்கிறது. இவர்களின் சொத்துக்களைப் பேணிக்கொண்டு இந்தியாவுடன் வர்த்தக நலன்களை அனுபவித்துக்கொண்டு இந்தியாவினதும், இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் சலுகை-களை அனுபவிப்பதற்காக அவர்களுக்கு இந்திய அடையா ளம் தேவைப்படுகிறது என்கிற கதையையும் பரப்பி வருகி றார்கள்.

இந்தப் புனைவுகளைப் பரப்பிவருபவர்களின் பத்தாம்பசலித் தனமான கருத்துக்களுக்கு இப்போது 'மலையக அடையா ள'த் தேடல் பற்றிய உரையாடல் தளம் அமைத்துக் கொடுத் துள்ளது.

பிரித்தானியக் காலனித்துவ நாடுகளுக்கு தொழிலாளர்களாக அனுப்பப்பட்டவர்களில் அதிகமானோர் இலங்கைக்கே அனுப்பப்பட்டார்கள்.

## நான்கு வீதத்துக்கு குறைந்ததன் காரணிகள்:

1950-கள் வரை இரண்டாவது பெரும்பான்மை இனமாக இருந்தவர்கள் எப்படி நான்கு வீதமாகச் சுருங்கி நான்காவது இடத்துக்குத் தள்ளப்பட்டு, ஓர் இனம் என்கிற அடையாளத் துக்குள் அடங்க முடியாதவர்களாக ஆக்கப்பட்டதன் பின்ன ணியை நாம் அறிதல் வேண்டும். அது தற்செயல் நிகழ் வல்ல.

- பிரஜாவுரிமைப் பறிப்போடு வாக்குரிமையும் பறிபோய் நாடற்றவர்களாகி மீள நாடு திரும்பியவர்கள் கணிசமா னோர்.

- நேரு - கொத்தலாவல, சிறிமா - சாஸ்திரி, சிறிமா - இந்திரா ஆகிய ஒப்பந்தங்களின் பேரம்பேசல்களுக்கு ஊடாக நாடு கடத்தப்பட்டவர்களும், நாடு திரும்பியவர்களும்.
- இனக்கலவரங்களின் பாதிப்பால் உடமைகளை இழந்தும், சொந்தங்களின் உயிர்களை இழந்தும், நம்பிக்கை இழந்தும் தமிழ்நாடு திரும்பியவர்கள்.
- இந்த நிலைமைகளின் காரணமாக இந்திய வம்சாவழி என்று பதிவு செய்யாமல் இலங்கைத் தமிழர்களாகத் தம்மைப் பதிவு செய்து கொண்டமை.
- நாடளாவிய ரீதியில் ஏனைய சமூகங்களோடு கலந்து இந்திய வம்சாவழி என்கிற அடையாளத்தைச் செயற்கையாக இழந்தமை.
- ‘இந்திய வம்சாவழி’ அடையாளத்தை நீக்கிவிட்டு ‘இலங்கைப் பிரஜை‘ எனப் பதிவு செய்துகொண்டமை.
- தோட்டப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட கருத்தடைத் திட்டங்களால் உருவான செயற்கை இனப் பெருக்கக் குறைப்பு.
- குறைந்த வாழ்வாதார வசதிகளின் காரணமாகவும், வறுமை காரணமாகவும் தாமாகவே குடும்பக் கட்டுப்பாடுகளைச் செய்து கொண்டு பிறப்பு வீதத்தை மட்டுப்படுத்திக்கொண்டமை.

காலனித்துவக் காலப்பகுதியில் இலங்கையில் குடியேறிய மற்றும் குடியேற்றப்பட்ட இனங்களையும் சேர்த்து ஏறத்தாள முக்கியமாக இருபது இனங்கள் இலங்கையில் இன்று அடையாளம் காட்டப்படுகின்றன. ஆனால் குடித்தொகைக் கணக்கெடுப்பில் ஓர் இனமாக அடையாளம் காண்பதற்குரிய வரைவிலக்கணங்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இது தொடர்பாக அறியும் உரிமைச் சட்டத்துக்கூடாக (RTI) 27.10.2022 அன்று எஸ். விஜயகுமார் கோரியிருந்த கேள்விகளுக்கு இலங்கைப் புள்ளிவிபரத் திணைக்களத்திற்கூடாகத் திரட்டி அளிக்கப்பட்ட பதில்களிலிருந்து புரிதலுக்காக இங்கே விபரங்களைத் தரவேண்டியிருக்கிறது.

புதிய வரைவிலக்கணத்தின் பிரகாரம் இந்திய வம்சாவழி மக்கள் அந்தப் பிரதான பட்டியலில் இருந்து அகற்றப்படக்கூடிய ஆபத்து இருப்பதை இன்று உணர முடிகிறது.

1901-ம் ஆண்டு வரை தாம் எந்தத் தேசிய இனம் (Nationality) என்பதை அறிவித்துக்கொள்ளும் உரிமை இலங்கை மக்களுக்கு இருந்தது. 1901 முதல் 1953 வரையான காலப் பகுதியில் ‘இனம்’ (Race) எது என்பது பற்றிய விபரங்களைத் தனிநபர்கள் அறிவிக்க இயலுமானதாக இருந்தது. ஆனால் 1963-லிருந்து ‘இனக்குழு’ (Ethnic Group) என்று அடையாளப்படுத்தும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதேவேளை 1971-ஆம் ஆண்டு புள்ளிவிபரத் தயாரிப்பின் போதும் இனங்களை வகைப்படுத்தும் போதும் பதிவுசெய்யும் போதும் அவர்கள் கொண்டிருக்கின்ற சதவீதங்களைக் கருத்திற்கொண்டு பாகுபடுத்தப்பட்டனர். அதுமட்டுமன்றி அந்தத் தொகைமதிப்பின் போதுதான் முதற் தடவையாக வேடர்களும், ஐரோப்பியர்களும் இனக்குழுக்கள் என்கிற அடையாளத்தை இழந்தார்கள் என RTI தெரிவிக்கிறது.

அதுமட்டுமன்றி அதே 1971 தொகைமதிப்பின் பிரகாரம் புதிதாக இரு இனக்குழுக்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ‘பரத’ (பரதவர்), ‘இலங்கைச் செட்டிகள்’ ஆகிய இரு பிரிவினரும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

1971-ல் வேடர்களும், 1963-ல் ஐரோப்பியர்களும் நீக்கப்பட்டதற்கு அவர்கள் 5% வீத மக்கள் தொகையை எட்டாததுதான் காரணம் என்கின்றனர். ஆனால் இந்த வரையறைகளைச் சர்வதேசக் குடித்தொகைக் கணக்கெடுப்புப் பரிந்துரைகளின் படியும், நியமங்களின் படியும்தான் மேற்கொண்டதாக அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

5% வீதத்துக்குக் குறைகிற இனக்குழுக்கள் தேசிய இனம் என்கிற அடையாளத்தை இழந்து வேறு இனங்கள் (Others) என்கிற அடையாளத்துக்குள் தள்ளப்பட்டு விடுகின்றனர்.

இன்றைய இந்திய வம்சாவழித் தமிழர்கள் எதிர்கொள்ளும் உடனடி ஆபத்தான பிரச்சினை இதுதான். புதிய கணக்கெடுப்புகளின்போது 5% வீதத்துக்கும் குறைவாக அவர்கள் கணிக்கப்பட்டுவிட்டால் அது அவர்கள் தனியொரு இனமாக அடையாளப்படுத்தமுடியாத நிலை ஏற்பட்டுவிடும். அது அவர்களின் தேசிய அடையாளத்தையும் இல்லாது செய்வதுடன், அவர்களின் அரசியல் அபிலாசைகளையும், அரசியல் கோரிக்கைகளையும், ஈற்றில் அரசியல் இருப்பையும் எதிர்காலத்தையும் கடுமையாகப் பாதிக்க வாய்ப்புண்டு.

அரசியல் ரீதியான காப்புறுதியை இழக்க நேரிடும் ஆபத்தின் விளிம்பில் மலையக மக்கள் இருப்பதால்தான் ஒட்டுமொத்த இந்திய வம்சாவழியினரையும் ஒரே இன அடையாளத்தின் கீழ் கொண்டுவருவதற்கான கோரிக்கைகள் எழுந்துள்ளன.

ஆனால் அப்படியான ஒரு முயற்சி நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலோ, உரிய மக்களுக்குத் தெரியாமலோ, அவர்களின் கண்களைக் கட்டிவிட்டோ மேற்கொள்ளப்படுவதில் உள்ள ஆபத்தை பலரும் உணருவார் இல்லை.

இந்திய வம்சாவழி மக்களின் அடையாளப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான உரையாடல்கள் அவ்வப்போது மேலெழுவதும் அப்படியே அமுங்கி விடுவதுமான போக்கே சில தசாப்தங்களாகத் தொடர்ந்து வந்திருக்கிறது. அந்த உரையாடல் பக்கச்சார்பான விவாதங்களுக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்தது. உறுதியான முடிவுக்கு வருவதாயின் அந்த உரையாடல், ஜனநாயக பூர்வமானதும், ஒரு பன்முகப்பட்டதுமான உரையாடலாக வளர்த்தெடுக்கப்பட்டு முடிவுக்கு வராவிட்டால் அது நிச்சயம் வெற்றி பெறப்போவதில்லை என்பதை உறுதியாகக் கூறி வைக்கலாம். இது அவரவர் சுய இன்பத்தைத் தீர்த்துக் கொள்வதற்கான உரையாடல் அல்ல. மாறாக சம்பந்தப்பட்ட மக்கள் உரிய முறையில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டிய உரையாடல். விஞ்ஞானபூர்வமாகத் தீர்க்கவேண்டிய பிரச்சினை.



sarawanan.n@thaiveedu.com

ஏட்டில் எழுதிவைத்தார்

# அங்காதிபாதம் 400

திருக்கோணமலை ஈசனை முதலில் போற்றித் தொடங்கும் ஈழத்துத் தமிழ் மருத்துவ நூலான அங்காதிபாதம் 400 என்னும் நூலுக்குரிய பாடல்கள் 124 மட்டுமே எமக்குக் கிடைத்த ஏட்டுச்சுவடிகளில் உள்ளன. எனினும், நூலினை முழுமைப்படுத்த எண்ணி இந்நூலினைப் பெரிதும் ஒத்திருப்பதும், பரராசசேகரத்தைச் சார்ந்ததாக அறியப்படுவதும், 1936-ஆம் ஆண்டு ஐ. பொன்னையா என்பவரால் அச்சிட்டு வெளியிடப்பெற்றதும், இன்றுவரை உரை எழுதப்படாமலும் இருக்கும் அங்காதிபாதம் என்னும் பிறிதொரு நூலில் இருந்து மீதிப் பாடல்கள் பெறப்பட்டு உரையுடன் இங்கு தரப்படுகின்றன.

– பால. சிவகடாட்சம்

*பாடியதா யுள்ளவிந்த வட்ட தானப்*
*பரீட்சைதனைத் தெளிவாகப் பார்த்துத் தேர்ந்து*
*கூடியதோர் நாடிகளின் வகைய தான*
*குறிகுணங்க ளனைத்தினையுங் குறித்துப் பாரு*
*நாடியது சன்னிக்கு மந்த மாகி*
*நடுங்கியே பெண்போல நடந்து மெல்ல*
*ஆடியப்பம் பரம்போலச் சுழன்று பின்னி*
*அரணைவான் முறிபோலக் குறைந்து போமே* 171

பாடிவைத்துள்ள இந்த எட்டுவிதமான பரிசோதனைகளைத் தெளிவாகப்பார்த்து அறிந்துகொண்டபின் நாடித்துடிப்பின் குறிகுணங்கள் எல்லாவற்றையும் குறிப்பாகப் பார்த்துத் தெளிவாயாக. நாடியானது சன்னிக்கு மெதுவாக நடுங்கி பெண்போல மெல்ல நடந்து பின்னர் பம்பரம்போல் ஆடிச்சு ழன்று அரணையின் வால் முறிந்ததுபோல் குறைந்துபோகும்.

*குறைந்து போம் வாதத்தின் மந்த நாடி*
*கொடுமத யானையி னடையும் போலாம்*
*நிறைந்தபித்த மந்தத்தி னாடி தானே*
*நீண்டவிலைப் புழுவேங்கை போலே பாயும்*
*உறைந்தவைய மந்தமா நாடி தீபத்*
*துற்றசுடர்க் கொழுந்தசைவி னோடி நிற்கும்*
*அறைந்திடுபோ சனத்தாலே மந்தம் பற்றி*
*யாகிய நோ யெல்லாவந் தடுப்ப தாமே* 172

வாதத்தின் மந்தநாடி மதம் பிடித்த யானையின் நடையை ஒத்திருக்கும். பித்தத்தின் மந்தநாடி நீண்ட இலைப்புழு போலவும் புலி போலவும் பாயும். சிலேத்துமத்தின் மந்தநாடி விளக்கில் ஏற்றப்பட்ட தீச்சுடர்போல் அசைந்து ஆடி நிற்கும். சொல்லப்பட்ட உணவின் காரணமாக மந்தம் ஏற்படுவதால் நோய்களெல்லாம் வந்து சேருகின்றன.

## விகாரநாடி கருப்பநாடி:

*அடுத்தவரால் வாளைமச்ச மெனப்பாய்ந் தேறி*
*யானையின் மும்மகம் போலவார்ப் பரித்துக்*
*கடுத்துநிமி டத்தில்விட்டு நிற்கு மாகிற்*
*காமவிகா ரங்கொண்டோர் நாடி யாகும்*
*எடுத்திடுபோ சனஞ்செய்தோர் நாடி யாமை*
*இயக்கம் போன் மெத்தனவா யிருக்கு மென்ப*
*விடுத்தபுழு வெறும்பது போன் மெல்ல வூர்ந்தான்*
*மெல்லியர்க்குக் கருப்பமென விளம்ப லாமே* 173

வரால், வாளை என்னும் மீன்வகைகள் போலப் பாய்ந்து எழும்பி மதம் பிடித்த யானை போல் ஆர்ப்பரித்து அடுத்த நிமிடத்தில் விட்டு நிற்குமாகில் அது காமவிகாரங் கொண்ட வர் நாடியாகும். உணவு உண்டு முடித்தவர்களின் நாடி ஆமையின் அசைவுபோன்று மெத்தனமாக இருக்கும். ஒரு பெண்ணின் நாடி, புழு, எறும்பு போன்று மெல்ல ஊர்ந்தால் அவள் கர்ப்பம் அடைந்திருக்கின்றாள் என்று கூறலாம்.

## பூப்பு நாடி:

*விளம்புகின்ற கின்னரத்தின் மெலிவ தாகி*
*மெள்ளவே நீரோட்ட மாயி ருக்கில்*
*இளம்பருவத் தன்ன நடை மயிலஞ் சாய*
*லேந்திழையார் பூப்பான நாடி யாகும்*
*உளம்பரிவாம் நீர்படிந்தோர் நாடி மெத்த*
*வுள்ளடங்கிப் புழுத்தெறித்தா லென்ன வோடும்*
*தளம்பிவழி நடந்தோர்க்குங் களைத்தோ ருக்குந்*
*தருச்சுற்றுங் கொடியெனவே சாற்ற லாமே* 174

பேசும்கிளி போன்று மெல்லியதாய் மெதுவான நீரோட்டம் போல் உணரப்படுமாயின் அது அன்னத்தின் நடையும் அழ

கிய மயிலின் சாயலும் உடைய இளம்பருவத்துப் பெண் பூப் படைந்திருப்பதை உணர்த்தும் நாடியாகும். தள்ளாடி நெடுந் தூரம் நடந்தவர்க்கும் களைத்தவர்க்கும் நாடியானது மரத் தைச் சுற்றும் கொடிபோல் அசையும் என்று கூறலாம்.

## பூத நாடி:

*சாற்று கல்லுத் தனையோங்கி யெறிதல் போலுஞ்*
*சக்கரஞ்செக் குச்சுற்றுந் தன்மை போலும்*
*ஊற்றமுறுங் குதிரை கடாப் பாய்தல் போலு*
*மோங்கியடித் திடவெழும்பும் பந்தைப் போலும்*
*ஆற்றலுட னுயர்ந்தேறிக் குதித்தல் போலு*
*மடங்காமற் படபடெனப் பித்த மோடின்*
*மாற்றவரி தாம்பூத நாடி யென்றே*
*வாகட ரெல்லா முரைத்தார் வையமீதே* 175

கல்லொன்றை ஓங்கி எறிவதைப்போலவும் வண்டிச்சில்லு, செக்கு என்பன சுற்றுவதைப் போலவும் வலிமையுடைய குதிரை, ஆட்டுக்கடா என்பன பாய்வதைப் போலவும், ஓங்கி அடிக்கும்போது எழும்பும் பந்துபோலவும் பலத்துடன் உயர்ந்து ஏறிக் குதிப்பதுபோன்று அடங்காமல் பித்தநாடி ஓடினால் அது மாற்றுவதற்குக் கடினமான மரணநாடியாகும் என்று ஆயுள்வேத நூலோர் அனைவரும் இவ்வுலகில் கூறி வைத்துள்ளார்கள்.

## மரண நாடி:

*வையமிகு வாதமெனு நாடி தானே*
*வளைந்து மடங் கிப்பருத்தால் வாதை யுண்டாம்*
*செய்யபித்த நாடியது புரண்டு விம்மிச்*
*சிலும்பியே திரண்டிடுகிற் சேரு நோய்கள்*
*ஐயமா கிய நாடி தனித்தே யோங்கி*
*யசைந்திடுகிற் பலநோய்வந் தடுப்ப தாகும்*
*பையவே தொந்தமா நாடி பின்னிப்*
*பதறிடுகின் மரணமெனப் பறைய லாமே* 176

வாதம் என்று சொல்லப்படுகின்ற நாடியானது வளைந்து முடங்கிப் பெருத்தால் வியாதி உண்டாகும். பித்தநாடியானது புரண்டு விம்மிச் சிலும்பித் திரண்டிடுமாகில் வியாதிகள் சேரும். சிலேத்துமநாடி தனித்து எழும்பி அசைந்திடுமாகில் பலநோய்கள் வந்துசேரும். இந்த நாடிகள் இரட்டித்துப் பின் னிப் பதறுமாகில் மரணம் சம்பவிக்கலாம் என்று கூறலாம்.

*பறையக்கேள் வாதமது முன்னும் பின்னும்*
*பாய்ந்துவளைந் தோடிலெட்டு நாளிற் சாவாம்*
*நிறைபெற்ற கயிற்றூசல் வீச்சுப் போல*
*நின்றோடிற் பக்கமொன்றில் விறைத்தே யோடில்*
*குறைவுற்ற நாண்மூன்றின் மரண மாகுங்*
*குதிரைப்பாய்ச் சலைப்போலக் குமிறி யோடில்*
*மறைவுற்றே நாளிரண்டின் மரண மாகு*
*மயிர்ப்பேன்போ லோடிலுடன் மரிப்ப தாமே* 177

வாத நாடியானது முன்னும் பின்னுமாகப் பாய்ந்து வளைந்து ஓடினால் எட்டுநாளில் மரணம் நிகழும். பாரம் தாங்கிய ஊஞ் சல் ஆடுவதுபோல் நின்று ஓடினாலும் ஒரு பக்கத்தில் விறைத்து ஓடினாலும் மூன்று நாட்களுக்குள் மரணம் என்று கூறலாம். குதிரையின் பாய்ச்சலைப் போன்று குமுறி ஓடி னால் இரண்டே நாளில் மரணம் என்பர். கூந்தலில் உள்ள பேன் போல் ஓடினால் உடனே மரணம் நிகழும்.

*மரித் திடவே வரும்பித்த நாடி பாம்பு*
*வளைந்தோடல் போனிற்கிற் பக்க மொன்றாம்*
*தெரித்திடுதேள் கொடுக்கானேற் றிங்க ளொன்றில்*
*தீண்டுசுடர்க் கொழுந்தென்னி னாண்மூன் றாகும்*
*பெருத்து மிகப் படபடத்தா லெட்டு நாளில்*
*பிசகில்லை யரணைவாற் றுடிப்போர் நாளாம்*
*அரித்திடுநீர் தவளையெனக் குதிக்கு மாகில்*
*ஆறு நாட் செல்லமுன்னே மரணந் தானே* 178

மரணகாலம் நெருங்கும்போது வருகின்ற பித்த நாடியானது பாம்புபோல் வளைந்து ஓடில் பதினைந்து நாட்களிலும் தேள் கொடுக்குப்போல் எழும்பிநிற்கில் ஒருமாதத்திலும் தூண்டப் பெற்ற சுடரின் கொழுந்துபோல் அசைந்தால் மூன்றுநாளிலும் பெருத்து படபடத்தால் எட்டுநாளிலும் அரணையின் வால் போல் துடித்தால் ஒரு நாளிலும் நீர்த்தவளைபோல் குதிக்கு மாகில் ஆறுநாட்களுக்குள்ளும் மரணம் நிச்சயமாம்.

*மரணந்தா னாகுமைய நாடி தானே*
*வயங்குதுடி யடிபோல நிற்கு மாகில்*
*விரணமதாய் நாளெட்டின் மரண மாகு*
*மிகவுமுயல் போனிற்கி லொருநாளாகும்*
*தரணமதாய்ப் பேன் போல வோடி நிற்கிற்*
*சருப்பத்தின் பிணைச்சலெனிற் சாவோர் நாளாம்*
*அரணைவாற் றுடிப்பாக வோடு மாகில்*
*அஞ்சுநாழிகைதனிலே சாவுண் டாமே* 179

சிலேத்தும நாடியானது துடி அடிப்பதுபோல் இயங்குமாகில் புண்ணாகி எட்டுநாளில் இறப்பு நிகழும். இந்த நாடி முயல் போல் வேகமாக நிற்கில் ஒருநாளில் மரணம் என்பர். சிலேத் துமநாடி பேன் போல ஓடிநிற்பினும் பாம்புகளின் பிணைச்சல் போல இயங்கிடினும் ஒரு நாளில் சாவு நேரும். இதே நாடி அரணைவால் துடிப்பது போல் ஓடுமாகில் ஐந்து நாழிகை யில் மரணம் சம்பவிக்கும்.

*சாவுண்டாம் வாதந்தா னாளொன் றோடில்*
*தப்பாமன் மூவாண்டின் மரண மாகும்*
*ஆவதிரு நாளோடி லாண்டி ரண்டா*
*மடுத்து நாண் மூன்றோடி லாண்டொன் றாகும்*
*போவதிது வென வாறன் மறைநூல் வல்ல*
*புண்ணியர்க ளுரைத்தபடி புகன்றேன் யானும்*
*வாவுபிடி யன நடையு மிடையா மின்னும்*
*வயங்குபெண்ணே மரணத்தின் வகையி தாமே* 180

வாதநாடி ஒரு நாள் முழுவதும் ஓடினால் தவறாமல் மூன்றா வது ஆண்டில் மரணம் சம்பவிக்கும். இரண்டு நாட்கள்

வாதம் ஓடினால் ஆண்டு இரண்டில் மரணமாம். மூன்று நாட்கள் ஓடினால் ஓராண்டில் மரணம் நிகழும். இவ்வாறு ஆயுள் வேதநூலோர் கூறியபடியே நானும் உரைத்திட்டேன். பெண் யானையின் நடையும் மின்னலெனும் இடையும் உடைய பெண்ணே மரணத்தின் வகை இதுவென அறிவாயாக.

*வகையாகும் பித்தமது நாளொன் றோடின்*
*மறலிநகர் தனிலாறு மதியிற் செல்லும்*
*பகையாக நாளிரண்டு தானே யோடிற்*
*பதிவிட்டு மும்மதியிற் சாவுண் டாகும்*
*தொகையாக மூன்று நாட் படபடத்துத்*
*தொடர்ந்தோடி னாணாற்பத் தைந்திற் சோரும்*
*மிகையாகப் பித்தமிந்தப் படியே நின்றால்*
*விரைவாக நமனுலகின் மேவு வாரே* 181

பித்தநாடியானது ஒருநாள் முழுவதும் சமநிலையற்று ஓடினால் ஆறுமாதத்தில் உயிர் யமனுலகம் சென்றுவிடும். பித்தநாடி இரண்டு நாட்கள் பகையாக ஓடினால் மூன்று மாதத்தில் இறப்பு நிகழும். பித்தநாடி மூன்று நாட்கள் படபடத்துத் தொடர்ந்து ஓடினால் நாற்பத்தைந்து நாளில் மரணம் நிகழும். பித்தம் இவ்வாறே தொடர்ந்து நின்றால் விரைவில் நமன் உலகம் போக நேரிடும்.

*மேவுசிலேற் பன நாடி நாண்மூன் றுக்கு*
*மீளாம லோடிலைந்து நாளிற் சாவாம்*
*வாவியே நாளிரண்டுக் கோடு மாகின்*
*மரணமது வந்தெய்தும் பத்து நாளில்*
*பாவியொரு நாண்முழுது மோடு கிற்றான்*
*பதினைந்தா நாண்மரணம் வந்து சேரும்*
*கூவிய நாழிகைமுப்ப தோடு மாகிற்*
*கூற்றுவனூர் நாளெட்டிற் கிட்டு வாரே* 182

சிலேத்துமநாடி மூன்று நாட்களாகச் சமநிலைக்குத் திரும்பாமல் ஓடினால் ஐந்து நாளில் இறப்பு நேரிடும். இரண்டு நாள் இப்படி ஓடுமாகில் பத்து நாளில் மரணம் வந்துவிடும். ஒரு நாள் மட்டுமே இவ்வாறு ஓடினால் பதினைந்தாம் நாள் மரணம் வந்து சேரும். முப்பது நாழிகைகள் இவ்வாறு ஓடினால் எட்டு நாட்களில் எமனுலகம் செல்லுவார்கள்.

*கிட்டியே கைபிடித்துப் பார்க்கும் போது*
*கிளர்ந்தெழுந்த நாடிகடாந் தொங்கித் தொங்கி*
*அட்டமதாய்ப் பதறியெழுந் தோடு மாகில்*
*ஐயமில்லைக் காலனூர் நணுகிச் செல்லும்*
*தொட்டது தான் மேலெழுந்து விரைந்து கீழாய்த்*
*துரிதமிட்டுச் சுழன்று தா னிற்கு மாகில்*
*எட்டுநாட் செல்லுமுன்னே யுயிர்விட் டேகும்*
*ஏந்திழையே நாடிகளி னியக்க மீதே* 183

கைபிடித்து நாடி பார்க்கும்போது நாடிகள் தொங்கித் தொங்கி அருகருகே விரைவாக எழுந்தோடுமாகில் மரணம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்பதில் சந்தேகம் இல்லை. இந்த நாடிகள் மேலே எழுந்து வேகமாகச் சுழன்று நிற்குமாகில் எட்டுநாட்களுக்குள் உயிர் பிரிந்துபோகும். இவையே நாடிகளின் இயக்கம் என்பதைப் பெண்ணே அறிந்துகொள்வாயாக.



Sivakadadcham@thaiveedu.com



# மகரக்கட்டு மருத்துவத்தின் புதிய மைல்கல்

## - பொன்னையா விவேகானந்தன்

**செ**ன்னை இராயப்பேட்டை பகுதியில் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகச் செவி, மூக்கு, தொண்டை மருத்துவராகப் பணியாற்றி வருபவர் மருத்துவர் திரு. மு. குமரேசன். இந்தியா அளவில் மருத்துவ உலகத்தால் நன்கு அறியப்பட்டவர். உலகளாவிய அளவில் காது, மூக்கு, தொண்டை மருத்துவ அறிஞர்கள், ஆய்வாளர்களுடனும் தொடர்புகளைப் பேணி வருபவர். அனைத்துலகம் தழுவிய மருத்துவக் கருத்தரங்குகளிலும் மருத்துவக் கட்டுரைகளை வெளிப்படுத்தி உரைகள் ஆற்றுபவர்.

நான் தமிழகம் செல்லும்போதெல்லாம் இவரைச் சந்திப்பதுண்டு. எனக்கும் இவருக்குமான தொடர்பு மலேசிய நண்பர்



மருத்துவர் மு. குமரேசன்

சுந்தர்ராஜன் வழியாக ஏற்பட்டிருப்பினும் அது நிலைத்து நீடிப்பதற்குக் காரணம் 'தமிழ்' தான்.

மருத்துவர் குமரேசன் தமிழ்மீது அளவிலாப் பற்றுக் கொண்டவர். தமிழ் இலக்கியங்களின் உயர் சிறப்புகளை இன்றளவும் போற்றி வருகின்றவர். தமிழர் கூறியிருக்கும் மருத்துவக் கோட்பாடுகளையும் விளக்கங்களையும் ஆழமாகக் கற்றுணர்ந்தவர்.

பொதுவாகவே எல்லாச் சமூகங்களிலும் ஆண்களில் சிலர் கீச்சுக்குரலில் அதாவது பெண்குரலில் பேசுவதுண்டு. இதனை ஆங்கிலத்தில் Puberphonia என அழைப்பர். வளர்ந்த பின்பும் தம்மால் ஆண்குரலில் பேச முடியவில்லையே என்ற ஆதங்கத்தால் தாழ்வுமனப்பான்மையுற்று சமூகத்திலிருந்து விலகி வாழ்பவர்களும் தம்மைத்தாமே மாய்த்துக்கொண்டவர்களும் கூட உள்ளனர். பொதுவாகவே இது இயற்கையாக அமைந்ததுதான், இதைச் சரி செய்ய முடியாது என்ற கருத்தே ஊர்ப்புறங்களில் நிலவி வருகின்றது.

கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பாக இதைச் சரிசெய்ய ஏற்றுக்கொள்ளப்பட்ட வெற்றிகரமான மருத்துவமுறைகள் இல்லை என்பதே உண்மை.

ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன்பு தன்னுடைய அனுபவத்தாலும் தொடர் ஆய்வுகளாவும் இலக்கியம் உள்ளிட்ட பல்துறை அறிவாற்றலாலும் கீச்சுக்குரலைச் சரி செய்து ஆண்குரலாக மாற்றுவதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்தார் திரு. மு. குமரேசன்.

நான் அவருடைய மருத்துவமனைக்குச் சென்றிருந்தபோது, என்னை உள்ளே அழைத்துச் சென்றார். அங்கே இரு இளைஞர்கள் குரற் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். அதில் ஒருவர் தமிழர் மற்றவர் தெலுங்கு தேசத்தவர்.

நல்ல வாட்டசாட்டமாகவும் செந்தளிப்பு மிக்கவராகவும் இருந்த கோவையைச் சேர்ந்த இளைஞரோடு பேசினேன். தன்னுடைய கீச்சுக்குரலால் தான் மற்றவர்களால் ஏளனப்படுத்தப்பட்டதாகவும் தான் பேசுவதையே முற்றிலும் நிறுத்திவிட்டதாகவும் தற்கொலை செய்வதற்குப் பலதடவை எண்ணியதாகவும் கூறினார். மருத்துவர் குமரேசனைப் பற்றி அறிந்து, கடந்த ஒரு வாரமாக அவரிடம் சிசிச்சை பெற்று வருவதாகவும் தன்னுடைய குரல் பெருமளவுக்கு ஆண்குரலாக மாறிவிட்டதாகவும் மிக நெகிழ்ந்து கண்ணீர் ததும்பப் பேசினார். உண்மையிலே அவர் குரல் ஆண்குரலாகவே இருந்தது. பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு கட்டத்தில் சட்டென மருத்துவரின் காலில் விழுந்து விட்டார். 'எனக்கு மறுவாழ்வு தந்த கடவுள்' என விழியுருகத் தொழுதார். என் கண்கள் கூட அவ்வேளையில் கலங்கி விட்டன.

பின்னர் என்னை உள்ளே அழைத்துச் சென்ற மருத்துவர் அந்த இளைஞனின் ஒளிப்பதிவு செய்யப்பட்டிருந்த பழைய குரலை ஒலித்துக் காட்டினார். எனக்கு இவர் மருத்துவரா இல்லை மந்திரவாதியா? என எண்ணத் தோன்றியது. ஒரே-வாரத்தில் பெண்போன்று ஒலித்த குரலை ஆண்குரலாக மாற்ற முடியுமா? வியப்பில் உறைத்துதான் போனேன்.

உண்மை, இன்றுவரை 1,100 வரையிலான இளைஞர்களுக்கு இவர் ஆண்குரலை மீட்டுக் கொடுத்திருக்கின்றார். இவ்வாறில்லாமல், அவர்களுக்கான மறுவாழ்வை அமைத்துக்

கொடுத்திருக்கின்றார் எனக் கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

Puberphonia என்ற இக்கோளாறுக்குத் தமிழில் ஒரு பெயர் வைக்க வேண்டும் என எண்ணினார். நெல்லை மாவட்டத்தில் உள்ள உவரி சுயம்புலிங்கச் சுவாமி கோவிலில் நடைபெறும் மகரமீன் திருவிழா (இதன் பின்னால் ஒரு ஐதீகக் கதையுண்டு) தனக்கு வழிகாட்டியாக இருந்ததை நினைவுகூர்ந்தார். நெல்லை மாவட்டத்து ஊர்ப்புறங்களில் ஆண்களின் குரல் மாறுவதை 'மகரக்கட்டு உடைதல்' எனக் குறிப்பிடுவார்கள். இந்த மகரமீன் விழாவே தனக்கு அதை நினைவுறுத்தியது எனக் குறிப்பிடும் மருத்துவர் இக்கோளாறுக்கான மருத்துவத்துக்கு 'மகரக்கட்டு மருத்துவம்' எனத் தமிழில் பெயரிட்டார்.

காது, மூக்கு, தொண்டை சார்ந்த நோய்களுக்கான ஆங்கில மருத்துவத்தை முறைப்படி கற்றிருந்தாலும் ஆங்கில மருத்துவ வட்டத்துக்குள் மட்டும் நில்லாது தமிழிலக்கியங்களும் மருத்துவ, சமய நூல்களும் குறிப்பிட்ட உடற்கூற்றியல் வழியாவும் நோய்களை இவர் அணுகினார். இவருடைய மருத்துவத்தில் யோகாவும் உடற்பயிற்சிகளும் இரண்டறக் கலந்துள்ளன. இவர் 'மருந்தில்லா மருத்துவம்' (virtual reality) என்ற கோட்பாட்டுடன் இயங்கி வருபவர். சில ஆண்டுகளுக்கு முன்பு நான் இவரைச் சந்தித்தபோது எனக்குச் சளியேறித் தொண்டை அடைத்திருந்தது. மருந்து கேட்டேன். மருந்து மாத்திரை எதுவும் தராமல் மூச்சுப்பயிற்சியோடு கூடிய யோகாவை மட்டும் செய்யச் சொன்னார். இதுதான் virtual reality.

சில வெளிநாட்டு அறிஞர்களின் அடிப்படைக் கோட்பாடுகளுடன், தமிழிலக்கியங்கள் குறிப்பிட்ட உடற்கூற்றியல் தொடர்பான கருத்துகளையும் அடிப்படையாகக் கொண்டுதான் மேற்கொண்ட ஆய்வுகளின் முடிவே இந்த 'மகரக்கட்டு மருத்துவம்' எனக் குறிப்பிடுகின்றார்.

அடிவயிற்றில் இருந்து தோன்றும் காற்றே அண்ணாக்கு வழியாக ஒலியாகி மொழியாகின்றது. அக்காற்று உருவாகிப் பயணம் செய்கின்ற பாதைகளுக்கும் குரலெலிக்கும் தொடர்பிருக்கின்றது என்பதைத் தொல்காப்பியம் சுட்டிக்காட்டுவதாகக் குறிப்பிடுகின்றார்.

***உந்தி முதலா முந்து வளி தோன்றி***
***தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலை***
***பல்லும் இதழும் நாவும் மூக்கும்***
***அண்ணமும் உளப்பட எண் முறை நிலையான்***
***உறுப்பு உற்று அமைய நெறிப்பட நாடி***
***எல்லா எழுத்தும் சொல்லும் காலை***
***பிறப்பின் ஆக்கம் வேறு வேறு இயல***
***திறப்படத் தெரியும் காட்சியான.***

மூச்சுக்காற்று எங்கே பிறக்கிறது என்பதை இது விளக்குகின்றது.

உந்தி என்றால் வயிற்றின் மேற்பகுதி. அங்கே கிளம்பும் காற்று தலை, மிடறு, நெஞ்சு ஆகிய இடங்களில் நின்று பல், இதழ், நாக்கு, மூக்கு, அண்ணம் வழியில் வந்து மொழியை உருவாக்குகிறது.

மகரக்கட்டு ஒரு நோய் அல்ல, அது மாறுபட்ட குரல் நிலைமைதான் என்பதை அடித்துக்கூறும் மருத்துவர், தொல்காப்பியர் கூறியதைப் போன்று ஒலி மொழியாக வெளிப்படும் நிலையில் அண்ணாக்கின் அதிர்வை அதிகரிக்கச் செய்வதே எமது மருத்துவம் என்கின்றார். 'தொடர்புபட்டவருக்கு குரல் தொடர்பான வேறு நோய்கள் இல்லை என்று கண்டறிந்த பின்னர் அண்ணாக்கு அதிர்வை அதிகரிக்கும் பயிற்சிகள் தொடங்குவோம். தொடர்ந்து ஐந்து நாட்கள் குரல் பயிற்சிகளை மேற்கொண்ட பின் மாற்றங்களை அவதானிக்கலாம்' என மருத்துவர் குறிப்பிடுகின்றார்.

இது எவ்வகையிலும் அறுவைச் சிகிச்சை இல்லை என்பதைக் குறிப்பிடும் அவர், இது மிக எளிமையான, செலவு மிகக் குறைந்த சிகிச்சைமுறை என்கின்றார்.

'அரியது கேட்கின் வரிவடி வேலோய்' என்ற ஔவையாரின் பாடல் வரிகள் தன் அகக்கண்ணைத் திறந்து விட்டதாகக் கூறுகின்றார். இது குறித்துத் தன் நூலில் விரிவாக எழுதியுள்ளார்.

மகரக்கட்டு மருத்துவத்தில் ஔவையாருக்குப் பெரும்பங்கு உண்டு எனக் கூறும் மருத்துவர், ஔவையார் எழுதிய விநாயகர் அகவல் தன் ஆய்வுச் சிந்தனைகளைத் தூண்டிவிட்டதாகக் குறிப்பிடுகின்றார். இந்நூல் உடலியல் இயக்கத்தை மையப்படுத்திய சிறந்த யோகப்பயிற்களையும் ஆன்மீக, சித்தாந்தக் கருத்துகளையும் கொண்டுள்ளதாகக் கூறுகின்றார். திருமந்திரம் என்னும் சைவ சித்தாந்தத்திலும் நல்ல பயிற்சி உள்ளவராகக் காணப்படுகின்றார்.

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, மருத்துவத்துறை விரிவுரையாளராக, தலைசிறந்த மருத்துவராக இயங்கி வரும் குமரேசன் வருவாயை முதன்மைப்படுத்தாத உன்னதமான சமூகப்பணியாளர். புகழ், விருது என்பவற்றைக்கூட வலிந்துபெறத் துணியாதவர். ஒரு முழுநேர மருத்துவராக இயங்கும் அதேவேளை, இதுவரையில் ஆங்கிலம், தமிழ் என இருமொழிகளிலும் 38 நூல்களை வெளியிட்டுள்ளார். இவை தவிரவும் 1993-ம் ஆண்டுமுதல் மருத்துவ அறிவியல் மலர் என்ற மாத இதழையும் வெளியிட்டு வந்திருக்கின்றார். 28 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக வெளிவந்த இந்த இதழ் கோவிட் தொற்றுப் பேரிடருக்குப் பின்னர் நின்றுவிட்டது. அவர் இறுதியாக வெளியிட்டிருக்கும் நூல் மகரக்கட்டு மருத்துவம். அவருடைய மகன் நவீன்பரத் அவர்களும் தந்தையைப் போன்றே காது, மூக்கு, தொண்டை மருத்துவத்தில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றார்.

இவருடைய மருத்துவக் காணொளிகளைக் கீழ்காணும் YouTube தளத்தில் காணலாம்.

https://www.youtube.com/watch?v=R-YmEs0W3Yk

ஏறக்குறைய எண்பது வயதை எட்டும் மருத்துவர் திரு. மு. குமரேசன் அவர்கள் இந்தியாவின் பல விருதுகளால் அழகுபடுத்தப்பட வேண்டிய ஆளுமையாளர். 'இந்த வயதிலும் களைப்பின்றியும் சலிப்பின்றியும் பணியாற்றுவதற்குக் காரணம் பணியிலும் தமிழிலும் ஆன்மீகத்திலும் தான் கொண்டிருக்கும் அளவிலா ஈடுபாடே' என்கின்றார்.

அவர் பணி தொடர்ந்து சிறக்க நாமும் துணை நிற்போம்.



vivekanandan.p@thaiveedu.com

# வீட்டை உயர்ந்த விலைக்கு விற்பது எப்படி?

**- வேலா சுப்ரமணியம் -**



நீங்கள் விற்கும் வீட்டிற்கு மிக உச்சமான விலை கிடைக்க வேண்டுமானால் அதற்கான தயார்படுத்தலில் நீங்கள் நிச்சயம் கவனம் எடுத்தே ஆகவேண்டும். உங்கள் வெற்றி எவ்வாறு வீட்டைத் தயாரிக்கிறீர்கள்? என்பதில் தான் தங்கியுள்ளது என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை.

அந்த வகையில் இக்கட்டுரையில் முக்கியமான சில உபாயங்களை அடையாளப்படுத்த விரும்புகிறேன்.

## சரியான விற்பனை முகவரைத் தெரிதல்:

நீங்கள் அதிஷ்ட சாலியாகவும் விவேகமானவராயும் இருந்தால் ஓர் அனுபவமுள்ள திறமைமிக்க வீடுவிற்பனை முகவரைத் தெரிவு செய்வதில் கவனம் எடுப்பீர்கள். இதன் மூலம் பல பயன்பாடுகளை அடைய முடியும். உங்கள் வீட்டைத் தனது விடாகவே நினைத்துச் செயற்படக்கூடிய அக்கறை மிக்க விற்பனை முகவர்கள் வீடு விற்பனைக்குரிய எல்லாவித படிமுறைகளிலும் உதவமுடியும். அந்தவகையில் அத்தகைய ஒருவர் தரக்கூடிய பட்டியல் ஒன்றைப் பெற்றுக் கொண்டு செயற்படுவது இலகுவானது. அல்லது நீங்கள் ஒரு வீடுவாங்குபவராக மாறி அத்தகையோர் எதிர்பாற்பவற்றை இனங்கண்டு செயற்பட வேண்டி இருக்கும். இதனை விடுத்து தொலை பேசியில் அழைத்தால் ‘Mailbox Full’ அல்லது ‘Mailbox’ தயார் நிலையில் இல்லை என்ற தகவலைத் தரக்கூடிய வீடு விற்பனை முகவர்களையும் எந்தவித துறைசார் அனுபவமுமற்ற வீடுவிற்பனை முகவர்களையும் உங்களது நண்பர்கள் அல்லது உறவினர்கள் என்ற பந்தத்தில் அமர்த்திக்கொள்வதால் கஷ்டம் உங்களுக்கே என்பதை உணர்ந்து கொள்வீர்களானால் அதுவே உங்களது வெற்றியின் முதற்படி.

## அடைசல்களை அகற்றுதல் (De-cluttering):

வீட்டைத் தேவையற்ற பொருட்களால் நிரப்பி வைத்திருப்பது தவிர்க்கப்படவேண்டும். வாசல் நிறைய சப்பாத்துக்களும். சமையலறையில் பல இடங்களில் காகிதக் கட்டுக்களும் கால் வைக்கும் இடங்கள் எல்லாம் அலங்காரப் பொருட்களும் பாவனையில் இல்லாத கழிவு பொருட்கள் பரவி இருப்பதும் வீடு வாங்குபவருக்கு ஒரு நல்ல அபிப்பிராயத்தைக் கொடுக்கமாட்டாது.

## பாரிய தளபாடங்கள்:

நீங்கள் நல்ல விலைக்கு விற்கமுற்படுவது உங்களது வீட்டையும் அதன் இடங்களையுமே (Space) தவிர, உங்கள் தளபாடங்களை அல்ல. வடிவானவை அல்லது உண்மையான மரத்திலானவை என்ற எண்ணத்தில் வீடு முழுவதையும் தளபாடங்களினால் நிரப்பி வைப்பது தவறானது. உங்கள் வீட்டில் உள்ள இடங்களுக்கும் அறைகளுக்கும் ஏற்றவகையில் அளவான, சிறிய தளபாடங்களை வைத்துக் கொண்டு மிகுதியை எங்காவது களஞ்சியப்படுத்தல் வேண்டும்.

## சுத்தம் செய்தல்:

வீடுகளில் இயல்பாகவே எல்லா இடங்களிலும் தூசுபடிந்திருக்கும். குறிப்பாக தீயறை (Fire Place) யன்னல்கள், Base-



board, மின்விசிறிகளுக்குரிய Net, Heating Registers, Air Intake Nets இவையெல்லா இடமும் தூசு படிமானங்கள் இருக்கும். அவற்றை ஒரு தடவை நன்றாகச் சுத்தம் செய்தல் அவசியமானது.

அத்துடன் கறைபடிந்த அடுப்புகள் அழுக்காக இருக்கக்கூடிய குளியலறைகள். மேலும் கண்ணுக்குத் தெரியக்கூடிய அழுக்குகள் யாவும் சுத்தம் செய்யப்பட வேண்டும். வீடு வாங்க வருபவரின் மனநிலையில் எவ்வகையிலும் சுத்தமின்மை காரணமாக அதிருப்தி ஏற்படாதவகையில் பார்த்துக் கொள்ளல் வேண்டும். ஒரு தடவை சுத்தம் செய்பவர்களை வேலைக்கமர்த்தி சுத்தம் செய்வது சாலச் சிறந்தது.

### துர்நாற்றத்தில் கவனம் எடுத்தல்:

வீட்டில் எந்த இடத்திலாவது இயற்கைக்கு மாறான மணம் இருப்பதை உணர்ந்து கொண்டால் அதில் அதிக கவனம் எடுத்தல் வேண்டும். குளியலறைகள், நிலக்கீழ் அறைகள் சிலவேளை வித்தியாசமான மணத்தைத் தருமானால் அவற்றை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சில வீடுகளின் உள்ளே இலேசான GAS மணம் இருப்பதைக் கூட பல இடங்களில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

முக்கியமாக எம்மவர்களது சமையல் மணம் பலருக்கும் இடஞ்சல் தரக்கூடியது. வீடு விற்பதற்காக காட்சிப்படுத்தல் தொடங்கும் காலத்தில் இருந்து வீடு விற்கும் வரை பொதுவாக சமையலை, பொரித்தலைத் தவிர்ப்பது மிகவும் நல்லது.

### வர்ணப் பூச்சுக்கள் (Painting):

உங்களைப் பொறுத்தவரை, கடும் நிறங்களில் நீங்களோ உங்கள் குடும்ப அங்கத்வரோ விருப்புடையவராக இருந்திருக்கலாம். ஆனால், அத்தகைய கடும் நிறங்களை விரும்பக்கூடிய வீடு வாங்குபவர்களின் தொகை மிக அரிதாகவே காணப்படுகின்றது. பொதுவாக எல்லோரையும் கவரக்கூடிய மெல்லிய நிறங்களில் (Neutral Colour) சுவர்களுக்கு பூச்சு செய்தல் மிக நன்மை பயக்கும்.

### தனிப்பட்ட பிரத்தியோகப் பொருட்கள் (Personal Items):

உங்கள் சொந்தப் படங்களும் வெற்றிச் சின்னங்களும், கேடயங்களும், உங்கள் வீட்டில் உங்களுக்கு புத்துணர்வையும் மகிழ்வையும் தந்திருக்கலாம். ஆனால் கொள்வனவாளர்கள் வீட்டைப் பார்வையிடுகின்ற போது தங்கள் படங்களையும் பிறபொருட்களையும் குறிப்பிட்ட இடங்களில் வைத்தால் எப்படி இருக்கும் எனக் கற்பனை செய்து பார்ப்பதற்கு இவை இடையூறாக அமையும். எனவே பிரத்தியோகமான பொருட்கள் யாவும் களஞ்சியப்படுத்தப்படல் வேண்டும்.

### வெளிச்சம் ஊட்டல்:

யன்னல்களை முற்றாகத் திறந்து விட்டு எவ்வளவு இயற்கை வெளிச்சத்தை உள்வாங்க முடியுமோ அவ்வளவிற்கு உட்கொண்டு வருதல் நல்லது. கடும் நிறங்களில் பாரிய அளவில் இருக்கும் திரைச் சேவைகளை அகற்றி விடுதல் நல்லது.

சேமிப்பிற்காக மங்கலான Watts குறைந்த மின் விளக்குகளைப் பொருத்தி இருப்பீர்கள். ஆனால் இப்போது வீட்டை விற் பனை செய்கின்றபோது அவற்றைமாற்றி மிக்க வெளிச்சம்தரவல்ல மின் விளக்குகளைப் போட வேண்டியது அவசியமானது. பிரகாசமான வீடு கொள்வனவாளர்களின் மனதிலும் பிரகாசத்தை ஏற்படுத்தும் என்பது மறுக்க முடியாத உண்மை.

### Organize your Closet:

ஒரு வீட்டில் எத்தனை Closet இருந்தாலும் அத்தனையும் உடுப்புக்களால் நிரம்பி வழிவது இயல்பானது. போதாதற்கு பெட்டிகளிலும் பைகளிலும்கூட மூட்டை மூட்டையாக உடுப்புகள் இருக்கும். அவற்றை வீடுவாங்குபவர்கள் கண்டால் தங்களுக்கும் இதே கதிதான் என்று எதிர்மறையான எண்ணம் கொள்ள நேரிடும். எனவே ஒவ்வொருவருக்கும் அவசியமாகத்



தேவைப்படக்கூடிய 5 தொகுதிகளை மட்டும் வைத்துக் கொண்டு Closetல் மேலதிக இடம் இருப்பதைக் காட்சிப்படுத்தல் வேண்டும். அத்துடன் மேலதிக உடுப்புகளை பெட்டிகளில் போட்டு வீடு விற்கும் வரை களஞ்சியப்படுத்தலாம்.

### சிறு சிறு திருத்தங்கள்:

நீங்கள் பலகாலமாகச் செய்ய வேண்டும் என்று நினைத்து நினைத்து மறந்து போன பல சிறுவேலைகள் நிலுவையாக இருக்கும். அவற்றைப் பட்டியலிட்டு இம்முறையாவது செய்து முடியுங்கள். உதாரணமாக குளியலறையிலும் சமையலறையிலும் குழாய்களிலிருந்து தண்ணீர் சொட்டிக் கொண்டிருக்கும் கதவு குமிழ்கள் கைபிடிகள் ஆடிய வண்ணம் இருக்கும். சுட்ட மின்குமிழை மாற்ற மறந்திருப்பீர்கள். தளபாடம் சமப்படுத்தப்படாததால் ஆடிக் கொண்டிருக்கும், ஒரு சிறிய இடத்தில் நிறப்பூச்சுச் செய்ய வேண்டியிருக்கும். இவ்வாறு நீங்களே செய்யக்கூடிய சில வேலைகளை செய்து முடித்தல் நல்ல பலனைத் தரும்.

### திருத்த வேலைகள், தரமுயர்த்தல்:

பழைய வீடுகளைச் சந்தைப்படுத்தும் போது சில திருத்த வேலைகளை செய்தல் சாலச் சிறந்தது. ஒரு வீட்டின் விற்பனையைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியில் ஒன்று சமையலறை. இரண்டாவது காரணி சிலருக்கு குளியலறை, வேறு சிலருக்கு Family Room. எனவே இத்தகைய இடங்களில் கவனம் செலுத்துவது நன்மை தரும். சமையலறையில் மேற்தட்டு (counter top) Faucet, அலுமாரிகளுக்குரிய கதவுகள், கை பிடிகள், மின்விளக்குகள் காலாவதி ஆகியிருக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே அவற்றுக்கு சிறுதொகைப் பணத்தைச் செலவு செய்வதன் மூலம் அதிக பணத்தை ஈட்ட வாய்ப்பு உள்ளது.

திருத்த வேலையென இறங்கி அதிக அளவிலான பணத்

தைக் கொட்டினால் செலவழித்த பணம் முழுவதையும் விற்ப னையின் மூலம் மீட்டு எடுக்க முடியுமா? என்ற கேள்வியும் உள்ளது. எனவே எது பயன்தரவல்லது, எதைத் தவிர்க்கலாம் என்பது இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். இந்த இடத்தில் ஒரு அனுபவமுள்ளவரை நாடுதல் மிகப் பொருத்தமானதாக இருக்கும்.

## ஒவ்வொரு அறைக்கும் உரிய பயன்பாட்டை உறுதி செய்தல்:

பொதுவாக வீடுகள் கட்டப்படும்போது ஒவ்வொரு அறையும் ஒவ்வொரு பயன்பாட்டிற்கு ஏற்றவாறே கட்டப்பட்டிருக்கும். ஆனால் எங்கள் வசதிக்கேற்ப அல்லது எங்களிடம் உள்ள தளபாடத்திற்கேற்ப சாப்பாட்டறையை Family Room ஆக மாற்றியிருப்போம் அல்லது அலுவலகத்திற்காக அமைக்கப் பட்ட அறையைப்படுக்கை அறையாக மாற்றி இருப்போம். ஆனால், ஒரு வீட்டை விற்கும் போது எந்த அறை எந்த தேவைக்குப் பொருத்தமானதோ அதற்கேற்பவே காட்சிப்ப டுத்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் குழப்பமடையும் கொள்வனவாளர்களினால் எதிர்மறையான விளைவுகளே ஏற் படும்.

## குளியலறைகள்:

வீடுவாங்குபவர்கள் குளியலறையைப் பார்க்கின்றபோது அவை இதமான சௌகரியத்தைக் கொடுக்கக் கூடிய விதத் தில் ஆடம்பரமாக இருப்பது போல் காட்சிப்படுத்தப்படுவது நல்ல பலனைத் தரக்கூடியது. ஏற்கனவே குறிப்பிட்டது போல் சிலவேளைகளில் குளியலறைகூட விற்பனையை தீர் மானிக்கும் காரணியாக அமையலாம். எனவே சிறு சிறு தரமு யர்த்தல் செய்வது பொருத்தாமான அலங்காரப் பொருட் களை வைப்பது, 'நறுமணம்' ஊட்ட வழிசெய்வது என்பன சிபாரிசு செய்யக்கூடியவை. குறிப்பாக உள்ளே செல்லும் போது ஒரு 'SPA' க்குள் நுழைவது போன்ற உணர்வு ஏற்ப டும் விதத்தில் சில யுக்திகளைப் பயன்படுத்தல் வேண்டும்.

## வரவேற்பறை:

வரவேற்பறையை குடும்ப அங்கத்தவர்களும் விருந்தாளியாக வருபவர்களும் கூடி இருந்து குலாவக்கூடிய மைய இடமாக அமையும் விதத்தில் ஏற்ற தளபாடங்களையும் அலங்காரப் பொருட்களையும் போட்டுத் தயார் செய்தல் வேண்டும். விருந்தாளிகள் போல உங்கள் வீட்டுக்குள் பிரவேசிக்கும் கொள்வனவாளர்களுக்கு இது ஒரு நல்ல மனநிலையை ஏற் படுத்த வழிவகுக்கும்.

## இயற்கை செடிகள், மரங்கள்:

மிகச் சிறிய அளவில் இடத்திற்குப் பொருத்தமான விதத்தில் சாடிகளில் வைக்கக்கூடிய சில தாவரங்களைக் காட்சிப்படுத் தல் நல்லது. வீட்டிற்குள் இயற்கை வளங்களை உள்வாங்க முற்படுகிறீர்கள் என்பதுடன் அத்தகைய அழகான இயற் கைச் செடிகளிலும், பூமரங்களிலும் தமது மனதைப் பறி கொடுக்காத மனிதர்கள் அரிதாகவே காணப்படுகிறார்கள். அந்த வகையில் உங்கள் வீட்டைப் பார்வையிடவரும் கொள் வனவாளர்களும் விதிவிலக்கல்ல.

## உணர்வூட்டும் வாசனை:

வீட்டிற்குள் நுழையும்போது வாங்கோ வாங்கோ என்று கூறா மல் கூறுவது போல மெல்லிய இதமான நறுமணம் உண்டா கும் விதத்தில் வரவேற்பறை இருத்தல் வேண்டும். பலவித பொருட்கள் சந்தையில் இதற்காக உண்டு. குறிப்பாக வீட் டின் நடுப்பகுதியில் 'Baked Cookies'-ஐ வைத்தால் அது எல் லோரையும் சமையலறையுடன் தானாகவே இணைத்துவிடும். சில வீட்டுரிமையாளர்கள் வீடு விற்கும் காலத்தில் இதன் பொருட்டு தினமும் Cookies Bake செய்வதும் உண்டு.

## கழிப்பறை இருக்கை:

வீட்டைக் காட்சிப்படுத்தும் போதும் படங்கள் எடுக்கின்ற போதும் Toilet Seat மூடப்பட்டிருத்தல் வேண்டும். இது ஒரு சிறிய யுத்தி என்றாலும், அழப்பெரிய அனுகூலம் இருப்பதா கக் கணிப்பிடப்படுகிறது.

## முக்கிய இடங்களை முதன்மைப்படுத்தல் (Highlight Focal Points):

ஒவ்வொரு வீட்டின் அமைப்பிலும் சில சிறப்பம்சங்கள் இருக் கும். அவற்றை முதன்மைப்படுத்தும் வகையிலும் துல்லிய மாக வருவோரின் கவனத்தை உள்வாங்கும் விதத்திலும் சில ஒழுங்குகளையோ அழகுபடுத்தலையோ செய்வது மிக அவ சியம். வீடுகளில் இயல்பான சிறப்பம்சங்கள் இல்லாவிட்டா லும் சில இடங்களைச் சிறப்பான முறையில் ஒழுங்கு செய் வதன் மூலம் பார்ப்போர் கவனம் திசை திருப்பப்படுதல், சில வீடுகளுக்கும் சந்தைப்படுத்தலுக்கும் மிக அவசியமா கின்றது.

## வீட்டை அலங்காரப்படுத்தல் (Staging):

ஒரு வீட்டைச் சந்தைப்படுத்தலிலும், உச்ச அளவிலான விலையைப் பெற வைத்தலிலும், குறுகிய காலத்தில் விற்க வைத்தலிலும் வீட்டின் அலங்காரம் முதலிடம் பெறுகின்றது. திறமையும் விவேகமும் உள்ள வீட்டுரிமையாளர்கள் தாமா கவே வீட்டை அலங்கரிக்கலாம். ஆனால் அதே துறையில் அனுபவம் உள்ளவர்கள் அதனைச் செய்வதில் அதிக பயன் பெற வாய்ப்புண்டு. வீட்டலங்காரத்திற்காக ஒரு கம்பனி யையோ, தனியாரையோ அமர்த்துகின்றபோது, அவர்கள் வீட்டிற்கு ஏற்ற விதத்தில் தளபாடங்களைக் கொண்டுவந்து அத்துடன் வீட்டிற்குப் பொருத்தமான அலாங்காரப் பொருட் களையும் போட்டு தொழில்ரீதியாக அலங்கரிக்கின்றபோது, அதில் பாரிய வேறுபாடிருக்கின்றது. இதற்கென சில ஆயி ரங்களைச் செலவிட நேர்ந்தாலும் கூட, இதன் மூலம் பல ஆயிரங்களை மேலதிகமாகப் பெறலாம் என்பது எனது எண் ணம். குறிப்பாக கடந்த ஆண்டு நான் சந்தைப்படுத்திய வீடு களில் 95%க்கு மேற்பட்டவை குறிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு விற்கப்பட்டமைக்கும் 0-2 வாரத்திற்குள் விலைப்பட்டமைக்கும் வீட்டின் அலங்காரமும் ஒரு காரணம் என்பது நான் அனுபவத்தில் கண்ட உண்மை. அழகுபடுத் தல் என்பது ஒருகலை அதனை உரியவர்கள் செய்தால் தான் அழகாகவும் இருக்கும். அதிகபலனும் கிடைக்கும்.

## படங்கள், Virtual Tour:

காலத்திற்கேற்றபடி செயற்படுதல் என்பது இங்கும் மிகத் தேவையான ஒன்று. முன்பிருந்த காலங்களுடன் ஒப்பிடும்

போது தற்போதைய சந்தைப்படுத்தலில் கணினியின் பங்கு மிக முக்கியமாக உள்ளது. வீடு வங்குபவர்கள் சகல விபரங்களையும் கணினியின் ஊடாகப் பார்த்து, பின்னரே தங்கள் தெரிவுகளைச் செய்தபின் நிச்சயப்படுத்திக் கொள்ள நேரில் வீட்டைப் பார்க்க செல்கிறார்கள். வார்த்தைகளைவிட படங்கள் ஆயிரம் கதைகள் சொல்ல வல்லவை. அந்த வகையில் ஒரு வீட்டைச் சந்தைப்படுத்துகின்றபோது எடுக்கப்படும் நேர்த்தியான படங்களும், மாய வலமும் (Virtual tour) மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. நேரே பார்ப்பதைவிட முறையாக எடுக்கப்பட்ட Virtual tour-கள் மிக அழகாகவும், அதே வேளை ஒரு வீட்டை நேரில் பார்ப்பதற்கு உந்து சக்தியைக் கொடுப்பனவாகவும் இருப்பதை நான் எனது அனுபவத்தில் கண்டிருக்கிறேன்.

## சந்தைப்படுத்தல்:

பொதுவாக ஒருபொருளின் விலை என்பது அது காட்சிப்படுத்தப்படும் விதத்திலும், சந்தைப் படுத்தப்படும் விதத்திலுமே தங்கியுள்ளது. வீடு விற்பனையில் தனியாக MLS Listing-ஐ மட்டும் நம்பி இருப்பது பழைய முறைமை. அது எல்லா வேளையிலும் உயரிய பலனைத் தராது. தற்போது சந்தைப்படுத்தலில் சமூக வலைத்தளங்களும், ஊடகங்களும் முக்கிய இடம் வகிக்கின்றன. எனது அனுபவத்தில் கடந்த வருடம் மிசிசாகாவில் இருந்த ஒரு குடும்பம் Ajax-ல் நான் போட்ட வீட்டை வாங்குவதற்கு Face Book-உம், Youtubeம் காரணமாக இருந்தது என்பது மறக்கமுடியாத உண்மை.

நிறைவாகப் பார்க்கின்றபோது சுமார் 21 முக்கிய பொது அம்சங்களைக் குறிப்பிட்டிருக்கிறேன். மேலும் மேலும் இதனை விரித்துக் கூறிக்கொண்டே போகலாம். இவற்றுள் பலதும் பலருக்கும் பொருந்தலாம். உங்களுக்குப் பொருத்த மற்றதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். குறிப்பாகக் கூறுவதனால் வீடுகள் விற்கும் போது வீட்டுரிமையாளர்களின் வெற்றி என்பது சரியானதை சரியான நேரத்தில் செய்வது என்பதிலேயே தங்கி உள்ளது. அதிலும் குறிப்பாகக் கூறுவதானால் நீங்கள் சரியான விற்பனை முகவரைத் தெரிவு செய்வதன் மூலம் உங்களுக்குரிய வெற்றியை நிச்சயப்படுத்திக் கொள்ளும் அதே நேரத்தில், உங்கள் பொறுப்புகளில் பெரும்பாலானவை அவரிடம் கையளிக்கப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட 21 அம்சங்களில் பெரும்பாலானவற்றை ஒரு சரியான விற்பனை முகவர் தானே பார்த்துக்கொள்வார். நண்பர், உறவினர் என்ற நிலைகடந்து விவேகமாக நடந்து கொள்ளும் வீட்டுரிமையாளர்கள் இத்தெரிவில் பாரிய வெற்றி பெறுவார்கள்.

குறைந்த கொமிசனுக்கு போவது சரியானதா என்று கேள்வி ஏழலாம்? ஒரு வீடு விற்பனை முகவரினால், உங்கள் வீடு சரியான வழிமுறைகளைக் கையாண்டு உச்சவிலைக்கு விற்கப்படுகின்றபோது, உண்மையில் விற்பனைக் கொமிசன் முழுவதும் வீடு வாங்குபவரிடம் மறைமுகமாகத் தள்ளப்படுவது மட்டுமன்றி, மேலதிகலாபமும் உங்களுக்குக் கிடைக்கின்றது. நீங்கள் குறைந்த கமிசன் மூலம் சேமிப்பதைவிட, உங்கள் இழப்பு அதிகமானது என்பது ஆழமாகச் சிந்தித்தால் புரியும்.



velasubramaniam@thaiveedu.com




# ஒன்ராறியோ வாகனக் காப்புறுதிக் கட்டணம்



## - செந்தூரன் புனிதவேல்

ஒன்ராறியோ மாகாணத்தில் வாகன காப்புறுதிக் கட்டணம் 2020-ம் ஆண்டுக் கட்டணத்திலிருந்து சராசரியாக 3.8% அள வில் குறைந்தாலும் சில பகுதிகளில் சற்றுக் கூடியிருப்ப தைக் காணக்கூடியதாயுள்ளது.

மாகாணத்தின் கூடிய செலவீனம் உடைய நகரங்களில் பத்தாவது இடத்தில் இணைந்து வந்துள்ள நோபிள்டன், ஸ்கொம்பேக், ஒரேஞ்வில் மற்றும் கிங்சிட்டி ஆகிய நகரங்க ளில் கட்டணம் அண்ணளவாக 14.2 வீதத்தால் வருடாவருடம் கூடுவதுடன் ஒசாவா நகரத்தில் 12.1% கூடியுள்ளதை அவ தானிக்கத்தக்கதாயுள்ளது.

அதே போல் நப்பனி, டிரென்டன், கோபேக், பெல்லிவில், பிக்டன் போன்ற நகரங்களில் காப்புறுதி கட்டணங்கள் 2020 முதல் 2021 காலப்பகுதியில் 6.5% அதிகரித்துள்ளது.

ஒன்ராறியோ மாகாணத்தில் பல பிரதேசங்களில் கட்டணம் குறையும் வேளையில் இச்சில நகரங்களில் மட்டும் கட்டணம் கூடியது ஏன் என்பதனைக் கவனத்தில் கொள்வதே இக்கட் டுரை யின் நோக்கம்.

நாம் ஆழ்ந்து கவனித்தால், இதற்கான அடிப்படைக்காரணம் பெரும் தொகையான மக்களின் புலம்பெயர்வே. பல நகரங்க ளில் நெரிசலுடன் வாழ்ந்த மக்கள் இப்போ கிராமங்களுக் குக் குடிபெயர்ந்துள்ளார்கள்.

வீடுகளில் இருந்து வேலை செய்ய அனுமதி கிடைத்த வேளையில் பெரும் தொகையான மக்கள் சுற்றுப்புறக் கிரா மங்களுக்கு புலம் பெயர்ந்ததால், அங்கு சனத்தொகை அதி கரித்தது. அதனால், அங்கு வாகனங்களின் தொகையும் அதிகரித்தது. அதே வேளையில் பெருநகரங்களில் வாகனங் கள் குறையத் தொடங்கின. பெருநகரங்களுக்கு, அதன் சுற் றுப்புற சிறு நகரங்களிலிருந்து வேலைக்கு சென்று வருவோ-ரின் வாகனங்கள் குறைந்ததும் சேர்ந்து, ரொறன்ரோ போன்ற பெருநகரங்களில் கட்டணத் தொகை குறைவதும் இயல்பா னது.

இத்தகைய விளைவுகளால், ரொறன்ரோ நகரத்தில் 2020-ல் சரா சரியாக $2,200 டொலராகவிருந்த வாகனக் காப்புறுதி கட்டணம் 2021-ல் 11.3% குறைந்து $1,952 டொலராக மாற்றம டைந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

தொற்று நோய் காலத்தில் பெரும் தொகையான மக்கள் சுற் றுப் புறங்களுக்கு புலம் பெயர்ந்ததால் சுற்றுப்புற நகரங்க ளில் வாகன நெரிசல் கூடியுள்ளது இயல்பேயாகும்.

வாகனக்காப்புறுதிக் கட்டணங்கள் கீழ்க்கண்ட காரணிகளால் நிர்ணயிக்கப்படுகின்றன.

- ஒருவருடைய வயது மற்றும் பாலினம்.
- வாகனத்தின் வயது, மற்றும் தன்மை.
- வாகனத்தின் பாவனை (வேலைக்கு, பொழுதுபோக்கிற்கு).
- வருடாந்தம் வாகனம் செலுத்தப்படும் தூரம்.
- ஓட்டுனரின் அனுபவமும் முன்னைய செயற்பாடும்.
- முன்னைய இழப்புகளும் கேட்பனவுகளும்.

ஒன்ராறியோ, மாகாணத்தில் வோன் நகரம் மிகக் கூடிய கட்ட ணமாக $2,179 டொலர் 2021-ல் அறவிட்டது. முன்பு மிக அதிக கட்டணம் அறவிட்ட அருகில் உள்ள ரொறன்ரோ நக ரத்தில் 2020-ல் அறவிடப்பட்டதிலிருந்து 14.2% குறைந்து $1,952 டொலர் 2021-ல் அறவிடப்பட்டது.

மேற்படிக் கட்டணங்கள் யாவும் 35 வயதுடைய, விபத்துக ளில் சிக்காத சாரதி ஒருவர், கொண்டா-சிவிக் வாகனத்தை செலுத்துவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

மாகாண கணக்குப்படி கணிக்கும் வேளை ஒன்ராறியோவின் வாகன காப்புறுதிக் கட்டணம் 2020-ருந்து 2021-ல் 4.5% குறைந்துள்ளது என்பதே யதார்த்தம்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்து வாகன நெரிசல் கூடுகை யில் வாகனக் காப்புறுதி செலவு கூடுவது தவிர்க்க முடியாது என்பதும் யதார்த்தம்.

கவனமாக வாகனத்தைச் செலுத்தி வாழ்க வளமுடன்!



senthuran.p@thaiveedu.com




மனுக்குலத்தின் மகோன்னத வளர்ச்சியினால் இந்த பிரபஞ்சத்தை கடிவாளம் இட்டு கட்டியாளும் அற்புத திறன் உருவாகியுள்ளது என்றால் அது பிழையாகாது. விஞ்ஞான தொழில்நுட்பத்தின் விஸ்வரூப வளர்ச்சியானது வயது மூப்பை தவிர்ப்பது, காலப் பயணம் செய்வது, வேற்றுக் கிரகங்களுக்கு சென்று வருதல், நோய்களுக்கு பல்வேறு அதிநவீன சிகிச்சைகளை அளித்தல், தொடர்பாடல் போன்ற பல்வேறு விடயங்களில் உச்சம் தொடும் எத்தனிப்புக்கள் போன்றவை எம் சந்ததியினர் அசுர வேகத்தில் பாய்ந்து, பறந்து செல்வதனை கண்கூடாக பார்க்க முடிகின்றது. இந்நிலையில் இயற்கையை வெல்லும் பிரயத்தனங்கள் என்னவோ இன்னமும் ஆரம்ப கட்டத்திலேயே இருக்கின்றது எனலாம். அண்மையில் துருக்கி மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற பூகம்பம் இயற்கை சீற்றத்தை மீண்டும் ஆழமாகவும் அழுத்தமாகவும் மனிதருக்கு நினைவுபடுத்திச் சென்றுள்ளது. இந்த பேரனர்த்தம் காரணமாக சுமார் 50,000 உயிர்கள் வரையில் காவுகொள்ளப்பட்டுள்ளது. புயல் காற்றை, ஆழிப்பேரலையை, மழை வெள்ளத்தை, பனிப்பொழிவை துல்லியமாக எதிர்வுகூற விழையும் மனிதரினால் பூகம்பம் பற்றிய முன்னெச்சரிக்கைகளை வெளியிடுவது எந்த அளவிற்கு வெற்றியளித்துள்ளது, இவ்வாறான பேரிடர்களின் போது மனித உயிர்களை பாதுகாத்துக் கொள்வதற்கு ஏன் முன் அறிவிப்புக்களை வெளியிட முடிவதில்லை என உங்கள் மனதில் கேள்விகள் எழுந்திருக்கக் கூடும், அதற்கான விடை தேடும் ஓர் சிறு பிரயத்தமாக இந்தப் பத்தி அமைந்துள்ளது.

விஞ்ஞானம் வளர்ச்சியடைந்திருந்த போதிலும் நில அதிர்வு தொடர்பில் துல்லியமான எதிர்வுகூறல்களை வெளியிடுவது இன்றளவிலும் சவால் மிக்க ஒன்றாகவே காணப்படுகின்றது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். நில அதிர்வு குறித்து கண்டறிவதற்கான தகவல்கள் மிகவும் குறைந்த அளவிலேயே கிடைக்கப் பெறுகின்றன.

நில அதிர்வு - பூமியதிர்ச்சி என்பது பூமிக்கு அடியில் அழுத்தம் அதிகரித்து புவியோடுகள் நகர்வதனால் ஏற்படும் அதிர்வேயாகும். அதாவது பூமியின் சுழற்சியின் போது நிலக்கீழ்த் தகடுக்கள் ஒன்றுடனொன்று உராய்வதனால் இவ்வாறு நிலநடுக்கம் ஏற்படுகின்றது. நில நடுக்கம் ரிச்டர் அளவின் ஊடாக அளவீடு செய்யப்படுகின்றது. 3 ரிச்டர் அளவிற்கும் குறைந்த நில அதிர்வுகள் பாதிப்பற்றவை அவற்றை உணர்வது சிரமமானது, எனினும் 7 ரிச்டர் அளவிற்கு மேற்பட்ட நில அதிர்வுகள் சில சமயங்கள் பேரழிவுகளை ஏற்படுத்தி விடக்கூடியவை.

நில அதிர்வுகளை கண்டறிவது மிகவும் சவால் மிக்க ஒரு விடயமாகவே காணப்படுகின்றது. விஞ்ஞான வளர்ச்சி அதீத அளவில் காணப்பட்டாலும் நில அதிர்வுகளை துல்லியமாக கணித்துக் கூறும் தொழில்நுட்பங்கள் மிக ஆரம்ப கட்டத்திலேயே காணப்படுகின்றன. ஒரு சம்பவம் இடம்பெற்றதன் பின்னர் நில அதிர்வு பற்றிய தகவல்கள் நிமிடத்திற்கு நிமிடம் பெற்றுக் கொள்ளக் கூடிய தொழில்நுட்பம் காணப்படுகிறது.

எனினும் நில அதிர்வு ஏற்படுவதற்கு முன்னதாக கணிப்புகளை செய்வது அசாத்தியமான விடயமாகவே காணப்படுகின்றது. ஆய்வுக்கூடம் ஒன்றில் பூமி அதிர்வு ஏற்படுவதை உருவகப்படுத்தி மேற்கொள்ளும் ஆய்வுகளின் போது இந்த அனைத்துவிதமான சின்ன சின்ன அசைவுகளையும் காண முடிகின்றது என இத்தாலியின் சாபியின்ஸா மற்றும் பென்சில்வேனிய பல்கலைக்கழகங்களின் புவியியல் விஞ்ஞான ஆய்வுப் பிரிவுகளின் பேராசிரியர் கிறிஸ் மரோன் (Chris Marone) தெரிவிக்கின்றார்.

அதாவது முன்னறிவிக்கக்கூடிய தகவல்களை பெற்றுக் கொள்வதில் தொடர்ந்தும் சவால்கள் காணப்படுகின்றன. நிலத்தில் ஏற்படக்கூடிய விரிசல்கள் உள்ளிட்ட சில விடயங்களின் அடிப்படையில் இந்த மாற்றங்களை காண முடிகின்றது. எனினும், பூமி அதிர்வு ஏற்படுவதற்கு முன்னதாக இந்த அறிகுறிகளை எம்மால் துல்லியமாக கணிப்பிட முடிவதில்லை என அவர் கூறுகின்றார். இவ்வாறு முன்னறிவிப்புகளை மேற்கொள்வதற்கு பல்வேறு நிச்சயமற்ற தன்மைகளினால் தாக்கம் ஏற்படுத்தப்படுகின்றது என அவர் கூறுகின்றார்.

புவியியலாளர்கள் அதி நவீன விஞ்ஞான தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி நில அதிர்வு தொடர்பிலான முன்னறிவிப்புகளை மேற்கொள்வது தொடர்பில் 1960-ம் ஆண்டு

முதல் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். 'எனினும் இதுவரையில் மிக சொற்ப அளவிலான வெற்றியே இந்த ஆய்வுகளில் கிட்டியுள்ளது. இந்த பூமியின் குறுக்குவெட்டு கோடுகள் சிக்கல் மிகுந்தவையாக காணப்படுகின்றமை இந்த பின்னடைவுக்கான காரணமாகும். பூமிக்குள்ளிருந்து அடிக்கடி சத்தங்கள் கேட்கின்றன, இந்த சத்தத்துடன் மனித நாகரீக வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட போக்குவரத்து, கட்டுமான பணிகள் மற்றும் அன்றாட நடவடிக்கைகளின் ஒலிகளும் இணைந்து கேட்பதனால் பூமி அதிர்வு தொடர்பிலான துல்லியமான ஒலிகளை பிரித்து ஆய்ந்து அறிந்து கொள்வதில் பெரும் சவால் நிலை நீடிக்கின்றது' என அவர் குறிப்பிடுகின்றார்.

நிலநடுக்கம் தொடர்பில் முன்னறிவிப்புகளை மேற்கொள்வதற்கு மூன்று முக்கியமான விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என ஐக்கிய அமெரிக்க புவியியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். நில அதிர்வு இடம்பெறும் பகுதி, அது எப்போது ஏற்படும் மற்றும் அதன் தன்மை அல்லது எவ்வளவு பெரிதாக நிகழும் போன்ற விடயங்களை முக்கியமாகச் சுட்டிக்காட்டுகின்றனர். எனினும், இந்த மூன்று விடயங்கள் தொடர்பிலும் எந்த ஓர் ஆய்வுகளின் மூலமும் இது வரையில் துல்லியமான தகவல்களை வெளியிட முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே புவியியல் ஆய்வாளர்கள் நில அதிர்வுகளினால் பாதிப்பு ஏற்படக்கூடும் என ஊகிக்கும் பகுதிகளை அடையாளம் கண்டு, அவை தொடர்பான முன்னெச்சரிக்கைகளை மட்டும் வெளியிட்டு வருகின்றனர். பல ஆண்டுகள் நில அதிர்வு ஏற்பட்ட தன்மைகளின் அடிப்படையில் இந்த முன்னெச்சரிக்கை விடுக்கப்படுகின்றது. குறிப்பாக மிகவும் ஆபத்தான வலயங்களாக கருதப்படும் பகுதிகளில் இந்த முன்னெச்சரிக்கை விடுக்கப்படுகின்றது. எனினும் இவை அந்தப் பகுதிகளில் கட்டடங்களின் நிர்மாண தரத்தை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்யவும் என்ற போதிலும், இவை நில அதிர்வு ஏற்படும் போது, முன்கூட்டியே ஓர் இடத்தில் தஞ்சமடைந்து கொள்வதற்கு வழி அமைக்காது என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது முன்கூட்டியே இந்த இந்த பகுதிகளில் நில அதிர்வு ஏற்படக்கூடும் என யூகங்களை வெளியிட்டு கட்டடங்களின் தரத்தை மேம்படுத்தி, திட்டமிடல்களை செய்ய முடியுமே தவிர, ஒரு நிகழ்வு இடம்பெறுவதற்கு முன்னதாகவே அந்தப் பகுதிகளில் இருந்து மக்களை வெளியேற்றக் கூடிய சாத்தியங்கள் கிடையாது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இது பொதுமக்களை அந்த இடத்திலிருந்து வெளியேற்றவோ அல்லது நில அதிர்வு ஏற்படக்கூடிய ஒரு பெரிய பரப்பில் அந்தப் பகுதியில் வாழக்கூடிய அனைத்து மக்களும் தஞ்சமடையக் கூடிய வகையிலான ஓர் விசாலமான அல்லது அவசியமான உட்கட்டுமான வசதிகளை உருவாக்குவது என்பது சாத்தியமற்றதாகவே காணப்படுகின்றது.

துருக்கி மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் கட்டடங்கள் இடிந்து வீழ்வதற்கு பல்வேறு காரணிகளை சுட்டிக்காட்ட முடியும். அனேகமான மேற்கத்திய நாடுகளில் நில அதிர்வு தொடர்பிலான குறிகாட்டிகள் 1970-களிலும் 1980-களிலும் வெளியிடப்பட்டன. இதன் அடிப்படையில் கட்டுமான பணிகளை மேற்கொள்வதற்கு அதிக அளவு செலவு செய்ய நேரிடும் என்ற காரணத்தினால் கட்டுமான பணிகள் அந்த தரத்தில் மேற்கொள்ளப்படவில்லை. குறிப்பாக நில அதிர்வுகள் அடிக்கடி ஏற்படக்கூடிய ஜப்பான் போன்ற நாடுகளில் வானுயர எழுப்பப்பட்டுள்ள கட்டடங்களில் நில அதிர்வை தாங்கக்கூடிய அல்லது நில அதிர்வுகளில் இருந்து பாதுகாத்து கொள்ள கூடிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதனை நாம் கண்டறிந்து கொள்ள முடிகிறது. எனினும் சிரியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளில் இவ்வாறான ஒரு கட்டுமான யுக்தி பயன்படுத்தவில்லை என்பது நிதர்சனமான உண்மையாகும்.

எனவே நில அதிர்வு குறித்த விஞ்ஞானிகள் நில நடுக்க கணிப்புக்களை துல்லியமாக மேற்கொள்வதற்கான வழிமுறைகளை கண்டறிந்து கொள்வதற்கான முனைப்புகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர். மிக தீவிரமாக ஆராய்ந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முனைப்புகளில் ஈடுபட்டு வருகின்றனர். பூவிப்புறவெளியில் ஏற்படக்கூடிய மாற்றங்கள், விலங்குகள், பறவைகளின் நடத்தை போன்ற பல்வேறு விடயங்களின் அடிப்படையில் இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எனினும் இந்த ஆய்வுகள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடைவதற்கு முடியாத ஒரு சூழ்நிலை தொடர்கின்றது. எவ்வாறெனினும் அண்மைக் காலமாக மீண்டும் நில அதிர்வு தொடர்பிலான முன்னறிவிப்புகளை கண்டறியும் ஆய்வுப் பயணங்கள் உற்சாகம் பெற தொடங்கியுள்ளது. அதற்குச் செயற்கை நுண்ணறிவு, Machine-learning (செயற்கைப் பேரறிவுப் படிமுறை) போன்ற பல்வேறு தொழில்நுட்பங்கள் தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக மனிதரினால் உணர்ந்து கொள்ள முடியாத சமிக்ஞைகளை கண்டறியக்கூடிய செயற்கை நுண்ணறிவு திறன்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் கடந்த காலங்களில் நில அதிர்வுகளின் தன்மை அவற்றின் போக்கு என்பன பற்றிய பாரிய அளவிலான தகவல்களை இயந்திர மொழிகள் கொண்டு ஆய்வுக்கு உட்படுத்தி எதிர்கால நில அதிர்வு பற்றிய முன்னறிவிப்புகளை மேற்கொள்ள முடியுமா என்னும் அடிப்படையில் ஆய்வுகள் நகர்கின்றன. இந்த Machine-learning அடிப்படையிலான ஆய்வுகள் புதிய எதிர்பார்ப்புகளை உருவாக்கியுள்ளது என பேராசிரியர் மரோன் கூறுகின்றார்.

பேராசிரியர் மரோன் மற்றும் அவரது சகாக்கள் இணைந்து கடந்த ஐந்து ஆண்டுகளாக ஒரு புதிய அல்கேரிதம் ஒன்றை உருவாக்கி வருகின்றனர். ஆய்வு கூடத்தில் நில அதிர்வு பற்றி கணிப்புகளில் ஏற்பட்ட தோல்விகளை கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த அல்கோரிதம் அமைந்துள்ளது. கிரணைட் கற்களை பயன்படுத்தி அதன் மீது அழுத்தங்களை பிரயோகித்து நில அதிர்வின்போது பூமியில் எவ்வாறான மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதனை கண்காணிக்கும் ஒரு பொறிமுறையை ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர். இதற்கு labquakes என பெயரிடப்பட்டுள்ளது.

'எலாஸ்டிக் அலைகள் கோளாறு உள்ள பகுதியில் சிறிது சிறிதாக பயணிக்கின்றன, ஆபத்து ஏற்படக்கூடிய வலயங்களில் இருந்து சமிக்ஞைகளை பெற்றுக் கொள்ளும் தொழில்நுட்பத்தை ஆய்வகத்தில் விரிவாக ஆராய்ந்து என்னென்ன காரணிகள் எவ்வாறான சமிக்ஞைகள் கிடைக்கப்பெறுகின்றன

என்பது குறித்து நாம் தீவிரமாக கண்காணிக்கின்றோம். இந்த
தகவல்களின் அடிப்படையில் நில அதிர்வு ஏற்படுவதற்கு
முன்னதாகவே அவை தொடர்பில் கணிப்பு ஒன்றை மேற்
கொள்ள வழியமைக்கும் என நம்புகின்றோம்' என பேராசிரி
யர் மரோன் கூறுகின்றார்.

'ஆய்வுக்கூடத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்த செயல் முறை
யானது பூமியின் மீது முன்னெடுக்கப்பட்டு அதன் ஊடாக
பூமி அதிர்வினை முன்கூட்டியே கண்டறிந்து கொள்ள முடி
யும் சாத்தியங்கள் தற்பொழுது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு
வருகின்றது. எனினும் அந்த ஆய்வுகளை மேற்கொள்ளும்
அளவிற்கு நாம் இன்னும் அந்தக் கட்டத்தை அடைய
வில்லை என்றே கூறவேண்டும்' என்கிறார் மரோன்.

ஆபத்து ஏற்படக்கூடிய வலயங்களில் தகவல்களை திரட்டி
அவற்றை வியாகூலம் மிகுந்த சூழ்நிலையில் ஆய்வுக்கு
உட்படுத்துவது, செயற்கை நுண்ணறிவின் ஊடாக ஆய்வுக்கு
உட்படுத்துவது இன்னமும் சவால் மிக்க விடயமாகவே
காணப்படுகின்றது. நில அதிர்வு ஏற்படுவதற்கு முன்னைய
நாட்களில் பூமியின் அயனி மண்டலத்தில் இலத்திரன்கள்
துகள்களின் அளவு குறித்து சீன விஞ்ஞானிகள் ஆய்வு
செய்து வருகின்றனர்.

'நில அதிர்வுக்கு பின்னரான காலப்பகுதியில் இந்த கணிப்பு
பற்றிய எதிர்வு கூறல்கள் சிலரினால் முன்மொழியப்பட்டுள்
ளது. எனினும் இதுவரையில் பாரிய அளவிலான ஒரு வெற்றி
கிடைக்கப் பெறவில்லை' என மரோன் மேலும் கூறுகின்றார்.

கடந்த 20 ஆண்டுகளில் அயனோஸ்பியர் அல்லது வளிமண்
டலத்தின் மேல் தளத்தின் இலத்திரன்கள் உள்ளடக்கத்தில்
ஏற்பட்ட மாற்றங்களை ஆய்வுக்கு உட்படுத்துவதன் மூலம்
பெரிய அளவிலான பூகம்பங்களை 83 வீத துல்லிய தன்மை
யுடன் 48 மணித்தியாலங்களுக்கு முன்னதாகவே கணிக்க
இயந்திர கற்றல் முறையை பயன்படுத்த முடியும் என இஸ்
ரேலை தளமாகக் கொண்ட ஓர் ஆய்வாளர் குழு ஒன்று
குறிப்பிட்டுள்ளது.

அயனோஸ்பியர் தடயங்களின் ஊடாக பூமி அதிர்வினை
கண்டறிவது குறித்த எதிர்வு கூறல்கள் வெற்றி அளிக்கும்
என்பதில் சீன ஆய்வாளர்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்
ளனர். 2018-ம் ஆண்டில் பூமியில் அயனோஸ்பியரில் உள்ள
மின் இலத்திரன்கள் அளவை கண்காணிப்பதற்காக சீனா
China Seismo-Electromagnetic Satellite (CSES) என்ற
செயற்கை கோளை ஏவி இருந்தமை குறிப்பிடத்தக்கது.
கடந்த 2021-ம் ஆண்டு மே மாதம், 2022-ம் ஆண்டு ஜனவரி
மாதம் ஆகிய காலப்பகுதிகளில் சீன நிலப்பரப்பை தாக்கிய
பூகம்பங்களுக்கு முன்னதாக அதாவது 15 நாட்களுக்கு முன்
னதாகவே அயனோஸ்பியரின் அல்லது வளிமண்டலத்தின்
மேல் தளத்தில் இலத்திரன்கள் அடர்த்தியில் வீழ்ச்சி காணப்
பட்டதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

நில அதிர்வு ஏற்படக்கூடிய சரியான இடத்தை எம்மால்
குறிப்பிட முடியாது என ஆய்வாளர்கள் தங்களது ஆய்வு
பற்றிய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். பாரிய அளவி
லான பூகம்பங்கள் நேரும்போது தொலைதூரத்தில் இருக்கக்
கூடிய வளி மண்டலத்திலும் மாற்றங்களை தூண்டக்கூடும்.
எனவே இவ்வாறான ஒரு பின்னணியில் நில அதிர்வு எங்கு
ஏற்படப் போகின்றது என்பதை துல்லியமாக கணிப்பிடுவதில்
சவால்கள் நிலவி வருகின்றன.

அயனோஸ்பியரில் ஒழுங்கற்ற நிலைமையானது ஒரு பூகம்
பத்தின் மையப் பகுதியையும் மற்ற அரைக்கோளத்தின் காந்
தமாக இணைந்த புள்ளியையும் சுற்றி தோன்றும். இது வரவி
ருக்கும் அதிர்வின் இருப்பிடத்தை உறுதிப்படுத்த முடியாத
நிலைமையை எமக்கு உருவாக்கி விடுகின்றது. இந்த நிலை
யினால் எம்மால் சரியான கணிப்புகளை மேற்கொள்ள முடி
யாதுள்ளது. ஜப்பானிய ஆய்வாளர்கள் வெவ்வேறு சமிக்ஞை
களின் மூலம் நில அதிர்வினை கண்டறிய முடியும் என நம்
பிக்கை கொண்டுள்ளனர். ஜப்பானில் நில நடுக்கம் ஏற்படக்
கூடிய பகுதிக்கு மேலே காணப்படும் நீராவியில் ஏற்படக்கூ
டிய மாற்றங்களை பயன்படுத்தி கணிப்புக்களை செய்ய
முடியும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த கணிப்பு
கள் சுமார் 70 வீதம் வரையில் துல்லியமானது என குறிப்பிடு
கின்றனர்.

பூமியதிர்வு ஏற்பட்டதன் பின்னர் மீட்பு நடவடிக்கைகளை
மேற்கொள்வதற்கும், நிவாரணங்களை வழங்குவதற்கும்
செய்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களை பயன்படுத்திக்
கொள்ள முடியும் எனவும், செய்மதி தகவல்களின் அடிப்ப
டையில் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என
வும் சீன ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

'நில அதிர்வு குறித்த துல்லியமான முன்னெச்சரிக்கை விடுக்
கக் கூடிய பொறிமுறைமை ஒன்று உருவாக்கப்படும் வரை
யில், ஆபத்து ஏற்படக்கூடிய பகுதியொன்றின் மக்களை
பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுவது செலவு மிக்க
தாகவே காணப்படுகின்றது. ஏனெனில் இந்த முன்னெச்ச
ரிக்கை பிழைத்து போனால் இவ்வாறான செலவுகளை எதிர்
நோக்க நேரிடும். புயல் காற்று, கடுமையான மழை வெள்
ளம் போன்றன தொடர்பில் வானிலை ஆய்வு மையங்கள்
ஓரளவு துல்லியமான தகவல்களை வெளியிட்டு வருகின்றன.
இதனைப் போன்று பூகம்பம் தொடர்பில் ஒரு சரியான முன்
னெச்சரிக்கை விடுப்பதற்கு இன்னும் பல ஆண்டுகள் காத்தி
ருக்க நேரிடும்' என பேராசிரியர் மரோன் கூறுகின்றார்.

எனவே, நில அதிர்வு காரணமாக ஏற்படக்கூடிய சொத்து
சேதங்களை தவிர்க்க முடியாவிட்டாலும் உயிர்ச் சேதங்களை
தவிர்த்துக்கொள்ள வலுவானதும் துல்லியமானதுமான ஒரு
முன் எச்சரிக்கை பொறிமுறைமை இன்றியமையாததாகின்
றது. உலகின் விஞ்ஞான தொழில்நுட்பத்துறையில் எவ்வளவு
வளர்ச்சிப்படிகள் அனாயாசமாக எட்டப்பட்டிருந்தாலும் இயற்
கையின் கோரச் சீற்றத்திற்கு பரிபூரணமான தீர்வுகளை மனி
தரினால் தொட்டுவிட முடியாத நிலைமை இன்றும் நீடித்து
வருகின்றது என்பதனை உரக்க பறைசாற்றும் ஓர் எளிமை
யான உதாரணமாக துருக்கி - சிரிய பூகம்பப் பேரழிவினை
நினைவில் நிறுத்திக்கொள்ளவது
பொருத்தமாகும்.



jeyaseelan.s@thaiveedu.com




# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You




அந்த இளைஞனுக்கு 30 வயது. ஒரு கூலித் தொழிலாளி. ஓயாத உழைப்பாளி. திருமணமானவர். அன்றாடம் உழைக்கும் பணத்தில் சீட்டுப் பிடித்தும் வேறு வழிகளில் சேமித்தும் பல இலட்ச ரூபாய்களை வைத்திருந்தார்.

பெலாரஸ் றூட்டுக்குள்ளால் பிரான்ஸ்சுக்கு ஒருவர் அனுப்புகின்றாராம். இன்ன தொகை காசாம். முற்பணம் இவ்வளவு கட்டினால் சரியாம். மிச்சக் காசு போய் இறங்கியவுடன் கொடுத்தால் சரியாம்...

இவருக்குத் தெரிந்த ஒருவரை அந்த ஏஜென்சி அண்மையில் அனுப்பி, அவர் ஒழுங்காகக் கரை சேர்ந்துள்ளார்.

அதனால் இவரும் மேற்கு ஐரோப்பா போனால் நிறையக் காசு உழைத்துப் பணக்காரனாகும் ஆசையில் கையிருப்புக் காசு, நகை நட்டு, அடகு வைத்த காசு எனப் பல இலட்ச ரூபாக்களை கட்டினார்.

கொழும்பில் விமானமேறி பெலாரஸ் நாட்டில் இறங்கினார்கள். அங்கிருந்து தரைவழியாக வேறொரு நாட்டிற்குச் செல்லலாமென டிசெம்பர் மாத உறைபனியில் சிலர் நடந்தார்கள். உறைபனிச் சகதியில் அகப்பட்ட இந்த இளைஞனை மீட்டு வந்தார்கள். கால்கள் உணர்வற்று மரத்துக் கறுப்பாகிப் போனதால் மருத்துவமனையில் கால்களை எடுத்துவிட்டார்கள். கை விரல்களும் கறுப்பாகி வர அதனையும் எடுத்தார்கள்.

இப்போது இடைநடுவில் நிர்க்கதியான நிலையில் அந்த இளைஞன். அவன் போல இன்னும் பல இளைஞர்களும் உள்ளனர்.

2009-ம் ஆண்டுக்கு முன்னர் போரைச் சாட்டிப் புலம் பெயர்ந்தார்கள். அரசியல் தஞ்சம் கேட்டார்கள். பல இலட்சம் பேருக்குக் கிடைத்தது.

ருமேனியா ஊடாக பிரான்ஸ்சுக்கு அனுப்பும் முகவர் ஒருவரைக் கேட்டேன். 80 இலட்சம் ரூபாய் தந்தால் தான் அனுப்புவேன் என்றார்.

அங்கு போய் அவர்கள் வதிவிட உரிமையை எவ்வாறு பெறுவார்கள். எவ்வாறு உழைப்பது எனக் கேட்டேன்.

கொண்டு போய் விடுவது மட்டுமே தனது வேலை. பதிவது, காட் எடுப்பது அவர்களது பிரச்சினை என்றார்.

லட்வியா, லித்துவேனியா, ஹங்கேரி நாடுகள் செங்கன் விசா வலயத்தினுள் வந்து விட்டதால் அங்கே அனுப்பிப் புலம் பெயர்வுகள் குறிப்பிட்ட காலத்தில் தாராளமாக நடந்தன. நாளடைவில் அந்த வழிகள் அடைபட்ட பின்பாகப் பெலாரஸ், ருமேனியா போன்ற நாடுகள் ஊடாகத் தற்போது புலம் பெயர்வுகள் தொடர்கின்றன.

வெளிநாடு போனால் தான் வசதியாக இங்குள்ள குடும்பங்கள் வாழலாமென நினைப்போர் அதிகம்.

காரணம் புலம் பெயர் தேசங்களிலிருந்து விடுமுறையில் வரும் பலர் நடத்தும் டாம்பீகக் கொண்டாட்டங்களும் அவர்களது உறவுகளின் உயர்தரமான வாழ்க்கையும் ஒரு காரணமாகும்.

வெளிநாடுகளிலிருந்து வருவோர் அங்கு கடனஉடனப் பட்டோ அல்லது சொந்தக் காசைக் கொண்டோ இங்கு பல இலட்சங்களை வீசி எறிந்து ஆடம்பரக் கொண்டாட்டங்களை நடத்துகின்றனர்.

யானை மீது ஏறி மணமகள் போதல், மங்கைப்பருவம் அடைந்த பெண் பிள்ளையை யானை மீது ஏற்றி அழைத்துப் போதல், பல்லாக்கு மீது ஏற்றிச் செல்லல், ஹெலிகொப்ரரில் சென்று இறங்கிப் பிறந்தநாள் கொண்டாடுதல், வளைகாப்பு நடத்துதல், கீ பேத் டே கொண்டாடுதல், திருமண வெள்ளிவிழா, பொன்விழா, மணிவிழா, திருமணத்திற்கு முதல் நாள் மணமகளுக்கு மருதாணி போடும் மெஹெந்திச் சடங்கு, மங்கல நிகழ்வு ஒன்றில் ஒரே மாதிரி ஆடைகளை பலருக்கு எடுத்துக் கொடுத்து ஜொலிப்பாக நிற்றல், மரண வீட்டிற்கு டாம்பீகமாகச் செலவழித்துப் பணச் செருக்குக்

காட்டுதல்... இப்படியே ஏராளம் நிகழ்வுகள் இங்கு நடந்தே றுகின்றன.

அதனை விட காணி கட்டடங்களின் விலைகள், சீதனத் தொகைகள் வானை முட்டுமளவுக்கு ஏறிவிட்டது.

கோயில்கள் கோடான கோடி செலவில் கட்டடங்களைக் காணுகின்றன.

இவற்றின் விளைவு இங்குள்ள இளையோரை அவர்களது பெற்றோரைப் பாதிக்கின்றது.

தங்களது பிள்ளைகளும் வெளிநாடு போனால் இது போல மிகவும் ஆடம்பரமாகச் செலவழித்து தாமும் வாழலாமென்ற சிந்தனை வயப்படுகின்றனர்.

வெளிநாட்டிலிருந்து வரும் சிலர் இன்னுமொரு வகைப் பம்மாத்தை விடுகின்றனர். இருபது வயதைக் கடந்த இளம் பையன்களாகப் பார்த்து உன்னை நான் அங்கு எடுக்கப் போறன். அங்க போனப் பிறகு விசா அனுப்புகிறேன் என்பார்கள்.

அதனை நம்பி இங்குள்ள இளையோர்கள் வெளிநாட்டிலிருந்து வந்த உறவினர் நிற்கும் நாள்களில் காலை மாலை இரவு ஏமம் சாமம் எல்லாம் கேட்கும் வேலைகள் எல்லாம் செய்து கொடுப்பார்கள்.

செலவில்லாத கூலி ஒருவர் கிடைத்திடுவார்.

பின்பு வெளிநாடு போன பின்பாக ஸ்பொன்சர் செய்து எடுக்க முயற்சி செய்தேன். சரிவரவில்லை. இப்போது உக்ரெய்ன் அகதிகளுக்கு முன்னுரிமை கொடுக்கச் சொல்லி அந்த நாட்டு அரசாங்கம் சொல்கிறது எனக் கதையளப்பார்கள்.

ஆனால் அந்த இளைஞன் வெளிநாட்டுக் கனவில் இங்கு படிப்பைக் கைவிட்டிருப்பார்.

கடைசியில் படிப்பும் இல்லை. வெளிநாட்டுப் பயணமும் இல்லை. வெளிநாட்டுக் கனவை வைத்து எவ்விதம் இளையோரை இலவச வேலைக்காரராக வைத்துள்ளனர் என்பதற்கு இது சிறந்த உதாரணம்.

முதியவர் இறந்தால் ஒரு மனிதர் இறக்கின்றார். இளைஞர் இறந்தால் ஒரு தலைமுறை இறக்கும் என்பார்கள்.

அது போல ஒரு இளைஞர் புலம் பெயர்ந்தால் ஒரு தலைமுறை புலம் பெயரும்.

இளைய சனத்தொகையின் புலம்பெயர்வும், போர்க்காலத்தில் பெருமளவு இடம் பெற்ற புலம்பெயர்வும் பலவித விளைவுகளை ஏற்படுத்தி உள்ளன.

முதலாவதாகப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தமிழ்ப் பிரதேசங்களில் குறைவடைந்து உள்ளது.

உதாரணமாகச் சொல்வதானால் யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னர் 10 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள்.

தற்போது இவ் எண்ணிக்கை 07 ஆகக் குறைவடைந்துள்ளது. இதனால் அரசியல் பலமும் அபிவிருத்திக்கான நிதிப் பங்களிப்புக் குறைவும் நடந்துள்ளது.

அது போல உயர்தரப் பரீட்சையின் மூலமான பல்கலைக்கழக அனுமதி எண்ணிக்கையும் மாணவர் தொகை குறையும் போது குறைவடைகின்றது.

ஆபத்தான வழிகள் ஊடாகப் பெருமளவு பணத்தைக் கொட்டிப் புலம் பெயர்ந்து வாழ்வைத் தொலைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

வெளிநாடுகளிலிருந்து தாயகம் வந்து போகும் தமது டாம்பீகச் செலவுகளால் இங்குள்ளோரை ஏங்க வைத்து புலம் பெயர்வுக்குத் துணை போகாதீர்கள்.

வளங்கள் நிறைந்த நாட்டைக் கட்டியெழுப்பி வளமாக வாழ்வதற்குரிய வழியைக் கடைப்பிடித்தல் வேண்டும். இதுவே தற்கால உண்மை.



thabendran.v@thaiveedu.com

STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2023)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272

# கம்போடியாவில் சில நாட்கள்

- சி. நற்குணலிங்கம் -



கம்போடிய முடியரசு முற்காலத்தில் கம்பூச்சியா என அறி யப்பட்ட ஒரு தென்கிழக்காசிய நாடு. பழைய தமிழ் இலக்கி யங்களில் கம்புஜம் அல்லது காம்புசம் என்று அழைக்கப்ப டும் இந்நாடு காலத்துக்குக் காலம் பல பெயர்களைத் தாங்கி நின்றது. 1970-ல் கிமர் எனவும், 1975 முதல் 1979 வரை கம்பூச்சியா எனவும், வியட்நாமிய படையெடுப்புமூலம் முடிவுக்கு வந்த பொல்பொட் ஆட்சிக்குப்பின் பெற்ற பெயர் தான் கம்போடியா (Cambodia). இப்பெயர் இன்றுவரை நிலைத்து நிற்கிறது. இந்நாட்டுக் குடிமக்களை கம்போடியர் எனவும், கிமர் எனவும் அழைக்கின்றனர். கிமர் எனும் குறி யீடு கிமர் இன கம்போடியர்களை மட்டுமே அழைக்கப் பயன்படுத்தப்படுகிறது. கம்போடியாவின் தலைநகராக நோம் பென் (Phnom Penh) விளங்குகிறது. இதுவே மிகப்பெரிய நக ரமும் ஆகும். இந்நாட்டு நாணயம் கம்போடியன்றியால் (KHR) என அழைக்கப்படுகிறது. ஆட்சி மொழி கிமர் (Khmer) மொழியாகும். அரசியல் சாசனத்துக்கு உட்பட்ட முடியாட்சி நிலவுகிறது. தேசிய மதம் தேரவாத பௌத்தம்.

கம்போடியாவின் எல்லைகளாக மேற்கிலும், வடமேற்கிலும் தாய்லாந்து, வடகிழக்கில் லாவோஸ், கிழக்கு, தென்கிழக் கில் வியட்நாம், தெற்கில் தாய்லாந்துவளைகுடாவும் அமைந் துள்ளது. கம்போடியா 443 கி.மீ. கடற்கரையை தாய்லாந்து வளைகுடாவரை கொண்டுள்ளது. இதன் பரப்பளவு 1,81,035 ச.கி.மீ. ஆகும். மக்கள் அடர்த்தி 81.8 ச.கி.மீ., சராசரி வெப் பநிலை 32 பாகை செல்சியஸ். 15 மில்லியன் மக்கள் வாழ்கி றார்கள். 25%-ஆன மக்கள் வறுமையான நிலையில் உள்ள னர். கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை குறைவு. புகை பிடிப்பவர்கள் அதிகம். பல சுதந்திரங்களை சந்தித்த இந் நாடு இறுதியாக பிரான்ஸ் நாட்டிலிருந்து 1953 நவம்பர் 09-ல் சுதந்திரம் பெற்றது. அமெரிக்க டொலர் கூடுதலாக பயன்படுத்தப்படுகிறது. பிரெஞ் மொழி இரண்டாவது மொழி யாகும். தனியாள் வருமானம் குறைவு. ஐ.நா. அமைப்பின் உறுப்பினராகவும், உலகவங்கி, பன்நாட்டுநிதியம் ஆகியவற் றின் உறுப்பினராகவும் உள்ளது. இயற்கை வளம் நிறைந்த இந்நாடு தென்மேல் பருவக்காற்று மூலம் மே முதல் செப் ரெம்பர் வரை மழை கிடைக்கிறது. வடகீழ் பருவக்காற்று மூலம் நவம்பர் முதல் மார்ச் வரை மிகக் குறைந்த மழை கிடைக்கிறது.

அரிசி உற்பத்தி மூலமும், மீன்பிடி மூலமும், சுற்றுலாத்துறை மூலமும் அதிக வருமானத்தைப் பெறுகின்றது. அமெரிக்கா, சீனா, யப்பான், வியட்நாம், கொரியா நாட்டு சுற்றுலாப்பய ணிகள் அதிகம் வருகை தருகிறார்கள். வருடமொன்றுக்கு ஒரு மில்லியன் பயணிகள் வருவதாக சுற்றுலாத்துறை தெரி விக்கின்றது.

நோம்பென் கம்போடியாவின் பொருளாதாரம் மற்றும் பண் பாட்டு மையம் ஆகும். சியாம்ரிப் (Siem Reap) என்ற இட மும் முக்கிய இடமாகும். கம்போடியாவின் தேசியக்கொடி யில் மேலும், கீழும் சிறிய அளவில் நீலநிறமும், நடுப்பகு தியில் பெரிய அளவில் சிவப்பு நிறமும் உள்ளது. அச்சிவப் புப் பகுதியில் தமிழர்கள் கட்டிய சிவன்கோயிலின் (அங்கோ வாட்) விம்பத்தை தேசிய சின்னமாகப் 1850-ம் ஆண்டு பொறித்துள்ள ஒரேயொரு நாடு என்ற சிறப்பு கம்போடியா வுக்கு உண்டு.

சியாம்ரீப் மாகாணத்தில் பெயொன் ஆலயம் (BAYON TEMPLE) உள்ளது. இவ் ஆலயத்துக்கு யாவாப் பாறை யைப் பயன்படுத்தி அடித்தளம் இடப்பட்டது. இந்து, பௌத் தம் கலந்த கோயில். பாம்பு, யானை, சிங்கம்கொண்ட உரு வங்கள் உள்ளன. ராபுரோம் ஆலயம் (TA PROHM TEMPLE) 1186-ல் கட்டப்பட்டது. இக் கோயில் திருத்த வேலைக்கு இந்திய அரசு உதவி செய்தது. ரவன் ஆலயம் (KRAVAN TEMPLE) ஒரு விஸ்னு ஆலயம். இது 961-ம் ஆண்டு கட்டப்பட்ட பழமையானது. கம்போடியாவில் இந்துக் களே இல்லை. ஆனால் விஸ்னுவுக்கு முக்கியத்துவம் கொடுத்து மாலையிட்டு வணங்குவர். சியாம்ரீப்பைச் சுற்றி நூற்றுக்கணக்கான கோயில்கள் இருப்பதால் அக்கால மன் னர்கள் பல போர்களில் வெற்றி பெற்றதால் அவ் வெற்றி யைக் கொண்டாட கோயில்களை அமைத்தார்கள் என சொல்லப்படுகிறது. பிறே டாக் (PREAH DAK VILLAGE) கிராமத்தில் பனை சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யப்ப டுகின்றன. பனஞ்சீனி (PALM SUGAR) குறைந்த விலையில் கொள்வனவு செய்யலாம்.

சியாம்றிப் மாகாணத்தில் 1500 மீற்றர் உயரமான கபால்ஸ் பீன் (KBAL SPEAN) மலையில், இம்மலையில் உற்பத்தியா கிவரும் நதியின் கீழ்ப்பகுதியிலுள்ள கருங்கல் படுக்கையில் ஆயிரம் சிவலிங்கங்கள் உள்ளன. அருகிலுள்ள கற்பாறைக-

ளில் சிவன், உமாவின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. பார்ப்பதற்கு அழகும், அதிசயமும். ஆனால் அவ்வளவு தூரம் ஏறுவதென்பது சிறிது கடினம்தான். ஏறுவதற்கான பாதை சுலபமானதல்ல. இருப்பினும் எல்லோரும் ஏறுகிறார் கள் எம்மால் முடியாதா? என நினைத்து நானும் ஏறினேன்.

நகரில் 150 மீற்றர் நீளமான பிரதான ஆறு ஒன்றை மையப் படுத்தி அதனை முழுமையாகப் பயன்படுத்தி கம்பொங் பிளக் கிராமம் என்ற ஒரு மிதக்கும் கிராமம் (FLOTING VILLAGE AT KAMPONG PLUK VILLAGE) உருவாக்கப்பட் டுள்ளது. இவ் ஆறு கொம்பொங்லுக் என கம்போடிய மொழி யில் அழைக்கப்படும். இங்கு 3500 குடும்பங்கள் சொந்த வீட்டுடன் வாழ்கிறார்கள். வசதியான ஒரு படகில் சென்று பார்வையிடலாம். ஆற்றுக்குள் இரு மருங்கும் வீடுகள், பாட சாலைகள், வேலைத்தளங்கள் என பல கட்டடங்கள் உள் ளன. வீட்டுக்கு ஒரு துவிச்சக்கரவண்டி அல்லது ஒரு கார் வைத்திருப்பது போன்று வீட்டுக்கு ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டதாகவோ படகுகள் இருக்கும். அதை தாமே தம் தேவைக்கு ஓட்டிக்கொண்டு போவார்கள். அழகான ஒரு காட் சியாக இருந்தது. இதனைவிட குறைந்த விலையில் பொருட் களைக் கொள்வனவு செய்ய பழைய சந்தை (OLD MARKET) ஒன்று நகரில் உள்ளது. சுற்றுலாப் பயணிகள் பொருட்களை சுதந்திரமாக வாங்கிக் கொள்ள முடியும்.

இங்கு அங்கோர் பூமி தெளிந்த நீரோடையின் அழகைப் பெற்றுள்ளது. மிகப்பரந்த நிலத்தில் கோயில்களை மட்டுமே கொண்டுள்ள நகரம் அங்கோர். அங்கோர் (ANGKOR) என் பது கம்போடியாவிலுள்ள சிவன்கோயில் தொகுதிக்கு உரிய இடம். வாட் (WAT) என்பது கோயில் என்பதைக் குறிக்கும் கெமர் மொழிச்சொல். சோழ அரசின் கீழிருந்த 2-ம் சூரியவர் மன் 27 ஆண்டுகள் இவ்விடத்தை தலைநகராகக்கொண்டு ஆண்டபோது இவனால் கட்டப்பட்டது. பின் 6-ம் ஜெயவர்ம னுக்கு கைமாறியது. இவ்வரலாற்றைக்கொண்ட நாட்டில் நம் கலைத்திறமையை உலகுக்கு காட்டிய அங்கோவாட் (ANGKOR WAT) கோயில் யசோதபுரத்தில் விஸ்னு கடவுளுக்காக 12-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. காட்டின் நடுவில் இருந்த அங்கோவாட்கோயில் பிரெஞ் காலனித்துவ ஆட்சியின் போது பிரெஞ் நாட்டின் ஆய்வாளரால் கண்டுபிடிக்கப்பட் டது. உலகின் மிகப்பெரிய சிவன்கோயில் (GRAND HINDU TEMPLE) 500 ஏக்கரில் அமைந்துள்ளது. 3000 கோடி தொன் கருங்கற்களால் 10 இலட்சம் பணியாளர்களைக்கொண்டு 40 ஆண்டுகளாகக் கட்டப்பட்ட கோயில். ஒரு அகழியும், 3 மண் டபங்களும் மத்தியிலுள்ள 5 கோயில்களை சூழவுள்ளன. கோயிலை சுற்றிய சுவர் மட்டும் 3.6 கி.மீ. ஆகும். தமிழரின் கட்டடக்கலைக்கு இக்கோயில் ஓர் ஆதாரம். மண்டபங்களின் கூரைகள் பாம்புகளின் உடல்களையும், சிங்கம், கருடனின் தலையையும்கொண்ட உருவங்களால் அலங்கரிக்கப்பட்டுள் ளது. இக்கோயிலை ஒரு கலைப்பொக்கிசம் என்றே கூற லாம். இக் கோயில் கொஞ்சம் கொஞ்சமாக புத்தமத வழி பாட்டுத் தலமாக மாறி, 14-ம் நூற்றாண்டில் பௌத்தகோயி லாக முழுமை பெற்றது. எல்லோரும் பார்க்க வேண்டிய அதி சயமான கோயில். இக்கோயிலை யுனெஸ்கோ பாரம்பரிய சின்னமாக 1992-ல் அறிவித்தது.

சியாம்றீப் என்ற நகரைப் பார்வையிட்ட பின்னர் 355 கி.மீ. தூரத்தை ஐந்து மணித்தியாலத்தில் சொகுசு வாகனத்தின் மூலம் சென்று நொம்பென் நகரத்தை அடையலாம். இங்கு



2.5 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். இங்கு பார்க்கக்கூடிய சுற்றுலாத்தளங்கள் அதிகம் உண்டு. வற்நொம் மலை (WAT PHNOM HILL), றோயல்பலஸ் (ROYAL PALACE). இது மிகவும் அழகான கட்டடங்களையும், பூந்தோட்டங்களையும் கொண்டுள்ளன. இதன் முதல் கட்டடம் 1422-ம் ஆண்டிலும், மற்றையது 1866-ம் ஆண்டிலும் கட்டப்பட்டது. சில்வர் பகோடா (SILVER PAGODA) கட்டடம் பூமரங்கள் சூழ மிக உயரமாக எழுந்துள்ளது. பிரான்ஸ் நாட்டின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்து தபாற்கந்தோர் கட்டடம் உள்ளது. இங்கு தபாற்கந்தோருக்கான சேவையுடன் பலவிதமான பொருட்கள் விற்பனை செய்யப்படும் கடைத்தொகுதிகளும் உள்ளன. அரும்பொருள் காட்சியகமும் உள்ளது. ரஷ்யன் சந்தை (RUSSIAN MARKET), சுதந்திர கால சிகானுக் அரசன் சிலை (INDEPENDENCE MONUMENTAND KING SIHANOUK STATUE), நாகா வேல்ட் (NAGA WORLD CASINO) -இது நொம்பென் நகரிலேயே மிகவும் பெரியதாகும். இவற் றைவிட மீக்கொங்நதியில் படகுச்சவாரி (BOAT CRUISE). மீக்கொங்நதி (MEKONG RIVER) உலகில் 11வது நீளமான நதி. ஆசியாவில் ஏழாவது நீளமான நதியாகும். மொத்தத் தில் 4,350 கி.மீ. நீளமான நதி. இந்நதி கம்போடியா வழியா கப் பாய்கிறது. திபெத்தில் ஆரம்பித்து தென்சீனக் கடலில் கலக்கிறது. திபெத்தில் தொடங்கி சீனாவின் யுனான் மாகா ணம், மியான்மார், லாவோஸ், தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம் ஆகிய பிரதேசங்கள் வழியாகப் பாய்கிறது. பட குச் சவாரியின்போது சூரியன் மறையும் காட்சி மிகவும் அழ காக இருந்தது.

எதுவாயினும் நாம் மறையும் முன் இந்நாட்டுக்கு சுற்றுலா செல்வது விரும்பத்தக்கது.



natkunalingam@thaiveedu.com


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com




1973-ல் நான் பள்ளி முடித்த மாணவனாக நாகர்கோவிலுக்கு விடுமுறையில் சென்றபோது முத்து தியேட்டரில் இரண்டு சுவரொட்டிகளைப் பார்த்தேன். வழக்கமான பளபளக்கும் பாணியில் இல்லாமல் மிகவும் மாறுபட்ட எளிமையான முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தன. இரண்டுமே நடிகர் மது நடித்த படங்கள். அன்று கடைசி நாளாக ஓடிக்கொண்டிருந்த ஏ. வின்செண்ட் இயக்கிய 'செண்ட' படத்தைப் பார்த்து மனதைப் பறி கொடுத்தேன். மீண்டும் அடுத்த நாள் அந்த



இன்னொரு திரைப்படத்தைப் பார்க்க அதே தியேட்டருக்குச் சென்றேன். இது முற்றிலும் புதிய பாணியில் எனக்கு இருந்தது. இப்படியும் படங்கள் எடுக்க முடியுமா என்ற அந்த இனிய அதிர்ச்சியைத் தந்த திரைப்படம் 'சுயம்வரம்'. அடூர் கோபாலகிருஷ்ணன் என்ற புதியவர் இயக்கியது. கருப்பு வெள்ளையில் மன்கட ரவிவர்மா ஒளிப்பதிவில் எம்.பி. ஸ்ரீனிவாசன் இசையில் ஒரு வித்தியாசமான அனுபவமாக இருந்தது. நான் பின்தொடரும் அற்புத இயக்குனர்களில் ஒருவரானார் அடூர்!

கேரளக் கலைஞர்களும், கவிஞர்களும், எழுத்தாளர்களும் கட்டாயம் தங்கள் ஊர்ப்பெயரையும், சிலர் நீங்கலாகப் பலர் தங்கள் சாதிப்பெயரையும் பெயருடன் இணைத்திருப்பார்கள். ஜனரஞ்சகத் திரைப்பட உலகில் அடூர் என்று பெயரை ஆரம்பித்தவர்கள் அடூர் பங்கஜம், அடூர் பவானி, அடூர் பாசி என்று இருந்தாலும் உலக அரங்கில் தன் ஊர்ப் பெயரை எடுத்துச்சென்றவர் அடூர் கோபாலகிருஷ்ணன்! கேரள மாநிலம் அடூர் அருகில் உள்ள ஒரு கிராமத்தில் பிறந்தாலும் அவர் பட்டப்படிப்புப் பயின்றது தமிழகம் திண்டுக்கல் காந்தி கிராமத்தில். ஒரு வருடம் அங்கேயே அரசு உத்தியோகம் பார்த்துவிட்டு தன் லட்சியமான திரைப்படப் படிப்பைப் பயில பூனே சென்றார். படிப்பை முடித்தவுடன், சித்ரலேகா பிலிம் சொசைட்டியைத் தன் நண்பர்களுடன் சேர்ந்து துவக்கினார். நல்ல திரைப்படங்களைச் சாதாரண மக்களுக்குக் கொண்டு செல்வதும் தரமான திரைப்படங்களைத் தயாரிப்பதும் இந்தக் கூட்டுறவு முயற்சியின் நோக்கம். பல ஆவணப்படங்களை இயக்கிவிட்டு ஒரு முழு முதல் திரைப்படமாகச் சுயம்வரத்தை இயக்கினார்! பெற்றோர்களை எதிர்த்துக் காதல் திருமணம் செய்த இளம் தம்பதிகள், நகரத்துக்குக் குடிபெயர்ந்து அல்லலுறும் நிலைக்குத் தள்ளப்பட்டு வாழ்வதைப் பதிவு செய்த திரைப்படம். நட்சத்திர நடிகர்களான மதுவையும் சாரதாவையும் ஒரு யதார்த்த கலைப்படத்தில் நடிக்க வைத்த பெருமை அடூருக்குரியது. பின்னர் பெரும் புகழ் பெற்ற கோபி இந்தப் படத்தில் ஒரு சிறிய வேடத்தில் வருவார்.

அடுத்த திரைப்படம் 'கொடியேற்றம்'. கள்ளம் கபடமற்ற அப்பாவி ஒருவர், சமூகத்தின் போக்குக்கு ஏற்ப தன்னை வளர்த்துக் கொள்வதை அற்புதமாகச் சித்தரிப்பார் அடூர். சித்தன் போக்கு சிவன் போக்கு என்று அலையும் சங்கரன்குட்டியின் வாழ்க்கையில் பலர் வருகிறார்கள், போகிறார்கள்! அவன் மீது சேற்றை வாரி இறைத்துக்கொண்டு செல்லும் வண்டியின் மீது கூட அவனுக்குக் கோபம் வராது. மாறாக அதன் வேகத்தைச் சிலாகிப்பவன். சிறு பையன்களோடு விளையாடுபவன். ஒரு லாரி டிரைவருடன் க்ளீனராகப் பயணிப்பவன். கோபியின் இரண்டாவது திரைப்படம் இது. ஏராளமான விருதுகளைத் தட்டிய திரைப்படம். கோபிக்குச் சிறந்த நடிகருக்கான பாரத் விருது வழங்கப்பட்டது. பின்னர் அவர் பாரத் கோபி என்றே அழைக்கப்படலானார்!

அடூர் இயக்கிய மூன்றாவது திரைப்படம் 'எலிப்பத்தாயம்'. கேரள நிலப்பிரபுத்துவ வாழ்க்கையின் கடைசிக் கண்ணியில் இருக்கும் ஒரு குடும்பத்தை மையமாக வைத்து இயக்கப்பட்ட படம். மாறி வரும் சுற்றுப்புற நிலைகளைக் கருத்திற்

கொள்ளாமலும் எந்தவித முயற்சியும் இல்லாமலும் தன் எலிப்பொறியில் வாழும் ஒரு மனிதனும் அவனைச் சார்ந்தவர் களும் கதாபாத்திரங்கள். அவனுக்கும் அவனது இரண்டு சகோதரிகளுக்கும் திருமணம் இல்லை. அதற்கான எந்த முயற்சியும் இல்லை. வீட்டில் படிந்து கிடக்கும் இருளைப் போலவே அவர்கள் வாழ்விலும் மாற்றங்களும் சில எழுச்சிக ளும் அவனை அறியாமல் அங்கு நிகழ முயல்கின்றன. வண்ணத்தில் எடுக்கப்பட்ட எலிப்பத்தாயம், வண்ணக்குறியீ டுகளை, உடைகளின் நிறம், சிதிலமடைந்து கொண்டிருக்கும்



தரவாட்டின் (குடும்ப வீடு) ஒளியமைப்புப் போன்ற அம்சங்க ளின் மூலம் தெரியப்படுத்தியது. வருங்கால வைப்பு நிதித்து றையில் உயர்பதவியில் இருந்த கரமன ஜனார்த்தனன் நாயர் இந்தப் பாத்திரத்தில் அற்புதமாக நடித்திருந்தார். படத்தின் மெதுவான போக்கு சாதாரண பார்வையாளர்களை மகிழ்விக் காவிட்டாலும், தீவிர ரசிகர்களை ஈர்த்திருந்தது.

அடுத்த திரைப்படம் ‘முகாமுகம்’. இந்திய அரசியல் சூழ லில் கம்யூனிஸ்ட் கட்சியின் பங்கு ஒரு காலத்தில் முக்கிய மானதாக இருந்தது. இரண்டு மாநிலங்களில் பலம் வாய்ந்து இருந்தனர். ஐம்பதுகளில் கேரளத்தில் வீரியத்துடன் செய லாக்கம் செய்து வந்தனர். அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த ஒரு சக்தி வாய்ந்த தொழிற்சங்கத் தலைவராக இதன் நாய கன் சித்தரிக்கப்படுகிறார். ஒரு ஓட்டுத் தொழிற்சாலை அதி பர் கொலையுண்ட வழக்கில் இவர் பெயரும் சேர்க்கப்பட்ட தால் தலைமறைவாகிறார். அவர் என்ன ஆனார் என்று தெரி யாத நிலையில், சக தோழர்கள் அவர் இறந்து போனதாகக் கருதி அவருக்கு ஒரு நினைவுச்சின்னம்கூட அமைத்துவிடுகி றார்கள். ஒரு பத்து வருடங்களுக்கு பின் தோழர் ஸ்ரீதரன் திரும்பி வருகிறார். பல மாற்றங்கள் இந்தக் காலகட்டத்தில் நிகழ்ந்திருக்கின்றன. கம்யூனிஸ்ட் ஆட்சி கேரளத்தில் தேர் தல் ஜனநாயகத்தின் மூலம் அமைந்து, பின்னர் கலைக்கவும் பட்டிருக்கிறது. கட்சியே வலது இடது என்று பிரிந்து போய் விட்டது. திரும்பி வந்த தோழர், முற்றிலும் மாறுபட்ட மனித ராகத் திகழ்கிறார். தூக்கமும் குடியுமே அவரது முழு நேரப் பணியாக இருக்கிறது. அவரது இந்தப் புதிய மாற் றம், தோழர்களுக்குப் பெரும் சங்கடத்தைத் தோற்றுவிக்கி றது. ஒரு நாள் தோழர் கொல்லப்பட்டுக் கிடக்கிறார். இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் இப்போது அவரைக் கொண்டாடுகின்றன.

இந்தத் திரைப்படம் இந்திய அரசியல் சூழலையும் கம்யூ னிஸ்ட் கட்சியின் நிலையையும் மிக நுணுக்கமாக விமர்சித் ததை, பல விமர்சகர்கள் கண்டு பிடித்தனர். அடூரின் மேத மையைப் பறை சாற்றிய திரைப்படங்களில் இது முக்கியமா னது!

அடூரின் அடுத்து வந்த மூன்று திரைப்படங்களுக்கும் ஒரு பொதுக்கண்ணி இருந்தது. அது பிரபல ஜனரஞ்சக நடிகர் மம்முட்டி. அனந்தரம், மதிலுகள், விதேயன் என்று மூன்று அற்புதமான திரைப்படங்கள்! அனந்தரம், அஜயன் என்ற நாயகனின் வாழ்க்கையை ஒரு நேர்கோடற்ற முறையில் அவ னது குரலிலேயே சொல்லியது. இதன் கதை சொல்லல் ஒரு புதிய நவீன பாணியைக் கொண்டிருந்தது. இரண்டு கதைக ளாக நாயகன் தன் கதையைச் சொல்கிறான். பணியாட்க ளால் வளர்க்கப்பட்ட ஒரு குழந்தை மேதை, தன் வளர்ப்பு அண்ணனின் மனைவி மீது நாட்டம் கொள்கிறான். ஒரு கவி தையைப் போல சொல்லப்பட்ட கதை. அஜயனின் வளர்ப்பு அண்ணனாக மம்முட்டியும், அண்ணியாக ஷோபனாவும் நடித்திருந்தனர்.

வைக்கம் முகம்மது பஷீர் எழுதிய குறுநாவல் ‘மதிலுகள்’. கதையின் நாயகனும் அவரேதான். சுதந்திரப்போராட்டக் காலத்தில் தேசத்துரோக வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்படுகிறார் பஷீர். அவருடைய நகைச்சுவை யும் பழகும் விதமும் அங்குள்ள அனைவரையும் கவர்கிறது. ஒருநாள் அரசியல் கைதிகள் எல்லோரும் விடுவிக்கப்படுகி றார்கள். பாவம், பஷீரின் பெயர் அந்தப் பட்டியலில் இல்லை! சோர்ந்து போகும் அவரை உற்சாகப்படுத்த ஒரு சிறு தோட்டத்தை அவரிடம் ஒப்படைக்கிறார்கள். தோட்டம் இருப்பது ஒரு பெரிய மதிலுக்கு அருகில். அந்த பக்கம் பெண்களின் சிறை உள்ளது. அங்கிருந்த ஒரு பெண் கைதி யும் பஷீரும் குரல்களினாலே நண்பர்கள் ஆகிவிடுகின்றனர். அவர்களிடையே சுவையான உரையாடல்கள் நிகழ்கின்றன. அவள் முகத்தை பார்ப்பதற்காகவே ஒரு திட்டம் தீட்டுகிறார். சிறை மருத்துவமனையில் சந்திப்பதாக ஏற்பாடு. ஆனால் அவரது விடுதலைக்கான உத்தரவு வந்துவிடுகிறது. சந்திப்பு நிகழ வாய்ப்பு இல்லை. இப்போது வெளியே செல்லும் போது மகிழ்ச்சிக்கு பதில் ஏமாற்றமே அவருக்கு மிஞ்சியிருக் கிறது.

மம்முட்டி பஷீராக மாறிவிடுகிறார். குரல் மட்டுமே ஒலிக்கும் அந்த பெண்ணுக்கு கேபிஏசி லலிதாவின் குரல் அவ்வளவு அருமையாக இருக்கும்! இந்தத் திரைப்படத்தில் அடூர் மிக எளிமையாகக் கதை சொல்கிறார்!

பால் சக்கரியா எழுதிய குறுநாவல் ‘பாஸ்கர பட்டேலரும் எண்டே ஜீவிதமும்’. இதைத் தழுவி எடுக்கப்பட்ட திரைப்ப டம் ‘விதேயன்’. கேரளத்தின் வடக்கு எல்லையில் தென் கர் நாடகாவைக் களமாகக் கொண்டது. ஒரு கொடுங்கோல் எஜ மானன் பாஸ்கர பட்டேலரும் அவனது அடிமை தொம்மியும் முக்கிய பாத்திரங்கள். முதலாளி எது சொன்னாலும் கேட்கக் கூடிய அடிமை தெம்மி. தன் மனைவியை முதலாளி பலவந் தமாக அனுபவிக்கும்போதுகூட சலனமில்லாமல் இருக்கி றான். அன்பான எஜமானியம்மாவைக் கொல்லும்போதும் கூட இப்படியேதான். ஒரு குற்றம் சார்ந்த பிரச்சினையில் எஜ மானன் காட்டுக்குள் தப்பி ஓடும்போது தொம்மி அவனுக்கு

வழிகாட்டியாகப் பயணிக்கிறான். இந்தப் பயணம், இருவருக்கும் பல அனுபவங்களைத் தருகிறது. கொடூரனாக மம்முட்டி பிரமாதமாக நடித்து நடிப்புக்கான தேசிய விருதையும் பெற்றார். தொம்மியாக கோபகுமார் அவருக்குச் சமமாக ஈடு கொடுத்தார்.

இந்தோ ஜப்பான் கூட்டுத்தயாரிப்பான ‘கதாபுருஷன்’, கேரளாவின் அரசியல் பின்னணியை விவரித்த இன்னொரு திரைப்படம். கம்யூனிஸ்ட் தீவிரவாதம், சமூகப்பின்னணி என்பதையெல்லாம் பரிசீலித்த படம்.

‘நிழல் குத்து’, பிரிட்டிஷ் இந்தியாவின் திருவாங்கூர் ராஜ்ய பின்னணியில் நாகர்கோவில் அருகே ஒரு கிராமத்தில் நடக்கும் கதை. நாயகன் காளியப்பன், தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் ஊழியர்களில் வாழும் கடைசி ஊழியன். குடியிலும் சோகத்திலும் தன்னை மூழ்கடிப்பவன்... காரணம் தான் தூக்கில் தொங்கவிட்ட கடைசி மனிதன் ஒரு நிரபராதி என்று அறிந்ததால்தான். குற்றவுணர்ச்சி இவனைக் கொல்கிறது. தண்டனை என்ற பெயரில் மனிதன் இன்னொரு சக மனிதனின் உயிரைப்பறிப்பது சரிதானா என்ற கேள்வியை எழுப்பி விடை காண முயல்கிறது இந்தத் திரைப்படம். நகைச்சுவை நடிகராக புகழ் பெற்றிருந்த ஒடுவில் உன்னிக்கிருஷ்ணன் இதில் காளியப்பனாக ஒரு மாறுபட்ட நடிப்பைத் தந்து சிறந்த நடிகருக்கான விருதையும் பெற்றார். அடூரின் நிரந்தர ஒளிப்பதிவாளரான மன்கட ரவிவர்மா, உடல் நலமில்லாமல் போனதால், பாதியில் விலக, சன்னி ஜோசப் மீதமுள்ள காட்சிகளைப் படம் பிடித்தார். இந்தப் படத்தின் இன்னொரு பெரும் சிறப்பு என்னவென்றால் இதன் இசையமைப்பாளராக இளையராஜா பணியாற்றியதுதான்!

‘நாலு பெண்ணுகள்’, ‘ஒரு பெண்ணும் ரெண்டாணும்’, ‘பின்னேயும்’ என்றும் பின்னர் சில திரைப்படங்களை இயக்கியிருந்தாலும், என் மனதுக்குகந்தவை அவருடைய ஆரம்பகாலத் திரைப்படங்கள்தான். அந்தத் தாக்கம் இன்றும் இருக்கிறது. ஏராளமான ஆவணப்படங்களையும் அடூர் இயக்கியிருக்கிறார். இவருடைய திரைப்படங்களை பொதுமக்கள் பார்த்து ரசிப்பதைவிட, உலகளாவிய திரைப்பட விழாக்களிலும் விருது மேடைகளிலும் தீவிர ரசிகர்கள் பார்த்து மகிழ்வதுண்டு. திரைப்படங்களுக்கு ஏராளமான விருதுகளைப் பெற்ற அடூர், இந்தியாவின் உயர் தேசிய விருதுகளான பத்மஸ்ரீயையும் பத்ம விபூஷணையும் பெற்றுஇ அவர் பிறந்த மண்ணுக்குப் பெருமை தேடித் தந்தவர். இவருடைய பெரும்பாலான திரைப்படங்கள் யூ டியூப் போன்ற தளங்களில் காணக்கிடைக்கும்!



jeeva@thaiveedu.com







மார்ச் மாதம் 8-ம் திகதி சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்படுவது வாசகர்கள் அறிந்த ஒன்றுதான். இது பெண்கள் சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் உரிமைகளை அங்கீகரித்துக் கொண்டாடுவதற்கான உலகளாவிய நாள். பாலின சமத்துவத்தை அடைவதற்கான போராட்டம் மற்றும் செய்ய வேண்டிய பணிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முக்கியமான நாளாக இந்த நாள் விளங்குகின்றது. 'சமத்துவத்தை சிந்திப்போம், அறிவுபூர்வமாக உலகைக் கட்டியெழுப்பபுவோம், மாற்றத்துக்கான புதுமையைச் சிந்திப்போம்' என்கின்ற மகத்தான கோட்பாட்டோடு உருவான இக்கொண்டாட்டத்தின் தோற்றுவாய் பலமுரண்களோடு உருவானது.

வேலை நேரத்தை குறைக்கவும், சம்பளத்தை உயர்த்தவும் வலியுறுத்தியதோடு மட்டுமல்லாமல் வாக்களிக்கும் உரிமை கோரி 15,000-ற்கும் அதிகமான உழைக்கும் பெண்கள் அமெரிக்காவின் நியூயார்க் நகர வீதிகளில் 1908-ம் ஆண்டு ஒரு மாபெரும் பேரணியை நடத்தினர். இதன் பின்னணியிலே இந்த நாளை அங்கீகரித்து 1909-ம் ஆண்டு பெப்பிரவரி 28ம் நாளை தேசிய பெண்கள் தினமாக அறிவித்தது அமெரிக்க சோஷியலிஸ்ட் கட்சி (Socialist Party).

எனினும் ஒரு சாரார் இதற்கு அரை நூற்றாண்டுக்கு முன்பே 1857-ம் ஆண்டு மார்ச்-இல் நியூயோர்க் நகரில் சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்பட்டதாக குறிப்பிடுகிறார்கள். ஆனால், அதற்கு தகுந்த ஆதாரம் ஏதும் இல்லை என்றும், சர்வதேச பெண்கள் தினத்தின் உருவாக்கத்தில் சோசலிச கட்சிகளுக்கு இருக்கின்ற தொடர்பினை இல்லாமல் செய்யும் நோக்கிலேயே 1857-லேயே பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது என்று சொல்கின்றார்கள் என்றும் கூறப்படுகின்றது.

இன்னிலையில் டென்மார்க் நாட்டின் கோபன்ஹேகன் நகரில், 1910-ம் ஆண்டு உலக சோசலிஸ்ட் பெண்கள் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் ஜேர்மானிய முற்போக்குச் சிந்தையாளர் கிளாரா ஜெட்கின் அவர்கள், நாட்டில் உள்ள அனைத்துப் பெண்களும் சேர்ந்து தனிச் சிறப்புள்ள தினமாக மகளிர் தினத்தினைக் கடைப்பிடிக்க வேண்டும், என்ற தீர்மானத்தை வலியுறுத்தினார்.

எனினும் அத்தீர்மானத்தில் 'மகளிர் தினம் எந்த நாள்' என்ற தீர்மானம் எடுக்கப்படாமையால் பல நாடுகளிலும், பல வேறுபட்ட தேதிகளில் பெண்கள் தினம் கடைபிடிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் 1911-ல் அஸ்டிரியா, டென்மார்க், ஜேர்மனி மற்றும் சுவிட்ஸர்லாந்து ஆகிய நான்கு நாடுகளும் இணைந்து மார்ச் மாதம் 11-ம் திகதியில் முதன் முதல் சர்வதேச பெண்கள் தினத்தைக் கொண்டாடின. இக்கொண்டாட்டத்தில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பங்கெடுத்துள்ளனர். இந்நிகழ்வில் பெண்கள் பிரதிநிதித்துவம், பெண்கள் கல்வி, பெண்களின் ஊதியம் ஆகியவற்றில் பெரும் கவனம் செலுத்தியுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

இதன் பின்னர் முதலாம் உலகப் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த 1913-14 காலப்பகுதியில் சமாதானத்துக்கான பிரச்சாரத்தைச் செய்யும் முயற்சியின் தொடக்க காலத்தில் ரஷ்யப் பெண்கள் பெப்பிரவரி 23-ம் திகதியை சர்வதேச பெண்கள் தினமாகக் கொண்டாடினர். இதன் பின்னர் நடந்த உரையாடல்களின் தொடர்ச்சியாகவும், கிரிகோரியன் கலண்டர் முறைக்கு நாடுகள் மாறிக் கொண்டிருந்தபோது நாள் வேறுபாடுகளாலும் மார்ச் 8-ம் திகதியை சர்வதேச பெண்கள் தினமாக கொண்டாடுவது என்று 1914ல் முடிவெடுக்கப்பட்டது. முதலாம் உலகப் போருக்கு எதிராக சமாதானத்தை வேண்டி செய்யப்பட்ட பிரச்சாரங்களில் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பெண்களும் மார்ச் 8-இனை சர்வதேச மகளிர் தினமாக ஏற்றுக்கொண்டு பேரணிகளையும் போராட்டங்களையும் ஒழுங்குபடுத்தினர். இவ்வாறாக மார்ச் 8 என்பதே சர்வதேச பெண்கள் தினம் என்பது நிலைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையில் பல தடைகளைத் தாண்டி 1975-ம் ஆண்டு பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. பின் 1977-ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையில் மார்ச் 8-ம் திகதி சர்வதேச பெண்கள் தினமாக ஏற்றுப் பிரகடனம் செய்யப்பட்டது. பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளும் அசமத்துவங்களும் இன்னும் நிலவிக்கொண்டிருந்தாலும், பெண்கள் விடுதலை, உரிமை பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தியதில் சர்வதேச பெண்கள் தினத்துக்கும் அதனுடன் இணைத்துச் செய்யப்படும் விழிப்புணர்வை தூண்டும் நடவடிக்கைகளுக்கும் பங்கிருக்கின்றது.



kumar.punithavel@thaiveedu.com

## ஈழத்து - கனடிய இலக்கிய ஆளுமை

# அமரர் கமலா பெரியதம்பி

- வே. விவேகானந்தன்



ஈழத்திலே புகழ் பெற்ற இலக்கிய வாதிகள் பலர், போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் புலம்பெயர்ந்து, புலம்பெயர் தேசங்களிலும் கலை இலக்கியப் பணிகளை மேற்கொண்டு வந்தனர், வருகின்றனர். அவ்வாறு கலை இலக்கியப் பணிகளை இலங்கையில் ஆரம்பித்து, கனடிய மண்ணிலும் மேற்கொண்டு வந்த பெண் ஆளுமைகளுள் அமரர் கமலா பெரியதம்பி அவர்களும் ஒருவராவார்.

இவர் ஈழத்திரு நாட்டின், வடக்கே யாழ்ப்பாண மாவட்டத்தில், பல வீரவரலாற்றுப் பெருமைகளைக் கொண்ட வல்வெட்டித் துறை நகரில், வாழ்ந்து வந்த நாகமுத்து சிவகாமிப்பிள்ளை



இணையருக்கு மகளாக 1932-ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 23-ம் திகதி பிறந்தார். இவருக்குப் பெற்றோர் 'கமலா' எனப் பெயரிட்டு மகிழ்ச்சியுடன் வளர்த்து வந்தனர்.

கமலா அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை கொழும்பு ஸ்ரீ-வைசாகா வித்தியாசாலையில் கற்றார். அப்பாடசாலையில் படிக்கும்போதே மேடைக் கூச்சமின்றி கலை நிகழ்வுகளில் பங்குபற்றி ஆசிரியர்களினதும் சக மாணவர்களினதும் பாராட்டுகளையும், பரிசில்களையும் பெற்றார். இவரது தந்தையார் தபால் திணைக்களத்தில் பணியாற்றி வந்தமையால் அடிக்கடி இடமாற்றம் பெற்று வந்தார். அதனால் கமலா அவர்களும் வெவ்வேறு பாடசாலைகளில் படிக்கும் சூழ் நிலை ஏற்பட்டது. இவர் கொழும்பு மெதடிஸ் கல்லூரி, மட்டக்களப்பு வின்ஸன்ற் மகளிர் கல்லூரி, வல்வை சிதம்பராக் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ஆகிய பாடசாலைக-ளில் இடைநிலைக் கல்வியையும், உயர்நிலைக் கல்வியை யும் நிறைவு செய்தார்.

பாடசாலைகளில் படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே இசை, ஓவியம், நாடகம், கவிதை, கட்டுரை, தொடர்கதை போன்ற பல்வேறு துறைகளிலும் ஆர்வம் கொண்டவராக விளங்கினார். அழகான ஓவியங்களை வரைந்து பாடசாலை ஓவியக் கண்காட்சிகளில் பங்குபற்றிப் பரிசில்களைப் பெற்றி ருந்தார். 'ஓவியத்தில் இசை' (Music-In-Art) என்னும் தலைப் பில் இசையை ஓவியத்தின் வாயிலாக வெளிப்படுத்திய இவ ரது ஓவியங்கள் பலரது பாராட்டுதல்களையும் பெற்றிருந்தது. பாடல்களை இயற்றுவது, மெட்டமைத்து ராக தாளத்துடன் பாடுவது, இவருக்குக் கைவந்த கலையாகும். இவர் தனது பன்னிரண்டு வயதிலேயே 'அருள்வாயே உனது திருவருளை' என்னும் கீர்த்தனையை இயற்றி, பிலஹரி இராகத்தில் இசை யமைத்துப் பாடினார். ஊரிக்காடு நடராஜா ஆசிரியரிடம் இசை பயின்ற இவர் இசைத்துறையில் அளப்பரிய ஆர்வம் கொண்டமையால் இந்தியாவுக்குச் சென்று இசை பயின்று 'இசைப் புலவர்' என்னும் பட்டம் பெற்றார் அங்கு இசைப் பேராசிரியர்கள் பி. சாம்பமூர்த்தி, ஆர். ஸ்ரீநிவாசன் ஆகியோ ரின் பாராட்டுதல்களையும் பெற்றார்.

இலங்கை திரும்பிய கமலா அவர்கள் பருத்தித்துறை வட - இந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். அப்பாடசாலையில் நாடகங்களைத் தானே எழுதி, தயா ரித்து, மாணவர்களுக்குப் பழக்கித், தானும் பங்குகொண்டு மேடையேற்றி, மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் நன்ம திப்பைப் பெற்றார். நடன ஆசிரியர்களின் உதவியோடு மேடையேற்றப்பட்ட நாட்டிய நாடகங்களான 'சந்ரோதயம்', 'குறவஞ்சி', 'மணிமேகலை', 'இராவணேஸ்வரன்' என்பன இவ ரது புகழை உச்சத்துக்குக் கொண்டு சென்றன. இவற்றுள் 'குறவஞ்சி' நாட்டிய நாடகம், கல்வித் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட நாடகப் போட்டியில், கொழும்பு ரோயல் கல்லூரி மண்டபத்தில் மேடையேற்றப்பட்டு முதல் பரிசையும் தட்டிக்கொண்டது.

வட - இந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்த போது, 1954-ம் ஆண்டு கல்லூரிக் கீதத்தை எழுதி, இசைய மைத்த பாடல் இன்று வரை கல்லூரிக் கீதமாகப் பாடப்பட்டு வருகிறது. இவர் இலங்கையில் யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், மாத்-தளை, பதுளை, கம்பளை, தெல்லிப்பளை, நெடுந்தீவு, போன்ற பல்வேறு இடங்களிலும் இன்னிசைக் கச்சேரிகளை யும், கதாப்பிரசங்கங்களையும் நடத்தியுள்ளார். 1948-ம் ஆண்டு முதல் 1988-ம் ஆண்டு வரை இலங்கை வானொலி யில் பாடகியாக விளங்கிய இவர் பல வானொலி நாடகங் களையும் எழுதியுள்ளார். நடித்தும் உள்ளார். இவரது நாடக முயற்சிகளுக்கு 'சானா' என அழைக்கப்பட்ட சண்முகநாதன், சோ. சிவபாதசுந்தரம் போன்றவர்கள் பேருதவி புரிந்தனர்.

கமலா அவர்கள் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இணைந்து இரு வருடங்கள் ஆங்கில மொழித்துறையில் பயிற்சி பெற்று, பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக வெளியேறினார். பின்னர் வல்வை சிதம்பராக் கல்லூரி, சிவகுரு வித்தியாசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, அமெரிக்க மிஷன் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் கலை இலக்கியப் பணிகளுடன் ஆங்கில ஆசிரியராகவும் பணிபுரிந்தார். இவரது கற்பித்தல் திறமையினால் கவரப்பட்ட மாணவர்கள் இவரை, 'கமலாரீச் சர்' என அன்புடன் அழைத்தனர். 1987-ம் ஆண்டு அமைதிப் படை என்னும் போர்வையில் இலங்கைக்கு வந்த இந்தியப் படை வல்வையில் மேற்கொண்ட கோரத் தாக்குதலில் இவ ரது உடமைகள் அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்டன. அத னையடுத்து, இலங்கையை விட்டு வெளியேறிக், கனடிய மண்ணிலே குடும்பத்தோடு குடியேறினார். தொடர்ந்தும் மன உறுதியுடன் கலை இலக்கிய, சமயப் பணிகளில் ஈடுபட்டார்.

சிறு வயதிலேயே இசை, கவிதை, நாடகம், இசை நாடகம் எனக் கால்பதித்த கமலா அவர்கள் எழுத்துத் துறையிலும் தன்னை அடையாளப் படுத்திக் கொண்டார். 1948-ம் ஆண்டு இவரது 16-வது வயதில் இவர் எழுதிய 'ஜோடிப்பிழவர்கள்' என்னும் முதலாவது சிறுகதை வீரகேசரிப் பத்திரிகையில் வெளிவந்தது. தினகரன், சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளி லும் பாணன், தென்றல் போன்ற சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்தன. கனடிய மண்ணிலும் தமிழோசை, தமிழருவி, நம்நாடு, ஈழமுரசு உலகத்தமிழர் போன்ற பத்திரி கைகளில் கவிதைகள், கட்டுரைகள், தொடர்கதைகள் என எழுதிக் கொண்டே இருந்தார். இவர் எழுதிய சிறுகதைகள் தொகுக்கப்பட்டு 'மாங்கல்யம்' என்னும் பெயரில் முதலாவது நூல் 1993-ம் ஆண்டு கனடாவில் வெளிவந்தது. இதன் மூலம் ஒரு நூலாசிரியராகவும் அறிமுகமானார். இவர் எழுதிய 'நம் தாயர் தந்த தனம்' என்னும் நாவல் 1994-ம் ஆண்டு வெளியா கியது. இந்த நாவல் வல்வை நகரின் வரலாற்றுச் சிறப்புகள், கோயில்களின் பெருமைகள், மக்களின் வாழ்க்கை முறை கள், கடலில் அவர்கள் கொண்டிருந்த ஆளுமை என்பன கருப்பொருளாக அமைந்து வாசகர் மனதைக் கவரும் வகை யில் விரிந்து செல்கிறது.

கமலா அவர்கள் எழுதிய கட்டுரைத் தொகுப்புகள் அடங் கிய 'நீதிக் கதைகளில் ஆத்திசூடி' என்னும் நூல் 1995-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. 1996-ம் ஆண்டு பாமலர்கள் அடங்கிய 'அருளும் ஒளியும்' என்னும் நூலும், 'தமிழ்க் கவிக் காவினிலே' என்னும் கவிதை நூலும் வெளியாகின. தமிழ்க் கவிதைக் காவினிலே என்னும் நூலில், கற்பனையும் கவிநயமும், எதையும் பெறலாம் கவிதையால், பெண்மைக் குப் பெருமை தந்த வண்ணத் தமிழ், நம் தாய் மொழியும் ஒரு பெண்பால் மொழியே போன்ற இருபத்தொரு தலைப்புக ளில் தமிழ்க் கவிதைகளின் சிறப்பையும், தமிழ் மொழியின் பெருமைகளையும் நயம்பட எடுத்துரைத்துள்ளார். 2002-ம் ஆண்டு வெளிவந்த 'வல்வை கமலா கவிதைகள்' என்னும் கவிதை நூல் தனித்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இந்தக் கவிதை நூலில் கமலா அவர்கள் 1944-ம் ஆண்டு முதல் எழுதிய கவிதைகள் இடம் பெற்றுள்ளன. பக்தி மலர் கள், பாமலர்கள், கதம்பமாலை, கீர்த்தனை மலர்கள், நடனப் பாடல்கள், சிந்தனைத் தேரினிலே, சரிதைப் பாமாலை, ஆங் கிலப் பாடல்கள், தமிழீழப் பாடல்கள், என வகைப்படுத்தப் பட்டு பலதரப்பட்ட பாடல்கள், கவிதைகள், கீர்த்தனைகள் இதில் இடம் பெற்றுள்ளன. இவரது சில படைப்புகள் இன்ன மும் நூலுருப் பெறவில்லை எனவும் கூறப்படுகிறது.

அமரர் கமலா பெரியதம்பி அவர்களின் கலை, இலக்கிய, சமயப் பணிகளைப் பாராட்டி இலங்கையிலும், கனடிய தேசத்திலும் பல்வேறு சமூக, சமய அமைப்புகள் பட்டங்க ளையும் பரிசில்களையும் வழங்கி கௌரவித்துள்ளன. 1950-ம் ஆண்டு கொழும்பில் சுதந்திரன் பத்திரிகை நடத்திய இசை நிகழ்வின் போது 'கானக்குயில்' என்னும் பட்டத்தை வழங்கி சிறப்பித்தது. 1963-ம் ஆண்டு வல்வை முத்துமாரியம் மன் கோயில் அறங்காவலர் சபை 'கலைச்செல்வி' என்னும் பட்டத்தினை வழங்கிப் பெருமை கொண்டது. 1965-ம் ஆண்டு கதாப்பிரசங்கம் நடத்தியதற்காக புங்குடுதீவு சிவன்கோயில் சார்பாக அவ்வூர் மக்களால் 'செந்தமிழ் சொற்செல்வி' என் னும் பட்டம் வழங்கப்பட்டது. கனடிய தேசத்திலே தமிழர் தக வல் சஞ்சிகை 1997-ம் ஆண்டு சிறந்த எழுத்தாளருக்கான விருதினை வழங்கிப் பெருமை கொண்டது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டதாரி மாணவியாகப் பதிந்து, இளங்கலைமானிப் பட்டம் பெற்ற அமரர் கமலா பெரியதம்பி அவர்கள், கலை, இலக்கியம், நாடகம், ஓவியம், சமயம், சங்கீதம், எனப் பல்வேறு துறைக-ளிலும் பிரகாசித்து, ஆசிரியர், பேச்சாளர், பாடகர், எழுத்தா ளர், நூலாசிரியர் எனப் பன்முக ஆளுமையும் கொண்டவரா கப் பிரகாசித்தார். இலங்கை முதல் கனடா வரை மனஉறுதி யுடனும், விடாமுயற்சியுடனும் அயராது செயற்பட்டு வந்த இவர், 2016-ம் ஆண்டு மே மாதம் 29-ம் திகதி கனடாவில் அமரத்துவம் அடைந்தார்.

***தக்கார் தகவிலார் என்பது அவரவர்***
***எச்சத்தால் காணப் படும்.***

என்னும் வள்ளுவர் வாக்குக் கிணங்க அமரர் கமலா பெரிய தம்பி அவர்களின் ஆக்கங்களும், படைப்புகளும் அவரது பெயரை நீடுழி காலம் நிலைக்கச் செய்யும் என்பதில் ஐய்யமில்லை.



vivekananthan.v@thaiveedu.com




# கடலோரக் கடற்கன்னிகள்

எனது மகள் கயல்விழி கடற்கரை மணலில் வீடு கட்டிக் கொண்டிருந்தாள். மூன்று வயதுதானாகிறது, நானும் அவளுக்குத் துணையாக அவளோடு மணலில் உட்கார்ந்து வீடு கட்டுவதற்கு உதவி செய்தேன். கணவரும் மகனும் ஏற்கனவே தண்ணீரில் இறங்கிக் குளித்துக் கொண்டிருந்தார்கள்.

போத்துக்கல் நாட்டின் தென்பகுதியில் உள்ள அல்காரவ் பகுதிக்குச் சுற்றுலாப் பயணம் வந்தபோது, லாகோஸ் நகரத்தில் உள்ள ஹோட்டலில் தங்கியிருந்தோம். ஹோட்டலில் விசாரித்த போது, ஹோட்டலுக்கு அருகே அழகிய கடற்கரை

ஒன்று இருப்பதாக வரவேற்பு மேசையில் இருந்த பெண்மணி குறிப்பிட்டு, அதன் முகவரியையும் தந்தார். ஒருநாள் நேரத்தை ஒதுக்கி, அங்கேயிருந்த அழகிய கடற்கரையான 'பொன்ரா டா பிடாடி'யில் உள்ள செங்குத்துப் பாறைகளைப் பார்த்துவிட்டு, அதற்கு அருகே உள்ள 'பிறயா டோனா அனா பீச்'க்கு வந்திருந்தோம்.

ஒவ்வொரு நாட்டுக் கடற்கரைகளும் பொதுவாக ஏதாவது சிறப்பு அம்சங்களைக் கொண்டதாக இருக்கும். இங்கே கட லலைகளால் அரிக்கப்பட்ட அழகிய வடிவங்களில் உள்ள சில கற்பாறைகள் தண்ணீருக்கு நடுவே தவம் செய்வது போல, வெளியே துருத்திக்கொண்டிருந்தன. மஞ்சள் கலந்த செங்கட்டி நிறத்தில் இருந்த அந்தப் பாறைகள் வெய்யில் பட்டுத் தங்கப் பாறைகள் போலக் காட்சி தந்தன.

குன்றுகள் நிறைந்த கடற்கரையோரம் என்பதால், சிகப்பு நிறக் கலங்கரை விளக்கம் ஒன்று அங்குள்ள குன்றின் மேல் தெரிந்தது. உயரே இருந்த வீதியில் இருந்து கடல் தண்ணீர் மட்டத்திற்கு இறங்கிச் செல்வதற்கு மரப்பலகைகளால் ஏணிப்படிகள் அமைத்திருந்தனர். ஏணிப்படிகள் வழியாகக் கீழே இறங்கிச் சென்ற போது, வித்தியாசமான அழகிய தங் கநிற மணற்பரப்பைக் காணமுடிந்தது.

'இது என்னம்மா?' என்றாள் மழலை மொழியில் கயல்.

'இதுவா, இது தான் மதில், கடலலை வந்தடித்தால் இந்த மதில், நீ கட்டிய இந்த மணல் வீட்டைப் பாதுகாத்து விடும், அதற்காகத்தான் வீட்டைச் சுற்றி மணலில் சுற்றுமதில் கட்டி னேன்' என்றேன்.

அவளுக்குப் புரிந்திருக்கலாம். ஒரு வீட்டிற்கு வேலியோ, மதிலோ எப்போதும் பாதுகாப்பானவை என்பதை நாங்கள் எப்படி அனுபவத்தில் புரிந்து கொண்டோமோ, அதுபோல அவளும் புரிந்து கொண்டதற்கு அடையாளமாய்த் தலைய சைத்தாள். அந்தந்தப் பருவம் வரும்போது, அவளும் ஓரளவு இயற்கைச் சூழலைப் புரிந்து கொள்வாள், புரிந்து கொள்ள வேண்டும்.

அவளுக்குத் துணையாக அவளோடு சேர்ந்து மணலில் விளையாடும் போது, பழைய ஞாபகங்கள் நெஞ்சில் முட்டி மோதின. காங்கேசந்துறை கடற்கரையின் வெண்மணற்பரப் பில், நாங்கள் சிறுமிகளாக இருந்தபோது பெற்றோருடன் வந்து மணல்வீடு கட்டி விளையாடியது நினைவில் வந்தது. இருட்டப் போவதற்கு அறிகுறியாகக் காங்கேசந்துறைக் கலங்கரை விளக்கு எரியத் தொடங்கும். சற்று நேரத்தால், அருகே இருந்த தொடர்வண்டி நிலையத்தில் இருந்து தபால் வண்டி புறப்பட்டுச் செல்லும் போது, நாங்களும் வீடு செல லக் கிளம்பிவிடுவோம்.

காலத்தின் கோலத்தால், 'அதியுயர் பாதுகாப்பு வலயம்' என்ற பெயரில் நாங்கள் வாழ்ந்த பரம்பரை மண்ணை இரா ணுவம் ஆக்கிரமித்ததால், இன்று சொந்தம், பந்தம் எல்லா வற்றையும் தொலைத்துவிட்டு நிர்க்கதியாய்ப் புலம் பெயர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தோம்.

பந்து ஒன்று மணலில் உருண்டு வேகமாக அருகே வரவே, நாங்கள் கட்டிய மணல்வீட்டைப் பாதுகாக்க அதைத் தடுத் துக் கையில் எடுத்தேன். அதற்கிடையில் அருகே ஓடிவந்த இளம் பெண் ஒருத்தி மூச்சிரைத்தபடியே குனிந்து கையை நீட்டினாள். அவள் கையில் அந்தப் பந்தைத் கொடுத்து விட்டு, நிமிர்ந்து பார்த்த எனது கண்கள் ஒரு கணம் தடுமா றிப் போயின.

நம்பமுடியாமல் கண் இமைகள் மூடித்திறந்தன. காரணம் நீச் சலுடையில் அவள் இருந்தாள், ஆனால் மேலாடை இல்லா மல் 'ரொப்லெஸ்ஸாக' மார்பகங்கள் தெரிய அவள் காட்சிய ளித்தாள். அவள் மட்டுமல்ல இன்னும் நாலைந்து இளம் பெண்கள் பதுமவயது தானிருக்கும், மேலாடை இல்லாமல் முன்னால் இருந்த மணற்பரப்பில் 'பீச்வொலிபோல்' விளை யாடிக் கொண்டிருந்தார்கள். வெய்யிலுக்குத் தாக்குப் பிடிக் கவோ, அல்லது நாகரிகம் கருதியோ கறுப்புக்கண்ணாடியும், தொப்பியும் அணிந்திருந்தார்கள்.

சுற்றிவரப் பார்த்தேன், நூற்றுக் கணக்கானவர்கள் ஆண்க ளும் பெண்களுமாக நீச்சலுடையோடு மணற்தரையில் துவாய்த் துண்டை விரித்து வெய்யில் காய்ந்து கொண்டிருந் தார்கள். சிலர் வண்ணக்குடைகளின் நிழலில் படுத்திருந்த னர். அவர்களில் யாருமே மேலாடையின்றி விளையாடிக் கொண்டிருந்த இந்தப் பெண்களைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை, அவர்களுக்கு இந்தக் காட்சி பழகிப்போன தொன்றாக இருக்கலாம்.

புலம்பெயர்ந்த வாழ்க்கையில் விட்டகுறை தொட்டகுறை என்று இவர்கள் அனுபவிக்கிறார்களா? மனசிலே அடக்கி வைத்திருந்த தங்கள் ஆசைகளைக், கட்டுப்பாடுகளை இப் படி உடைத்தெறிவதில் திருப்திப்படுகிறார்களா? பண்பாடு, கலாச்சாரம் என்று ஊரிலே பொத்திக் காத்ததெல்லாம் கண் முன்னால் காற்றிலே பறக்கவிட்டது போன்ற அதிர்ச்சியில் கயலைத் திரும்பிப் பார்த்தேன்.

கயல் மணல்வீடு கட்டுவதை நிறுத்திவிட்டு, எதிரே மணற்ப ரப்பில் நின்று அவர்கள் பந்து விளையாடுவதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

எனக்கு அந்தக் காட்சி புதுமையாக இருந்தது. என்னைக் கவர்ந்தது பந்தல்ல, பந்து விளையாடியவர்கள்தான். பந்து விளையாடிவிட்டு சற்று நேரத்தால் அந்த நால்வரும் மணற்த ரையில் கால்களை நீட்டிக், கைகளைப் பின்னால் ஊன்றிச் சாய்ந்தபடி உட்கார்ந்து வெய்யில் காய்ந்ததைப் பார்த்த போது, ஓவியர்கள் கற்பனையில் வரையும் கடற்கன்னிகளின்

ஞாபகம் வந்தது. ஓவியம் கற்பனையாக இருக்கலாம், ஆனால் இது நிஜமாகக் கண்முன்னால் தெரிந்தது.

சில நாடுகளில் தனியாருக்குச் சொந்தமான கடற்கரைகளில் மேலாடை இல்லாமல் பெண்கள் நடமாடுவதாகக் கேள்விப் பட்டிருந்தேன். ஆனால் இன்று எனக்கே பொது இடத்தில் நேரடியாகப் பார்க்கும் இந்த அனுபவம் கிடைத்திருந்தது. அதன் பிறகுதான் தண்ணீருக்குள்ளும் ஒரு சில பெண்கள் மேலாடை இல்லாமல் நீந்துவதையும், ஒருசிலர் மேலாடை இல்லாமல் மணற்பரப்பில் வெய்யில் காய்வதையும் அவதானித்தேன்.

ஊரிலே பள்ளியில் படிக்கும் காலத்தில் மார்கழி மாதத்தில் திருவெண்பா பாடல் படிக்கும் போது பையன்கள் 'கொங் கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப் பங்கயப் பூம் புனல் பாய்ந்தாடு' என்று அந்த வரிகளை மட்டும் உரக்கக் கத்திச் சொன்னதால்தான், அந்தச் சொல் பெண்களின் மார் பைக் குறிக்கிறது என்பது பின்னால் எனக்குத் தெரியவந்தது. அந்த வயதில் பையன்களுக்கு அது வேடிக்கையாகவும், எங்களுக்கு அதைக்கேட்கக் கூச்சமாகவும் இருந்தது.

சுற்றிவரத் திரும்பிப் பார்த்தேன், அருகே மஞ்சள் கொடி பறக்கவிட்டபடி சற்று உயர்ந்த மேடையில் 'லைவ்காட்' உட் கார்ந்திருந்தாள். அவளிடம் கதை கொடுத்துப் பார்த்தேன்.

அவளும் ஒரு இளம் பெண்மணியாக இருந்ததால் 'மேலாடை யின்றிப் பெண்கள் நடமாடுவதை இங்கே அனுமதிக்கிறீர் களா?' என்று கேட்டேன்.

'ஆமாம், இந்த நாட்டில் சில கடற்கரைகளில் அனுமதித்து இருக்கிறார்கள், அதில் இதுவும் ஒன்று. உங்களுக்கு இது புதிதாகத் தெரிகிறது, தினமும் கடமை நேரத்தில் நான் இந் தக் கோலத்தில்தானே பல நாட்டுப் பெண்களை இங்கே பார்க்கின்றேன், எனக்கு இதெல்லாம் பழகிப்போச்சு' என் றாள்.

'சட்டப்படி மேலாடை இல்லாமல் பொது இடத்தில் பெண்கள் குளிப்பது இந்த நாட்டில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறதா?' என்று கேட்டேன்.

'சட்டத்தை விடுங்கள், ஆண்கள் அப்படிக் குளிக்கலாம் என் றால், எங்களைப் போன்ற பெண்களுக்கும் சமஉரிமை உண் டுதானே?' என்றாள்.

'அதுவும் சரிதான்' மனசு தயங்கினாலும் வார்த்தைகள் தானாக வெளிவந்தன.

'முன்பு இப்படியெல்லாம் இல்லை. இப்போது பெண்களின் உரிமை என்று சொல்லி அவர்களே போராடி இந்தச் சுதந்தி ரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். சமத்துவம், சுயமரி யாதை, சமூகநீதி என்று பெண்கள் கேட்கத் தொடங்கி விட் டார்கள். இது சமூக வளர்ச்சிக்கு நல்லதுதானே?' என்று அவர் சொன்னதில் இருந்து அவரும் இதை ஆதரிப்பவரா கத் தெரிந்தார்.

'சமூகவளர்ச்சி' என்று அவர் குறிப்பிட்டதும் நான் யோசித்துப் பார்த்தேன்.

'பொது இடத்தில் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஊட்டுவதற் கான அனுமதி என்றுதான் இந்த வழக்கம் ஆரம்பமானது. இப்பொழுது வெய்யில் காய்வதற்கு, குளிப்பதற்கு என்றும் பொது இடங்களே வந்துவிட்டன' என்றேன்.

'ஆண்கள்தான் பாவம், இதனால் கஷ்டப்படப் போவது அவர்கள்தானே?' என்றாள்.

'ஏன் அப்படிச் சொல்றீங்க?' என்று கேட்டேன்.

'இதுவரை காலமும் ஆண்கள்தான் தங்கள் பரந்த மார்பைப் பொது இடங்களில் காட்டிப் பாலியல் ரீதியாக எத்தனையோ பெண்களை இம்சைப்படுத்திக் கொண்டிருந்தார்கள், அதை மட்டும் சமூகம் அனுமதிக்கவில்லையா?' என்றாள்.

அவள் இதற்கெல்லாம் சமத்துவம் பேசியதைக் கேட்க எனக்கு வியப்பாக இருந்தது. பெண்கள் மனதிலும் எத்தனை கேள்விகள் இதுபோலப் புதைந்து கிடக்கின்றனவோ?

'இப்போது பதிலடியாகப் பீச்சிலே பெண்களும் ஆண்களைப் போலவே உடையணிய ஆரம்பித்து விட்டார்கள். இதையெல் லாம் பார்த்திட்டு இரவிலே தூங்கமுடியாமல் தவிக்கப் போவது ஆண்கள்தானே?' அவள் வேடிக்கையாகச் சொல்லி விட்டுச் சிரித்தாள்.

'ஏன் சிரிக்கிறீர்கள்?' என்றேன்.

'உண்மையைச் சொன்னால், பருவவயதில் நானும் ஆண்க ளின் திறந்த பரந்த மார்பைப் பார்த்துப் பலதடவை குழம் பிப் போயிருக்கிறேன், அந்த வயதிலே அது ஒரு வித்தியாச மான அனுபவம்' என்றாள் அந்த லைவ்காட்.

அவளோடு உரையாடும்போது, அவள் மனம் திறந்து பேசி யது மட்டுமல்ல, எல்லாவற்றுக்கும் அவள் ஒரு சாதகமான பதிலும் வைத்திருந்தாள்.

குளிக்கும்போது, அல்லது உடைமாற்றும்போது இதுபோன்ற படங்களை இரகசியமாக எடுத்துத்தானே சிலர் எம்மினத்து எத்தனையோ இளம் பெண்களை மிரட்டித் தற்கொலை செய் யப் பண்ணினார்கள். இது போன்ற செய்கைகளுக்காக மேலைநாட்டில் யாரும் தற்கொலை செய்வதில்லையே.

இங்கே என்னவென்றால், 'படமா, இந்தா விரும்பிய மாதிரி எடுத்துக்கோ' என்று எந்தவித கூச்சமும் இன்றி இவர்கள் போஸ்கொடுப்பதில் இருந்து 'இதற்காக யாராவது பெண்கள் தற்கொலை செய்வாங்களா?' என்று எமது பெண்களைப் பார்த்து அறைகூவுவது போல இருந்தது.

காலம், இடம், சூழ்நிலை எமது பாரம்பரியங்கள் எல்லாவற்றையும் மாற்றி அமைத்து விட்டது என்பது இந்தக் காட்சிகளைப் பார்த்த போது புரிந்தது.

'பெண்களுக்கான இந்தச் சமத்துவச் சுதந்திரம் சும்மா கிடைக்கவில்லை, போராடித்தான் பெற்றுக் கொண்டார்கள்' என்றாள்.

'இங்கே போராடினார்களா, எப்போது நடந்தது?' ஆர்வத்தோடு வினாவினேன்.

'இங்கே இல்லை, ஜெர்மனியில்தான் முதலில் 'கொட்டிங்ரன்' நகரத்தில் நடந்தது. தொடர்ந்து பின்லாந்திலும் இதற்காகப் போராடினார்கள். அதன்பின் சில நாடுகளில் சட்டப்படி அனுமதித்திருக்கிறார்கள். சில நாடுகள் சட்டப்படி அனுமதிக்காவிட்டாலும், சுற்றுலாப் பயணிகளுக்காக வருமானம் கருதி இதைக் கண்டும் காணாதமாதிரி அனுமதிக்கிறார்கள்.'

'மதம், கலாச்சாரம் என்று சொல்லிச் சில நாடுகள் அரைகுறை ஆடையோடு பெண்கள் பொது இடங்களில் நிற்பதை முற்றாகவே தடுத்திருக்கிறார்களே.' என்றேன்.

'தெரியும், அப்படியும் இருக்கிறார்கள், அது வேறொன்றுமில்லை, அது ஆணாதிக்கத்தின் வெளிப்பாடு, அங்கிருக்கும் பெண்களும் இந்த ஆணாதிக்கத்தை எல்லாம் ஒருநாளைக்கு உடைத்தெறிவார்கள்' என்றாள்.

'ஒரு காலத்தில் அடிமைப் பெண்கள் மேலாடை அணியவே கூடாது என்று அதிகாரத்தைப் பாவித்ததும் இவர்கள்தானே, ஆனால், இன்று அவர்களே... எல்லாமே இங்கு தலைகீழாக மாறியிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது' என்றேன்.

'மனசிலே உள்ள தங்கள் ஆசைகளைத் தங்குதடையின்றி வெளிப்படுத்தத்தானே இத்தனை ஆயிரம் இளம் பெண்களும் இங்கே வருகிறார்கள். அம்மணமாக எங்கெல்லாம், குளிக்கலாம், எங்கெல்லாம் வெய்யில் காயலாம் என்று கடந்த ஆறு மாதத்தில் பதினொரு மில்லியன் மக்கள் கூகுளில் தேடிப் பார்த்திருக்கிறார்கள் என்றால் பாருங்களேன், எவ்வளவு வேகமாக 'ரொப்லெஸ்' எல்லா இடமும் பரவிக் கொண்டிருக்கிறது என்று!'

'பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் கூடத்தான் தேடிப் பார்த்திருப்பார்கள்' என்றேன்.

அந்தப் பெண்ணுக்கு நான் சொன்னதைக் கேட்டுச் சிரிப்பு வந்தாலும், அவரது கடமை காரணமாக உதட்டுக்குள் சிரித்துக் கொண்டு, அவரது பார்வை தண்ணீரில் நீந்திக் கொண்டிருப்பவர்கள் மேலேயே கவனமாக இருந்தது. 'நீங்கள் அமெரிக்காவா?' என்று கேட்டார்.

'கனடா' என்று நான் பதில் சொன்னேன்.

'இதைப் பற்றி, எங்கெல்லாம் மேலாடையின்றிக் குளிக்கலாம் என்பதைக் கூகுளில் விசாரித்தவர்களில் அதிகமானவர்கள் அமெரிக்கா, ஜப்பான், பிரேஸில் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள்தான்.' என்றார் அந்த லைவ்காட்.

எங்கள் இளமைக் காலத்தில் மேலாடை இல்லாமல் நிற்பதை எதிரே உள்ள 'கண்ணாடி பார்க்கிறதே' என்றதற்கெல்லாம் நாங்கள் அச்சம், மடம், நாணம் என்று கூச்சப்பட்டதுண்டு. பாடசாலையில் உடற்பயிற்சி ஆசிரியை 'பிறா' போட்டுக் கொண்டு வரும்படி சொன்னதாக, அம்மாவிடம் வாங்கித் தரும்படி தயக்கத்தோடு கேட்டதும் நினைவில் வந்தது. காலம் கடந்து போகும் என்பது போல, இங்கே இது போன்ற பலவற்றைக் கடந்துதான் நாங்கள் செல்லவேண்டும், தெரிந்துதானே புலம் பெயர்ந்து வந்தோம். 'லைவ்காட்' சொன்னது போல, காலப் போக்கில் புலம்பெயர்ந்த எங்களுக்கும் இதெல்லாம் சாதாரண நிகழ்வாக மாறிவிடலாம்.

மேலாடை இல்லாமல் 'பீச் வொலிபோல்' விளையாடிக் கொண்டிருந்த அந்தப் பதுமவயதுப் பெண்கள் போல நாளை எனது மகளோ அல்லது எம்மினத்தவர்களோ வளர்ந்து மேலாடை இல்லாமல் எங்கேயாவது கடற்கரையில் பீச்போல் விளையாடினாலும், இதுபோன்ற காட்சிகள் எமக்கும் சாதாரண நிகழ்வாக மாறிவிடலாம்.

காலம், இடம், சூழ்நிலை, எங்கள் நடையுடை பாவனை எல்லாவற்றையும் மாற்றிவிடும் என்பதை நடைமுறையில் நாங்கள் அனுபவித்தாகிவிட்டது. காரணம் எங்களுக்கு மேலைத்தேசம் புகுந்த வீடு என்பதால், சூழ்நிலைக்கு ஏற்ற மாதிரி எங்களால் ஓரளவாவது சமாளித்துக் கொண்டு நடக்க முடிந்தது. ஆனால், அடுத்த தலைமுறையான கயல்விழி போன்றவர்களுக்கு இது பிறந்தவீடல்லவா! எனவே வெவ்வேறு கலாச்சாரம் கொண்ட சினேகிதங்களும் வருங்காலத்தில் அவர்களுக்கு ஏற்பட்டு, அதனால் அவர்கள் வாழ்க்கையில் கலாச்சார மாற்றங்களோ அல்லது கலாச்சார சீரழிவுகளோ ஏற்படவும் வாய்ப்புண்டு.

எங்களுக்குத் தயக்கமாகவும், கூச்சமாகவும் இருந்த சில விடயங்கள் இப்போது அவர்கள் வாழும் இந்தச் சூழலில் அவர்களுக்கு இருக்கப் போவதில்லை. அதற்கு அவர்கள் தயங்கப் போவதுமில்லை.



kuruaravindan@thaiveedu.com




இந்தப் பூமியில் சமாதானத்தையும், மகிழ்வான வாழ்வியலையும் நிலைபெறச் செய்வதற்கு அடிப்படையாக இருக்க வேண்டிய விடயங்களுள் ஒன்றாக பால்நிலைச் சமத்துவம் கொள்ளப்படுகின்றது. பூமியில் வாழும் பால்பல்வகைமையினரிடையே எந்தவிதமான பாரபட்சங்களும் காட்டப்படாது அனைவரும் சமம் எனும் நிலை இயல்பான வாழ்வாக ஆகும் போதுதான் உலகம் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்குமான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது இன்று உரத்து ஒலிக்கின்றது.

உலகந்தழுவி நடைபெற்றுவரும் தொடர்ச்சியான பெண்ணிலைவாதச் செயற்பாடுகளும், அதனூடாக முன்மொழியப்படும் அனுபவங்களும், சிந்தனைகளும், கருத்தியல்களும், கோட்பாடுகளும் உலகத்தில் இதுவரை காலமும் கட்டமைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் கேள்விகளுக்கு உட்படுத்திக் கட்டவிழ்த்து மீளுருவாக்கம் செய்யப்பட வேண்டியதன் நியாயத்தையும் உண்மையினையும் வலியுறுத்தி வருகின்றன.

பெண்ணிலைவாத நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பது புத்தாக்கச் சிந்தனைகளுக்கும், புதிய கற்றலுக்கும், புதிய ஆராய்ச்சி முறைகளுக்கும், வன்முறைகளற்ற சமத்துவமான, அழகான, மகிழ்ச்சிகரமான வாழ்தலுக்கும் வழிப்படுத்துவதாக இருந்து வருகின்றது.

இயற்கையின் இயல்புகளை விளங்கிக்கொண்டு இயற்கையின் கொடைகளை நாசம் செய்யாது அதன் பேண்தகு தன்மையினை உறுதிப்படுத்தியவாறு இயற்கையினதும், மனிதர்களினதும் பன்மைத்துவங்களைப் பாதிக்காதவாறு ஏற்றத்தாழ்வுகள் அற்று பகிர்ந்துண்டு வாழும் வாழ்வியலை உலகளாவிய சகோதரத்துவம் எனும் நடைமுறையூடாக வலுப்படுத்தும் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் பெண்ணிலைவாதிகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு சவால்களை எதிர்கொண்டு தலைமுறைகள் பல கடந்தும் உலகம் எங்கிலும் இந்தப் போராட்டம் பெண்ணிலைவாதிகளால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் வரலாற்றில் வலுப்பெற்றுப் பரவலடைந்து வரும் மானுட எழுச்சியாக இது விளங்குகின்றது.

பெண்ணிலைவாதிகளின் போராட்ட வடிவங்கள் வன்முறைகளற்றவையாகவும், புத்தாக்கப் படைப்பாக்கங்களூடாக முன்னெடுக்கப்பட்டு வருபவையாகவும் காணப்படுகின்றன. தொடர்ச்சியான செயற்பாடுகள் கற்றுத்தரும் அனுபவங்கள் ஊடாக புதிய போராட்ட வடிவங்களை உருவாக்கி அதனூடாக பெண்ணிலைவாதத்தின் இலக்கு நோக்கிய வாழ்க்கைப் பயணத்தில் மனிதர்களைப் பங்காளர்களாக்கும் இயங்குமுறை பெண்ணிலைவாதிகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய போராட்ட வடிவங்களுள் கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் வடிவமைக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கையாகவே நூறு கோடி மக்களின் எழுச்சி எனும் செயற்பாடு விளங்கி வருகின்றது. 2012-ம் ஆண்டு இந்த எண்ணக்கரு உருவாக்கம் பெற்றிருந்தது. அதாவது உலக சனத்தொகையில் மூன்றில் ஒரு பெண் தனது வாழ்க்கைக் காலத்தில் வன்முறைக்கு உள்ளாகின்றாள் என்கின்ற புள்ளி விபரங்களின் அடிப்படையில் 2012-ல் சராசரியாக 600 கோடி மக்கள் தொகை என்ற கணிப்பிற்கேற்ப ஏறத்தாழ உலக சனத்தொகையில் பாதித்தொகையாகிய 300 கோடிப் பெண்களில் 100 கோடிப் பெண்கள் வன்முறைக்கு உள்ளாகின்றார்கள் என்ற முடிவுக்கமைய இந்த வன்முறைகளை ஒழிப்பதற்காக நூறு கோடி மக்கள் எழுச்சிகொள்ளுதல் எனும் செயற்பாடு ஒவ்வொரு வருடமும் பெப்பிரவரி 14-ந் திகதி உலகம் எங்கிலும் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும் எனும் நோக்குடன் இச்செயற்றிட்டம் முன்மொழியப்பட்டிருந்தது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாது ஒழிப்பதற்காக ஆடுவோம், பாடுவோம், கொண்டாடுவோம் எனும் கோசத்துடன் 2013 பெப்பிரவரி 14-லிருந்து நூறு கோடி மக்களின் எழுச்சி கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த 2023-ம் ஆண்டுடன் நூறு கோடி மக்களின் எழுச்சி தனது பத்தாவது வருடத்தை அடைந்துள்ளது. இலங்கையில் பல்வேறு இடங்களில் இந்த நூறு கோடி மக்களின் எழுச்சி கொண்டாடப்பட்டு வந்துள்ளது. இப்பின்புலத்தில் இலங்கையின் மட்டக்களப்பில் நூறு கோடி மக்களின் எழுச்சி கடந்த பத்தாண்டுகளில் எத்தகைய நடவடிக்கைகளை முன்னிறுத்தி மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது என்பது தொடர்பாக இக்கட்டுரையில் குறிப்பிடப்படுகின்றது.

மட்டக்களப்பில் மூன்றாவதுகண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள் குழு, சமதை பெண்கள் குழு, சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், வன்முறைகளுக்கு எதிரான ஓவியர்களின் குழு ஆகிய தன்னார்வக் குழுக்களைச் சேர்ந்தோரும், இத்தகைய கருத்துடன் சேர்ந்தியங்கும் உள்ளூர்க் கலைஞர்களும், பொது மக்களும் இந்த எழுச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

2013-ம் ஆண்டு பெப்பிரவரி 14-ம் திகதி மட்டுநகரில் காண்பியற்கலையாக்கங்களினூடான மனித சங்கிலி ஊர்வலம் நடைபெற்றிருந்தது. பல பெண்களும் ஆண்களும் இந்த ஊர்வலத்தில் பங்குபற்றியிருந்தார்கள். ஓவியர் சு. நிர்மலவாசன் அவர்களால் ஆக்கப்பட்ட அம்மாக்களின் பிரதிமை ஓவியங்கள் இதில் நகரும் காட்சியாக அமைந்திருந்தது. பல்வேறு வன்முறைகளாலும் பாதிக்கப்பட்டு வாழ்க்கையினைத் தொடர்ந்து வரும் தாய்மாரின் கதைகளை உள்ளார்ந்து கவனிக்கச் செய்த படைப்பாக்கமாக அது அமைந்திருந்தது.

2015 பெப்பிரவரி 14-ல் மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் 'நீதிக்கான பறை' எனும் ஆற்றுகை நடைபெற்றிருந்தது. இப்பறை முழக்கத்தினை பெண்ணிலைவாதச் செயற்பாட்டாளர்களான பெண்கள் ஆற்றுகை செய்திருந்தார்கள். இத்தோடு மணற் சிற்பங்களும் உருவாக்கப்பட்டு நூறு கோடி மக்களின் எழுச்சி கொண்டாடப்பட்டிருந்தது. கடற்கரைக்கு வந்திருந்த பொது மக்களும் நலன் விரும்பிகளும் இக்கலையாக்க எழுச்சியைப் பார்த்து அது பற்றி விளங்கிக் கொண்டார்கள்.

2018 பெப்பிரவரி 14-ல் 'பெண்களுக்கும் பூமித்தாய்க்கும் எதிரான வன்முறைகளற்ற வாழ்வைக் கொண்டாடுவோம்' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு திருமலை வீதி சத்துருக்கொண்டான் வாவிக்கரையோரத்தில் வன்முறையற்ற வாழ்வுக்கான காண்பியற்கலைப் படைப்பாளர்களின் ஆற்றுகைகள் நடைபெற்றிருந்தன.

2019 பெப்பிரவரி 14-ல் கல்லடி கடற்கரையில் ரினுஜா சிவசங்கர் என்பவரால் மணல் சிற்பங்கள் உருவாக்கப்பட்டு நூறு கோடி மக்களின் எழுச்சி கொண்டாடப்பட்டிருந்தது.

2020 பெப்பிரவரி 14-ல் மட்டுநகர் பழைய கல்லடிப் பாலத்தில் 'வன்முறைகளற்ற மகிழ்வான வாழ்வுக்காய் ஆடுவோம், பாடுவோம், பறையறைவோம், படம் வரைவோம்' எனும் கோசத்துடன் வன்முறைகளுக்கு எதிரான கலையாக்கங்களின் ஆற்றுகைகளும் காட்சிகளும் நடைபெற்றிருந்தன.

2021 பெப்பிரவரி 14-ல் மரபணு மாற்றஞ் செய்யப்படாத உள்ளூர் விதையினங்களைப் பாவனைக்குக் கொண்டு வருதல் அதனை ஒவ்வொரு மனிதரும் தாம் வாழும் வீட்டுச் சூழலிலிருந்து செயற்படுத்துதல் எனும் தொனிப்பொருளில் நூறு கோடி மக்களின் எழுச்சி மட்டுநகரில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதனை முன்னிட்டு பாடல்களை உருவாக்கிப் பாடுதல், காண்பியங்களை உருவாக்குதல் எனும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறிப்பாக சிறுவர்களிடையே மரபணுமாற்றஞ் செய்யப்படாத விதையினங்களைப் பயன்படுத்தி வீட்டுத் தோட்டங்களைச் செய்யும் நடவடிக்கை ஊக்குவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு வீட்டுத்தோட்டஞ் செய்து பெற்ற விளைச்சல்களை மடையாகப் பரவி அவற்றினைக் கொண்டு உணவு சமைத்து உண்ணும் கொண்டாட்டமாக இது முன்னெடுக்கப்பட்டிருந்தது.

2022 பெப்பிரவரி 14-ல் 'பெண்களுக்கு அவர்களின் உடல்கள் மீதுள்ள உரிமையைக் கொண்டாடுவோம்! பெண்களின் உடல்கள் மீது மற்றவர் உரிமை கொள்ளாத சமூகங்களைக் கொண்டாடுவோம்' எனும் தொனிப்பொருளில் கலையாற்றுகைகள் மட்டக்களப்பு நாவற்குடா ஜீவஒளி மைதானத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

2023 பெப்பிரவரி 14-ல் போசாக்கான உள்ளூர் உணவு வகைகளை தரமாகவும், சுகாதாரமாகவும், மலிவாகவும் உருவாக்கிப் பரவலாக்கஞ் செய்து வரும் உள்ளூர்ப் பெண் ஆளுமைகளைக் கொண்டாடும் விழாவாக நூறு கோடி மக்களின் எழுச்சி மட்டுநகர் சீலாமுனையில் நடைபெற்றிருந்தது. அத்துடன் 39-ம் கிராமத்தில் வாழும் சிறுவர்களுக்கு உள்ளூர் அம்மாக்களின் உழைப்பின் பெறுமதி சம்பந்தமான கதைகளைச் சொல்லும் கதையரங்கும் நடத்தப்பட்டிருந்தது.

இவ்வாறு கடந்த ஒரு தசாப்த காலமாக நூறு கோடி மக்களின் எழுச்சி செயற்றிட்டம் மட்டக்களப்பில் கலையாக்கங்களை மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையினைக் காண முடிகின்றது. இங்கு தன்னார்வத்துடன் செயலாற்றும் நபர்களின் பங்களிப்புடன் கலையாக்கங்களை முன்னிறுத்தி வன்முறைகளற்ற வாழ்வுக்கான பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படுவதால் இவற்றைப் பொது வெளியில் வலுவாகப் பரவலாக்குவதில் ஆக்கபூர்வமான அனுபவங்கள் கிடைக்கின்றன. புத்தாக்கச் சிந்தனைகள் கொண்ட புதிய தலைமுறையினர் இதனால் கவரப்பட்டு இந்நடவடிக்கைகளில் ஆக்கபூர்வமாகச் செயலாற்றுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

கலையாக்கங்களூடாக ஒரு பிரச்சாரத்தை மேற்கொள்ளும் போது அங்கே செயற்பாடு பிரதானம் பெறுகின்றது. உதாரணத்திற்கு படம் வரைதல், பாடல் பாடுதல், பறையிசைத்தல் என்று குறித்த நடவடிக்கையில் ஈடுபடும் போது அங்கே பயிற்சியும் தொடர் செயற்பாடும் இன்றியமையாததாக இருக்கின்றது. செயற்பாட்டினூடான கற்றல் என்பது நிலைபேறான தன்மை கொண்டதாக வளர்ச்சி பெறுகின்றது. குறிப்பிட்ட காலம் தொடர்ச்சியான செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது அது வாழ்விற்கான பயிற்சியாக வாழ்வின் ஒரு பகுதியாக வலுப்பெற்று விடுகின்றது. எனவே வன்முறையற்ற வாழ்வியலை நடைமுறைக்குக் கொண்டு வரும் காத்திரமான நடவடிக்கையாக கலை வழியான நூறு கோடி மக்களின் எழுச்சிச் செயற்பாடு விளங்கி வருகின்றது.

ஏற்கெனவே பெண்ணிலைவாதச் சிந்தனைகளைப் பொது வெளியில் கொண்டு சென்று மக்கள் மத்தியில் பரவலாக்குவதில் கலையாக்கங்கள் காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளமையினாலும், படைப்பாக்கமும் கற்பனைத் திறனும் கொண்ட தலைமுறைகளை உருவாக்குவதற்கு கலையாக்கங்களை மையப்படுத்திய கற்றல் நடவடிக்கைகள் அதிகம் வாய்ப்பு வழங்குவதாலும் நூறு கோடி மக்களின் எழுச்சி சமூக நோக்குடைய படைப்பாற்றல் மிக்க வன்முறைக்குணமற்ற இளந்தலைமுறையினரை உருவாக்கவல்ல கலைச்செயல்வாதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஒரு தசாப்தகால மட்டக்களப்பின் நூறு கோடி மக்களின் எழுச்சி நடவடிக்கைகள் ஆக்கபூர்வமான வாழ்வியலுக்கான மனிதர்களை உருவாக்கவல்ல கலைவழிப் பிரச்சாரமாக எழுச்சி கண்டு நிற்கின்றது.



gowrieeswaran@thaiveedu.com



# பெண் உறுப்புச் சிதைப்பு பேச விரும்பாப் பெரும் பொருள்!

– மா. சித்திவினாயகம்

இன்றைய கனடாவானது, அதன் வாழ்விட மாந்தரின் மரபு-களை சிறப்பாக்க ஒவ்வொரு மாதங்களையும் ஒவ்வொரு பாரம்பரிய மாதங்களாக்கி மகிழ்கின்றது. பல்லினத்தோரின் தாய்த் தேசங்களின் நேசங்களைப் பாரம்பரியங்களை நிலை நிறுத்த, அம்மாதங்களில் விசேட கலாசாரநிகழ்வுகளை நடத்துவதன் மூலம் தம் வரலாற்றைப் பற்றி கற்பிப்பதற்கும், கற்றுக்கொள்வதற்கும் இடமளிக்கின்றது. வந்தேறிய நாடுகளில் பன்முக கலாசாரங்கள் எவ்வாறு பார்க்கப்படுகின்றன என்பதை ஆராய்வதற்கு இது முதன்மையாயுள்ளது.

கலாசார பாரம்பரியம் கனடிய வரலாற்றின் ஒரு முக்கிய



பகுதி. இது நமது அடையாளத்தை சிந்திக்கச்செய்து ஒரு தேசமாக நம்மை உணரவைக்கிறது. கலாசார பாரம்பரியத்தில் நிலப்பரப்புகள், கட்டடங்கள், நினைவுச்சின்னங்கள், தொல்பொருள் தளங்கள் மற்றும் சேகரிப்புகள், ஆவணங்கள், முக்கிய வரலாற்றுப்பதிவுகள் எனப் பலவும் அடங்கும்.

கனடாவில் உள்ள கறுப்பின மக்கள் பல்வேறு பின்னணி மற்றும் அனுபவங்களைக் கொண்டுள்ளனர். சிலர் பலநூற்றாண்டுகளுக்கு முன்னதான தங்களின் அடிமை வேர்களோடு தொடர்புடையவர்கள், மற்றவர்கள் சமீபத்திய ஆண்டுகளில் குடியேறியவர்கள்.

சுதந்திரம் தேடும் அடிமைப்படுத்தப்பட்ட அமெரிக்க கறுப்பின மக்களை வடக்கே தப்பிச் செல்ல வைத்த இடமாக கனடிய நிலத்தடி ரயில் பாதைகள் வரலாற்றில் போற்றப்பட்டாலும், கனடாவும் அதன் சொந்த அடிமைத்தனத்தின் நீண்ட வரலாற்றைக் கொண்ட தேசம் தான். அந்த அடிமைத்தனத்தின் மரபு இன்றும்கூட கனடாவில் கறுப்பினத்தவர்களுக்கு எதிரான இனவெறியில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

பழங்குடியினரும், ஆபிரிக்க மக்களும் மனிதர்களாக மதிக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் மிருகங்களைப்போல சந்தையில் விற்கப்பட்ட காலம் உண்டு. வெள்ளை மேலாதிக்கம் பல நூறு ஆண்டுகளாக அடிமைத்தனத்தின் வன்முறையை நியாயப்படுத்தியது. அதற்காக சட்டங்களை அது எழுதி வைத்தது. 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரிட்டிஷ் கப்பல்களின் டெக் எனப்படும் தள வரிசைத் திட்டங்கள் கால்நடைகளைப்போல் சங்கிலியில் பிணைத்த அடிமைப்படுத்தப்பட்ட மக்களை கொண்டு செல்லவே பயன்படுத்தப்பட்டன. அவர்கள் அனுபவித்த மனிதநேயமற்ற சொல்லொனாக் கொடுரங்களை ஊடகங்கள் இன்னமும் பதிவுகளாக்கிக் காட்டத் தயங்குகின்றன.

ஐரோப்பியர்கள், அடிமைப்படுத்தப்பட்ட கறுப்பர்களை வாங்குவதற்கும் விற்பதற்குமான வெறும் பொருட்களாகவே பார்த்தனர். வெள்ளைய மேலாதிக்கத்தின் அடிமை வியாபாரம் மில்லியன் கணக்கான அடிமை மக்களுக்கு கற்பனை செய்ய முடியாத துன்பத்தை ஏற்படுத்தியது. அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டு ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்குப் பிறகு கனடிய சமூகத்தில் பாடசாலைகளை தோண்டும் இடமெங்கும் பழங்குடிச் சிறார்களின் எலும்புகளால் நிறைந்து கிடக்கின்றது.

அன்றைய நாட்களின் மிக முக்கியம் வாய்ந்த வர்த்தகமாகப் போற்றப்படுவது அட்லாண்டிக் நாடுகடந்த அடிமை வர்த்தகம் ஆகும். இது ஒரு முக்கோண வர்த்தகம். ஐரோப்பிய வணிகர்கள் ஐரோப்பாவிலிருந்து ஆப்பிரிக்காவிற்கு வணிகப் பொருட்களைக் கொண்டு சென்று, ஆப்பிரிக்காவில் அவர்களால் அடிமைப்படுத்தப்பட்ட மக்களின் எஜமானர்களுக்கு தங்கள் பொருட்களை பரிமாறி அங்கிருக்கும் அடிமைகளை அமெரிக்காவிற்கு ஏற்றி விற்பதுமான முக்கோண வர்த்தகம்

அது. அடிமைகளின் உழைப்பால் உற்பத்திசெய்யப்பட்ட பொருட்களும், அடிமை நாட்டு வளங்களும் விற்பனைக்காக ஐரோப்பாவிற்கு மீண்டும் கொண்டுசெல்லப்பட்டன.

காலனித்துவ அதிகாரிகளும், நில உரிமையாளர்களும் அடிமைகளை கரீபியன் மற்றும் வட, தென் அமெரிக்காவின் உற்பத்தி அடிமைத் தொழிலாளிகளாகப் பணியாற்றவே பெருமளவில் கட்டாயப்படுத்தி அழைப்பித்திருந்தனர். இதற்காக 12 மில்லியனுக்கும் அதிகமான ஆப்பிரிக்க மக்கள் அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்டனர். அட்லாண்டிக் கடல் கடக்கும் வழியில் குறைந்தது இரண்டு மில்லியன் பேர் இறந்தனர். அடிமைத் தாக்குதல்கள் மற்றும் அடிமைக் கடத்தல்காரரின் அதிகார வன்முறை மற்றும் நோய் மில்லியன் கணக்கானவர்களைக் கடலிலேயே கொன்று தின்றது.

ஐரோப்பிய காலனித்துவவாதிகள் அடிமைத்தன இனவெறியில் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக பிரான்சிலும் இங்கிலாந்திலும் அடிமைத்தனம் சட்டவிரோதமானது என்பவர்கள் இன்றும் இங்கிலாந்தும், பிரான்ஸும் இரண்டு மில்லியனுக்கு மேற்பட்ட கறுப்பின மக்களை தங்கள் தொலைதூர காலனிகளில் அடிமைப்படுத்தி வைத்துள்ளமையைப் பேசுவதில்லை.

பெரும் பூதமான ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் முக்கிய அம்சமான இத்தகைய பொய்முக இரட்டை நிலையால்தான் உலகம் முழுவதையும் அவர்களினால் சுரண்ட முடிந்தது.

The Code noir கறுப்பர்களின் குறியீடு என்பது அடிமைகள் சட்ட விதிமுறைகளின் தொகுப்பு. பெரும்பாலான பிரெஞ்சு காலனிகளில் அதுவே அடிமைத்தனத்தை நிர்வகித்தது. அடிமைத்தனத்தை வெளிப்படையாக சட்டபூர்வமாக்கும் சட்டங்கள் அவை. அது அடிமைகளை, முதலாளியின் சொத்து என்றே வரையறுத்தது. அடிமைகள் தப்பித்தால் அவர்களுக்கான கொடூர தண்டனைகளை அது விதந்தோதியது. அடிமைகள் தப்பிக்காமல் இருக்க அடிமைகளின் மீது முத்திரை குத்துதல், சித்திரவதை செய்து சிதைத்தல், மற்றும் கொலை செய்தல் உட்பட வன்முறையான தண்டனைகளை வழங்க அது அடிமையின் உரிமையாளர்களுக்கு அதிகாரம் அளித்தது. ஒரு கறுப்பினன் எங்கு காணப்பட்டாலும் அவன் ஒரு அடிமை என்றது அது.

அடிமைகள் தப்பித்தால் அவனது காதுகள் துண்டிக்கப்படும், அவனது தோளில் ஓடிப்போனவன் என்று குறிசுடப்படும். முத்திரை குத்தப்படும். மூன்று தடவை குற்றம் செய்தால், அவனைக் கொல்ல வேண்டும் என்றது அந்த அடிமைகள் சட்டம்.

அதனால்தான் அடிமைப்படுத்தப்பட்ட பல கறுப்பின மக்கள் தங்கள் உரிமையாளர்களால் கொடூரமான மற்றும் கடுமையான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். சிறையில் அடைக்கப்பட்டனர், தூக்கிலிடப்பட்டனர் அல்லது கொலை செய்யப்பட்டனர். அடிமைப்படுத்தப்பட்ட கறுப்பினப் பெண்கள் பெரும்பாலும் அவர்களின் எஜமானர்களால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டனர். விற்கப்பட்டபோது கறுப்பினக் குடும்பங்கள் சிதைந்து பிரிவுண்டன.

ஆனாலும் இந்த அடிமைகள், தாம் வாழும் நாட்டிற்காகவும் எஜமானர்களுக்காகவும் போரிடவும் தயங்காத விசுவாசிகள்.

முதல் உலகப் போரின்போது, சுமார் 1,300 கறுப்பின வீரர்கள் கனடிய பயணப் படையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் மொழிபெயர்ப்பாளர்கள், பீரங்கி வீரர்கள், போர்வீரர்கள், குறி பார்த்துச் சுடுபவர்கள், மரம்வெட்டுபவர்கள் மற்றும் பல பொது வேலையாளர்கள் எனப் பலர் பணியாற்றினர்.

இவ்வாறு முறைப்படுத்தப்பட்ட கறுப்பின அடிமைத்தனம் அதிகாரபூர்வமாக இன்று முடிவடைந்தாலும், கறுப்புத்தன்மையின் பொருள் அடிமைத்தனத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டதான இன்னிலையில் தான் கனடாவில், அவர்கள் 28-வது அதிகாரபூர்வ கறுப்பின வரலாற்று மாதத்தை 2023 மாசியில் கொண்டாடி முடித்திருக்கின்றார்கள். இந்த ஆண்டின் பேசுபொருளாக அவர்கள் கொண்டிருந்தது ‘சொல்வது’ என்கிற அடை மொழியை. மாண்புமிகு லிங்கன் அலெக்சாண்டரின் வாழ்க்கை மற்றும் மரபை நினைவுகூரும் வகையில், இனச் சமத்துவத்திற்கான அவரது குறிப்பிடத்தக்க பங்களிப்பை எண்ணி நாங்கள் அவரைச் சிறப்பித்துள்ளோம் என்கின்றார்கள் அவர்கள். அதே போன்றே அரசு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தை தமிழ் மரபுத் திங்கள் என அறிவித்ததன் மூலம், கனடிய சமூகத்திற்கு தமிழ் - கனடியர்களாக நாம் ஆற்றியுள்ள பங்களிப்புகளையும், தமிழ் மொழியினதும் பண்பாட்டினதும் செழுமையையும், தமிழ் மரபுபற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் எதிர்கால தலைமுறைகளுக்கு ஊட்ட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அங்கீகரித்துள்ளது. எனினும் பாடசாலை விதானத்தில் அவை இடம் பெறாமல் மாற்றினங்கள் எம் மரபைப் புரிதல் எப்படிச் சாத்தியமாகும் என்பதை கேட்க மறந்தவர்களாகவே நாம் உள்ளோம்.

‘சராசரியாக இருப்பது எங்கள் கடமை அல்ல. மற்றவர்கள் பின்பற்றுவதற்கு உயர்ந்த முன்மாதிரியை வைப்பதே எங்கள் கடமை என்பதை கறுப்பின மக்கள் உணரவேண்டும் என்பதை நெடுங்காலமாகவே சொல்லவிளைந்தவர் சோமாலியாவின் முன்னணிப் பெண் எழுத்தாளரான வாரிஸ் டைரி.

ஆபிரிக்க மக்களிடையே மட்டுமல்ல உலகம் தழுவி நிகழ்கிற பெண் விருத்தசேதனம் எனப்படுகிற பெண் உறுப்பு சிதைப்பு (Female Genital Mutilation) வன்முறையை துணிந்து பேசியவர், பேசிவருபவர் அவர். சோமாலியாவில் மட்டும் 93 சதவீதமான பெண்கள் இத்தகு கொடுமைக்கு ஆளாகின்றார்கள் என்கிறது அவரது தரவுகள். இது தொடர்பில் சோமாலிய பிரபல எழுத்தாளர்களான Shugri Said Salh உள்ளிட்ட பலரும் எழுதியுள்ள போதும் வாரிஸ் டிரி அவர்களின் சர்வதேச அளவில் அதிகம் விற்பனையான டெசர்ட் ஃப்ளவர் - Desert Flower முக்கியம் வாய்ந்தது. இது 55 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலகெங்கிலும் காட்டப்படும் ஒரு திரைப்படமாக விரிந்தது. டெசர்ட் ஃப்ளவரில் ஒரு தனிநபரை பாதிக்கும் பிரச்சினைகள் இந்தப் பெரிய உலகின் ஒழுங்கை எவ்வாறு சீரழித்துச் சிதைக்கும் என்பதை நன்றாகவே படம் பிடித்துள்ளார்கள்.

விருத்தசேதனம் என்பது ஆண்குறியின் நுனியிலுள்ள உபரி

யான தோலை வெட்டியெடுப்பதாகும். விருத்தசேதனம் என்பதன் மூலம் எபிரேயச் சொல்லான மூலா (Mulah) என்பதே என்கின்றார்கள் மொழியாளர்கள்.

தேவன் ஆபிரகாமும் அவன் சந்ததியார் யாவரும் விருத்தசேதனம் பண்ணபடும்படி கட்டளையிட்டதாகவும், இது தேவன் யூத மக்களோடு செய்த உடன்படிக்கையின் அடையாளமென்றும் பழைய ஏற்பாட்டினில் ஆதியாகமம்: 17:9-14 பேசுகின்றது. அதன்பேரில் ஆபிரகாம், தன்னுடைய 99-வது வயதில் விருத்தசேதனம் செய்த உலகின் முதன்மையாளர் என்கிறது வரலாறு. ஆண் விருத்தசேதனம் என்பது பழமையான மனித அறுவைசிகிச்சை முறை, வரலாற்று பதிவுகள் மற்றும் தொல்பொருள் சான்றுகள் பொ.ஊ.மு(கிமு) 23-ம் நூற்றாண்டில் பண்டைய எகிப்தியர்களிலிருந்தே இந்த நடைமுறை வந்ததாகப் பதிவு செய்கின்றன. ஆண்கள் விருத்தசேதனம் செய்யவேண்டும் என்பதை பின்வந்த குரானும் வலியுறுத்தி நின்ற போதும், பெண்கள் விருத்தசேதனம் பற்றி மதங்கள் எதுவும் பேசியதான குறிப்புகள் இல்லை. ஹஸ்ரத் ஈசா என அறியப்பட்ட இயேசு கிறிஸ்துவிற்கு கூட அவர் பிறந்த எட்டாவது நாளில் விருத்தசேதனம் சடங்கு செய்யப்பட்டபோதும் பிற்பட்டகால பைபிள் நம்பிக்கையாளர்கள் பலரும் புனிதமென நுனித்தோலை நீக்குவதைவிட இருதயத்தை புனிதமாக்கும் விருத்தசேதனமே சிறப்பென அதனைக் கைவிட்டிருந்தனர்.

இன்னிலையில்த்தான் எக்காரணமுமற்று பெண் பிறப்புறுப்பு உலகெங்கும் ஆணாதிக்க வக்கிர புத்தியினால் அறுத்தெறியப் படுகிறது என்கின்றார்கள் பலரும்.

இதன் முக்கிய சாட்சியாக சோமாலியப் பெண்ணான வாரிஸ் அவர்கள் எழுதிய சுயசரிதை முக்கியம் பெறுகிறது. 1965-ல் சோமாலியாவின் கல்காயோ பகுதியில் ஒரு நாடோடி குடும்பத்தில் பன்னிரண்டு குழந்தைகளில் ஒருவராக பிறந்தவள் வாரிஸ் டிரி. அவளுடைய முதல் பெயரான வாரிஸ் என்பது 'பாலைவனப்பூ' என்று பொருள். அந்த அழகான பெயரைத் தவிர காலணி அற்று கிழிந்த உடையோடும், தீரா வறுமை-யோடும், கல்வியறிவற்றும் தனது குடும்பத்தின் செம்மறி ஆடுகளை மேய்த்துக் கொண்டு அவற்றை ஹைனா போன்ற கொடூர விலங்குகளிடமிருந்து காத்து வந்த நாடோடித் தேவதை அவள். அவள் ஐந்து வயதாக இருந்தபோது, அவளின் பெண் உறுப்பை கொடூரமாகச் சிதைத்தார்கள். அவளின் பதின்மூன்றாவது வயதில், 60 வயது ஆணுடன் நிச்சயிக்கப்பட்ட கட்டாயத் திருமணத்திலிருந்து தப்பிப்பதற்காக பரந்த பாலைவனத்திலிருந்து தப்பித்து ஓடி, அவளது உறவினர் ஒருவரின் உதவியால் பணிப்பெண்ணாக இங்கிலாந்து வந்து, உலகின் முன்னணி விளம்பரக் கதாநாயகியானாள். சர்வதேசமும் அங்கீகரித்த சூப்பர் மாடலான அவளது மாடலிங் வாழ்க்கை ஐநா சபையின் பெண்களுக்கான உரிமைகள் பேசுகிற சிறப்புத் தூதுவராக அவளை மாற்றியது. இன்று அவள், வலி சுமக்கும் உலகப் பெண்களுக்காக பேசுகிற வல்லமை மிக்க பெண். பாதிக்கப்பட்ட பெண்களுக்காக உலகம் எங்கும் பறந்து பறந்து பேசி வருபவள் அவள். பாதுகாப்பற்ற முறையில் பிளேடு, கண்ணாடித் துண்டுகள், முட்கள், கத்திகள் கொண்டு நடத்தப்படுகின்ற இந்தக் கொடூரத்தில் பல ஆயிரக்கணக்கானோர் இறந்து போயினர். உலகில் 200 மில்லியனுக்கும் அதிகமான பெண்கள் பிறப்புறுப்புச் சிதைப்பின் கொடூரத்திற்கு உட்பட்டிருக்கின்றார்கள். இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் கூட அது காதுங்காதும் வைத்தது போல நடந்து முடிகிறது.

இன்றும் ஆபிரிக்க நாடுகள் சிலவற்றில் நச்சு மரங்களின் முட்களினால் பெண் பிறப்புறுப்பு தைத்து மூடப்படுகிறது என்கிற வன்கொடுமையை அங்குள்ள பெண்களே கண்டும் காணாதிருக்கின்றார்கள்.

Desert Flower வாரிஸின் உண்மைக் கதை. வாசிக்கும் எவரையும் கண்ணீரில் ஆழ்த்துவது. அவளது சுயசரிதை. பெண் பிறப்புறுப்புச் சிதைப்புக் கொடூரத்திற்கெதிராக எம்மை உத்வேகம் கொள்ளவைப்பது. அவள் பெண் பிறப்புறுப்பு சிதைப்பிற்கெதிராக (FGM) ஐக்கிய நாடுகளின் சிறப்பு தூதராக UNFPA பணியாற்றியதோடு மட்டுமன்றி, ஆப்பிரிக்காவில் பெண்களின் உரிமைகளை முன்னேற்றுவதற்காக டெசர்ட் ஃப்ளவர் ஃபவுண்டேஷனை நிறுவிய தைரியசாலி. பெண் உரிமைக்கான அவரின் இப்போராட்டத்தில் பலதடை-களைச் சந்தித்தவர். பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்கிற அவரது உறுதியோடு நாமும் இணைவோம்.

*வானின்று ஒளிர்கிற தேவனே*
*உனக்காக நான் தான்*
*உத்தரிக்கின்றேன்!*

*வளர்த்த ஆட்டின்*
*தலையறுக்கப் படுவதைப் போல*
*எம் பிறப்புறுப்பை அறுக்கின்றார்கள்.*

*குழந்தைகளாகிய எம்*
*குருதி வடிந்த யோனிகளால் தான்*
*உன் புனிதம் காக்கப்படுமெனில்*
*உனை விடக் கொடூரமானவன்*
*உலகில் எவன்??*

*என் வலியின் கண்ணீரால் எழுகிறது சுனாமி*
*என் சோகப் பெருமூச்சுகளில் எரிகிறது எரிமலை*
*என் தீராச் சோகத்திலிருந்து அதிர்கிறது பூமி*

*இசையோடும், போற்றிய பாடலுடனும்,*
*நாம் துதித்த மகிழ்ச்சியான மேய்ப்பனே...*

*நீயே வேட்டைநாயாகி*
*படைப்பின் கருவறையாம்*
*எம் யோனியைச் சிதைப்பாயெனில்*
*நீ படைக்கும் உயிர் எனக்கு ஓர் மயிர்!*

2018-ல் பெண் உறுப்பு சிதைப்பால் உயிரிழந்த சகோதரிகள் ஆசியா ஃபரா Asiya Farah மற்றும் கதீஜா ஃபரா Khadija Farah சகோதரிகள் நினைவாக எழுதிய கவிதை இது!



*sithivinayagam@thaiveedu.com*

# மரண மங்கை – மனங்கவர் தூதர் – ஸ்டாலினின் வீரப் பெண்

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

## தொடக்கக் குறிப்புக்கள்:

சுயசரிதைகளுக்கும் நினைவுக் குறிப்புகளுக்கும் வரலாற்றில் தனித்துவமான இடமுண்டு. பல சுயசரிதைகள் எரிச்சலூட்டுபவை, சில சுயபுராணங்கள், இன்னும் சில தற்பெருமை பேசும், இன்னும் சில அதிமனிதர்களாகக் காட்ட முயற்சிக்கும். பெரிய மனிதர்களின் சுயசரிதைகள் என்பதற்காய் கவனம் பெற்ற சுயசரிதைகளும் உண்டு. அவை கவனம் பெற்றளவு முக்கியமானவையோ சுவையானவையோ அல்லாமல் இருக்கும். மிகவும் இயல்பாக எழுதப்படுகின்ற சுயசரிதைகள் அந்த மனிதரின் அன்றாடப் போராட்டங்களின் வழி விரிகின்றன. அவை நல்லதொரு வாசிப்பு அனுபவத்தைத் தருபவை. சில தமது கதைகளின் வழி முக்கியமான வரலாற்றுச் செய்திகளை எழுதிச் செல்வன. பெரும்பாலான சுயசரிதைகள் அலுப்புத் தட்டுவன. மிகச்சிலவே விறுவிறுப்பாய், சோராதா வாசிப்பைத் தருவன. அவ்வாறான ஒரு சுயசரிதை குறித்தே இங்கு பேச விழைகிறேன்.




உலக வரலாற்றின் மிகவும் முக்கியமான காலப்பகுதியில் துணிவும் தீர்க்கமான சிந்தனையும் ஒருங்கே கொண்ட ஒரு வீரப்பெண்ணின் வாழ்க்கைக் கதையே Lady Death: The Memoirs of Stalin's Sniper (மரண மங்கை: ஸ்டாலினின் சினைப்பரின் நினைவுகள்) என்ற சுயசரிதமாகும். இரண்டாம் உலகப் போரில் ஒரு பெண் சினைப்பராக (ஒளிந்திருந்து குறிபார்த்துத் சுடும்) சோவியத் யூனியனின் செம்படையில் பணியாற்றிய லியுட்மிலா மிகைலோவ்னா பாவ்லிச்சென்கோவின் (Lyudmila Mikhailovna Pavlichenko) சுயசரிதையே இந்நூலாகும். ஹிட்லரின் படையெடுப்பை எதிர்த்து செம்படையில் ஒரு போர்வீரராக இணைந்து உலகிலேயே அதிகூடிய சினைப்பர் மரணங்களைச் சாதித்த பெண்ணாக உயர்ந்து, இரண்டாம் உலகப்போரின் முக்கிய மூன்று ஆளுமைகளான ஜோசப் ஸ்டாலின், பிராங்கிளின் ரூஸ்வெல்ட் மற்றும் வின்சன்ட் சேர்ச்சில் ஆகியோரைச் சந்தித்து மேற்குலகினால் கொண்டாடப்பட்ட பெண்ணாக எப்படி உயர்ந்தார் என்ற கதையை உணர்வுகளோடு இச்சுயசரிதை பேசுகிறது.

இந்த சுயசரிதைக்கு முன்னுரை எழுதியுள்ள இராணுவ வரலாற்றாசிரியரான மார்ட்டின் பெக்லர் பின்வருமாறு தொடங்குகிறார்:

'சினைப்பர் இலக்கியங்கள் நிறைந்த இத்துறையில் இந்த நினைவுக் குறிப்பு முற்றிலும் தனித்துவமானது, ஏனெனில் இது ஒரு பெண் முன்னணி சினைப்பரால் எழுதப்பட்ட முதல் புத்தகமாகும். லியுட்மிலா மைக்கைலோவ்னா பாவ்லிச்சென்கோ ஒரு சாதாரண சினைப்பரல்ல. அவர் 309 அதிகாரப்பூர்வ மரணங்களை நிகழ்த்தி உலகிலேயே அதிக மதிப்பெண் பெற்ற பெண் சினைப்பர் என்ற பெருமைக்குரியவர். இங்கு அதிகாரப்பூர்வ மரணங்கள் என்பவை, இரண்டாம் தரப்பினரால் கவனிக்கப்பட்டவை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். பெரும்பாலான சினைப்பர்கள் நிகழ்த்

தும் மரணங்களில் பெரும்பகுதி இரண்டாம் தரப்பினால் கவனிக்கப்படுவதில்லை. லியுட்மிலாவினால் மேற்கொள்ளப்பட்ட பல மரணங்கள் தாக்குதல்களின் போது செய்யப்பட்டன, போரின் உச்சக்கணங்களில் பல சினைப்பர் மரணங்கள் கவனியாது போவதுண்டு. எனவே அவரின் சரியான மொத்த எண்ணிக்கை தெரியவில்லை, ஆனால் குறைந்தபட்டசம் 500க்கு மேற்பட்ட மரணங்களை நிச்சயம் அவர் நிகழ்த்தியிருக்க கூடும்.

மற்றொரு மட்டத்தில், இந்த குறிப்பிடத்தக்க நினைவுக் குறிப்பு, தவறான ஆதாரமற்ற விமர்சனங்கள் மற்றும் துல்லியமற்ற எழுத்துக்களைப் பற்றிய பதிவுகளை திருத்தி நேராக்குகிறது. குறிப்பாக இவரை இலக்காகக் கொண்ட - அவர் ஒரு துப்பாக்கி சுடும் வீரர் அல்ல, ஆனால் செம்படையின் பிரச்சாரத்தின் விளைவாகும் - அவதூறுகளுக்குத் தக்க பதில் அளிக்கிறது. லியுட்மிலா மற்றும் சக சினைப்பரான வாசிலி கிரிகோரிவிச் ஜைட்சேவ் ஆகியோர் உண்மையான நாயகர்கள் என்பதை வரலாறு நிரூபித்துள்ளது. இங்கு கவனிக்கப்பட வேண்டியது யாதெனில் பொதுவாக ஒரு சோவியத் சினைப்பரின் ஆயுட்காலம் மிகக் குறுகியது. ஸ்டாலின் கிராட்டில் இருந்த சினைப்பர்களின் ஆயுட்காலம் இரண்டு வாரங்களே. நீங்கள் எவ்வளவு காலம் உயிர் பிழைத்தீர்களோ, அவ்வளவு சிறப்பாகவும் வலுவாகவும் நீங்கள் வாழ்வதற்கான வாய்ப்புகள் இருந்தன. தனக்கு 'மரண மங்கை' என்ற புனைப்பெயரைப் பெற்றுத்தரும், சோவியத் யூனியன் வழங்கும் உயரிய விருதுகளைப் பெற்று, ஸ்டாலினைச் சந்தித்து, அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பாவுக்குப் பயணம் செய்யும் எதிர்காலம் தான் வரப்போகிறது என்று அவர் கனவிலும் நினைக்கவில்லை. ஒரு வரலாற்று ஆசிரியராக ஆசைப்பட்ட அவரது வாழ்க்கையின் போக்கை TOZ -8 22-கலிபர் இலக்கு துப்பாக்கி மாற்றும் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. ரஷ்யாவிற்கு வெளியே பெரும்பாலும் அறியப்படாத, இந்த சிறிய ஒற்றைக் குண்டுத் துப்பாக்கிகள் ரைபிள், கிளப்புகளிலும் சிறிய விளையாட்டுகளில் வேட்டையாடவும் பயன்படுத்தப்பட்டன. இந்த மலிவான, அதே வேளை திடமாகக் கட்டமைக்கப்பட்ட துல்லியமான துப்பாக்கியே இரண்டாம் உலகப் போரில் முக்கிய பங்காற்றும் என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை. கை-கண் ஒருங்கிணைப்பு, தசை உறுதி, நல்ல கண்பார்வை மற்றும் பொறுமை ஆகியவற்றின் சரியான கலவையை எவர் பெற்றிருக்கிறாரோ அவரே நல்ல சினைப்பராக முடியும். இத்திறமைகள் லியுட்மிலாவிற்கு இருந்தன என்பது இயற்கையில் நிகழ்ந்த ஒன்றாகும். இவையனைத்தையும் விட இன்னொரு முக்கியமான குணாம்சமே சாதாரண சினைப்பர்களிடமிருந்து அதிவிஷேச சினைப்பர்களை வேறுபிரித்தது. அது உள்ளார்ந்த வேட்டையுணர்வு. இது பொதுவாக ஆண்களிடம் இல்லை அதேவேளை இது பெண்களில் மிக அரிதாகவே இருக்கின்ற பண்பு. இது லியுட்மிலாவிடமிருந்தது.'

## யார் இந்த லியுட்மிலா?

லியுட்மிலா பாவ்லிச்சென்கோ 1916-ல் உக்ரேனியத் தலைநகரான கியேவ்விற்குத் தெற்கே உள்ள நகரான பெலாயா செர்கோவில் பிறந்தார். குழந்தைப் பருவத்தில் ஆண்களோடு சரிநிகர் சமானமாய் விளையாடும் இயல்புடையவராக இருந்தார். பெண்களால் ஆண்களுக்குச் சமமாக இருக்க முடியும் என்பதை நிரூபிப்பதில் தீவிரம் காட்டினார். தனது 14-வது வயதில் குடும்பத்துடன் தலைநகர் கியேவ்விற்கு வந்த அவர் விளையாட்டுக்களில் ஆர்வம் காட்டினார். உள்ளூர் தொழிற்சாலையில் பணிக்குச் சேர்ந்ததோடு கியேவ் பல்கலைக்கழகத்தில் வரலாறு கற்பதற்காக தன்னைச் சேர்த்துக் கொண்டார். வரலாற்றில் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர் ஒரு ஆசிரியராக வேண்டும் என்று விருப்புக் கொண்டார். 1941-ம் ஆண்டு சோவியத் யூனியனுக்கு எதிராக ஹிட்லர் ஒபரேஷன் பார்பரோசாவைத் தொடங்கினார். அந்த நேரத்தில், லியுட்மிலாவுக்கு 24 வயது. பல்கலைக்கழகத்தில் நான்காம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தார். ஜேர்மன் படையெடுப்பு பற்றி



அறிந்தவுடன், லியுட்மிலா விரைவில் ஒடேசா பகுதியில் உள்ள ஆட்சேர்ப்பு அலுவலகத்திற்குச் சென்று தனது பெயரைப் பதிவு செய்தார். பதிவாளர்கள் லியுட்மிலாவை ஒரு செவிலியராக மாற்றத் தூண்டினர், ஆனால் அவரது மனம் சோவியத் காலாட்படையில் சேர்வதில் உறுதியாக இருந்தது. காலாட்படையில் தனது திறமைகளை நிரூபித்த பிறகு, லியுட்மிலா செம்படையின் 25-வது ரைபிள் பிரிவில் சினைப்பராகச் சேர்ந்தார். அவர் அங்கு பணியாற்றிய 2,000 சோவியத் பெண் சினைப்பர்களில் ஒருவரானார், அவர்களில் 500 பேர் மட்டுமே போரின் இறுதியில் உயிர் தப்பினர்.

சுமார் இரண்டரை மாதங்கள், ஒடெசா முற்றுகையின் போது லியுட்மிலா முன்னணியில் போராடினார். ஒடெசாவில் இருந்த போது, அவரது பணிக்காக மூத்த சார்ஜெண்டாக பதவி உயர்வு பெற்றார். அக்டோபர் 1941-ல், ருமேனிய இராணுவம் ஒடெசாவின் கட்டுப்பாட்டைப் பெற்றபோது, லியுட்மிலாவும் அவரது பிரிவும் நகரத்தைப் பாதுகாக்க செவாஸ்டோபோலுக்கு திரும்பியது. லியுட்மிலா எட்டு மாதங்கள் செவாஸ்டோபோல் முற்றுகையில் போராடினார். அங்கு தீவிரமான சண்டையில் சோவியத் யூனியனுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது. செவாஸ்டோபோலில், அவர் அயராது போரிட்டு எதிரிகளை வீழ்த்தினார். அவருக்கு லெப்டினன்ட்டாக மற்றொரு பதவி உயர்வு வழங்கப்பட்டது. ஏராளமான தொடர்ச்சியான சமர்களில் அவர் தனித்துவமாகத் திகழ்ந்தார். குறிப்பாக மூன்று நாட்கள் இரவும் பகலுமாக நடந்த சண்டையில் 36 எதிரிகளை வீழ்த்தினார். அவர் போராடிய ஒவ்வொரு சண்டையிலும் வென்றார்.

ஜூன் 1942-ல், செவாஸ்டோபோலில் சண்டையிடும் போது, ஒரு மோட்டார் ரவுண்டில் இருந்து துண்டுகள் அவர் முகத்தில் தாக்கியதால் காயமடைந்தார். இராணுவம் லியுட்மிலாவை மிகவும் மதிப்புமிக்க சொத்தாகக் கண்டது. அவர் காயத்திலிருந்து முழுமையாக குணமடைவதற்குள், சோவியத் உயர்பீடம் அவரை போரில் இருந்து விலக்கியது. ஜேர்மன் இராணுவம் அவரை நன்கு அறிந்திருந்தது. அவர்கள் அவருக்கு லஞ்சம் கொடுக்க முயன்றனர், ஜேர்மன் லஞ்சம் காலப்போக்கில் அச்சுறுத்தலாக மாறியது. இந்த அச்சுறுத்தலைக் கேட்ட லியுட்மிலா, எதிரி தனது சாதனையை துல்லியமாக அறிந்திருப்பதைக் கேட்டு மகிழ்ச்சி அடைவதாகக் கூறினார். அவர் காயங்களிலிருந்து முழுமையாக குணமடைந்த பிறகு, லியுட்மிலா முன் வரிசையில் சண்டையிடுவதற்கு திருப்பி அனுப்பப்படவில்லை. மாறாக, சோவியத் உயர்பீடம் அவருக்கு ஒரு புதிய பாத்திரத்தை வழங்கியது. அவையே இந்த சுயசரிதையில் உள்ள மிகவும் முக்கியமானதும் சுவையானதுமான பகுதிகளாகும். அதன்பின்னர் லியுட்மிலா ஒரு போதும் போருக்குத் திரும்பவில்லை, மாறாக 1945-ல் போர் முடியும் வரை மற்ற சோவியத் துப்பாக்கி சுடும் வீரர்களுக்குப் பயிற்சி அளித்தார். பின்னர் அவர் கியேவ் பல்கலைக் கழகத்தில் தனது படிப்பை முடித்து வரலாற்றாசிரியர் ஆனார்.

துரதிர்ஷ்டவசமாக, பல வீரர்களைப் போலவே, லியுட்மிலா-வும் பல ஆண்டுகளாக மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்தார். அக்டோபர் 10, 1974-ல், லியுட்மிலா பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு இறந்தார். அவரது நினைவாக இரண்டு சோவியத் தபால்தலைகள் அச்சிடப்பட்டுள்ளன, ஒன்று 1943-ல் அவரது பணியின் சிறப்பைப் போற்றுவதற்காக. இரண்டாவது அவரது மரணத்தைத் தொடர்ந்து 1976-ல் அவரை நினைவு கூர்வதற்காக. இன்று ரஷ்யாவில், லியுட்-மிலா பாவ்லிச்சென்கோ ஒரு தலைசிறந்த இராணுவ வீரராக நினைவு கூறப்படுகிறார். அவரது மரணத்தின் பின்னர் லியுட்-மிலா பாவ்லிச்சென்கோ என்ற பெயர் சோவியத் யூனியனின் மீன்வளத்துறை அமைச்சகத்திற்குச் சொந்தமான ஒரு கப்பலுக்கு வழங்கப்பட்டது, பெலாயா செர்கோவ் நகரத்தில் அவர் பயின்ற பாடசாலைக்கும் அவர் வாழ்ந்த தெருவுக்கும் அவரது பெயர் இடப்பட்டுள்ளது. சினைப்பர்களின் வரலாற்றில் தவிர்க்கவியலாத பெயர் லியுட்மிலா பாவ்லிச்சென்கோ. இவர் என்றென்றும் உலக வரலாற்றில் மிகவும் வெற்றிகரமான பெண் சினைப்பராக அறியப்படுவார்.

## சுயசரிதையின் கதை:

இந்த கதாநாயகியின் முழுமையான மற்றும் உண்மையான சுயசரிதை ஒரு கவர்ச்சியான நாவலைப் போன்றது. அதில் சோகமான பக்கங்கள் உள்ளன. ஏனென்றால், 54-வது ரைபிள் ரெஜிமென்டுடன் 26 ஜூன் 1941-ல் செம்படையின் வரிசையில் சேர்ந்ததால், அவர் மேற்கு எல்லைகளிலிருந்து ஒடெசா வரை கடினமான பின்வாங்கலைச் செய்தார். இதில் வீரப் பக்கங்கள் உள்ளன. நகரத்தை பாதுகாக்கும் போது, அவர் இரண்டு மாதங்களில் 187 நாஜிக்களை அழித்தார். செவாஸ்டோபோலின் முற்றுகை இந்த சினைப்பருக்கு மேலும் பெருமையை அளித்தது, ஏனெனில் அவரால் கொல்லப்பட்ட எதிரிகளின் எண்ணிக்கை 309 ஆக உயர்ந்தது. இது பாடல் வரிகளையும் கொண்டுள்ளது. போரில் தான் அவர் தனது வாழ்க்கையின் அன்பை சந்தித்தார். அவரது சொந்த படைப்பிரிவின் தைரியமான ஜூனியர் லெப்டினன்ட், அலெக்ஸி அர்காடிவிச் கிட்சென்கோ, அவரது கணவர் ஆனார். துயரார்ந்த சம்பவமான பின்னாளில் தனது கணவரின் மரணத்தையும் தனது கண் முன்னே கண்டார்.

வரலாற்று மாணவரான லியுட்மிலா ஒரு போர் நாட்குறிப்பை வைத்திருந்தார். அவ்வப்போது அதில் மிகச் சுருக்கமான குறிப்புகளை எழுதினார். துப்பாக்கி சுடும் வீரரால் பென்சில் அல்லது பேனாவை தினமும் எடுக்கக் கூடியதாக இருக்காது. செவாஸ்டோபோல் போர் குறிப்பாக கடுமையான மற்றும் இடைவிடாததாக இருந்தது. இதனால் அவரால் நிறைய எழுத இயலவில்லை. சோவியத் கடலோர காவல்படையில் மேஜர் பதவியில் 1953-ல் ஓய்வு பெற்றதும், லியுட்மிலா தனது குறிப்புகளை முதலில் இருந்து நினைவு கூர்ந்தார். ஒரு வர



லாற்றாசிரியராக அவர் தனது நினைவுக் குறிப்புகளை தீவிரமாக அணுகினார், மேலும் அவை வெளியிடப்படுவதற்கு முன்பு நூலகங்கள் மற்றும் காப்பகங்களில் ஆராய்ச்சி தேவை என்று உணர்ந்தார். அதை நோக்கிய முதல் அடியை எடுத்து வைத்தார். 1958-ம் ஆண்டில், 'வீரம் மிக்க கடந்த காலம்: செவஸ்டோபோலின் பாதுகாப்பு' என்ற தலைப்பில் நடந்தவற்றைத் எழுதுவதற்கு பிராந்திய அரசியல் பதிப்பகத்தால் நியமிக்கப்பட்டார். அவர் 72 பக்க துண்டுப்பிரசுரத்தை எழுதினார். இதைத் தொடர்ந்து அவர் பத்திரிகைகளுக்கு பல கட்டுரைகளை வழங்கினார். இவை ஒரு சினைப்பராக அவர் ஆற்றிய சேவையின் நினைவுகள் அல்ல. மாறாக, அக்டோபர் 1941 மற்றும் ஜூலை 1942 க்கு இடையில் செவாஸ்டோபோல் முற்றுகைக்கு எதிரான பாதுகாப்பில் முன் வரிசையிலும் பின்புறத்திலும் வெளிப்பட்ட முக்கிய நிகழ்வுகளின் பொதுவான விவரிப்புகளாக அவை இருந்தன.

இந்த வெளியீடுகளைத் தொடர்ந்து, லியுட்மிலா 1964-ல் சோவியத் ஒன்றியத்தின் பத்திரிகையாளர் சங்கத்தின் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்பட்டார், மாஸ்கோ பிரிவின் இரா

னுவ வரலாற்றுப் பிரிவின் செயலாளராக ஆனார். சக ஊழியர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பதாலும், அடுத்த தலைமுறையினருக்கு தேசபக்தியுள்ள இராணுவக் கடமையின் உணர்வைப் பயிற்றுவிக்கும் பணியில் தீவிரமாகப் பங்கேற்பதாலும் தனது நினைவுகளை முழுமையாகப் பதிவிட விரும்பினார். 1960-களின் இறுதியில், போர்க்கால நினைவுகள் மெதுமெதுவாக நூலாக்கம் பெறத் தொடங்கின. பலர் தங்கள் போர் அனுபங்களை எழுதத் தொடங்கினார்கள். அவற்றைப் படித்ததும், லியுட்மிலா தனது வேலையைத் தொடங்கினார்.

அவர் இப்போது போரில் சினைப்பர்களின் பாத்திரத்தில் கவனம் செலுத்த விரும்பினார், மேலும் இந்த இராணுவத் தொழிலுடன் தொடர்புடைய அனைத்தையும் விரிவாக விவரிக்க விரும்பினார்: பயிற்சி முறைகள், போர்க்கள தந்திரங்கள் மற்றும் குறிப்பாக, பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் குறித்து எழுத அவர் விரும்பினார். தான் பயன்படுத்திய ஆயுதங்கள் தொடர்பில் அவருக்கு சிறந்த அறிவு இருந்தது. 1940-கள் மற்றும் 1950-களில் இது போன்ற தகவல்களை வெளியிட அனுமதி இருக்கவில்லை. ஆனால் எதிரியின் சினைப்பர்களுடனான சண்டையின் கதை அது இல்லாமல் முழுமையடையாது என்பதை அவர் அறிந்திருந்தார். 1960-களின் இறுதியில் இத்தகவல்களை வெளியிட அனுமதியிருந்தது.

முந்தைய வழிமுறைகளை நினைவுகூர்ந்து, லியுட்மிலா விடா முயற்சியுடன் தகவல்களைச் சேகரித்தார் தனது கையெழுத்துப் பிரதிக்கான சிறந்த இலக்கிய வடிவத்தை நாடினார். அவர் தனது மொழியில் ஒரு கதை போல சுவாரசியமாகவும் அதேவேளை விரிவான தகவல்களுடன் இருக்கவேண்டும் என்று அவர் விரும்பினார். தாய்நாட்டிற்கான பெரும் போர் முடிவடைந்ததிலிருந்து இருபது ஆண்டுகள் கடந்தபின்னர் இத்திட்டத்தை நடைமுறைபடுத்துவது சவாலானதாக இருந்தது. இரண்டு தசாப்தகால இடைவெளி அவரது திட்டத்தை விரைவாக நிறைவேற்றுவதற்கு ஏற்றதாக இல்லை என்பது அவருக்கு தெளிவாகத் தெரிந்தது. பல விஷயங்களை நினைவுபடுத்துவது கடினமாக இருந்தது. பல பதிவுகள் தொலைந்து போயின. அதுமட்டுமின்றி, அவர் தனது சொந்த மதிப்புமிக்க ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள் மற்றும் தனிப்பட்ட பொருட்களை அருங்காட்சியகங்களுக்கு ஒப்படைத்திருந்தார். கடுமையான சுகயீனம் அவரை ஆட்கொண்டது. உலகம் வியந்த ஒரு பெண் சினைப்பரின் வாழ்க்கைக் கதையைப் புத்தகமாகக் காண லியுட்மிலா உயிரோடு இருக்கவில்லை. நல்வேளையாக லியுட்மிலாவின் மகன் ரோஸ்டிஸ்லாவ் அலெக்ஸீவிச் பாவ்லிச்சென்கோவின் துணைவியரான லுபோவ் டேவிடோவ்னா க்ராஷென்னிகோவா-பாவ்லிச்சென்கோவின் முயற்சியால் அவரது கையெழுத்துப் பிரதியின் துண்டுகள் பாதுகாக்கப்பட்டிருந்தன. அவையே இந்த நூலாக விரிந்துள்ளன.

19 அத்தியாயங்களாக விரிகின்ற இந்த சுயசரிதம் 1932-ல் குடும்பமாக தலைநகர் கியேவ்விற்கு இடம்பெயர்வதில் தொடங்குகிறது. அவரது நேரடிப் போர்க்கால அனுபவங்கள் முதல் 13 அத்தியாயங்களில் விரிகின்றன. அவர் காயம்பட்டு மொஸ்கோவிற்கு மாற்றலாகி வருவதுடன் 14-வது அத்தியாயம் தொடங்குகிறது. இறுதி 5 அத்தியாயங்கள் அவரது உலகப் பயணம், போருக்குப் பிந்தைய சோவியத் யூனியன் ஆகியவற்றைப் பேசுகிறது. இறுதியில் தான் எவ்வாறு ஒதுக்கப்பட்டேன் என்ற கதையைச் சொல்லும் அத்தியாயத்துடன் இச்சுயசரிதை முடிகிறது.

## போர்க்களத்தில் இருந்து அரசியற்களத்திற்கு:

போர்க்களத்தில் காயமுற்ற லியுட்மிலா தலைநகர் மொஸ்கோவிற்கு அனுப்பப்படுகிறார். அங்கு இளம் கம்யூனிஸ்ட் கழகத்தில் பணியாற்றுகிறார். போர்க்களத்தில் இருந்து ஓய்வு பெற்ற லியுட்மிலாவின் அடுத்த கட்ட செயற்பாடுகளை அவரது சொற்களிலேயே இந்தப்புத்தகம் விவரிக்கிறது. இனி லியுட்மிலா பேசுவார்:

1942-ம் ஆண்டு ஆகஸ்ட் 3-ம் திகதி சோவியத் யூனியனுக்கான அமெரிக்க தூதர் அவெரெல் ஹாரிமேன், ஸ்டாலினுக்கு ஜனாதிபதி பிராங்க்ளின் ரூஸ்வெல்ட்டிடமிருந்து வந்த ஒரு தந்தியை அனுப்பினார், அதில் செப்டம்பர் 2 முதல் 5 வரை, அமெரிக்கா, சோவியத் யூனியன், பிரித்தானியா மற்றும் சீனா ஆகிய நான்கு நேச நாடுகளின் பிரதிநிதிகள் ஒரு முன்னணி பாத்திரத்தை வகிக்கக்கூடிய ஒரு சர்வதேச மாணவர் மாநாட்டை நடத்த உத்தேசித்துள்ளோம். ஜேர்மன் பாசிஸ்டுகளுக்கு எதிரான போரில் பங்குபற்றிய இரண்டு அல்லது மூன்று பேர் கொண்ட சோவியத் மாணவர் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி தனது விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இத்தந்தி கிடைப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் இவ்விரு நாடுகளும் மிகப்பாரிய நெருக்கடியான கருத்துமோதலில் ஈடுபட்டன. சோவியத் யூனியன் மேற்கு ஐரோப்பாவில் ஜேர்மனிக்கு எதிராக இரண்டாவது போர்முனையைத் திறக்க தனது நேச நாடுகளைக் கோரியது. ஆனால் அதை மறுத்து நேச நாடுகளிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. இவை மிகவும் விரும்பத்தகாத செய்திகளாக இருந்தன. 1942-ல் கோடையில், செம்படை முனைகளில் நிலைமை கடினமாகி வந்தது. ஜூலை முதல் சில நாட்களில், செவாஸ்டோபோல் வீழ்ந்தது மற்றும் கிரிமியா முற்றிலும் ஜெர்மன் கைகளில் இருந்தது. நாஜிக்கள் காகசஸுக்கு எதிராக புதிதாகக் கிடைத்த படைகளை முன்னகர்த்தவும் எண்ணெய் வயல்களைக் கைப்பற்றவும் தயாராகி வந்தனர். மேலும், அவர்கள் டான், குபன் மற்றும் வொல்காவின் வளமான பகுதிகளை ஆக்கிரமிக்க திட்டமிட்டனர். ஜெனரல் பெர்ஸ்ட் பவுலஸின் தலைமையில் ஜெர்மானிய இராணுவம் ஸ்டாலின்கிராட்டில் ஏற்கனவே முன்னேறிக்கொண்டிருந்தது.

இந்தப் பின்புலத்திலேயே நேச நாடுகள் வட அமெரிக்காவில் ஒரு சர்வதேச மாணவர் மாநாட்டைக் கூட்ட எண்ணியிருந்தன. சோவியத் யூனியன் மிகுந்த நெருக்கடியில் இருந்தது. நேச நாடுகள் உதவுவதற்கு தயாராக இல்லை என்பது ஸ்டாலினுக்குத் தெளிவாகத் தெரிந்தது. இத்தகைய கடுமையான மற்றும் கவலையான காலங்களில் இளைஞர்கள், குறிப்பாக சோவியத் இளைஞர்கள் எதைப் பற்றி பேச முடியும்? பாசிசத்திற்கு எதிரான போராட்டம் பற்றி மட்டுமே முடியும். ஐரோப்பாவின் வயல்களில் இரத்தக்களரி படுகொலைகளை கட்டவிழ்த்துவிட்ட ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக அனைத்து முற்போக்கு சக்திகளும் இணைந்து மனிதகுலத்தின் ஒன்றுபட்ட முயற்சியின் ஊடே பாசிசத்தை வீழ்த்த முடியும். இந்தச் சூழலில், இரண்டாவது முன்னணி பற்றிய கேள்

வியை எழுப்புவது சாத்தியம், உண்மையில் அவசியம். இந்த தலைப்பு மாணவர் மாநாட்டில் எழுப்பப்பட வேண்டும் என்றால், எல்லா வகையிலும் அதற்கான வாய்ப்புகள் இருக்க வேண்டும் என்று எங்கள் தலைமைத் தளபதி ஸ்டாலின் விரும்பினார்.

அவர் அமெரிக்கா, நிகழ்ச்சிக்கான திட்டத்தை தெளிவுபடுத்த வேண்டும் என்று கோரினார். வாஷிங்டனிலிருந்து ஒரு பதில் வந்தது: ஆம், இளைஞர்களின் மிகவும் முற்போக்கான அங்கமாக, பாசிசத்திற்கு எதிராகப் பேச மாணவர்களை அழைக்கும் ஒரு பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்படும். பின்னர் சோவியத் பிரதிநிதிகள் அமெரிக்காவில் தங்குவதற்கான நிபந்தனைகள், பயணத்திற்கான பாதை (ஏனெனில் ஈரான், எகிப்து மற்றும் அட்லாண்டிக் பெருங்கடல் வழியாக ஒரு சுற்றுப் பாதை வழியாக விமானம் மூலம் மட்டுமே வட அமெரிக்காவை அடைய முடியும்) போன்ற விடயங்கள் அமெரிக்காவுடன் விவாதிக்கப்பட்டன. வெளிநாட்டு விவகாரங்களுக்கான மக்கள் ஆணையத்தின் ஊழியர்கள் அதில் கடுமையாக உழைத்தனர். அனைத்தும் உறுதிசெய்யப்பட்டாலேயோழிய பிரதிநிதிகளை அனுப்புவதற்குத் தலைமைத்தளபதி ஸ்டாலின் தயாராக இல்லை.

இளம் கம்யூனிஸ்ட் கழகத்தில் இருந்து இதில் பங்கேற்கக் கூடியவர்களின் பட்டியலைத் தயாரிக்கும்படி ஸ்டாலின் கேட்டார். குறிப்பாக சோவியத்தின் பிரதிநிதிகளில் ஒரு பெண் பிரதிநிதி கட்டாயம் இருக்க வேண்டும் என்று கூறினார். தெரியப்பட்ட மூவரில் நானும் ஒருவரானேன். புறப்படுவதற்கு முதன்நாள் ஸ்டாலின் எங்களைச் சந்திக்க முடிவானது. நாங்கள் அவரது அலுவலகத்திற்குச் சென்றோம். எங்களை வரவேற்ற தலைமைத்தளபதி ஸ்டாலின் 'தோழர்களே, உங்களிடம் ஏதேனும் கோரிக்கைகள் உள்ளதா?' என்று கேட்டார். எனது சக தோழர்கள் தலைமைத்தோழரை தனிப்பட நேரில் அவரது அலுவலகத்தில் கண்ட உணர்விலிருந்து வெளிவராததால் அமைதியாக இருந்தனர். நான் அதே வழியில் பாதிக்கப்படவில்லை. நான் வித்தியாசமான ஒன்றை அனுபவித்தேன்: முன்னெப்போதுமில்லாத உற்சாகம். நான் மேலிடத்தின் வார்த்தைகளைக் கேட்க விரும்பினேன். 'ஆம், தோழர் ஸ்டாலின் அவர்களே, எனக்கு ஒரு வேண்டுகோள் இருக்கிறது' என்று மெதுவாகச் சொன்னேன். 'எங்களுக்கு உண்மையில் ஒரு ஆங்கில-ரஷ்ய மற்றும் ரஷ்ய-ஆங்கில அகராதிகளும், இலக்கணப் பாடப்புத்தகமும் தேவை. ஏனென்றால், உங்கள் எதிரிகளைப் போலவே உங்கள் கூட்டாளிகளையும் நன்கு அறிவது முக்கியம்!'

'நன்றாகச் சொன்னீர்கள், தோழர் பாவ்லிச்சென்கோ.' உலகப் பாட்டாளி வர்க்கத் தலைவர் புன்னகைத்தார். 'நீங்கள் தனிப்பட்ட முறையில் என்னிடமிருந்து புத்தகங்களைப் பெறுவீர்கள்' என்றார். மறுநாள் நாங்கள் புறப்படும் போது தலைமைத்தோழரிடமிருந்து தனிப்பட்ட முறையில் எனக்கு ஒரு பொதி வந்திருந்தது. தனது சொந்த ஆங்கில-ரஷ்ய அகராதியை எனக்கு அனுப்பியிருந்தார். நாங்கள் நீண்ட பயணத்தின் பின்னர் அமெரிக்காவிற்கு சென்று சேர்ந்திருந்தோம். எமக்கு ஜனாதிபதி மாளிகையில் விருந்துபசாரத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவ்விரவு விருந்தை ஜனாதிபதியின் துணைவியார் எலினோர் ரூஸ்வெல்ட் நடாத்தினார். வந்திருந்தவர்கள் தற்போதைய போரின் நிலை பற்றி அறிய ஆவலாய் இருந்தார்கள். எனது தோழர்கள் அதற்கு விரிவான விளக்கமான பதில்களை வழங்கிய வண்ணமிருந்தனர். திடீரென்று எலினோர் ரூஸ்வெல்ட் என்னிடம் ஒரு கேள்வியை எழுப்பினார், இந்த கேள்வியை லெப்டின்ட் தரப் பட்டியை அணிந்திருந்த ஒரு இளைஞர் ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்தார்: 'தொலைநோக்கி காட்சிகள் மூலம் உங்கள் எதிரிகளின் முகங்களை நீங்கள் நன்றாகப் பார்த்திருந்த போதும் அவர்களை உங்களால் சுட்டுக்கொல்ல முடியுமாயின், அன்புள்ள லியுட்மிலா, அமெரிக்கப் பெண்ணுக்கு உன்னைப் புரிந்துகொள்வது கடினம்.' மொழிபெயர்ப்பாளர் இந்த வாக்கி



யத்தின் கடுமையை எப்படியாவது மென்மையாக்க முயன்றார். இது கண்ணியமாகத் தெரிந்தது, ஆனால் ஒரு குறிப்பிட்ட விரும்பத்தகாத தொனியைக் கொண்டிருந்தது. முதல் பெண்மணி தன் பார்வையை கைவிடாமல் என்னை உன்னிப்பாகப் பார்த்தார். அவர் ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஒருவேளை அவர் என்னை ஒரு சோதனைக்கு உட்படுத்த முடிவு செய்திருக்கலாம். நாங்கள் முன்னணி வீரர்கள் அல்லது துப்பாக்கி சுடும் வீரர்கள் அல்ல, மாறாக சர்வதேச மாணவர் மாநாட்டில் உரையாற்றுவதற்காக பிரத்யேகமாக அனுப்பப்பட்ட கம்யூனிஸ்ட் பிரச்சாரகர்கள் என்று சில பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க செய்தித்தாள்களின் வெளியீடுகள் எழுதியுள்ளது பற்றி ஏற்கனவே எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் பொருள் ஜனாதிபதியின் மனைவிக்கு தெளிவான மற்றும் புரிந்துகொள்ளக்கூடிய பதில் வழங்கப்பட வேண்டும்.

'திருமதி ரூஸ்வெல்ட், உங்கள் அழகான, செழிப்பான நாட்டிற்கு வருவதற்கு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பல ஆண்டுகளாக உங்களுக்கு போர்கள் தெரியாது. உங்கள் நகரங்கள், கிராமங்கள், தாவரங்களை யாரும் அழிக்க மாட்டார்கள். உங்கள் குடிமக்களையும், உங்கள் சகோதரிகளையும், சகோதரர்களையும், தந்தைகளையும் யாரும் கொல்ல மாட்டார்கள்,' என்று நான் மெதுவாகச் சொன்னேன், சில காரணங்களால் எனது வார்த்தைகள் அங்கிருந்தவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. நிச்சயமாக, என் பேச்சு நேர்த்தியானதாக இல்லை: உச்சரிப்பில் சில தவறுகள் இருந்தன, காலங்களைப் பயன்படுத்துவதில், மற்றும் வாக்கிய கட்டுமானம்

மிகவும் அடிப்படையானது. ஆனால் அமெரிக்கர்களுக்கு அதன் அர்த்தம் கிடைத்தது. பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் இருந்து வெகு தொலைவில் உள்ளவர்களுக்கு நான் விளக்கினேன், 'குண்டுகள் நகரங்களையும் கிராமங்களையும் அழிக்கும், இரத்தம் சிந்தப்பட்ட, அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ள எனது பூர்வீக நிலம் கடுமையான சோதனைக்கு உள்ளான இடத்திலிருந்து நாங்கள் வந்துள்ளோம். ஒரு துல்லியமான புல்லட் ஒரு தீய எதிரிக்கு பதில் அல்ல. என் கணவர் செவஸ்டோபோலில் என் கண் முன்னே தனது உயிரை இழந்தார், என்னைப் பொறுத்த வரையில், எனது தொலை-நோக்கிப் பார்வையில் நான் பார்த்த எந்த மனிதனும் அவரைக் கொன்றவனே'. வித்தியாசமாக, எலினோர் வெட்கப்பட்டார். அவர் அவசரமாக விலகிப் பார்த்து, என்னை புண்படுத்த விரும்பவில்லை என்று சொன்னார். இருப்பினும், இந்த உரையாடல் மிகவும் முக்கியமானது என்று அவர் நினைத்தார். முதல் பெண்மணி மேசையிலிருந்து எழுந்து, அவசரமாக எங்களிடம் விடைபெற்று, சிறிய சாப்பாட்டு அறையை விட்டு வெளியேறினார்.

அடுத்த நாள் அமெரிக்காவுக்கான சோவியத் யூனியனின் தூதுவர் ஓர் ஊடகச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தார். ஊடகச் சந்திப்பில் இறுதியாக வினாக்களைத் தொடுக்க ஊடகவியலாளர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. அப்போது நிகழ்ந்த உரையாடல் இன்னும் பசுமையாக மனதில் உள்ளது.

கேள்வி: லியுட்மிலா, போர்க்களத்தில் உங்களால் சூடான குளியல் செய்ய முடியுமா?

பதில்: நிச்சயமாக, ஒரு நாளைக்கு பல முறை. அகழியில் அமர்ந்து பீரங்கித் தாக்குதல் நடந்தால் சூடு பிடிக்கும். மிகவும் சூடாக இருக்கும். இது ஒரு உண்மையான குளியல், ஆனால் அது ஒரு தூசிக் குளியல் மட்டுமே.

கேள்வி: உங்களுக்கு ஏதேனும் பாதுகாப்பு இருந்ததா?

பதில்: எனது துப்பாக்கி மட்டுமே பாதுகாப்பு.

கேள்வி: போரின் போது பெண்கள் உதட்டுச்சாயம் பயன்படுத்த முடியுமா?

பதில்: ஆம், ஆனால் அவர்களுக்கு எப்போதும் நேரம் இருப்பதில்லை. எங்கள் கைகள் எப்போதும் ஒரு இயந்திர துப்பாக்கியையோ அல்லது ஒரு துப்பாக்கியையோ தேடியபடியே இருக்கும்.

கேள்வி: லியுட்மிலா, நீங்கள் எந்த நிற உள்ளாடைகளை விரும்புகிறீர்கள்?

பதில்: ரஷ்யாவில் இப்படி ஒரு கேள்வி கேட்டால் கேட்டவர் முகத்தில் அறையப்படும். இதுபோன்ற கேள்விகள் பொதுவாக ஒரு மனைவியிடம் மட்டுமே கேட்கப்படும். உனக்கும் எனக்கும் அந்த உறவு இல்லை. எனவே, நான் உங்களுக்கு ஒரு அறையைக் கொடுப்பதில் மகிழ்ச்சி அடைவேன்.

கேள்வி (ஒரு பெண் பத்திரிகையாளரிடமிருந்து): இது உங்கள் அணிவகுப்பு சீருடையா அல்லது உங்கள் அன்றாட சீருடையா?

பதில்: தற்போது அணிவகுப்புகளுக்கு எங்களுக்கு நேரமில்லை.

கேள்வி (ஒரு பெண்ணிடமிருந்தும்): ஆனால் சீருடை உங்களை கொழுப்பாகக் காட்டுகிறது. நீங்கள் கவலைப்படவில்லையா?

பதில்: புகழ்பெற்ற செம்படையின் சீருடையை அணிவதில் பெருமை கொள்கிறேன். பாசிஸ்டுகளுடனான போரில் வீழ்ந்த எனது தோழர்களின் இரத்தத்தால் இது புனிதமானது. இதில் இருப்பது ஆர்டர் ஆஃப் லெனின் விருது. உண்மையில் நீங்கள் குண்டுத் தாக்குதலை அனுபவிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அப்போது உங்கள் ஆடையின் வெட்டு பற்றி நீங்கள் உடனடியாக மறந்துவிடுவீர்கள்.

கேள்வி: புகையிலை நிறுவனமான பிலிப் மோரிஸ் உங்களுக்கு ஒரு ஒப்பந்தத்தை வழங்குகிறது. சிகரெட் பாக்கெட்டுகளில் உங்கள் உருவப்படத்தை வைக்க அரை மில்லியன் டாலர்கள் கொடுக்க தயாராக இருக்கிறார்கள். அதற்கு சம்மதிப்பாயா?

பதில்: இல்லை. அவர்கள் அதற்கு ஒரு பிசாசைத் தேடிப் போகட்டும்.

ஊடக சந்திப்புக்குப் பிறகு நாம் வெள்ளை மாளிகைக்குப் போனோம். இரவுணவுக்கான திட்டங்கள் தீடிரென்று மாறிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. நாம் இன்னொரு இடத்திற்குப் போக வேண்டியிருந்தது. அங்கிருந்த வண்டியில் அனைவரும் பயணிக்கப் போதுமான இருக்கைகள் இருக்கவில்லை. என்னை தனது வண்டியில் அழைத்துச் செல்வதாக முதற் பெண்மணி எலினோர் சொன்னார். இரண்டுபேர் மட்டுமே பயணிக்ககூடிய வண்டியில் என்னை ஏறச்சொல்லி முதற்பெண்மணி தானே அந்தக் காரை ஓட்டினார். 58 வயதுப் பெண்மணி ஒரு கார்ப் பந்தய வீரர் போல மிகவும் வேகமாகவும் இலாவகமாகவும் ஓட்டினார். முதல்நாள் நான் அவருக்கு அளித்த இறுக்கமான பதிலின் பின்னரும் என்னுடன் உறவாட அவர் விரும்பினார். அடுத்த நாட்களில் எமக்கிடையிலான உரையாடல் மனஇறுக்கத்தைப் போக்கியது. சர்வதேச மாணவர் மாநாடு வெற்றிகரமாக முடிந்தது. பாசிசத்திற்கு எதிரான பிரகடனம் நிறைவேற்றப்பட்டது. பாசிசத்திற்கு எதிரான செம்படையின் இடையறாத தளராத போராட்டம் பற்றிய தெளிவு பலருக்குக் கிடைத்தது. இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி தனது ஓய்வுகால இல்லத்திற்கு மாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகளை அழைத்தார். அங்கு சென்று காலை உணவை முடித்துவிட்டு காலாற நடக்கத் தொடங்கினேன்.

அருகில் இருந்த குளக்கரையில் ஒரு சிறிய படகு இருந்தது. அதில் ஏறும் முயற்சியில் தண்ணீருக்குள் தடுக்கி விழுந்துவிட்டேன். இராணுவச் சீருடை முழுவதுமான சேற்றில் நனைந்திருந்தது. எனது மடத்தனத்தை நினைத்து என்னால் சிரிப்பை அடக்க இயலவில்லை. அங்கிருந்து கிளம்பி அருகில் இருந்த வீட்டை நோக்கிச் சென்றேன். அப்போது 'லியுட்-மிலா' என்ற குரல் என்னைத் திடுக்கிட வைத்தது. திருமதி. ரூஸ்வெல்ட் அங்கு நின்றிருந்தார். 'என்ன நடந்தது' என்று கேட்டார். என்னைத் தனது படுக்கையறைக்கு அழைத்துச் சென்றார். அத்தோடு குளியலறையும் இருந்தது. ஒரு துவாயை என்னிடம் நீட்டினார். அழகான தரைவிரிப்புகளினி

டையே முழுமையாக நனைந்த சப்பாத்துக்களுடன் நின்றிருந் தேன். 'குளியலறைக்குச் சென்று உடை மாற்றுங்கள் நான் கொஞ்சநேரத்தில் வருகிறேன்' என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டார்.

அவர் 15 நிமிடத்தில் திரும்பி வந்தார். கையில் சில உடைக ளும் கத்திரிக்கோலும் ஒரு சிறிய பெட்டியும் இருந்தன. அப் பெட்டியில் ஊசியும் நூலும் இருந்தன. துவாயால் என்னைச் சுற்றியபடி நான் அங்கு நின்றேன். 'நீங்கள் இந்த உடை யைப் போட்டுக்கொள்ளுங்கள்' என்றார். 'இவை எனக்கு மிக வும் பெரியவை' என்றேன். 'கை, கால்களைக் கத்தரித்து அளவாக்கித் தருகிறேன்' என்றார். 'நீங்களே செய்யப் போகி றீர்களா?' என்று ஆச்சரியத்துடன் கேட்டேன். 'ஆம், நண்பரே, அமெரிக்கப் பெண்களுக்கு வேலை செய்யத் தெரியும்' என் றார். உடையைத் திருத்த முன் அவர் என்னை அளவெடுக்க முடிவெடுத்தார். என்னை அளவெடுக்கும் போது தோறப்பட் டையில் இருந்த காயத்தைக் கண்டுவிட்டார். அதிர்ச்சியடைந் தவராக 'என்ன இது லியுட்மிலா?' என்று கேட்டார். 'உள்ளே போன குண்டுச்சன்னம் ஏற்படுத்திய வடு' என்றேன். 'எப்படி அது உள்ளே போனது?', 'செவாஸ்டோபோல் போரின் போது', 'ஜேர்மனியர்களுடனான போரா?', 'ஆம்' என்றேன். 'கடவுளே' என்று சொல்லியபடி என்னை இறுகக் கட்டிக் கொண்டார். எனது அமெரிக்கப் பயணம் முழுவதும் திருமதி ரூஸ்வெல்ட் என்னுடன் இருந்தார்.

இரண்டாம் உலகப்போரில் செம்படைகளுக்கு ஆதரவாக அமெரிக்காவெங்கும் பிரச்சாரம் செய்துகொண்டிருந்தோம். அதன் ஒரு பகுதியாக நாம் சிக்காகோவிற்குச் சென்றோம். எந்தவித முன்னறிவிப்பும் இன்றி சோவியத் யூனியனின் அதி காரிகள் எங்களை ஒரு வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். அங்கு எங்களை வாசலில் வரவேற்றவர் மேதையும், மனித நேயனும், சோவியத்தின் மிகப்பெரிய நண்பருமாகிய சார்ள்லி சாப்ளின். எங்களை வரவேற்று உபசரித்த சாப்ளின் தனது சர்வாதிகாரி (The Great Dictator) திரைப்படத்தை அங்கு எமக்குத் திரையிட்டார். பின்னர் திரைப்படங்கள் குறித்த எனது பார்வையை அறிய விரும்பிய சிறிய உரையா டலில் ஈடுபட்டார். அங்கிருந்து புறப்படும்போது நான் எதிர் பாராத ஒரு செயலை அந்த மேதை செய்தார். அவர் ஒரு முழங்காலில் இறங்கி கைகளை முத்தமிடத் தயாராக இருப் பதாகச் சொன்னார். எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. ஆனால் எதுவித தயக்கமுமின்றி சோவியத் மக்களுக்காக என்று சொல்லியபடி கைகளை முத்தமிட்டார். புகைப்படம் எடுப்போர் அதைத் தவறவிடவில்லை. மறுநாள் பத்திரிகைக- ளில் குறித்த படத்திற்கு பின்வருமாறு தலைப்பிட்டிருந்தனர்: 'ரஷ்யப் பெண் போர் வீரரிடம் மண்டியிட்ட சாப்ளின்'.

பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பினோம். நாங் கள் மூவரும் மீண்டும் போர்க்களம் புகுவதற்கான நாளை எதிர்பார்த்திருந்தோம். நான் எனது பயிற்சிகளைத் தொடங்கி யிருந்தேன். ஒருநாள் இரவு அமெரிக்காவில் இருந்து கொண்டு வந்திருந்த வானொலிப்பெட்டியில் நானும் அம்மா வும் அமைதியாகப் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந் தோம். திடீரென்று இரண்டு இராணுவ அதிகாரிகள் வீட்டுக் குள் நுழைந்தார்கள். எமக்கு ஒன்றும் புரியவில்லை. 'தோழரே நீங்கள் கிரெம்லினுக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர் கள்' என்றார் ஒருவர். 'கிரெம்லினுக்கா' என்றபடி ஆங்கில- ரஷ்ய அகராதியை எடுத்து என் மேற்சட்டைப் பொக்கற்றுக் குள் திணித்தேன். அதன் பின்னர் தோழர் ஸ்டாலினுடன் ஒரு மறக்கமுடியாத சந்திப்பு நிகழ்ந்தது.

## நிறைவுக் குறிப்புகள்:

லியுட்மிலா பாவ்லிச்சென்கோவின் இந்தச் சுயசரிதை ஒரு சராசரிப் பெண்ணின் வீரக்காவியம். இரண்டாம் உலகப் போரின் கொடுரம், நேச நாடுகளிற்கிடையோன உறவும் முர ணும், எலினோர் ரூஸ்வெல்ட் என்ற பெண்ணின் வரலாற்றுப் பாத்திரம், போர்க்கால சோவியத் யூனியன், ஸ்டாலினுக்குப் பிறகான சோவியத் ஒன்றியம் என அனைத்தையும் இந்தப் புத்தகத்தில் தரிசிக்கலாம். புத்தகத்தின் இறுதி அத்தியாயத் தில் அவர் பின்வருமாறு எழுதுகிறார்:

'எங்கள் தலைமைத் தளபதி ஸ்டாலினுக்குப் பிறகு நிலை மைகள் மாறிவிட்டன. பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தின் போது நம் நாட்டில் முன்னெப்போதும் இல்லாத வகையில் மலர்ந்த சினைப்பர் கலை, படிப்படியாக மங்கி, எதுவுமே இல்லாமல் நலிவடைவதைப் பார்க்கும்போது வருத்தமாக இருந்தது. இராணுவக் கோட்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டன. அணுகுண்டைப் பயன்படுத்துவது, போர்க்களங்களில் எதிரிக ளுடன் மோதலில் இருந்து தரைப்படைகளை காப்பாற்றும் என்று பாதுகாப்பு அமைச்சகம் இப்போது கருதுகிறது. ஒரு தெர்மோ அணு வெடிப்பு ஒரு எரிந்த பாலைவனத்தை விட் டுச்செல்லும். எனவே போர்க்களத்தில் யாரையும் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய அவசியமில்லை, எதிரிகள் தூசி போல மறைந்து விடுவார்கள். இவ்வாறு, 1950-களின் இறுதி யில் பல துப்பாக்கி சுடும் பள்ளிகள் மற்றும் படிப்புகள் மூடப்பட்டன மற்றும் அனுபவம் வாய்ந்த அதிகாரிகளுக்கு பணி ஓய்வு வழங்கப்பட்டது. துப்பாக்கி சுடும் வீரர்களின் பயிற்சி மற்றும் அறிவுறுத்தலின் பின்னால் உள்ள மரபுகள் இழக்கப்பட்டன.'

இந்த சுயசரிதையும் லியுட்மிலாவும் ஒரு முக்கிய செய்தி யைச் சொல்கின்றனர். அமெரிக்காவில் பாலியல்ரீதியான ஆணாதிக்க எதிர்வினைகளை ஏராளமாக அவர் எதிர்கொண் டார். ஆனால் அவையனைத்தையும் அவரால் எதிர்கொள்ள முடிந்தது. அவர் தனது இளமைக் கதைகள், ஜேர்மன் படை- யெடுப்பின் பேரழிவு தாக்கம் மற்றும் அவரது போர் வாழ்க்கை ஆகியவற்றின் கதைகளால் மக்களை மயக்கும் வகையில் தனது பேச்சுக்களை நிகழ்த்தினார். அமெரிக்கா முழுவதிலும் மற்றும் ஆயிரக்கணக்கானோர் முன்பும் நிகழ்த் திய உரைகளில், பெண் சினைப்பர்கள் ஐரோப்பாவில் நாஜிக்களை எதிர்த்துப் போரிடுகிறரர்கள் என்பதை வெகுமக் கள் தளத்திற்குக் கொண்டுவந்தார். இதன்மூலம், பெண்கள் திறமையானவர்கள் மட்டுமல்ல, சண்டைக்கு அவசியமானவர் கள் என்ற கருத்தை வலியுறுத்தினார். 'எனக்கு 25 வயதாகி றது. நான் 309 நாஜிகளைக் கொன்றுள்ளேன். எனக்கு பின் னால் கனவான்களாகிய நீங்கள் நீண்டகாலம் ஒழிந்தபடியே இருக்கிறீர்கள் என்று நீங்கள் நினைக்கவில்லையா?' என்ற அவரது வினா அமெரிக்காவெங்கும் எதிரொலித்தது.



meenilankco@thaiveedu.com



# மக்கள் பணியாளர்
## அன்ரன் சின்னராசா பிலிப்
### 1952 - 2023

சிறந்த சமூகச் செயற்பாட்டாளர் அன்ரன் சின்னராசா பிலிப் காலமானார்.

இனப்பற்றாளரும் சமூகச் செயற்பாட்டாளருமான திரு அன்ரன் சின்னராசா பிலிப் அவர்களது மறைவுச்செய்தி பெருந்துய-ரைத் தருகின்றது. யாழ். மாவட்டம் கரவெட்டியைப் பிறப்பிட மாகக் கொண்ட அவர் இளவயதிலேயே கத்தோலிக்கத் துறவியாகத் தன்னை வரித்துக்கொண்டவர்.

1981-ஆம் ஆண்டு யாழ் நூலகம் எரியூட்டப்பட்டு ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த வேளையில் அருட்-பணியாளர் ஒருவர், யாழ் நூலகத்தில் எரிக்கப்பட்ட முக்கிய ஆவணங்கள், நூல்கள் தொடர்பான விபரங்களை ஒரு சிறு நூலாகத் தொகுத்து அச்சிட்டு வெளிநாட்டுத் தூதரகங்களுக் கும் இராஜதந்திரிகளுக்கும் சேரும் வகையில் கொழும்புக்கு அனுப்பும் பணியைச் செய்தாராம்.

படையினரதும் காவல்துறையினரதும் கண்காணிப்பையும் தாண்டி, இரவோடிரவாக கொழும்பு சென்ற பிரமுகர் ஒரு-வருடன் அந்த அச்சுப் பிரதிகளும் கொழும்புக்குச் சென்றன.

அந்த அருட்பணியாளர் அமரர் அன்ரன் சின்னராசா பிலிப் அவர்களே.

அருட்பணியாளராக இருந்தவாறே ஈழவிடுதலைப் போராட் டத்துக்குச் செய்த சில உதவிகளைக் காரணங்காட்டி அவரை இலங்கைக் காவல்துறை கைதுசெய்து வெலிக்கடைச் சிறை யில் அடைத்தது. 1983-இல் வெலிக்கடைப் படுகொலையின் போது உயிர்தப்பி, மட்டக்களப்புச் சிறையிலிருந்த காலத் தில் சிறையுடைப்பில் மீட்கப்பட்டு, இந்தியா சென்று பின்னர் கனடா வந்தடைந்தார்.

கனடாவில் அவர் ஆற்றிய சமூகப்பணிகள் கொஞ்சநஞ்ச-மல்ல. கனடா - தமிழீழச் சங்கத்தின் பணியாளராக, அகதிக ளாக வருவோருக்குப் பல்வேறு சேவைகளை வழங்கிக் கொண்டிருந்தார்.

வெலிக்கடைப் படுகொலைகளின் சாட்சி அவர். இயலுமான வரையில் வெலிக்கடைப் படுகொலைகளை ஆவணப்படுத்தி யிருந்தார்.
இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை தொடர்பான ஆவணங்களையும் வாக்குமூலங்களையும் போரினாற் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவம் (Centre for War Victims and Human Rights) எனும் அமைப்பினூடாகச் சேகரித்துப் பதிவுசெய்வதிலும் தீவிரமாக இயங்கிவந்தார்.

தமிழ்க்கலைகளிலும் தமிழ்மொழியிலும் பெரிதும் ஈடுபாடு



கொண்ட இவர் ஜி.யூ. போப் அவர்களின் இருநூற்றாண்டு விழாவை முன்னெடுத்ததுடன் கனடியரான அவருடைய வரலாற்றைப் பதிவுசெய்வதிலும் பேரார்வம் கொண்டிருந்தார். உலகெங்கும் உள்ள சமூக ஆர்வலர்களுடன் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்குவதில் முனைப்பாக இயங்கினார்.

எப்போதும் இன நலனையும் சமூக நலனையுமே முன்னி-றுத்தி, என் கடன் மக்கள் பணி செய்து கிடப்பதே என்று ஓயாது இயங்கி வந்தவர் திரு அன்ரன் சின்னராசா பிலிப் அவர்கள்.

அவருடைய பிரிவால் துயருரும் குடும்பத்தாருக்குத் தாய்வீடு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்தம் துயரிலும் பங்குகொள்கிறது.

# நூலியல் - நூலகவியல் துறைகளில் அயோத்தி நூலக சேவைகள் அமைப்பின் பணி

## - என். செல்வராஜா



இலங்கையில் தமிழ்ப் பிரதேசங்களில் நூலகவியல் துறையின் வளர்ச்சிப்போக்கில் முக்கியமானதொரு காலகட்டமாக எழுபதுகளின் நடுப்பகுதி கருதப்படுகின்றது. அக்காலகட்டம் வரையில் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ளூராட்சிச் சேவையில் நூலகர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குக் கல்வித்தரம் அக்கறையுடன் எதிர்பார்க்கப்படவில்லை. பெருமளவில் கிராமசபை, நகரசபை சிற்றூழியர்களாக இருந்தவர்கள் பதவி உயர்வு கண்டு நூலகப் பொறுப்பாளர்களாக நியமனம் பெற்றார்கள். கிராமசபை நிர்வாக ஊழியர்கள் சுயவிருப்பின் அடிப்படையில் நூலகத்தையும் மேற்பார்வை செய்ய அனுமதிக்கப்பட்டார்கள். உயர்தரப் பாடசாலைகள் தவிர்ந்த பெருவாரியான தமிழ்ப் பாடசாலைகளில் நூலகச் சிந்தனை அக்கால கட்டங்களில் முகிழ்த்திருக்கவில்லை. நூலகரின் கடமையை நூலகம் பற்றிய எவ்வித அறிவுமற்ற ஆசிரியர்களும், வசதிக்கட்டணத்தில் நியமிக்கப்படும் பழைய மாணவர்களுமே பூர்த்திசெய்து வந்திருந்தார்கள்.

இலங்கை உள்ளூராட்சிச் சேவைகள் நூலகர் தரம் 3 என்ற பதவியை உருவாக்கிய பின்னர்தான் 1976-களுக்குப் பின்னர் படிப்படியாக உள்ளூராட்சிச் சேவைகளுக்குட்பட்ட நூலகர் பதவிகளுக்கு நூலகவியல் கல்வி கற்றவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். பாடசாலைகளிலும், பாடத்திட்டங்களின் மாற்றங்களால் பாடநூல்களுக்கு அப்பால் பரந்த வாசிப்பிற்கான அறிவுத்தேடலுக்கு மாணவர்கள் ஊக்கமளிக்கப்பட்டார்கள். இத்தகைய மாற்றங்கள் ஈழத்தின் நூலகவியல் துறைக்குச் சாதகமானவையாக அமைந்தன.

எழுபதுகளின் நடுப்பகுதிகள் வரையில் இலங்கை நூலக சங்கத்தின் நூலகவியல் கல்விச்சேவை தமிழ்ப் பிரதேசங்களில் பாரிய விஸ்தரிப்பு எதனையும் மேற்கொள்ள முயற்சிக்கவில்லை. 70-களின் நடுப்பகுதியில் உள்ளூராட்சிச் சேவையில் ஆட்சேர்ப்பிற்காக நூலகக்கல்வி பெற்றவர்களுக்குத்தான் முன்னுரிமை கிட்டியது. அதன்பின்னர் நூலகக்கல்வியில் இளைஞர்களிடையே படிப்படியாக ஆர்வம் ஏற்பட்டது. பாரம்பரியக் கல்வியமைப்பில் ஊறியிருந்த இளைஞர்கள் இத்துறையில் படிப்படியாக ஈர்க்கப்பட்டதால் ஆண்டுதோறும் இலங்கை நூலக சங்கத்தின் முதலாம் இரண்டாம் வகுப்புகளிற்கான பயிற்சிநெறிகள் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் நூலகரான திரு. மாணிக்கவாசகர் ஒருங்கிணைப்பாளராகவிருந்து இந்தப் பயிற்சிநெறியை இலங்கை நூலக சங்கத்தின் சார்பில் நடத்திவந்தார். கொழும்பிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் விரிவுரையாளர்கள் வந்து இந்த வகுப்புகளை நடத்தினார்கள். வடக்கில் மட்டுமல்லாது கிழக்கிலிருந்தும் நூலகர்கள் யாழ்ப்பாணம் வந்து நூலகக் கல்வியைக் கற்றார்கள். எழுபதுகளின் நடுப்பகுதியிலிருந்து 80-களின் ஆரம்பம் வரை இந்த வளர்ச்சி மிக ஆரோக்கியமாக இருந்தது.

ஆரோக்கியமான வளர்ச்சிகண்ட நூலகவியல் துறையின் போக்கில் சடுதியான பாய்ச்சல் 1981-ல் யாழ் நூலகம் எரியுண்டதையடுத்து ஏற்பட்டது. பொதுப்படையாக அரசியல்ரீதியில் ஈழத்தமிழர்களில் இதுவொரு பாதிப்பை ஏற்படுத்திய போதிலும், புத்திஜீவிகளிடம் அறிவியல்ரீதியாக ஆழமானதொரு அபாய அறிவிப்பை இந்த நிகழ்வு ஏற்படுத்தியது. யாழ்ப்பாண நூலகம் மாத்திரமல்லாது, ஈழநாடு பத்திரிகை அலுவலகம், பூபாலசிங்கம் புத்தகசாலை என்பனவும் அன்றையதினம் அரசின் திட்டமிடலின் பிரகாரம் கைக்கூலிகளால் தீக்கிரையாக்கப்பட்டிருந்தது. தமிழரின் அறிவூற்றுக்களின் மீது இனவாதம் கைவைத்த அந்தச் செயலானது அதுவரை ஈழப் போராட்டத்திலிருந்து ஒதுங்கிப் பார்வையாளர்களாகவிருந்த பல புத்திஜீவிகளைப் போராட்டப் பாதையை நோக்கித் தள்ளியது. இது வெறும் நூலக எரிப்பு என்ற கருத்தியலிலிருந்து விலகி மிக ஆழமாகத் தமிழரிடம் வேரூன்றியிருந்த கல்விப் பாரம்பரியத்தை அழிக்கும் திட்டமிட்ட முயற்சி என்ற கருத்து மேலோங்கியது.

யாழ்ப்பாண நூலக எரிப்பு யாழ்ப்பாணம் மானிப்பாய் மண்ணிலிருந்து தனது இளமைக் காலத்திலேயே வேரோடு பெயர்ந்து கொழும்புக் கறுவாக்காட்டுச் சமூகத்துடன் ஒன்றியிருந்த ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் அவர்களை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்ததுடன் தன்னுடையதும், நூலக எரிப்பில் அதிர்ந்திருந்த மற்றைய தென்னிலங்கை புத்திஜீவிகளினதும் நூல்களைக் கொண்டு பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் ஒரு நூலகத்தைக் கட்டியெழுப்பி யாழ்ப்பாணச் சமூகத்துக்கு அதை மனமுவந்து வழங்க வைத்தது. மேலும், யாழ்ப்பாணப் பொது நூலகம் 1984-ல்

மீண்டும் இயங்கத் தொடங்கியபோது யாழ்ப்பாண மாநகர-சபை எல்லைக்குள் மாத்திரம் அங்கத்தவரைத் தேடாது முழு மாவட்டத்திற்கும் தனது அங்கத்துவத்தை விரிவாக்கியது.

## அயோத்தி நூலக சேவைகள்:

தமிழ்ப் பிரதேசங்களில் நூலகங்களும் நூலகர்களும் எதிர் நோக்கிய பிரச்சினைகளுக்கு அறிவியல், தொழில்நுட்ப ரீதியில் உதவிகளை வழங்குவதற்கு அக்கால கட்டத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்பு எதுவும் தமிழர் தாயக மண்ணில் இருந்திருக்கவில்லை. இந்நிலை பற்றி ஈழத்தின் தமிழ் நூலகத்துறையின் முன்னோடிகளாக அந்நாட்களில் இருந்த கலாநிதி. வே.இ. பாக்கியநாதன், எஸ்.எம். கமால்தீன், இ. முருகவேள் போன்றோருடன் இக்கட்டுரையாளர் நீண்டகாலமாக கலந்துரையாடித் திட்டமிட்டு வந்திருந்தார். இதன் விளைவாக அறிஞர்களின் ஆசியுடன் 1985-ல் அயோத்தி நூலக சேவைகள் என்ற நிறுவனம் யாழ்ப்பாணம் ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நிறுவன நூலகராகவிருந்த என். செல்வராஜா அவர்களால் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் நூலகவியல் கல்வியை தமிழில் பரவலாக்குவதற்கும், நூலகங்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்குரிய தீர்வுக்கான தொழில்நுட்ப ஆலோசனை-களை நிறுவனரீதியில் வழங்குவதுமாகும்.

இத்திட்டத்திற்கு அடிப்படையாக 'நூலகவியல்' என்ற காலாண்டுச் சஞ்சிகை செப்ரெம்பர் 1985-ல் அயோத்தி நூலகசேவைகள் அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டு தமிழ்ப் பிரதேசங்களில் இயங்கும் அனைத்து நூலகங்களுக்கும், தமிழ் நூலகர்களுக்கும் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டன. யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம், யாழ்மாவட்ட உள்ளூராட்சிச் சேவைகள் அலுவலகம், யாழ் மாவட்ட கல்வி நிறுவனங்கள் என்பன ஆர்வத்துடன் இவற்றை விநி-யோகிக்க ஒழுங்கு செய்திருந்தன. தமிழ்மூலம் நூலகவியல் கல்வியைக் கற்கும் மாணவர்களுக்கும், சுயம்புவாக நூலகத் துறையில் ஈடுபட்டுவந்த பல தராதரப்பத்திரமற்ற நூலகர்களுக்கும் நூலகவியல் காலாண்டுச் சஞ்சிகை ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

நூலகவியல் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் திரு. சி. முருகவேள், வே.இ. பாக்கியநாதன், இ. பாலசுந்தரம், திருமதி. ரூபா நடராஜா, திருமதி ரோ. பரராஜசிங்கம், திரு. எஸ்.எம். கமால்தீன், திரு. செ. கிருஷ்ணராஜா ஆகியோர் பணியாற்றினார்கள். 1991 வரை தடங்கலின்றி வெளிவந்த நூலகவியல் சஞ்சிகை, அதன் ஆசிரியர் புலம்பெயர்ந்து ஐக்கிய இராச்சியத்துக்குச் சென்றதோடு வெளிவராது நின்றுபோயிற்று. தபால் போக்குவரத்து மற்றும் போர்ச்சூழல் காரணமாக நூலகவியல் மீண்டும் வெளிவருவது நீண்டகாலம் தடைப்பட்டிருந்தது.

நூலகவியல் சஞ்சிகை வெளியீட்டுப் பணியையும் இக்கால கட்டத்தில் மேற்கொண்டு வடக்கு, கிழக்கு, மலையகத்திலிருந்து நூலகவியல் துறையிலும், நூலியல் துறையிலும் அக்கறைகொண்ட பலரை ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைத்தது. இதனால் அயோத்தி நூலகசேவை, போர்க்காலச் சூழலிலும் சக்திமிக்கதொரு நூலக அமைப்பாகத் தேசிய ரீதியில் வளர்ச்சி கண்டது.

அயோத்தி நூலகசேவை அக்காலகட்டப் போர்ச்சூழலில் மிக முக்கிய சமூகத் தேவையாகவிருந்த முதலுதவிச் சிகிச்சைக் கைநூல் ஒன்றுடன் தன் வெளியீட்டுப் பணியை 1985-ல்




ஆரம்பித்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூக மருத்துவபீட விரிவுரையாளராகவிருந்த வைத்தியக் கலாநிதி ந. சிவ-ராஜா அவர்கள் எழுதிய 'முதல் உதவி' என்ற நூலே முதல் வெளியீடாயிற்று. காலக்கிரமத்தில் நூலகத்துறை, மற்றும் நூலியல் துறைகளுக்கான வெளியீட்டுப் பணிகளில் அயோத்தி நூலகசேவைகள் நிறுவனம் ஈடுபடலாயிற்று. நூலகவியல் துறையின் முதலாவது நூலாக 'நூற்பகுப்பாக்கம்:




நூலகர்களுக்கான கைநூல்' அமைந்தது. நூலகவியல்துறை விரிவுரையாளராகவிருந்த கலாநிதி வே.இ. பாக்கியநாதன் அவர்களால் எழுதப்பட்டு ஜூலை 1986-ல் இந்நூல் வெளியா

யிற்று. நூலகங்களில் நூல்களைப் பகுப்பாக்கம் செய்வதற்குப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வரும் டுவி தசாம்சப் பகுப்பு (Dewey Decimal Classification) முறையின் 19-ம் பதிப்பின் சுருக்கப் பிரிவினை இந்நூல் தமிழில் கொண்டிருந்தது. டுவி தசாம்சப் பகுப்பு முறையில் பகுப்பாய்வு செய்வதற்குப் பயிற்சி பெற்றிராத தமிழ்நூலக ஊழியர்களுக்கு ஏற்ற வகையில் எளிய உதாரண விளக்கங்களும் இந்நூலில் காணப்பட்டிருந்தது. இந்நூலின் முக்கியத்துவம் கருதி இரண்டாவது பதிப்பு ஆகஸ்ட் 1989-ல் வெளியிடப்பட்டது. இடையில் நூலாசிரியரால் இந்தியாவிலும் காந்தளகம் வெளியீட்டகத்தின் வாயிலாக இந்நூல் மீள்பிரசுரம் கண்டிருந்தது.

‘கல்வி நிறுவன நூலகங்கள்’ என்ற நூல் நூலகத்துறையின் மூன்றாவது வெளியீடாக 1987-ல் மலர்ந்தது. யாழ்ப்பாணப்




பல்கலைக்கழக நூலகத்தைச் சேர்ந்த திருமதி. விமலாம்பிகை பாலசுந்தரம் அவர்கள் எழுதிய இந்நூலில் ஆரம்பப் பாடசாலைகள், கனிஷ்ட இடைநிலைப் பாடசாலைகள், சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்களான தொழில்நுட்பக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், பல்வேறு ஆய்வகங்கள் ஆகியவற்றில் இயங்கும் நூலகங்களின் நூற்சேகரிப்பு, நூலகங்களின் பயன்பாடு, நூலக சேவைப் பகுதிகள் முதலியன இந்நூலில் விபரிக்கப்பட்டிருந்தன. இந்நிறுவனங்கள் எதிர்நோக்கக்கூடிய பிரச்சினைகள், அவற்றை நிவர்த்தி செய்ய நூலகர் கையாளக்கூடிய வழிமுறைகள் என்பனவும் அதில் ஆராயப்பட்டிருந்தன.

1989-ல் விமலாம்பிகை பாலசுந்தரம் தொகுத்த மற்றொரு நூல் ‘கலைச்சொற்றொகுதி: நூலகமும் தகவல் விஞ்ஞானமும்’ என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. அயோத்தி வெளியீட்டின் 3-வது நூலாக அமைந்த இது நூலகத் தகவல் விஞ்ஞானத்துறையில் பயன்படுத்தப்படும் சுமார் 1500 ஆங்கில கலைச்சொற்களுக்குரிய தமிழ்ப்பதங்களைக் கொண்டிருந்தன. இலங்கையில் இத்துறையில் தமிழில் வெளிவந்துள்ள முதலாவது கலைச்சொற்றொகுதி இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

1989-இலேயே ‘கிராமிய நூலகங்களும் அபிவிருத்தியும்’ என்ற பெயரில் நான்காவது நூல் அயோத்தி நூலக சேவைகள் நிறுவனத்தின் இயக்குநரான என். செல்வராஜா அவர்களினால் எழுதி வெளியிடப்பட்டது. தமிழ்ப் பிரதேசங்களை மையப்படுத்தி கிராம நூலக இயக்கம், சிறுவர் நூலகங்கள், பாடசாலை நூலகங்கள், பாலர்களுக்கான நூல்களைக் கிராமமட்டத்தில் தயாரித்தல், சனசமூக நிலையங்களின் நூலக நடவடிக்கைகள், நூல் கொள்வனவு போன்ற விடயங்களை விளக்கும் கட்டுரைகளைக் கொண்டது இந்நூலாகும்.

செல்வராஜாவின் மற்றொரு நூலான ஆரம்பநூலகர் கைநூல், செப்ரெம்பர் 1991-ல் கொழும்பிலிருந்து வெளியிடப்பட்டிருந்தது. சிறு நூலகமொன்றின் செயற்பாடுகள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள இந்நூலில் நூலகத் துறையைத் தேர்ந்தெடுக்கும் ஒருவருக்கு நூலகமொன்றின் அன்றாட நடவடிக்கைகள், மற்றும் நிர்வாக அறிவுரைகள் விரிவாக வழங்கப்பட்டிருந்தது.

இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபையின் உதவி இயக்கநராகவிருந்த நூலகவியலாளர் எஸ்.எம். கமால்தீன் அவர்களது நூலகவியல் கட்டுரைகளைத் தாங்கிய ‘நூலும் நூலகமும்’ என்ற நூல் செப்ரெம்பர் 1992-ல் கொழும்பில் வெளியிடப்பட்டது.

‘யாழ்ப்பாணப் பொதுநூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு’ என்ற நூல் என். செல்வராஜா அவர்களால் ஐக்கிய இராச்சியத்திலிருந்து அயோத்தி நூலகசேவைகளின் வாயிலாக ஜூன் 2001-ல் வெளியிடப்பட்டிருந்தது. இலண்டன்: வாசன் அச்சகத்தில் அச்சிடப்பட்ட இந்நூல் அயோத்தி நூலக சேவைகள் அமைப்புப் புலத்திலிருந்து வெளியிட்ட முதலாவது நூலகத்துறை சார்ந்த நூலாக அமைகின்றது. ஜூன் 1, 1981-ல் இலங்கை அரசபடையினரால் எரித்து அழிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பொதுநூலகத்தின் வரலாற்றைக் கூறக்கூடிய பத்திரிகைச் செய்திகள், சஞ்சிகைகள், நூல்கள், இணையத்தளங்கள் போன்றவற்றில் வெளியான தகவல்களையும், துண்டுப்பிரசுரங்கள், சிறு நூல்கள் போன்றவற்றையும் தொகுத்து ஆண்டுவாரியாக ஒழுங்கு செய்து, யாழ். நூலகத்துடன் தொடர்பு கொண்டவர்களின் கட்டுரைகளுடன் சேர்த்துப் படங்களுடன் நூலுருவாக்கப்பட்டது.

அயோத்தி நூலக சேவையின் மிக முக்கியமான நூலியல் பங்களிப்பாக அமைவது ‘நூல்தேட்டம்’ என்ற பாரிய தொகுப்பு முயற்சியாகும். தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பட்ட ஈழத்துத் தமிழ்நூல்களுக்கான குறிப்புரையுடனானதொரு நூல்விபரப் பட்டியல் நூல்தேட்டமாகும். ஒவ்வொரு தொகுதியிலும் 1000 நூல்களுக்கான பதிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன. பிரதான பதிவு தூவிதசாம்சப் பகுப்பு முறையைத் தழுவிப் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, பாடவாரியாகப் பதியப்பட்டுள்ளது. ஒவ்வொரு பதிவும் தொடரிலக்கமிடப்பட்டுள்ளது. நூல் தலைப்பு வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி என்பன நூலின் சிறப்பம்சமாகக் காணப்படுகின்றது.

நூல்தேட்டம் முதலாவது தொகுதி ஜுன் 2002-லும், 2-வது தொகுதி ஜுன் 2004-லும் 3-வது தொகுதி ஆகஸ்ட் 2005-லும்




வெளிவந்து ஈழத்தமிழர்களின் 3000 நூல்களைக் குறிப்புரையுடன் பதிவுசெய்துள்ளது. தொடர்ந்தும் இத்தொகுப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. இன்றைய காலகட்டத்தில் ஈழத்தமிழர்களின் வெளியீட்டு முயற்சிகளை பரந்த அளவில் பதிவுசெய்து வைக்கும் முதல் முயற்சி இதுவாகும்.

அயோத்தி நூலக சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட 1985-ம் ஆண்டிலிருந்து மேற்கொண்டு வந்த நூலகவியல், நூலியல் முயற்சிகளில் முக்கியமானதாகக் கருதப்படும் மற்றொரு அம்சம் இவ்வமைப்பினால் ஒழுங்குசெய்யப்பட்ட கருத்தரங்குகளாகும். யாழ்ப்பாணம் இவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தில் நூலகர் ஒன்றுகூடல்களைத் தொடர்ந்து நடத்தி, தமிழ்ப் பிரதேச நூலகர்களையும், அப்பிரதேசங்களில் நூலகங்களைத் திட்டமிட்டு வழிநடத்தும் நிர்வாகிகளையும் ஒரே கூரையின் கீழ் சந்திக்கவைத்து, எப்போதுமே கேட்கப்படாதிருந்த நூலகர்களின் குரலை உரத்துக் கேட்க வைத்த பெருமை இவ்வமைப்பையே சாரும். அன்றைய காலகட்டத்தில் ஈழநாடு நாளிதழ் தனது ஆசிரியர் தலையங்கத்தின் வழியாகவும், செய்திகளின் வழியாகவும் இம்முயற்சிக்கு முக்கியத்துவம் வழங்கியிருந்தது. இவ்வமைப்பின் ஒன்றுகூடல் நிகழ்ச்சிகளின் பாதிப்பினால் பின்னாளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் ஓரிரு நூலகவியல் கருத்தரங்குகளை ஏற்பாடுசெய்ய நேர்ந்தது.

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் ஒருங்கிணைப்புடன் 300-க்கும் அதிகமான சனசமூக நிலையங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயங்கிக் கிராமிய மட்டத்தில் நூலக - வாசிகசாலை சேவையினையாற்றி வந்தன. இச்சமூக அமைப்புகளைப் பாரியளவில் ஒருங்கிணைத்துச் சனசமூக நிலைய நூலகர்களுக்கான 6 நாள் பயிற்சியும் சான்றிதழ் வழங்கலும் ஐப்பசி 1989-ல் அயோத்தி நூலக சேவை நிறுவனத்தால் சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் கொட்டடிப் பகுதியில் அமைந்திருந்த சம்மேளனத்தின் தலைமை அலுவலகத்தில் நடத்தி முடிக்கப்பட்டது.

தோட்டப் பிரதேசங்களுக்கான கூட்டுச் செயலகத்தின் அழைப்பின்பேரில் (Coordinating Secretariat for Plantation Areas, Kandy) கண்டி புஷ்பதான மாவத்தையில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தில் 1990 ஏப்ரல் 6 - 8-ம் திகதிகளில் மலையக நூலக அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கொன்று அயோத்தி நூலக சேவைகளினால் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது. இலங்கையின் பிரபல நூலகர்களை இக்கருத்தரங்கில் ஒரே மேடையில் இடம்பெறச் செய்தமை இந்நிகழ்வின் முக்கிய வெற்றியாகும்.

மாநகர சபைகளின் வேண்டுகோளின் பேரில் அயோத்தி நூலக சேவைகள் அமைப்பினர் பிரதேசரீதியில் உள்ளூராட்சி நூலகங்களுக்கான நூலகவியல் கருத்தரங்குகளையும் மேற்கொண்டிருந்தனர். சண்டிலிப்பாய், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராமிய நகர நூலகர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு ஜுன் 1986-ல் மானிப்பாய் நூலகத்தில் இடம்பெற்றது. திருகோணமலை நகரசபையின் ஆதரவுடன் திருகோணமலை மாவட்ட நூலகர்களுக்கான கருத்தரங்கும் இரு நாள் பயிற்சியும் நவம்பர் 1989-ல் இடம்பெற்றது.

சமூக அமைப்புகளின் நிதிவளத்தை அதிகரிக்கவும், நூலக விழிப்புணர்வினை அப்பிரதேச மக்களிடையே ஏற்படுத்தவும் அயோத்தி நூலக சேவை அமைப்பு தோள் கொடுத்து வந்துள்ளது. நவாலி வை.எம்.சீ.ஏ-யுடன் இணைந்து நூலக வாரம் ஏற்பாடு செய்யப்பட்டு கிராம விழிப்புணர்வை ஊட்டியதுடன் நவாலியில் வை.எம்.சீ.ஏ நூலகத்துக்கு நூல்களும் நிதியும் திரட்டியுதவினர். புங்குடுதீவு சர்வோதய அமைப்பினரின் கிராம நூலகத் திட்டங்களுக்கு ஆலோசனையும் பயிற்சிகளும் வழங்குவதில் அயோத்தி நூலக சேவை இன்றும் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. ஸ்கொட்லாந்தின் Books Abroad நிறுவனத்தின் வாயிலாகத் தாயகத்தின் நூலக அபிவிருத்திக்கான நூல் உதவித் திட்டங்களைத் தற்போது முன்னெடுத்து வரும் அயோத்தி நூலக சேவைகள் அமைப்பின் நூலகவியல் மற்றும் நூலியல் பணிகள், போர்க்காலச் சூழலில், நூலகத்துறையின் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிராதவொரு வேளையில் முன்னெடுக்கப்பட்டிருந்ததென்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.



selvarajah.n@thaiveedu.com



# வாணி ஜெயராம் :

## எங்கிருந்தோ வந்த தேவதையின் குரல்

**- கந்தசாமி கங்காதரன்**

ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனையோ பாடல்களைத் தனித்துவமான, கனீரென்ற குரலால் பாடி 50 ஆண்டுகளுக்கு மேலாக உலகை மகிழ்வித்த வாணி ஜெயராம் 77-வது வயதில் காலமான செய்தி, அவருடைய அந்தக் காலத்துப் பொன்னான பாடல்களை உலகத்தமிழ் வானொலிகள் எல்லாவற்றிலும் ஒரு நாள் முழுவதும் ஒலிக்கச் செய்தது.

தமிழில் அவர் பாடத் தொடங்கிய குறுகிய காலத்திலேயே, மல்லிகை என் மன்னன் மயங்கும், ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல், கேள்வியின் நாயகனே போன்ற பெரும் புகழ் பெற்ற பாடல்கள் தமிழ்த் திரையுலகில் உறுதியான-தோர் இடத்தை அவருக்குப் பெற்றுக்கொடுத்தன.

'புனித அந்தோனியார்' படத்தில் இடம் பெற்ற, 'மண்ணுலகில் இன்று தேவன் இறங்கி வருகிறான்', இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவையில் ஒலிக்காத திருப்பிறப்புக் காலமே இல்லை எனும் அளவுக்குத் திருப்பிறப்புக் காலத்தில் தவிர்க்க முடியாத ஒரு பாடலாக அமைந்தது.

தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத பாடகர்கள் கோலோச்சிக் கொண்டிருந்த தமிழ்த் திரையிசையுலகில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அரியதோர் அற்புதம் வாணி ஜெயராம்.

தமிழ்நாடு - வேலூரில் நவம்பர் 30, 1945-ம் ஆண்டிற் பிறந்த கலைவாணிக்கு இசையார்வம் வந்ததில் வியப்பொன்றுமில்லை. துரைசாமி - பத்மாவதி இணையருக்கு எட்டாவது குழந்தை கலைவாணி. அம்மாவுக்கு இருந்த இசைப்புலமை பிள்ளைகளுக்கு அடித்தளமிட்டது. கலைவாணியோடு ஆறு பெண் பிள்ளைகள். கடலூர் சிறீநிவாச ஐயங்காரிடம் மூத்த சகோதரிகள் கர்நாடக இசை பயின்றனர்.

அக்காமார் பாடும் பாடலின் முதல் வரியை முடிப்பதற்குள் அந்தப் பாடலின் பண் (இராகம்) என்னவென்று துல்லியமாகச் சொல்லிய ஐந்து வயதுக் கலைவாணியைப் பார்த்து வியந்த ஆசான், 'இந்தக் குழந்தைக்கு இப்போதே இவ்வளவு இசை ஞானம் இருக்கின்றதே! கலைவாணிக்கும் சேர்த்தே கற்பிக்கிறேன்' என்று சொல்ல வருங்கால இசைக்குயிலின் சிறகுகள் விரியத் தொடங்கின.

கடினமான பண்களையே அடையாளம் காணும் திறமை இரண்டரை வயதிலேயே கைவரப்பெற்றிருந்தார் கலைவாணி என்பது ஆசானுக்குத் தெரிந்திருந்தால் என்ன சொல்லிப் பாராட்டியிருப்பார்?

சமகாலத்தில், 'வேலூர் சகோதரிகள்' என்ற பெயரில் சில கச்சேரிகள் செய்திருந்தனர் கலைவாணியின் மூத்த சகோதரிகள்.

கர்நாடக இசையில் ஜண்டை வரிசை, சரளி வரிசை என்பனவே அரிவரி. ஆனால் கலைவாணியோ எடுத்த எடுப்பிலேயே சங்கீத மும்மூர்த்திகளின் பாடல்களைக் கற்கத்தொடங்கினார். சிறீநிவாச ஐயங்காரிடம் நான்காண்டு இசைப்பயிற்சி. இசைத்துறையில் மேன்மேலும் கற்றுக் கொள்வதற்கும் முன்னேறுவதற்கும் வாய்ப்புகள் அதிகம் இருக்குமென்பதால், முழுக்குடும்பமும் சென்னைக்குக் குடிபெயர்ந்தது.

சென்னையில் புதுப்பள்ளிக்கூடம். சேர்ந்த சில நாள்களிலேயே பள்ளியில் நடக்கும் எல்லாப் போட்டிகளிலும் கலந்துகொண்டு பரிசுகளும் பெறத் தொடங்கினார் கலைவாணி.

கர்நாடக இசைமேதை ஜி.என். பாலசுப்பிரமணியத்தின் மாணவர் டி.ஆர். பாலசுப்ரமணியத்திடமும், பின்னர் திருவனந்தபுரம் எம்.ஆர்.எஸ். மணியிடமும் கர்நாடக இசைப் பயிற்சி தொடர்ந்தது. 10 வயதுச் சிறுமியாக இருந்தபோது, அகில இந்திய வானொலியில் கர்நாடக இசை, மெல்லிசை கலந்து சில நிகழ்ச்சிகளில் பாடினார் கலைவாணி. அப்போது அங்கு இசையமைப்பாளராக இருந்த இசைக்கலாநிதி பால-முரளி கிருஷ்ணா, 'மிகச் சிறப்பாகப் பாடும் இவருக்கு கர்நாடக இசையில் ஒளிமயமான எதிர்காலம் இருக்கின்றது' என்று வாழ்த்தியிருக்கிறார்.

பள்ளிக்கூடத்தில் ஓவியம், பேச்சு, நாடகம் என்று பலதுறைக-ளிலும் பங்குபற்றிப் பரிசுகளும் பெற்றார் கலைவாணி. பள்ளிப்படிப்பு முடிந்ததும் சென்னை இராணி மேரி கல்லூரியில் சேர்ந்தார். படித்தது பொருளியல். தனது ஆறு மகள்களும் கர்நாடக இசையில் சாதனைகள் படைக்கவேண்டும் என ஆசைப்பட்டார் அம்மா. ஆனால் கலைவாணிக்கோ வானொலி கேட்பதும் வாசிப்பதுமே முக்கியமான பொழுதுபோக்குகளாக இருந்தன. திரையிசை மீது கலைவாணி நாட்டம் கொள்ள வானொலியே காரணியாக அமைந்தது. அதுவும் இலங்கை வானொலி. அப்போது Radio Ceylon. 1967

லிருந்து Ceylon Broadcasting Corporation. 1972 லிருந்து Sri Lanka Broadcasting Corporation.

அப்போது இந்திய வானொலியில் திரைப்படப் பாடல்கள் ஒலிபரப்பாவதில்லை. இலங்கை வானொலியின் ஆசிய சேவையும் இந்திச் சேவையும் இந்தியா எங்கணும் இலட்சக் கணக்கானோரைக் கவர்ந்திருந்தன. 1952-ம் ஆண்டு வர்த்தக சேவையின் இயக்குநராக இருந்த Clifford Dodd, துணை இயக்குநர் லிவி விஜேமான்னே ஆகிய இருவரும் அப்போதைய பம்பாயில் (மும்பை) இருந்த அமீன் சயானி என்பவரைத் தொடர்பு கொண்டு இந்திப் பாடல்களுக்கான இசையணித் தேர்வு நிகழ்ச்சியொன்றை நடத்தித் தருமாறு கேட்டனர். ஒலிக்கும் பாடல்களை நேயர்கள் வரிசைப்படுத்த வேண்டும் கடைசி இடம் பெறும் பாடல் நிகழ்ச்சியிலிருந்து நீக்கப்பட்டு, புதிய பாடலொன்று அறிமுகமாகும்.

தமிழ்ச் சேவையில் புகழ்பெற்றிருந்த, 'இசைச் செல்வம்' போன்ற நிகழ்ச்சி, 'பினாகா கீத் மாலா (Binaca Geetmala), அமீன் சயானியின் குரலில் ஒலித்து இந்தியா முழுவதும் பெரும் வரவேற்புப் பெற்றது. விளம்பரங்கள் குவிந்தன. இலாபம் கொட்டோகொட்டென்று கொட்டியது. முதலாவது 'பினாகா கீத் மாலா' ஒரு புதன்கிழமை இரவு எட்டு மணிக்கு ஒலிபரப்பானது.

அந்த வாரம் வானொலி நிலையத்துக்கு 9,000 நேயர் கடிதங்கள் வந்திருந்தன. ஓர் ஆண்டு முடிவில் 60,000 நேயர் கடிதங்கள்.

இத்தகைய அருமை பெருமை வாய்ந்த 'பினாகா கீத் மாலா' வைக் கேட்டுக் கேட்டு, 'நான் பாடும் பாட்டும் ஒரு நாள் இந்த நிகழ்ச்சியில் ஒலிபரப்பாக வேண்டும்' என்ற கனவு கலைவாணியின் மனதில் பதிந்து போனது.

கனவு மெய்ப்படுமா?

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் இந்தியாவின் அரச வங்கியொன்றில் வேலை கிடைத்தது. விரைவிலேயே திருமணம் முடிவானது. வந்தமைந்த ஜெயராம் வணிகத்துறை உயரதிகாரி. மும்பையில் பணி, கலைவாணியும் மும்பைக்குப் பணி மாற்றம் பெற்றார். பெயரும் வாணி ஜெயராம் ஆனது. கணவர் ஜெயராம், சித்தார் மேதை ரவிசங்கரின் இசைப்பள்ளியில் ஆறாண்டு காலம் சித்தார் பயின்றவர். இசைப்புலமைக்கும் ஆர்வத்துக்கும் குறைவில்லை.

கணவர் கொடுத்த ஊக்கத்தில் இந்துஸ்தானி இசையையும் கற்கத்தொடங்கினார் வாணி. உஸ்தாத் அப்துல் ரகுமான் சாகேப் எனும் இசை ஆசானிடம் பயிற்சி. சனி, ஞாயிறு மட்டுமே வகுப்பு. வாணியின் ஈடுபாடும் கற்றுக்கொள்ளும் வேகமும் இசையில் அவருக்கு நல்லதோர் எதிர்காலம் இருப்பதை ஆசானுக்கு உணர்த்தின.

'வாரம் இரண்டு நாள் பயிற்சி போதாது. ஒழுங்காக ஒரே தியானமாக இந்துஸ்தானி கற்பதே நல்லது. அதனால் வேலையை விட்டுவிட்டு முழுமுச்சாக இசையில் இறங்கவே வேண்டும்' என்று ஆசான் சொல்லிவிட்டார்.

வாணியின் விருப்பமும் அதுவாகவே இருந்தாலும் கணவரிடம் கேட்டுப் பார்த்தார். 'கலை என்பது எல்லோருக்கும் அமையாது. அது இறைவன் கொடுத்த வரம். உனக்கு எது தோன்றுகிறதோ அதையே செய்' என்றார் கணவர்.

பிறகென்ன? காலையிலிருந்து மாலை வரை நாள்தோறும் எட்டு மணி நேரம் பயிற்சி. ஆறு மாத இடைவிடா இசைப்பயிற்சிக்குப் பிறகு, 'உனக்கு நான் கொடுத்த பயிற்சி போதுமானது. இனி நீ திரையுலகில் பாடினால் நன்றாக வருவாய்!' என்று வாழ்த்தியதோடு, புகழ் பெற்ற இசையமைப்பாளர் வசந்த் தேசாயிடம் வாணி பற்றிக் கூறினார் ஆசான். வாணியின் பாடலைக் கேட்பதற்காக அழைத்தார் வசந்த் தேசாய். அவரிடம் பாடிக்காட்டிய மறுநாளே மராத்திய நாடகம் ஒன்றுக்கான பாடல் வாணியின் குரலில் ஒலிப்பதிவானது.

அப்போது தான் குட்டி (Guddi) என்ற இந்தித் திரைப்படம் தயாரிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. வசந்த் தேசாய் மூலம் வாணியைப் பற்றி அறிந்த தயாரிப்பாளர் ரிஷிகேஷ் முகர்ஜி-யும் கதாசிரியரும் பாடலாசிரியருமான குல்சாரும் வசந்த் தேசாய் வீட்டில் வைத்தே வாணியைப் பாடச் சொல்லிக் கேட்டு, தங்கள் படத்தின் மூன்று பாடல்களையுமே வாணியே பாடட்டும் என்று முடிவு செய்தனர்.

டிசம்பர் 22, 1970 செவ்வாய்க்கிழமை உடனடியாகவே பெரும் புகழ் பெறப்போகும் பாடகி வாணி ஜெயராமுக்குத் திரையிசையுலகக் கதவுகள் திறந்து கொண்டன. அந்தத் திரைப்படத்தில் வாணி பாடிய 'ஹம்கோ மன் கி...' எனும் பாடல் இன்றும் வட இந்திய மாநிலங்களில் பள்ளிக் கூடங்களில் இறைவணக்கப் பாடலாக உள்ளது. அதே திரைப்படத்தில் வாணி பாடிய இன்னொரு பாடல் 'போலு ரே பாப்பி ஹரா' வரலாறு படைத்தது. மாணவியாக இருந்த கலைவாணி கண்ட கனவினை பாடகியான வாணி ஜெயராம் நனவாக்கினார். இலங்கை வானொலியின் 'பினாகா கீத் மாலா'வில் அந்தப் பாடல் அறிமுகமான போது வாணி ஜெயராம் அடைந்த மகிழ்வுக்கு அளவேது? தொடர்ந்து 16 வாரங்கள் முதலிடத்தில் இருந்தது அந்தப் பாடல். இதை ஒரு நேர்காணலில் மிகவும் நெகிழ்ச்சியுடன் பதிவு செய்திருந்தார் வாணி ஜெயராம். இந்தித் திரையுலகின் மதிப்புமிக்க விருதுகளையும் குட்டி திரைப்படப் பாடல்கள் வாணி ஜெயராமுக்குப் பெற்றுக் கொடுத்தன.

இந்த வெற்றியைத் தொடர்ந்து குறுகிய காலத்திலேயே இந்தித் திரையுலகின் புகழ்பெற்ற இசையமைப்பாளர்கள் அனைவருடைய இசையிலும் பாடினார்.

இந்தியோடு, மராத்தி, குஜராத்தி உள்ளிட்ட சில மொழிக-ளில் பல பாடல்கள், இவருடைய உச்சரிப்பு நேர்த்தி வடமாநிலப் பெண் என்றே பலரையும் நினைக்கவைத்தது. இப்படி வடக்கே பறந்த வாணியின் கொடி தெற்கிலும் பறக்கத் தொடங்கியது.

'வடமாநிலத்தில் வாணி ஜெயராம் எனும் பாடகி புகழின் உச்சியில் இருக்கிறார். அவரை வைத்து சென்னையில் ஒரு கச்சேரி நடத்தலாமே' என்று சிலருக்குத் தோன்ற, 1973 பெப்பிரவரியில் சொந்த மாநிலத்தில் பாட மகிழ்ச்சியோடு வந்தார் வாணி ஜெயராம். அவர் பாடிய இந்திப் பாடல்களின் தொகுப்பாக சென்னை 'மியூசிக் அகாடமி'யில் இரண்டு நாள் கச்சேரி. தலைமை தாங்கியவர் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.

விஸ்வநாதன்.

‘மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மணம் அதிகம் என்பார்கள். ஆனால் நமது ஊர்ப் பெண் பம்பாயில் இவ்வளவு நன்றாகப் பாடுகிறார். எங்களுக்கு இன்னும் அவருடைய திறமை புரியவில்லை’ என்று சொல்லிவிட்டுப் போன மெல்லிசை மன்னர், இரண்டு மாதம் கழித்து, ‘தீர்க்க சுமங்கலி’ படத்தில் பாடுவதற்காக அழைத்தார். அவருடைய இசையில் பாடிய முதல் பாடல் ‘மல்லிகை என் மன்னன் மயங்கும்...’. ஊரையே மயக்கிய அந்த ஒரே பாடல் வாணி ஜெயராமை தமிழ் கூறும் நல்லுலகெங்கும் புகழ் பெறவைத்தது.

‘சென்னை இசைநிகழ்ச்சியின் முதல்நாள் எஸ்.எம். சுப்பையா நாயுடு அவர்கள் என்னைக் கண்டு பேசி வழங்கிய வாய்ப்பில் ‘தாயும் சேயும்’ எனும் படத்துக்காகப் பாடிய பாடலே



தமிழ்த் திரையுலகில் பாடிய முதல் பாடல். ஆனால் அந்தப் படம் வெளிவரவில்லை.’ என்று ஒரு பேட்டியில் கூறியிருந்தார் வாணி ஜெயராம்.

சங்கர் - கணேஷ் இசையில் டி.எம். சௌந்தரராஜனோடு இணைந்து பாடிய ‘ஓரிடம், உன்னிடம்’ பாடலே வாணி ஜெயராம் பாடிய முதலாவது தமிழ்த் திரைப்படப் பாடல் என்று கணேஷ் ஒரு நேர்காணலில் கூறியிருக்கிறார். வாய்ப்பில்லை.

குட்டி இந்தித் திரைப்படம் தமிழில் தயாரிக்கப்பட்ட போது, ‘போலு ரே பாப்பி ஹரா’ பாடலுக்கான இடத்தில் புதிய மெட்டில் ‘என் உள்ளம் அழகான வெள்ளித்திரை’ ஆனது.

‘ஸ்வப்னம்’ மலையாளத் திரைப்படத்தில் ஒரு பாடல். அங்கும் வெற்றி. கன்னடம், தெலுங்கு, போஜ்பூரி, வங்காளி கொங்கணி, பஞ்சாபி என்று 19 மொழிகளில் 10,000 பாடல்களுக்கு மேல் பாடினார் வாணி ஜெயராம்.

தமிழ் இசையமைப்பாளர்கள் எல்லோரிடமிருந்தும் வாய்ப்புகள் தேடிவந்தன. சங்கர் - கணேஷ், வி. குமார், விஜயபாஸ்கர், சந்திரபோஸ், கே.வி. மகாதேவன், எம்.எஸ். விஸ்வநாதன் என்று அறிமுகமான சில ஆண்டுகளிலேயே பாடினார். பின்னர், இளையராஜா, கங்கை அமரன், தேவா, ஏ.ஆர்.ரகுமான் வரையில் பாடினார்.

எம்.எஸ். விஸ்வநாதன், கே.வி. மகாதேவன் உள்ளிட்ட இசையமைப்பாளர்களுக்குப் பாடி வந்த வாணி ஜெயராம், முதல் முதலாக ‘புவனா ஒரு கேள்வி குறி’ திரைப்படத்துக்காக இளையராஜா இசையில் பாடினார்.

இளையராஜா இசையில் வாணி ஜெயராம் பாடிய, ‘நானே நானா’ பாடல் அவருக்கான மாநில அரசின் விருதுகளைப் பெற்றுத் தந்தது. 1980களில் இளையராஜா இசையில் நிறையப் பாடல்களைப் பாடினார். இன்றைக்கும், ‘இன்றைக்கு ஏன் இந்த ஆனந்தமே’ பாடல் ஒலித்தால் நின்று கேட்டுவிட்டுப் போகத்தான் மனம் விழைகிறது. கேட்கும்போதே அந்த ஆனந்தம் எம்மையும் தொற்றிக் கொள்கிறது.

‘மாட்டுக்கார மன்னாரு’ படத்தில் இசையமைப்பாளர் தேவாவின் முதலாவது திரைப்படப் பாடலான, ‘மன்னாரு மன்னாரு மாட்டுக்கார மன்னாரு’ பாடலைப் பாடியவரும் வாணி ஜெயராமே.

முறைப்படி கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை பயின்றவர், இந்த இசை மரபுகளைத் தாண்டிய பாடல்களையும் கிராமியப் பாடல்களையும் பாடினார். திரைப்படங்களில் பாடி சிறந்த பாடகிக்கான தேசிய விருது மூன்று தடவை பெற்றிருக்கிறார். அபூர்வ ராகங்கள் பாடல் ஒலிப்பதிவின் பின், ‘ஏழு ஸ்வரங்களுக்குள்’ பாடலுக்குத் தேசிய விருது கிடைக்கும்’ என்று மெல்லிசை மன்னர் சொன்னது பலித்தது.

கே.வி. மகாதேவன் இசையில் ‘சங்கராபரணம்’ தெலுங்குப் படத்தில் பாடிய ஐந்து பாடல்களுக்காக இரண்டாவது தேசிய விருது. 1992-ல் ‘ஸ்வாதி கிரணம்’ என்ற தெலுங்குப் படத்தில் ‘ஆனதிநீய ரா’ எனும் பாடலுக்காக மூன்றாவது தேசிய விருது.

‘மூன்று தேசிய விருதுகளுமே பாரம்பரிய இசையை அடிப்படையாகக் கொண்ட படங்களுக்காகக் கிடைத்தமை பெரும் பாக்கியம்’ என்று மனமுருகினார் வாணி ஜெயராம்.

2010-ம் ஆண்டளவில் ரொறன்ரோவில் தமிழோசை சிறீஸ்காந்தா ஏற்பாட்டில் ஓர் இசைநிகழ்ச்சி, மல்லிகை என் மன்னன் மயங்கும், என்னுள்ளில் எங்கோ, கேள்வியின் நாயகனே, ஏழு ஸ்வரங்களுக்குள், மல்லிகை முல்லைப் பூப்பந்தல், நானே நானா யாரோ தானா, மேகமே மேகமே, யாரது சொல்லாமல் நெஞ்சள்ளிப் போவது, என் கல்யாண வைபோகம் உன்னோடுதான், நாதமெனும் கோவிலிலே, நித்தம் நித்தம் நெல்லுச் சோறு... என்று நெஞ்சில் நிறைந்த பாடல்களைப் பாடி இரண்டு மணிநேரம் இடைவிடா இசைமழையில் இரசிகர்களை நனைய வைத்தார் வாணி ஜெயராம். அவர் மறைவுச் செய்தி கேட்டதும் அந்த இசை நிகழ்ச்சியில் அவர்

பாடிய பாடல்கள் எங்கோ தொலைவிலிருந்து ஒலிப்பது போன்று இருக்கிறது.

வாணி ஜெயராமுக்கு இசைக் கலாநிதி பாலமுரளி கிருஷ்ணாவோடு ஒரு பாடல் பாடும் வாய்ப்பு அமைந்தது. குன்னக்குடி வைத்தியநாதன் இசையில் எம்.ஜி.ஆர். நடித்த 'நவரத்தினம்' படத்தில் 'குருவிக்கார மச்சானே' பாடல். ஒலிப்பதிவு முடிந்ததும், சிறுவயதில் பாலமுரளி கிருஷ்ணா தன்னை வாழ்த்தியதை நினைவூட்டியபோது, 'என்னது? அந்தக் குழந்தை கலைவாணியா, இப்போது வாணி ஜெயராமாக என்னோடு பாடினார்!' என்று வியப்பும் மகிழ்வும் அடைந்தாராம் பாலமுரளி கிருஷ்ணா.

ஏ.ஆர். ரகுமான் இசையில் 1993-ல் 'வண்டிச்சோலை சின்ராசு' படத்தில், 'எது சுகம் சுகம்' என்று விரகதாபம் பொங்க ஒரு பாடலைப் பாடியவர் 2014ல் 'காவியத்தலைவன்' படத்தில் ஒரு திருப்புகழ் பாடியிருப்பார். ஒன்றரை நிமிடம். நாசரின் நாடகக் குழுவில் இணைய வரும் தாயையும் மகளையும் சேர்த்துக்கொள்ள நாசர் மறுத்துவிடுவார். பாடப்போகிறார் என்ற எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் கணீரென, 'ஏவினை நேர்விழி மாதரை மேவிய' திருப்புகழ் தொடங்கும். அற்புதம்.

அந்த இடத்தில் அந்த ஒன்றரை நிமிடத் திருப்புகழுக்கு வாணி ஜெயராமின் குரலைத் தெரிவு செய்த ஏ.ஆர். ரகுமானும் பாராட்டுக்குரியவர். காவியத்தலைவன் பார்க்காதவர்கள் அந்தக் காட்சியையாவது பாருங்கள். அந்தக் குரலின் மகத்துவம் உணர்வீர்கள்.

பத்தினிப்பெண் (1993) திரைப்படத்தில் 'உலகெங்கும் நம் வீடு' என்றொரு பாடல் பாடினார் வாணி ஜெயராம். ஒலிப்பதிவு முடிந்ததும் மெல்லிசை மன்னர் அழைத்தார். 'என்ன சொல்லப் போகிறாரோ!' என்று அங்கலாய்த்தபடி போனால், 'நான் 15 நாள் மூளையைக் கசக்கிப்போட்ட மெட்டை ஒரு குவளைத் தண்ணீர் குடிப்பது போல இப்படி உடனடியாக இலகுவாகப் பாடிவிட்டீர்களே!' என்று வியந்தாராம் அவர். வாணி ஜெயராமே சொல்லி மகிழ்ந்த சம்பவம் இது.

ஈழ விடுதலைப் பாடல்களையும் வாணி ஜெயராம் பாடியிருக்கிறார் என்பது எல்லோரும் அறிந்தது. 'களத்தில் கேட்கும் கானங்கள்' தொகுப்பில், 'வீசும் காற்றே தூது செல்லு', 'தென்னங்கீற்றில் தென்றல் வந்து மோதும்' ஆகிய பாடல்கள். இவற்றோடு, பாடும் பறவைகள் வாருங்கள், வீரன் மண்ணில் புதையும் போது... என்று இன்னும் சில பாடல்கள்.

'களத்தில் கேட்கும் கானங்கள்' ஒலிப்பதிவின் போது நடந்தவற்றை பாடல் தொகுப்புத் தயாரிப்புக்குப் பொறுப்பாக இருந்த கதி. செல்வகுமார் பகிர்ந்த முகநூல் பதிவில், 'முதலில் வாணி ஜெயராம் பாடினால் நன்றாக இருக்கும் என யோசிக்கப்பட்டது, 'வீசும் காற்றே தூது செல்லு' என்ற பாடல் தான். முகாமையாளர் சுப்பையா மூலம் அவரிடம் கேட்கப்பட்டபோது, அவரின் சம்மதம் உடனடியாக கிடைத்துவிட, 'அப்படியெனில் இன்னுமொரு பாடலும் பாடமுடியுமா?' எனக் கேட்டு, 'தென்னங்கீற்றில் தென்றல் வந்து மோதும்' பாடல் குறிப்பிடப்பட, ஒரே நேரத்தில் ஒரு மணி நேரத்திற்குள் இரண்டு பாடல்களையும் பாடித் தந்துவிட்டுச் சென்றார். அவர் ஒலிப்பதிவுக்கு வந்தபோது எதுவும் பேசவில்லை. பாடல் வரிகளோடு சுரவரிசையும் எழுதப்பட்ட தாளை இசையமைப்பாளர் தேவேந்திரன் கொடுக்க, அதனோடு குரல் பதிவுக்கூடத்துக்குள் சென்றவர் முதலில் பாடியது 'வீசும் காற்றே தூது செல்லு' பாடல்தான். அதற்கு அவர் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டார். அந்தப் பாடலுக்குள் வரும் விம்மல்கள், வேதனை, வெளிப்பாடுகள் எல்லாமே அவரது உள்ளத்து வெளிப்பாடு. ஒரு கலைஞராக அவரே அந்தப் பாடலுக்கு சேர்த்த அழகு.' என்று கூறுகிறார்.

'பாடும் பறவைகள் வாருங்கள்', அப்போதைய இந்திய அரசையும் இராணுவத்தையும் கடுமையாகச் சாடுகின்ற பாடல். பாடல் வரிகளின் உணர்வுகளை அப்படியே வெளிப்படுத்தியிருப்பார் வாணி ஜெயராம்.

மேற்சொன்ன, ரொறன்ரோ இசை நிகழ்ச்சியில் ஓர் ஈழப்பாடலின் பல்லவியை மட்டுமே வாணி ஜெயராம் பாடினார். அரங்கமே ஆர்ப்பரித்து அதிர்ந்தது. அந்தப் பாடல், 'தென்னங்கீற்றில் தென்றல் வந்து மோதும்'.

'நான் இந்த, 'பீல்டு'க்கு வந்து, 50 வருஷம் ஆகுது. இத்தனை வருஷமா ஒவ்வொருத்தர் வீட்டிலேயும், அவங்க குடும்பத்துல ஒருத்தராவே என்னை நினைக்கிறாங்க. இது, இசை எனக்கு கொடுத்த மாபெரும் பரிசு.' என்று பெருமிதம் கொண்டிருந்தவர் வாணி ஜெயராம்.

இந்தியாவின் மூன்றாவது உயரிய குடிசார் விருதான பத்மபூஷன் அறிவிக்கப்பட்டு, அதனைப் பெறமுன்னரே காலமாகிவிட்டார்.

இந்த மார்ச் 19-ம் நாள் அவருக்கு ஒரு பாராட்டு விழாவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கர்நாடக இசை, இந்துஸ்தானி, திரையிசை மூன்றிலுமே கொடி நாட்டிய வாணி ஜெயராம் ஏன் பின்னாளில் இந்தியில் பாடவில்லை என்பதற்குப் பின்னால் உள்ள மர்மம் என்ன?

'எடுத்த எடுப்பிலேயே அவரது இந்திப் பாடல் பிரமாத வெற்றி பெற்றுவிட்டது. அதன் வெற்றியைக் கண்டு சில இந்திக்காரர்களுக்குப் பொறாமைகூட வந்துவிட்டது. வாணி ஜெயராமை வைத்து எந்த இசையமைப்பாளர் பாட்டு எடுக்கிறாரோ, அவருடைய இசையமைப்பில் தான் பாடுவதில்லை என்று பிரபல இந்திப் பாடகி ஒருவர் நெருக்கடி கொடுத்தார். ஆனால் என்ன? ஒடியாவிலும் வங்காளியிலும் நான்கு தென்னக மொழிகளிலும் வாணியின் கொடிதான் பறந்து கொண்டிருக்கிறது. பானுமதி, வரலட்சுமி, சூரியகுமாரி ஆகியோரின் குரலைப் போல், வாணியின் குரலும் தனித்தன்மை வாய்ந்தது' என்று குறிப்பிட்டுள்ளார் கவியரசு கண்ணதாசன்.

எது எப்படியாயினும், ஐம்பது ஆண்டுகளாக இசை இரசிகர்களின் மனதைக் கொள்ளை கொண்ட குரலுக்குச் சொந்தக்காரர் மறைந்துவிட்டார். தனித்துவமான, கணீரென்ற அந்தக் குரலில் வெளிவந்த பாடல்கள் அவரை என்றும் எம் நினைவில் வைத்திருக்கும்.



gangatharan.k@thaiveedu.com

# நீண்ட நெடும் பாதையில்

- மு. புஷ்பராஜன்



பத்மநாப ஐயர் உடனான உறவு எவ்வாறு ஆரம்பமாகியது? கடந்துவந்த நீண்ட நெடும் பாதையில் படர்ந்திருக்கும் மங்கல் பொழுதுகளின் ஊடாகத் திரும்பப் பயணிக்க வேண்டியிருக்கிறது.

அவர் பெயர், நண்பர் அ. யேசுராசா மூலமே வந்தடைந்தது. அப்போது அவர் கொழும்பில் பணியாற்றிவந்தார். விடுமுறையில் ஊர் வரும் நாட்களில் அடிக்கடி சந்தித்துக்கொள்வோம். எமது கலை, இலக்கிய உரையாடல்களில், கொழும்பு இலக்கியக்காரர்கள் பற்றிய தகவல்கள் கலந்து இருக்கும். அவ்வாறு வந்த பெயர்களில் ஒன்றுதான் இ.பத்மநாப ஐயர். ‘அலை’ இதழின் ஆசிரியர்கள் இணைந்து கொழும்பில் சந்தா சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது ஒரு பகற்பொழுது வீதி ஓரத்தில் வைத்து அ. யேசுராசாவால் அறிமுகப்படுத்தப்பட்டார். சிறிய முறுவலுடன் பரஸ்பரம் தலையைத் தலையை ஆட்டிக்கொண்டதுடன் முடிந்தது. ஆயினும் யேசுராசா பல சந்தர்ப்பங்களில் வழங்கிய பல தகவல்கள் அவர்மீதான நெருக்கமான உணர்வை என்னுள் ஏற்படுத்தியிருந்தது. அக்காலங்களில் டெல்லியில் இருந்து வெளிவந்த ‘கணையாழி’ இதழினைத் தருவித்து, இலக்கிய நண்பர்களுக்கு விநியோகித்து வந்தார். அதற்கு சந்தாக்கள் சேர்த்ததாகச் செய்தியும் உண்டு. இலக்கிய இதழ்களில் அவர் எதனையும் எழுதியதாக அறிந்திருக்கவில்லை. எனது ஞாபகம் சரியாகில், கணையாழியில் வெளிவந்த படைப்புகள் பற்றிய தனது கருத்துக்களை வாசகர் கடிதம் போல் அதில் எழுதியிருந்தார். நிறைய வாசிப்பவர் என்ற படிமம் அப்போது மேலோங்கியிருந்தது. அவர் யாழ்ப்பாணத்திற்கு பணி மாற்றம் பெற்று, நல்லூரில் குடியிருந்தபொழுதுதான் அவருடனான நெருக்கம் அதிகரித்தது. அந்த நெருக்கம் புலம்பெயர்ந்தும் தொடர்கின்றன.

1975-ன் ‘அலை’ கலை, இலக்கிய இதழை நாங்கள் நால்வர் இணைந்து நடத்திவந்த காலங்களில் அலையின் வளர்ச்சியில் ஆக்கபூர்வமான பங்களிப்பை ஐயர் வழங்கியபடி இருந்தார். அவருக்கும் ‘அலை’க்குமான உறவு என்பது குறிப்பாக, அ. யேசுராசாவிற்கு ஊடாக வந்த நட்பின் பகுதியாகவே இருந்தது. அது மிகவும் இறுக்கமானதாகவும் இருந்தது. அப்போது அவர் ஈழத்து இலக்கியங்களைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்துவதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். ஆர்வத்தின் ஒரு பகுதியாக அவர் நண்பர் யேசுராசாவுடன் தமிழகம் பயணமாகியதும் உண்டு. அப்போது ஈழத்துப் படைப்பாளர்களை அறிமுகப்படுத்தினர். ‘அலை’ இதழ் ஒன்றை அங்கு பதிப்பிக்கும் முயற்சியிலும் முயன்றனர். அம்முயற்சி முடிவுறும் முன்னர் அவர்கள் இலங்கை திரும்ப நேர்ந்தது. எனவே அலை இதழை முடிக்கும் பணிக்கு நான் தமிழகம் செல்லவேண்டும் என்ற தீர்மானம் ஆயிற்று. எனது பயண ஏற்பாடுகளை அவரே மேற்கொண்டிருந்தார் என்பது என் ஞாபகம். தமிழகத்தில் எந்தெந்த எழுத்தாளர்களை, பதிப்பகங்களைச் சந்திக்கவேண்டும் எவரெவருக்கு என்னென்ன புத்தகங்கள் கொடுக்கவேண்டும் என்ற ஆலோசனையுடன், பல ஈழத்து நூல்களையும் அளித்தார். ஆக, அவர் பொறுப்பில் 1982-ல் ஒரு இலக்கியப் பயணத்தை தமிழகத்தில் மேற்கொண்டேன். ‘அலை’ குழுவினர் இதழ் முயற்சியுடன் இணைந்த நூல் வெளியீட்டு முயற்சியிலும் அவர் பலமாக இருந்தார். ‘அலை’யின் முதல் பன்னிரண்டு இதழ்களின் ஒன்றிணைந்த தொகுப்பு ஐயரின் திட்டத்திலும் பலத்திலுமே சாத்தியமாகியது.

தரமான ஈழப் படைப்புகளை வெளியிடுவதும் அதைத் தமிழக எழுத்தாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதுமே எழுபதுகளிலிருந்து ஐயரின் பணியாக இருந்து வருகிறது. எங்கள் தலைமுறைக்கு முந்திய படைப்பாளர் பலர் தமது படைப்புகளை நூல்வடிவில் பார்ப்பதென்பது இலகுவான விடயமல்ல. அந்த ஆசையை நிறைவேற்ற தமது துனைவியாரின் தாலியை அடகு வைத்த வரலாறுகளும் உண்டு. அதை மீட்க முடியாமல் தீராத பிணக்குகளுடன் வாழ்ந்த குடும்பங்களின் கதைகளை அக்காலத்தில் அறிந்திருந்தேன். ஐயருக்குத் தமிழக பதிப்பாளர்களுடன் ஏற்பட்ட இணக்கமான உறவு, இந்த நெருக்கடியை ஓரளவு தணித்திருக்கிறது என்றே கூறலாம். அப்போது தமிழகத்தில் ‘வாசகர் வட்டம்’ பதிப்பகம் நூல்கள் தரமாகவும் நேர்த்தியாகவும் வெளியிட்டு வந்தது. 1968-ல் ‘அக்கரை இலக்கியம்’ என்ற ஒரு தொகுப்பை அப்பதிப்பகம் வெளியிட்டது. அதில் ஈழத்துப் படைப்பாளர் பலரது படைப்புகள் இடம்பெற்றது. இதன் சாத்



தியம் ஐயரால் ஆனதே. 1981-ம் ஆண்டு அரச படையின ரால் யாழ் பொதுசன நூலகம் எரியூட்டப்பட்ட பின்னர் சாம்ப லில் இருந்து எழும் பீனிக்ஸ் பறவைகளாகப் பலர் எழுந்த னர். ஐயரும் தனது முயற்சியாக தமிழகம் சென்றார். 'கொடு ரம் இழைக்கப்பட்ட சில மாதங்களில் தமிழ் நூல்களைத் தேடியும் ஈழத்துப் படைப்பாளிகளின் கையொழுத்துப் பிரதிக ளைச் சுமந்தும் ஒரு யாத்திரிகர் தமிழகம் வந்தார். சோகம் எழுதிய அவருடைய முகத்தில் உறுதியின் ரேகைகளை அடையாளம் காண முடிந்தது. அவர் வேறு யாருமல்ல, யாழ்ப்பாணத்து நல்லூர் ஆர். பத்மநாப ஐயர்' எனச் சிற்பி பாலசுப்பரமணியம் மஹாகவியின் 'பொருள் நூறு' நூலின் பாயிரத்தில் குறிப்பிடுகிறார். மாஹாகவியின் குறிப்பிட்ட அந்த நூலின் கையெழுத்துப் பிரதியும் ஐயர் மூலமே கிடைத்ததாகவும் கூறுகிறார். இந்த உறவின் நீட்சியாக சிற்பி பாலசுப்பிரமணியம் நடத்திவந்த 'வானம்பாடி' கவிதை இதழ், ஈழத்துக் கவிதைச் சிறப்பிதழ் ஒன்றையும் வெளியிட்டது.

இவர் 'தமிழியல் வெளியீடு' ஒன்றினை ஆரம்பித்து 1984-ம் ஆண்டு 'ஈழநாடு' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கங் ளைத் தொகுத்து 'ஊரடங்கு வாழ்வு' என்ற நூலினை 1985-ல் வெளியிட்டார். தொடர்ந்து கிட்டத்தட்ட எட்டு நூல்க ளினை வெளியிட்டார். இவற்றுள் 'மரணத்துள் வாழ்வோம்' கவிதைத் தொகுப்பும், ஓவியர் மார்க்கு அவர்களின் சிறப்பித ழுமான 'தேடலும் படைப்புலகமும்' அடங்கும். முன்னையது அதன் முக்கியத்துவம் கருதி 'மரணத்துள் வாழ்வோம் காலம்' என்ற அடைமொழியை ஈழத்து விமர்சன உலகில் ஏற்படுத்தி யது. பின்னயது ஓவியர் மார்க்கு அவர்களைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்தியதில் பெரும் பங்காற்றியது. இதே காலத் தில் ஐயரின் தொடர்பினாலும் முயற்சியினாலும் 'கிரியா', 'நர் மதா,' 'அன்னம்', 'சமுதாயம்', 'பொதுவுடமை' ஆகிய பதிப்ப கங்கள் பல ஈழத்துப் படைப்புகளை நூலுருவாக்கினர். இவற்றுள் சில மறுபதிப்புக்களாகும்.

புலம்பெயர்ந்த பின்னரும் தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தனாய் ஐயா லண்டனில் வாழ்ந்தார். அவர் பணிபுரிந்த 'தமிழர் நலன்புரிச் சங்கம்' ஆண்டு இறுதி யில் ஒரு சிறப்பு மலர் வெளியிடுவது வழக்கம். 1996-ல் அதன் 10-வது ஆண்டு மலரில் சங்க அறிக்கைகளுடன் இலக்கியப் படைப்புகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. தொடர்ந்த ஆண்டுகளில் அறிக்கைகள் மறைந்து அவை இலக்கிய தொகுப்புகளாக வெளிவந்தன. 'கிழக்கும் மேற் கும்', 'இன்னுமொரு காலடி', 'யுகம் மாறும்', 'கண்ணில் தெரி யுது வானம்' ஆகிய தொகுப்புகள் வெளிவந்தன. இவை தமிழ் கூறும் நல்லுலகின் படைப்பாளர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்தன. தமது படைப்புகள் இடம்பெறாத சில படைப்பாளர்கள் இவருடன் முரண்பட்டும் உள்ளனர். அத்து டன் 'தமிழியல்' பதிப்பகத்தை மீண்டும் லண்டனில் ஆரம் பித்து கவிதைகள், சிறுகதைகள், விமர்சனம், அரசியல், சுற் றுச் சூழல், திரைப்படம் ஆகிய துறைகளைச் சார்ந்த நூல் களை வெளியிட்டார். அத்துடன் தமிழ் இலக்கியப்பரப்பில் பரவலாக மதிக்கப்பெற்ற ஏ.ஜே. கனகரட்னாவின் மறைவை-யொட்டி அவருக்கு அவர் நினைவாக AJ: The Rooted Cosmopolitan. A Festschrift on AJ என்ற தொகுதியை 2008-ல்

வெளியிட்டார்.

பதிப்பகம் எவ்வாறு நேர்த்தியாக நூல்களை வெளிக்கொணர வேண்டும் என்ற உணர்வுக்கு தமிழகம் உட்பட அரிதான உதாரணங்களே உண்டு. அந்த அரிதானவைகளுள் 'தமிழியல்' பதிப்பகமும் ஒன்று. குறிப்பாக 2004-ல் இருந்து புதிய பொலிவுடன் வெளிவரத் தொடங்குகிறது. மெய்ப்பு நோக்கல், சொற்களின் பல்வேறு எழுத்துவகை, அழகியல் ஆகியவற்றில் இவர் கொள்ளும் கவனம் அசாத்திய பொறுமையைக் கோருவது. இவற்றிற்கு துணையாக நிற்கும் ஓவியர் கே. ராஜா, விமர்சகர் மு. நித்தியானந்தன் ஆகியோர்கள் அசாத்திய பொறுமை காத்தவர்களாவர். நூல்கள் நேர்த்தியில் ஏற்படும் கால நீட்சியை சில படைப்பாளிகளால் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. இதன் காரணமாக முரண்பட்டவர்கள் உண்டு. பிரதியை மீளப் பெற்றுக் கொண்டவர்களும் உண்டு. இரண்டாம் வகைக்குள் நானும் அடக்கம். ஒரு நூல் எவ்வாறு வெளிவரவேண்டும் என்ற அவரது நோக்கிற்கு 'கண்ணில் தெரியும் வானம்' ஓர் அசல் உதாரணமாகும். அதிலும் திருப்தியடையாத மனத்தின் வெளிப்பாடுதான் 'ஸ்ரீதரன் கதைகள்'. இவரின் ஆசைகளும் கனவுகளும் இதில்தான் நிறைவேறியுள்ளதாக நான் நினைக்கிறேன். இதற்கு ஓவியர் கே. ராஜாவின் ஓவியங்களே செறிவூட்டின.

தமிழக உறவுகளுக்குப் பாலமாக அமைந்த இவர் 2001-ல் இருந்து ஆங்கில இலக்கியத்தில் தமிழ் படைப்புகளை அறிமுகப்படுத்தும் பணியில், அத்துறையில் உள்ளவர்களோடு இணைந்து செயற்படத் தொடங்கினார். செல்வா கனகநாயகம் தொகுத்து Canada TSAR பதிப்பகத்தின் மூலம் வெளியிட்ட 'Lute song and Lament', Oxford University Press வெளியிட்ட 'Uprooting the Pumpkin' லஷ்மி ஹோம்ஸ்ரோம் தொகுத்து Penguin/Viking வெளியிட்ட 'The Rapids of a great River' லஷ்மி ஹோம்ஸ்ரோமுடன் சாசா ஈபெலிங் இணைந்து தொகுத்து Are Publication வெளியிட்ட 'Love Evenings Lost Live'. எம். கண்ணன், தொகுத்து Penguin Books India வெளியிட்ட' Time Will Write a Song for You' சியாம் செல்லத்துரை தொகுத்து Penguin வெளியிட்ட 'Many Roads Through Paradise' ரஜீவ விஜயசிங்க தொகுத்து National Book Trust வெளியிட்ட 'Mirrored Images'ஆகிய ஈழத்துப் படைப்பாளர்கள் நூற்றொகுப்புகளில் பக்கபலமாக நின்றார். இதில் இறுதியாகக் குறிப்பிடப்பட்டவரின் நூல் முயற்சியில் ஐயர் இணைந்தமை ஒரு முரன்நகையாகவே நான் கருதுகிறேன். ஐயர் அதற்கான காரணங்களைத் தன்பக்கம் வைத்திருக்கிறார். அதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் நான் இல்லை. இத்தகைய பணிகளுடன் ஈழத்துப் படைப்பாளர்களது நூல்களையும் ஈழத்தைப் பற்றி பிறநாட்டவர்கள் எழுதிய நூல்களையும் ஆவணப்படுத்தும் முயற்சியில் 2005-இல் இருந்து இயங்கிவரும் noolaham.org என்ற ஆவணக் காப்பக நிறுவனத்தின் தலைவராகவும் இருந்து செயற்பட்டு வருகிறார்.

பிறநாட்டு நல்லறிஞர்களுக்கு தமிழ் படைப்பாளிகளை அறிமுகப்படுத்தும் இவரது பணிசார்ந்து எனக்கான ஓர் அனுபவத்தை இங்கு பகிர விரும்புகிறேன். ஆங்கிலத்தில் ஆசியப் படைப்பாளர்களின் கவிதைகள் வாசிப்பு நிகழ்வு ஒன்று 'Archway'-இல் நடைபெறுவதாகவும் நிகழ்ச்சியில் லஷ்மி ஹோம்ஸ்ரோம் சில ஈழத்து கவிதைகளை ஆங்கிலத்தில் வாசிப்பதாக ஏற்பாடாகியிருந்தது. நான் அங்கு வருவது நல்லது எனக் கூறிய ஐயர். நிகழ்ச்சி நிரலையும் ஈமெயிலில் அனுப்பிவிட்டார். அனுமதிச் சீட்டை அவர் கொண்டுவருவதாகக் கூறினார். குறித்த நாள் நான் மண்டப வாசலில் நின்று பத்து நிமிடங்களுக்கு மேலாகிவிட்டது. ஐயரைக் காணவில்லை. கார்கள், பஸ்கள், பாதசாரிகள் ஆகியோரைப் பார்த்துப் பார்த்து அலுத்துவிட்டது. அது ஆவணி மாதத்தின் கலப்புக் காலநிலை. பருத்தும் திரண்டும் நீண்டிருந்த 'மேப்பிள்' மர இலைகள் சரசரத்தபடி இருந்தன. முதலில் அதைக் கேட்க விருப்பமாக இருந்தது. பின் வெறுப்பாக மாறிவிட்டது. நின்று சலித்துவிட்டது. பஸ் தரிப்பின் அருகிருந்த மர வாங்கில் அமர்ந்திருந்தேன். அதுவும் அலுத்துவிட்டது. எழுந்து மறுபடியும் மண்டபத்தின் முன் வாசலிற்கு வந்தேன். ஆசிய, ஆங்கில முகங்கள் சிரித்தும் உரையாடியும் மண்டபத்தினுள் சென்றுகொண்டிருந்தனர். அவற்றில் சில தமிழ் முகங்களும் இருந்தன. இவர்கள் ஐயரின் அழைப்பாளிகள்தான் என நினைத்தேன். பொறுமை வடித்து சினம் ஊறுகின்ற வேளையில், சாந்தனது காரில் வந்து இறங்குகிறார். கையில் ஒரு புத்தகக் கட்டு. 'என்ன கனநேரமா'? என்று சிரித்தபடி வருகிறார். கோபத்தை அடக்கியபடி எதுவும் பேசாமல் உள்ளே சென்றேன். கவிதை வாசிப்பு சீராகச் சென்றுகொண்டிருக்கிறது. எனக்குத் தாகமாக இருந்தது. இடைவேளை, ஏதாவது குடிக்கவேண்டும்போல் இருந்தது. சாந்தனும் ஒப்புக்கொள்கிறார். ஆனால் இடைவேளையில் ஐயர், இரவீந்திரநாத் தாகூரின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவருடன் மெல்லக் குனிந்து ரகசியமாக ஏதோ கதைத்தபடி Lute song and Lament பிரதியைக் கொடுக்கிறார். அடுத்து ஒரு வங்காளப் பெண் கவிஞரிடம் செல்கிறார். அவருக்கும் புத்தகமும் விளக்கமும். இப்படி கவிதை வாசித்தவர்கள் வாசிக்க இருப்பவர்கள் அனைவரிடமும் சென்று பேசுகிறார். கொடுக்கிறார். பின்பு எம்மிடம் வந்தார். 'இவர்களுக்கு நமது கவிதைகளை அறிமுகப்படுத்த இது நல்ல சந்தர்ப்பம்' என்றார். ஏதாவது குடிக்க ஒரு சந்தர்ப்பம் தரவில்லையே என நினைத்து நொந்து போனேன். இடைவேளை முடிந்து மறு வாசிப்புக்கான அமர்வு தொடங்கிவிட்டது. நான் தொண்டை காய இருந்தேன். அவரோ நாலு பிற மொழிக் கவிஞர்க்கு தமிழ் கவிதையை அறிமுகப்படுத்திய மகிழ்சியில் இருந்தார்.

புத்தகங்களுக்கும் ஐயருக்குமான உறவு அலாதியானது. புத்தகங்களுக்கு கௌரவமான ஒரு மரியாதையை எப்போதும் நிபந்தனையின்றி அளித்து வருபவர். நூல்களைவிடப் பெரிய உலகம் அவருக்கு இல்லை என்றே கருதுகிறேன். நூல்களை அறையின் தரையில் வைக்க அவர் விரும்புவதே இல்லை. நூல்கள் அறைகளை ஆக்கிரமித்திருக்கும். கட்டிலின் நீளவாக்கில் காற்பங்கை அவை ஆக்கிரமித்திருக்கும் கட்டிலின் இவர் புரண்டுபடுக்க முடியாது. அராபியனும் ஒட்டகமும் கதையை அவை நினைவூட்டும். இவருக்கான வீட்டில் நூல்களை வைத்திருக்கிறார் என்பதைவிட நூல்களுக்கான வீட்டில் இவரைத் தங்க அனுமதிக்கப்பட்டதைப்போல் இருக்கும். நூல்களை செல்லப் பிராணியைப்போல் அக்கறையாகக் கவனித்துக்கொள்வார். தனது குழந்தைகளை அப்படிக் கவனித்திருப்பாரா என்பது எனக்குச் சந்தேகமே. யதார்த்தத்தில் எனது சந்தேகம் பொய்யாகிப் போய்விட வாய்ப்புகள்

இருக்கலாம். நூல்களின் முனைகள் சற்று மடிந்திருந்தால் மனம் சுருங்கிவிடும். தன்னுடன் வைத்திருக்கவும் விரும்பமாட்டார். வேறு புத்தகம் கிடைக்காவிட்டால் பெருமூச்சுடன் வைத்துக்கொள்வார். முனைகள் மடிந்த, அல்லது கிழிந்த நூல்களை இலவசமாகப் பெறும் வாய்ப்பு அநேக தடவைகள் எனக்கு வாய்த்திருக்கிறது. லண்டனிலும் ஐரோப்பிய நாடுகளிலும் மற்றும் தமிழகத்திலும் இருந்தும் நண்பர்கள் அவரைத் தேடிவருவதுண்டு. வருபவர் ஆர்வத்தில் அவரது புத்தகங்களை எடுத்து விரித்தால், 'கிணற்றுக்கட்டில் குழந்தையை வளர்த்திய தாயின்' பதட்டத்துடன் பார்த்தபடி இருப்பார். எடுத்தவர் மீண்டும் பக்குவமாக வைத்த பின்னர்தான் இயல்பு நிலைக்கு வருவார். நூலை இரண்டாக மடித்தபடி யாராவது வாசித்தால், கொலையை நேரில் காண்பதுபோல் பதைபதைத்துவிடுவார்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவரும் இலக்கியம், அரசியல், இசை பற்றிய நூல்கள் அனேகமானவை அவரிடம் இருக்கும். பல பிரதிகளும் வைத்திருப்பார். காரணம் கேட்டால் சிரித்துக்கொண்டு 'அதெல்லாம் சொல்ல முடியாது' என்பார். சில நண்பர்களுக்காக வேண்டப்பட்டவை என அறிவேன். ஒருதடவை இலக்கியக் கூட்டத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த புத்தகங்களை வாங்கிக்கொண்டு நின்றார். 'இந்தப் புத்தகங்கள் ஏற்கனவே உங்களிடம் இருக்கின்றன' எனக் கூறினேன். 'இது புதிய புதிப்பு' என்று பதில். இதனுடைய அர்த்தம் எனக்குப் புரிவதேயில்லை. வேறு நாடுகளிலிருந்து சிலர் புத்தகங்கள் தேவை என தொலைபேசியில் தெரிவித்தால் போதும், முதல் வேலையாக அவற்றை பார்சலில் அனுப்பிய பின்னர்தான் இவருக்கு நிம்மதி. அவர்கள் கேட்ட புத்தகங்கள் இவரிடம் இல்லாவிட்டால், அவற்றை வாங்கி உடனே அனுப்பிவிடுவார். நேரில் வந்தும் சிலர் புத்தகங்கள் எடுத்துச் செல்வதுண்டு. இந்தச் சிலரில் நானும் உள்ளடங்குவேன். வாங்கும் புத்தகங்களிற்கு எவரிடமும் பணம் கேட்கமாட்டார். அவர்களாக அதைக் கொடுத்தால் சரி. இல்லாவிட்டால் அவ்வளவுதான். இந்த நிலையை சிலர் பயன்படுத்துவதும் உண்டு. எப்படியோ அவர்கள் வாசிப்பார்கள் அது நல்லதுதானே என்று திருப்திப்படுவார். சில தடவைகள் இவ்வகையாகத் திருப்திப்பட்டிருக்கிறார். தேவை கருதி நீங்கள் கேட்கும் நூல்கள் அவரிடம் நிச்சயமாக இருக்கும். அவை எங்கு இருக்கிறதெனக் கண்டுபிடிப்பதுதான் சாதனை. குவிந்திருக்கும் புத்தக வனத்துள் அவற்றைக் கண்டடைவதுதான் மிகவும் சாதனை. இந்தத் தேடல் முயற்சி கண்ணிவெடிகள் புதைத்த வயலில் நடப்பதற்கு ஒப்பானது. புத்தகத்தை எடுக்கும் முயற்சியில் புத்தகச்சரிவுகள் ஏற்பட நிறைய வாய்ப்புகள் உண்டு. தேடிக் கண்டடைந்துவிட்டால் 'யுரேக்கா யுரேக்கா' எனக் கத்தலாம். புத்தகம் கிடைக்காவிட்டால் உங்கள் கவலையைப் போக்குவதற்காக கர்னாடக இசைத் தட்டுக்களை இயக்கி அது பற்றிய விரிவுரையையும் ஆரம்பித்துவிடுவார். பெரும்பாலும் அது மணக்கால் ரங்கராஜன் கச்சேரியாக இருக்கும். நீங்கள் கேட்கிறீர்களோ இல்லையோ அவர் தொடர்வார். பின்னர் தேடிய அந்த நூலைக் கண்டெடுத்துவிட்டேன் என்ற நற்செய்தியை அறிவிக்கும் போது, உங்கள் தேவை முடிந்திருக்கும்.

சனிக்கிழமைகளின் காலையில் அதிக நேரம் தூங்கி எழுவது எனக்கு விருப்பம். மற்ற நாட்களில் அந்த வாய்ப்பை எனக்குக் கிடைத்த வேலை விழுங்கிவிடும். அந்நாள் அதிகாலையில் நித்திரைச் சுகத்தை கலைத்தபடி தொலைபேசி அலறும். நேரம்கெட்ட நேரத்தில் தொலைபேசி அலறினால் ஊரிலிருந்து யாரோ என நெஞ்சு பதறும். துடித்து எழுந்து ரெலிபோனை எடுத்தால் ஹலோ! என்ன நித்திரையால எழும்பியாச்சா...? மறு முனையில் ஐயர் குரலில் விசமத்தனம் சிரிக்கும். 'ஐயா உங்களுக்கு வேற வேலையே இல்லையா? நித்திரையில கிடக்கிறவனை எழுப்பி என்ன நக்கல்...' என்ற தூக்கக் கலக்கக் குரலை கவனியாமல் அவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பார். நாங்க நல்ல எழுத்தாளர்களை ஊக்குவிக்கவேனும். நாட்டின் இன்றைய சூழ்நிலையில் முக்கியமான எழுத்தாளர்கள் பலர் எழுதமுடியாமல் இருக்கிறார்கள். பொருளாதார நெருக்கடிகள்தான் காரணம். அந்த நெருக்கடிகளில் இருந்து அவர்களை நீக்கி மறுபடியும் எழுதவைக்க வேண்டும் என்பார். இல்லாவிடில், தமிழ்நாட்டில் இருந்து இந்த மாதமும் அடுத்த மாதமும் இரு எழுத்தாளர்கள் வருகிறார்கள். அவர்களை வரவேற்று பல இடங்களுக்கு கூட்டிச் செல்லவேண்டும். ஒரு கூட்டமும் நடத்தவேண்டும். அத்துடன், இங்க தமிழ் குடும்பங்களில் இங்கிலீஸ் லிற்றறேச்சர் படிக்கிற இளம் பிள்ளைகள் இருப்பார்கள். அவர்களைத் தேடிப் பிடிக்கவேண்டும். நவீன தமிழ் இலக்கியங்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டும். இதற்கு எனது பதில் 'ஐயா முதலில் நித்திரை கொள்ளவிடுங்கள் பிறகு ஆறுதலாக யோசிக்கலாம்' என்பதுதான். புத்தக முயற்சியுடன் கலைஞர்கள் பற்றிய இறுவெட்டு தயாரிக்கும் முயற்சியிலும் செயற்பட்டுவருகிறார். சங்கீத வித்துவான் மணக்கால் ரங்கராஜன் பற்றிய இறுவெட்டை அம்சன்குமாரின் உதவியுடன் ஏற்கனவே வெளியிட்டுள்ளார். இதன்பின் தவில் வித்துவான் தெட்சனாமூர்த்திபற்றிய இறுவெட்டையும் அவர் பற்றிய சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

பத்மநாப ஐயர் பல மர்மங்களைத் தன்னுள் கொண்டு வாழ்ந்து வருபவர். இந்த மர்மங்கள் இலக்கிய முயற்சிகள் சார்ந்ததே. நெருங்கிய நண்பர்களால்கூட அவர் என்னென்ன பணியில் ஈடுபட்டுள்ளார் என்பவற்றை அறிந்துவிடமுடியாது. யமுனா ராசேந்திரன் கூறியதுபோல் பல அறைகள் கொண்ட புறாக் கூடுகள்தான் பத்மநாப ஐயரின் இலக்கிய செயற்பாடுகள். வரும் எழுத்தாளர்கள் அறைகளில் என்ன இருக்கிறது என்பதை இலகுவில் அறிந்திட முடியாது. வருபவருக்கு எந்த அறையைத் திறக்கலாம் என்பதைத் தீர்மானிப்பவர் அவர்தான். அதை மட்டும்தான் நீக்கள் பார்க்கலாம். அவ்வளவுதான். இந்தக் கருத்தோடு நான் உடன்படுகிறேன். வேறு ஏதாவது அறியவிரும்பினால் கதிரையில் அமர்ந்திருக்கும் அவர் தன் வலது காலைத் தூக்கி இடதுகால் மீது மடித்து வைத்தபடி உள் பாதத்தை வலது கையால் தட்டியபடி இருப்பார். அவரது மர்மப் புன்னகையை பிறர் அறியாவகையில் அவரது வெண்தாடியும் மீசையும் கூட்டாக இணைந்து மறைத்தபடி இருக்கும். அவரது கலை இலக்கியச் செயற்பாடுகள் அனைத்தையும் அறிந்ததாக எவருமில்லை. அப்படித் தீர்மானிப்பவர் ஏமாந்தவராவார்.



pushparajan.m@thaiveedu.com



## அருந்தொண்டாற்றிய அம்மையார்

# பிபி அம்துல் சலாம்

– கிருங்கை சேதுபதி

இதழியல் வரலாற்றில், நாம் விரும்பும் இதழை, எத்தனை பிரதிகள் வெளியிடுகிறோம் என்பது முக்கியமல்ல. அதில் வெளியிடப்படுகிற செய்தி என்ன என்பதுதான் முக்கியம். அது நிகழ்காலத்தின் செய்திகளைத் தாங்கி வந்தாலும், எதிர் காலத்திற்கான உயிர்ப்பாற்றலை உள்ளடக்கி நிற்கும் முதிர்ந்த தானியங்களின் களஞ்சியமாக இருக்கும் என்பது கண்கூடு.

அப்படியானதோர் உண்மையை, அண்மையில் மேற்கொண்ட தொகுப்புப் பணியில் அறிய நேர்ந்தது. அது மகாத்மா காந் தியடிகள் நடத்திய 'ஹரிஜன்' இதழின் தமிழ்த்தொகுப்பு. ஓர் இதழ் எந்த மொழியில் வெளிவந்தாலும், அது தன் மூலமொ ழியின் பெயரைத் தாங்கி அமைவதே இயல்பு. ஆனால், ஆங்கிலத்தில் வெளிவந்த 'ஹரிஜன்' இதழைத் தமிழில் வெளிக்கொணர விரும்பிய சின்ன அண்ணாமலை என்பவரின் வேண்டுகோளுக்கு இசைந்த காந்தியடிகள் அதற்கான வெளியீட்டுவிழாவினையும், அடுத்த சில நொடிகளிலேயே நடத்தியும் இருக்கிறார். தமிழில் வெளிவரப்போகும், அவ்வித ழின் பெயரைத் தமிழிலேயே, 'தமிழ் ஹரிஜன்' என்று தம் கைப்பட எழுதி வெளியிட்டுப் புகைப்படம் எடுத்துக் கொள் ளவும் செய்திருக்கிறார். அந்தப் புகைப்படம் என்னாயிற்று என்று தெரியவில்லை. அதுபோல், சின்ன அண்ணாமலை நடத்திய இந்த இதழும் முழுமையாகத் தொடர்ந்து காணக் கிடைக்கவில்லை.

14.4.1946 தொடங்கி, காந்தியடிகள் மறைவு வரை, வார இத ழாக வெளிவந்த இவ்விதழை, மிகுந்த பொறுமையுடன் தேடிச் சேகரித்து, முதலாண்டு (52) இதழ்களைத் தொகுத்து அண்மையில் சென்னை, முல்லைப் பதிப்பகம் வாயிலாகக் கொணர முடிந்தது அக்காலத்துக் காகித நெருக்கடி காரண மாக, குறைந்த அளவிலான பிரதிகள் அச்சிடுதற்கு மட்டுமே ஆங்கில அரசு அனுமதித்திருந்தது ஒரு காரணம். வந்த இதழ்கள் பலராலும் வாசிப்புக்கு உள்ளாக்கப்பட்ட நிலை யில், சிதைவுற்றிருக்கவும் கூடும்.

இறுதி இரண்டு இதழ்கள் தவிர, ஏனைய இதழ்களில் யாதொரு படமும் இல்லாமல், எட்டுப் பக்க அளவில் வெளி வந்த இவ்விதழ்களில் செய்திகளுக்கு மட்டுமே இடம். அலங் கார, ஆடம்பர அச்சாக்க முறைகள் இன்றி, எளிய முறை யில் இரண்டணாவுக்குக் கிடைக்கும்படியாக விநியோகிக்கப் பட்டிருக்கிறது. சின்ன அண்ணாமலையின் தமிழ்ப்பண்ணை வெளியீடாக வந்த இவ்விதழுக்குத் தொடக்கத்தில், நாமக்கல் கவிஞர் ஆசிரியராக இருந்திருக்கிறார் பின்னர் திருகூட சுந்த ரம்பிள்ளை இணைந்திருக்கிறார். இவர்களின் உழைப்பில் மொழிபெயர்ப்புச் சாயல் பெரிதும் தோன்றாத வண்ணம் தமிழ் இதழைப் படிக்கிற உணர்வைத் தருகிறது இவ்விதழ்.

காந்தியடிகளின் பங்களிப்பு இன்றியமையாததாக இருந்தா லும், அவர் குறித்த செய்திகளும், அவர் ஆற்றிய உபந்நி யாசங்களும், அவரது நெறியின்கீழ் இயங்கிய தொண்டர்க ளின் பங்களிப்புகளும் சிறப்பாகவே பதிவாகியிருக்கின்றன. அக்காலத்திய எத்தனையோ நிகழ்வுகள் செய்திகள் இடம்பெ றும் இவ்விதழில் மகாத்மாவின் வழிநின்ற மகோன்னதமான மனிதர்களின் வரலாறுகளும் பதிவாகியிருக்கின்றன. அவற் றுள் ஒன்று பிபி அம்துல் சலாம் அம்மையார் குறித்த சிறு பதிவு.

இப்பெயரைக் கண்ணுற்றதுமே, அவர் இசுலாமியர் என்று கணித்த தங்களின் கருத்து மெய்தான். ஆனால், அவர் காந் திய நெறி வளர்ந்த மகத்தான இசுலாமியர். இன்னும் சொல் லப்போனால், காந்தியடிகளால் வியப்புக்குரிய நிலையில் கவனிக்கப்பட்ட பெண்மணி. ஆயுதத்தால் சாதிக்க முடியாத அற்புதத்தை அஹிம்சையால் சாதித்த வரலாறு அண்ணல் காந்தியடிகளின் வரலாறு மட்டுமல்ல, பிபி அம்தும் சலாம் அம்மையாரின் வரலாறும்தான் என்பதைப் புனைவேதுமின்றி விளக்குகிறது இக்கட்டுரை.

### பட்டினிப் போர் நடத்திய பாவை:

'உண்ணாவிரதம்', - 'பட்டினி நோன்பு' என்று இதனைப் பச் சைத் தமிழில் கூறலாம். இது, உண்ணும் வாய்ப்பிருந்தும் உயர்ந்த குறிக்கோளுடன் தத்தம் சமயம் சார்ந்த கடவுளின் திருவருளைப் பெறும் பொருட்டு, உண்ணாமல் இருக்கிற ஒழுகலாறு. உள்ள வலிமையால் உடலை வலிமையுடைய தாக்கி, ஆன்மாவுக்கு வலுச்சேர்ப்பதாக இந்நோன்பு விளங்கு கிறது. ஆன்மிகம் சார்ந்த அரசியலை முன்னெடுத்த காந்திய டிகள் அனைத்துச் சமயத்தாருக்கும் உரிய பட்டினி நோன்பை, நாட்டுவிடுதலைப் போருக்குரிய நல்லாயுதமாக மேற்கொள்ளத் தொடங்கினார். அதாவது, வீட்டுக்கான (வீடு பேற்றுக்கான) பட்டினி நோன்பை, நாட்டுக்கான பட்டினிப் போராக மாற்றிய அவர் அதனைத் தானே முன்னின்று நடத்



தியும் காட்டினார்.

அதனைப் பின்பற்றி அவர் காலத்திலேயே பலரும் கருதியது கைகூடக் கண்டிருக்கின்றனர். அதுபற்றிக் கூட ஒரு நிருபர், ‘உண்ணாவிரதம் ஒரு தொத்து நோயாக ஆகி வருகிறது. அந்தக் குற்றத்திற்குத் தாங்களே பொறுப்பாளி’ என்று காந்தியடிகளைக் குற்றம் சாற்றி, அதற்கான காரணங்களையும் எடுத்துரைத்திருக்கிறார்.

மிகுந்த பொறுமையுடன் அதற்கான பதிலை விரிவாகத் தந்த காந்தியடிகள், அது குறித்து விரிவான ஆய்வுரையே நிகழ்த்தியிருக்கிறார். அதன் முடிவில், பரிகாசம் செய்யக்கூடியதான உண்ணாவிரதங்களே பிளேக் நோய் போலப் பரவி தீமை செய்யும், ஆனால் உண்ணாவிரதமிருக்க வேண்டிய கடமை ஏற்படும்போது, இருந்துதான் ஆக வேண்டும். ஆதலால்தான் நான் அவசியம் என்று தோன்றும்பொழுதெல்லாம் உண்ணாவிரதத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் நிறுத்தி வைக்காமல் மேற்கொண்டு வருகின்றேன். அப்படியிருக்க அதே போன்ற சந்தர்ப்பங்களில் பிறர் மேற்கொள்ளும் உண்ணாவிரதங்களை நான் தடுப்பது எப்படி? மிகச் சிறந்த காரியங்களையும் தவறாக உபயோகித்து விடலாம் என்பது யாவரும் அறிந்ததே. இது தினந்தோறும் நிகழ்கின்ற விஷயமாகவே இருக்கிறது’ என்று கூறி முடிக்கிறார். இது உண்ணாவிரதத்திற்கு மட்டுமல்ல, பல்வேறுபட்ட போராட்ட நெறிமுறைகளுக்கும் பொருந்தும்.’

இந்தச் செய்தி, தமிழ் ஹரிஜன் இதழில் வெளிவந்த நாள் 13.4.1946. இதற்குப் பின்னர், 30.3.1947-ல் நடந்த ஒரு நிகழ்வு வரலாறாக உருப்பெற்றிருக்கிறது. அதன் நாயகியாகத் திகழ்பவர், பிபி அம்துல் சலாம் அம்மையார்.

## அருந்தொண்டாற்றிய அம்மையார்:

பிபி அம்துல் சலாம் அம்மையார். பஞ்சாபில் பாடியாலா சமஸ்தானத்தில் பிரபலமானதொரு முஸ்லீம் குடும்பத்தில் பிறந்தவர். தனக்குரிய வசதி வாய்ப்புகளையெல்லாம் துறந்துவிட்டு, 1930-ம் ஆண்டில் காந்தியடிகளின் ஆசிரமத்தில் சேந்தவர். அதுமுதல் காந்தியவாதியாகவே வாழ்ந்தவர். இளம் பருவத்தில் இவருக்கு பிரமஞான சங்கத்தின் தாக்கம் இருந்தது. அதனால், இசுலாமிய நெறி தவறாது வாழ்ந்த இவர், எல்லாச் சமயங்களையும் இணையாக மதித்துப் போற்றினார். அதன்காரணமாக, 1942-ல் ‘இட்டேஹாத்’ என்னும் உருது மொழி வார இதழுக்கு ஆசிரியராகவும் இருந்து பணியாற்றினார். சில காரணங்களால், அதனை அவரால் நடத்த முடியாது போயிற்று.

வங்காளத்தில் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில், அவர் கிழக்கு வங்காளத்தில் திப்பரா மாவட்டத்தில் துயருற்ற மக்களுக்கு அரும்பணிகள் பல ஆற்றினார். ஆனால், அவர்தம் உள்ள வலிமைக்குத் தகுந்த உடல்வலிமை வாய்க்கவில்லை. நலி

வுற்ற நிலையில், அவர் ஓய்வுக்காக, சேவாக் கிராமத்திற்குச் செல்ல நேர்ந்தது. வங்காளத்தில் கலகங்கள் ஏற்பட்ட நேரத்




தில், நவகாளிப்பகுதிக்குச் செல்லவேண்டுமென்று துடித்தார். அப்படியே அங்குச் சென்று பணியாற்றவும் தொடங்கினார்.

## அங்கு என்ன நடந்தது?

'அவருக்கு அக்கிரமங்கள் நடந்திருப்பதைக் காண மிகுந்த வேதனை உண்டாயிற்று. முதலில் தஸ்காரியா என்னும் கிராமத்திலும் பிறகு ஸிராந்தி என்னும் கிராமத்திலும் சேவை செய்தார். அவருக்கு ஜுரம் வந்தது. 104 டிகிரியாக இருந்தது. அப்பொழுது ஹிந்துக்கள் வீடுகளிலிருந்து எடுத்துக் கொண்ட பூஜைக்குரிய வாள்களை முஸ்லீம்கள் ஹிந்துக்களிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பதற்காக உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தார். அவருடைய உண்ணாவிரதத்தின் உண்மையான நோக்கம் முஸ்லிம்களிடையே உண்மையான பச்சாதாப உணர்ச்சியை எழுப்புவதேயாகும். உண்ணாவிரதம் நீடித்தது. எனக்குக் கவலை அதிகமாயிற்று.'

இவ்வாறு எழுதியவர் அவருடன் களப்பணியாற்றிய மருத்துவச் சகோதரி சுசீலா நைய்யார். இவர், காந்தியடிகளின் 'ஹரிஜன்' இதழைப் பொறுப்பேற்று நடத்திய பியாரேலால் என்பவரின் உடன் பிறப்பு.

மேலும் நடந்ததை எளிய நடையில் அவர் பின்வருமாறு விவரிக்கிறார்.

## உயிரினும் மேலானது உயரிய குறிக்கோள்:

'நாங்கள் எல்லாம் என்ன செய்வதென்று திகைத்துக் கொண்டிருந்தோம். ஆனால், அம்மையாரோ நிம்மதியாக இருந்தார். தம்மைக் கடவுளிடம் ஒப்புவித்துவிட்டு சாவதற்குத் தயாராக இருந்தார். தர்மம் வெல்லும் என்னும் உண்மையின் சோதனையாகவே இருந்தது. இறுதியில் அவர் டிகிரி பார்க்கச் சம்மதிக்கவில்லை. 'எதற்காகப் பார்க்க வேண்டும். கவலை தானே அதிகப்படும்' என்று கூறினார். நண்பர்கள் பல இடங்களிலிருந்தும் வந்து அவர் பொறுமையாகக் கஷ்டத்தைச் சகித்துக் கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். தினந்தோறும் குர்ஆனும், கீதையும் பாராயணம் செய்ய வேண்டுமென்று விரும்பினார். அது அவருக்கு ஆறுதலளித்தது. 'சகோதரியாரே, உம்முடைய உயிர் உமக்குச் சொந்தமன்று. அதனால் குளுகோஸ் இஞ்சக்ஷன் செய்ய, தாங்கள் தயவு செய்து அனுமதி அளிக்க வேண்டும்' என்று வைத்திய நண்பர் ஒருவர் அவரிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டார். அப்பொழுது அம்மையார் கண்களைத் திறந்து மிகவும் கஷ்டத்துடன் மெதுவாய்ச் சொன்னார்.

'நான் என்னுடைய உயிரைக் கடவுளிடம் ஒப்புவித்துவிட்டேன். அவருடைய சித்தப்படி நடக்கத் தயாராய் இருக்கிறேன். நான் உயிரோடு இருக்க வேண்டுமென்பது அவருடைய திருவுள்ளமானால், நான் சாகமாட்டேன். எனக்கு இஞ்சக்ஷன் செய்ய வேண்டாம். என்னுடைய நோக்கம் நிறைவேறும்வரை இந்த உண்ணாவிரதம் நடைபெற வேண்டும்.' இத்தகு உறுதிப்பாடு இயல்பாகவே இவரிடம் இருப்பதைத் தொடக்கத்திலேயே காந்தியடிகள் அறிந்து வைத்திருந்ததோடு, அது குறித்துத் தன் கடிதங்கள் சிலவற்றில் பதிவிட்டும் இருக்கிறார்.

## கடிதங்களில் பதிவாகிய காந்தியடிகளின் கணிப்பு:

'அம்துல் சலாம், தனக்குரிய வழியிலேயே வளர்ச்சி அடைய நாம் விடவேண்டும். அவள் அதிசயப் பெண். இயற்கையின் அபூர்வ வெளிப்பாடு. அவள் நீண்ட காலம் வாழ்ந்தால், மனித சமுதாயத்தின் தலைசிறந்த ஊழியராக விளங்கக்கூடும்' என்று 29.05.1935 அன்று சி. மீரா என்பவருக்கு எழுதிய கடிதத்தில் பாபு என்ற கையெழுத்திட்டு காந்தியடிகள் எழுதியிருக்கிறார். அதேசமயம், அம்துல் சலாம் அம்மையாரின் நோயுற்ற நிலையினையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை. 'அம்துல் சலாமுக்கு... ஓடியாடி வேலை செய்கிறாள். நேற்றுத்தான் நோய்வாய்ப்பட்டிருப்பதை அவள் மறந்துவிட்டாள்.' என்று மற்றொரு கடிதத்திலும் (10.9.35) அவர் குறிப்பிடுகிறார்.

மேலும், 23.6.1939 திகதியிட்ட கடிதத்தில், 'எப்பொழுதும் போலவே பயனற்ற வேலையில் முனைந்து ஈடுபட்டிருக்கிறாள், அம்துல் சலாம். என் காலை உணவைத் தயார் செய்வதில் அவள் தன் நேரத்தை வீணாக்குகிறாள். மணிக்கணக்காக நேரத்தை அவளுக்கு என்னால் ஒதுக்க முடியாதது குறித்து அவள் தாங்க முடியாத வேதனை அனுபவிக்கின்றாள். அவளை என்னால் அறிந்துகொள்ளவே முடியவில்லை. ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவள் அவள். நான் அவளை நடத்தும் முறையில் ஏதோ தவறு இருக்க வேண்டும்' என்று குறிப்பிடுகிறார்.

தலைமைக்குரிய நிலையில் இருந்தாலும் தன் வழிப்பட்ட தொண்டரின் தன்னுரிமையில் தலையிட விரும்பாத அண்ணல், அதேபோல், அவரது உடல் நலத்திலும் உளநலத்திலும் காட்டியிருக்கிற ஈடுபாடு வியக்கவைக்கிறது. தொண்டரைக் குறை கூறாது தன்னுடைய நிலைப்பாட்டில் உள்ள தவறு இன்னதெனக் காண விழைகிற பண்புடையவர் அவர் என்பதை அவர்தம் கடிதக்குறிப்புகள் எடுத்துக் காட்டுகின்றன.

5.7.1941 நாளிட்ட மடல் ஒன்றில், 'அம்துல் சலாம் இன்னும் சிக்கலான புதிராகவே இருக்கின்றாள். அவளிடம் அலாதித் தன்மை ஒன்று இருக்கின்றது. அவள் ஆஸ்துமா இன்னம் அடியோடு நீங்கவில்லை. அவள் மிகவும் பலவீனமாக இருக் கின்றாள். அவள் முன் கோபம் முன்போலவேதான் இருக்கின் றது' என்று கணித்துக் குறிப்பிடுகிற காந்தியடிகள் அம்துல்-சலாம் அம்மையாரை அவர் போக்கிலேயே போகவைத்தா லும் பொறுப்புமிகுந்த தந்தையாகவும் தலைவராகவும் கவ னித்துப் பரிவு காட்டியிருக்கிறார் என்பதை இக்கடிதக் குறிப் புகள் காட்டுகின்றன.

காந்தியடிகள் கணித்ததுபோல், 'அலாதித் தன்மை கொண்ட அம்துல் சலாம், அதிசயப் பெண்ணாக. இயற்கையின் அபூர்வ வெளிப்பாடாக வாழ்ந்து மனித சமுதாயத்தின் தலை சிறந்த ஊழியராக விளங்கியதை வரலாறு உறுதிப்படுத்தியி ருக்கிறது.

## நினைத்ததும் நிகழ்ந்ததும்:

உண்ணாநோன்பு காரணமாய், உயிர் துறக்கும் தறுவாயில் இருந்த அம்துல் சலாம் அம்மையாரின் உச்சக்கட்ட நிலை என்ன ஆனது என்பதை, உடனிருந்து தொண்டாற்றிய சுசீலா நைய்யார் தொடர்ந்து எழுதுகிறார்.

'போலீஸாரும் உள்ளூர்த் தலைவர்களும் கூடக் கலக்கமுற் றார்கள். தங்களால் இயன்றதையெல்லாம் செய்ய முயன்றார் கள். அவர்கள் எல்லோரும் காந்தியடிகளிடம் சென்று எப்படி யாவது உண்ணாவிரதத்தை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அது அவரால் செய்யக்கூடிய காரியமாக இருக்கவில்லை. 'அம்மையார் தாமாக மேற்கொண்ட உண் ணாவிரதம் அது. அத்துடன் இடையில் நிறுத்தும்படியாக நிர்ப்பந்தம் செய்யக்கூடாதென்று அவரிடம் வாக்குறுதியும் வாங்கி இருந்தார். காந்தியடிகள் கால் நடை யாத்திரையின் 25-வது நாள் அதாவது ஜனவரி மாதம் 1-ந்திகதி அன்று ஸிராந்தி கிராமத்திற்கு வந்து சேருவதற்கு ஏற்பாடாய் இருந் தது. அவர் வந்துசேரும்வரை அம்மையார் உயிரோடு இருப் பாரோ என்பது எங்களுக்கு சந்தேகமாய் இருந்தது. அத னால் அவரை அந்தத் திகதிக்கு முன்னதாகவே வரும்படி கேட்டுக்கொண்டோம்.

ஸிராந்திக்கு அவர் வந்தால் எதனாலும் பெறமுடியாத வெற் றியை பெற்றுவிடலாமென்றும் உண்ணாவிரதத்தை வெற்றிகர மாக முடித்துவிடலாமென்றும் நாங்கள் எண்ணினோம். காந் தியடிகள் தம்முடைய யாத்திரைத் திட்டத்தை மாற்ற விரும்ப வில்லை. அம்மையாரும் அப்படிச்செய்ய வேண்டுமென்ற ஆர்வமுடையவராக இருக்கவில்லை. 'என் உயிர் போகுந்தறு வாயில் வந்தால் போதும். அப்பொழுதுதான் நான் அவரு டைய மடியில் தலையை வைத்து ஆண்டவன் பாதத்தைச் சேரமுடியும்' என்று அவர் கூறினார். அப்படியே காந்தியடி கள் ஜனவரி மாதம் 20-ம் திகதிதான் ஸிராந்திக் கிராமத் திற்கு வந்து சேர்ந்தார்.

அப்பொழுது அம்மையார் அபாயகரமான நிலைமையில் இருந்தார். அப்படி இருந்தும் அவரே காந்தி அடிகள் தங்கு வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் மேற்பார்வையிட்டு வந்தார். காந்தியடிகளிடம் அவருக்கு உள்ள பக்தி அவ்வ ளவு அபாரமானது. காந்தியடிகள் ஸிராந்தி கிராமத்திற்கு வரும்பொழுது அவரை எதிர்கொண்டு வரவேற்கத் தாம் நடந்து போக சக்தி இல்லாதவராக இருந்தபடியால் அந்தப் பணியைச் செய்ய என்னையும் திருமதி ஆபா காந்தியையும் அனுப்பி வைத்தார்.

முஸ்லிம் தூதுக் கோஷ்டியார் பிற்பகல் மூன்று மணிக்கு காந்தி அடிகளை பேட்டி கண்டு அக்கிரமங்கள் நடந்ததற்கு அதிகமாக வருத்தப்படுவதாகக் கூறி உண்ணாவிரதத்தை நிறுத்தும்படி செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டார் கள்.'

அதற்குக் காந்தியடிகள் கூறிய பதில் மகோன்னதமானது. தன் நிலைப்பாட்டையும் தன்னிலும் அகிம்சை நெறியில் அதிக உறுதிப்பாடுடைய பிபி அம்துல் சலாம் அம்மையா ரின் அகத் தூய்மையையும் புலப்படுத்துவதாக அமைகிறது மட்டுமல்லாமல், அண்ணலாரை, அடுத்தக் கட்டத்திற்குக் கொண்டுசெல்லக் காரணமாகவும் அமைந்துள்ளதை உணர்த் துகின்றது. காந்தியடிகள் கூறுகிறார்.

'நான் ஹிந்துக்கள் முஸ்லிம்கள் இருவருக்கும் நண்பனாகவே வந்திருக்கிறேன். நீங்கள் என்னுடைய இருதயத்தைப் பிளந்து பார்த்தால் அன்பைத் தவிர வேறு எதையும் காண மாட்டீர்கள். பிபி அம்துல் ஸலாமிடம் மகளிடம் வைக்கும் அன்பைவிட அதிகமான அன்பை வைத்திருக்கிறேன். நான் அவளை இழக்க விரும்பவில்லை. என்னுடைய ஆஸிரமத் தில் வளரும் முஸ்லிம் சிறுவர்கள் தங்கள் மதத்தில் உறுதி யாய் இருக்க வேண்டுமென்றும், ஒழுங்காக நமாஸ் ஓதவேண் டுமென்றும் ரம்ஸான் விரதம் அனுஷ்டிக்க வேண்டுமென்றும் கற்பித்து வந்திருக்கிறேன். முஸ்லிம் சகோதரர்கள் மதத்துவே ஷம் உடையவர்களாக இருப்பதைக் காணச் சகியாத கார ணத்தினாலேயே இவர் உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்திருக் கிறார். இவர் இஸ்லாம் மதத்தில் மிகுந்த பற்றுடையவர். ஆயினும் அவருக்கு ஹிந்துக்களிடத்தில் அணுவளவும் துவேஷங்கிடையாது. அவர் உண்ணாவிரதம் இருக்க ஆரம் பிக்குமுன் என்னிடம் அனுமதி கேட்கவில்லை. அவர் ஆண்ட வனை நம்பி மேற்கொண்ட உண்ணாவிரதத்தை நான் இடை யில் முறிக்கும்படி சொல்லத் துணிய மாட்டேன். தாங்கள் செய்த பிழையை உணர்ந்து பச்சாத்தாபப்படும்படி முஸ்லிம் களுடைய இதயத்தை இளக்குவதற்காகவே அவர் இந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார். ஆதலால் முஸ் லீம்கள் அந்தரங்க சுத்தியாக பச்சாத்தாபம் உள்ளவர்களாகி இனிமேல் இத்தகைய காரியங்கள் நடைபெறாவென்று உறு திமொழி கூறினால்தான் உண்ணாவிரதத்தை நிறுத்தும்படி. தான் அவரிடம் வேண்டிக் கொள்ள முடியும். எந்தப் பெயர் சொல்லி அழைத்தாலும் கடவுள் ஒருவரேதான்.'

பாகிஸ்தானை பலாத்காரத்தால் ஸ்தாபிக்க முடியாதென்று காயிதே ஆஜம் ஜின்னா சொல்லி இருக்கிறார் என்ற செய் தியை இன்று பத்திரிகையில் படித்தேன். பாகிஸ்தானில் சிறு பான்மையோருக்கு பரிபூரண சுதந்திரமும் பாதுகாவலும் உண்டு என்றும் அவர் சொல்லி இருக்கிறார், நான் அரசியல் நோக்கத்தோடு கிழக்கு வங்காளத்திற்கு வரவில்லை. நான் பரோபகார நோக்கத்துடன் தான் வந்திருக்கிறேன். ஹிந்துக் கள் கிழக்கு வங்காளத்தை விட்டுப் போய் விடவேண்டு மென்று நீங்கள் விரும்பினால் அதைத் தெளிவாகச் சொல்லி விடவேண்டும். அந்த விருப்பமில்லையானால் செய்த அக்கிர மங்களுக்கு பரிகாரம் செய்வதோடு இனிமேல் நடைபெறா

தென்று உறுதி கூறவும் வேண்டும். அப்பொழுதுதான் உண்ணாவிரதத்தை நிறுத்துமாறு நான் பிபி அம்துல் ஸலாமைக் கேட்டுக் கொள்ள முடியும்.

ஒன்று கூறி ஒன்று செய்தால், கொடுத்த வாக்கை மீறுவதானால் அம்துல் ஸலாம் மேற்கொண்டது போலவே நானும் உண்ணாவிரதத்தை மேற்கொள்ள வேண்டி இருக்கும். ஜில்லா முழுவதற்கும் உங்களைப் பொறுப்பாக்க முடியாது. ஆனால் நீங்கள் இந்தப் பகுதியில் அமைதி நிலவும்படி செய்வதற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் நீங்கள் நவகாளி ஜில்லாவுக்கு மட்டுமின்றி கிழக்கு வங்காளம் முழுவதிலும் அமைதி உண்டாக்குவதற்கு வேண்டிய. அஸ்திவாரத்தை அமைத்தவர்கள் ஆவீர்கள்.'

இறுதியில் என்ன ஆயிற்று? சுசீலா நைய்யார் எழுதுகிறார்.

'முஸ்லிம் தலைவர்கள் தங்களுக்குள் கலந்து பேசி நடந்த அக்கிரமங்களுக்கு வருத்தம் தெரிவிப்பதாகவும் இனிமேல் ஸிராந்திக் கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள நான்கு கிராமங்களிலும் ஹிந்துக்களுடைய மத சுதந்தரத்தைப் பாதுகாக்க உத்தரவாதமளிப்பதாகவும் காந்தி அடிகளிடம் கூறினார்கள். இந்த உறுதிமொழியில் ஐந்து கிராமங்களின் பிரதிநிதிகளாக வந்திருந்த முஸ்லிம் தலைவர்கள் கையெழுத்துச் செய்தார்கள். இது நடக்கும்பொழுது இரவு 9-மணிக்கு மேலாகி விட்டது. அதன்பின் முஸ்லிம் சகோதரர்கள் குர்-ஆன் ஓதினார்கள். அது முடிந்ததும் காந்தி அடிகள் ஒரு கோப்பையில் ஆரஞ்சு ரஸத்தை ஊற்றி பிபி அம்துல் சலாம் அம்மையாருக்குக் கொடுத்தார்.' ஆக, அறத்திற்கும் மறத்திற்கும் அன்பே துணை என்பதை நிலைநிறுத்திக் காட்ட காந்தியடிகளின் கருணை வழியே சரியானது என்



காந்தி அடிகள் ஒரு கோப்பையில் ஆரஞ்சு ரஸத்தை ஊற்றி பிபி அம்துல் சலாம் அம்மையாருக்குக் கொடுத்தார். (20.1.1947)

பதை நினைத்தவாறே நிகழ்த்திக் காட்ட வைத்திருக்கிறது, காலம். இது நிகழ்ந்தது இறந்த காலம். படமாக நிலைத்த இவ்வரலாற்றைப் பாடமாகக் கொள்ள வேண்டியது வருங்காலம். நிகழ்காலத்தில் படிக்கிறபோது மீளவும் நிகழ்வது போன்றதோர் அனுபவத்தைத் தருகிறது இல்லையா, இதுவே எழுத்தின் உன்னதம். இதழியலின் அற்புதம்.

## நிறைவாக...

அம்துல் சலாம் அம்மையாரின் பிறந்த திகதியோ, மறைந்த திகதியோ, இச்செய்திக் கட்டுரையில் இல்லை. ஆனால், அவர்தம் நிறைந்த திருத்தொண்டு, புனைவேதுமின்றி, அழகாகப் பதிவாகியிருக்கிறது. கூடவே, காந்தியடிகளின் உள்ளக்கிடக்கையும் பதிவாகியிருக்கிறது. அவர் எழுதிய கடிதங்களில் அம்மையார் குறித்துச் சொல்லப்பட்ட கருதுகோள்கள், அப்படியே வரலாறான அற்புதத்தை இச்செய்திக் கட்டுரை நிறுவிக் காட்டியிருக்கிறது. மென்மைக்குரியது பெண்மை என்கிற நிலை தாண்டி, வலிமைக்குரிய பேராற்றல், குறிப்பாக, அகிம்சைப் போராற்றல் அவர்களுக்குள் பெருகிறது என்பதை அம்மையாரின் தொண்டு மெய்ப்பித்திருக்கிறது. அத்திசை நோக்கிக் காந்தியடிகளையும் செலுத்தியிருக்கிறது என்பது மட்டுமல்ல, உக்கிரம் கொண்டு, அக்கிரமங்கள் நிகழ்த்தப்பட்ட நிலப்பரப்பில் அமைதியையும் நிலைநிறுத்தியிருக்கிறது என்பதுதான் சிறப்புக்குரிய செய்தி.

உடல் வலிமையினும் உள்ள வலிமை உயர்ந்தது அதுவே ஆன்ம வலிமைக்கு அடித்தளமாவது. வீட்டளவில் இருக்கும் பிடிவாத குணத்தை நாட்டளவிற்கு உயர்த்தி, அதனை வைராக்கியமாக மாற்றுவதே வளர்ச்சி என்பதைத் தன் வாழ்வியல் மூலம் வகுத்துக் காட்டிய அம்துல் சலாம் அம்மையார், பெண்ணாய்ப் பிறந்த மகாத்மா என்பது மெய்.

எங்கெல்லாம் மதத்தின் பெயரால், பகைமையுணர்ச்சி மேலோங்கி, அக்கிரமங்கள் நிகழ்கிறதோ, அங்கெல்லாம் வாழ்கிற மக்களின் மனங்களில், அம்துல் சலாம் அம்மையாரின் உறுதிப்பாடு நிலை பெறவேண்டும். பிரிவினைவாதமும் பழிவாங்கும் மனோபாவமும் மாறி, அமைதியும் சமாதானமும் ஓங்க வேண்டும். போரும் பூசலும் இல்லாத புண்ணிய பூமியாக இது திகழ வேண்டும் என்ற உணர்வை, இந்தச் சிறு கட்டுரை ஏற்படுத்தி நிறைகிறது.

இதுபோல் எளிய மனிதர்களின் உருக்கம் மிகுந்த தியாக வரலாறுகள் இத்தொகுப்பெங்கும் நிறைந்திருப்பதை, நூலாக்கத்தின்போது உணர முடிந்தது. அக்காலத்தில் அச்சான பிரதிகள் எத்தனையோ? ஆனால், எமக்குக் கிட்டிய ஒற்றைப் பிரதியின் நகல், சென்ற நூற்றாண்டின் சீரிய பதிவுகளைத் தாங்கி, இந்தத் தொகுப்பு உருவாகக் களம் அமைத்திருக்கிறது. எஞ்சிய இதழ்களைத் தேடித் தொகுத்து இரண்டாம் பாகத்தைத் தருகிற பணிக்கு, தக்கோர் உதவினால் நல்லது.

75 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த மண்ணில் நிகழ்ந்த உண்மைத் தரவுகளைப் புனைவேதுமின்றி உள்ளடக்கியிருக்கிற இத்தொகுப்பின்வழி பெறப்படும் உணர்வு, இன்னும் எதன் பொருட்டும் இம்மண்ணில் யாரும் உயிர் இழக்கக்கூடாது என்பதுதான்.

**உசாத்துணை:**


- தமிழ் ஹரிஜன், (மகாத்மா காந்தியடிகள் நடத்திய வார இதழ்களின் தொகுப்பு) தொகுப்பும் பதிப்பும்- கிருங்கை சேதுபதி, அருணன் கபிலன், முல்லை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு- 2022.
- மகாத்மா காந்தி நூல்கள்- 9, 14, 16, 17 தொகுதிகள், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2006.



sethupathi@thaiveedu.com




# படித்தோம் சொல்கின்றோம்

## நீறுபூத்திருக்கும் நீண்டகாலப் பிரச்சினையை நினைவூட்டும் சின்னான்

- லெ. முருகபூபதி -

இலங்கையின் வடபுலத்தில் சப்த தீவுகளில் ஒன்றான நெடுந் தீவிலிருந்து, அருட் திரு. தனிநாயகம் அடிகளார் முதல் பல ஆளுமைகள் அறியப்பட்டுள்ளனர். அவர்களில் கலை, இலக்கியவாதிகளும் ஊடகவியலாளர்களும் தன்னார்வத் தொண்டர்களும் அடக்கம்.

ஆயினும், நெடுந்தீவின் நிலக்காட்சியுடன் எத்தனை படைப்பி லக்கியங்கள் வெளிவந்துள்ளன? எனக்கேட்டால், செங்கை




ஆழியானின் வாடைக்காற்று என்ற பிரபல்யமான நாவலைத் தான் குறிப்பிடுவார்கள்.

இந்நாவலை அவர் எழுதியமைக்கு, சிறிதுகாலம் அவர் அங்கே காரியாதிகாரியாக (D. R. O - District Revenue Officer) பணியாற்றியதும் முக்கிய காரணம். செங்கை ஆழி யான், பின்னர் செட்டிக்குளத்திலும் அதே பணியை தொடர்ந் ததன் பின்னணியில் காட்டாறு என்ற நாவலையும் எழுதினார்.

முன்னைய வாடைக்காற்று திரைப்படமாகவும் வெளியானது. எனினும் அதன் பெரும்பாலான காட்சிகள், மன்னார் பேசா லையில்தான் படமாக்கப்பட்டன. அவரின் கதைக்கு நெடுந்தீவில் கிளம்பிய எதிர்ப்பே, அங்கு படமாக்க முடியாமைக் குக் காரணம் என்பது வேறு கதை.

நெடுந்தீவின் நிலக்காட்சியுடன், நான்கு தசாப்த காலத்திற்கு முன்பிருந்த சமூகக் கட்டமைப்புக் குறித்துப் பேசுகிறது, அவுஸ்திரேலியா மெல்பனில் வதியும் படைப்பிலக்கியவாதி யான ஆவூரான் சந்திரனின் 'சின்னான்' என்ற குறுநாவல்.

ஏற்கனவே ஆத்மாவைத் தொலைத்தவர்கள் என்ற கதைத் தொகுதியை வரவாக்கியிருக்கும் ஆவூரானின் இரண்டாவது நூலாக இந்தக் குறுநாவல் வெளிவந்துள்ளது.

யாழ். அல்வாயிலிருந்து வெளியாகும் ஜீவநதி இதழின் பதிப் பகத்தினால், இந்த ஆண்டு தொடக்கத்தில் ஆவூரானின் இக்குறுநாவல் வெளியிடப்பட்டுள்ளது.

கல்வியியலாளர் மாவிலிமைந்தன் சி. சண்முகராசா இன்நூலுக்கு முன்னுரை வழங்கியிருக்கிறார். எழுத்தாளர் கே.எஸ். சுதாகர் அணிந்துரை தந்திருக்கிறார்.

இவர்கள் இருவருமே கனடா, அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இவர்களின் கருத்துக்களுடன், அவுஸ் திரேலியாவில் கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஆவூரானின் இக்குறுநாவல் வெளிவந்துள்ளது.

நீண்ட நெடுங்காலமாக ஆவூரானின் மனதில் கனன்றுகொண் டிருந்த நெருப்பின் வெளிப்பாடாகவும் இந்த படைப்பிலக்கிய முயற்சியை அவதானிக்க முடிகிறது.

வடபுலத்தின் அடிநிலை மக்களின் பிரச்சினைகளை, போராட் டங்களை, அவர்களின் ஆத்மாவை ஏற்கனவே படைப்பிலக் கியத்தில் பேசியவர்கள்: டானியல், டொமினிக் ஜீவா, என்.கே. ரகுநாதன், செங்கை ஆழியான், தெணியான், நந்தினி சேவியர் என எம்மால் ஒரு சிறிய பட்டியலைத் தரமுடி கிறது. இந்த மூத்த தலைமுறைப் படைப்பாளிகள் தற்போது

எம்மத்தியில் இல்லை. எனினும் அவர்கள் சொன்ன - சித்தி ரித்த பிரச்சினைகள் இன்னமும் வடபுலத்தில் முற்றாக தீர்ந்து விடவில்லை.

ஆயுதம் ஏந்திய விடுதலை இயக்கங்கள், களத்திற்கு வந்த போது, சாதிப்பிரச்சினை துப்பாக்கி முனைக்குப் பின்னால் மறைந்திருக்கிறது என்றுதான் பொதுவாகச் சொன்னார்கள்.

அண்மைக்காலத்தில், தென்மராட்சியில் ஒரு ஆலயத்தின் தேரை இழுத்துச்செல்வதில் ஏற்பட்ட பிணக்கினையடுத்து, அந்தத் தேர், வீதி நிர்மாணப்பணிகளுக்குப் பயன்படுத்தும் பெக்கோ இயந்திரத்தினால் இழுத்துச்செல்லப்பட்ட காட்சியை நாம் மறந்துவிட முடியாது.

வடபுலத்தின் சாதிப்பிரச்சினையில் தொடர்ந்தும் துருத்திக் கொண்டிருந்ததும் இந்த ஆலய விவகாரங்கள்தான்.

அதனையடுத்து தேநீர்கடையில் தேநீர் அருந்தும் விவகாரம்.

மாவிட்டபுரம் கந்தசாமி ஆலய பிரவேசப்பிரச்சினை, லண்டன் பிரிவு கவுன்ஸில் நீதிமன்றத்தின் கதவையும் தட்டியது. புங்குடுதீவு கண்ணகி அம்மன் கோயிலில் அடிநிலை மக்களுக்கு குடிநீர் பெற முடியாதிருந்ததை கண்டித்து எழுத்தாளர் மு. தளையசிங்கம் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி பொலிஸிடம் அடிவாங்கிச் செத்தார்.

ஆலயப்பிரவேசப் போராட்டம் பற்றித்தான் எழுத்தாளர் என்.கே. ரகுநாதன் எழுதிய கந்தன் கருணை கூத்து பேசியது. இதனை வடமராட்சி அம்பலத்தடிகள், கிராமங்கள் தோறும் அரங்காற்றுகை செய்தனர்.

இந்த முன்கதைச் சுருக்கத்தைப் பற்றி இங்கே சொல்ல நேர்ந்தமைக்கு, ஆவூரானின் குறுநாவல் பேசும் செய்திகளும் முக்கிய காரணம்தான்.

இக்குறுநாவலும் ஆலயம் சார்ந்த பிரச்சினையைத்தான் பேசுகிறது. நெடுந்தீவுக்கு பசுவூர் எனவும் பெயர் முன்பிருந்ததாம். இங்கிருந்து வெளிப்பிரதேசங்களுக்கு மட்டுமன்றி, படகு மூலம் இந்திய எல்லைக் கரையோர மக்களுக்கும் பசுவின் பால் எடுத்துச்செல்லப்பட்டிருப்பதாக ஆவூரான் கேள்வி ஞானத்தில் சொல்கிறார். அதனாலும் தனக்கு ஆவூரான் எனப் புனைப்பெயரை வரித்துக்கொண்டவர்.

நெடுந்தீவில் பிறந்து பின்னர் வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு இடம்பெயர்ந்து, தற்போது அவுஸ்திரேலியாவில் புகலிடம் பெற்று வாழ்ந்தவாறு இலக்கியப்பிரதிகள் எழுதிவரும் ஆவூரான், இக்குறுநாவலில் தனது என்னுரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

'என் தாய்நிலமான அழகிய தீவில் நான் வாழ்ந்த அந்தச் சொற்ப காலத்தில் நான் கண்டு பார்த்து வளர்ந்த எமது கிராமத்தைச் சுற்றியுள்ள சமூகத்தின் நடைமுறை வாழ்வில் அன்றாடம் நிகழ்ந்த பல வாழ்வியல் சம்பவங்களையும் மனித நேயம் என்ற சொல்லாடலே அற்றுப்போய் நின்ற பொழுதுகளையும் கண்ணில் சுமந்துகொண்டு தினப்புலமான வன்னி மண்ணில் என் வாழ்வைப் பதியம் போட்டிருந்தாலும், மனம் எப்போதும் பிறந்த மண்ணையே சுற்றி வந்து நினைவுகளைத் தூவிச் சென்று கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் நான், எமது தீவுக்கு வெளியே வாழ்ந்து கொண்டிருக்கும் போது கேட்டறிந்த விழிப்புணர்வுப் போராட்டங்களையும் முன்னிறுத்தியே இக்கதையைச் சொல்ல முனைந்தேன்.'

அடிநிலைச்சமூகத்தில் பிறந்த சின்னான் என்ற சிறுவன், தான் செய்யாத கொலைக்குற்றத்திற்காகக் கைதாகி நீண்ட காலம் தென்னிலங்கையில் சிறைவாசம் அனுபவித்துவிட்டு, (சுமார் முப்பது ஆண்டு காலம்) ஊருக்குத் திரும்பி வருகின்றான். அவனது வாழ்க்கையில் அனுபவித்த கொடுமைகளை, பெற்ற அனுபவங்களை, சந்தித்த மனிதர்களை ஒரு கதை சொல்லியாக ஆவூரான் சித்திரிக்கிறார்.

தமிழ் மாத்திரமே பேசத்தெரிந்தவனாகச் சிறைசென்ற சின்னான், அங்கிருந்து சிங்களம் பேசவும், எழுதவும் இயன்றவனாக ஊருக்குத் திரும்புகின்றான்.

நெடுந்தீவில் வந்திறங்கும்போது, பல மாற்றங்களைப் பார்க்கின்றான். அவன் பற்றி அறிந்த ஒரு தமிழ்ப் பத்திரிகை நிருபரும், ஒரு சிங்களப் பெண்பொலிஸ் கான்ஸ்டபிளும் அவன் மீது கருணை காண்பிக்கின்றனர்.

எனினும், சின்னான் சிறை செல்வதற்குக் காரணமாக இருந்த ஆலய தர்மகர்த்தாவும் அவரது குடும்பத்தினரும், அவனை அந்த ஊரைவிட்டே ஒதுக்கும் எண்ணப்பாங்குடனேயே செயல்படுகின்றனர்.

பெற்றோரை, சகோதரங்களை இழந்து தனிமரமாகிவிடும் சின்னான், அந்தச் சமூகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தனது பயணத்தைத் தொடருகின்றான்.

மேலும் விரிவாகப்பேசவேண்டிய கதைக்களம், 72 பக்க குறுநாவலாகியிருக்கிறது.

கே. டானியல் தமது பஞ்சமர் நாவலை முதலில் எழுதினார். மேலும் அதன் தேவையை உணர்ந்து, பஞ்சமர் - இரண்டாம் பாகம் எழுதநேர்ந்தது.

தற்போது இரண்டு பாகங்களும் இணைந்த முழுத்தொகுப்பு வாசிக்க கிடைக்கிறது. அவ்வாறே எதிர்காலத்தில், சின்னான் குறுநாவலின் கதை இரண்டாம் பாகத்திலும் தொடருமா என்பது தெரியவில்லை.



murugaboopathi@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***

# மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

## 'தேயிலைப் பூக்கள்' காவியம் தந்த சி. பன்னீர்செல்வம்




**- மல்லியப்புசந்தி திலகர்**

இந்தியாவில் பிறந்து இலங்கை வந்த வம்சாவளியினர்தான் இன்று 'மலையகத் தமிழர்கள்' எனும் அடையாளத்துடன் இலங்கையில் வாழ்கிறார்கள். அவ்வாறு வந்தவர்களுள் லட்சக்கணக்கானோர் சிறிமா - சாஸ்த்திரி ஒப்பந்தத்தினால் திரும்பவும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். இத்தகைய ஒரு சமூக நிகழ்வு நடந்து இன்று பல தலைமுறைகள் கடந்த நிலையில் அவ்வாறான ஒரு நிகழ்வை, ஒரு தனி நபருக்குள் அடையாளம் காணுவது சாத்தியமா?

அத்தகைய ஒரு வரலாற்றின் சாட்சியாக வாழ்ந்த ஒருவர் தான், இலங்கை - இந்திய எழுத்தாளராக ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக எழுதி வந்த இலக்கியச் செயற்பாட்டாளர் சி. பன்னீர்செல்வம்.

இந்தியாவில் இருந்து இலங்கை, மலேஷியா போன்ற நாடுகளுக்கு தொழிலுக்காகக் குடிபெயர்ந்த போதும், அவர்களது வாழ்வியலைத் தனியான ஓர் இலக்கியத் தொகுதியாக்கியதில் இலங்கை மலையகத் தமிழ்மக்களின் பங்கு முக்கியமானது என மலேசிய மூத்த எழுத்தாளர்கள் குறித்துரைக்கின்றனர். இந்தியாவில் இருந்து இலங்கை வந்து மீண்டும் இந்தியாவுக்குச் சென்ற சி. பன்னீர்செல்வம் 'மலையக இலக்கியம்' எனும் மரபின் வழிவந்த ஒருவர் என்பது சிறப்பானது. அவர்களுடைய எழுத்துக்கள் மூலமாக மலையக வாழ்வியலையும் அவர் சென்று சேர்ந்த தமிழக வாழ்வியலையும் தனது எழுத்துக்களில் பதிவு செய்துள்ளார். இவர் 'விரல்கள்' எனும் நாவல் மூலம், தமிழகத்தில் 'கலைமகள்' இதழ் நடத்திய 'கி.வா. ஜகநாதன் நினைவுப் பரிசு' பெற்று, மலையக எழுத்தாளர்களுக்குப் பெருமை சேர்த்தவர். மலையக இலக்கியம் என்கின்ற தொகுதி/துறை வாழுகின்றவரைக்கும் சி. பன்னீர்செல்வத்தின் பெயரும் புகழும் வாழும் என்று மறைந்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் பன்னீர்செல்வம் பற்றிப் பதிவு செய்கிறார்.

பன்னீர்செல்வம் இந்தியா சென்ற பின்னரும்கூட அவரது எழுத்துக்களை இலங்கை ஊடகங்களில் பிரசுரித்தவர் பத்திரிகையாளரும் இலக்கியவாதியுமான அந்தனி ஜீவா. பன்னீர்செல்வம் எழுதிய 'தேயிலைப் பூக்கள்' எனும் கவிதைக் காவியம் சூரியகாந்தி இதழில் தொடராக வெளிவந்தது. பன்னீர்செல்வம் தமிழகத்தில் 'சென்றவாரம்' என்ற வாரப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். அதே போல 'மனித உரிமைக் கங்காணி' எனும் இதழின் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். இந்தியாவில் கலைமகள், குமுதம் முதலான பத்திரிகையில் எழுதியவர். அவரைச் சந்தித்த நாட்களில் அவரது படைப்புகள் பல அச்சேராமல் இருந்தன. அவற்றை இலங்கைக்குக் கொண்டுவந்து 'குன்றின் குரல்' பத்திரிகையில் பிரசுரித்தேன். அவரது 'தேயிலைப் பூக்கள்' காவியத்தையும் இலங்கை 'சூரியகாந்தி' பத்திரிகையில் வெளியிட்டேன். இறுதியாக 'திண்டுக்கல் காந்திகிராமம் கிராமிய பல்கலைக்கழகத்தில்' இடம்பெற்ற 'மலையக ஆய்வரங்கிலும்' அவர் இணைந்திருந்தமை சிறப்பானது எனப் பன்னீர் குறித்து பேசுகிறார் அந்தனி ஜீவா.

எழுதத் தொடங்கி நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னர்தான் சி. பன்னீர்செல்வத்தின் எழுத்துக்கள் (ஜென்மபூமி - சிறுகதைகள்) தொகுப்பாக வெளிவந்துள்ளமை தமிழ் பதிப்புத்துறையின் வறட்சியைக் காட்டி நிற்கிறது. இருந்தும் சி. பன்னீர்செல்வம் உள்ளிட்ட 7 பேரின் பங்குபற்றலுடன் உருவான 'எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள்' தொகுப்பு மிக முக்கியமானது. இலங்கையில் இருந்து இந்தியா திரும்பிய மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்யும் முக்கிய ஆவணம் அது. மார்க்சியக் கருத்தியலைத் தமது அரசியல் சிந்தனையாகக் கொண்ட பன்னீர்செல்வத்தின் எழுத்துகள் புனைபெயருக்குள் ஒளிந்தவையல்ல. தான் சார்ந்த மக்களின் மீட்சிக்காக அவர் கவிதை, சிறுகதை, நாவல் எனப் பலவிதத்திலும் பங்கெடுத்தவர். பல சோகங்களுக்கும் தடங்கல்களுக்கும் மத்தியில் இந்தச் சமூகம் இப்படியே இருந்துவிட முடியாது என்ற ஓர்மம் அவரது எழுத்துப் பணியில் நிறைந்து இருக்கிறது எனக் குறிக்கிறார் சி. பன்னீர்செல்வத்தின் தேயிலைப்பூக்கள் காவியத்துக்கு முன்னுரை எழுதிய (லண்டன்) மு. நித்தியானந்தன்.

பன்னீர்செல்வம் 60, 65 காலப்பகுதியில் மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் ஊடாகக் கிடைக்கப்பெற்ற ஓர் எழுத்தாளர். மலையக மக்களின் தேசியம், அரசியல், பொருளாதாரம் முதலான சமூகம் சார்ந்த விடயங்களை தனது எழுத்துக்களுக்குள் பதிவு செய்தவர். அவரது படைப்புகளின் தலைப்புகளே அவரது எழுத்தின் எண்ணத்தை வெளிப்படுத்தும். இதுவரை மலையக இலக்கியத்தில் பெரும் குறையாக இருந்த ஒரு காவியத்தைப் படைத்ததன் மூலம் சி.வி. வேலுப்பிள்ளை எழுதிய கவிதைக்காவியமான 'இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே' தொகுதிக்குப் பிறகு 'தேயிலைப் பூக்கள்' எனும்

வரலாற்றுக் காவியத்தை கவிதையாக எழுதிய வரலாற்றில் இடம்பிடித்தவர் பன்னீர் என மூத்த எழுத்தாளர் மு. சிவலிங்கம் குறிப்பிடுவதோடு, அந்தக் காவியத்தில் தனது தந்தை இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பதாகவே காட்டுவது சிறப்பு எனவும் குறிக்கிறார்.

மலையக மக்கள் இந்தியாவை தமது தாய்நாடு எனக்கருதி வந்த தமிழ்நாட்டில் மனோரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் எவ்வாறு பாதிப்புற்றார்கள் என்பதைக் காட்டும் ஆய்வு நூலான 'எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள்' ஆய்வு




நூலை உருவாக்குவதில் பன்னீரின் பங்களிப்பு மிக முக்கியமானது. இவரது எல்லா எழுத்துக்களிலும் மலையகத் தமிழர்களின் வலிகளைப் பதிவு செய்திருப்பார் என அவரோடு சேர்ந்தியங்கிய நாதன் அவர்களின் துணைவியார் தமிழகத்தில் சமூகப் பணியாற்றும் திருமதி உருசுலா நாதன் தெரிவித்தார்.

பாடசாலைக் காலத்திலேயே வாசிப்பில் ஆர்வம் காட்டியவர். பாடசாலைப் பயணத்துக்கான பஸ்ப் பணத்தைச் சேமித்து இலக்கிய இதழ்களை வாங்கிப் படித்தவர். பாடசாலை மாணவராகவே 'அறிவுச்சுடர்' எனும் இதழை நடத்தினார். சித்திரம் வரைதலிலும் ஆற்றல் நிறைந்தவர். 'இளங்கோ நாடக மன்றம்' எனும் நாடக மன்றம் நடத்தியவர். பாடசாலை மாணவராக இருந்த போதே சிறுகதைக்காக இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர். கொட்டாங்கந்தை எனும் அவரது ஊரின் பெயரையே 'கொற்றகங்கை' என இலக்கியச் சுவையுடன் மாற்றி அமைத்தவர். நாடற்றவன் என்ற நிலையில் அடிமை வாழ்வு வாழ விருப்பமில்லை என இந்தியாவுக்குத் திரும்பிச் சென்றார் என அவரது பாடசாலை நண்பர் உமாபதி (கல்முனை) நினைவுகளைப் பகிர்ந்து கொண்டுள்ளார்.

ஜென்ம பூமியின் நினைவுகளைச் சுமப்பவர் மட்டுமல்ல அதனை எழுத்திலும் படைக்கும் நண்பர். பன்னீர்செல்வத்துடனான நட்பு 1963-ல் இருந்து தொடர்ந்து வருகிறது. அரசியல், இலக்கியம், நாடகம் என இலங்கையில் ஒரே தோட்டப்பகுதியில் இணைந்து செயற்பட்டோம். அவரது சகோதரர் அரு. சிவானந்தனோடு தமிழ்நாடு வந்தபோது அவரைச் சந்தித்துத் தொடர்ந்து இயங்கினோம். 1987-ம் ஆண்டு 'ரெலோ' இயக்கத்தினர் எங்கள் தோழர் பி.எஸ். நாதன் அவர்களைக் கடத்தியபோது போராட்டம் செய்து மீட்டெடுத்தோம். அவரது எழுத்துப் பணி சிறப்பானவை என அவரது இலக்கியத் தோழமை எழுத்தாளர் மு.சி. கந்தையா குறிக்கிறார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருந்த போது மாணவர் ஒன்றுகூடல் ஒன்றுக்கு பாடசாலை மாணவராகச் சாகித்யப் பரிசு பெற்ற சி. பன்னீர்செல்வத்தை அழைத்துப் பாராட்டினோம். அந்த விழா கண்டி அசோக்கா மண்டபத்திலே நடைபெற்றது. பின்னர் அவர் தமிழகத்திற்குச் சென்று அவரது குழுவினருடன் உணர்வுபூர்வமாகத் தயாரித்தளித்த 'எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்' நூல் எனது ஆய்வுக்கான உசாத்துணையாக இருந்தது. 'மலையக இலக்கியம்' எனும் தொகுதி அங்கீகாரம் பெற்றிருக்காத நிலையில் எங்களது ஆசிரியர் திருச்செந்தூரன் 'கல்கி' பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றுக் கொண்டு வந்த அங்கீகாரத்தின் தொடர்ச்சியாகப் பன்னீர்செல்வம் 'கலைமகள்' இதழில் தனது 'விரல்கள்' நாவலுக்காகப் பரிசு பெற்றமை காட்டி நிற்கிறது. மலையக இலக்கியத்துக்குப் பெருமை சேர்த்த பெருமகனார் பன்னீர்செல்வம் என ஓய்வுநிலை அரச உத்தியோகத்தரும் எழுத்தாளருமான எம். வாமதேவன் பதிவு செய்கிறார்.

பன்னீர்செல்வம் பிறந்த அதே ஊரின் அடுத்த எல்லையில் பிறந்தவன் என்கிற வகையில் பன்னீர்செல்வம், அரு. சிவானந்தன், மு.சி. கந்தையா போன்ற இலக்கிய வழித்தோன்றல்களின் தொடர்ச்சியானவனாக என்னைப் பார்க்கிறேன். அடுத்த தலைமுறையினரான நான் மதுரையில் அவரைச் சந்திக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தின் போது அவர், 'கொற்றகங்கை'யில் நீர் ஓடுகின்றதா என கேட்டது என்னை நெகிழச் செய்தது. அந்தக் கேள்வியின் ஊடே அந்த மண்மீதான அவரது பற்றுதலையும் அங்கு வாழும் மனிதர்கள் மீதான பரிவையும் காட்டுவதாகவும் அவை அவரது படைப்புகளில் வெளிப்படுவதாகவும் உள்ளது. அவரது படைப்பின் கனதியும் செழுமையும் வெளிப்படுத்திய கருத்துநிலை என்பவற்றால் மலையக, ஈழத்து இலக்கியத்தில் போலவே ஒட்டுமொத்தமாகத் தமிழ் இலக்கியப் பரப்பிலும் தனித்துவமான ஒரு அடையாளத்தைக் கொண்டவையே. மலையகத்தில் இருந்து தாயகம் திரும்பிய எழுத்தாளர்களுள் அந்த வாழ்வியலை அழகியல் கலந்து வெளிப்பாடாகத் தந்தவர்களில் பன்னீர்செல்வத்துக்குத் தனியான ஓர் இடமுண்டு. உலகம்

முழுவதும் புலம்பெயர்ந்து செல்ல நேர்ந்த மக்களின் உள்ளக்குமுறல்களின் வெளிப்பாடுகளுக்குச் சமாந்திரமாக மலையக மக்களின் புலப்பெயர்வு வாழ்வினைப் பதிவு செய்துள்ளார். 1980-களுக்கு முன்னரே இலங்கையில் புலம்பெயர் இலக்கிய வகைமையை முன்வைத்த முன்னோடிகளில் ஒருவராக பன்னீர்செல்வம் திகழ்கிறார். புலம்பெயர் கருத்தாடல்களின் போது பன்னீர்செல்வத்தின் படைப்புகள் தவிர்க்க முடியாத இடத்தினைப் பெறுகின்றன. பலவிதங்களில் மலையக முன்னணிப் படைப்பாளர்களில் ஒருவராகிறார். மானுட நேயத்துடன் இவர் வாழ்ந்த மண்ணையும் மக்களையும் தன் நெஞ்சில் சுமந்து படைப்பிலக்கியம் செய்த பன்னீர்செல்வம் இலக்கிய வரலாற்றில் என்றும் நிலைத்திருப்பார் எனப் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எம். ஜெயசீலன் கருத்துரைத்துள்ளார் ('பன்னீர்செல்வத்தின் படைப்புலகம்' எனும் தலைப்பிலான ஆய்வுரை).

திண்டுக்கல் நகரில் 'சென்றவாரம்' பத்திரிகையில் பன்னீர் அண்ணனுடன் சேர்ந்து பணியாற்றிய அனுபவம் மகத்தானது. அவருடைய இலக்கியப் பார்வை, இடதுசாரிச் சிந்தனை, சமூகப் பார்வையை எனக்குக் கற்றுக்கொடுத்த ஆசான். நாங்கள் லட்சக்கணக்கானோர் தமிழகம் முழுதும் வாழ்ந்தாலும் இலங்கை மலையகத்தைத் தான் ஜென்ம பூமியாகக் கருதுகிறோம். எங்களது சிந்தனைகள், பேச்சுகளில் அதுவே வெளிப்படுகிறது. அந்தத் தலைமுறையின் முதன்மையானவராகப் பன்னீர்செல்வம் காணப்படுகிறார். சாதாரண மனிதரான பன்னீர்செல்வம் சாதாரண மக்களின் வாழ்க்கையை வெளிப்படுத்தியவர். பன்னீர்செல்வத்துக்குத் தேச எல்லைகள் கடந்தவர் எனத் தமிழ்க்காவிரி இதழாசிரியர் வழக்கறிஞர் தமிழகன் (திருச்சி) தெரிவிக்கிறார்.

வாழ்நாள் முழுவதும் எழுத்திலேயே வாழ்ந்த நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் இலங்கை மலையகத்தில் இயங்கும் பாக்யா பதிப்பகம் 2021 ஆண்டு டிசம்பர் மாதம் மெய்நிகர் வடிவில் பன்னீர் பாராட்டு நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்திருந்ததோடு அவருக்கு 'வாழ்நாள் சாதனையாளர்' விருதும் வழங்கி கௌரவித்தது.

'தேயிலைப் பூக்கள்' கவிதைக் காவியத்தில் 'தங்கமலைத் தோட்டம்' எனும் தலைப்பில் எழுதி இருக்கும் கவிதை இவ்வாறு அமைகிறது.

*'இது*
*ஒரு நூற்றாண்டு காலம்*
*கழிந்திடு முன்னரே*
*உலகத் தெருக்களில்*
*இலங்கையின் பெயரை*
*உரத்தொலி செய்த*
*தேயிலைப் பூமி*
*ஏலச் செடிகளின்*
*கருவறை பூமி*

*ஏழெட்டு வயசு*
*சிறுவர்களின் கையில்*
*புல்வெட்டும் சொரண்டியை*
*திணித்த பூமி*
*பூப்புறா சிறுமியர்*
*முதுகினில் கூடையை*
*இரக்கம் இன்றி*
*சுமத்திய பூமி...*

*மலைகளால் துலங்கும்*
*மத்திய இலங்கையின்*
*நவ எழில் கூடமாம்*
*நக்கிள்ஸ் மலைத்தொடர்*
*மடியினில் அமைந்த*
*தங்கமலை என்னும்*
*கானகம் செறிந்த*
*எழில்மிகு தோட்டம்!*

*பூர்விகச் சிங்களர்*
*செறிந்து வாழும்*
*மகியங்கனை எனும்*
*சமவெளி தொடங்கி*
*நீண்டும் நெளிந்தும்*
*வளைந்தும் சென்று*
*மாத்தளைப் பகுதியை*
*கடந்திடும் நக்கிள்ஸ்'*

இப்படி இந்தியாவில் வாழ்ந்தாலும் இலங்கைத் தங்கமலையான நக்கிள்ஸ் மலை குறித்தும், மக்கள் குறித்தும் எழுதிக் கொண்டே இருந்து வாழ்ந்து மறைந்தவர் சி. பன்னீர்செல்வம்.

(தொடரும்...)



thilagar@thaiveedu.com




# பெரியார் தாத்தா

## நூல் அறிமுகம்



**- அருண்மொழி வர்மன்**

தமிழ் ஸ்டுடியோ அருணின் செயற்பாடுகளை மிக நீண்டகாலமாக ஆர்வத்துடன் பார்த்துவருகின்றேன். பேசாமொழி என்கிற இணைய இதழ், Pure Cinema என்கிற புத்தக விற்பனைக்கான இணையத்தளம், படச்சுருள் என்கிற திரைப்படம் குறித்த சிற்றிதழ், திரைப்பட திரையிடல்கள், திரைப்படம் குறித்தும், திரை ஆளுமைகளுடனும் உரையாடல்கள் என்று பல்வேறு வேலைத்திட்டங்களின் மூலமாகத் தனது நோக்குகளை நோக்கிய பயணத்தைத் தளர்வில்லாமல் முன்னெடுப்பவர் அவர். அந்தப் பயணத்தினதும் அவரது வேலைத் திட்டத்தினதும் தொடர்ச்சியாகவே அவர் எழுதி மகிழ் வெளியீடாக வந்துள்ள பெரியார் தாத்தா என்கிற சித்திரக் கதைப் புத்தகத்தையும் கருதுகின்றேன்.

சிந்தனையாளர்கள், சமூக நீதிக்கான போராட்டங்களை முன்னெடுத்த தலைவர்கள் பற்றி சிறுவர்களுக்கான அறிமுகநூல்கள் தமிழில் மிகக் குறைவாகவே வந்துள்ளன. இன்னும் குறிப்பாகச் சிறுவர்களைக் கவரும் விதத்தில் வண்ணப்படங்களுடனும், பெரிய எழுத்துருக்களுடனும், சிறுவர்களைக் கவரும் விதத்திலான கதை சொல்லும் முறையுடனும் வெளிவந்த நூல்கள் என்று பார்த்தால் இன்னும் அரிதாகவே இருக்கின்றது. இந்தச் சூழலில், அருண் எழுதியுள்ள பெரியார் தாத்தா, செவ்வக வடிவில், அழகிய வண்ணத் தாள்களில், வண்ணப்படங்களுடன் பெரிய எழுத்துருவில் சிறுவர்களைக் கவரும் விதத்தில் வெளிவந்திருக்கின்றது. தனது மகனான மகிழ்மாறனின் முதலாவது பிறந்ததினத்தின்போது இந்நூலை அருண் வெளியிட்டிருக்கின்றார்.

கதை கேட்க விரும்பாத குழந்தைகள் எங்குதான் இருக்கக்கூடும்? எமது பால்யம் வீட்டில் பெரியவர்களிடம் விடாது கதைகளைக் கேட்டு, கதைக் கேட்கும் சுவாரசியத்தில் தூக்கத்துடன் போராடி கடைசியில் கதைகேட்டபடியே தூங்கிவிடும் வழக்கத்தைக் கொண்டிருந்தது. இன்று பரபரப்பான வாழ்க்கை முறையும், இலத்திரனியல் கருவிகளின் பயன்பாட்டின் அதிகரிப்பும் குழந்தைகளுக்குக் கதை சொல்லும் நேரத்தை மட்டுமல்லாமல் குடும்பத்தினர் ஒன்றாக இருந்து ஒருவருடன் ஒருவர் பேசும் பழக்கத்தைக் கூட வெகுவாகக் குறைத்துவிட்டன. பெரியார் தாத்தா கதையில் சிறுவனான மாறனின் தந்தையோ இப்போதும் மாறனுக்குத் தூங்கும்போது கதைசொல்லும் வழக்கத்தைப் பழக்கமாகக் கொண்டிருக்கின்றார். கதை என்ற பெயரில் மூடநம்பிக்கைகளையும் புராணங்களையும் சொல்லும் வழக்கத்திலிருந்து மாறி, குழந்தைகளுக்கு விழிப்புணர்வையும் பிரக்ஞையையும் தூண்டுகின்ற விதமான கதைகளைச் சொல்பவராக மாறனின் தந்தை சித்திரிக்கப்படுகின்றார். இன்றளவும் பெற்றோர் தமது பிள்ளைகளுடன் கதைக்கத் தயங்கும் Good Touch, Bad Touch பற்றிக் கதையாக மாறனுக்குச் சொல்வது குறிப்பிடவும் கவனத்திற்கொள்ளவும் அவசியமானது.

பெரியார் போன்ற ஒரு ஆளுமையின் கருத்துகளைக் குழந்தைகளுக்கு எடுத்துச் செல்வது என்பது இலகுவான காரியமல்ல. மேலும், குழந்தைகளுக்கு சரியான முறையில் இந்தக் கருத்துகளை எடுத்துச் செல்லாமல் மேலோட்டமாகச் சொல்லும்போது அவை எதிர்மறைத் தன்மையையும் விலகலையும் ஏற்படுத்திவிடக் கூடும், இந்தக் கரிசனத்தை இந்நூலின் உருவாக்கத்தின்போது அருண் கடைப்பிடித்திருக்கின்றார் என்பது தெளிவாகத் தெரிகின்றது. அவர் முதற்கட்டமாக, பெரியாரை ஜீன்ஸ், ட்ராக் பாண்ட்ஸ், கறுப்புக் கண்ணாடி, டி சர்ட் அணிந்த புறத்தோற்றத்திலும் 'நவீன' மனிதராக இங்கே அறிமுகப்படுத்துகின்றார். பெரியாரைக் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்வதற்கான சித்திரக் கதைகளோ பாடல்களோ வெளிவந்துள்ளனவா என்று சில ஆண்டுகளுக்கு முன்னர் தேடியிருந்தேன். அப்போது பெரியார் சுயமரியாதை பிரசார நிறுவனத்தின் வெளியீடாக வந்துகொண்டிருக்கும் பெரியார் பிஞ்சு என்கிற இதழினைக் காணக் கிடைத்தது. தற்போது மக்ஸ்ரர் ஊடாகவும் இந்த இதழ்களை வாசிக்க முடிகின்றது. இதன் பழைய இதழ்கள் சிலவற்றினை http://periyarpinju.com/ என்கிற இணையத் தளத்திலும் பார்க்கலாம். பெரியார் பிஞ்சு இதழில் சித்திரக் கதை வடிவில் சில பக்கங்களில் பெரியா-ரின் கருத்துகளும் வரலாறும் வெளியிடப்படுவது வழக்கம் என்றாலும் அதில் பயன்படுத்தப்படும் மொழி குழந்தைகளுக்கான மொழியாக இருப்பதில்லை. மாற்றாக பெரியார் தாத்தாவில் குழந்தைகளுக்கேற்ற இலகுவான மொழியும், பெரிய எழுத்துருக்களும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. (குழந்தைகளுக்கு ஏற்ற விதத்தில் பெரியாரையும் அவர் சிந்தனைகளையும் அறிமுகம் செய்யும் பாடல்களை https://www.you-

tube.com/@pkdktamil என்கிற யூ ட்யூப் தளத்திலும் காண லாம், இனிமையான முறையில் இசைத் தொகுப்புச் செய்யப் பட்டிருக்கின்ற இந்தப் பாடல்கள் குழந்தைகளைக் கவரும் விதத்திலும் உள்ளன).

குழந்தைகளுக்கான கல்விமுறையில் ஓர் உபாயமாக, அவர் கள் பின்னாளில் அறிவியலிலும் சமூகவியலிலும் கற்கவும் அறிந்துகொள்ளவும் போகின்ற கருத்தாக்கங்கள் குறித்தும் ஆளுமைகள் குறித்தும் எளிய அறிமுகங்களைச் செய்து வைப்பது கடைப்பிடிக்கப்படுகின்றது. இன்னொரு விதத்தில் இது குழந்தைகள் கற்றுக்கொள்வதில் தம்மை நெருக்கமாகப் பிணைத்துக் கொள்வதற்கும், அவர்களது தேடல்களைத் தூண்டுவதற்கும் உதவுகின்றது. இங்கே பெரியார் தாத்தா கதாபாத்திரம் மூலமாக மாறனுக்கு ஐன்ஸ்டின், நியூட்டன்,




தோமஸ் அல்வா எடிசன், கிரகாம் பெல், ரைட் சகோதரர் கள், பற்றிய எளிய அறிமுகங்கள் செய்துவைக்கப்படுகின் றது. அத்துடன். லேசர் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்த தியடோர் மைமன் குறித்தும் அந்தத் தொழில்நுட்பத்தை எவ் வாறெல்லாம் பயன்படுத்தலாம் என்றும் கதையின் முக்கிய இழையாகச் சொல்லப்படுகின்றது. அதுபோல தாவரங்களின் வளர்ச்சியை அளவிடும் Crescograph கருவியைக் கண்டுபி டித்த ஜெகதீஸ் சந்திரபோஸ் குறித்தும் அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றது.

பெரியார் தன் வாழ்நாளெல்லாம் சுயமரியாதை, சமத்துவம் என்பவற்றை முன்னிறுத்தி சமூக நீதிக்காகப் போராடியவர், சாதி ஒழிப்பும், பெண் விடுதலை, பகுத்தறிவு, அரசியல் பிரக்ஞை, உள்ளிட்டதாகப் பல தளங்களில் செயற்பட்டவர் அவர். இன்று சூழலியல், நிலங்கள் பறிக்கப்படல், போன்ற பல்வேறு தளங்களில் நிகழும் சுரண்டல்களுக்கு எதிராக அறிவியலை ஆயுதமாகக் கொண்டு போராடுகின்ற நவீன பெரியாராகப் பெரியார் தாத்தா என்கிற ஃபண்டசி அமை கின்றது. அதேநேரத்தில் பார்ப்பனியம், சாதியம் ஆகியவற் றையும் கடந்துவிடாமல் போகிற போக்கில் அழுத்தமாகச் சொல்லிச் செல்வதாகப் பெரியார் தாத்தா அமைந்திருக் கின்றது.

இந்தப் புத்தகத்தில் எனக்குப் பிடித்திருக்கின்ற பல்வேறு விடயங்களில் மூன்று விடயங்களைக் குறிப்பாகச் சொல்வது அவசியம் என்று கருதுகின்றேன்.

கதையின் தொடக்கத்தில் மாறன் பெரியாரிடம் ‘அவங்கன்னு சொல்லாத தாத்தா, எப்பவுமே பேரச் சொல்லு, எங்கப்பா அது இது, அவங்க, அந்த மரம், இந்த மரம் அப்படியெல் லாம் பேசாம என்னவா இருந்தாலும் அதோட பேரச் சொல்ல ணும்னு சொல்லியிருக்காரு’ என்று சொல்வான். இது ஒரு முக்கியமான விடயமென்று கருதுகின்றேன். கதையின் முடி வுப்பகுதியில் மரங்களைப் பற்றி அறிமுகம் செய்யும்போது பெரியார் ஒவ்வொரு மரத்தையும் அதன் பயனையும் மாற னுக்கு அறிமுகம் செய்வார். நாம் வாழும் சூழலில் இருக் கின்ற உயிருள்ள, உயிரற்ற ஒவ்வொரு பொருட்கள் குறித் தும் நாம் சிறிதளவாவது, குறைந்த பட்சம் அவற்றின் பெய ரும் பயன் / வரலாறும் என்ன என்றாவது அறிந்துகொள்வது அவசியம்.

மரங்கள் நடுவதன் அவசியம் குறித்தும் இயற்கைவளங்கள் அழிக்கப்படுவது குறித்தும் உரையாடுவதன் தொடர்ச்சியாக உணவுச் சங்கிலிகள் குறித்து அறிமுகம் செய்யும்போது ‘மரங்கள் நிறைய இருக்கணும், அதுலயும் எதுக்கும் பயன்ப டாத மண்ணுக்கும் பொருந்தாத மரங்களை வைக்காம எல் லாருக்கும் பயன்படுற, மண்ணோடு உறவாடுற மரங்களை முன்வைக்கனும்’ என்று சொல்வது முக்கியமானதாகும்.

இந்தக் கதை முழுவதும் பெரியார் தாத்தாவும் மாறனும் உரையாடுபவர்களாகக், கருத்துகளைப் பகிர்ந்துகொள்பவர்க ளாகவே வருகின்றார்கள். மாறன் சொல்கின்ற கருத்துகளை யும் கேட்டு அவற்றுக்கு மேலதிக விளக்கங்களைக் கொடுப் பவராகவும், சில சந்தர்ப்பங்களில் மாறனின் கருத்துகளை யேற்றுத் தன்னைத் திருத்திக் கொள்பவராகவும் பெரியார் தாத்தா பாத்திரம் உருவாக்கப்பட்டிருப்பது முக்கியமானதா கும்.

Marxists Internet Archive திட்டத்தின் சிறுவர் இலக்கியம் என்கிற பக்கத்தில் அதன் நோக்கமாகச் சோசலிசக் கல்வி யின் பொறுப்பையும் சவால்களையும் அறிந்துகொள்வதற்கும் வரலாற்றுணர்வுடன் அடுத்த தலைமுறையினர் வளர்வதற்கும் தேவையான தகவல் வளங்களையும் ஆவணங்களையும் வழங்குவதாகும் என்று குறிப்பிடுகின்றது. சமூகநீதி குறித் தும், கல்வி முறை குறித்தும் அக்கறைகொண்டவர்கள் இத னைக் கருத்திற்கொண்டு சிந்தனையாளர்கள் குறித்தும் அவர் களது கருத்தியல் பின்புலங்கள் குறித்தும் குழந்தைகளிட மும் சிறுவர்களிடமும் எடுத்துச் செல்லவேண்டும். அதற்கான முயற்சிகளில் ஒன்றாகவே அருண் எழுதியுள்ள பெரியார் தாத்தாவினைப் பார்க்கின்றேன். சூரியராஜின் வரைபடங்க ளும் க. ரவீந்திரனின் வடிவமைப்பும் இந்த நூலைக் குழந் தைகளுக்கு நெருக்கமானதாக்குவதற்கு உதவியிருக்கின்றன. மாறனும் பெரியார் தாத்தாவும் காட்டுக்குப் போய் விலங்கு களுக்கு எப்படி உதவிசெய்தார்கள் என்பது பெரியார் தாத் தாவின் அடுத்த பாகமாக வருமென்று இந்நூலின் இறுதியில் குறிப்பிடப்படுகின்றது, பெரியார்
தாத்தாவின் பயணம் தொடரட்டும்.



arunmozhivarman@thaiveedu.com




# ஜிஃப்ரி ஹாசனின்
## சிறுகதைகள் மீதான ஒரு வாசிப்பு

- அஹமட் பிஸ்தாமி

கிழக்கிலங்கையிலும் மிகவும் பிரபல்யம் வாய்ந்த ஜிப்ரி ஹாசன் எனக்கு மிகவும் பிந்தித்தான் முகநூல் வழியாக அதிலும் அவரது நூல்களுக்கூடாக அறிமுகமானவர். முக நூல் வழியாக அண்மைய நாட்களில் சடுதியாக கிடைத்த தொடர்புகள் காரணமாக அவரது நூல்களில் ஓர் அலாதி யான ஈடுபாடு உருவானது.

காரணம் அவரது பரந்த வாசிப்பும் எழுத்தும் நூலறிமுகமும் தான் காரணம்.

அவரது நூல்களுள் முதலில் எழுத்தின் தடம் தான் வாசித் தேன். அடுத்து வாசித்தது அகாலத்தில் கரைந்த நிழல். அத னது மொழி, உள்ளடக்கம், கதை சொல்லும் பாணி இன்ன பிற காரணமாக அகாலத்திலும் கரைந்துருகி மறையாத நிழ லாகவே நூலின் தாக்கம் எனக்கும் எல்லோருக்கும் அமைந் துவிடுகிறது, அமைந்து விடும். குறிப்பாக சமூக அவலங்கள் அத்தனையையும் மூலை முடுக்கெங்கும் புகுந்து வெளிக் கொணர்ந்துள்ளார் எனலாம்.

சமூகத்தின் அவலம், அலைக்கழிவு, அவஸ்த்தை, அனுதா பம், வெறுமை, மௌனம் என அனைத்துக்குமான பரிதாப உணர்வை வெளியிடும் வகையில் எமது உணர்வை கசக்கிப் பிழிவதாக உள்ளன அனைத்துக் கதைகளும். முதலாம் கதையான ஒத்திகைக்கான இடம் எனும் கதை எமது சமூகத் தின் ஆன்மிக அவலம், ஆன்மீக வறுமை, வங்குரோத்து, சமயம் மீதான அரைகுறையான நுனிப்புல் பார்வை அனைத் தையுமே துலாம்பரமாய் காட்டிவிடுகிறது.

கட்டாய கல்விக்கு வழங்காத அழுத்தம் ஆன்மிக நோக்கில் குர்ஆனை மனனம் செய்ய வழங்கப்படுகிறது. ஆன்மீகத்தின் பேரில் நிகழும் மிகப்பிழையான பிள்ளை வளர்ப்பு முறை யாக அதிகார நோக்கிலான பாணியை கொண்டு இது அமைகிறது.

சமகாலத்தில் கட்டாய கல்வியும் சமயக்கல்வியும் இணைந்த தாக எத்தனையோ மாணவர்கள் தேர்ந்த பெறுபேறுகளை அடைவுகளை காட்டிவருவது கண்கூடு.

ஒரு காலத்தில் பள்ளியில் சேர்க்கையில் கண்ணை வைத்து அனைத்தையும் உரிக்க பொறுப்பு கொடுப்பது நினைவு வரு கிறது.

இறைவனின் கட்டளையான புனித திருக்குர்ஆனை கற்றவ னாக மாற்றி மகத்துவம் காண, பிள்ளையின் கட்டாய கல் வியை இழந்து அல்குர்ஆன் ஓதி மனனம் செய்து ஹாபிழாக் கிவிட பேராசைபட்டு விடுவது அனுமதிக்கத்தக்க ஒன்றல்ல. அது இறுதியில் மொத்தமாக அனைத்தையுமே இழக்கும் அவலம், அவமானம், அநியாயம், அக்கிரமம் அனைத்துமே இழையோடியுள்ளன கதையில்.

ஜின்னின் அட்டகாசம் அசத்தலாக தூக்கலாக உள்ளது... இக்கதையை, பிழையாக புரியப்பட்ட ஒரு நபிமொழிக்கான சமகால இலக்கிய விபரிப்பு எனலாம். அடுத்த கதை ரூஹின் யாத்திரையில் ஈழத்து சிறுகதை, மற்றும் நாவலாசிரியர் எழுத் தாளர் கவிஞர் தீரனின் தீரதத்தில் வரும் கபடப்பறவை எனும் கதையை கண் முன் கொண்டுவருகிறது. மரணிக்கும் வரைதான் உறவுகள், உரிமைகள், உணர்வுகள் எல்லாம் பேசுபொருளாகின்றன. உயிர்போனால் எல்லாம் போகும், அதனுடன் அவ்வளவு தான். மரணம் தான் உண்மைகளை கக்கும் ஒரு ரகசிய பிரிகோடு. அதுவரை தான் அனைவரது கபட நாடகமும்.

அகாலத்தில் கரைந்த நிழல் கதை தான் நூலின் மையச்ச ரடு, அச்சாணி. மிக நீண்ட கதை. ஒரு பெண் படும் உடல், உள அழுத்தம், பாலியல் சார் சில்மிச சீண்டல், குடும்பத் தின் மூத்த அதிகார வர்க்கத்தின் கெடுபிடிகள் என அனைத் தையும் கதை வெளிக்கொணர்கிறது.

கதையை இணையத்தில் வாசித்தாலும் இங்கு புதிய சுவை யும் சுகமும் உணர்வும் உயிர்ப்பும் இதமும் ரிதமும் தருவாக அதன் மொழியுள்ளது. வாப்படம்மா, வாப்படப்பா என நூலா

சிரியரே கதை சொல்வதால் பாத்திர வார்ப்பை யாரும் சொல்லித்தராமலே பக்குவமாக பிரித்தறியலாம் இந்தவகையில் கண்ணீர் கலந்ததாக இசகுபிசகின்றி கதை நகர்கிறது.

உலகளவில், உள்ளத்தளவில் உண்மையாகவே பெண் குறித்த குரூர பார்வைகளை மையப்படுத்தியதாக இந்தக்




கதை நகர்கிறது. ஹருகி முரகாமியின் Men without women நாவலை இது நினைவு கூர்வதாக உணர்கிறேன் தன் இயல்பான கவர்ச்சியான உடல் காரணமாக ஒரு பெண் அனுபவிக்கின்ற உள அழுத்தத்தின் பன்முக பரிமாணங்களை கதை அழகாக கட்டியெழுப்பி நகர்ந்து சொல்கிறது. பணம் சம்பாதிக்க இருமுறை வெளிநாடு சென்று உழைத்து, மூன்று முறை திருமணம் முடித்த ஒரு முதிரிளம் பெண்ணின் கதைதான் இங்கு அகாலத்தில் நிழலாக கரைகிறது.

எல்லையற்ற வாழ்வியல் வறுமையும் போராட்டமும் காரணமாக 80-களின் ஆரம்பத்தில் தொடங்கிய, முஸ்லிம் பெண்களின் மத்திய கிழக்கு நோக்கிய வெளிநாட்டு வேலை வாய்ப்புப் படையெடுப்பின் விளைவுகள் பற்றிச் சொல்கின்ற ஓர் அற்புதமான கதை. முஸ்லிம் சூழலை மையப்படுத்தியது.

இலங்கையின் கிழக்கு மாகாணம் முழுவதுமாக வாழ்கின்ற எண்ணற்ற கீழ்நிலை மற்றும் மத்தியவர்க்க முஸ்லிம் பெண்களின் அவலம் மிகுந்த வாழ்வின் துயரப் பெருங்கடலின் ஒரு சிறு துளி.

தம்மைச் சுற்றியுள்ள அதிகார வரக்கத்தினரின் வக்கிர, வழிசல், வஞ்சனை உணர்வுகளினால் அடிநிலைப் பெண்கள் அனுபவிக்கின்ற இருள் சூழ்ந்த துயர்நிறைந்த அனுபவங்களின் சிறு தொகுப்பு என்றாலும் தவறில்லை.

வரலாறு நெடுகவும் சூனியம் செய்பவர்களாகவும் குறி சொல்பவர்களாகவும் அமானுஷ்ய சக்தியும் ஆற்றலும் வசீகரமும் கவர்ச்சியும் நிறைந்தவர்களாகவும் ஆண்களின் காமப்பசி தீர்க்கும் படைப்புகளாகவும் பெண்கள் சித்தரிக்கப்பட்டு வந்திருப்பதை கண்டுள்ளோம்.

அல்குர்ஆன் கூறும் இறுதி அத்தியாயங்களுள் ஒன்றான அல் பலக் வைகறை எனும் ஸூறா கூறுவது போல முடிச்சுகளில் மந்திரித்து ஊதும் பெண்களின் தீங்கை விட்டும் என்பது ஜாஹிலிய காலத்தை மட்டும் சார்ந்த ஒன்றோ என ஏற்க மறுக்கிறது மனம் இங்கும் இத்தகைய வகையில் பெண்கள் வாசித்திருப்பதை வெளிப்படுத்துவதை காணலாம். அங்கும் பெண்களின் கீழ்நிலை அறியப்பட்ட ஒன்று. வரலாற்றுக்கு முந்தியும் பிந்தியும் நவீனத்திலும் அது கடந்தும் பெண் மீதான வன்கொடுமை தீர்ந்த பாடில்லை.

பில்லி, சூனியம், பித்தலாட்டம், வசியம் செய்தல் போன்றன அனேகமாக பெண்களுக்கு மட்டுமே உரியதாக ஆக்கப்பட்டிருக்கின்ற இந்த அதீத நம்பிக்கை ஆபத்தானதும் தான். இவற்றை விடுத்து, அதன் உளவியல் அம்சத்தில் மட்டும் அக்கறை கொள்பவர்களால், பெண்ணின் உடல் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற காட்டு மிராண்டித்தனமான அழுத்தங்களின் தீவிர விளைவாகவும் பரிமாண மாற்றமாகவும் இது நீள்கிறது. பெண்ணைப் பொறுத்தளவில் அவளுள் அற்புதங்கள் நிறைந்த கற்பிதங்களாக அமானுஷ்ய தன்மை ஒன்று தோற்றம் பெறுவதாக கருதப்படுகிறது. அத்தகைய ஒரு நிலையை இக்கதையின் பெண் பாத்திரமும் இறுதியில் அடைவதை காணலாம். இந்த ஜின் வசியங்களை, பித்தலாட்டங்களை, பூதாகரங்களை நம்புகின்ற, அங்கீகரிக்கின்ற, இறுதியில் அதற்கே பலியாகின்ற பாவப்பட்ட தரப்பும் பெண்கள்தான்.

உள்ளுக்குள் பொத்திப்பொத்தி வைத்த ஆயிரம் வாழ்வியல் கனவுகளோடும் இலக்குகளோடும் மத்திய கிழக்கு நோக்கி தொழில் நிமித்தம் செல்கின்ற ஒரு பெண், தன்னுடைய சொந்த வாழ்வு தவிர, தன்னை சார்ந்தவர்களின் மற்ற அனைத்துமே நிறைவேற பரிபூரண பங்களிப்புச் செய்து மகிழ்ந்து, தன்னை உருக்கி வடித்து கரைகிறாள். அவளின் மீது ஒட்டுண்ணியாக சூழ வாழும் அவளது அனைத்து உறவுகளுமே சுகம் பெறுகின்றனர்.

அவளது அயராத உழைப்பில் ஒவ்வொருவரும் தத்தமது பங்கிற்கு நன்மையும் சுகமும் அடைகின்ற நிலையில், அப் பெண்ணின் விருப்பம் மட்டும் கண் முன்னே பரிதாபமாக கரைந்துருகி வடிந்து, பார்ப்பார் கேட்பாரற்று கைவிடப்படுகிறது.

அவளைப் பொறுத்தளவில் நிறைவேறாத ஆசையாக அரை குறையாகக் கட்டப்பட்டுள்ள வீட்டுடன் நிறைவு பெறுகிறது. பொதுவாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் தான் ஒருமுறை வெளிநாடு சென்று விட்டால், போதும் பின் அதுவே இரண்டாம், மூன்றாம் முறை எனத் தொடர்கிறது. பழக்கமும் பரீட்சயமும் பெற்று விடுகிறது. அதுவே சாகும் வரையான வாழ்வாகி விடுகிறது. வெளிநாட்டு வாழ்வின் சுகமும் குதூகலமும் வரையறுக்கப்பட்ட ஒரு சிலருக்கே வரமாக வாய்க்கிறது.

எத்தனை முறை சென்றாலும், அந்தப் பெண்ணின் விருப்பம் மட்டும் முழுமையாக நிறைவேறுவதில்லை. சில ஆண்களுக்கும் அப்படி ஆவதுண்டு. தன் வாழ்வை மங்கலமாக்கத்தவறிய மூன்றாவது கணவன் இரவோடு இரவாக வெளியேறியதில் இருந்து கதை தொடங்குகிறது. தகப்பனின் அக்கறையில்லா மௌனம், தாயின் அதட்டலுடன் கூடிய அறிவுரைகள், மூத்த சகோதரனின் மனைவியின் அதிகாரம், மூன்றாம் தரப்பின் அநியாயம் நிறைந்த தீர்க்ககரமான முடிவுகள், பிற உடன்பிறப்புகளின் அலட்சியத்துடன் கூடிய உதாசீனம் என்பவற்றுள், அந்த பெண்ணின் உணர்வுகளும் விருப்பமும் முற்றாக அமிழ்த்தப்பட்டு விடுகின்றன. இப்படி மெழுகாய் கரைந்து விடுகிறது அவளது வாழ்வு.

இந்நிலையில் இருந்து விடுபட்டு, தனது சொந்த விருப்பில், சொந்த உழைப்பில் வாழ முயற்சிக்கின்ற அவர், தனது குடும்பத்திற்கு வெளியே புதிய அழுத்தத்தை எதிர்கொள்கிறார். உலகில் எங்கு சென்றாலும் திரும்பும் பக்கமெல்லாம் தன் உடலைக் குத்தித் துளைக்கின்ற ஆண்களின் காமப் பார்வைகளையும், அவர்களின் வக்கிர மொழிகளையும் சீண்டல்களையும் எல்லை மீறலையும் பெண் தனியே அனுபவிக்கிறார். எல்லாவற்றையும் தவிர்ப்பதற்காக உள்ள ஒரே வழி தனது இயல்பான உடலை கவர்ச்சி நீக்கம் செய்து அவலட்சணமாகவும் அசிங்கமாக முதிர்ந்து கிழடுதட்டியதாக வெளிக்காட்டுவது மட்டுமே என முடிவெடுத்து அப்படி செய்கிறார்.

இதனால் உளநிலையில் ஏற்படுகின்ற மனஅழுத்தம் அவரை அமானுஷ்ய உணர்வுநிலைக்கு ஆளாக்குகிறது. ஆண்களின் வக்கிரங்களில் இருந்து விடுபடுவதற்காக அந்த மத்திய வயதுப் பெண் தன்னை அகாலத்துள் கரைத்துக் கொள்கிறார்கள். இங்கும் பெண்ணோடு ஜின் இணைந்து விடுகிறது. ஒரு பெண் அனுபவிக்கும் பன்முகமும் பல்பரிமாணமும் நிரம்பி விழுந்து, பட்டுத்தெறித்து, நெஞ்சு படபடக்கும் குமுறலை ஆணாக நின்று ஜிப்ரி ஹாசன் எழுதியிருப்பது சிறப்பிற்குரியது.

கதையாசிரியரின் ஆழமான வாசிப்பு சமூக ஊடாட்டம், அவதானம், அனுபவம், உற்றுநோக்கல், நேர்மை, வாழ்க்கை மீதான பற்று, பிடிமானம், அக்கறை, மானிட நேசிப்பு என எல்லாமே இங்கு ஒரே நேர் கோட்டில் வேறுபட்ட இடங்களில் உயிரோட்டத்துடன் தெறிக்கிறது.

அவருக்கு இலக்கியம், சமகாலத்தில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாக இயல்பாக அமைந்திருக்கிறது. ஜிப்ரி மக்களின் அவலத்தை அவஸ்த்தையை அந்தரத்தில் தொங்கும் அந்தரங்கத்தை அகாலத்தில் கரையவிடாது நிஜபிம்பமாக மாற்றியுள்ளார். அவர் வாழும் சூழ உள்ள சமூகம் மீதான கருணைப்பார்வைதான் இதற்கு வித்திட்டிருக்க வேண்டும். பருவமடையாத, பக்குவப்படாத, அரும்பு மீசை கூட முளைத்திருக்காத ஒரு விடலைப்பையனாக நின்று நான்கு தசாப்த காலம் மூன்று கணவனுடன் வாழ்ந்த - வாழாத ஒரு மங்கையின் மனக்குமுறலை எப்படி கதைக்கூடாக கட்டியெழுப்பி நகர்கிறார் என்பதற்கூடாகவே ஜிப்ரியின் எழுத்தின் வலிமையை, அகன்ற வாசிப்பு எல்லையை, பன்முக வாசிப்பை தீர்மானிக்க முடிகிறது.

இலங்கை வானொலியில் சனி தோறும் சமூக அவலத்தை குறுநாடகமாக்கும் கலாபூசணம் மஹ்தி ஹஸன் இப்ராஹிம் அவர்களது சஞ்சாரம் போல ஜிப்ரியின் அகாலத்தில் கரையும் நிழலின் ஒவ்வொரு கதையுமே சமூகத்தின் கன்னத்தில் ஓங்கி அறைவதாக உள்ளது.

நூலின் நான்காம் கதை கறுப்பு வெள்ளை. அனீதும் அமீ-ரும் வந்து செல்வது போல ஒன்றாகத்தான் இந்தக் கறுப்பு வெள்ளை உலகும். நாம் பார்க்கும் அல்லது எமது கண்களுக்கு தோன்றும் கறுப்பு கறுப்பேயல்ல. அது வெள்ளையாகவும் இருக்கும், எமக்கு வெண்மையாக தோன்றுபவை இயல்பில் கன்னங்கரேலென்றும் இருக்கலாம். வாழ்வை அப்படித்தான் நின்று நிதானித்து நோக்கவும் பார்க்கவும் பழக வேண்டும். அவசரப்பட்டு வெளித்தோற்றத்தை வைத்து முடிவெடுக்கக்கூடாது என்பது கதை சொல்லும் பாடம்.

அடுத்தது... உறங்கும் சூபியின் இல்லம் உச்சோடைக்கல் அவுலியாட கப்ரடி மற்றும் அதிசயங்கள் குறித்த வாய்மொழிப்புராணங்கள் பற்றியது. கதையின் இறுதியில் இப்படி ஒரு paradigm shift வருமென்பது இடையில் தெரிந்தது. ஸூபித்துவத்திற்கு இலங்கை வரலாற்றில் இஸ்லாம் பரவிய முறைவழிகளில் அழியாத தடம் உள்ளது. உலகளவிலும் ஆத்ம ஞானிகளுக்கு அசாதாரண ஆற்றல்கள் இறை நெருக்கத்தால் அருளாக கராமத்தாக (அற்புதமாக) கிடைத்தன என்பதை மறுக்க முடியாது தான். ஆனாலும் இலங்கை சூழலில் உள்ள நடைமுறை சார்ந்த சமய கொதி நிலையில் தன்னோடு வந்த எதிலும் தீவிரமற்ற ராபி இந்த இறுதி முடிவுக்கு வந்தாலும் வாஸ்தவத்தில் அப்படி நிகழும் சந்தர்ப்பம் அமைவது குறைவு. அது தூர விலகிய ஒன்று. ஆனாலும் சூபிகள் குறித்த ஊறிப்போன பதிவை உண்மைப்படுத்துவதாக கதை உள்ளது.

அடுத்தது முடிவற்ற கண் இலேசாக கிழக்கிலங்கையின் குரூர யுத்த சூழல் குறித்த ஒரு குறும்பார்வையை தருவதாக உள்ளது. ஆனால் பாத்தும்மா எனும் இடியப்ப ராத்தாவின் மனிதாபிமானத்துக்கு விரோதமாக நடந்தவர்களுக்கும் காட்டிக்கொடுத்து கூதல் காய நினைத்தவர்களுக்கும் அவர்களது வாரிசுகள் மூலமாக கிடைத்த இறை கோபமும் சாபமும் நிறைந்த அகோர தீத்தண்டனையை, அவளின் சாபத்தைத் தான் தன் முடிவற்ற கண்களால் இன்றும் உற்றுநோக்குகிறாள் பாத்தும்மா.

காசிம்களும் மர்ஸானிகளும் தான் காலங்காலமாக இஸ்லாமிய வரலாற்றில் வரும் கொடுங்கோலர்களான அபூ லஹப்களாக அநியாயத்துக்கு துணைபோகும் அவரின் துணைவியான உம்மு ஜமீல்களாக பரிணாமம் பெறுகின்றனர் இத்தகைய மர்ஸானிகள். கதையில் கூட அசிங்கமாக வரும் ஜமீலா பாவப்பட்டவள் தான் உம்மு ஜமீல் போன்ற மர்ஸானிக்கு பிறந்ததால்...

அடுத்த கதை அகநதி. அடக்கி வைத்த அழுத்தங்களனைத்துமே இனியும் அடங்க மறுத்து பீறிட்டு பிரவாகித்து பாய்வதாகத்தான் அகநதி பாய்ந்தோடுகிறது. ஒரு நதி மலை உச்சியில் சுனையாக ஊற்றெடுத்து உருவெடுத்து முட்டி மோதி வளைந்து நெளிந்து தென்படும் திக்கு திசையெல்லாம் பொறுமையுடன் முன்னோக்கி பயணித்து திரும்பி கடலில் சங்கமித்து ஆசை தீர்ப்பது போலத்தான் அலாவும் தன் ஆசையை இறுதியில் தீர்க்கிறான்.

அனீபாவும் மனாபும் வெறும் குறியீடுகளே. நியூற்றனின் மூன்றாம் விதி மூர்க்கமாக மறுவடிவமெடுப்பதாக கருத முடியும். இருப்பினும், அடக்கி அழுத்தமாக வைத்த பிந்திய உணர்வுகளை கிளறிவிட்டதன் வேறு வெளிப்பாடாக உருக்கொண்டு அலாவின் ஆசை அகநதியாகி ஓடி முடிந்து அடங்கிவிடுகிறது. யாருமே கண்டு கொள்ளாத வகையில் கவலைப்படாத வகையில் சமூகத்தில் இன்னும் கூட ரகசியமாக இத்தகைய கொடுரங்கள் நிகழ்ந்து வருவதும் கண்கூடு.

அடுத்த கதை கல்விளக்கு வழியாக இனவாதம் கக்கப்படும் விதமும் சகவாழ்வு காக்கப்படும் விதமும் குறித்த காதல் சார்ந்த பதிவொன்று முன்வைக்கப்படுகிறது. ஆனால், இலங்கை சூழலில் அரசியல் பொருளாதாரம் எதிர்காலம் இன்ன பிற காரணிகளுக்காகவும் இனவாதத்தீ மூட்டப்படுகிறது, அதே போல சகவாழ்வும் பேணப்படுகிறது என்ற இரு துருவ முரண்பாடுகள் நிலவுகின்றன.

அடுத்த கதையான சின்ன மீன்கள் ரஷ்ய புரட்சியை அதன் பிரதான விசையான லெனினை நினைவூட்டி, இளவல்களுக்கு துடிப்பும் துடினமும் தரத்தக்கவகையில் இறுதியில் கதாநாயகன் மொஹிடீனுக்கே அலுப்பும் சலிப்பும் தட்டி தூர்ந்து போகும் ஒன்றாக நகர்கிறது.

லெனினுக்கு மரணமில்லை எனும் மரியா பிரிலெழாயவாவின் (பூ. சோமசுந்தரம் மொழி பெயர்த்த நூல்) நூல் ஏற்படுத்திய தாக்கமும் அதிர்வுமே கதைவழியே எதிரொலிக்கிறது. ஒரு புத்தகம் எத்தகைய அசரீரியை அதிர்வை உண்டு பண்ணும் என்பதற்கு இது சான்று.

புரட்சித்தூண்டிலில் இரையாக சிறிய மீன்கள் சிக்கிக்கொள்கின்றன இறுதியில் தூண்டிளிட்டவன் தலைமறைவாகி அயர்ந்துவிட சின்ன மீன்கள் துடிப்புடன் துள்ளிக்குதிக்கின்றன.

மக்ஸிம் கோகியின் தாயையும் அதில் வரும் கதாநாயக நாயகிகளையும் சிறிய மீன்களும் கண்முன் கொண்டுவந்துவிடுகிறது. பாவெல் பாஷா சமோய்லவ் என நூலில் அடிக்கடி வந்து செல்லும் ரஷ்ய நாமங்கள் கண்முன் தோன்றும்.

ரஷ்ய புரட்சியை ஏற்க மறுப்போருக்கும் எதிர்ப்போருக்கும் எகிப்து மற்றும் பாகிஸ்தானிய இயக்கங்கள் என்ன பெரிய மாற்றத்தை கொண்டுவந்தன எனும் குறுக்கு வினா பல கோணங்களிலும் சிந்திக்க வைக்கிறது. ஸூபித்துவத்துக்கும் (Sufism/Islamic mysticism) ஏகத்துவத்துக்குமிடையிலான monotheism மிதவாத போக்கை உறங்கும் ஸூபியின் இல்லத்தில் கண்டாலும் இங்கு அது புரட்சியின் வடிவம் பெற்ற மூரக்கத்தனம் வாய்ந்த விட்டுக்கொடுக்கவோ சமரசம் செய்யவோ compromising முடியாத போராட்டமாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது.

'கருத்து மக்களை பற்றிக்கொண்டால் அதுவே மாபெரும் சக்தி' எனும் லெனினின் கருத்து, புத்தக பூச்சான மொஹிதீனுக்கு மட்டுமல்ல வாஸ்தவம், புரியாத எல்லோருக்கும் தான் பெருஞ்சலனம். கல்வியியல் கற்றல் கற்பித்தல் சார்ந்த சவால்களுடன் கூடிய பின்புலம் கொண்ட கதை மாணவர்களையும் புதிதாக வந்த ஆசிரியர்களையும் அங்கீகரிக்க மறுக்கும் நசீலா, அவளால் பாகுபாடு காட்டப்படும் மாணவர்கள் என கதை பயணிக்கிறது. விசேட தேவை உள்ள ஒரு சிறு மாணவன், தன்னை ஈர்த்த மிகவும் கவர்ந்த குற்றமிழைக்காத புதிய ஆசிரியரின் பழிவாங்கல் இடமாற்றலை அறியாமல், அவரது வரைவை எதிர்பார்த்து ஏங்கும் ஒரு மாணவனின் தற்கொலைவரை கதை நீள்கிறது. இங்கு தான் அனைத்து கனவுகளும் தவிடுபொடியாகி அகாலத்தில் நிழலாகி கரைகிறது.

இது திமிர் பிடித்த ஆசான்களுக்கு நெற்றியடி. கரீம் சேர் ஒரு வகையான ராட்சசி போன்ற ஜோதிகா தான் வகுப்பறை முகாமை Child friendly school, Best teache போன்ற விருதுகளை கரீமுக்கு வழங்கலாம்.

ஆக மொத்தத்தில் அகாலத்தில் கரைந்த நிழலில் சமூகத்தின் ஒட்டு மொத்த அவலத்தின் பரிமாணமும் பட்டவர்த்தனமாக பட்டுத்தெறிக்கின்றன. அகாலத்தில் கரைந்த நிழல்கள் காற்றுசுமந்து வரும் கனவின் வலிகள், சமூகத்தின் கண்களுக்கு புலப்படாத கொடுமைகள், ஆன்மாக்களின் ஈரத்தை வற்றச் செய்யும் வன்மங்கள், வக்கிரங்களின் வகைமாதிரிகள் மூலம் கதைகளுக்கூடாக சமூகத்தின் ஆழ் மனதில் அதிர்வை ஏற்படுத்தும் ஜிப்ரிக்கு மீண்டும் பெரிய வாழ்த்து கள்.



bisthamy.ahamed@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***




இலங்கையின் ஊட்டி என அழைக்கப்படும் நுவரெலியாவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக எழுத்தாளருமான தோழர் மல்லியப்பூசந்தி திலகர் - திரு. மயில்வாகனம் திலகராஜ் அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட நூல் 'மலைகளைப் பேச விடுங்கள்' ஆகும். அவரது அன்னையின் நினைவாக இயங்கும் பாக்யா பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட இந்நூல் இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளிலும் 2020-ம் ஆண்டில் மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டு இன்று மலையக மக்கள் மத்தியில் மட்டுமல்லாமல் அனைத்து தரப்பினரிடையேயும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மலையக மக்களின் உணர்வுகளுடன் கலந்துவிட்ட உயர்ந்த எண்ணம் காரணமாக இந்நூலினைத் தோழர் திலகர் அவர்கள் மலையக மண்ணின் மைந்தர்களான மறைந்த திருவாளர்கள் அந்தோனி, பாலகிருஷ்ணன் ஆகிய இருவரின் நினைவாக அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

*'இந்தியத் தமிழராய் இலங்கை மலையகத்தில் பிறந்து வன்முறைகளால் வன்னியை நாடி ஓடி அங்கும் துயரம் சுமந்து அகதியாய் கடல் கடந்து தமிழகத்தில் - தாம் இறக்கும் போது இருபத்தொன்பதாயிரம் அகதிகளல்ல... இலங்கைப் பிரஜைகள் எனச் சட்டத் திருத்த சமர் செய்து உயிர் நீத்த தோழர்கள் எஸ்.ஆர். அந்தனி மற்றும் பாலகிருஷ்ணன் இருவருக்கும் சமர்ப்பணம்'* என்ற நூலாசிரியரின் சமர்ப்பண வரிகள் நம் இதயத்தைத் தொடுவதாக இருக்கின்றன. அவர்களின் போராட்ட வரலாறு 'அந்தோனி அகதியல்ல, பிரஜை', 'நாட்டுரிமைப் போராட்டத்தில் வெற்றி பெற்ற மலையகம்' ஆகிய தலைப்புகளில் நூலில் விபரமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

உலக அரங்கில் இலங்கை மலைநாட்டில் மலையக மக்கள் என்ற ஒரு தேசிய இனம் 200 வருடங்களாக வாழ்ந்து வருகின்ற நிலை பெரிய அளவில் பேசப்படாத இன்றைய கால கட்டத்தில் இலங்கையின் உயர் பீடபூமியான பீதுருதாலகால மலையின் அடிவாரத்தில் 'மடகொம்பரை' எனும் தேயிலைத் தோட்டத்தில் பிறந்து போராளியாக வெளிப்பட்ட திலகராஜ் என்பவரால் அம்மக்களின் உணர்வையும் எண்ணங்களையும் இணைத்து எழுதப்பட்ட இந்நூல், இன்றைய காலகட்டத்தில் சிறந்ததொரு மலையக வரலாற்றுப் பதிவாகக் குறிப்பிடப்படுகிறது. 107 பக்கங்களைக் கொண்ட இந்நூல் 15 அத்தியாயங்களை உள்ளடக்கி அமைந்துள்ளது. இலகுவான தமிழ் உரைநடையில் நூலாசிரியர் இதனை எழுதியுள்ளமையால் அனைவரும் வாசித்து சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது.

200 வருடங்களுக்குமுன் இந்தியாவில் இருந்து மலையகப் பெருந்தோட்டச் செய்கைக்காக இலங்கை சென்றவர்களை இன்று இந்திய வம்சாவளி என அழைப்பது காலத்திற்கொவ்வாதது என்ற உணர்வுடன், மலையகத் தேசிய இனமாகத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ள முனைப்புக் காட்டும் இன்றைய நாளில் 'மலைகளைப் பேச விடுங்கள்' எனும் இந்நூல் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. உழைப்பை வழங்கியவர்களின் வாழ்க்கை தலைமுறை தலைமுறையாக அந்நியப்படுத்தப்பட்டு வந்துள்ளதை உற்று நோக்கிய நூலாசிரியர் தன் குமுறல்களை மலைகளின் நடுவே நின்று வெவ்வேறு வடிவங்களில் கொட்டியுள்ளார். முன்னுரையில் பிரபல எழுத்தாளரும் முன்னாள் யாழ். பல்கலைக்கழகப் பொருளியல் விரிவுரையாளரும் தற்போது லண்டனில் வசிப்பவருமான திரு.மு.நித்தியானந்தன் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று மலைகளின் மௌனத்துக்குக் கீழே பல குமுறல்கள் புதைந்து கிடப்பதைக் கூர்மையான சொல்லாடல் மூலம் நூலாசிரியர் வெளிக்கொணர்ந்துள்ளார் எனலாம். அதாவது விண்ணைத் தொடும் அந்த மலைகளுக்கு நூலாசிரியர் உயிர் கொடுத்திருக்கிறார் என்பதாகும்.

'தமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிய வடக்குக் கிழக்குத் தமிழ்மக்கள், குடியுரிமையும் இருப்பிட உரிமையும் தொழில் மற்றும் ஊதிய உரிமையும் இல்லாது இருந்த தமது சொந்தங்களின் (மலையகம்) நிலைமையைப் புரியத் தவறியமை ஒரு பெரும் அவலம்' என இந்நூலுக்கான வாழ்த்துரையில் அரங்கம் பத்திரிகை ஆசிரியர் திரு. சீவகன் பூபாலரட்ணம் குறிப்பிட்டுள்ளமை வடக்குக் கிழக்கு மக்கள் மலையக மக்களைப் புரியாதவர்களாகப் புரிய முற்படாதவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது எனலாம். இதே போன்று ஞாயிறு தினக்குரல் ஆசிரியர் பாரதி இராஜநாயகம் மலைகளைப் பேச விடுங்கள் நூலைப் பற்றி விமர்சிக்கும் போது இந்நூல் சமகால அரசியல் சமூக விடயங்களைக் கூறுவதால் எதிர்கால ஆய்வுகளுக்கு உதவக் கூடியதாக

இருக்கும் என்கிறார்.

மலைகளின் நடுவே சலசலத்தோடும் தண்ணீரை அள்ளிப் பருகி, தேயிலைச் செடிகளிடையே ஓடி ஆடி விளையாடி, லயன் வீடுகளில் வாழும் பெருந்தோட்ட மக்களின் வாழ்வியலை, அவர்களின் உணர்வுகளை உடனிருந்து கண்டும் கேட்டும் அறிந்த நூலாசிரியர் தோழர் திலகர், மலையக அரசியலை மட்டுமல்லாமல் தேசிய அரசியலையும் உலக அரசியலையும் ஆழ்ந்து அறிந்தவர் என்ற வகையில் 200 வருட மலையக மக்களின் வருகையை, அவர்கள் எதிர்நோக்கும்




பிரச்சினைகளை, அதனுள்ளே ஒளிந்து கிடக்கும் அரசியல் என அனைத்தையும் இச்சிறு நூலில் சிறப்பாக எடுத்துரைத்துள்ளதைக் காணலாம். இந்தியாவிலிருந்து மலையகம் வந்தவர்கள் ஏன் வந்தார்கள்? எப்படி வந்தார்கள்? எதிர்நோக்கிய சவால்கள் எனப் பலவற்றையும் நூலாசிரியர் இந்நூலில் விவரித்துள்ளார்.

இன்றைய மலையகத் தமிழர்கள் இந்தியாவிலிருந்து இலங்கை நோக்கிச் செல்ல இரண்டு வகைக் காரணங்கள் இருந்தன என்பதை நூலாசிரியர் மிகச் சுலபமாகப் புரிந்து கொள்ளும் வகையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

- தள்ளும் காரணிகள் (Pushing Factor)
- இழுக்கும் காரணிகள் (Pulling Factor)

மலையகத் தமிழர் என்போர் யார் என்பதை விவரிக்கும் போது தோழர் திலகர் இலங்கையில் பிரபல எழுத்தாளரும் சட்டத்தரணியும் மொழிபெயர்ப்பாளரும் சாகித்தியப் பரிசுகள் பெற்றவருமான திரு. இரா. சடகோபன் அவர்களின் 'கசந்த கோபி', 'கண்டிச் சீமையிலே' ஆகிய இரண்டு நூல்களை மேற்கோள் காட்டிக் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதிகள் என இரண்டை நூலாசிரியர் மிகுந்த கவலையுடன் குறிப்பிடுகிறார்.

- இலங்கையின் அனைத்துத் துறைகளும் வளம் பெற அடித்தளமிட்ட இலட்சக்கணக்கான மலையக மக்களின் குடியுரிமை 1948-ம் ஆண்டு இலங்கை ஆட்சியாளர்களால் பறிக்கப்பட்டமை. ('நாடற்றவர் ஆன கதை: சிறிமா சொல்லும் விளக்கம்' என்ற தலைப்பினூடாகப் பிரஜாவுரிமை பறிப்பின் பின்னணி கூறப்பட்டுள்ளது.)
- 1964-ம் ஆண்டு சிறிமா சாஸ்திரி உடன்படிக்கையால் பண்டங்களைப் போன்று சில இலட்சம் மலையக மக்கள் மீண்டும் இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டமை. (அத்தியாயம் 12-ல் 'மனிதப் பண்டங்களான மலையகத் தமிழர்கள்' என்ற தலைப்பினூடாக உடன்படிக்கையின் உள்ளடக்கத்தை நூலாசிரியர் தெளிவுபடுத்துகிறார்.)

மலைகளின் மௌனத்துக்குக் கீழே பல குமுறல்கள் புதைந்து கிடப்பதால் மலையக மக்களின் பேசப்படாத பிரச்சினைகளை மக்கள் பேசவேண்டும் எனக் கூறும் நூலாசிரியர் மலையக மக்களின் பிரச்சினைகளைப் பதிவு செய்யத் தனியாக ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்துவதைக் காணலாம்.

### இரண்டு விதமான தமிழ் தேசிய இனங்கள்:

இலங்கையில் தமிழர் என்போர் யார் என்ற கேள்வி எழும் போதெல்லாம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்து வரும் தமிழர்கள் மட்டுமே உலக அரங்கிலும் - குறிப்பாக தமிழ்நாட்டிலும் கடந்த காலங்களில் அறியப்பட்டவர்களாக இருந்து வருவதை அறியலாம். 200 வருட காலமாக 1950-களில் இலங்கையில் இரண்டாவது பெரிய தேசிய இனமாகத் (இன்று நான்காவது), தமிழ் பேசுபவர்களாக மலையகத்தில் வாழ்ந்து வருவதை உலக நாடுகள் அறியாத நிலை காணப்படுகிறது.

இந்நிலையில் இரண்டு தமிழினம் இலங்கையில் இருப்பதையும் அவர்களுக்கு இடையிலான ஒற்றுமை - வேற்றுமைகள், சினேக - முரண்பாடுகள் என்பன நூலில் மிகத் தெளிவாக இடம்பெற்றுள்ளன. வேறு விதமாகக் கூறுவதாயின் இரு பகுதியினரதும் பிரச்சினைகளின் வடிவங்கள் வேறுபட்டன என்று கூறலாம். ஒரு தரப்பு இலங்கையில் தம்மை நிலைப்படுத்திக் கொள்ள முயல, மறு தரப்பு இலங்கையில் இருந்து பிரிந்து போகும் மன நிலையில் இருப்பதாகவும் நூலாசிரியர் ஆராய்ந்து அறிந்து இந்நூலில் எழுதியுள்ளார்.

பூர்வீகத் தமிழர்களை மட்டும் அறிந்து வைத்துள்ள தமிழகம் தமது உண்மையான தொப்புள் கொடி உறவுகளான 'மலையகத் தமிழர்' பற்றிப் பூரணமாக அறிந்திராத நிலைமை காணப்படும் இன்றைய காலகட்டத்திற்கு இந்நூலில் உள்ள கட்டுரைகள் மிகவும் பயனுள்ளதாகும். இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர் இடையேயான அடிப்படை வேறுபாட்டை மிகத் துல்லியமாக எளிய நடையில் விளக்கியுள்ளார். அதாவது மலையகத் தமிழ் மக்களும் இலங்கையில் வாழும் தமிழ் மக்கள்தான் என்பது ஒவ்வொரு சொல்லிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையாகத் 'தமிழர்கள்' என்ற நிலையில் மாத்திரம் ஏன் வாழ முடியாத நிலை என்பதை திறம்படவும் பதிவிட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

இந்திய வம்சாவளித் தமிழர்களாக இலங்கை வந்து தனித்துவமான 'தேசிய இனமாக' வளர்த்தெடுத்து இன்று தம்மை 'மலையகத் தமிழர்'களாக அடையாளப்படுத்திக் கொண்டுள்ளமை நூலில் அழுத்தமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது கூலிகள், கள்ளத்தோணிகள், தோட்டத் தொழிலாளர்கள், இந்திய வம்சாவளியினர், இந்தியத் தமிழர் எனப் பல படிகள் கடந்து இன்று 'மலையகத் தமிழர்' எனும் தேசிய அடையாளத்துடன் இலங்கையர்களாக வாழ விரும்புகின்றனர்.

## வன்னி வாழ் மலையக மக்கள்:

இலங்கையில் நடைபெற்ற பல்வேறு இனக் கலவரங்கள், மற்றும் பெருந்தோட்டங்கள் தேசிய உடமையாக்கப்பட்டு காணி நிலங்கள் பெரும்பான்மைச் சிங்கள மக்களிடையே பங்கிடப்பட்ட காலப்பகுதியில் மலையகத்தில் இருந்து வன்னிப் பகுதிக்குப் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பற்றியும் இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார். அவ்வாறு புலம் பெயர்ந்தவர்கள் பின்னாளில் 'உழைப்புச் சுரண்டல்', 'சாதிய மேலாண்மை', 'உள்நாட்டு யுத்தம்' மற்றும் 'மறுக்கப்பட்ட காணி உரிமை' எனப் பல்வேறு இன்னல்கள் அவர்களைத் துரத்த அவர்களில் சிலர் அகதிகளாகத் தமிழ் நாட்டிற்கு இடம் பெயர்ந்தமை மலையக மக்கள் வரலாற்றில் ஒரு சோக அத்தியாயமாகும்.

அனுராதபுரம், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட எல்லைகளில் பாதுகாப்பு அரணாக அவர்கள் குடியேற்றப்பட்டதும் அடர்ந்த வன்னிக்காட்டை வாழ்க்கைக்கு ஏற்ற நிலமாக மாற்றியவர்கள் மலையக மக்கள் என்பதும் வரலாற்று உண்மையாகும். அவர்களின் உழைப்பும் சிந்திய இரத்தமும் உயர்வானது. பின்னாளில் உள்நாட்டு யுத்தத்தினால் பெருமளவு உயிர்களையும் அவர்கள் இழந்துள்ளனர். தமது இளையவர்களைப் பலி கொடுத்த பின்னரும் இன்றும் வடக்கில் வாழும் மலையக மக்களாக வன்னி நிலப்பரப்பில் கணிசமாக வாழ்ந்து கொண்டிருப்பதை நூலாசிரியர் வலியுறுத்தி இருப்பதையும் காணலாம்.

வன்னிப் பகுதிக்கு விவசாயத் தொழிலாளர்களாக மட்டுமல்லாமல் யாழ்ப்பாணத்திற்குக் கடை ஊழியர்களாக, அரிசி ஆலைத் தொழிலாளர்களாகவும் மலையகத் தமிழர் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். அங்கே சுயநிர்ணய உரிமை கேட்கும் மக்கள் இவர்களுக்கு சம உரிமை அளித்தார்களா என்பது விடை காண முடியாத கேள்வியாக இருந்து வருகிறது. அதே வேளை EROS எனும் ஈழ மக்கள் புரட்சிகர மாணவர் அமைப்புப் போன்ற விடுதலை இயக்கங்கள் மலையக மக்களின் குடியுரிமைக்காக குரல் கொடுத்து வந்ததையும் மறுப்பதற்கில்லை. சில மலையக இளைஞர்களும் அவ்வமைப்பின் மீது கொண்ட ஈடுபாடு காரணமாக 'திம்பு'ப் பேச்சுவார்த்தையின் போது அனைவருக்கும் பிரஜா உரிமை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை மலையக மக்களின் நலன் சார்ந்து முன்வைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## பிரதேச சபைகளில் மலையக மக்கள்:

மலையக மக்களின் 200 வருட வரலாற்றில் முதல் 100 வருடம் அடிமை வாழ்வு வாழ்ந்ததையும் பின்னய 100 வருடம் எழுச்சியும் போராட்டங்களும் நிறைந்தது எனக் குறிப்பிடும் நூலாசிரியர் 1920 முதல் இன்று வரையிலான அரசியல் நகர்வுகளையும் அதன் முக்கியத்துவத்தையும் குறிப்பிடத் தவறவில்லை. 1931-ம் ஆண்டிலான டொனமூர் அரசியல் அமைப்பும் அதன் தொடர்ச்சியாக பெறப்பட்ட சர்வசன வாக்குரிமையும், நாடாளுமன்றத்திற்கு மலையகத்திலிருந்து தெரிவான பிரதிநிதிகள் பற்றியும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாகக் கூறும்போது உள்நாட்டு சிவில் நிர்வாகத்தில் கிராம சபை முறைமையில் தோட்டப் பிரதேசங்கள் உள்வாங்கப்படாததை மிகக் கடுமையாகக் குறிப்பிட்டுள்ளார். இதற்குக் காரணமான சுதேச அரசாங்கத்தைக் கடுமையாகச் சாடும் நூலாசிரியர், 2015 வரை இலங்கைப் பாராளுமன்றத்தில் மலையகத் தலைவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரதேசசபைச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வராத செயலையும் வன்மையாகச் சாடுகிறார். 2005 முதல் 2010 வரையிலான காலப்பகுதியில் இலங்கைப் பாராளுமன்றத்தில் மலையகப் பிரதிநிதிகள் 11 பேர் இடம்பெற்றும் கிராம சபை நிர்வாகத்தில் பெருந்தோட்ட மக்களை உள்ளடக்கும் எந்த ஒரு முயற்சியையும் மேற்கொண்டு வெற்றி பெற முயலவில்லை என்பது அனைவரும் கவனிக்கத்தக்கதாகும்.

சம அந்தஸ்து வழங்குவதில் தயக்கம் காட்டிய பெரும்பான்மைச் சமூக அரசியல்வாதிகள் பிரதேச சபைகளில் மலையக மக்கள் உட்புகாது பார்த்துக் கொண்டனர். இதைப் பற்றி விபரமாகக் கூறும் நூலாசிரியர் மலையக மக்களை இந்தியாவிற்கு நாடு கடத்தும் எண்ணத்தை மட்டுமே பெரும்பான்மை இன அரசியல்வாதிகள் கொண்டிருந்ததாகக் கூறுகிறார். இதனால் அந்த அரசியல்வாதிகள் பெருந்தோட்டங்களைக் கிராமிய நிர்வாக அமைப்புக்குள் கொண்டுவர பெரும் தடையாக இருந்துள்ளனர். எனினும் பல கட்டப் போராட்டங்களின் விளைவாகப் பெருந்தோட்டப் பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபைத் திருத்தச் சட்டம் 2018-ல் நிறைவேற்றப்பட்டதன் காரணமாக மலையக மக்கள் பிரதேச சபைக்குள் உள்வாங்கப்பட்டு இன்று தாங்களும் இலங்கையர்கள் என்ற உணர்வைப் பெற்றுள்ளனர். இதனடிப்படையில் இன்று உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்ட மலையகத் தமிழர்:

இந்தியாவில் இன்றைய நிலவரப்படி இரண்டு விதமான மலையகத் தமிழர் வாழ்வதை நூலாசிரியர் குறிப்பிட்டுள் ளார்.

- சிறிமா சாஸ்திரி உடன் படிக்கையின் கீழ் இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டவர்கள்.
- இலங்கையில் உள்நாட்டு யுத்தம் மற்றும் இனக் கலவரம் காரணமாக அகதிகளாகத் தமிழகம் வந்தவர்கள்.

நாடு கடத்தப்பட்டவர்கள் வாழ்வு தேடி இலங்கை நாட்டிற்குச் சென்ற இந்திய நாட்டின் தமிழர்கள் மீண்டும் இந்தியாவிற்கே வந்து தற்போதும் 'மறுவாழ்வு' தேடிக் கொண்டிருப்பதாகக் கூறும் நூலாசிரியர், நெல்லையில் நடைபெற்ற 'மலையகமும் மறுவாழ்வும்' நூல் அறிமுக விழா ஒன்றில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போது இம்மக்கள் ஒரு தலைமுறையாகத் தமது மறுவாழ்வைத் தேடிக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட் டமை நினைவு கூறத்தக்கதாகும். தேயிலைத் தோட்டங்களில் வேலைக்குச் சேர்ந்த தாயகம் திரும்பிய மலையக மக்கள் தற்போதும் மறுவாழ்வு தேடவேண்டிய நிலைக்கு உள்ளாக் கப்பட்டுள்ளதையும் மறந்துவிட முடியாது. தாயகம் திரும்பி யோரில் மிகச்சிறு பகுதியினர் மட்டுமே பொருளாதாரத்தில் வளம் அடைந்தவர்களாக இருக்கின்றனர். 'தமிழ் நாட்டின் சிலோன்காரர்கள்' எனும் தொடரை இலங்கையின் வார இத ழான 'சூரியகாந்தி'யில் எழுதிய அனுபவமுடைய இந்நூலாசி ரியர் தாயகம் திரும்பியோர் நிலை பற்றியும் திறம்பட எழுதி யுள்ளார்.

யுத்தம், கலவரம் காரணமாகத் தமிழகம் வந்தவர்கள் 36 வரு டங்களுக்கு மேலாக அகதிமுகாம்களில் இருப்பதையும் அவர்களில் 1/3 பகுதியினர் ஏறக்குறைய 30,000 பேர் இலங்கை மலையக வம்சாவளித் தமிழர்கள் ஆவார்கள் என் பதையும் இந்நூல் விபரிக்கிறது. இலங்கையில் அனைவ ருக்கும் குடியுரிமை வழங்கப்பட்ட நிலையில் இவர்களுக்கு இந்தியாவில் இந்தியக் குடியுரிமை வழங்கப்படாது இருப் பது கண்டிக்கத்தக்கதாகும். இவ்வாறு இந்தியாவில் இந்தியர் என்ற பெயரைத் தாங்கிக் கொண்டு ஒரு பகுதியினர் அகதிக ளாக இருப்பது விந்தையாக இருப்பதாகவும் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

## மலையக மக்களின் தேசிய இன அடையாளம்:

மலையக மக்கள் செறிவாகவும் பரந்துபட்டும் வாழும் அனைத்துப் பகுதிகளிலும் அம்மக்களுக்கான தேசிய இன அடையாளம் குறித்த விவாதம் அண்மைக் காலங்களில் பெரிய அளவில் பேசப்பட்டு வரும் இன்றைய காலகட்டத் தில் 'மலைகளைப் பேச விடுங்கள்' எனும் இந்நூல் முக்கி யத்துவம் பெறுகிறது. 1948-ல் குடியுரிமை இழந்து 1977-க்குப் பின்னர் படிப்படியாக மீளப்பெற்று, இன்று தங்களைப் பூரண மாக இலங்கை மலையகத் தமிழர்களாக அடையாளப்படுத் திக் கொண்டுள்ள நிலையை இந்நூல் அச்சமின்றி, ஐய மின்றி தெளிவுபடுத்துகிறது.

இலங்கைத் தமிழர்களில் இருந்து வேறுபடும் இவர்கள் தம்மை மலையகத்தின் புதல்வர்களாகவே கருதுகின்றனர். இலங்கையே தமது தேசம் என்றும், மலையகமே தேசியம் என்றும் தீர்மானித்த சமூகமே இன்று இலங்கையில் தேசிய இனங்களில் ஒன்றாக நான்காவது இடத்தில் தனித்துவமான சமூகக் கலை கலாச்சாரப் பண்பாட்டு அம்சங்களோடு வாழ்ந்து கொண்டிருப்பதாக இந்நூல் வலியுறுத்துகிறது.

இன்று பல்வேறு காரணங்களுக்காக மலையகத்துக்கு வெளியே வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்களும் தம்மை 'மலையகத் தமிழர்' என்றே கூறி வருகின்றனர். புலம் பெயர்ந்து வாழும் மலையகத் தமிழர்களும் தம்மை இலங் கைத் தமிழர் என்றில்லாமல் மலையகத் தமிழர் என்றே அடையாளப்படுத்தி வருகின்றனர். பெரும்பான்மை சிங்கள மக்களும் இவர்களை 'Hill Country Tamils' என்றே அழைக் கின்றனர். எனவே இலங்கையில் இந்தியத் தமிழர் என்ற சொற்பிரயோகம் காலாவதியான ஒன்றாகும்.

இவ்வாறு பல குமுறல்களை நூலின் வாயிலாகக் கொட்டி யுள்ள நூலாசிரியர் இலங்கை மலையகம், தமிழக மலைய கம் இரண்டுக்கும் புதிய பாலம் அமைப்பதில் ஒரு புதிய பரிமாணத்தைக் காட்டியுள்ளார் என்றே கூறவேண்டும். இன் றைய மலையகத்தில் வளர்ந்து வரும் நம்பிக்கைக்குரிய ஒரு அரசியல் தலைவராக நூலாசிரியர் தோழர் திலகர் இருப்ப தால் சமூக ஈடுபாட்டிலிருந்தும் அரசியல் செயற்பாட்டிலிருந் தும் இந்நூலை எழுதியுள்ளார். பிரபலமான இலங்கை மலை யக எழுத்தாளர் மறைந்த சாகித்திய ரத்னா தெளிவத்தை ஜோசப் அவர்கள் கூறுவதைப் போன்று 'மலைகளைப் பேச விடுங்கள்' நூல் அவருடைய அரசியல் ஆளுமைக்கான ஒரு புதுக் குரலாக ஒலிப்பதாகக் கூறவேண்டும். மதுரை அமெ ரிக்கன் கல்லூரி பேராசிரியர் திரு. ஸ்டாலின் ராஜாங்கம் அவர்களும்கூட மலையகத்தைச் சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு சென்றதில் 'மலைகளைப் பேச விடுங்கள்' எனும் இந்நூலுக்கும் ஒரு பங்கு உண்டு எனப் பெருமைப்படக் கூறியுள்ளார். வரலாற்றுப் பதிவான இந்நூலில் மலையகம் சார்ந்தும் இலங்கை சார்ந்தும் ஏராளமான விபரங்களை உள் ளடக்கிய நூலாக இந்நூல் திகழ்கிறது எனக் கூறலாம்.

மலையகத்தை அறிந்து கொள்ள விரும்புகிறவர்கள், அதன் வரலாற்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்கள், அம்மக்க ளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர் வம் உள்ளவர்கள், ஆய்வு மாணவர்கள் என அனைவரும் வாசித்தறிய வேண்டிய வரலாற்று நூலாக இந்நூல் திகழ்கி றது. மலையகம் தொடர்பான பல்வேறு விடயங்களை நூலா சிரியர் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். இலங்கை இந்திய வர லாறு, மலையகத் தொழிற்சங்க வரலாறு, பலதரப்பட்ட ஆளுமைகள், அரசியல் திருப்பங்கள் எனப் பயனுள்ள ஏரா ளமான விபரங்களை உள்ளடக்கிய இந்நூலை அனைவரும் வாசிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.



jeyasingh@thaiveedu.com




# தீவகக் குறிப்புகள்

– ஜோன் பென்றி லூவிஸ்

தமிழில் : மணி வேலுப்பிள்ளை

**இது ஒரு தமிழாக்கத் தொடர். ஜோன் பென்றி லூவிஸ் (John Penry Lewis) தீவகம் பற்றி எழுதிய குறிப்புகள் இங்கு தொடராக வெளிவரவுள்ளன.**

**Topographical Notes on the Jaffna Islands (யாழ் தீவக இடவிபரக் குறிப்புகள்) எனும் தலைப்பில் அவர் எழுதிய குறிப்புகள் Spolia Zeylanica (இலங்கை மரஞ்செடிகொடிகள்) எனும் திரட்டில் இடம் பெற்றுள்ளன. இலங்கை அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்ட இத்திரட்டு 1908-இல் இலங்கை அரும்பொருளகத்தால் வெளியிடப்பட்டது.**

**இலங்கை நிருவாக சேவை அதிகாரியாக விளங்கிய ஜோன் பென்றி லூவிஸ் இரணைதீவு, கச்சைதீவு, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, அனலைதீவு, எழுவைதீவு, காரைதீவு, நைனாதீவு அனைத்தையும் பார்வையிட்டார். ஒவ்வொரு தீவையும் பற்றி தனித்தனியான குறிப்பை எழுதினார். இது அவர் எழுதிய குறிப்புகளுள் ஒன்று:**

## நெடுந்தீவுக் குறிப்பு:

1904 டிசம்பர் 4-ம் திகதி காலை 8 மணியளவில் ‘செரந்தீப்’ கடற்கல மாலுமி எமக்கொரு சேதி அனுப்பினார்:

‘வடகிழக்கு நோக்கி வீசிய காற்று இராத்திரி கிழக்கு நோக்கித் திரும்பிவிட்டது, இன்னோர் இரவை இங்கு கழிப்பது ஆபத்து. எனது நங்கூரத்தின் குறுக்குப்பாளம் அலையில் அடியுண்டு போய்விட்டது. காற்று பிறகும் தெற்கு நோக்கித் திரும்பி எனது கடற்கலத்தை கரையொதுங்கச் செய்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். தயவுசெய்து வெறுங்கையுடன் கடற்கலத்துக்கு வரவும். இந்தக் கணத்தில் சில முடிவுகளை நாங்கள் எடுக்கவேண்டியுள்ளது.’

இந்தச் சூறாவளியிலும் புயல்மழையிலும் அவசர அவசரமாக, உடுத்த உடையுடன் கூட யாழ்ப்பாணம் செல்வது நல்லதல்ல என்று நாங்கள் முடிவெடுத்தோம். கடற்கலம் அகன்று செல்ல, நாங்களும் தீவின் குறுக்கே மூன்றரை மைல் நடந்து அரசாங்க வங்களாவுக்குச் சென்றோம். கடற்கலத்தை கடைசியாக நாங்கள் பார்த்தபொழுது, அது கிழக்கு நோக்கி நகராமல் நிற்பதுபோல் தெரிந்தது.

வானிலை மேம்பட்டவுடன் திரும்பிவரும்படி மாலுமியிடம் நான் கூறியிருந்தேன். அந்தியில் வானிலை சற்று மேம்பட்டாலும், காற்று தணியவில்லை. எனினும், மங்களூர்-ஓடு வேய்ந்த எமது வங்களாவின் கூரை இந்த மாரியில் எமக்கு இதமளித்தது. கோடையில் வங்களா புழுங்கி அவியும்.

வங்களாவை மொய்த்த கொசுக்கள் எங்களை வதைத்தன. அவை நுளம்புகளை விட மோசமானவை. அவற்றின் கடி மிகுந்த எரிச்சலூட்டும். அவை நடமாடுவது கண்ணுக்குப் புலப்படாது. கடியுண்ட பிறகுதான் அது தெரியவரும். அன்றிரவு நாங்கள் கண்ணயரவில்லை. முதல்நாள் இரவும் வெல்லை என்ற இடத்தில், ஓர் ஓலைக்கொட்டிலில் நான் உறங்கவில்லை. கூரை காற்றோடு போய்விடுமோ, நான் மழையில் நனைய நேர்ந்திடுமோ என்று நடுங்கியபடி விழித்திருந்தேன்.

டிசம்பர் 6-ம் திகதி மாலை காற்று அறவே தணிந்துவிட்டது. ஆனால் கடற்கலம் திரும்பிய அறிகுறி தெரியவில்லை.

போர்த்துக்கேயர் கட்டிய கோட்டையை காலையில் நண்பர் இங்கிலிசு அளந்தார். மாலையில் சாராப்பிட்டியில் இருக்கும் கிணறுகளை பார்வையிட நண்பர் கோனல் போனார். அங்கே 92 கிணறுகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவை போர்த்துக்கேயராலோ, ஒல்லாந்தராலோ வெட்டப்பட்டவை அல்ல, அவை வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டவை என்பது கோனலின் கருத்து.

அவர் இரணைதீவில் கண்ட சிறந்தவகை பீர்க்கு கொடிகளை நெடுந்தீவில் காணவில்லை. நெடுந்தீவு வயல்களில் வரகு, சாமைப் பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளன.

வங்களாவை அண்டிய கடற்கரையில் காய்ந்து கிடக்கும் சாணியால்தான் நெடுந்தீவில் கொசுக்கள் பெருகியிருப்பதாக பூநகரியிலிருந்து எங்களுடன் திரும்பிவந்த மணியகாரர் தெரிவிக்கிறார். சாணி காய்ந்து குவிந்து கிடக்கிறது. யாழ் மாவட்டத்தின் ஏனைய இடங்களில் எல்லாம் சாணியை கவனமாகச் சேகரித்து எருவாகப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் நெடுந்தீவுவாழ் உழவர்கள் எருவைப் பயன்படுத்தவில்லை. சாணி



நல்ல எருவல்ல என்பது அவர்கள் எண்ணம். ஆனால் அது வெறும் சோம்பேறித்தனத்துக்கு ஒரு சாட்டு. ஏற்றியிறக்கும் செலவு கட்டுபடியாகும் என்றால், இந்த எரு யாழ்ப்பாணத் துக்கு ஏற்றிச் செல்லப்பட்டிருக்கும். இங்கிருந்து காவிளாய் அனலைதீவுக்கு பசளையாக ஏற்றிச் செல்லப்படுகிறது. செலவு கட்டுபடியாகாது என்றபடியால் அது யாழ்ப்பாணத்




துக்கு ஏற்றி அனுப்பப்படவில்லை.

கச்சைதீவில் பாம்புக்கடியால் தீங்கில்லை என்கிறார் உடை யார். அங்கு முளைக்கும் சீந்தில் என்ற மூலிகையே அதற் கான மருந்து என்பது உடையாரின் வாதம். ஆனல் ஒரு யோகியால்தான் அந்த மூலிகையைக் கண்டுபிடிக்க முடியும்.

இரணைதீவில் அஞ்சாளைகள் (அல்லது கடற்பாம்புகள்) அதிகம். ஆனால் ஏனைய தீவுகளில் உள்ளவை போலவே இவையும் மந்தம் பிடித்தவை என்கிறார்கள். ஆதலால் இவை யாரையாவது கடிப்பது குறைவு. ‘கடித்தாலும் பரவா யில்லை. மூன்று தடவைகள் கடல்நீரைக் குடித்தால் அது சரிப்பட்டுவிடும்’ என்று இரணைதீவுக் கடலாளர் ஒருவர் தெரி வித்தார். ஆனால் எமர்சன் தெனன் அவர்களோ அவை உயிர்குடிக்கும் பாம்புகள் என்கிறார்.

நெடுந்தீவில் ஏறத்தாழ 20 கட்டுமரங்கள் இருக்கின்றன. நேற்று சில கட்டுமரங்கள் கொந்தளிக்கும் கடலில் சென்றன. அவற்றுள் ஒன்று ஊர்காவற்றுறைக்கு புறப்பட்டது. அதன்மூ லம் நான் ஒரு சேதி அனுப்பினேன்.

இரணைதீவுக்காரர் அணியும் தொப்பி வேறு வகையானது. நெடுந்தீவுக்காரர் தமது சொந்த தொப்பியை ஆக்கி அணி வதை அவதானித்தேன். இதுவும் பனை ஓலையால் ஆனது, குல்லாய் போன்றது. காதுக்கும் நாடிக்கும் கீழே முடியப்படு வது. கொழும்பில் நடக்கும் பொருட்காட்சியில் வைக்கவென ஒரு தொப்பியை நான் பெற்றுக்கொண்டேன். இது தலை- வரைப்பட்டை எனப்படுகிறது. இதை நாங்கள் தலைக்கூடை எனலாம்.

சாராப்பிட்டியில் 92 கிணறுகள் இருப்பதாகச் சொல்லப்படுகி றது என்று மணியகாரர் தெரிவிக்கிறார். ஆனால் ‘ஒல்லாந்தர் திண்ணிய பாறை ஊடாக 400 கிணறுகளை வெட்டுவித்தார் கள்’ என்று ‘கொழும்பு ஜேர்னல்’ இதழை மேற்கோள் காட்டி, காசிச்செட்டி தனது ‘கசற்றியர்’ சஞ்சிகையில் எழுதியுள்ளார்.

டிசம்பர் 6-ம் திகதி காலை 9 மணியளவில் யாழ்ப்பாணத்திலி ருந்து ‘செரந்தீப்’ வருவது புலப்பட்டது.

‘இதற்கு முன்னர் நான் நெடுந்தீவு வந்துசென்ற பிறகு மாவில் துறை எனப்படும் துறையில் அமைந்திருந்த மேடை, கடல் அலையில் தாக்குண்டு தகர்ந்து போய்விட்டது. ஆதலால், அலைமோதும் கடலில் ஒரு நெடுந்தீவுப் படகுமூலம் கடற்க லத்தைச் சென்றடைய, எனக்கு ஏறக்குறைய 2 மணித்தியா லம் பிடித்தது.

சனிக்கிழமை நாங்கள் ஐயுற்றது போல் காற்றை எதிர் கொண்ட கடற்கலம் ஒரு அடியேனும் நகர முடியாமல் நிலைகொண்டது. ஆதலால் எமது மாலுமி மண்டைதீவு செல் லும் எண்ணத்தைக் கைவிட்டு,
ஊர்காவற்றுறைக்குச் செல்ல நேர்ந்தது.



mani.v@thaiveedu.com



# ஒரு நாவல் ஹோமோ பாபர் தற்செயல்களின் ஒழுங்கமைவு

**- நடராசா சுசீந்திரன்**

அபரிமித வேகத்தில் வளர்ந்துகொண்டிருக்கும் தொழில் நுட்பம், மீ-தொழில்நுட்பம் மனிதஜீவியின் மரபான நடத்தைகளில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டே வருகின்றது. நேற்றிருந்த மனிதஜீவி அல்ல இன்றிருப்பது என்பது போன்ற அவதானங்களை இலக்கியமும் தன்பங்குக்கு எப்பொழுதும் வெளிப்படுத்தியே வந்திருக்கின்றது. அறிவிற் சிறந்த சமூகமாக தன்னைக் காட்டிக்கொண்ட ஐரோப்பிய அறிவொளிச் சமூகமே இரண்டு உலகப் போர்களை நடத்தி உலகினைச் சிதைத்து உருமாற்றியது. பிராங்போர்ட் சிந்தனைப் பள்ளியின் மெய்யியலாளர்கள் மக்ஸ் ஹோர்க்ஹைமெர் (Max orkheimer) அவர்களும் தியோடோர் அடோர்னோ (Theodor W.Adorno) அவர்களும் 1940-களின் மத்தியில் 'அறிவெளியின் தர்க்கம்' (Dialektik der Aufklärung) என்ற விமர்சன நூலினை வெளியிட்டனர். அதில் பிரெஞ்சுப் புரட்சிக்கு காரணமான ஐரோப்பிய அறிவொளிக் கருத்தமைவைக் கேள்விக்கு உட்படுத்தினர். ஏனெனில் அன்று நிலவிய தீவிர வலதுசாரிப்போக்கும் தீவிர தேசியமும் பரந்து பட்ட சமூகத்தின் எதிர்ப்புகள் இன்றி, பெருமளவு ஆதரவுடன் பாசிஸமாகவும் ஏகாதிபத்தியமாகவும் வளர்ச்சியடைந்து சென்றதையும் அவையே புதிய ஆட்சி வடிவங்களாக வெற்றியீட்டியதையும் எடுத்துக் காட்டி விமர்சித்தனர். 21-ம் நூற்றாண்டிலுங்கூட ஐரோப்பாவிலும் ஐரோப்பியர் காலூன்றிய உலகிலும் இனவாதம், நிறவாதம், தேசியவாதம் போன்றவற்றை மூலதனமாகக் கொண்ட சக்திகள் அரசியல் அதிகாரங்களைக் கைப்பற்றிவருகின்றன.

தொழில்நுட்ப வளர்ச்சியும், எல்லாவற்றையும் யாந்திரீகத்தனமாக பார்ப்பதும் மனிதஜீவிக்குள்ளிருக்கும் மனிதத்தினை அகற்றிவிடக்கூடும் என்பதை கருப்பொருளாகக் கொண்டு 1957-இல் மக்ஸ் ஃபிறிஸ் (Max Frisch) என்ற சுவிஸ்நாட்டு எழுத்தாளர் 'ஹோமோ ஃபாபர்' (Homo Faber) என்றொரு நாவலை எழுதி வெளியிட்டார். இந்த நாவல் அண்மைக் காலத்தில் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டிருக்கின்றது. 'ஹோமோ ஃபாபர்' என்பது லத்தீன் மொழியில் 'தொழில் நுட்ப மானுடம்' என்பதாகும். இது சுவிற்சலாந்தைச் சேர்ந்த பொறியியலாளர் வால்டர் ஃபாபரின் கதையைச் சொல்லும் புதினம். அதி நவீன தொழில் நுட்ப உலகில் மனிதம் தன் அடையாளத்தினை எவ்வாறு நிலைநிறுத்திக் கொள்வதென்தும் எப்படிப் பொருத்திக் கொள்வதென்பதும் வாழ்க்கைப் போராட்டமாக இருக்கின்றவரை இந்நாவல் இக்காலத்திற்கும் சுவாரஷ்ஷியம் மிக்கதாகவே இருக்கின்றது.

தனது தொழில்நுட்ப அறிவின்மூலம் அன்றாட நிகழ்வுகளை இலகுவாகப் பிரித்தறிந்து கொள்ளும் பகுத்தறிவுவாதி வால்டர் ஃபாபர். இப்பிரதான கதாபாத்திரம், வால்டர் ஃபாபர் பல நாடுகளுக்கும் பயணப்படுகின்றார். அப்பயணங்களில் சோதனைமேல் சோதனைகள் அவருக்கு உருவாகின்றன. தொல்லை தரும் இந்த நிகழ்வுகளின் அணிவகுப்பை அவரால் புரிந்துகொள்ளத் தான் முடிகிறதே தவிர மாற்ற முடிந்ததில்லை. புதிய புதிய அறிமுகங்களும் நிரந்தரமற்ற நட்புகளும் உருவாகி இறுதியில் எலிசபெத் என்ற துடிப்பான இளம் பெண்ணின் மீது காதல் கொள்கின்றார். ஆனால் வால்டர் ஃபாபர் அந்த எலிசபெத்தின் உயிரியல் தந்தை என்பது இறுதியில் தெரியவருகின்றது. வால்டர் ஃபாபர் எழுதும் நாட்குறிப்புக்களின் மூலமே பெருமளவு கதை நகர்த்தப்படுகின்றது எனினும் இந்த முறையீட்டு நாட்குறிப்புகள், அனுபவங்கள் கால ஒழுங்கில் சொல்லப்படவில்லை. கடந்து சென்ற காலங்களை பற்றிய நாட்குறிப்புகள் முறையீடுகளாக வழங்கப்படும்போது வால்டர் ஃபாபரின் எதிர்காலம் பற்றிய செய்திகள் முன்னறிவுப்புக்களாக வாசகர்களுக்கு வந்துசேருகின்றன. இந்த நாவலுக்கு 'இது ஒரு அறிக்கை' - 'A Report' என்ற துணைத் தலைப்பினையும் இட்டுள்ளார் மக்ஸ் ஃபிறிஸ் (Max Frisch). அது ஏன் என்பதையும் வாசகர்களே சிந்திக்கவேண்டும். இது ஒரு பின்நவீனத்துவ நாவல் என்று இலக்கிய உலகில் கொள்ளப்படுகின்றது.

வால்டர் ஃபாபர் பல வருடங்களாக ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பான யுனெஸ்கோவிற்காக நியூயோர்க்கில் பணிபுரிகின்றார். கரகாஸ் நோக்கிய ஒரு பயணத்தின்போது, விமானத்தின் எஞ்ஜின் கோளாறு காரணமாக, விமானம் இடையில் தரையிறங்கிவிடுகின்றது. பயணிகளில் ஒருவரான ஜெர்மனியைச் சேர்ந்த ஹெர்பர்ட் ஹென்கேயுடன் ஆரம்பத்தில் வேண்டாவெறுப்பாக

வும் தயக்கத்துடன் அறிமுகமாகின்றார். ஆனால் ஹெர்பர்ட் ஹென்கேயின் சகோதரன் வால்டர் ஃபாபரின் பல்கலைக்கழ கக் காதலி ஹன்னாவின் முன்னாள் கணவன் என்பதும், ஜோ-ஆசிம் ஹென்கே என்ற அவளது கணவன் குடும்ப பிரிவிற் குப் பின்னர் சுமார் இருபது வருடங்களாக குவாட்டமாலாவிற் குச் சென்று தலைமறைவாகிவிட்டதாகவும் தனது சகோதர னைத் தேடியே ஹெர்பர்ட் ஹென்கே கரகாஸ் செல்வதாகவும் அறியவருகின்றது.

ஹன்னா யூதப் பெண் வால்டர் ஃபாபரின் காதலியாக இருக் கும்போது கற்பமடைகின்றாள். வால்டர் ஃபாபர் குழந்தை




என்பதை ஒரு சுமையாகவே கருதுகின்றார். அன்றியும் ஒரு யூதப் பெண்ணை தமது குடும்பத்தில் ஏற்றுக்கொள்ள வால்-டர் ஃபாபரின் பெற்றோர், குறிப்பாகத் தந்தை விரும்ப வில்லை. அத்தோடு வால்டர் ஃபாபருக்கு பாக்தாத்தில் ஒரு பொருத்தமான வேலையும் கிடைக்கவிருப்பதால், குழந்தை, திருமணம் போன்றவை பற்றி அவர் தயங்கித் தயங்கியே முடிவெடுக்கின்றார். ஹன்னா கருக்கலைப்புக்கு ஒப்புக் கொண்ட போதிலும், ஃபேபர் அவளை திருமணம் செய்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இருப்பினும், கடைசி நொடியில் திருமணத்தை ஹன்னாவே நிறுத்திவிடு கின்றார். இருவரும் பிரிந்து செல்கின்றனர். பாக்தாத்தில் கிடைத்த புதிய வேலைக்குச் சென்றுவிடுகின்றார் வால்டர் ஃபாபர்.

இப்படியாக இக்கதை நகர்ந்து, இத்தாலியில் இருந்து கிரீ ஸில் உள்ள பட்ராஸ் நகருக்கு காரில் செல்லும் போது, ஃபேபர், சபெத்தின் தாய் தனது முன்னைய காதலி ஹன்னா என்பதை அறிந்து கொள்கிறார். சபேத் தனது உயிரியல் மக ளாக இருக்கலாம் என்பதை அவர் மனம் ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. அதனால் அவள் தன் மகளாக இருக்க முடியாது என்ற முடிவுக்கு வரும் வரை அவள் பிறந்த தேதி யைத் துருவித் துருவிக் கணக்கிட்டுப் பார்க்கின்றார்.

தற்செயலாகச் சபேத்துடன் உறவாகி கிரேக்க நாட்டில் இரு வரும் பயணப்படுகின்றனர். அங்குசென்ற மறுநாள், ஃபாபர் கடலில் நீந்திக் கொண்டிருக்கும் போது, சபேத்தை பாம்பு கடித்துவிடுகின்றது. கடி காயத்தை உறிஞ்சி, சபேத்துக்கு விரைவில் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க தன்னால் முடிந்த அனைத்தையும் செய்கிறார்.

ஏதென்ஸில் உள்ள அந்த மருத்துவமனையில் ஹானாவைச் சந்திக்கிறார். சபேத்துடன் தான் உடலுறவில் இருந்ததை ஃபாபர் ஹன்னாவிடம் ஒப்புக்கொள்கின்றார். இருபது ஆண் டுகளுக்கு முன்பு ஹன்னாவிற்கு ஃபாபர் மூலம் கருத்தரித்த தையும் அதனைக் கலைத்துவிடாமல் சபேத்தினைப் பெற்றெ டுத்ததையும் ஹன்னா ஃபாபரிடம் கூறுகின்றாள். சிகிச்சை பயனின்றி சபேத் இறந்துவிடுகின்றாள். இதனைப் படிக்கும் போது உங்களுக்குத் தமிழ்த் திரைப்படங்களின் நினைவு வரக்கூடும். தமிழ்த் திரைப்படங்களில் இப்படியான பாத்தி ரங்களைக் கொன்றுவிடுவது சகஜமானது. ஆனால் இந்நாவ லாசிரியரின் சொந்த வரலாற்றில் யூதப் பெண்ணுடன் உற வில் இருப்பதும், திருமணம், அதன் பின் உடனடி முறிவு என்பனவும் பதிவு செய்யப்பட்டிருகின்றது. எனவே இந்நாவ லின் பெரும்பகுதி, மக்ஸ் ஃபிறிஸ் அவர்களின் சொந்த வாழ்க்கை வரலாறே என்றும் விமர்சகர்கள் தம் கருத்தினை முன்வைக்கின்றனர்.

ஃபாபருக்கு புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்படுகின் றது. அது ஒரு சத்திரசிகிச்சை மூலம் குணப்படுத்திவிடலாம் என்பது மருத்துவர்கள் நம்பிக்கை. ஆனால் இறுதி முடிவு நாவலில் தெரிவிக்கப்படவில்லை. அவர் இறந்திருக்கலாம்... அல்லது சிகிச்சையில் தேறியிருக்கலாம். அறிவின் மூலம் எல்லாவற்றையும் புரிந்துகொண்டுவிடமுடியும் என்று யாந்திரீ கமாகத் தன் வாழ்வைக் கடக்கும் ஒரு மனிதனின் படிப்படி யான மாற்றத்தினையே இந்நாவலில் காண்கிறோம்.



suseendran.n@thaiveedu.com

# விஞ்ஞான மெய்யியலின் வளர்ச்சியும் வரலாறும்

ஆங்கில மூலம் : ஜயதேவ உயன்கொட
தமிழில் : க. சண்முகலிங்கம்

ஆராய்ச்சி முறையியல் மெய்யியலுடன் நெருங்கிய தொடர்புடையது. அறிவின் உற்பத்திக்குத் துணையாக அமையும் முறையியல்களினதும், அணுகுமுறைகளினதும் அடிப்படையான எண்ணக்கருத்துகளை (Concepts) ஆராய்ச்சி முறையியல் தெளிவாக்குகிறது. அது அடிப்படையான வினாக்களை எழுப்புகிறது. அவற்றிற்கான விடைகளையும் வழங்குகிறது. இவ்வகையில் விஞ்ஞானம் செல்லவேண்டிய பாதையைக் குறித்துக் காட்டி விஞ்ஞானத்தை வழிநடத்துகிறது. ஆயினும் விஞ்ஞான அறிவின் உற்பத்தி தொடர்பான பிரச்சினைகள் எவற்றிலும் மெய்யியலாளர்களிடையே கருத்தொற்றுமை கிடையாது. அவர்கள் பல்வேறு விடயங்களில் ஒருவருக்கொருவர் முரண்பட்ட கருத்துக்களை உடையவர்களாக இருக்கிறார்கள். மெய்யியலாளர்களின் கருத்து வேறுபாடுகள், அறிவின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் சமூகத்திலும் பரவியுள்ளது. இதன் விளைவாக விஞ்ஞானிகள் அறிவின் உற்பத்தியின் போது தாம் கையாளும் முறைகள் (Methods) குறித்து முரண்பட்ட கருத்தை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். விஞ்ஞானிகளிடையே காணப்படும் முரண்பாடுகள்கள ஆய்வின்போது கையாளப்படும் முறைகள் பற்றியதாக மட்டுமன்றி, மனித அறிவின் இயல்பு யாது? அறிவைப் பெறும் செயல்முறை யாது? உண்மை என்றால் என்ன? போன்ற பல்வேறு விடயங்கள் குறித்தும் உள்ளடக்கியதாக விரிவடைந்துள்ளது. இவை தொடர்பான கோட்பாட்டு விவாதங்கள் இயற்கை விஞ்ஞானங்களிலும், சமூக விஞ்ஞானங்களிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இவ்விவாதங்கள் விஞ்ஞானத்தின் மெய்யியல் (Philosophy of Social Science) பற்றிய விவாதங்கள் என அழைக்கப்படும்.

இக்கட்டுரையில் விஞ்ஞானத்தின் மெய்யியல் பற்றிய விவாதங்கள் பற்றி விளக்கிக்கூறப்படும். கட்டுரையின் முற்பகுதியில் அனுபவ வாதம் (Empiricism) என்னும் சிந்தனையின் தோற்றம் பற்றியும், அதன் பயனாகச் சமூகவியலில் நேர்க்காட்சி வாதம் (Positivism) என்னும் அணுகுமுறை தோற்றம் பெற்றதும் விளக்கப்படும். நேர்க்காட்சி வாத மரபு மெய்யியல் துறையில் ஏற்படுத்திய தாக்கங்களைப் பற்றி அடுத்துச் சுருக்கமாக எடுத்துக்கூறப்படும். இறுதியில் அனுபவ வாதம், நேர்க்காட்சி வாதம் என்ற இரண்டிற்கும் எதிராகக் கிளம்பிய மெய்யியல் போக்குகள் பற்றி விபரித்துக் கூறப்படும்.

## அனுபவவாதம்:

17-ம் நூற்றாண்டில் நவீன விஞ்ஞானம் தோன்றியது. இது அனுபவ வாதம் (Empiricism) எனப்படும் தனித்துவமான முறையில் சட்டகத்தின் அடிப்படையில் தோற்றம் பெற்றது. இவ்விஞ்ஞானத்தின் தோற்றத்துடன் மனிதரின் அறிவு பற்றியும் அறிவைப் பெறும் முறைகள் பற்றியும் மெய்யியலாளர்களிடையே விவாதங்கள் எழுந்தன. 17-ம் நூற்றாண்டு முதல் 19-ம் நூற்றாண்டு வரை இடம்பெற்ற இவ்விவாதங்கள் ஆராய்ச்சி முறைகள் (Reserach Methods) பற்றிய பிரச்சினைகளை மையப்படுத்தியனவாய் அமைந்தன.

அனுபவவாதம், அறிவின் உற்பத்தி பற்றிய குறித்தவொரு முறையைச் சுட்டுகிறது. அவதானிப்பு (Observation) அல்லது பரிசோதனை மூலம் பெறப்பட்ட தரவுகளை கொண்டு விஞ்ஞானக்கூற்றுகளும், கோட்பாடுகளும் உருவாகின்றன என்பது இம்முறையின் சாராம்சமான கருத்தாகும். இம்முறையின் பிரதான எடுகோள் அனுபவத்தின் மூலம் மட்டுமே உண்மையான, வலிதுடைய அறிவைப்பெறலாம் என்பதாகும். அனுபவம் என்றால் 'புலன்களால் பெறப்படுவது' எமது புலன்கள் மூலம் அவதானிப்பு செய்யப்படுகிறது என்பது பொருள். பார்த்தல், கேட்டல், ஒரு பொருளைத் தொடுதல் என்பன மூலம் அறிவைப் பெறுகிறோம். புலன்களால் பெறப்படாதவையும், பரிசோதனைகள் மூலம் பெறப்படாதவையுமான அறிவை வலிதுடைய அறிவு (Valid Knowledge) என அனுபவவாதம் ஏற்பதில்லை. அவ்வாறான அறிவு அவதானிப்பின் மூலமோ அல்லது பரிசோதனையின் மூலமே உண்மையென உறுதிப்படுத்த முடியாததும் ஆகும் என அனுபவாதம் கூறும். ஐரோப்பிய மெய்யியல் மரபில் அவதானம், பரிசோதனை என்பன மூலம் பெறப்படும் அறிவு பற்றிய நெறிமுறைக்குட்பட்ட விளக்கத்தை தந்தவராக ஆங்கில நாட்டினரான பிரான்சிஸ் பேக்கன் (1561- 1626) கருத்தப்படுகிறார். 'விஞ்ஞான முறை' (Scientific Method) என்பதை ஒரு முறையியலாக வடிவமைத்தவர் என்ற பெருமை பிரான்சிஸ் பேக்கனுக்கு உரியதாகும். அக்காலத்தில் இயற்கை விஞ்ஞானத்துறை அறிஞர்கள் எவ்வாறு தமது விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொண்டார்கள் என்பதை பேக்கன் எடுத்துக்காட்டினார். அதனை பொருத்தமான மெய்யியல் கலைச்சொற்களை உபயோகித்து அவர் விளக்கம் கொடுத்தார். அவருக்குப் பின் வந்த மெய்யிலாளர்கள் அனுபவவாத முறையின் (Empiricist

Method) வலிதுடமை பற்றிய உரையாடலைத் தொடர்ந்து அதனைச் செழுமைப்படுத்தினர். பௌதீகவதீதம் அல்லது புலன் கடந்த அறிவு (Metaphysics) பகுத்தறிவு முறையை (Deductive Method) அறிவைப் பெறும் முறையாகக் கொள்கிறது இதற்கு மாறாக விஞ்ஞானிகள் தொகுத்தறிமுறையைக் (Inductive Method) கையாண்டு அறிவைப் பெறுகின்றனர். தொகுத்தறி முறையே விஞ்ஞான முறை என பேக்கன் வாதிட்டார். 'விஞ்ஞானம்' என்பதையும் புலன் கடந்த அறிவு (Metaphysics) என்ற இரண்டையும் ஒன்றில் இருந்து மற்றதை வேறுபடுத்திக் காட்டும் வகையில் அவற்றின் தனித்துவ இயல்புகளைச் பேக்கன் சுட்டிக்காட்டினார். அவரால் விளக்கப்பட்ட தொகுத்தறிமுறை என்னும் தருக்கவியல் (Logic) அனுபவவாதத்தின் அறிவாராய்ச்சியல் அடிப்படைகளை (Epistemological Foundations) நிறுவியது. தொகுத்தறிமுறையின் இருகூறுகள் கவனிப்புக்குரியவை. அ) அவதானிப்பின் மூலம் உலகைப் பற்றிய பெறப்படும் சான்றுகளைக் கொண்டே உண்மையானதும், நம்பத்தகுந்ததுமான அறிவைக் கட்டமைக்க முடியும். ஆ) இவ்வாறான அனுபவச் சான்றுகள் மூலம் அறிவைப் பெறும் செயல்முறை, தனித்தனியான விடயங்கள் பற்றிய பரிசீலனையில் தொடங்கிப் பொதுப்பட்ட முடிவுகளை (Generalised Conclusions) அடைவதற்கு வழிவகுக்கின்றது. இது பொதுப்பட்ட முடிவுகளில் ஆரம்பித்து தனித்தனி விடயங்களிற்கு அம்முடிவுகளைப் பொருத்திப்பார்க்கும் பகுத்தறி முறைக்கு (Deductive Method) முற்றிலும் மாறானது. பகுத்தறிமுறை முன்கூட்டியே இருந்துவரும் பொதுமுடிவுகள் (Preexisting Generalisations) இருப்பதாகக் கொள்கிறது. அத்தகைய முன்கூட்டியே இருந்துவரும் முடிவுகளே உண்மையானது. வலிதுடையது என்றும் பகுத்தறிமுறை மெய்யியலாளர்கள் கூறுவர். அரிஸ்டோட்டலின் தருக்கவியல் முன்கூட்டியே இருந்துவரும் பொதுமுடிவுகளை உண்மையெனவும், வலிதுடையதெனவும் ஏற்பதாய் இருந்தது. ஐரோப்பாவில் கிரேக்க மெய்யியலாளர் முதலாக நீண்டகாலம் செல்வாக்குச் செலுத்திய புலனறிவு கடந்த மெய்யியலினதும், சமயச் சிந்தனையினதும் அடிப்படையாக பகுத்தறிவு தருக்கவியல் இருந்து வந்தது. பிரான்சிஸ் பேக்கன் இத்தருக்கவியலின் அடிப்படைகளைக் கேள்விக்குட்படுத்தியதோடு, மாற்று முறையான தொகுத்தறி-அனுபவவாத முறை (Inductive - Empiricist Method) என்றும் முறையை அறிமுகம் செய்தார். அவருக்குப்பின் வந்தவர்களான

- ரெனே டேக்கார்ட் (1596-1651)
- யோன் லொக் (1632-1704)
- டேவிட் ஹ்யூம் (1711-1776)

ஆகியோர் பேக்கனின் விஞ்ஞானமுறை மேலும் திருத்தமும், செப்பமும் பெற வைப்பதற்கான விளக்கங்களைத் தந்தனர். இதனால் அனுபவவாத விஞ்ஞானமுறை உருவாக்கம் பெற்றது. பேக்கன் அளித்த வரைசட்டமும், விஞ்ஞான நடைமுறையும், பகுத்தறிவு நோக்கும் இம்முறை சிறப்பான வடிவத்தை பெறப்பெரிதும் உதவியது.

## சமூக விஞ்ஞானங்களில் அனுபவவாதம்:

இயற்கை விஞ்ஞானங்களில் விஞ்ஞானமுறை 17-ம் நூற்றாண்டில் புகுந்தது என்பதை மேலே குறிப்பிட்டோம். இயற்கை விஞ்ஞானங்கள் மெய்யியலில் காட்டிய ஆர்வமும், மெய்யியல் இயற்கை விஞ்ஞானங்களில் காட்டிய ஆர்வமும் கூடப் பழமையானது தான். ஆனால் இதற்கு மாறாக சமூக விஞ்ஞானங்களில் விஞ்ஞானமுறை மிக அண்மைக் காலத்தில்தான் புகுந்தது. 19-ம் நூற்றாண்டில்தான் சமூகவிஞ்ஞானங்களில் விஞ்ஞான முறை பிரயோகிக்கப்பட்டது. அத்தோடு சமூகம் பற்றிய கல்வியை 'விஞ்ஞானம்' என்றும் அறிஞர்கள் கூறத்தொடங்கினர். 18-ம் 19-ம் நூற்றாண்டுகளில் பௌதிகம், வானியல், உயிரியல் இரசாயனவியல் ஆகிய துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சி இயற்கை உலகு பற்றிய மனிதரின் அறிவில் பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தியது. இதனைக் கண்ணுற்ற சமூக சிந்தனையாளர் பலர் இயற்கை விஞ்ஞானங்களில் உபயோகிக்கப்பட்ட விஞ்ஞான முறையை சமூக விஞ்ஞான ஆய்விலும் பிரயோகித்தல் வேண்டும், அதன்மூலம் சமூகத்தைப் பற்றிய நெறிமுறைக்குட்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்படலாம். அது நன்மை பயப்பது என வாதிட்டனர். விஞ்ஞானமுறையை சமூகம் பற்றிய கல்விக்குப் பிரயோகித்ததன் பயனாக 'சமூகம் பற்றிய விஞ்ஞானம்' எனப்படும் சமூகவியல் தோற்றம் பெற்றது. ஆகஸ்ட் கம்ட் (Auguste Comte) (1798-1857) எமில் தர்க்கீம் (Emile Durkheeim) (1858-1917) ஆகியோர் சமூகத்தை விஞ்ஞான முறையில் ஆய்வு செய்வதை அறிமுகம் செய்தனர். பிரான்ஸ் தேசத்தவர்களான இவ்விரு முன்னோடிகளும் அனுபவாத அனுமானங்களின் படியான முறையியலை கட்டமைத்தனர்.

மனித சமூகத்தைக் கற்பதற்கு இயற்கை விஞ்ஞான முறையைப் பயன்படுத்தும் நோக்குமுறையை ஆகஸ்ட் கம்ட் 'நேர்க்காட்சி வாதம்' (Positivism) என்ற சொல்லால் அழைத்தார். காலப்போக்கில் ஐரோப்பாவில் நிகழ்ந்த அறிவாராய்ச்சியல், ஆராய்ச்சி முறையியல் விவாதங்களின் பெறுபேறாக 'நேர்காட்சி வாதம்' சமூக விஞ்ஞான முறையியலாக நிலைபெற்றது. அனுபவவாதம், நேர்க்காட்சி வாதமாக உருமாற்றம் பெற்றது. இயற்கை விஞ்ஞானங்களின் அனுபவவாத விஞ்ஞான முறை சமூக விஞ்ஞானங்களிலும் பிரயோகிக்கப்பட்டது. 1895-ம் ஆண்டு 'The Rules of the Sociological Method' (சமூகவியல் (ஆராய்ச்சி) முறையின் விதிகள்) என்ற நூலைப் பிரஞ்சு மொழியில் எழுதினார். இந்த நூலில் அவர் நேர்க்காட்சி வாத முறையியலின் (Positivist Methodology) அடிப்படைகளை நிறுவினார். நேர்க்காட்சிவாத முறையில் அவர் கொண்டிருந்த நம்பிக்கை இந்நூலில் வெளிப்பட்டது.

நேர்க்காட்சிவாதம் சமூகவியலில் ஒரு முறையியலாக ஏற்புடமை பெற்றபின் மெய்யியலில் ஆர்வம் கொண்டவர்களான சமூகவியலாளர்கள் இரண்டு விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வாதங்களைக் கூறலாயினர்.

- சமூகவிஞ்ஞானங்கள் இயற்கை விஞ்ஞானங்கள் காட்டிய வழியில் பயணிக்கவேண்டும் என்ற விடயத்தை அழுத்திக் கூறினர். (இதனை Naturalist Orientation of the Social Science என்ற ஆங்கிலர் தொடரால் குறிப்பிடலாம்).
- இயற்கை விஞ்ஞானங்கள் காட்டிய வழியில் பயணிப்பதோடு மட்டுமல்லாது, இயற்கை விஞ்ஞானங்களின் 'விஞ்ஞானமுறை'யை சமூக விஞ்ஞான ஆய்வில் பயன்படுத்த

வேண்டும் என்றும் கூறினர். 'முறையின் ஒருமை' (Unity of Method) என்ற வாதம் என இதனைக் கூறலாம். இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் என்ற இரண்டிற்கும் தனித் தனியான முறைகள் இருத்தல் முடியாது. ஒரே ஒருமுறை தான் உள்ளது. அதுவே விஞ்ஞான முறை என்பது இதன் பொருள்.

அடுத்து நேர்காட்சிவாத முறையியல் 20-ம் நூற்றாண்டில் எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்ட அறைகூவல்கள் பற்றி நோக் குவோம்.

## நேர்க்காட்சி வாதம் எதிர்கொண்ட அறைகூவல்கள்:

நேர்க்காட்சிவாதம் ஒருமுறையியலாக வளர்ச்சிபெற்றுக் கொண்டிருந்த வேளை அதற்கு எதிரான வாதங்களும் முன்




வைக்கப்பட்டன. 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜெர்மனி தேசத்தவர்களான மெய்யியலாளர்களால் நேர்க்காட்சிவாதம் குறித்த பெரும் விவாதம் ஒன்று தொடக்கப்பட்டது. அவர்கள் சமூகவிஞ்ஞானங்களை இயற்கை விஞ்ஞானங்களின் வழியில் எடுத்துச்செல்வதையும், 'முறையின் ஒருமை' என்று கூறுவதை யும் நிராகரித்தனர். அவர்கள் காட்டிய எதிர்ப்பு ஆராய்ச்சி முறையியல் சார்ந்தது மட்டுமல்லாது அறிவாராய்ச்சியியல் (Epistemology) உள்பொருளியல் (Ontology) என்பன சார்ந் ததாகவும் அமைந்தது. இயற்கை உலகம் வேறு, மனிதர் உலகம் வேறு இரண்டையும் பற்றிய ஆராய்ச்சியில் இயற்கை விஞ்ஞான முறையை மட்டும் உபயோகிப்பது பொருந்தாது. தவறானது என இவ்விமர்சகர்கள் குறிப்பிட்ட னர். ஆய்வுப் பொருளும் இருதுறைகளிலும் வேறுபட்டன. சமூகவிஞ்ஞானங்களில் 'சிந்திக்கும் மனிதர், செயல்களில் ஈடுபடும் மனிதர்' ஆய்வுக்குரிய பொருளாக விளங்குகின்ற னர். மனிதர் புற உலக யதார்த்த நிலைமைகளைத் தம் செயல்களால் மாற்றியமைக்க வல்லவர்கள், அவர்களின் சிந் தனைக்கு செயல் வடிவம் கொடுக்கப்படுகிறது. மனிதர்களின் நடத்தை நோக்கம் கருதியது. தாம் மனதில் எண்ணியதை செயல்மூலம் அடையும் நோக்கை கொண்டதாக, இலக்கு நோக்கியதாக அவர்களின் நடத்தை அமைகிறது. மேலும் சமூக விஞ்ஞானங்களின் அறிவு மதிப்பீடுகள் அல்லது விழு மியங்கள் சாராததாக (Value-free) இருப்பதில்லை. அவை மதிப்பீடுகள் அல்லது விழுமியங்கள் தொடர்பாக நடுநிலை (Value - Neutral) வகிப்பனவும் அல்ல. 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மெய்யியலாளர்களிடையே நடைபெற்ற முறை யியல் குறித்த பெரும் விவாதம் Methodensreit என்றும் ஜெர் மன் மொழிச்சொல்லால் அழைக்கப்படும். இதன் பொருள் 'முறைகுறித்த சச்சரவு' (Clash over Method) என்பதாகும்.

19-ம் 20-ம் நூற்றாண்டுகளில் சமூக விஞ்ஞானங்களில் இயற்கை விஞ்ஞான ஆய்வுமுறையினைப் புகுத்துவதற்கு எதிரான மாற்றுக் கருத்துக்களை முன்னணி மெய்யியலாளர் கள் பலர் எடுத்துக் கூறினர்.

- வில்கெம் டில்தே (Wilhelm Dilthey) (1883 - 1911)
- எட்மன்ட் ஹீர்ஸரல் (Edmond Husserl) (1859 - 1938)
- மார்ட்டின் கீட்கர் (Martin Heidgger) (1889 - 1976)
- ஹன்ஸ் ஜோர்க் கடமர் ( Hans - Georg Gadamer) (1900 - 2002)
- ஜீன் போல் சாத்தர் (Jean Paul Sarter) (1905 - 1980)
- மோரிஸ் மெர்லோ பொன்டி (Mourice Merlfau Ponty) (1908 - 1961) என்போரும், அண்மைக்காலத்தவர்களான
- யூர்ஜென் ஹெபர்மாஸ் Jurgen Habermas (1929)
- சாள்ஸ் ரெய்லர் (1931)

என்போரும் குறிப்பிடத்தக்க முன்னணி மெய்யியலாளர்கள் ஆவர்.

ஐரோப்பாவில் நேர்காட்சி வாதத்திற்கு எதிராகத் தோன்றிய மெய்யியல்களுள். காலத்தால் முற்பட்டவையாக பொருள் கோளியல் (Hermeneutics) தோற்றப்பாட்டியல் என்ற இரண் டைக் குறிப்பிடலாம். சமூக விஞ்ஞானங்களை பொருள்கோ ளியலுடன் இணைக்கும் பணியைத் தொடக்கி வைத்தவர் வில்கெம் டில்தே ஆவர். அவர் ஐரோப்பாவின் 19-ம் நூற் றாண்டு மனிதாய மெய்யியலின் மரபில் வந்தவர். இயற்கை உலகை ஆராய்வதற்காக இயற்கை விஞ்ஞானிகள் பயன்ப

டுத்திய விஞ்ஞானமுறையை மனிதாய மெய்யியலாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மனிதசமூகத்தைப் பற்றிய புரிதல் அதற்கேயுரிய அர்த்தங்கள் ஊடாகவே பெறக்கூடியது என அவர்கள் கருதினர். நேர்க்காட்சி வாதம் கூறுவதுபோல் அவை புறநிலையானவை அல்ல. மாறாக அவை அகநிலைப்பட்டவை எனக்குறிப்பிட்டனர். மனித சமூகத்தைப் பற்றியனவும், வரலாறு பற்றியனவும் மனித உணர்வுநிலையின் விளைபொருள் என்றும் குறிப்பிட்டனர். பொருள்கோளியல் சிந்தனையின் அடிப்படையில் டில்தே புதியதொரு பொருள்கோளியல் முறையை வடிவமைத்தார். அவரது பொருள்கோளியல் முறை மனித நடவடிக்கைகளின் புறநிலையான பௌதீகக் கூறுகளின் கவனம் குவிப்பதற்குப் பதில் உள்ளக (Internal) விடயங்களான உளவியல் நடவடிக்கைகளின் மீது கவனம் குவிப்பதாக அமைந்தது. 20-ம் நூற்றாண்டில் ஹன்ஸ் ஜோர்க் கடாமர், யுர்ஜென் ஹெபர்மாஸ், போல்றிக்கர் ஆகிய சிந்தனையாளர்கள் பொருள்கோளியலை மேலும் செழுமைப்படுத்த உதவினர்.

இருபதாம் நூற்றாண்டில் தோற்றப்பாட்டியல் (Phenomenology) என்றும் மெய்யியலும் மனித சமுதாயம் பற்றிய கல்வியில் ஆர்வத்தை தூண்டுவதாய் அமைந்தது. பொருள்கோளியல் போன்றே தோற்றப்பாட்டியலும் நேர்க்காட்சி வாதத்தைச் சமூகவிஞ்ஞான ஆய்வில் புகுத்துவதற்கு மறுப்பாக மனிதாய வாதத் தரப்பில் இருந்து எழுந்த எதிர்விணையாக அமைந்தது. எட்மன்ட் ஹீர்ஸரல் என்ற ஜெர்மனிய தேசத்தவர் இம் மெய்யியலினைத் தொடக்கி வைத்தவர் எனக் கருதப்படுகிறார். இவர் விஞ்ஞானத்தின் அனுபவவாத முறைக்கு மாறுபட்ட மெய்யியல் நோக்குமுறையை முன்வைத்தார். புறவயப்பட்ட காரணகாரிய விளக்கத்திற்கு மாறாக அகவயப்பட்ட விளக்கங்களை எட்மன்ட் ஹீர்ஸரல் முன்வைத்தார். அகநிலை எதிர்புறநிலை என்ற பிரிவினையில் இவர் அகநிலையின் பக்கம் சார்ந்து நின்றார். இவரின் தோற்றப்பாட்டியல் கோட்பாடு மனித அகநிலையைப் புரிந்து கொள்வதற்கான முறையியலை வகுப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. யேர்மனியைப் பூர்வீகமாகக் கொண்ட அமெரிக்கரான அல்பிரட் சூட்ஸ் (Alfred Schutz) சமூகவியலில் தோற்றப்பாட்டியல் முறையியலை மேலும் வளர்ப்பதற்கு உதவினார்.

19-ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் தோற்றம் பெற்ற பொருள்கோளியல், தோற்றப்பாட்டியல் என்னும் இரு மெய்யியல்களும் பின்னர் சமூக விஞ்ஞானங்களிலும் மனிதப் பண்பியல் துறையிலும் (Humanities) பின்நேர்க்காட்சிவாத முறையியல்கள் (Post Positivist Methodologies) தோன்றுவதற்கு வழி வகுத்தன. தோற்றப்பாட்டியல் சமூகவியல் (Phenomenological Sociology), எத்னோ மெதடோலொஜி (Ethno methodology) பொருள்கோளியல் (Hermeneutics) இனவரைவியல் (Ethnography) என்பன பின்நேர்க்காட்சிவாத முறையியல்களில் முக்கியமானவை.

பிராங்போர்ட் பள்ளியின் விமர்சனக் கோட்பாடு (Critical Theory) 1940-களில் சமூகவியலிலும் அரசியலிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய முறையியலாகும். விமர்சனக் கோட்பாடு முதலில் 20-ம் நூற்றாண்டின் நேர்க்காட்சி வாதத்திற்கு எதிர்வினையாகத் தோன்றியது. பின்னர் அது மேற்குறித்தவாறு சமூகவியலினதும் அரசியலினதும் முறையியலாக உருப்பெற்றது. மார்க்சிசமும் நேர்க்காட்சி வாதத்திற்கு எதிரான மெய்யியல், முறையியல் விமர்சனத்தை முன் வைத்தது. ஆயினும் ஏனைய பின்நேர்க்காட்சிவாத முறையியல்களின் பொதுப்பட்ட இயல்புகள் மார்க்சியத்தில் காணப்படவில்லை. ஆகையால் அது ஏனைய முறையியல்களில் இருந்து வேறுபட்ட இயல்புகள் சிலவற்றைக் கொண்டுள்ளது.

## நேர்க்காட்சி வாதம் சமூக விஞ்ஞானத் துறையில் மீள் எழுச்சி பெறுதல்:

மேற்குறித்தவாறு 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பின் நேர்க்காட்சிவாத முறையியல்கள் சமூக விஞ்ஞானங்களிலும், மெய்யியலிலும் அடிப்படைச் சிந்தனைகளை உருவாக்கிக் கொண்டிருந்த வேளை, அவற்றிற்குச் சமாந்தரமாக அனுபவாதம், நேர்க்காட்சி வாதம் என்பனவற்றின் மெய்யியலில் பெருமுன்னேற்றம் ஏற்பட்டது. இப்பெருமுன்னேற்றத்தின் பயனாக தருக்கமுறை நேர்க்காட்சி வாதம் (Logical Positivism) என்ற மெய்யியல் தோற்றம் பெற்றது. இயற்கை விஞ்ஞானங்களிலும், சமூக விஞ்ஞானங்களிலும் மிகுந்த செல்வாக்குள்ள முறையியல் நோக்குமுறையாக தருக்கமுறை நேர்க்காட்சிவாதம் எழுச்சி பெற்றது.

இம்மெய்யியலாளர்கள் 'வியன்னா வட்டம்' (Viennia Circle) என்ற சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்தவர்கள். ஆஸ்திரியா நாட்டின் தலைநகரான வியன்னாவை மையமாகக் கொண்டியங்கிய இம்மெய்யியலாளர்கள்,

- கணிதவியல் மெய்யியல் (Philosophy of Matheimatics)
- விற்ஜென்ஸ்டீன் (Wittgenstein) சிந்தனைகள் (விற்ஜென்ஸ்டீன் முதலில் கூறிய கருத்துக்களை பின்னர் திருத்தி வேறு வகையில் கூறினாரென்பர். வியன்னா வட்டத்தினர் விற்ஜென்ஸ்டீன் முதலில் கூறியவற்றையே ஏற்றனர். ஆகையால் Thinking of Eary wittgenstein என்று கூறுவதே சரியானது).

என்ற இரண்டினதும் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாய் இருந்தனர். இவ்விரண்டினதும் வாதங்கள் வியன்னா வட்டத்தின் மெய்யியலின் இரு பண்புகளை தீர்மானிப்பனவாக அமைந்தன. முதலாவதான கணிதவியல் மெய்யியல் முழுமையாக விஞ்ஞானப் பண்புடையது, அதன்படி சமூக விஞ்ஞானங்களினதும், மனிதப்பண்பியல் துறையினதும் ஆய்வுகள் புலன் கடந்த அபௌதீகம் சாராததாக (Totally Free of Metaphysics) அமைதல் வேண்டும். தருக்கவியல் நேர்க்காட்சி வாதத்தின் முதலாவது அடிப்படைப் பண்பு அதன் விஞ்ஞானமுறை. இதற்கேற்ப பௌதிகவியல் போன்ற இயற்கை விஞ்ஞானமொன்றின் படியான விஞ்ஞான முறையியலை அம்மெய்யியல் முன்வைத்தது.

வியன்னா வட்டத்தினரின் இரண்டாவது வாதம் விஞ்ஞானக் கூற்றுக்களை அபௌதீகம் சார் மொழியியல் தவறுகள் இல்

லாத விஞ்ஞான மொழியின் (Scientific Language that was free of Linguistic Mistakes of metaphysics) கூறுதல் வேண்டும் என்பதாகும். சுருங்கக்கூறின் கணிதவியல் மெய்யியல், விற்ஜென்ஸ்டீன் மொழிச் சிந்தனை என்ற இரண்டு வாதங்களின் அடிப்படையிலான முறையியலாக இது அமைந்தது. வியன்னா வட்டத்தினர் இவற்றின் அடிப்படையில் 'விஞ்ஞானங்களின் ஒருமை' (Unity of Science) என்ற கருத்தை முன்வைத்தனர். 'விஞ்ஞானங்களின் ஒருமை' என்ற இக்கருத்து 'ஒன்றிணைந்த விஞ்ஞானம்' (Unified Science) எனவும் கூறப்பட்டது.

1920களில் தோற்றம் பெற்ற வியன்னா வட்டத்தின் தருக்க முறை நேர்க்காட்சி வாதம் 1960கள் வரை செல்வாக்குடையதாக இருந்தது. அதன் மெய்யியலும் முறையியலும் சமூக விஞ்ஞானங்கள் மீது மேலாண்மை பெற்றிருந்தது, 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சமூக விஞ்ஞானங்களில் எற்பட்ட திருப்பத்திற்கு முதல் விஞ்ஞானத் திருப்பம் என்று அழைத்தால் 1920 களுக்கும் 1950 களுக்கும் ஏற்பட்ட வியன்னா வட்டத்தின் தாக்கத்தை இரண்டாவது விஞ்ஞானத்திருப்பம் (Second Scientific Turn) என அழைக்கலாம். இக்காலத்தில் பொருளியல் சமூகவியல் அரசியல் விஞ்ஞானம் உளவியல் என்பன தருக்கவியல் நோக்காட்சிவாத முறையியலினால் பெரும் தாக்கத்திற்கு உள்ளாயின. இலக்கிய விமர்சனம் என்ற துறைகூட அதன் செல்வாக்கு வலயத்திற்குள் வந்தது. 'ஒன்றிணைந்த விஞ்ஞானம்' ஒன்றை இயற்கை விஞ்ஞானத்தின் மாதிரியில் கட்டமைக்கும் நோக்கத்துடன் செயற்பட்ட பொருளியலாளர்களும், சமூகவியலாளர்களும், அரசியல் விஞ்ஞானிகளும் தத்தம் சிறைகளில் தலைகீழான அடிப்படை மாற்றங்களைப் புகுத்தினர். இவ்வாறு சமூக விஞ்ஞானங்களில் தருக்கவியல் நேர்க்காட்சிவாதத்தின் செல்வாக்கு உச்சத்திற்குச் சென்றதன் விளைவாக அதற்கு எதிரான விமர்சனம் எழுந்தமையும் ஆச்சரியத்துக்குரியதாக அமையவில்லை. விஞ்ஞான மெய்யியலாளர்களான கார்ல் பொப்பர், தோமஸ் கூன், போல் பெயராபென்ட் (Paul Feyerabend) இம்ரே லாகடஸ் (Imre Lakatos) விமாட்குயின் (Willard Quine) என்போர் தருக்கவியல் நேர்க்காட்சி வாதத்திற்கு எதிரான முக்கியமான ஆக்கங்களை வெளியிட்டனர். இதன் பயனாக தருக்கவியல் நேர்க்காட்சி வாதத்தின் செல்வாக்குச் சரிந்தது. விஞ்ஞானத்தின் மெய்யியலிலும், சமூக விஞ்ஞானத்திலும் அதன் செல்வாக்கும் மங்கியது. மேலே இறுதியாகக் குறிப்பிட்ட நால்வர்களதும் (கார்ல்பொப்பர் - அடுத்துவரும் மூவர்) பங்களிப்பு பற்றி இங்கு சுருக்கமாக எடுத்துக் கூறுவோம். இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல் நவீன சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானம் என்ற தகுதியைப் பெறுவதற்கு அனுபவவாதமும் அதனோடு இணைந்த விஞ்ஞான மெய்யியலுமே காரணமாக அமைந்தன. இவை தொடர்பாக கார்ல் பொப்பர், தோமஸ் கூன் என்ற இருவரதும் கருத்துக்கள் ஏற்படுத்திய தாக்கத்தை இப்போது சுருக்கமாகக் காண்போம்.

கார்ல் பொப்பர் அனுபவவாத மரபின் வழி நின்று தன் சிந்தனைகளை எடுத்துக் கூறியவர். அவர் அம்மரபின் முக்கியமான தத்துவமான சரி பார்த்தல் (Principle of Verification) என்பதை நிராகரித்தார். அனுபவவாத நோக்கின்படி விஞ்ஞானம் அல்லாதனவும், அபௌதிகம் அல்லது புலன் கடந்த அறிவு என்பனவும் விஞ்ஞானத்தில் இருந்து வேறுபட்டனவாக இருப்பதன் காரணம், விஞ்ஞானம் சான்றாதாரங்களைச் சரிபார்த்தல் (Verification) மூலம் உண்மையென நிறுவுவதாலாகும் என்றனர். கார்ல் பொப்பர் சரிபார்த்தல் என்னும் இத்தத்துவத்தை கடுமையான விமர்சனத்திற்கு உட்படுத்தி விஞ்ஞானத்தையும் விஞ்ஞானமல்லாததையும் பிரிக்கும் எல்லைக்கோடு சரி பார்த்தல் மூலமாக அன்றிப் பொய்ப்பித்தல் (Falsification) மூலமே சாத்தியமாகின்றது என்றார். கார்ல் பொப்பர் 'பொய்ப்பித்தல்' என்ற கருத்தை முன்வைப்பதன் மூலம் தருக்கவியல் நேர்க்காட்சி வாதத்தின் மீது பலம் வாய்ந்த தாக்குதலைத் தொடுத்தார். இத்தாக்குதல் அக்காலத்தில் விஞ்ஞான அறிவு (Scientific Knowledge) என்றால் என்ன என்பது பற்றிக் கொண்டிருந்த நம்பிக்கையை ஆட்டம் காண வைத்தது. இது எதிர்பாராததொரு தாக்குதலாகவும் அமைந்தது. விஞ்ஞான அறிவு பற்றிய நம்பிக்கைக் குறைவு, உண்மையான அறிவு என ஒன்று இல்லை என்ற கருத்து வளர்வதற்கும் உறுதிபெறுவதற்கும் காரணமாயிற்று. விஞ்ஞானம் உண்மையை நோக்கிய பயணத்தை பொய்ப்பித்தல் என்ற கருவியின் துணைகொண்டு நடத்தும் செயல்முறை ஊடாகத் தொடர்கிறது. ஆனால் அது உண்மையை அடைவதில்லை. பொய்ப்பித்தல் மூலம் தவறுகளைக் களைதல் ஒரு தொடர் பயணம் என்ற கருத்து வலுப்பெற்றது. விஞ்ஞானம் கண்டு பிடித்துக் கூறுவன தற்காலிக உண்மைகளே என்னும் இக்கருத்து சமூக விஞ்ஞானங்கள் தொடர்பாக புதியதொரு வினாவைக் கிளப்பியது. உண்மைகள் என விஞ்ஞானம் முன்வைப்பன அனைத்தும் தற்காலிக உண்மைகளே எனின், சமூக விஞ்ஞானிகளாகிய நாம் இந்த 'மாயமான் வேட்டை' யாக அமையும் முறையியலை ஏன் தழுவிக் கொள்ள வேண்டும்? இதனைத் தழுவுவதற்கான அறிவாராய்ச்சியல் நியாயப்பாடு யாது? முறையியல் நியாயப்பாடு யாது? நேர்க்காட்சி வாதம் கூறும் இயற்கை விஞ்ஞான முறையியலை சமூக விஞ்ஞானிகளாகிய நாம் இனியும் பின்பற்ற வேண்டுமா? இவ்வினாக்கள் சமூக விஞ்ஞானிகளின் மூளையைக் குடைந்தெடுக்கும் வினாக்களாயின.

பொப்பரின் கருத்துக்களின் தாக்கம் இவ்வாறாக இருக்க, தோமஸ் கூன் முன்வைத்த கருத்துக்கள் பொப்பரை விடப்பலமான தாக்கத்தைத் தருவனவாக அமைந்தன. தோமஸ் கூன் நவீன விஞ்ஞானத்தையும், உண்மை அறிவை பெறும் வழிமுறையான அறிவு ஆராய்ச்சியல் தன்னிடம் உள்ளதாக நவீன விஞ்ஞானம் கருதுவதையும் கேள்விக்கு உள்ளாக்கும் விமர்சனங்களை முன்வைத்தார். அவரது முதன்மைக் கருத்து 'விஞ்ஞானப் புரட்சிகள்' (Scientific Revolutions) என்பதாகும். 'விஞ்ஞான உண்மைகள்' கோட்பாடுகளில் தங்கியிருப்பவை, கோட்பாட்டு முறையியல் வரலாற்றுப் பின்புலத்திலேயே விஞ்ஞான உண்மைகள் உருவாகின்றன என அவர் கூறினார். விஞ்ஞான உண்மைகள் பற்றிய அவரது இவ்வரைவிலக்க

ணம் நவீன விஞ்ஞானத்தின் கருத்தியலையும், அதன் பின்பு லத்தில் ஒருமித்த விஞ்ஞானம் என்ற அதன் செயல்திட்டம் மறைந்திருப்பதையும் எடுத்துக் காட்டியது. நவீன விஞ்ஞா னக் கருத்தியலின் அனுமானங்களாக.

- விஞ்ஞான உண்மைகள் புறநிலையானவை.
- அவை கோட்பாட்டில் தங்கியிருப்பனவல்ல, சுதந்திரமா னவை (Theory Independent).
- அவை எல்லாக் காலத்திற்கும் பொதுவான உண்மைகள் (Trans Historical).

என்ற மூன்று விடயங்கள் அமைந்திருப்பதை அவர் எடுத்துக் காட்டினார். தருக்கவியல் நேர்க்காட்சி வாதத்தின் மேலாண் மையை எதிர்த்து அறைகூவல் விடுத்தவர்களான பின் நேர்க் காட்சி வாதச் சிந்தனையாளர்கள் தோமஸ் கூனின் கருத்துக் களை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். தருக்கவியல் நேர்க் காட்சி வாதத்தை சூழ்ந்திருந்த விஞ்ஞானம், கணிதம், தருக் கம், இயற்கை விஞ்ஞானங்களின் முறை ஆகியன அதற்கு ஒரு பெரும் தகுதியையும் மதிப்பையும் கொடுத்திருந்தன. இம்மதிப்பையும், தகுதியையும் நேர்க்காட்சிவாதம் இழக்க வேண்டி ஏற்பட்டது.

நாம் முன்னர் குறிப்பிட்டது போல் 1960-களில் தருக்கவியல் நேர்க்காட்சி வாதமும், வியன்னா வட்டமும் செல்வாக்கிழந் தன. அவற்றின் அனுபவவாதம் என்ற செயற்திட்டம் தோற்க டிக்கப்பட்டது. இந்தப் பின்னணியிலேயே பின் நேர்க்காட்சி வாத சமூக விஞ்ஞானங்கள் தோற்றம் பெற்றன. தருக்கவியல் நேர்க்காட்சி வாதம் 1920-1950 காலப் பகுதியில் அனுபவ வாதத்தின் தீவிரப் போக்கான எதிர்நிலைக்கு சமூக விஞ்ஞா னங்களை இட்டுச் சென்றது. இவ்வாறான எதிர்நிலை (Extremist Position) காரணமாக பிற எல்லாவகை மெய்யியல்க ளும் முறையியல்களும் ‘விஞ்ஞானம் அல்லாதன’ (Non-Science) முத்திரையிடப்பட்டு ஒதுக்கப்பட்டன. வியன்னா வட்டம் உச்சமான செல்வாக்குடன் விளங்கிய காலப்பகுதி யில், அதற்கு எதிரான கருத்துப் போரை நிகழ்த்திய பின் நேர்க்காட்சியவாத சிந்தனையாளர்கள் இருந்தனர். இச்சிந்த னையாளர்களின் மரபில் தோன்றியவர்களால் உருவாக்கப் பட்ட பின் நேர்க்காட்சி வாத முறையியல்கள் எழுச்சி பெற் றன. இவற்றுள் மார்க்சியம், பிராங்போர்ட் பள்ளியினரின் (Frankfort School) விமர்சனக் கோட்பாடு (Critical Theory), இருத்தலியம் (Existentialism) என்பன முக்கியம் வாய்ந்த கோட்பாடுகளாகும். இம்மூன்று கோட்பாடுகளும் 1930-களில் தருக்கவியல் நேர்க்காட்சிவாதத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தன. நேர்க்காட்சிவாத சமூகவியலுக்கு மாற்றீடான முறையியலை எத்னோ மெதடோலொஜி (Ethno Methodology) என்னும் சமூகவியல் பிரிவு முன்வைத்தது. இது 1970-களில் சமூகவியலில் முக்கியத்துவம் பெற்றது. சமூக விஞ் ஞானங்களின் உபபிரிவுகளில் ஒன்றாக வளர்ச்சி பெற்ற பெண்ணியவாதம் (Feminism) 1970-களில் செல்வாக்குப் பெற்றது. பெண்ணியவாதமும் தருக்கவியல் நேர்க்காட்சி வாதத்தினையும், அதன் மெய்யியல் முறையியல் என்பனவற் றையும் நிராகரித்தது. 1970-கள் பின் நேர்க்காட்சி வாத மெய் யியல்களதும் முறையியல்களதும் எழுச்சிக் காலமாகும்.

## பின் நவீனத்துவம் மெய்யியல் விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் என்பனவற்றை எதிர்த்துக் கிளம்புதல்:

சமூக விஞ்ஞானங்களில் அண்மைக் காலத்தில் பின் அமைப்பியல் (Post Structuralism) பின் நவீனத்துவம் ஆகிய மெய்யியல் நோக்கு முறைகள் தோற்றம் பெற்றன. பின்ன மைப்பியலும், பின் நவீனத்துவமும் அடிப்படை விடயங்க ளில் ஒற்றுமை உடையன. ஆயினும் சில விடயங்களில் அவற்றுக்கிடையே கருத்து முரண்பாடுகளும் உள்ளன. 17-ம் நூற்றாண்டில் நவீன விஞ்ஞானம் தோன்றியபோது விஞ்ஞா னமும் அறிவும் பற்றி நவீன விஞ்ஞானம் அடிப்படையான சில விடயங்களை எடுத்துக் கூறியது. பின் அமைப்பியலும், பின் நவீனத்துவமும் இவற்றை ‘அனைத்தையும் தழுவிய முழுமையான’ (Totalizing) முறையியல்கள் என நிராகரித் தன. 17-ம் நூற்றாண்டுக்குப் பிந்திய மேற்கத்தைய மரபில் மெய்யியல், சமூக விஞ்ஞானம், சமூகக்கோட்பாடு என்பன யாவும், அனைத்தையும் தழுவிய முழுமையான மெய்யியல்க ளுடனும் முறையியல்களுடனும் தொடர்புடையன எனவும் இவர்கள் எடுத்துக் காட்டினர். அறிவொளிக் காலத்திற்குப் பிந்திய (Post Enlightenment) மெய்யியல், சமூக விஞ்ஞானம், சமூகக் கோட்பாடு என்பன ஒருவகையான ‘விஞ்ஞான அறி வை’யே முன்வைத்தன. இவை முன்வைத்த விஞ்ஞான அறி வில் இருந்து வேறுபட்ட அறிக்கை முறைகள் பல உள்ளன. அவ்வறிகை முறைகளைவிட ‘விஞ்ஞான அறிவை’ உயர்வா னதாகக் கொள்ள முடியாது.

பின் அமைப்பியலும் பின் நவீனத்துவமும் முன்வைத்த விமர் சனத்தின் ஊடாக புதியதொரு அறிவாராய்ச்சியல் நோக்கு முறை (Epistemological Perspective) அறிமுகமானது. இயற்கை விஞ்ஞானங்களிலும், சமூக விஞ்ஞானங்களிலும் அ) பகுத்தறிவு ஆ) முன்னேற்றம் இ) மனிதச் செயலி ஆகிய மூன்று முக்கிய கருத்துக்கள் (Reason, Progress and Human Agency) முதன்மையிடத்தைப் பிடித்திருந்தன. மேற்கு லகின் அறிவொளிக்கால மரபின் அடிப்படைகளான இம் மூன்றையும் நிராகரித்த பின் அமைப்பியலும், பின் நவீனத்து வமும் அடிப்படைகளின் நிராகரிப்பான சமூக விஞ்ஞா னத்தை (Anti-Foundational Social Science) தோற்றுவித்தன. இக்காலத்தின் சமூக விஞ்ஞானங்களில் நடைபெறும் மெய்யி யல், முறையியல் விவாதங்களில் அடிப்படைகளின் நிராக ரிப்பு வெளிப்பட்டு நிற்பதைக் காணலாம். அடிப்படைகளின் நிராகரிப்புச் சமூக விஞ்ஞான நடைமுறை தான் முன்வைக் கும் அறிவுதான் உண்மையான அறிவு என்றும் பிறயாவும் தரம் தாழ்ந்தவை என்றும் கூறுவதில்லை. அது மட்டுமன்றி எல்லாம் தழுவிய கோட்பாடு (Grand Theory) அல்லது முறையியல் அல்லது தத்துவம் அறிவின் தேடலுக்கான ‘அடிப்படை’ (Foundation) எனக் கூறுவதுமில்லை.

## சுருக்கம்:

இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைப் பின் கண்ட வாறு சுருக்கிக் கூறலாம்.

- சமூக விஞ்ஞானங்களின் மெய்யியல் என்பது இயற்கை விஞ்ஞானங்களின் மெய்யியலாகத் தோற்றம் பெற்ற விஞ் ஞான மெய்யியல் (Philosophy of Science) என்பதன் ஒரு கிளைப்பிரிவு ஆகும்.
- இயற்கை விஞ்ஞான மெய்யியல் அதன் முதற்கட்டத்தில் இரு விடயங்களில் கவனம் செலுத்தியது. அவையாவன் அ) இயற்கை விஞ்ஞானங்களில் ஆராய்ச்சி ஆ) விஞ் ஞான ஆராய்ச்சி முறையியல். இவ்விரண்டையும் அனுபவ வாதம் (Empiricism) என்ற சிந்தனையின் அடிப்படையில் விஞ்ஞான மெய்யியல் கட்டமைத்துக் கொண்டது.
- இயற்கை விஞ்ஞான மெய்யியலிலும் முறையியலிலும் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை மேலாண்மையுடைய இடத்தைப் பெற்றிருந்தது. அனுபவவாத அணுகுமு றையை இக்காலத்தில் சமூக விஞ்ஞானங்களின் ஆய்வி லும் பிரயோகிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் அனுபவவாத அணுகுமுறையின் மேலாண் மைக்கு எதிர்ப்புக் கிளம்பியது.
- 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அனுபவவாதம், நேர்க் காட்சி வாதம் என்பனவற்றிற்கு மாற்றான கருத்துக்களை தோற்றப்பாட்டியல் முன்வைத்தது. இதனைத் தோற்றப்பாட் டியல் அறைகூவல் (Phenomenological Challenge) என்பர். தோற்றப்பாட்டியலின் அறைகூவலின் பயனாக சமூக விஞ் ஞானங்களின் முறையியலின் அடிப்படைகள் நிறுவப்பட் டன.
- 1930-களில் வியன்னா வட்டத்தினர் அனுபவ வாத வாதங் களை நேர்க்காட்சி வாதம் என்ற வடிவில் கட்டமைத்தனர். வியன்னா வட்டத்தினரின் கருத்துக்களை எதிர்த்துக் கிளம் பிய இரண்டாவது அலை விவாதங்கள் இயற்கை விஞ்ஞா னம், சமூக விஞ்ஞானம் என்பன பற்றிய மெய்யியலின் வளர்ச்சிக்குத் தூண்டுதலாக அமைந்தன. சுருக்கவியல் நேர்க் காட்சிவாதம் இக்காலத்தில் பொருள்கோளியல், தோற்றப்பாட்டியல் ஆகிய மெய்யியல்களுக்கு எதிரான வாதங்களை முன்வைத்து நேர்க்காட்சி வாதத்தைப் பலப்ப டுத்தினர்
- 1950-களில் விஞ்ஞான மெய்யியலில் ஏற்பட்ட புதிய வளர்ச்சிப் போக்குகள் நேர்க்காட்சி வாதத்தைப் பலமிழக் கச் செய்தன. நேர்க்காட்சி வாதம் வீழ்ச்சியுற்ற போது அத னால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பக் கூடிய புதிய மெய் யியல்கள் 1960-களிலும் 1970-களிலும் தோற்றம் பெற்றன. இம்மெய்யியல்கள் அனுபவாதத்தினதும், நேர்க்காட்சி வாதத்தினதும் அனுமானங்கள் பலவற்றையும் கேள்விக்கு உட்படுத்தின, மாற்றீடான விளக்கங்களை முன்வைத்தன. கார்ல் பொப்பர், தோமஸ் கூன், போல் பெயரபென்ட் (Paul Feyerabend) ஆகிய மூவரும் இக்காலத்தின் முக்கிய மான மெய்யியலாளர்கள் ஆவர். மரவு வழிப்பட்ட அனுப வவாதத்தின் அடிப்படை எடுகோள்களை இம்மூவரும் தகர்க்கும் முறையில் வாதங்களை முன்வைத்தனர். இத னால் சமூக விஞ்ஞானங்களின் மெய்யியலின் பெரும் தாக் கம் ஏற்பட்டது.
- பின் அமைப்பியலும், பின் நவீனத்துவமும் மெய்யியலின் அடிப்படைகளைப் புரட்டிப் போட்ட சிந்தனைகளாகும். சமூக விஞ்ஞானத்திலும் சமூகக் கோட்பாட்டிலும் உறுதி யான அடித்தளம் உள்ளதா என்ற சந்தேகத்தை இவை ஏற்படுத்தின. ஆய்வு, பகுத்தறிவு, அறிவு என்பன பற்றிய மெய்யியலும் முறையியலும் உறுதியான அடித்தளத்தை (Foundation) உடையனவல்ல என இம்மெய்யியலாளர்கள் கூறலாயினர்.

## படிக்க வேண்டிய நூல்கள்:

மாணவர்கள் சமூக விஞ்ஞான மெய்யியல் பற்றிப் படித்து இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடிய பாடநூல்கள் பல ஆங்கிலத்தில் உள்ளன. அவற்றுள் சிலவற்றைக் கீழே தந் துள்ளோம்.

- Ted Benton மற்றும் Ian Craib எழுதிய Philosophy of Social Science The Philosophical Foundations of Social Thought (2001)
- Patrick Beart எழுதிய Philosuphy of The Social Sciences (2005)
- Norman Blaike எழுதிய Approaches To social Inquiry (1993)
- Alexander Rosenberg எழுதிய Philosophy of Social Science (2012)

அனுபவாதம் பற்றிய அடிக்கருத்துக்களையும் வெவ்வேறு அனுபவவாத மரபுகளையும் விளக்கிக் கூறும் நூல்கள் பல உள்ளன, அவற்றையும் மாணவர்கள் படித்தல் அவசியமா னது.

R.L. Woolhouse எழுதிய The Empiricists (1988) என்ற நூல் அனுபவவாதம் பற்றிய வரலாற்று வளர்ச்சியை அறிமுகம் செய்யும் நூலாகும்.

Robert G. Meyers எழுதிய Understanding Empiricism (2006) என்ற நூலும் அனுபவவாதத்தின் வெவ்வேறு மரபுகளை விளக்கிக் கூறுவது. பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் எழுதிய Problems of Philosophy (1959) என்ற நூல் அனுபவ வாதம் குறித்த மெய்யியல் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவது.

அனுபவவாதம் சமூக விஞ்ஞானங்களில் ஆரம்ப காலத்தில் ஏற்படுத்திய தாக்கத்தைப் புரிந்து கொள்வதற்கு எமில் துர்க்- கம் ஜெர்மன் மொழியில் எழுதிய The Rules of the Sociolog- ical Method என்ற நூலைவிடச் சிறந்த நூல் எதுவுமே இல்லை எனலாம். (இதன் ஆங்கில மொழி பெயர்ப்பு படிக் கப்பட வேண்டியது.)

## குறிப்பு:

ஐயதேவ உயன்கொடவின் Social Research Philosophical and Methodological Foundations என்ற நூலின் மூன்றாம் அத்தி யாயத்தை (பக் 28-40) தழுவி
எழுதப்பட்டது.



shanmugalingam@thaiveedu.com

# விரிவடைந்த எனது ஊடக அனுபவம்




நாம் இலங்கையில் சுனாமி பற்றிய விவரணங்களைத் தயாரித்துக்கொண்டு ரொறன்ரோ வந்து அவற்றை ஒளிபரப்பிய பின்னர் ஓரிரு மாதங்களிலேயே ரீவீஐ கலையகமும் சீஎம்ஆர் இயங்கிக்கொண்டிருந்த றெக்ஸ்டேல் வீதிக் கட்டடத்துக்கு மாற்றப்பட்டது. அந்தக் கட்டடம் ஏற்கனவே திரைப்படங்களுக்கு ஒலிச்சேர்க்கை செய்யும் கலையகமாக இருந்ததால் அங்கு திரைப்படங்களைத் திரையிடும் அறைகள் சற்றுப் பெரியனவாக இருந்தன. அவ்வாறான பெரிய அறையை தொலைக்காட்சிக் கலையகமாக மாற்றுவது எளிதாக இருந்தது. கலையகத்தின் சுவர்கள் ஏற்கனவே ஒலித்தெறிப்புக் கட்டுப்பாடு செய்யப்பட்டவையாக இருந்ததால் எமது தேவைகளுக்கேற்ற வகையில் பொருத்தமான இடமாக அமைந்துவிட்டது. முதலில் அந்தக் கட்டடத்தின் ஒரு பகுதியை மட்டுமே வாடகைக்குப் பெற்ற ரீவீஐ, சீஎம்ஆர் நிர்வாகம், இரண்டு ஒலிபரப்புக் கலையகங்களையும் ஒரு தொலைக்காட்சிக் கலையகத்தையும் அமைத்தது. ரீவீஐ, சீஎம்ஆர் நிறுவனங்கள் இரண்டுமே போதிய இடவசதியைக் கொண்ட ஊடக நிறுவனங்களாக இயங்கத் தொடங்கின.

சற்று வசதியான இடத்தில் ரீவீஐ, சீஎம்ஆர் நிறுவனங்கள் மிகச் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கியதும் அவற்றின் செயற்பாடுகளும் விரிவடைந்தன. தொலைக்காட்சியிலும் வானொலியிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டன. பலர் அறிவிப்பாளர்களாகவும் தயாரிப்பாளர்களாகவும் தொழில்நுட்ப உதவியாளர்களாகவும் அலுவலகப் பணியாளர்களாகவும் இணைந்து கொண்டார்கள். ரீவீஐ, சீஎம்ஆர் இரண்டு நிறுவனங்களிலும் கணிசமான தொகையில் முழுநேரப் பணியாளர்களும் அதேயளவு தொகையில் பகுதிநேரப் பணியாளர்களும் பணியாற்றினார்கள். என்னைப் பொறுத்தளவில் இலங்கைக்கு வெளியே தமிழர்களுக்கான பெரும் ஊடக நிறுவனங்களாக ரீவீஐ, சீஎம்ஆர் ஊடகங்கள் இயங்கின என்று கூறுவேன்.

இலங்கையில் முழுநேரமாக ஊடகப்பணி மட்டுமே செய்த எனக்கு, இங்கு கிடைத்த பொறுப்புகளும் அனுபவங்களும் புதியனவாக இருந்தன. நான் எனது வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கென ஒரு முழுநேரத் தொழிலைச் செய்துகொண்டு, நான் நிரந்தரமாகவே ஈடுபட்டுப் பணியாற்ற வேண்டிய அளவுக்குப் பொறுப்புகள் நிறைந்த ஊடகப் பணியையும் பகுதிநேரமாகச் செய்யவேண்டியிருந்தது. இதுவரை நான் வசித்த பகுதியிலேயே கலையகங்கள் இயங்கியதால் ஊடகப் பணியின் சவால்களுக்கு ஓரளவு முகம்கொடுக்கக்கூடியதாக இருந்தது. இப்போது கலையகங்கள் நான் வசிக்கும், வேலை பார்க்கும் இடங்களிலிருந்து சுமார் நாற்பத்தைந்து, ஐம்பது கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துவிட்டதால், மாலையில் எனது வேலைமுடித்து கனடியத் தெருக்களின் வாகனப் போக்குவரத்து நெரிசல்களில் சிக்கி கலையகத்திற்குச் செல்வது சிரமமாக இருந்தபோதிலும் சளைக்காது உற்சாகத்துடன் எனது ஊடகப் பணிகளை மேற்கொள்ள முடிந்தது. ஊடகங்களைப் பொறுத்தவரை எனது பணி நேரடியான நிர்வாகமாக இருக்கவில்லை. முழுக்கமுழுக்க நிகழ்ச்



ராகவன் பரஞ்சோதி

சிகள், அவற்றைத் தயாரித்தல் போன்றவற்றில் எனது ஆலோசனைகளை வழங்குதல், புதியவர்களைத் தேர்ந்தெடுத்தல், பயிற்றுவித்தல் போன்றவையே எனது பணியாக இருந்தமையால் எனக்கு அப்பணிகளைச் செவ்வனே செய்ய

முடிந்தது. நிறுவனங்களின் நிர்வாகத்தில் அவ்வப்போது பலர் ஈடுபட்டார்கள்.

தொலைக்காட்சியில் முதலில் எனக்கு அனுசரணையாக இருந்த தமிழ்ப்பிரியன் பின்னர் சீஎம்ஆர் வானொலியின் நிகழ்ச்சி நிர்வாகப் பணிகளைக் கவனிக்கத் தொடங்கவே எஸ். பாலேந்திரன் சிலகாலம் தமிழ்ப்பிரியன் செய்த பணிகளைத் தொலைக்காட்சியில் செய்தார். பின்னர் ராகவன் பரஞ்சோதி தயாரிப்பு மேலாளராகப் (Production Manager) பணியாற்றினார். ராகவன் சீஎம்ஆர் வானொலி ஆரம்பித்ததும் அதில் ஆங்கில அறிவிப்பாளராக இணைந்து ஒரு நிகழ்ச்சியை வழங்கிக் கொண்டிருந்தபோது, ரீவீஜ நிர்வாகம் அவரை ரீவீஜ-யின் தயாரிப்பு மேலாளராக நியமித்தது. பின்னர் ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களின் பிரதம நிதி உத்தியோகத்தராகப் (C.F.O.) பணியாற்றிய வீ. ஜெயராமனுக்கு ரீவீஜ நிகழ்ச்சிகளை நிர்வகிக்கும் பொறுப்பும் பிரபாகரன் பிரதம நிர்வாகியாக இருக்கும்போதே வழங்கப்பட்டது. இவ்வாறு பலர் அவ்வப்போது நிகழ்ச்சி நிர்வாகத்தில் ஈடுபட்டபோதும்



வீ. ஜெயராமன்

நிகழ்ச்சிகளின் தரத்தைப் பேணும் எனது பொறுப்பு மாறவில்லை. சீஎம்ஆர் ஆரம்பித்ததும் எனது பொறுப்புகளுக்கான பதவிப் பெயர் இரண்டு நிறுவனங்களுக்குமான மூத்த நிறைவேற்றுத் தயாரிப்பாளர் (Senior Executive Producer) என்று மாற்றப்பட்டது. இரண்டு நிறுவனங்களுமே மிக உற்சாகமாக இயங்கின.

இரண்டு நிறுவனங்களுக்குமான பிரதான வருமானம் விளம்பரங்கள் மூலமே பெரிதும் பெறப்பட்டது. ரீவீஜ தொலைக்காட்சிக்கு சந்தாதாரர்கள் வழங்கும் பணமும் மாதம்தோறும் கிடைத்தது. முதலில் றோஜஸ் நிறுவனத்தின் ஊடாகவும் பின்னர் றோஜஸ், பெல் என்ற இரண்டு பெரிய நிறுவனங்களுக்கூடாகவும் ரீவீஜ ஒளிபரப்பப்பட்டது. அந்த நிறுவனங்களுக்கு மாதக் கட்டணம் செலுத்தி மக்கள் ரீவீஜ நிகழ்ச்சிகளைப் பார்த்தார்கள். அப்படி மக்களிடம் பெறப்படும் பணத்தில் ஒரு குறிப்பிட்ட விகிதத் தொகையை இரண்டு நிறுவனங்களும் ரீவீஜக்கு மாதந்தோறும் வழங்கின. சந்தாப் பணத்தைவிட விளம்பரங்கள்மூலம் அதிக வருமானம் ரீவீஜ, சீஎம்-ஆர் ஊடகங்களுக்குக் கிடைத்தது. அனுசரணை தரக்கூடியவர்களை அணுகி, விளம்பரங்களைப் பெறுவதற்கென்று உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவ்வாறு இணைந்து கொண்ட கணேஸ் முருகேசு, சிறீ சிவசுப்ரமணியம், ராகுலன் சானா ஆகியோர் மிகச் சுறுசுறுப்பாக செயற்பட்டு விளம்பரதாரர்களைச் சேர்த்தார்கள். ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்கள் அப்போது மக்களிடையே மிகுந்த வரவேற்பைப்பெறத் தொடங்கியிருந்ததால் விளம்பரங்களைப் பெறுவதில் அவ்வளவு சிரமம் இருக்கவில்லை. ரொறன்ரோவில் இயங்கும் பல தமிழ் வர்த்தக நிறுவனங்கள் மனமுவந்து தமது விளம்பரங்களை ரீவீஜ, சீஎம்ஆர் ஊடகங்களில் ஒளி, ஒலிபரப்புவதற்காகத் தந்து தமது பேராதரவை வழங்கினார்கள்.

## கொண்டாட்டம்:

வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருந்த ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களின் அடுத்த மிகப் பெரியதும் முக்கியமானதுமான முயற்சியாக 'கொண்டாட்டம்' நிகழ்ச்சி அமைந்தது. 2005-ம் ஆண்டு, செப்ரெம்பர் மாத முதல்வாரத்தில் ரீவீஜ, சீஎம்ஆர் நடத்திய வெளிக்கள பொழுதுபோக்கு, வர்த்தக நிகழ்ச்சியான கொண்டாட்டம் மக்களின் அமோக ஆதரவைப் பெற்ற மிகப் பிரமாண்டமான நிகழ்ச்சியாக அமைந்தது. 2005-ம் ஆண்டு, செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற முதலாவது கொண்டாட்டம் ஒருநாள் நிகழ்வாகத் திட்டமிடப்பட்டு மக்களுக்கு அறிவிக்கப்பட்டு நடைபெற்றது. நிகழ்ச்சி நடந்த அன்று கட்டுக்கடங்காத தொகையில் வந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்த ரீவீஜ, சீஎம்ஆர் நிர்வாகத்தினர் அன்றைய நிழ்ச்சி நிறைவடைய முன்னரே அடுத்த நாளும் அதைத் தொடர்வது என்று தீர்மானித்து வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். உடனேயே ரீவீஜ தொலைக்காட்சியிலும் சீஎம்ஆர் வானொலியிலும் அந்தச் செய்தி அறிவிக்கப்படவே அடுத்தநாளும் மிக அதிகமான பார்வையாளர்கள் வந்தார்கள். அதைத் தொடர்ந்து கொண்டாட்டம் ரீவீஜ, சீஎம்ஆரின் வருடாந்த வணிக விழாவாக மிகப் பிரமாண்டமாகக் கொண்டாடப்பட்டது. கொண்டாட்டம் அத்தகைய வெற்றியைப் பெற்றமைக்கு, அந்த நிகழ்ச்சி தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற ரீவீஜ, சீஎம்ஆர் ஊடகங்களால் நடத்தப்பட்டமையும், அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்துமே மிக நேர்த்தியாக, தொழில்முறைத் தரத்தில் தயாரித்து வழங்கப்பட்டமையுமே இரு பிரதான காரணங்கள் என்பது எனது கருத்து. பிரமாண்டமான வர்த்தகக் கண்காட்சிகள் இடம்பெறும் இடமாகிய ரொறன்ரோ சர்வதேச வர்த்தக மையத்தில், வருடம்தோறும் சிறப்பான ஏற்பாடுகளுடன் நடைபெற்ற கொண்டாட்ட நிகழ்வு, தமிழ் மக்களுக்குப் பெருமை சேர்க்கும் ஒரு நிகழ்வாக அமைந்தது.

முதலாவது கொண்டாட்ட நிகழ்ச்சியில் இடம்பெறும் மேடை நிகழ்ச்சிகளின் தரத்தைக் கண்காணிப்பதும் மேடை நிகழ்ச்சிகள் தொழில்முறைத் தரத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சியாகத் தயாரித்து வழங்கப்படுவதை உறுதி செய்வதும் எனக்குத் தரப்பட்ட பொறுப்பாக இருந்தது. இது ஒரு பரந்தளவிலான பொறுப்பு. அதை செவ்வனே செய்வதற்குப் பலர் அயராது உழைத்தார்கள். தமிழ்ப்பிரியன், பாலேந்திரன் ஆகியோர் அங்கு வழங்கப்படும் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தார்கள். தமிழ்ப்பிரியன் நிகழ்ச்சிகளை உரிய முறையில் நிரைப்படுத்தி வழங்குதல், ரமேஷ், மற்றும் படப்பிடிப்புக் கலைஞர்கள் அவற்றைப் படம்பிடித்துத் தொகுத்து வழங்கு

தல் போன்ற பணிகளை மிக உற்சாகமாகச் செய்தார்கள். நான் நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட தயாரிப்புப் பணிகளை மேற்பார்வை செய்ததோடு, ஒளியமைப்பை நேரடியாகப் பொறுப்பேற்று, மேடை ஒளியமைப்பைச் செய்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்களுடன் நானும் இணைந்து பணியாற்றி, ஒவ்வொரு நிகழ்ச்சிகளுக்குமான ஒளியமைப்பைத் திட்டமிட்டு (lighting plan), ஒளியமைப்புக்கான பிரதியை (lighting script) தயாரித்து, கொண்டாட்டம் நடைபெற்ற இரண்டு நாட்கள் முழுவதுமே ஆரம்பத்திலிருந்து இறுதிவரை, எனது ஒளியமைப்புப் பிரதிக்கமைய ஒளியமைப்புப் பணியை நிறைவேற்றினேன். அது நான் வெகுநாட்களாகச் செய்ய விரும்பிய ஒரு பணி. கொண்டாட்ட நிகழ்ச்சியில் எனது நெடுநாளைய விரும்பம் நிறைவேறியது. அடுத்த வருடம் இடம்பெற்ற கொண்டாட்டத்தின்போதும் அதே பணியைச் செய்தேன். பின்னர் வந்த கொண்டாட்டங்களில் நான் அதைத் தொடர்ந்து செய்யவில்லை. வருடந்தோறும் ஒரே நிறுவனத்தையே ஒளியமைப்புக்கு அமர்த்தியதால் அவர்கள் எமது ஒளியமைப்புத் தேவைகளைப் புரிந்துகொண்டு தாமே ஒளியமைப்பைச் செய்யக்கூடியதாக இருந்தது.

இந்தக் கொண்டாட்டம் நிகழ்ச்சி ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களில் பணியாற்றிய பலரின் திறமைகளை வெளிக்காட்டியது. கொண்டாட்டம் போன்ற பிரமாண்டமான வணிகக் கலைவிழாவை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்குத் திறமையும் கடின உழைப்பும் வேண்டும். தமிழ்ப்பிரியனின் நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு, கணேஸ், சிறீ, ராகுலன் ஆகியோர் மேற்


எஸ். பாலேந்திரன் (பாலி)


கணேஸ் முருகேசு

கொண்ட உற்சாகமான விளம்பரச் சேகரிப்பு, வர்த்தகர்களுக்கான காட்சிச் சாலைகளை ஒழுங்கமைத்து அவர்களுக்கு வழங்குவதில் பாலேந்திரன், ஜெனி ஜோஸப் ஆகியோர் மேற்கொண்ட அயராத உழைப்பு, தொழில்நுட்பக் கலைஞர்களின் கடும் உழைப்பு, நிர்வாகத்தினரின் சிறந்த திட்டமிடுதலும் நடைமுறைப்படுத்தலும் போன்றவை சிறப்பாக அமைந்து கொண்டாட்டம் ரொறன்ரோவில் நடைபெறும் முக்கியமான நிகழ்ச்சிகளில் ஒன்று என்ற கணிப்பை மக்களிடம் பெற்றது.

இப்படி ரீவீஜ, சீஎம்ஆர் இரண்டும் இணைந்து மேற்கொண்ட செயற்பாடுகள் மக்களின் ஆதரவைப் பெறவே, ரீவீஜ-யிலும் பல நிகழ்ச்சிகளைத் தயாரிக்கக்கூடிய நிலை ஏற்பட்டது. தொழில்முறைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிப்ப


சிறீ சிவசுப்ரமணியம்


ராகுலன் சானா

தற்குப் பெரிய கலையகம் தேவைப்பட்டது. கொண்டாட்டத்துக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படும்போதே ரீவீஜ கட்டடத்தின் மறு பகுதியும் வாடகைக்குப் பெறப்பட்டு அப்பகுதியில் கொண்டாட்டத்துக்கான பணிகள் இடம்பெற்றன. பின்னர் அப்பகுதியிலிருந்த பெரிய கூடமொன்று கலையகமாக மாற்றப்பட்டது. அக்கலையகம் முன்னர் இருந்ததைவிடப் பெரியது. அதனால் விசாலமான அரங்க அமைப்புகளுடன் பல கலைஞர்கள் பங்குபற்றும் நிகழ்ச்சிகளையும் பார்வையாளர்கள் கலந்துகொள்ளக்கூடிய நிகழ்ச்சிகளையும் தயாரிக்கும் நிலை ஏற்பட்டது. அதுவரை இருந்த கலையகம் செய்தி, மற்றும் நேர்காணல் போன்ற நிகழ்ச்சிகளைச் செய்யும் கலையகமாக பாவிக்கப்பட்டது.

## வெளிநாடுகளுக்குச் சென்று நிகழ்ச்சிகள் தயாரித்தல்:

எமது அடுத்தகட்ட வளர்ச்சி வெளிநாடுகளுக்குச் சென்று நிகழ்ச்சிகள் தயாரிப்பது. ஏற்கனவே ரமேசும் நானும் இலங்கை சென்று சுனாமி பற்றித் தயாரித்த விவரண நிகழ்ச்சியே நாம் கனடாவுக்கு வெளியே சென்று தயாரித்த முதல் நிகழ்ச்சி. அடுத்து, ரமேசும் வரகுணனும் அமெரிக்காவின் நியூஜேர்சி நகருக்குச் சென்று புகழ்பெற்ற இந்திய சினிமாக் கலைஞரான பத்மினி அவர்களின் பேட்டியை ஒளிப்பதிவு செய்துவந்தார்கள். அதன்பின்னர் நாம் வெளிநாடு சென்று செய்த மிக முக்கியமான நிகழ்ச்சி, விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே நோர்வே அரசின் அனுசரணையுடன் நடைபெற்ற அரசியல்த் தீர்வுக்கான பேச்சுவார்த்தை. பேச்சுவார்த்தை ஜெனீவாவில் இடம்பெற்றது. இந்தப் பேச்சுவார்த்தை நிகழ்வுகளை ஒளிபரப்புவதற்காக ரீவீஜ, சீஎம்ஆர் ஊடகங்களின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராக அப்போது பணியாற்றிய எஸ். பிரபாகரனும் நானும் ஜெனீவா சென்றோம். படப்பிடிப்பாளர்களையும் மற்றும்

தொழில்நுட்ப உதவிகளையும் ஜெனிவாவிலேயே பெறக்கூடிய ஏற்பாடுகளை ரீவீஜ, சீஎம்ஆரின் தொழில்நுட்பப் பிரிவுக்குப் பொறுப்பான ராஜன் செய்திருந்தார்.

2006-ம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் 28-ம், 29-ம் திகதிகளில் ஜெனிவாவில் இடம்பெற்ற இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளும் விடுதலைப் புலிகளின் தரப்புக்கு விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ்.பீ. தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமைதாங்கினார். அரச தரப்பில் பங்குபற்றிய குழுவுக்குத் தலைமை தாங்கியவர் அமைச்சர் நிமால் சிறீபால டி. சில்வா. பேச்சுவார்த்தை சனி, ஞாயிறு தினங்களில் நடப்பதற்கு ஏற்பாடாகியிருந்ததால் நாம் வெள்ளிக்கிழமை மாலை ஜெனிவாவைச் சென்றடைந்தோம். அங்கு சென்றவுடனேயே விடுதலைப் புலிகள் தரப்பினர் தங்கியிருந்த ஹொட்டேலுக்குச் சென்றோம். ஹொட்டேல் வரவேற்புக் கூடம் மிகவும் பரபரப்பாக இருந்தது. அங்கு நடமாடிய அனைவரும் ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவாகச் செயற்படுபவர்கள். அந்தப் பேச்சுவார்த்தையின் பிரதம ஒருங்கிணைப்பாளர் எறிக் சொல்ஹெயிம் அவர்களும் மற்றும் சில நோர்வே அரச தரப்பினரும் அங்கே காணப்பட்டார்கள். நான் அவ்விடத்திற்குச் சென்றவுடனேயே ராஜனின் ஏற்பாட்டின்படி எமக்கெனத் தயாராகவிருந்த தொழில்நுட்பக் குழுவினரின் உதவியுடன் அடுத்த நாள் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தை பற்றிய முன்னுரை


ஜெனீவாவில் ஐரீஎன் அறிவிப்பாளர் றொபேரட்டும் நானும்

யொன்றை அந்த ஹொட்டேல் வாசலிலேயே கமராவில் தோன்றிப் பதிவுசெய்ய, அந்த ஒளிப்பதிவு உடனேயே றொறன்ரோவுக்கு அனுப்பப்பட்டது. அந்தச் செய்தி அன்று மாலை ஒளிபரப்பான ரீவீஜ செய்தி அறிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

எனக்கு இந்தப் பேச்சுவார்த்தை பற்றி நினைக்கும் போதெல்லாம் விடுதலைப் புலிகள் அமைப்பில் முக்கிய பொறுப்பிலிருந்தவர்களான இளந்திரையன், புலித்தேவன் ஆகியோரும் நினைவுக்கு வருவார்கள். விடுதலைப் புலிகளின் தரப்பினர் தங்கியிருந்த ஹொட்டேலின் பரபரப்பான வரவேற்புக் கூடத்தில் என்னைச் சந்தித்த இருவரும், நான் ரூபவாஹினியில் செய்தி வாசித்தவரென்று இனம்கண்டு என்னுடன் பேசியதும், இருவரும் தாம் அப்போது சிறுவயதினரென்றும் அந்த நாட்களில் ஒவ்வொருநாளும் அன்று யார் செய்தி வாசிப்பாரென்று தம்மையொத்த சிறுவர்களுடன் போட்டி போட்டுத் தொலைக்காட்சி பார்த்ததாகவும் நினைவுகூர்ந்து, அப்போது செய்தி வாசித்தவர்களின் பெயர்களைக் கூறி மகிழ்ச்சியாக உரையாடினார்கள். அவர்கள் இறுதி யுத்தத்தின்போது கொல்லப்பட்டு விட்டார்கள் என்று அறிந்த பின்னர் அன்று அவர்கள் என்னுடன் பேசியது அடிக்கடி நினைவில் வரும்.

அடுத்தநாள், சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் பேச்சுவார்த்தைகள் பெரிய முன்னேற்றம் எதுவுமில்லாமலே நடந்து முடிந்தது. இரண்டாம் நாள் ஒக்ரோபர் மாதம் 29-ம் திகதி, பேச்சுவார்த்தை முறிவடைந்த நாள் அப்படியே ஞாபகத்தில் இருக்கிறது. விடுதலைப் புலிகள் தரப்பினர் அரசியல்த் தீர்வு பற்றிப் பேசுமுன்னர் மனிதாபிமானப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும், அதற்கு ஏ-9 பிரதான பாதை திறக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்க, அதற்கு உடன்படுவதற்கு அரச தரப்பும் உறுதியாக மறுத்துவிட்டதால் மேற்கொண்டு பேச்சுவார்த்தையைத் தொடரமுடியாத நிலை ஏற்பட்டது. அங்கு நடப்பவற்றை ரீவீஜ-க்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொழில்நுட்பக் குழுவினர் படம் பிடித்துக்கொண்டிருந்தபோது நான் தொலைபேசி வாயிலாக அங்கு நடப்பவற்றை சீஎம்ஆரில் நேரடியாக றொறன்ரோத் தமிழ் மக்களுக்குத் தெரிவித்துக்கொண்டிருந்தேன். பேச்சுவார்த்தை முறிவடைந்ததும் நான் இலங்கை அமைச்சர் நிமால் சிறீபால டி. சில்வா அவர்களிடம் கேள்வி கேட்பதற்கு எத்தனித்தபோது அவர் நிற்காமல் விரைந்து சென்றுவிட்டார்.

2002-ம் ஆண்டு, விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் செய்துகொண்ட போர்நிறுத்த உடன்படிக்கை அமுலில் இருந்தபோதே இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. நோர்வேயின் ஏற்பாட்டில் செய்துகொள்ளப்பட்ட அந்த ஒப்பந்தம் ஒரு கண்காணிப்புக் குழுவினால் அவதானிக்கப் பட்டுக் கொண்டிருக்கும்போதே ஆங்காங்கே போர்நிறுத்த மீறல்கள் நடைபெற்றாலும் அந்தப் போர்நிறுத்த உடன்படிக்கை உத்தியோகபூர்வமாக நடைமுறையில் இருந்தது. ஒக்ரோபர் 29-ம் திகதி ஜெனீவாவில் முறிவடைந்த பேச்சுவார்த்தையே விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையாகும். அதன்பின்னர் இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்குமிடையே இடம்பெற்ற யுத்தம் 2009-ம் ஆண்டு, மே மாதம் முடிவுக்கு வந்தது. இந்தப் பேச்சுவார்த்தையில் நான் ஊடகவியலாளராக நேரடியாகக் கலந்து கொண்டமை எனது ஊடகப் பயணத்தில் ஒரு முக்கிய நிகழ்வாகும்.

## எஸ். பிரபாகரன் பதவி விலகினார்:

பிரபாகரனும் நானும் ஜெனீவா சென்றுவிட்டு ஒக்ரோபர் மாதம் 30-ம் திகதி றொறன்ரோ திரும்பினோம். நவம்பர் மாதம் 12-ம் திகதி, பிரபாகரன் ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவியிலிருந்து

விலகினார். அவர் ஏன் விலகினார், அல்லது விலக்கப்பட்டார் என்பதற்கான சரியான காரணம் எனக்குத் தெரியவில்லை. நான் ஏற்கனவே கூறியதுபோல ரீவீஜ, சீஎம்ஆர் ஊடகங்க ளில் நிகழ்ச்சிகளின் தரத்தைப் பேணுவதும் செய்திகளுக்குப் பொறுப்பாக இருப்பதும் மட்டுமே எனது பணியாக இருந் தது. எனது தொடர்புகள் அனைத்தும் நிகழ்ச்சித் தயாரிப் போடு நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களுடன் மாத்திரமே இருந்தது. எனக்கு மேலே உள்ள நிர்வாக விடயங்களில் நான் அக்கறை காட்டுவதில்லை. முக்கியமாக, நிர்வாக மேல்மட்டத்தில் ஏற்படும் பிரச்சினைகள்பற்றி எனக்குத் தெரி யாது. ஆனால், பிரபாகரன் அந்த ஊடக நிறுவனங்களை மேலும் வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்கான பல திட்டங் களை வைத்திருந்தாரென்று எனக்குத் தெரியும். அவை பற்றி என்னிடம் விளக்கமாகப் பேசியதோடல்லாமல், அந்த நிறுவ னங்களில் பணிபுரிந்த அனைவரையுமே ஒரு கூட்டத்திற்கு அழைத்து தனது திட்டங்களை விரிவாக விளக்கியிருந்தார். அந்த ஊடக நிறுவனங்கள் மிகப் பெரியளவில் வளர்ச்சி யுற்று இலங்கை, இந்தியாவுக்கு வெளியே இயங்கும் பெரிய தமிழ் ஊடகங்கள் என்ற நிலையை அடையவேண்டும். அப் படி வளர்ந்தால் நாம் எமது கலைகளினதும் கலைஞர்களின தும் வளர்ச்சிக்கு சிறந்த பங்களிப்பை வழங்க முடியும், ரீவீஜ, சீஎம்ஆர் ஊடகங்கள் மிகப் பெரும் ஊடகங்களாக வளரும் என்ற எண்ணத்தில் இருந்த எனக்கு பிரபாகரனின் திட்டங்கள் உற்சாகமளிப்பனவாக இருந்தன.

நான் பிரபாகரனை ரீவீஜ 2001-ம் ஆண்டு ஆரம்பிக்கப்படுவ தற்கு முன்னர் அறிந்திருக்கவில்லை. அதன்பின்னர் அவரது நடவடிக்கைகளை காய்தல், உவத்தலின்றி நடுநிலைக் கண் ணோட்டத்தோடு அவதானித்ததில், எடுத்த காரியத்தைத் திறம்படச் செய்துமுடிப்பதற்கு மிகத் தீவிரமாக உழைக்கக் கூடியவர், புத்திசாதுரியம்மிக்க மிகத் திறமைசாலியென்ற எண்ணமே அவர்பற்றி எனக்கு இருந்தது. அப்படியான ஒரு வர் திடீரென ரீவீஜ, சீஎம்ஆர் ஊடகங்களின் நிர்வாகத்தை விட்டு நீங்கியது எனக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்தது.

## புதிய பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்:

எஸ். பிரபாகரன் விலகிச் சென்றதும் அவரது பொறுப்புகளை ஸ்ரான் அன்ரனி ஏற்றுக்கொண்டார். சீஎம்ஆர் நிறுவனத்தின் பெரும்பாலான பங்குகளைக் கொண்டிருக்கும் பங்குதாரர் என்று அவரை நான் அறிந்திருந்தேன். சீஎம்ஆர் உரிமத் தைப் பெறுவதற்கான நேர்முக அமர்வுக்குச் சென்ற குழுவில் அவருடன் நானும் அங்கத்தவராக இருந்தநேரத்திலும் அவர் அவ்வப்போது ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களின் விசேட நிகழ் வுகளில் கலந்துகொள்ள வந்த வேளைகளிலும் அவருடன் பேசியிருக்கிறேன். அவர் சகலருக்கும் கௌரவமளித்துப் பழ கக்கூடியவர் என்பதைத் தவிர அவரைப்பற்றி எனக்கு மேல திகமாக எதுவும் அதுவரை தெரியாது.

ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று உத்தி யோகத்தராகப் பொறுப்பேற்றுக்கொண்ட ஸ்ரான் அன்ரனி, நிறுவனங்களின் நிர்வாகத்தில் பாரிய மாற்றங்கள் எவற்றை யும் மேற்கொள்ளாமல், அதுவரை பொறுப்பிலிருந்தவர்கள் அவரவர் பொறுப்புகளைத் தொடந்து செய்யும்வகையில் நிறு வனங்களை நடத்திச் சென்றார். அங்கு பணியாற்றிக்கொண் டிருந்த அனைவருமே தமக்கான பணிகளைச் செய்வதில்



ஸ்ரான் அன்ரனி

நான்கைந்து வருடகால அனுபவத்தைக் கொண்டிருந்ததால், ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களின் இயக்கம் சுமுகமாகத் தொடர்ந்தது.

## அன்ரன் பாலசிங்கம் அவர்கள்:

ஸ்ரான் அன்ரனி ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களை நடத்தும் பொறுப்பை ஏற்றபின்னர், ஈழத் தமிழ்ச் சமூகத்தினரிடையே நிகழ்ந்த முக்கிய சம்பவம் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மறைவு. சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த அன்ரன் பால சிங்கம் அவர்கள், 2006-ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 14-ம் திகதி இலண்டனில் காலமானார். அவரது இறுதி நிகழ்வுகள் டிசம்பர் 20-ம் திகதி நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டது. ஸ்ரான் அன்ரனியின் தலைமையில் ரீவீஜ, சீஎம்ஆர் ஊடகங் களை நிர்வகித்தவர்கள், அன்ரன் பாலசிங்கம் அவர்களின் இறுதி நிகழ்வுகளை நேரடியாக ஒளி, ஒலிபரப்புவதற்கு முடி வெடுத்து, இலண்டனுக்குச் சென்று அங்கிருந்து நிகழ்ச்சிக ளைத் தொகுத்து அனுப்பும் பொறுப்பை என்னிடம் தந்தார் கள். நான் இலண்டனுக்குச் சென்றபோது ரீவீஜ நிறுவனத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவரும் படப்பிடிப்பாளருமான செல் வன், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் படம்பிடிக்கும் கருவி களோடு என்னுடன் வந்தார். அப்போது இரண்டு ஊடக நிறு வனங்களுக்குமான பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தராகப் (Chief Operating Officer) பணியாற்றிக்கொண்டிருந்த குமரன் என்று அழைக்கப்படும் சிவக்குமரன் எமது பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்ததோடு, நாம் இலண்டனில் தங்கியி ருப்பதற்கு அவரது தாய்மாமனாரான சண்முகநாதன் அவர்க ளது வீட்டை ஒழுங்கு செய்திருந்தார். நாம் இலண்டனில் தங்

கியிருந்து பணியாற்றிய மூன்று நான்கு நாட்களும் சண்முகநாதன் அவர்களே சகல இடங்களுக்கும் எம்மை அழைத்துச் சென்று மிகவும் உதவியாக இருந்தார்.

அன்ரன் பாலசிங்கம் அவர்களது இறுதி நிகழ்வுகள் இங்கிலாந்தின் சரித்திரப் பிரசித்திபெற்ற அலெக்ஸாண்ட்ரா மாளிகையின் (Alexandra Palace) பிரமாண்டமான மண்டபங்களில் ஒன்றிலே நடைபெற்றது. மார்கழிக் குளிர் கடுமையாக இருந்தபோதிலும் செல்வனும் நானும் அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கு இறுதி மரியாதை செலுத்த பெருமளவில் திரண்டு வந்து வரிசையில் காத்துநின்றவர்களை நேர்கண்டு ஒளிப்பதிவு செய்தோம். ஒளிப்பதிவு செய்தவற்றை செல்வன் அன்றிரவே தொகுத்து ரொறன்ரோவில் ரீவீஜ நிலையத்திற்கு அனுப்பிக்கொண்டிருந்தார். நான் அவ்வப்போது தொலைபேசியில் சீஎம்ஆர் வானொலியில் அங்கு நடப்பவற்றை நேரடியாக அறிவித்துக் கொண்டிருந்தேன். 20-ம் திகதி இறுதி நிகழ்ச்சிகள் நேரடியாக அஞ்சல் செய்யப்பட்டன. எமக்கான தொழில்நுட்ப உதவிகள் கிடைப்பதற்கு ரீவீஜ, சீஎம்ஆரின் தொழில்நுட்பப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த ராஜன் சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தார் ஃபிரான்சில் இயங்கிக் கொண்டிருந்த ரீரீஎன் ஒளிபரப்புச் சேவை, மற்றும் இலண்டனில் இயங்கிக்கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவினர் சகல நிகழ்ச்சிகளையும் ஒளி, ஒலிபரப்பினார்கள். நான் தொலைக்காட்சி ஒளிபரப்பில் நேரடியாகத் தோன்றி வர்ணனை செய்தேன். அதன் ஒளிப்பதிவு கனடாவில் ரீவீஜ நிலையத்தில் பெறப்பட்டு, சில நிமிடங்கள் தாமதமாக ஒளிபரப்பப்பட்டது. இந்த நிகழ்ச்சி ரீவீஜ, சீஎம்ஆர் ஊடகங்கள் பற்றிய நல்லபிப்பிராயத்தை பெரும்பாலான கனடாவாழ் தமிழர்களின் மனதில் ஏற்படுத்தியது.

## பொங்கு தமிழ்:

வெளிநாடு சென்று கனடாவாழ் தமிழ் மக்களுக்கு நேரடியாக வழங்கிய மற்றொரு நிகழ்ச்சி, 2007-ம் ஆண்டு, ஜெனீவாவில் நடைபெற்ற பொங்கு தமிழ். இது நடைபெற்ற மாதம், திகதி முதலியவற்றை சரியாக இப்போது என்னால் சொல்லமுடியாவிட்டாலும் அது நடந்தது 2007-ம் ஆண்டு, ஜுலை மாதமென்று நினைக்கிறேன். இந்த நிகழ்வை ஐரோப்பாவில் வாழும் ஈழத் தமிழ் மக்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஈழத்தில் தயாரிக்கப்பட்ட 'குத்துவிளக்கு' திரைப்படத்தில் ஜெயகாந்த் என்ற பெயரில் கதாநாயகனாக நடித்த நண்பர் நமசிவாயம் கணபதிப்பிள்ளையும் அந்த நிகழ்வின் அமைப்பாளர்களில் ஒருவராக இருந்தார். அந்த நிகழ்வை ரீவீஜ-யில் நேரடியாக ஒளிபரப்புவதென்று ஸ்ரான் அன்ரனி எடுத்த முடிவுக்கமைய ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களின் தொழில்நுட்பப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த ராஜன் நேரடி ஒளிபரப்புக்கான அனைத்துத் தொழில்நுட்ப ஏற்பாடுகளையும் ரொறன்ரோவில் இருந்தவாறே மேற்கொண்டார். ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களில் ராஜன் தலைமையில் இயங்கிய தொழில்நுட்பப் பிரிவில் யோகி, கஜன் என்ற இரண்டு தொழில்நுட்பவியலாளர்கள் பணியாற்றினார்கள். ரீவீஜயின் விசேட வெளிக்கள நிகழ்ச்சிகளின்போது பிரதீபன் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவார். கொண்டாட்டம், மாவீரர் தினம், பெரும் மக்கள் எழுச்சி ஊர்வலங்கள் போன்ற வெளிக்கள நிகழ்ச்சிகளின் நேரடி ஒளி, ஒலிபரப்புகளின்போது இந்த தொழில்நுட்பவியலாளர்கள் மிகக் கடுமையாக உழைக்கவேண்டியிருக்கும். அத்தகைய ஒளி, ஒலிபரப்புகளின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றுபவர்கள் இந்தத் தொழில்நுட்பவியலாளர்களே. தொழில்நுட்பக் குழுவுக்குத் தலைமை வகித்த ராஜன், எத்தகைய அழுத்தம் நிறைந்த சூழ்நிலைகளிலும் சிரித்த முகத்துடன் அவற்றைக் கையாள்வதில் வல்லவர். வழமைபோல ஜெனிவாவில் நடந்த பொங்கு தமிழ் நிகழ்வின் நேரடி ஒளிபரப்புக்கான முன்னேற்பாடுகளையும் அவரே மேற்கொண்டார். இம்முறை வெளிக்களப் படப்பிடிப்பு வாகனம் முதல் சகலவற்றையும் ராஜன் ஏற்பாடு செய்திருந்தார். வழமைபோலல்லாது பொங்கு தமிழ் நிகழ்வின் நேரடி ஒளிபரப்பைச் செய்வதற்கு ஸ்ரான் அன்ரனி தலைமையில் ஒரு குழுவே சென்றது. அதில் படப்பிடிப்பாளர்கள் வரன், செல்வன், மற்றும் ராகவன் பரஞ்சோதியும் நானும் இடம்பெற்றிருந்தோம்.

வழமைபோல் நானே வெளிக்களப் படப்பிடிப்பு வாகனத்திலிருந்து ஒளிபரப்பை நெறிப்படுத்தியிருக்க வேண்டும். வெளிக்களப் படப்பிடிப்பு வாகனத்தை வைத்து நிகழ்ச்சிகள் தயாரிப்பதுபற்றி ஏற்கனவே நான் மிக விரிவாக விபரித்திருக்கிறேன். அன்று நான் அவ்வப்போது கமராவில் தோன்றிப் பேசவும் வேண்டியிருந்ததால் படப்பிடிப்பாளர்களுடன் வெளியில் நிற்கவேண்டியிருந்தது. ராகவனும் நேர்முக வர்ணனை செய்ய வேண்டி இருந்ததால் அப்போது ஒளி, ஒலிபரப்புத் துறைகளுக்குப் புரியவரான ஸ்ரான் அன்ரனியை வெளிக்களப் படப்பிடிப்பு வாகனத்தினுள்ளே ஐரோப்பிய தொழில்நுட்பவியலாளர்களுடன் இருந்து நிகழ்ச்சியை நெறிப்படுத்துமாறு கேட்டுக்கொண்டேன். அவர் என்ன செய்யவேண்டும் என்று நான் கூறியவற்றைக் கிரகித்து, முதல் முறையிலேயே அப்பணியைச் சிறப்பாகச் செய்தார் என்று கூறுவேன். அன்றைய நேரடி ஒளிபரப்பு எவ்வித தடங்கலுமின்று நிறைவேறியது. இது நேரடி ஒளிபரப்பென்றாலும் அப்போதைய தொழில்நுட்ப வசதிகளுக்கேற்ப, ஒளிப்பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் ஜெனிவாவிலிருந்து ரொறன்ரோவுக்கு அனுப்பப்பட்டு சிறிது தாமதமாகவே ஒளிபரப்பாகின. அது நாம் வெளிநாடொன்றிலிருந்து வெற்றிகரமாக மேற்கொண்ட மற்றுமொரு பெரிய வெளிக்கள நிகழ்ச்சி.

## இறுதிப் போர்க்காலச் செய்திகள்:

ரீவீஜ, சீஎம்ஆர் ஊடகங்களுக்கு கனடாவாழ் தமிழ் மக்கள் மத்தியில் அமோக ஆதரவு வளர்ந்தது. பொழுபோக்கு ஊடகங்களாக மட்டுமல்லாமல் கனடாவாழ் ஈழத்தமிழர்கள் எதிர்பார்க்கும் செய்திகளையும் தகவல்களையும் தரும் ஊடகங்களாக அவை சிறப்பாக செயற்பட்டன. ஈழத்தமிழர்கள் அனைவருமே மிகுந்த அக்கறை செலுத்திய இறுதிக்கட்டப் போர்க்காலத்தில் கனடாவாழ் ஈழத் தமிழ் மக்களுக்கு போர் பற்றிய செய்திகளை வழங்கும் முன்னணி ஊடகங்களாக ரீவீஜ,சீஎம்-

ஆர் விளங்கின. ரீவீஜ, சீஎம்ஆர் ஊடகங்களின் செய்திகளுக்குப் பொறுப்பாக இருந்த எனக்கு அது ஒரு பெரிய சவாலான காலகட்டம். செய்திப் பிரிவில் பணியாற்றிய ஒலிபரப்பு அனுபவம் மிக்க வீ.என். மதிஅழகன், புதியவர்கள் என்றாலும் செய்தி ஆசிரியர்களின் கடமையை நன்கு உணர்ந்தவர்களாகவும் தொழில்முறை ஒழுக்கத்தைப் பின்பற்றுபவர்களாகவும் பணிபுரிந்த பகீரதன், முருகேசு, பிரசாந்தன், மற்றும் தயாரிப்பாளர்கள், அறிவிப்பாளர்கள், நிர்வாகிகளின் ஒத்துழைப்போடு எனது பணியை உரியமுறையில் செய்யக்கூடியதாக இருந்தது. ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களை ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டு, என்னை அணுகிய நாட்களிலிருந்தே அதன் பிரதானிகளாகப் பணியாற்றிய மோகன் நடராஜா, எஸ். பிரபாகரன் ஆகியோர் செய்திகளைத் தொழில்முறை நேர்தியுடன் வழங்குவதற்கு உதவுமாறே என்னிடம் மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்கள். பிரபாகரன் இதுபற்றி அடிக்கடி மிகவும் வலியுறுத்துவார். எனது தொழில் அனுபவத்திலும் வல்லமையிலும் அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. எனது பணிகளில் எவ்வித குறுக்கீடுகளையும் செய்வதில்லை. பின்னர் பிரதானியாகப் பொறுப்பேற்ற ஸ்ரான் அன்ரனியும் அந்த நிலைப்பாட்டையே கொண்டிருந்தார். எனவே, என்னால் தொழில்முறையில் இயங்கக்கூடியதாக இருந்தது.

நோர்வேயின் முன்னெடுப்பில் 2002-ம் ஆண்டு, ஃபெப்ரவரி மாதம் 22-ம் திகதி 'நிரந்தர சமாதானத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்' விடுதலைப் புலிகளாலும் இலங்கை அரசாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சர்வதேச நிபுணர் குழுவின் கண்காணிப்பில் நடைமுறையிலிருந்த சமாதான காலத்திலேயே ஆங்காங்கே யுத்த மீறல்களும் தாக்குதல்களும் அத்தோடு பேச்சுவார்த்தைகளும் நடந்துகொண்டிருந்தன. அவற்றை நாம் சரியானபடி மக்களுக்கு வழங்கிக்கொண்டிருந்தோம். 2006-ம் ஆண்டு, ஜுலை மாதம் மாவிலாறு அணையிலிருந்து நீரைத் திறந்துவிடுவது சம்பந்தமான பிரச்சினையில் அரச-படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்கள் சம்பூர், மூதூர் என்று தொடர்ந்தது. அதேநேரம் 2006-ம் ஆண்டு, ஒக்ரோபரில் இருதரப்பினருக்குமிடையேயான பேச்சுவார்த்தை ஜெனீவாவில் இடம்பெற்றது. அது முறிவடைந்ததும் 2006 டிசம்பரில் இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்து, விடுதலைப் புலிகளுடனான போரைக் கிழக்கு மாகாணத்தில் ஆரம்பித்தது. அந்தப் போரை இலங்கை அரசு 2007-ம் ஆண்டு, ஜுலை மாதத்தில் வெற்றிகரமாக முடித்தது.

அதேயாண்டு செப்ரெம்பரில் வடபகுதியில் அரச படைகள் தாக்குதல்கள் ஆரம்பித்தன. உயிலங்குளம், பரப்பாங்கண்டல், தம்பனை ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்ட போர் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில், 2007 நவம்பர் 2-ம் திகதி, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ்.பீ. தமிழ்ச்செல்வன் அவர்கள், பங்கர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவம் ஈழத் தமிழ் மக்களுக்கு ஓர் அதிர்ச்சி செய்தியாக வந்தடைந்தது. நான் 2006-ம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் தமிழ்ச்செல்-வன் அவர்களை ஜெனீவாவில் நேரில் பார்த்திருக்கிறேன். அதற்கு முன்னர் 2005-ம் ஆண்டு, ஃபெப்ரவரியில் நானும் ரீவீஜ தயாரிப்பாளர் ரமேசும் சுனாமி பற்றிய நிகழ்ச்சி தயாரிப்பதற்காக இலங்கை சென்றபோது தமிழ்ச்செல்வன் அவர்களை மிக அருகில் பார்த்திருக்கிறேன். ஆனால், ஒருபோதும் அவருடன் நேரடியாகப் பேசியதில்லை. இயல்பாக முகத்தில் தோன்றும் புன்னகையோடு பேசும் அவரை, விடுதலைப் புலிகளின் அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்ற ஒருவராக நான் கருதினேன். அவர் இறந்த செய்தி, இலங்கை அரச படைகள் இராணுவத் தாக்குதல்களை ஆரம்பித்து முன்னேறிவரும் அக்காலகட்டத்தில் ஈழமக்களுக்குப் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியது. 2007-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ம் திகதி, ஒரு வெள்ளிக்கிழமை. காலை எனது அலுவலகம் செல்ல ஆயத்தமாகிக்கொண்டிருந்த எனக்கு, ரீவீஜ கலையகத்தில் இருந்து ரமேஷ் அழைத்து அந்த செய்தியைச் சொன்னதுமே, நான் எனது அலுவலகத்துக்கு அறிவித்துவிட்டு, ரீவீஜ கலையகத்திற்குச் சென்று உடனேயே தமிழ்ச்செல்வன் பற்றிய நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒளிபரப்பத் தொடங்கினோம். சீஎம்ஆர் ஒரு பல்கலாச்சார வானொலி. அதன் ஒலிபரப்பில் பகல் வேளைகளில் பிற மொழிகளில் ஒலிபரப்புகள் இடம் பெறுவதால் ரீவீஜ-யே பகல் நேரத்தில் தமிழ் மக்களுக்கு செய்தி வழங்கக்கூடிய ஊடகமாக விளங்கியது. ஒருசில நாட்களில் தமிழ்ச்செல்வன் அவர்களுக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியொன்று, ரொறன்ரோ மார்க்கம் திடலில் ஒழுங்கு செய்யப்பட்டது. நவம்பர் மாதக் குளிரில், மழையும் பெய்துகொண்டிருந்த அந்த நாளில் பெருந்திரளான மக்கள் கூடி அஞ்சலி செலுத்தினார்கள். அந்த நிகழ்வை ரீவீஜ முழுமையாக நேரலையில் ஒளிபரப்பியது.

2007-ம் ஆண்டு, செப்ரெம்பர் மாதம் வடபகுதியில் ஆரம்பித்த போர் சற்று மெதுவாக நடைபெற்று, 2008-ம் ஆண்டு, நவம்பரில் அரச படைகள் மாங்குளத்தை அடையவே கனடாவாழ் ஈழத் தமிழ் மக்கள் பதற்றமடையத் தொடங்கினார்கள். ரொறன்ரோவாழ் தமிழர்கள் இலங்கையில் யுத்த நிறுத்தத்தைக் கோரியும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வலியுறுத்தியும் ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் நடத்தத் தொடங்கினார்கள். அவை தொடர்ந்து நடைபெற்றன. அந்நிகழ்ச்சிகள் அனைத்தும் ரீவீஜ-யில் உடனுக்குடன் ஒளிபரப்பப்பட்டன. 2009-ம் ஆண்டு, ஜனவரி மாதம் 1-ம் திகதி, அரசபடை பரந்தனைக் கைப்பற்றியது. கனடாத் தமிழர்களின் போராட்டமும் ரொறன்ரோ, ஒட்டாவா நகரங்களில் வலுவடையத் தொடங்கின. ஏறத்தாழ அனைத்து ஈழத் தமிழர்களுமே கவலை மிக்கவர்களாக இந்தப் போராட்டங்களில் கலந்துகொண்டார்கள். ரொறன்ரோவில் மையப் பகுதி போராடும் தமிழ் மக்களால் நிரம்பி வழிந்தது.

அரச படைகள் கிளிநொச்சிக்குள் புக முடியாதென்று திடமாக நம்பியிருந்த தமிழ் மக்களுக்கு கிளிநொச்சி 2009-ம்

ஆண்டு, ஜனவரி 2-ம் திகதி அரசபடைகள் வசமானதும் பதற்றமும் கவலையும் அதிகரித்தது. இலங்கை விடயத்தில் கனடிய அரசு தலையிட்டு அமைதியைக் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கையுடன் மக்கள் மேலும் தீவிரமாக ரொறன்ரோ வீதிகளில் இறங்கிப் போராடினார்கள். அரச படைகள் பல பக்கங்களாலும் சூழ்ந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டே வர, ஈழத் தமிழர்கள், உலகம் முழுவதுமே ஒன்று சேர்ந்துதான் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அந்தப் போரை நடத்துகிறதென்று உணர்ந்து மிகவும் ஆவேசம் கொண்டார்கள். உலக நாடுகள் அனைத்துமே தம்மைக் கைவிட்டுவிட்டன என்ற விரக்தி மனப்பான்மையில் தமது வீதிப் போராட்டங்களை மேலும் வலுப்படுத்தினார்கள். ரொறன்ரோவில் வாழும் தமிழ் மக்களில் பெரும்பாலானோர் கலந்துகொண்ட இந்தக் கோரிக்கைப் போராட்டங்களின் உச்சக் கட்டமாக, 2009-ம் ஆண்டு, மே மாதம் 11-ம் திகதி, ரொறன்ரோ நகரின் பிரதான பெருந்தெருக்களில் ஒன்றான கார்டினர் கடுகதி வீதியில் (Gaddener Express Way) ஏறித் தமிழ் மக்கள் போராடிய சம்பவம் நடந்தது. கனடா முதல்முதலாக அப்படி ஒரு மக்கள் போராட்டத்தைக் கண்டது. இத்தகைய போராட்டங்களால் தமது அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுவதாகப் பல கனடியர்கள் அதிருப்தியடைந்தாலும் அனேகமான கனடிய மக்கள் இலங்கை நிலைபற்றி அறிந்தவர்களாகப் போராடிய மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டார்கள்.

ரீவீஐ, சீஎம்ஆர் ஊடகங்கள் ரொறன்ரோவில் நடைபெறும் இலங்கைப் போர்குறித்த ஆர்ப்பாட்டங்களைத் தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்திக்கொண்டே இருந்தன. குறிப்பாக, ரீவீஐ ஊடகத்தின் அன்றாட ஒளிபரப்புகளில் வழமையான நிகழ்ச்சிகள் இரத்து செய்யப்பட்டு இந்தப் போராட்டங்கள் பற்றிய செய்திகளே காட்சிகளாக ஒளிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தன. தமிழ் மக்கள் மிகக் கவலை கொண்டவர்களாக ரீவீஐ தொலைக்காட்சியைப் பார்த்தவண்ணம் இருந்தார்கள். ரீவீஐ படப்பிடிப்பாளர்கள் தொடர்ந்து போராட்ட நிகழ்வுகளைப் படம் பிடித்துக்கொண்டு வந்தார்கள். ரொறன்ரோ வீதிகளில் அலையெனத் திரண்டு வரும் தமிழ் மக்கள் ஊர்வலத்தின் பிரமாண்டத்தைப் படம் பிடித்துக் காட்டுவதற்கு, மேலே பறந்து படம்பிடிக்கும் கமராக்கள் (Drone cameras) பரவலாகப் பாவனைக்கு வராத காலமது. எனவே, ரீவீஐ உலங்கு வானூர்தி (helicopter) ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அதில் ரீவீஐ படப்பிடிப்பாளர் செல்வனும் ரீவீஐ, சீஎம்ஆர் அறிவிப்பாளர் பீ.எஸ். சுதாகரனும் ரொறன்ரோவுக்குப் மேலாகப் பறந்து, ஊர்வலக் காட்சிகளைப் படமாக்கிக் கொண்டுவர அவற்றை ஒளிபரப்பினோம்.

இவ்வாறு ரீவீஐ, சீஎம்ஆர் ஊடகங்கள் மக்களின் ஊடகங்களாக செயற்பட்டு இலங்கைப் போர் சம்பந்தமாகவும் ரொறன்ரோவில் தமிழ் மக்கள் மேற்கொள்ளும் வீதிப் போராட்டங்கள் பற்றியும் செய்திகளை வழங்க வழங்க, அவற்றைப் பார்த்த தமிழ் மக்கள் உணர்ச்சி மேலிட்டவர்களாகத் திரண்டுசென்று அந்தப் போராட்டங்களில் கலந்து கொண்டார்கள். நானும் ரீவீஐ, சீஎம்ஆரின் செய்திப் பிரிவினைச் சேர்ந்த அனைவரும் இலங்கைப் போர் பற்றி சர்வதேச செய்திச் சேவைகள் தரும் செய்திகளையும் இலங்கை ஊடகங்கள் தரும் செய்திகளையும் மிகக் கூர்ந்து கவனித்தோம். நான் தொழில் செய்யும் இடத்தில் எனது கொம்பியூட்டரில் இந்தச் செய்திகளே எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும். ரொறன்ரோவில் இயங்கும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்பினரின் உதவியுடன் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்தும் போர்பற்றிய செய்திகளை எம்மால் பெறக்கூடியதாக இருந்ததால் அனைத்துத் தரப்புச் செய்திகளையும் சீர்தூக்கிப் பார்த்து, சரியான செய்திகளைத் தமிழ் மக்களுக்கு வழங்கக்கூடியதாக இருந்தது. ரொறன்ரோவாழ் தமிழ் மக்கள் அந்த நேரத்தில் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவர்களாக இருந்த காரணத்தால், விடுதலைப் புலிகளை எதிர்மறையாக விமர்சிக்கும் எந்தச் செய்தியையும் நாம் ஒளிபரப்பவில்லை. உலகச் செய்திகள், இலங்கை அரச செய்திகள், புலிகள் தரப்புச் செய்திகளை ஆராய்ந்து போரின் முன்னேற்றம் அல்லது பின்னடைவு பற்றிய செய்திகளையே தொகுத்து வழங்கினோம். விடுதலைப் புலிகளை விமர்சிக்கும் செய்திகள் அல்லது குற்றம் சுமத்தும் செய்திகள், இலங்கை இராணுவத் தரப்பிலிருந்து மட்டுமே கிடைத்ததால் அவற்றை நம்பகமான செய்திகளாக எம்மால் கருதமுடியவில்லை. எமது செய்திகளில் போரின் நிலை பற்றிய, போரில் அகப்பட்டிருந்த மக்களின் நிலை பற்றிய செய்திகளே பிரதானமானவையாக இருந்தன. யுத்தம் பற்றிய சரியான தகவல்களைக் கொடுக்கவேண்டும், அதேவேளை உணர்ச்சிவசப்பட்டிருக்கும் மக்களின், பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் உணர்வுகளைப் புண்படுத்துபவையாகவும் ஆத்திரமூட்டுபவையாகவும் இருக்கக் கூடாதென்பதே எமது நோக்கமாக இருந்தது. அப்படியிருந்தும் போர்பற்றிய உண்மையான செய்திகளைக் கொடுத்த எமது செய்திகளில் அரசபடைகள் முன்னேறிக்கொண்டிருப்பதைக் கூறவேண்டியேற்பட்டதால் ரீவீஐ, சீஎம்ஆர் செய்திகளுக்குப் பொறுப்பாக நான் இருப்பதை அறிந்த சிலர் தொலைபேசியில் என்னை அழைத்து மக்களின் நம்பிக்கையைத் தகர்த்துவிடவேண்டாமென்று என்னைக் கேட்டுக்கொண்டார்கள். என்னிடம் அவ்வாறு கேட்டுக்கொண்ட ஒருவரிடம், மக்களின் நம்பிக்கையைச் சிதைக்கும் செய்திகளை அவர்களுக்கு வழங்கக்கூடாதென்றால், போர் பற்றிய செய்தியையே வழங்கக் கூடாதென்று கூறினேன். பின்னாட்களில் அவர் எனக்கு நண்பரானார்.

2009-ம் ஆண்டு, மே மாத நடுப்பகுதி மிகவும் பதற்றம் நிறைந்த நாட்கள். ரீவீஐ, சீஎம்ஆர் நிறுவனங்களில் பணியாற்றிய அனைவருமே மிகுந்த மன அழுத்தத்துக்குள்ளானவர்களாகக் காணப்பட்டார்கள். நடந்த உண்மைகளை உள்ளபடியே சொல்வதுதான் செய்தி என்று இலகுவாகச் சொல்லிவிடலாம். அந்த உண்மையை யாருக்குச் சொல்கிறோம், எப்படிச் சொல்லவேண்டும், எப்போது சொல்லவேண்டும் என்பதற்கு வெகுஜன ஊடகங்களின் செய்தித்துறை பற்றிய ஆழ்ந்த புரிதலும் அனுபவமும் தேவைப்படுகிறது. போரின் இறுதி நாட்களில் மிகுந்த அவதானத்தைக் கடைப்பிடித்தோம். மே 15-ம் திகதி என்று நினைக்கிறேன், உறுதியாகச்

சொல்லமுடியவில்லை. விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள், கே.பீ. எனப்படும் குமரன் பத்மநாதனை விடுதலைப் புலிகளின் சர்வதேசத் தொடர்பாளராக அறிவித்தார் என்று அறிவிக்கப்பட்டது. மே 16, 17 சனி ஞாயிறு தினங்கள். போரின் இறுதி நாட்கள். ரீவீஜ, சீஎம்ஆர் நிர்வாகிகள், பணியாளர்களில் பெரும்பாலானவர்கள் நிலையத்திலேயே இருந்து அவ்வப்போது விசேட செய்திகளை ஒளி, ஒலிபரப்பிக்கொண்டிருந்தோம். மே 17-ம் திகதி, விடுதலைப் புலிகளின் சர்வதேசத் தொடர்பாளர் என்று அறிவிக்கப்பட்ட குமரன் பத்மநாதன் அவர்கள் 'எமது யுத்தம் அதன் கசப்பான முடிவை அடைந்துவிட்டது. நாம் எமது துவக்குகளை மௌனிக்கத் தீர்மானித்து விட்டோம்' என்று அறிவித்தார். அந்தச் செய்தியைக் கனத்த இதயத்துடன் ஒளி, ஒலிபரப்பினோம்.

## மே 18-ஆம் திகதி, திங்கட்கிழமை:

தமிழ் மக்கள் எதிர்பார்த்திராத அந்தச் செய்தி கிடைத்தது. விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், அரச படையினரால் கொல்லப்பட்டுவிட்டாரென்று அரச தரப்பினர் வெளியிட்ட அந்த செய்தி தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, இலங்கைப் பிரச்சினையில் கவனம் செலுத்திய அனைத்து மக்களுக்குமே பெரிய அதிர்ச்சிச் செய்தியாக அமைந்தது. தமிழ் மக்களில் பல தரப்பினராலும் அந்தச் செய்தியை நம்ப முடியவில்லை. உலகச் செய்திச் சேவைகள் அனைத்திலும் இலங்கை அரச படைகளால் வழங்கப்பட்ட காட்சிகளோடு கூடிய செய்திகள் ஒளிபரப்பப்பட்டன. அந்தச் செய்திகளை நாமும் பெற்றுக்கொண்டோம். ஆனால், தமிழ் மக்களில் பலரும் நம்ப மறுத்த அந்தச் செய்தியை வெளியிடுவதற்கு எமக்குத் தயக்கமாக இருந்தது. இத்தகைய தருணங்களில் செய்திகளை மக்களுக்குச் சொல்வது என்று இயந்திரத்தனமாக இதழியலில் கற்றவற்றை நாம் நடைமுறைப்படுத்த முடியாது. அந்தச் செய்தியை உறுதி செய்துகொள்வதற்கு எந்த வழியும் எமக்கு இருக்கவில்லை. எனவே, நாம் எப்படியாவது அதை உறுதி செய்தபின்னரே மக்களுக்குச் சொல்லவேண்டுமென்று தீர்மானித்தோம். ஆனால், அவ்வாறு உறுதி செய்வது சுலபமான விடயமாக இருக்கவில்லை. அதேநேரம் அந்தச் செய்திபற்றி எதுவுமே பேசாமல் இருப்பதும் தமிழர்களின் பிரதான செய்தி ஊடகங்களான ரீவீஜ, சீஎம்ஆர் ஊடகங்களுக்கு தர்மசங்கடமான நிலையாக இருந்தது. என்னைத் தெரிந்தவர்கள் என்னிடம் நேரடியாகக் கேட்கத் தொடங்கிவிட்டார்கள். ரீவீஜ, சீஎம்ஆர் நிர்வாகிகளும் செய்திப் பிரிவு சார்ந்த அனைவரும் இதுபற்றிக் கலந்து பேசினோம். நாட்கள் சென்றுகொண்டே இருந்தன. அந்தச் செய்தியை சரியானபடி உறுதி செய்யும் வழியெ துவும் இருக்கவில்லை. இறுதியில் ரீவீஜ நிர்வாகம் பலத்த கலந்தாலோசனைகள், விவாதங்களின் பின்னர் பிரபாகரன் அவர்கள் கொல்லப்பட்ட செய்தியை மக்களுக்குச் சொல்வதென்று முடிவெடுத்தது. முடிவெடுத்தபடி விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் இறந்துவிட்டதாக 2009-ம் ஆண்டு, மே மாதம் 24-ம் திகதி, ஓர் அறிவிப்பாக ரீவீஜயிலும் சீஎம்ஆரிலும் வெளியிடப்பட்டது. அந்த அறிவிப்பு ராகவன் பரஞ்சோதியின் குரலில் ஒளி, ஒலிப்பதிவுகள் செய்யப்பட்டது.

நாம், தொழில்முறையில் செய்தியாளர்களாக அந்தச் செய்தியை ஒளிபரப்பினாலும் தமிழர்களாக எமது உணர்வுகள் கனத்திருந்தன. அந்தச் செய்தி ரீவீஜ-யில் ஒளிபரப்பப்பட்டபோது ரீவீஜ நிலையத்தில் பெரிய தொலைக்காட்சி பொருத்தப்பட்ட வரவேற்புக்கூடம் இருந்த பக்கத்திலிருந்து ஒரு பெண் குமுறிப் பலத்த சத்தமாக அழுவது கேட்டது. ஓடிச் சென்று பார்த்தபோது நிலையத்தில் பணிபுரிந்த ஒரு பெண் ஊழியர் அந்தச் செய்தியைத் தாங்க முடியாமல் உடைந்து அழுது கொண்டிருந்தார். அனைவரது கண்களும் நிறைந்தன. உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் மனநிலையை அது பிரதிபலித்தது.

அந்த அறிவித்தல் அன்று சில தடவைகள் ரீவீஜயிலும் சீஎம்-ஆரிலும் ஒளி, ஒலிபரப்பப்பட்டன. அதைப் பார்த்த அல்லது கேட்ட உணர்ச்சிவசப்பட்ட மக்கள் கூட்டமொன்று அன்று மாலை ரீவீஜ நிலையத்திற்கு வந்து அந்தச் செய்தியை மேற்கொண்டு ஒளி, ஒலிபரப்ப வேண்டாமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க நாம் அதை நிறுத்திவிட்டோம். வே. பிரபாகரன் அவர்கள் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்று அன்று ஆரம்பித்த சர்ச்சை நான் இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் 2003-ம் ஆண்டு, ஃபெப்ரவரி மாதம் 15-ம் திகதிவரை தொடர்கிறது. ஏறக்குறையப் பதினான்கு ஆண்டுகளாகத் தொடரும் இந்த சர்ச்சை எப்போது ஓய்வுக்கு வருமென்று இப்போது சொல்லமுடியாதிருக்கிறது.

இலங்கையில் நான் 1976-ம் ஆண்டிலிருந்து வானொலியிலும் பின்னர் தொலைக்காட்சியிலும் செய்தி வாசித்திருந்தாலும் எமக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளின்போதும் தொலைக்காட்சியில் பணியாற்றியபோது கலந்துகொண்ட செய்தி பற்றிய பயிற்சிப் பட்டறைகள், மற்றும் கலந்துரையாடல்களின்போதும் வெகுஜன ஊடகங்களின் செய்தித்துறை பற்றிப் பலவற்றைக் கற்றிருந்தாலும் செய்தி வாசிப்பதைத் தவிர செய்திகள் பற்றிய முடிவுகளை மேற்கொள்கின்ற செய்தி ஆசிரியர் நிலையில் நான் பணியாற்றியதில்லை. அங்கு ஒளி, ஒலி ஊடகங்களில் எனது பணியும் அனுபவமும் பெரும்பாலும் கலைத்துறை சார்ந்ததாகவே இருந்தது. ஆனால், ரீவீஜ, சீஎம்ஆர் ஊடகங்களின் செய்திப் பிரிவுக்கு நேரடியாகப் பொறுப்பு வகித்த பதினைந்து வருடங்களில் மிக விரிவாகவே செய்தித்துறை அனுபவத்தைப் பெற்றேன். இலங்கைத் தமிழர்களின் மிக முக்கியமான காலகட்டத்தில், அவர்களுக்கான ஊடகங்களில் செய்தி பற்றிய முடிவுகளை எடுக்கக்கூடிய பொறுப்பை ஏற்று, அனுபவத்தைப் பெற்றமை எனது ஊடகப் பயணத்தில் மிக முக்கியமான நிகழ்வு, நினைவு.



*wikneswaran.p@thaiveedu.com*



# அரபுமொழிச் சொற்களும் சம்மாந்துறை வட்டார வழக்கும்

## – எம்.ஐ.எம். சாக்கீர்

இஸ்லாமிய சமயத்தைப் பின்பற்றும் சகலரும் அரபு மொழிக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்திருப்பார்கள். அவர்களது புனித வேதம் அருளப்பட்ட மொழி என்ற வகையிலும், புனித இறைத்தூதர் வாழ்ந்த அரேபிய தீபகற்பத்தின் மொழி என்ற வகையிலும் அரபுக்கு தனியிடம் உண்டு.

இலங்கைக்கு அரபு, பாரசீகம் போன்ற மொழிகள் இஸ்லாத்திற்கு முந்தைய கால வர்த்தகத்துடன் தொடர்புபட்டிருப்பினும். இஸ்லாத்தின் அறிமுகத்துடன் அன்றாட சொற்களை விட இஸ்லாமிய கலைச்சொற்கள் அதிகம் புழங்கத் தொடங்கின.

ஆரம்பகாலத்தில் திருக்குர்ஆனை மொழிபெயர்த்து பிற மொழிகளில் எழுதுவதையே தயங்கியதால், அரபு லிபியில் தமிழ் மொழி எழுதப்பட்டது. இது இலங்கை, தென்னிந்தியா போன்ற நாடுகளில் அர்வி எனப்பட்ட அரபுத்தமிழ் என்ற புதிய கிளைமொழியின் தோற்றத்திற்கு வித்திட்டது. இதற்காக அரபியில் இல்லாத தமிழ் உச்சரிப்புகளுக்காக சில அரபு எழுத்துக்களுடன் புதிய குறியீடுகள் சேர்க்கப்பட்டு அரபுத்தமிழ் உருவாக்கப்பட்டது.

அரபுத்தமிழில் ஏராளமான மார்க்க கிரந்தங்கள், புகழ்ப்பாக்கள், உபன்யாசங்கள் கொண்ட புத்தகங்களும், பத்திரிகைகளும் வெளியிடப்பட்டுள்ளன. இம்மொழி தற்காலத்தில் அருகிவிட்ட போதும் முஸ்லிம் கிராமங்களில் பெண்கள் அரபுத்தமிழ் கிரந்தங்களை படிப்பதில் ஆர்வத்துடன் இருந்துவருகின்றனர்.

இஸ்லாம் தமிழ் பேசும் சமூகங்களில் அறிமுகமாகும் பொழுதே மக்கள் புழக்கத்திலுள்ள பல சொற்களை அரபிய சொற்களுக்குச் சமானமாக பயன்படுத்தத் தொடங்கினர். உதாரணமாக தொழுகை, பள்ளி, நோன்பு, நாயகம், தூதர், வானவர்கள், அமரர்கள் போன்ற சொற்களைக் குறிப்பிடலாம்.

அதே வேளை பல சொற்கள் இலகுத்தன்மையின் பொருட்டும் தமிழில் இல்லாத உச்சரிப்புகளின் பொருட்டும் அரபியிலேயே உச்சரிக்கப்படுகின்றன. உதாரணமாக: ஹலால், ஹறாம், நஜீஸ், மௌத், ஹயாத், ஸஹர், ஜும்ஆ, இப்தார், போன்ற சொற்களைக் குறிப்பிடலாம்.

சம்மாந்துறை வட்டாரவழக்கிலுள்ள அரபுமொழிச்சொற்களை இரண்டாக வகுக்கலாம்:

- அரபு உச்சரிப்புகளுடன் அவ்வாறே பயன்படுபவை.
- தமிழாக்கப்பட்ட அரபுமொழிச்சொற்கள்.

மேலும் இவற்றின் பொருள் அடிப்படையில் இவற்றை...

- இஸ்லாமிய சமயம் தொடர்பான சொற்கள்
- பொதுவான அரபுமொழிச் சொற்கள்

என்றும் இரண்டாக பகுக்கலாம்.

சம்மாந்துறை முஸ்லிம்களில் கணிசமானோர் அரபுமொழி வாசிக்கத் தெரிந்தவர்கள். அதாவது, குர்ஆனை அரபுமொழியில் பார்த்து ஓதுவதற்கு (பாராயணம் செய்வதற்கு) தெரிந்தவர்கள்.

அனைவரும் பொதுவாகப் புழங்கும் அரபுச்சொற்களைப் புரிந்துகொள்ளக் கூடியவர்கள். சிலர் அரபுசொற்களை தமிழ் என்ற எண்ணத்திலேயே புழங்கிவருபவர்களாகவும் உள்ளனர்.

அனைவரும் அலுவல் மொழியாக பொதுத்தமிழைப் பயன்படுத்துகின்ற அதே வேளை, தொன்று தொட்டு சகல தொழுகைகளும், மார்க்க உச்சாடணங்களும் அரபியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. வெள்ளிக்கிழமை கூட்டுத்தொழுகையின் பிரசங்கம் இரு மொழிகளிலும் நடைபெறுகின்றது.

**நடைமுறையிலுள்ள சில சொற்களின் பட்டியலை பொருளுடன் நோக்கலாம்:**

| | |
|---|---|
| அல்லாஹ் | இறைவன் |
| நபி | இறைத்தூதர் |

| | |
|---|---|
| மலக்கு (மலாஇகா) | அமரர்கள் |
| ஜின் | நெருப்பால் படைக்கப்பட்ட அமானுஸ்ய படைப்பு |
| கலிமா | உறுதிமொழி |
| ஸகாத் | ஏழைகளுக்கான கொடை |
| ஸதகா | அன்பளிப்பு |
| ஹஜ் | மக்கா மதீனா ஆகிய இடங்களுக்கு செல்லும் வருடாந்த புனித யாத்திரை |
| உம்றா | மக்காவிற்கான புனித யாத்திரை |
| ஸியாரம் | புனிதர்களின் அடக்கஸ்தலம் |
| ஸியரத் | அடக்கஸ்தலங்களை தரிசித்தல் |
| துஆ | பிரார்த்தனை |
| ஸஹர் | நோன்பு ஆரம்பிக்கும் பொழுது புலரமுன்னுள்ள காலம் |
| சுபஹ் | வைகறைத் தொழுகை |
| லுஹர் | நண்பகல் தொழுகை |
| அசர் | அந்திநேர தொழுகை |
| மகரி (மஃரிப்) | மாலை நேர தொழுகை |
| இஸா | இரவுதொழுகை |
| தக்பீர் | மார்பில் கைகளைக்கட்டியுள்ள தொழுகை நிலை |
| றுகூஉ | முழங்காலில் கைகளை வைத்து முன்னால் மடிந்து நிற்கும் தொழுகை நிலை |
| ஸுஜுது, | நிலத்தில் பணிந்து இருக்கும் சாஸ்டாங்க நிலை |
| நிய்யத் | எண்ணம், செயலை ஆரம்பிக்க முன் அதுபற்றி பிரக்ஞையூட்டும் உறுதிமொழி |
| இமாம் | தலைவர், தொழுகை நடத்துபவர் |
| முஅத்தின் | பாங்கு சொல்பவர் |
| மௌலவி | மௌலவி பட்டம் பெற்ற மாரக்க அறிஞர் |
| ஆலிம் | அறிஞர் |
| உஸ்தாத் | ஆசிரியர் |
| கிதாபு | புத்தகம் |
| இப்தார் | நோன்பு திறக்கும் நிகழ்வு |
| மையத் (மையித்) | இறந்தவரின் உடல் |
| கபன் | இறந்த உடலை சுற்றும் வெண்ணிறதுணி |
| சுர்மா | கண்மை |
| அத்தர் | வாசனைத்திரவியம் |
| மீஸான் | அடக்கம் செய்த இடத்தில் வைக்கப்படும் அடையாளக்கல் அல்லது பலகை |
| ஹலால் | அனுமதிக்கப்பட்டது |
| ஹறாம் | தடுக்கப்பட்டது |
| நஜீஸ் | அசுத்தமானது |
| ஒதியா, உழ்கியா | கால்நடைகளை அறுத்து தானம் செய்தல் |
| அகீகா | பிள்ளை பிறந்ததற்காக செய்யப்படும் விருந்து |
| வலீமா | மணமகனின் ஏற்பாட்டில் நடைபெறும் திருமணவிருந்து |
| வலி | மணமகளின் தந்தை அல்லது மணமுடித்து கொடுக்கும் ஒப்பந்தக்காரர் |
| மஹர் | மணமகளுக்கு மணமகன் கொடுக்கும் மணக்கொடை |
| கத்னா, ஸுன்னத் | விருத்தசேதனம் |
| பர்ளு | கட்டாயகடமை |
| ஜனாஸா | இறந்தவரது உடல் |
| கப்று | இடக்கம் செய்யும் குழி |
| மஹ்சர் | நியாயந்தீர்கும் மைதானம் |
| றூஹு | உயிர் |
| பறக்கத் | அருள் |
| சைத்தான் | கெட்டஜீவி |
| ஹைர் | நல்லது |
| மஹல்லா | பகுதி, வட்டாரம் |
| தலாக் | கணவன் கொடுக்கும் மணவிலக்கு |
| அதாபு | வேதனை |

**அரேபிய உணவுகள்:**

புரியாணி அரேபியாவில் பிரபல்யமான உணவாக இருப்பி னும் முகாலாய சாம்ராஜ்யகாலத்தில் தான் இது பிரபல்யப்ப டுத்தப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டதாக ஆஸிப் ஹுஸைன் குறிப்பிடுவார். அதேபோல் சம்சா எனப்படும் உணவும் அரே பியாவில் இருந்து வட இந்தியர்கள் மூலமாக இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. கிழக்கிலங்கையில் 50-களுக்குப் பின்னரே கடிப்பானாக பெரிதும் பிரபல்யமானது. இந்த சமோசா என்ற வார்த்தை சன்புசக் என்ற அரேபிய வார்த்தை யிலிருந்து பிறந்ததாக குறிப்பிடப்படுகின்றது. அதே போல் மஸ்கட், சர்பத், போன்ற உணவுகளும், வார்த்தைகளும் அரேபிய மூலத்திலிருந்து வந்தவையாகும்.

அதே வேளை பழமொழிகள், ஆட்பெயர்கள், இடப்பெயர் கள், வர்தகப் பெயர்கள், இலக்கியங்கள் போன்றவற்றிலும் அரபுமொழியின் செல்வாக்கு அதிகம் காணப்படுகின்றது. இவ்வாறு மத்தியகிழக்கின் பண்பாட்டுக்கூறுகள் மொழியினூ டும் இங்கு கலந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.



saakir.mim@thaiveedu.com


# கோலங்கள்

அரங்கேற்றம், கலைநிகழ்ச்சி, திருமணம், பூப்புனித நீராட்டு போன்ற வைபவங்களுக்கு கோலம் போட்டு அலங்கரிக்க, Floor Decoration for Arangetram Wedding and other Cultural Functions.

**Bhamini: 647 294 0736, 416 491 6057.**

# கிழக்கிலங்கைத் தொல்குடிகளின் நில ஆக்கிரமிப்பும் குவேனி பழங்குடி அமைப்பின் தோற்றமும்

**- க. பத்திநாதன்**

வரலாற்றுத் தொடக்க காலத்திற்கு பல ஆயிரம் ஆண்டுகள் முன்பான இடைக்கற்கால காலத்தில் இருந்தே இலங்கையில் தொல்குடிகள் வாழ்ந்து வருகின்றனர் என மானிடவியல் மற்றும் வரலாற்று சொல்லாடல்கள் மற்றும் வெகுசனப் பரப்பில் குறிப்பிடப்படுகின்றனர். சிங்கள மற்றும் தமிழ் இனக்குழுமங்கள் தமது மூதாதையர்களாக இன்றைய சூழலில் அடையாளப்படுத்த முயற்சிக்கும் இயக்கர், நாகர் குடிகளின் காலத்துக்கு பல ஆயிரமாண்டுகள் முந்திய காலம்தொட்டு இன்றும் பழங்குடி அடையாளங்களுடன் தொடரும் பழங்குடிகளாக இத்தொல்குடிகள் உள்ளனர்.

அம்பாறை தொடங்கி மட்டக்களப்பு, திருகோணமலை என மிக நீண்ட கரையோரத்துடன் அண்டியதாக வாகரை, வெருகல், மூதூர் பாட்டாளிபுரம், இலக்கந்தை, சந்தோசபுரம், இலங்கைத்துறை, மாங்கேணி, கழுவாக்கேணி, காயங்கேணி, பனிச்சங்கேணி, மதுரங்குளம், கிரிமிச்சை, உறியக்காடு, கதிரவெளி, கட்டுமுறிவு, அமந்தனாவெளி, புன்னைக்கிளங்கு, குஞ்சான்குளம், மட்டக்களப்பு வேடர் குடியிருப்பு (குடியிருப்பு), தளவாய், சித்தாங்கேணி, களுவன்கேணி, நாசிவன்தீவு, இறால் ஓடை, பொண்டுகள் சேனை, கொங்கனை, பால்ச்சேனை, திராய்மடு, வாகனேரி, முறுத்தானை, தம்பானை, கொக்கட்டிச்சோலை, கழுமுந்தன் வெளி, கரடியன்குளம், வேப்பவெட்டுவான், குசலன்மலை, விந்தனை, நாடுகாடு போன்ற பல இடங்களில் கடலோர வேடர்களான கிழக்கிலங்கை வேட்டுவ குடிகளின் குடிப்பரம்பல் அமைந்துள்ளது.

காலஓட்டத்தின் இன சமூகக் கலப்புகளிலிருந்தும் தமது தொல்குடி அடையாளத்தினை சடங்கின் அடியாக பாதுகாக்கின்றனர். இன்றும் கிழக்கின் பழங்குடிகளின் அடையாளங்கள் சடங்கார்ந்த நடவடிக்கைகள் ஊடாக வெளிக்கிளம்பிய படியே காணப்படுகின்றன.

வளப்போட்டிகள் மிகுந்த கிழக்கு மாகாணத்தில் நவீன வாழ்க்கை முறையை உட்செரித்துக் கொண்டுள்ள, போட்டிகள் நிறைந்த சமூகச் சூழல், பொருளாதார நெருக்கடிகள், காலனிய நுகர்வுச் சூழல், பேரினவாதச் சிந்தனை, ஆரியக் கலப்புடனான தமிழ்க்காலனியம் முதலான பண்பாட்டசைவுக் கூறுகள் போன்றவற்றால் தொல்குடிகள் தம் நிலங்களை, வளங்களை மற்றும் பண்பாடுகளைச் சிதைப்புச் செய்வதற்கும், சூறையாடுவதற்கும் ஏற்ற சூழ்நிலை இன்றைய காலகட்டத்தில் மிகப் பெருவாரியாக உருவாகி இருக்கிறது. இவற்றை எதிர்கொள்ளவும் அத்துடன் பாடசாலைக் கல்வியறிவு போன்றவற்றுக்காகவும் இற்றை வரைக்கும் தொல்குடிகள் தாம் போராட வேண்டிய நிலை காணப்படுகிறது.

இச்சூழலில் கிழக்கிலங்கை கடலோர வேடர்கள் இன்றும் பெருவாரியாக வாழ்ந்துவரும் இடங்களான மூதூர், வெருகல் பகுதிகளில் அயல்ச் சமூகம் மற்றும் பிறமத, இன சமூகத்தவர்களாலும், சுதேச அரச பிரிவுகளாலும் நிகழ்த்தப்படுகின்ற ஆக்கிரமிப்புகள், அநீதிகள், சுரண்டல்கள் தொடர்பாக கிழக்கிலங்கை - குவேனி பழங்குடி அமைப்பு சார்ந்தவர்களின் கவனத்திற்குள் வராத குரல் இங்கு பதிவுசெய்யப்படுகிறது.

- யுத்தத்திற்கு பின்னரான காலத்தில் அரச படைகளால் மலை நீலி அம்மன் கோவில் ஆக்கிரமிக்கப்பட்டு மலையில் பௌத்த வழிபாடு நடத்தப்படுகிறது. இதேபோல் இலங்கை முகத்துவாரம் பெரியசாமி கோயில் சிதைக்கப்பட்டு கோயில்கள் முழுமையாக பௌத்த கோயிலாக மாற்றப்பட்டுள்ளது.
- பூர்வகுடிகளின் பிரதான பூர்வீகத் தொழில்களான வேட்டையாடுதல், தேன் எடுத்தல், விறகு வெட்டுதல், சிறுகடல் பெருங்கடல் மீன்பிடித்தல், நன்னீர் மீன் பிடித்தல், பலவகை கிழங்கு மற்றும் சேனைப் பயிர்ச்செய்கை, கூலித் தொழில் என்பனவற்றை மேற்கொள்ளும் போது சக சமூகத்தினரில் சிலர் காடுகளை அழிப்பது மற்றும் மிருகங்களை வேட்டையாடுதல் போன்றவற்றைக் காரணம் காட்டி வனப் பாதுகாப்பு சபை, வனவிலங்கு பாதுகாப்பு சபை, பொலிஸ் என்பவற்றின் ஊடாக பழங்குடி மக்களை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தி அபராதம் விதிக்கின்றனர்.
- 2006-ம் ஆண்டு யுத்தம் மற்றும் சுனாமி காரணமாக வெருகல் முகத்துவாரப் பகுதி மக்கள் சூரநகர் என்னும் பகுதிக்கு இடம்பெயர்ந்து சென்றபின்னர் மக்களின் வாழ்விடமான வெருகல் முகத்துவாரப் பகுதி முழுவதுமான (ஏறக்

குறைய 1000 ஏக்கர்) நிலப்பரப்பை வனப்பாதுகாப்பு சபை ஆக்கிரமித்து வைத்துள்ளது.

- கிறவல் குழி (சந்தோசபுரம்) கிராமத்து மக்களின் குடியிருப்பு காணிகள், விவசாயக் காணிகள், நிரந்தர வீடுகள், மலசல கூடங்கள், வழிபாட்டு இடங்கள் என்பன அரசின் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக சேனையூர் கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்ட சீதனவெளி என்னும் கிராமத்தில் குடியேற்றப்பட்டார்கள். இதனால் கல்வி பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைந்த சமூகத்தவர் மத்தியில் போட்டிபோட்டு வாழ முடியாது பூர்வ குடிகள் பெரும் நெருக்கடிகளுக்கும், புறக்கணிப்புகளுக்கும் உள்ளாகிறார்கள். அத்துடன் அக்கிராமத்திற்கென ஒதுக்கப்படும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒதுக்கீடுகளில் பாரபட்சம் காட்டப்பட்டு மிகச் சிறிய பகுதியே பழங்குடி மக்களுக்கு கிடைக்கிறது.
- 2006-ல் இடம்பெயர்ந்த பழங்குடிகளின் வாழிடமான உப்பூரல் மற்றும் நல்லூருக்கு இடைப்பட்ட பகுதிகளில் இருந்த மாவடியூற்று என்னும் பழங்குடி கிராமத்தில் உள்ளூரில் இருக்கும் சில அதிகாரிகள், அரசியல்வாதிகளின் துணை கொண்டு அரச சட்டக் குறைபாடுகளை வாய்ப்பாக பயன்படுத்தி தம் மக்களின் முன்னைய நீண்டநாள் வாழிடம் என்று அறிவித்து 2009-2010 காலப்பகுதியில் அம்மக்களை குடியேற்றி தாகிப் நகர் என்னும் பகுதியை உருவாக்கியிருக்கிறார்கள். தாகிப் நகரை அண்டியுள்ள பழங்குடியினர் மீன்பிடிக்கும் கடல் பகுதியையும், சிறுகடல் பகுதியையும் அச்சமூக மீனவர்கள் ஆக்கிரமித்துள்ளதால் பழங்குடி மக்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளது.
- வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட உப்பூரலுக்கும் மட்டப்புக்கழி பகுதிகளுக்கும் இடைப்பட்ட கடலோரப் பகுதியில் தனியார் நிறுவனம் 100 ஏக்கர்களுக்கு மேலான நிலப்பகுதியை ஆக்கிரமித்துள்ளது. போராட்டங்களுக்கூடாக பழங்குடி மக்கள் இந்த நிலங்களை மீட்டு வருகின்றனர்.
- மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தொல்குடிக் கிராமமான சந்தன வெட்டை பகுதியில் மூதூரைச் சார்ந்த சிலர் அதிகாரத்தையும், அரசியல் செல்வாக்கையும் பயன்படுத்தி காணி அபகரிப்பை செய்து வருகின்றனர். இதன் பிரதான ஆக்கிரமிப்பாக எந்த அடிப்படையான மனசாட்சியும் இன்றி தொல்குடிகளின் இடுகாட்டையும் ஆக்கிரமித்துள்ளனர். பழங்குடி மக்கள் தேன் மற்றும் பழங்கள் பெறும் பகுதிகளும் இந்த ஆக்கிரமிப்புக்குள் அடங்குகிறது. இந்தப் பகுதியில் மக்கள் பயன்படுத்தும் சிறு மலையை வெடிவைத்து கல் அகழ்ந்தெடுக்கும் பாதகமான வேலையும் சிலரால் மேற்கொள்ளப்படுகிறது.

இக்கிராமம் 2009-2010 காலட்டத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட போதிலும், இன்றுவரை இக்கிராமத்தில் வீதி புனரமைப்பு, குடிநீர் வசதி, சமுர்த்தி வசதி, நிரந்தர வீட்டுத்திட்டம், போன்ற எந்த வேலைத்திட்டங்களும் சமூக உதவிகளும் உள்ளூர் அதிகார சபைகளால் மேற்கொள்ளப்படவில்லை. இக்கிராமத்தில் இருபத்தைந்து வீதமான 25% குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக இருக் கும் சூழ்நிலையில், சில முதியோரும் பெண்களும் பிச்சை எடுத்து வாழும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

- நல்லூர், பாட்டாளிபுரம், வீரமாநகர், நீனாக்கேணி ஆகிய பூர்வீக பழங்குடிக் கிராம மக்களின் ஒரே ஒரு விவசாயக் குளமான உல்லைக் குளமானது ஆங்கிலேயர் ஆட்சிக் காலமான 1917-18 காலப்பகுதிகளில் அப்பிரதேச மக்களைக் கொண்டே வெட்டி உருவாக்கப்பட்டதுடன் ஒரு குடும்பத்திற்கு மூன்று தொடக்கம் நான்கு ஏக்கர் வரையான நிலம் வழங்கப்பட்டிருந்தது. இதற்கு பட்டாங்கட்டி என்னும் ஒரு தலைவர் நியமிக்கப்பட்டு அரசாங்கத்தால் அவருக்கு சம்பளமும் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தது. இக்குளத்திற்கு அண்மையில் பத்தினி அம்மன் வழிபாடும் உருவாகி இதற்கு ஒரு தீர்த்தக் கிணறும் அமைக்கப்பட்டது. பத்தினி அம்மன் விவசாய சம்மேளனம் என்னும் பெயரில் ஒரு விவசாய அமைப்பும் உருவாக்கப்பட்டிருந்தது.

  1935 மற்றும் 1950-55 காலப்பகுதிகளில் பழங்குடி மக்களுக்கு இவற்றின் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் இருந்து 2006 வரை இந்தக் குளத்தை இப்பிரதேச பழங்குடி மக்களே நிர்வகித்து வந்திருக்கிறார்கள். யுத்தத்தினால் 2006-ல் இடம்பெயர்ந்து பின்னர் 2009 - 2010-ம் ஆண்டளவில் மீளக் குடியேறுவதற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குள் தோப்பூரைச் சேர்ந்தவர்களால் ஏறக்குறைய 1000 ஏக்கர் விவசாய நிலப்பரப்பு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதுடன் கூடவே இப்பகுதியை ஒட்டிய கடல் துறைமுகமும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பான பேச்சுவார்த்தைகள் அனைத்திலும் சம்பந்தப்பட்டவர்கள் அதிகாரத்துடன் நடந்து கொள்ளும் பண்பையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.
- சாலையூர் என்று அழைக்கப்படும் கிராமம் தொல்குடிகளின் உத்தியாக்கள் காலத்தில் ரோட்டுச்சேனை என்று அழைக்கப்பட்டு வந்தது. 1975 - 76 காலப்பகுதியில் அவ்வூரைச் சூழவிருந்த கல்வி பொருளாதார வகையில் வளர்ச்சி கண்டிருந்த தமிழ் மக்களில் ஒரு பிரிவினர் தொல்குடிகளை ஆடு, மாடு மேய்த்தல், தோட்டத்தில் கூலிவேலைகள், வீட்டு வேலைகள், தங்கள் விவசாயப் பயிர்களுக்கான இரவு, பகல் காவல் வேலைகள் போன்றவற்றுக்கு பயன்படுத்திக் கொண்டனர். இதற்கு ஊதியமாக சிறு தொகை பணம், குறுநெல் அரிசி, உடைகள் என்பவற்றை மட்டும் வழங்கி வந்தனர். வறுமை நிலையில் கடனாளிகளாக மாறிய இவர்களிடம் வெற்றுப் பத்திரங்களில் கைநாட்டுகளை பெற்று அப்பழங்குடிகளின் நிலங்களை அபகரித்துக் கொண்டார்கள். இதை அறிந்து இப்போது சந்தோசபுரம் என அழைக்கபடும் கிறவற்குளியில் இருந்து மக்கள் நீதிகேட்டு படையெடுத்து சாலையூர் சென்றபோது, நிலங்களை சொந்தமாக்கியோரின் குடும்ப உறுப்பினர்களை குண்டர்கள் போல பயன்படுத்தி அம்மக்களை விரட்டியடித்தார்கள். விரட்டியடிக்கப்பட்ட எம்மக்கள் சந்தோசபுரம் மற்றும் சந்தனவெட்டை ஆகிய கிராமங்களில்

தங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

- வெருகலம்பதி சித்திர வேலாயுதசாமி கோயிலில் பழங்குடி மக்கள் பூர்வீகமாச் செய்து வந்த பதின்மூன்றாம் திருவிழா வான வேட்டைத் திருவிழா செய்யும் உரிமை அண்மைக் காலமாக அந்தக் கோவிலை நிர்வகிக்கும் தமிழ் மக்களில் ஒரு பிரிவினரால் திட்டமிட்டு மறுக்கப்பட்டுள்ளது.
- வெருகல் பகுதியில் உள்ள வட்டுவன் என்னும் கிராமத் தில் பழங்குடி மக்களின் விவசாய நிலங்கள் தமிழ் சமூகத் தில் உள்ள ஒரு பிரிவினரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட் டுள்ளது.
- மூதூர் பகுதியில் உள்ள சந்தோசபுரம் பழங்குடி கிராம மக்களின் பிரதான நன்னீர் மீன்பிடிக் குளமான சம்புக்கழி குளத்தினை தமிழ் சமூகத்தை சேர்ந்த சிலர் விவசாயப் பண்ணை அமைக்கும் திட்டத்துடன் நிரந்தரமாக மூடும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகிறார்கள்.
- இலக்கந்தை பூர்வீக பழங்குடி கிராமத்தினுடைய விவசாய இடமான பலைவனக் குளம் சம்பூரைச் சார்ந்த சிலரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.
- பல பழங்குடிகிராமங்களில் மத சபைகள் பழங்குடி மக்க ளின் வறுமை, அறியாமையை பயன்படுத்தி சிறு சலுகை கள், உலர் உணவுப் பொதிகள், சிறியளவிலான பண உதவிகள் போன்ற வழிமுறைகளினூடாக தொல்குடி மக்க ளின் பூர்வீக நம்பிக்கைகளை சிதைத்து தமது மதமாற் றத்தை மேற்கொள்கின்றனர். சர்வதேச மற்றும் உள்ளூர் மத வலைப்பின்னலை பயன்படுத்தி மட்டக்களப்பு தொடக் கம் திருகோணமலை வரை இருக்கும் சிறு சமூகமாகிய பழங்குடி மக்களின் பண்பாடு, கலை, பழக்க வழக்கங் கள், நம்பிக்கைகளை திட்டமிட்டு சிதைக்கும் வேலையை இவ்வமைப்புகள் மேற்கொண்டு வருகின்றன.
- மதமாற்றத்தின் பாதிப்பு என்பது பழங்குடி மக்கள் மத்தி யில் பிரிவினையை தோற்றுவிக்கிறது. பழங்குடி குடும்பம் ஒன்றில் ஒருவர் மதம் மாற்றப்படும் பொழுது மரணச்சடங் கைக்கூட எந்த முறைப்படி செய்வது என்னும் குழப்பத் தில் அந்தக் குடும்பமும் கிராமமும் பெரும் குழப்பத்திற்கு உள்ளாகிறது என்பதனை ஒரு சிறு உதாரணமாக எடுத் துக் கொள்ளலாம்.

இவ்வாறான நில ஆக்கிரமிப்புகள், நெருக்கடிகளை இன் றைய கிழக்கிலங்கை தொல்குடிகள் எதிர் கொள்கின்றனர். தமிழ்க்காலனியத்தின் திணிப்பால் இவர் மொழியானது வெறும் சடங்காசாரங்களுடன் வடிகட்டப்பட்டு விட்டது. இயற்கை மற்றும் செற்கை கலப்புக்களால் இவர்களுடைய தனித்துவமான பண்பாடும் படிப்படியாக சிதைந்து கொண்டு போகின்றது.

**நன்றி:**

நடராசா கனகரட்ணம் (குவேணி பழங்குடி அமைப்பு),
நாகரெட்டினம் வரதன் (குவேணி பழங்குடி அமைப்பு).



pathinathan@thaiveedu.com











# உலக நுரையீரலின் பாதுகாப்புக் கவசமாவோம்!

– சதீஸ் செல்வராஜ்

'முதலில் இறப்பர் மரங்களை காப்பாற்ற போராடுவதாக நினைத்தேன். பிறகு அமேசான் காடுகளை காப்பாற்ற போராடுகிறேன் என்று நினைத்தேன். நான் மனிதநேயத்திற் காக போராடுகிறேன் என்பதை இப்போது உணர்கிறேன்.' என்ற சிக்கோ மெண்டிஸின் வார்த்தைகள் உலகின் எதிர்கா லம் மீதான அவர் கொண்ட அன்பின் வெளிப்பாடாகவிருக் கிறது. பிரேசிலின் இறப்பர் தொழிலாளர் தொழிற்சங்கத் தலைவரான இவர் பிரேசில் நாட்டின் இறப்பர் தொழிலாளர் கள், விவசாயிகள் மற்றும் பழங்குடிமக்கள் ஆகியோரின் உரிமைக்காக தன் வாழ்நாள் முழுக்க போராடிய மனித உரி மைப் போராளி. அழிக்கப்பட்டுக் கொண்டிருந்த அமேசான் வனாந்திரத்தைப் பாதுகாக்க போராடிய சூழலியலாளர். அமேசான் காடுகளை அழித்துப் பால்ப்பண்ணை நடத்துப வரின் மகனால் இவர் டிசம்பர் 22, 1988 அன்று படுகொலை செய்யப்பட்டார். இவ்வாறு அமேசான் காடுகளைப் பாது காக்க குரல்கொடுத்த பலரும் காணாமலாக்கப்பட்டிருக்கிறார் கள். வாயடைக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அமேசான் மழைக்காடு பல லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப் பில் தென் அமெரிக்காவில் உள்ள பிரேசில், பெரு, ஈக்குவ டார் போன்ற 9 நாடுகளில் பரந்து விரிந்து இருக்கிறது. இதன் பரப்பு மொத்த ஐரோப்பாவை விட பெரியது. அமே சான் மழைக்காடுகளில் சுமார் 60 சதவீதம் பிரேசிலில் உள் ளது. பூமியின் நிலப்பரப்பில் வெறும் 6 சதவீதத்தை மட்டுமே கொண்டுள்ள அமேசான் காடுகளில் உலகின் ஒட்டுமொத்த தாவரங்கள், உயிரின வகைகளில் அரைப் பங்கு இருப்ப தாக மதிப்பிடப்பட்டுள்ளது. வேறெங்குமில்லாத 16,000 மர வகைகள், 40,000 பற்றைத் தாவர வகைகள், 2,500,000 பூச்சி யினம், 2,200 நன்னீர் மீனினம், 1,300 பறவையினம், 427 பாலூட்டிகள், 430 ஈரூடகவாழிகள், 380 ஊர்வன வகை மற் றும் இன்னும் கணக்கெடுக்கப்படாத பல உயிரினங்கள் இங்கு வாழ்கின்றன. கொல்லும் வோல்டேஜ் கொண்ட மின் சார விலங்குகள், பிரான்ஹா மீன்கள், நச்சுத் தவளைகள், பச்சை நிற அனகொண்டா, ஜகுவார் சிறுத்தைகள், கொலை காரப்பூச்சிகள், ஹார்பி கழுகுகள், ஜியான்ட் மட்டைத்தேள், புல்லட் எறும்புகள், இரத்தம் குடிக்கும் வௌவால்கள், அதிக விசம்கொண்ட நச்சுப்பாம்புகள் இவை அனைத்தும் அங்குள்ளன. அமேசான் காடுகளில் உள்ள ஒரு தேக்க ரண்டி மண்ணில் 400 பூஞ்சைகள் உட்பட 1,800 நுண்ணுயிரி கள் உள்ளதாக சமீபத்திய ஆய்வு ஒன்றும் குறிப்பிடுகிறது. இந்தக் காடு அடர்த்தி மிகுந்தது என்பதனால் வெப்பவலய மானாலும் 1% சூரிய ஒளி மட்டுமே நிலத்தினை வந்தடை கிறது.

உலகின் மிகப்பெரிய வெப்பவலயக்காடான அமேசான் காடு கள் உலகின் மிகப்பெரிய நதியான அமேசானையும் கிளை நதிகளையும் உள்ளடக்கி ஏறக்குறைய இந்தியா அளவு நிலப்பரப்பில் அமைந்துள்ளது. அது உலகம் உற்பத்தியாக் கும் காபனீரொட்சைட்டின் பெரும் பகுதியையும் உறிஞ்சுவ தால் அதனை உலகின் நுரையீரல் என்றும் சொல்வர். உல கின் ஒட்சிசனில் 20% அமேசான் காடுகளால் உருவாக்கப்ப டுகிறது. அமேசானில் பெய்யும் மழை ஒவ்வொரு விநாடியும் 55 மில்லியன் கலன்கள் நீரை அட்லாண்டிக்குக்குள் விடுகி றது. இதுபோன்ற பல சிறப்புகளையும் மர்மங்களையும் தன் னகத்தே கொண்ட உலகின் மகத்தான பொக்கிசம்தான் அமேசான் வனாந்திரம்.

சுமார் 13,000 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அமெரிக்காவி லிருந்து அமேசானுக்கு ஆதி மனிதர்கள் குடிபெயர்ந்தனர். 10 மில்லியன் பழங்குடியினர் வரை பலப்படுத்தப்பட்ட குடி யிருப்புகளில் வாழ்ந்தனர். சடங்கு நிலவேலைகளை உரு வாக்கி, வயல்களையும் பழத்தோட்டங்களையும் பயிரிட்டனர். அதுபோல அமேசான் வனாந்திரத்தையும் அம்மண்ணின் வளங்களையும் பாதுகாக்கவும் செய்தனர்.

15-ம் நூற்றாண்டில் ஐரோப்பியர் அமேசான் பகுதிக்குள் அடி யெடுத்து வைத்து ஆக்கிரமிப்பை தொடங்கியது முதற் கொண்டு இன்று வரையில் அதிகார வர்க்கத்தினாலும், சுய லாபவாதிகளாலும் அந்த வனாந்திரம் மொட்டையடிக்கப் பட்டு வருகிறது. 1970-களில் இருந்து மரம் வெட்டுதல், விவ சாயம், சுரங்கம், சாலைகள், அணைகள் மற்றும் வளர்ச்சி யின் பிற வடிவங்களுக்காக துருக்கிக்கு சமனான பரப்பளவு கொண்ட அமேசான் காட்டின் ஒரு பகுதி அழிக்கப்பட்டுள் ளது. அதனால் மரங்களை இழப்பதற்கான வாசலை உலகம் 25 சதவீதத்தால் நெருங்கியுள்ளது என்று விஞ்ஞானிகள் கவ லைப்படுகின்றனர். 10 மில்லியன் பழமையான அமேசான் வனாந்திரம் 390 பில்லியன் மரங்களின் தாயகமாக திகழ்கி றது. ஆனால், 2030-ம் ஆண்டுக்குள் 27 சதவீத மரங்கள் இல்லாது போகும் என்று ஆய்வுகள் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளன.

அமேசான் பல்வேறு காரணங்களால் அழிவடைந்து வருகின் றபோதிலும், தீவிரமான கடும் அழிவினை சந்தித்து வருகின்ற



மைக்கு சில முக்கிய காரணங்கள் இருக்கின்றன. அவையா வன, பாரிய அளவிலான விவசாயம் குறிப்பாக சோயா உற் பத்தி, பால்ப்பண்ணைகள், சுரங்கத் தொழிற்றுறை, கனிய எண்ணெய், வெட்டுமரம், நீர்மின் உற்பத்தி போன்றவையா கும்.

2004-ம் ஆண்டிற்குப் பின்னர் ஓரளவு குறைவடைந்திருந்த அமேசான் காடழிப்பு சயீர் பொல்சனாரோ பதவியேற்றதன் பின்னர் கட்டுக்கடங்காமல் சென்றது. 'அமேசான் காடுகளின் வளங்களை வணிகமாக்கி நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்தெடுப்போம்' என 2018-ம் ஆண்டு நடைபெற்ற அதி பர் தேர்தல் பிரசாரத்தின் போது வலதுசாரி சயீர் பொல்ச-னாரோ கூறிய கவர்ச்சியான வாக்குறுதி விவசாயிகள், கால் நடை வளர்ப்பவர்கள், வன வளங்களை வேட்டையாடும் மாஃபியா கும்பல்கள், பூமியைக் கிழித்து எண்ணெய் எடுக் கக் காத்திருக்கும் பெரும் முதலாளிகள் எனப் பலரையும் கவர்ந்திருந்தது. அமெரிக்காவின் ஆசிர்வாதத்தோடு பொல்ச னாரோ அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் அமேசான் வனாந் திரம் பற்றியெரிய ஆரம்பித்தது. இயற்கையான காட்டுத்தீ யில் சேதமுறும் அமேசான் வனாந்திரம் தன்னைத்தானே குணமாக்கிக் கொள்வது விஷேட அம்சமாக இருப்பதுடன், மனிதர்களால் திட்டமிட்டு காடுகள் எரிக்கப்படுவது பாரிய அழிவை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆண்டுக்கு சராசரியாக 1800 மில்லிமீட்டர் மழைபொழிவை கொண்ட அமேசான் காடுகளில் ஜூன் முதல் செப்ரெம்பர் வரை வரட்சிக்காலம் என்பதால், இந்தக் காலகட்டத்தில் காட் டுத்தீ ஏற்படுவது வழக்கம். ஆனால் அதன்பின்னர் இயற்கை யாகவே அந்த இடங்களில் தாவரங்கள் தோன்றுவதும் வழக் கம். இப்படிப்பட்ட இயற்கை அதிசயத்தினாலேயே 5.5 கோடி ஆண்டுகளாக இந்த காடு உயிர்ப்புடன் இருந்துவரு வதாக கூறப்படுகிறது. ஆனால் 2019-ற்குப் பின்னரான சூழ லில் அமேசான் காட்டில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீக்களில் பல மனிதர்களால் செயற்கையாக உருவாக்கப்பட்டவை என்றும், அதற்கு காரணம் அன்றைய அதிபர் சயீர் பொல்சனாரின் திட்டங்கள் தான் என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட் டன.

2019-ம் ஆண்டு மட்டும் 75,000 காட்டுத்தீ சம்பவங்கள் அமே சான் வனப்பகுதியில் நிகழ்ந்துள்ளன. இந்த காட்டுத்தீ குறித்து பிரேசில் நாட்டின் தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிறு வனம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, 2018-ம் ஆண்டு ஏற் பட்ட காட்டுத்தீ சம்பவங்களின் எண்ணிக்கையைவிட 2019-ம் ஆண்டு 82 சதவீதம் அதிகமாக காட்டு தீ ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரங்களை வெட்டிச் சாய்த்தல் மற்றும் வெட்டுமரப் பெருந் தொழில் காரணமாகவும் அமேசான் வெட்டவெளியாக்கப்பட் டுக் கொண்டிருக்கிறது. தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவ னத்தின் (INPE) சமீபத்திய அறிக்கையின்படி, 2021-ம் ஆண் டில் காடழிப்பு 22 சதவீதத்தால் அதிகரித்ததில், 13,235 சதுர கி.மீ (5,110 சதுர மைல்) காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. பொல்சனாரோவின் தலைமையில் மரங்களை அகற்றுதல் மிகவேகமாக முன்னெடுக்கப்பட்டது.

தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் முன்வைக்கும் குற் றச்சாட்டுக்களை மறுத்த பொல்சனாரோ, அதன் தலைவர் கால்வாவோவை பதவி நீக்கம் செய்தார். பொல்சனாரோவின் ஆட்சியில் விஞ்ஞானிகள் நரகத்தில் தள்ளப்பட்டது போன்று உணர்ந்தனர் என்று கால்வாவோ குறிப்பிட்டுள்ளார். 2018-ம் ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 2019-ம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் காடழிப்பு 92% அதிக ரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 1995 முதல் 2004 வரையிலான காடழிப்பினை பொல்சானாரோவின் ஆட்சிக்கா லம் விஞ்சியது. 2022-ல் அழிக்கப்பட்ட பகுதி 2021-ஐ விட ஐந்து மடங்கு பெரியது. 2015-ல் இருந்து பதியப்பட்ட ஜன வரி மாதப் பதிவுகளில் மிகக்கூடிய அளவில் காடழிப்பு முன் னெடுக்கப்பட்ட காலம் 2022 ஜனவரி ஆகும்.

குறிப்பாக 2022-ல் மாத்திரம் பிரேசிலின் அமேசான் மழைக் காடுகளில் நியூயார்க் நகரத்தை விட 5 மடங்கு பெரிய பகுதி அழிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளிப்படுத்தப்பட் டது. 2022-ம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரை 3,988 சதுர கி.மீ. அமேசான் காட்டுப் பகுதி (1,540 சதுர மைல்கள்) அழிக்கப்பட்டுள்ளதாக விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இன்பே தெரிவித்துள்ளது. இவ்வாறு உலகின் மிகப்பெரிய மழைக்காடுகளான அமேசானில் மரங்கள் தொடர்ந்து அழிந்து வருவது வளிமண்டலத்தை மேலும் வெப்பமாக்குவ தோடு மட்டுமின்றி காலநிலை மாற்றத்தை உண்டாக்கும் என ஆராய்ச்சியாளர்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

கடந்த 2012-ம் ஆண்டு 'நிலையான வளர்ச்சி' என்ற நோக்கில் ஐ.நா. மாநாடு நடந்தது. இதில் உலக நாடுகள் ஒன்றிணைந்து சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காத, இயற்கையை அழிக்காத வழிகளில் உலகத்தை மேம்படுத்துவோம் என உறுதிமொழி எடுத்தன. இந்த முடிவை அடிப்படையாகக் கொண்டு பிரேசில் நாட்டில் புதிய அனல்மின் நிலையங்கள் தொடங்கப்படுவதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டன. நீர்வளம் அதிகம் உடைய நாடான பிரேசில் தனது மின் தேவையில் 80 சதவீதத்தை அனல்மின் நிலையங்கள் வாயிலாகவே பூர்த்தி செய்து வருகிறது. இந்த நிலையில் மேலும் பல புதிய அனல்மின் நிலையங்கள் அமைக்கவும், அவற்றை தனியார் வசம் ஒப்படைக்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இந்த புதிய மின்நிலையங்கள் பெரும்பாலும் அமேசான் காடுகளில் உற்பத்தியாகும் நதிகளை நம்பியே திட்டமிடப்பட்டன. இந்த அனல்மின் நிலையங்களை கைப்பற்ற அமெரிக்கா உள்ளிட்ட பல முன்னணி கார்பரேட் நிறுவனங்கள் போட்டியிட்டதாக கூறப்படுகிறது.

அமேசான் காடுகளில் உள்ள நதி பகுதிகளில் அணைக்கட்டுகள் ஏற்படுத்தி நீரை தேக்கி வைத்து, அதன்மூலம் மின்னுற்பத்தி செய்வதே இந்த திட்டத்தின் நோக்கம். இதற்காக கடந்த 6 ஆண்டுகளாக வனப்பகுதி பெருமளவு அழிக்கப்பட்டு, 40-க்கும் மேற்பட்ட அணைகள் கட்டும் பணியும் நடந்தது. அணைக்கட்டுகள் அமைக்க அமேசான் காடுகளில் வசித்து வரும் பூர்வகுடிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் அவர்களின் பலத்த எதிர்ப்பையும் மீறி, வனத்தை அழிக்கும் பணிகள் தொடர்ந்து நடந்தன. இந்த திட்டத்தால் ஆயிரக்கணக்கான பூர்வகுடி மக்களும் அப்பகுதியை விட்டு வலுக்கட்டாயமாக இடம்பெயர்க்கப்பட்டனர். இந்தச் சூழலில் தான் சயீர் பொல்சனாரோ அதிகாரத்திற்கு கொண்டுவரப்பட்டார். அமேசான் காடுகளை அழித்து பொருளாதார வளர்ச்சியைப் பெருக்குதல் என்ற கோசத்தை முன்வைத்து மக்களை கவர்ந்தார். ஆனால், அவரது அந்தப் பாதை உலக அழிவுக்கு வழிவகுக்கிறது என்பதை பின்நாட்களில் மக்கள் உணர்ந்தனர்.

லட்சக்கணக்கான விலங்குகள், கோடிக்கணக்கான தாவரங்கள், பறவைகள், பூச்சியினங்களை வதம் செய்யும் இந்தக் காட்டுத்தீக்கு பின்னால், வெறும் அனல்மின்நிலையங்கள் தனியார்மயமாக்கப்படுத்தல் என்ற காரணத்தை கடந்து, சோயா ஏற்றுமதிக்கான வழித்தடங்களை உருவாக்குதல், உணவு தொழிற்சாலைகள் அமைத்தல் போன்ற பல காரணங்கள் மறைந்திருக்கின்றன என்றும் சிலர் கூறுகின்றனர்.

உலகின் இரண்டாவது மிகப்பெரிய சோயா ஏற்றுமதியாளரான பிரேசில், தனது பெரும்பான்மை சோயா உற்பத்தியை அமேசான் பகுதியில் இருந்தே பெறுகின்றன. அவற்றில் பெரும்பகுதி சீனாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த சோயா ஏற்றுமதிக்கான புதிய வழித்தடத்தை அமேசான் காடுகளை ஒட்டியே அமைக்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகிறது.

அமேசான் மழைக்காடுகளில் குறைந்தது 427 வகையான பாலூட்டிகள் வாழ்கின்றன. ஆனால் இப்போது அங்கு மாடுகள் செல்வாக்கு செலுத்துகின்றன. காடுகள் அழிக்கப்பட்ட நிலத்தில் 80% வரை கால்நடை வளர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது. 2018-ல் பிரேசில் 6 பில்லியன் டொலர் மதிப்புள்ள மாட்டிறைச்சியை ஏற்றுமதி செய்தது. இது வரலாற்றில் வேறு எந்த நாட்டையும் விட அதிகமாகும்.

அதேபோல உலகின் நன்னீரில் 20 சதவீதத்தை தன்னுள் கொண்டுள்ள இந்த அமேசான் வனப்பகுதியில் பல உணவு தயாரிப்பு நிறுவனங்களும், கார் நிறுவனங்களும் தங்கள் தொழிற்சாலைகளை அமைக்க ஆசைகொண்டிருக்குகின்றன. அந்த வகையில் இந்த வன அழிப்பு என்பதற்கு பின்னால் பல வளர்ந்த நாடுகளைச் சேர்ந்த, அதிகாரமிக்க நிறுவனங்களின் தொழில் ஆசை ஒழிந்துள்ளது என கூறுகின்றனர் அமேசான் பகுதி பூர்வகுடிகள்.

யானோமாமி எனப்படும் பாரம்பரியப் பகுதியில் தங்கம், வைரம் மற்றும் கனிமங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இங்கு சட்டவிரோத சுரங்கத் தொழில் கொடிகட்டி பறக்கிறதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. இந்தச் சுரங்கப் பணிகளில் ஏறக்குறைய 20,000 தொழிலாளர்கள் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகின்றன. தவரி, ஈக்குவடோரைப் போலவே பிரேசிலின் அமேசன் காட்டுப் பகுதியிலும் கனிம எண்ணெய் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இவை எல்லாவற்றுக்கும் துணைநின்ற பிரதானமான நாசக்கார சக்திதான் சயீர்-பொல்சனாரோ. இவரது காலத்தில் அமேசன் வனாந்திரம் அழிக்கப்பட்டது போலவே பூர்வ குடிகளும் ஒடுக்கப்பட்டனர். அவர்கள் நிலமற்றவர்களாக உருமாற்றப்பட்டனர். தற்போது மொத்த நிலத்தில் 11 சதவீதம் மட்டுமே பூர்வ குடிகளுக்கு சொந்தமாகவிருக்கிறது. இம்மக்கள் தொடர்ந்தும் நிலஉரிமை போராட்டத்தை முன்னெடுப்பதோடு, ஏகாதிபத்தியத்திடம் இருந்து அமேசானை மீட்டெடுக்க போராடி வருகிறார்கள். அதனால் அவர்களை ஒழித்துக்கட்ட பொல்சனாரோ பல தீங்குகளை செய்தார். கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் இம்மக்கள் செத்து மடியட்டும் என்று கண்டுகொள்ளாது விட்டார் என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது. 350 குழுக்களாக அமேசான் முழுவதும் பரவி காணப்படும் இந்த பூர்வகுடிகள் தொடர்ந்து பல ஆண்டுகளாக பல்வேறு அச்சுறுத்தலுக்கு முகம்கொடுக்கின்ற போதிலும் தமது இடைவிடாத போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். அதுபோல சூழலியலாளர்ளும், இயற்கை நலன்சார் அமைப்புகளும், சமூக செயற்பாட்டாளர்களும் பொல்சனாரோவுக்கு எதிரான கோசத்தை கையில் ஏந்தினர். இவற்றின் விளைவாகத்தான் பிரேஸிலின் அதிகாரத்தில் இருந்து பொல்சனாரோ விரட்டியடிக்கப்பட்டு, இளஞ்சிவப்பு அரசியல் அதிகாரத்திற்கு வர வழிவகுத்தது.

எவ்வாறாயினும், அமேசன் வனாந்திரம் என்பது உலக மக்களின் பொதுவுடமை. அதனை வர்த்தகப் பண்டமாக சிந்தித்து அழிக்க முற்படும் தீய சக்திகளுக்கு எதிராக அனைவரும் குரல்கொடுக்க வேண்டுமென்பது கட்டாயமானது. அமேசான் வனாந்திரத்தின் அழிவானது உலக அழிவிற்கு நிகரானது ஆகும். ஆக, அமேசான் வனாந்திரத்தையும் பழங்குடி மக்களையும் பாதுகாக்க உலக மக்கள் அணிதிரண்டாக வேண்டும்.



sathees.selvarajah@thaiveedu.com



# அறிவாட்டி

- த. ஜீவராஜ்

**வீ**ட்டு வாசலின் களிமண் சுவரில் தலை சாய்த்தபடி கோமதி அமர்ந்திருந்த நிலையைப் பார்த்தபோதே ஆதினிக்குப் புரிந்து விட்டிருந்தது. தனது தந்தை காடு செல்ல முடிவெடுத்துவிட்டார். இனி அவரைத் தடுக்க முடியாது. இருந்தாலும் உள்மனதில் ஏதோவொன்று வழமைக்கு மாறாக உறுத்திக் கொண்டிருந்தது. அன்றுதான் அதிசயமாக அந்தக் காட்சியை ஆதினி பார்க்கிறாள். நீண்ட காலத்திற்குப் பிறகு மதியநேரம் ஒன்றில் அவளது அப்பா வீட்டில் இருப்பதையும், குழந்தைகள் அனைவரும் அவர் மடியிலும், தோளிலுமாகத் துள்ளி விளையாடுவதையும் காண மனமெல்லாம் மகிழ்ச்சியில் திளைத்துப்போனது. ஆனால் இந்த சந்தோசம் தொடர்ச்சியாக இருக்க வேண்டுமே என்ற பயம் அவள் மனதை ஆட்டிப்படைத்தது. கேசவனின் கழுத்தினை கைகள் இரண்டாலும் இறுக்கிக் கட்டிக்கொண்டு ஆதினி அவன் காதுக்குள் கிசுகிசுத்தாள்.

‘காட்டுக்குப் போக வேண்டாம் அப்பா.’

கேசவன் சிரித்தான். ‘அறிவாட்டிப் பாட்டி உன்னை பயமுறுத்தி விட்டா போல. பயப்படாத எல்லாம் பழக்கப்பட்டது

தான்' என்றான் சர்வசாதாரணமாக. நீண்ட நேரம் தன்னாலான எல்லா வழிமுறைகளைப் பயன்படுத்தியும் கேசவன் மனதை அவளால் மாற்ற முடியவில்லை.

அன்றைய தினம் வழமைக்கு மாறாகக் கேசவனின் வீட்டைத் தேடி இடைச்சேரியின் பல மனிதர்கள் வந்தார்கள். அவனது பழைய வீர பிரதாபங்களைச் சொல்லி அவனை உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தார்கள். வதனமார்களாகத் தெரிவான இளைஞர்களின் பெற்றோரும் வீடு தேடி வந்து கேசவனிடம் தங்கள் பிள்ளைகளைக் கவனமாக பார்த்துக் கொள்ளுமாறு வேண்டிக்கொண்டார்கள். அந்த நாளும் அதைத் தொடர்ந்து வந்த நாட்களும் கேசவன் வீடு இடைச்சேரியில் அதிக விருந்தினர் வந்துபோன வீடாக மாறிப்போயிருந்தது.

வேள்வி தொடங்கியது. முதல் பதினெட்டு நாட்களும் பூசைக்குக் கேசவன் குடும்பத்துடன் போயிருந்தான். வேள்வியில் வதனமாருக்கு வழங்கப்படும் சிறப்பிடம் கண்டு ஆதினி மிகுந்த மகிழ்ச்சி கொண்டிருந்தாள். பத்தொன்பதாம் நாள் கண்ணீர் மல்க நின்ற ஆதினியிடமும், கோமதியிடமும், பிள்ளைகளிடமும் விடைபெற்றுக்கொண்டு கேசவன் வதனமாருடன் காட்டுக்குள் குழுமாடு பிடிக்கச் சென்றான்.

கேசவன் காட்டுக்குச் சென்ற நாளிலிருந்து கோமதியோ, ஆதினியோ வீட்டை விட்டு வெளியில் எங்கும் செல்லவில்லை. வேள்வி தொடங்குவதற்கு முன்னால் திருக்கோணேச்சர ஆலயம், கந்தளாய்ப் பெருங்குறிப் பெருமக்கள் சபை, இடைச்சேரி ஊரவர்களால் வழங்கப்பட்ட நன்கொடைத் தானியங்கள் அவர்களது அன்றாட உணவுத் தேவைக்கு போதுமானதாக இருந்தது. கேசவனின் கால்நடைகளை ஊரில் உள்ளவர்கள் பொறுப்பெடுத்துப் பார்த்துக் கொண்டார்கள். ஆதினிக்கு நாட்கள் மிக மெதுவாக நகர்ந்து செல்வதுபோல் இருந்தது. அவர்களுக்கு அப்போது இருந்த ஒரே ஆறுதல் அறிவாட்டிப் பாட்டியின் வருகைதான். பாட்டிதான் அந்தக் குடும்பம் குறைந்தபட்ச மகிழ்ச்சியுடன் இயங்கக் காரணமாக இருந்தாள்.

நாள்தோறும் வீடு தேடி வரும் பாட்டி வராததால் ஆதினி அவளது வீடு நோக்கி நடந்தாள். வழக்கம்போல ஏதாவது ஒரு வேலை செய்துகொண்டு அறிவாட்டி அமர்ந்திருக்கும் திண்ணைப்பகுதி காலியாக இருந்தது. அயல் வீட்டிலிருக்கும் கமலம் அக்கா வெந்நீருடன் பாட்டியின் வீட்டுக்குள் அவசரமாகப் போவது ஆதினியின் மனதில் பரபரப்பை உருவாக்கியது.

'என்னக்கா பாட்டிக்கு...' ஆதினியின் குரல் அலறியது.

'பயப்படாத காலையில இருந்து பாட்டியிட உடம்பு சூடாக் கிடக்குது' என்றாள் கமலம் அக்கா.

ஆதினிக்குத் தெரிந்து அன்றுதான் அறிவாட்டி முதல் முறையாகப் பகல் வேளையில் படுத்திருக்கிறாள். தடித்த துணியினால் போர்த்தியபடி குறுக்கிக்கொண்டு நடுங்கியபடி படுத்திருக்கும் பாட்டியைப் பார்த்தபோது ஆதனிக்கு அழுகை வந்தது. அயலில் இருந்த பெண்கள் பலர் பாட்டிக்குத் தேவையான பணிகளைச் செய்ததால் அருகில் அவள் தலையைத் தடவியபடி இருக்கும் வாய்ப்பு ஆதினிக்குக் கிடைத்தது. மாலை வேளையில் பாட்டிக்கு உடல் சூடு தணிந்தது. ஆதினியின் உதவியுடன் பாட்டி சுவரோரமாய் உட்கார்ந்திருந்தாள்.

என்ன பயந்திட்டியா? வயது போனால் இப்படித்தான். சிரிக்க முயன்றாள் பாட்டி. பதிலேதும் சொல்லாது பாட்டியையே உற்றுப் பார்த்தபடி இருந்தாள் ஆதினி. பாட்டிக்குத் தேவையான பணிவிடைகள் அனைத்தையும் செய்து முடித்திருந்த அயல் வீட்டுப் பெண்கள் ஒவ்வொருவராகக் குறைந்து செல்ல இறுதியில் அன்றைய இரவு பாட்டிக்குத் துணையாக ஆதினி இருக்க ஏற்பாடாகி இருந்தது.

'எப்ப பாட்டி கந்தளாய்க்கு வந்தீங்க?'

'ஒம்பதரை வயசில'

ஆதினிக்கு ஆச்சரியமாக இருந்தது. வழமையாக அறிவாட்டி அவளது தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய கேள்விகளுக்கு எப்போதும் பதில் சொன்னதே இல்லை.

'நல்லா ஞாபகம் இருக்குது விஜயராஜ விண்ணகரத்திற்கு தம்பலகாமத்தில இருந்து காணிக்கை நெல் கொண்டு வருகிற மாட்டு வண்டித் தொடரில நாலாவது வண்டியில நானும் கோதையம்மாவும் வந்தோம்.'

'கோதையம்மா யார் பாட்டி?'

'என்னுடைய பாட்டிதான். தேவரடியாராக என்னை நெற்றித் திலகமிட்டுத் திருமணம் முடிச்சுக் கொடுக்கக் கூடவே வந்தாங்க.'

'எப்ப பாட்டி அது நடந்தது?'

'மூன்று நாளுக்குப் பிறகு. விஜயராஜ விண்ணகரத்து யாத்திரிகர் மடத்துல நாங்க தங்கி இருந்தம். முகூர்த்த நாளில அலங்கரிச்சு எங்களைக் கூட்டிப் போனாங்க. நாங்க மூன்று பேர். தம்பலகாமத்தில இருந்து நானும், கந்தளாய் நாவலூர்ல இருந்தும், சதுர்வேதி மங்கலத்தில இருந்தும் மற்ற இரண்டு பேரும் வந்திருந்தாங்க.'

'பிராமணப் பெண்ணுமா பாட்டி?'

'ஆமா சதுர்வேதி மங்கலத்தில இருந்து வந்தவ. உனக்கொன்டு தெரியுமா? இப்பவரைக்கும் அவ பேர் யாருக்கும் தெரியாது. பிராமணப் பெண் எண்டுதான் தேவரடியாரெல்லாம் கூப்பிடுவாங்க.'

'திருமணம் எப்படிப் பாட்டி நடந்துச்சு?'

‘முகூர்த்த நேரத்தில ஒவ்வொருவரா கருவறைக்கு அழைச்சிட்டுப் போனாங்க. வடக்குத் திசை பார்த்து உட்காரச் சொன்னாங்க. ஆண்டாள நினைச்சுட்டுக் கண்ண மூடி உட்கார்ந்து இருந்தன். உடம்பெல்லாம் இண்டைக்கு நடுங்கின மாதிரி நடுங்கிட்டு இருந்துச்சு. ஆசாரியார் மூலவர் கழுத்தில இருந்த தாலியை எடுத்து என் கழுத்துல கட்டி விட்டார். எனக்கு என்ன செய்யிற எண்டு தெரியல்ல. தம்பி நல்லா இருக்கணும் எண்டு கடவுளைக் கும்பிட்டன்.’

‘பயந்தீங்களா பாட்டி?’

‘ம்... ம்... வாழ்க்கையில முதன் முதலா பயந்தேன். திருவாட்கைப்பட்டவங்கள தேவகண்மிகள் கிட்ட ஒப்படைச்சிட்டு உறவினர்கள் போகலாம் என்று கோயிலில இருந்தவங்க சொன்னதும் நாங்க மூன்று பேரும் எங்களைக் கூட்டி வந்தவங்களக் கட்டிப் பிடிச்சு அழ ஆரம்பிச்சோம். வலுக்கட்டாயமாக என்னைக் கோதையம்மாவிடமிருந்து பிரிச்சு எடுத்தது இன்னும் ஞாபகம் இருக்கிறது. மூன்று நாளா வீட்ட போகணும்... வீட்ட போகணும்... என்று நான் அழுது அடம்பிடிச்சதப் பிறகு பல பெரிய மூத்த தேவரடியார்கள் சொல்லிச் சிரிப்பாங்க.’

‘பிறகு என்ன பாட்டி நடந்தது?’ ஆதினியின் குரலில் ஆர்வத்தை விடக் கவலை மிகுந்திருந்தது.

பாட்டியிடம் இருந்து பதில் ஏதும் வரவில்லை. பலம்குன்றிப் போன தனது வலது கையை மெதுவாக உயர்த்தித் தன்னிரு தோள்பட்டைகளையும் தடவிப் பார்த்துக் கொண்டாள் அறிவாட்டி.

‘மூன்று நாளுக்குப் பிறகு எங்க மூன்று பேரையும் குளித்து, மங்கலச் சின்னங்கள் அணிந்து, ஆலய வழிபாட்ட முடிச்சிட்டு சத்தியதேவி அம்மாவைச் சந்திக்கச் சொன்னாங்க. விஜயராஜ விண்ணகரத்தில் இருந்த மருத்துவம் பார்க்கும் தேவரடியார் அவர். வயதில் மூத்தவர். பார்ப்பதற்கு மிகவும் சாந்தமாக இருந்தார். மூன்று பேரில் என்னைத்தான் அவர் முதலில் அழைத்தார். ‘என்ன செய்ய வேண்டும் பாட்டி?’ என்று கேட்டபடி அவர் அருகில் சென்றேன்.’

‘உனக்கு முத்திரையிடப் போகிறேன் என்று மிக அமைதியாகப் பதிலளித்தார் சத்தியதேவிப் பாட்டி. அவரது வார்த்தைகளைப் போலவே பார்வையும் கருணை மிகுந்ததாக இருந்தது. அவருக்கு உதவியாக இரண்டு தேவரடியார்கள் இருந்தார்கள். அவர்கள் காட்டிய பீடத்தில் என்னைக் குப்புறக் கிடத்தி இரண்டு பக்கமும் அவ்விரு தேவரடியார்களும் என் தோள்களை இறுகப் பற்றிக் கொண்டார்கள். என்னவென்று தெரியவில்லை. ஏதோ ஒரு துன்பம் நிகழப்போகுது என்று மனது படபடத்துக் கொண்டது. என்ன நடந்தாலும் அழக்கூடாது என்ற வைராக்கியமான எண்ணம் மனதுக்குள் எழுந்தது. கண்களை இறுக்கி மூடிக்கொண்டு மகாவிஷ்ணுவை மனதார வேண்டிக் கொண்டிருந்தேன். ஏதோ நெருப்பில் தீய்ந்தது போன்ற வாசனையை உணரக்கூடியதாக இருந்தது. அடுத்த கணம் எனது இரண்டு தோள்பட்டையும் நெருப்பில் பொசுங்கிப்போனது. அம்மா... என்று யாரோ தூரத்தில் அலறுவது போல என் காதுகளுக்குக் கேட்டது. அதற்குப் பிறகு எதுவும் எனது நினைவில் இல்லை.’

‘ஒரு கிழமைக்குப் பிறகுதான் அன்று நடந்தது என்னவென்று பார்க்கும் மனத்தைரியம் எனக்கு வந்தது. பிராமணப் பெண்ணின் இடது தோளில் சங்குச் சின்னமும், வலது தோளில் சக்கரச் சின்னமும் இருந்தது.’

அறிவாட்டிப் பாட்டியின் தோள்களை மறைத்திருந்த ஆடையை விலக்கி அங்கே குறியிடப்பட்டிருந்த சங்கு, சக்கரச் சின்னங்களை மெதுவாக வருடினாள் ஆதினி. அவளது கண்கள் கலங்கி இருந்தது.

நாத்தழுதழுக்க, ‘மருந்து போட்டாங்களா பாட்டி’ என்றாள் ஆதினி.

‘நன்றாகச் சுத்தம் செய்யப்பட்ட செம்மண்தான் மருந்து. எனக்கு காயம் ஆறவில்லையென்று வில்வ இலைச்சாறு போட்டாங்க’ என்றாள் பாட்டி.

ஆதினியின் கண்ணீர்த் துளிகள் தீயினால் சுடப்பட்ட வடுக்கள் மேல் விழுவதை அறிவாட்டி உணர்ந்து கொண்டாள்.

‘என்னத்தால பாட்டி சுட்டவங்க?’

‘செம்புல செய்த இலட்சினைய நெருப்புல பழுக்கக் காய்ச்சி சுடுவாங்க. சிவன் கோயில் தேவரடியாராக இருந்திருந்தா திரிசூலச் சின்னமும், ரிஷபச் சின்னமும் என் தோளில இருந்திருக்கும்’ என்றாள் பாட்டி.

தோற்பட்டைத் தழும்புகளைத் தடவிக் கொண்டிருந்த ஆதினி பாட்டியின் முகத்தைத் திருப்பி, ‘ஏன் பாட்டி தேவரடியாராகப் போனீங்க’ என்று கேட்டாள்.

அறிவாட்டியின் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை. அவருடைய கண்கள் ஓலைக் குடிசையின் வழியே ஊடுருவி எங்கோ ஒரு தொலைவில் நிலைகுத்திட்டு இருந்தது. குடிசைக்குள் இருந்த நீண்ட மௌனத்தைக் கலைத்தபடி மீண்டும் ஆதினி, ‘ஏன் பாட்டி...’ என்று கேள்வியை மீளக்கேட்கத் தொடங்கவும் அறிவாட்டி செருமிக்கொண்டு, ‘அது நரபலியோடு தொடர்புபட்டது. நாளைக்குச் சொல்கிறேன்’ என்றாள்.

நரபலி என்றதும் அதிர்ச்சி அடைந்த ஆதினி ஒரு குழந்தையாக அறிவாட்டியின் மடியில் அடைக்கலமானாள்.

தொடரும்...



jeevarajah@thaiveedu.com

# சிறுவர் உலகும் போர்க்கால நினைவுகளும்

- ஜி:.ப்ரி ஹாசன்



மனிதர்களின் ஆன்மாவையும் உடல்லையும் மிக மோசமாக சிதைக்கும் ஒன்றாக போரைத் தவிர வேறொன்றும் இருக்க முடியாது என்று நினைக்கிறேன். போர் எல்லா மனிதர்களையுமே பாதிக்கிறது. அவர்களின் வாழ்வு, கனவுகள், எதிர்பார்ப்புகள், சந்தோசங்கள், உறவுகள் என... அது எதனையும் விட்டு வைப்பதில்லை. சாவின் நிறத்தை தனது கொடிய கரங்களால் மனித வாழ்வின் எல்லாப் பக்கங்களிலும் மிகச் சூச்சுமமாக அது பூசிவிடுகிறது. இதிலுள்ள மிகப் பெரும் சோகம் என்னவென்றால் போருடன் எந்தவிதத்திலும் சம்பந்தப்பட்டுக்கொள்ளாத அப்பாவிச் சிறுவர்களும் பெண்களுமே அதிகம் பாதிக்கப்படுகின்ற நிலைமை தொடர்வதுதான்.

போரில் அதிகம் பாதிக்கப்படும் ஒரு பகுதியினராக சிறுவர்கள் உள்ளனர். தனது சிறிய ஒரு கனவின் இதம் தரும் ஒரு பகுதியை இழந்து விடுவதிலிருந்து கொல்லப்பட்டுவிடுவது வரைக்கும் அவர்களின் வாழ்வை போர் சூரையாடிக் கொள்கிறது. சிறுவர்களாகிய நாங்கள் போரின் உளவியல் ரீதியானதும், உடலியல் ரீதியானதுமான பாதிப்புக்களை உணர்வுபூர்வமாக அனுபவிக்கத் தொடங்கி இருந்தோம். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. எங்களது கிராமத்தில் எங்கள் பகுதிக்கு புதிதாக வருகை தந்திருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஒரு பிரிவு பற்றியதாக அது இருந்தது. 'கஜபா' எனப்படும் ஒரு படை எங்கள் ஊருக்கு வந்திருப்பதாகவும் அவர்கள் மனிதர்களின் குரல்வளையைக் கடித்துக் கொல்வதாகவும் ஊரில் பேச்சுகள் அடிபட்டன. இராணுவத்தினரின் சீருடையும் அவர்கள் பேசும் மொழியும் வேறு, ஏற்கனவே எங்களை அச்சத்தில் ஆழ்த்தியிருந்தது. கஜபா எனும் சொல் கூட எங்களுக்கு அந்நியமானது. இராணுவத்தினரை நேரில் கண்டிருந்ததால் ஏற்பட்டிருந்த பீதியும் கஜபா என்ற அர்த்தம் புரியாத சொல்லின் அச்சுறுத்தலும் ஊரில் அவர்கள் தொடர்பாக நிலவிக் கொண்டிருந்த வதந்திகளும் என்னைக் கடுமையாகப் பாதித்தன.

ஒரு நாள் இரவு தூங்கச் சென்ற போது எனக்குத் தூக்கம் வரவில்லை. கஜபா இராணுவத்தினரால் நாம் மிக மோசமாகக் கொல்லப்படப்போகிறோம் என்ற அச்சத்தால் நான் தேம்பி அழுதேன். அப்போது எனது தாய் என்னை அரவணைத்துத் தேற்றினார். நான் மிக மிகச் சிறுவனாக இருந்தபோது அடைந்த அந்த மனத்துயரம் இப்போதும் என்னில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. அதன் திடுக்கத்திலிருந்து இன்னும் என்னால் மீள முடியவில்லை. இதுதான் ஒவ்வொரு சிறுவர்களதும் நிலைமையாக இருந்தது. உம்மா எவ்வளவு தேற்றியும் நான் தூக்கத்தைத் தொலைத்து விட்டிருந்தேன். இரவு முழுதும் திடுக்குறு கனவுகள் வந்தன. இதையொத்த அனுபவங்கள் இந்நாட்களில் எங்களுக்கு அடிக்கடி ஏற்பட்டன. எவ்வளவு கொடூரமான அனுபவங்கள் அவை. எவ்வளவு கசப்பான நாட்கள் அவை. பட்டம் விடுவதிலிருந்து, ஆடிப்பாடி மகிழ்வதிலிருந்து, பள்ளிக்கூடம் சென்று வருவதிலிருந்தும் எங்களை மிக மோசமாகத் தடுத்த அந்த நாட்கள் மிக மிகக் கொடூரமானவை.

எங்கள் கிராமத்தில் ஒரு குளமும், தினமும் அதை சூழ்ந்து கொக்குகளும் இருக்கும். அதைப்பிடிப்பதற்கு தூண்டலில் இரை குத்திப் போட்டுவிட்டு வருவதும் பின்னர் அகப்பட்ட கொக்குகளை பிடிக்கச் செல்வதும் எங்கள் வழக்கமாக இருந்தது. இப்படி எங்களால் அதிக கொக்குகள் பிடிக்கப்பட்டன. போர் உக்கிரமடைந்ததையடுத்து குளக்கரை கொக்குகள் எதுவுமற்று வெறுமையுற்றிருந்தது. அந்தக் கொக்குகள் குளக்கரையை விட்டும் விரட்டப்பட்டு விட்டன. கொக்குகளைப் போலவே நாங்களும் குளக்கரையை விட்டு விரட்டப்பட்டு விட்டிருந்தோம். அந்த சௌந்தர்யம் மிக்க எங்கள் இனிய நாட்கள் எங்களை விட்டும் ஈவிரக்கமற்றுப் பிரிக்கப்பட்டுவிட்டன. எங்களது கிராமத்துச் சிறுவன் ஒருவன் குளத்துக்குச் சென்ற அதிகாலை வேளையொன்றில் தன் கால்களை இழந்த துயரச் சம்பவத்தின் பின் அந்தக் குளம் வரண்டது. எங்கள் சுதந்திரம் சுருண்டது. பட்டாம் பூச்சிகளும் கனவுகளும் பரபரப்பும் நிறைந்த எங்கள் உலகம் போரின் கரங்களால் கிட்டத்தட்ட நிர்மூலமாக்கப்பட்டது.

### போரும் விளையாட்டும்:

போரின் ஆரம்ப நாட்களில் என்னைப் போன்ற அநேக சிறுவர்கள் எங்களது சொந்த விளையாட்டு முறைகளிலிருந்தும்



தூர வீசப்பட்டிருந்தோம். சிறுவர்கள் எப்போதும் ஏதேனு மொரு விளையாட்டுடன் இணைந்திருக்கவே விரும்புகின்ற னர். அவர்களின் வாழ்வும் கனவுகளும் எதிர்பார்ப்புகளும் பெரும்பாலும் விளையாட்டுடன் இணைந்த ஒன்றாகவே அமைந்தது. சிலவேளைகளில் சிறுவர்களின் ஒரு புகலிடமா கக்கூட விளையாட்டுகள் அமைந்துவிடுவதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? போர் விளையாட்டுக்கு ஒருபோதும் எதிரானதல்ல, ஆனால் எப்படி விளையாட வேண்டும் என சிறுவர்களின் விளையாட்டு முறையில் அது உறுதியான மாற்றங்களை ஏற்படுத்தி விடுகிறது. உண்மையில் போர் எங் களின் வாழ்க்கை முறையில் ஏற்படுத்திய அதே தாக்கத்தை விளையாட்டிலும் எவ்வளவு அற்புதமாக நிகழ்த்தியது.

மாலை நேரங்களில் கிட்டிப்புள், நொண்டிக்கோடு, சிங்காவடி (கிறிக்கெட் இரசிகர்கள் மன்னிக்க வேண்டும் - அப்போது கிறிக்கெட் இங்கு ஒரு பிரபலமான விளையாட்டாக இருக்க வில்லை), சொட்டிக்கல் போன்ற விளையாட்டுகளையே நாங் கள் விளையாடிக் கொண்டிருந்தோம். ஆனால் எங்களது பாரம்பரிய விளையாட்டுகளிலிருந்து எவ்வளவு நுணுக்கமாக எங்களது கண்களுக்கே புலப்படாமல் எவ்வளவு இலாவக மாக நாங்கள் மாற்றப்பட்டிருந்தோம். போரின் காலத்தில் எங்களது விளையாட்டின் எல்லைகளும் சுதந்திரங்களும்

சுருக்கப்பட்டுவிட்டன. வரையறுக்கப்பட்ட வெளியில் நாங்கள் விளையாட நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தோம். பெற்றோரின் கடுமையான கண்காணிப்புகள் விளையாட்டுகளின் போதும் தீவிரமாகின. விளையாட்டின் போது கண்காணிக்கப்படுதால் விளையாட்டின் போது தோல்வியடைவதைவிட மோசமானது என்பதை நாங்கள் இந்நாட்களில் புரிந்து கொண்டோம்.

எங்களது விளையாட்டுகள் அதன் பின்பு பெரும்பாலும் வன்முறைகளோடு தொடர்புபட்டதாகவே மாறத்தொடங்கி இருந்தன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எங்களது விளையாட்டுக்களில் நாங்கள் துப்பாக்கி ஏந்தியவர்களாகக் காணப்பட்டோம். கிடைத்த உபகரணங்களை ஆயுதமாகப் பயன்படுத்துவது எப்படி என்ற கலையை மெல்ல மெல்ல கற்றுக் கொண்டிருந்தோம். இல்லை போர் எங்களுக்கு கற்றுத்தந்து கொண்டிருந்தது. இலங்கையின் எல்லா சமூகங்களிலும் உள்ள சிறுவர்களின் விளையாட்டுகளும் அந்நாட்களில் இப்படித்தான் இருந்திருக்க வேண்டும். இப்படித்தான் போரை முன்னெடுக்க போரின் காலத்தின் போதே ஒரு புதிய தலைமுறை தயார்செய்யப்பட்டு விடுகிறது. போர் தனக்கான இரைகளை அதுவாகவே உருவாக்கிக் கொள்கிறது.

நாங்கள் எங்களது விளையாட்டின் போது இரண்டு குழுக்களாக ஆகிக்கொண்டோம். பெரும்பாலும் கள்ளன் பொலிஸ் என்பதாக அது வந்துவிட்டது. எப்படியும் இரண்டு குழுக்களும் பரஸ்பரம் மோதலில் ஈடுபட்டன. மற்றவர்களைத் துன்புறுத்துதல், மறைந்திருந்து தாக்குதல், கைது செய்தல் போன்ற பண்புகளை இந்த விளையாட்டுகள் கொண்டிருந்தன. அரசும் புலிகளும் ஒரு போரில் இறங்கி இருந்த அதே நேரம் சிறுவர்கள் ஏறத்தாழ ஒரு சிறிய போரை தங்கள் கிராமத்து ஒழுங்கைகளில் நடத்திக்கொண்டிருந்தனர். நாளை அரசின் சார்பாகவோ அல்லது தமிழ் இயக்கமொன்றின் சார்பாகவோ களமிறங்க காத்து நிற்கும் ஒரு இளம் தலைமுறை கள்ளனாகவும் பொலிசாகவும்... உண்மையைச் சொல்வதென்றால் நாளைய போருக்கான ஒரு ஒத்திகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

போர் எங்களுக்கு இதுபோன்ற விளையாட்டுக்களைத்தான் கற்றுத் தந்தது. ஆனால் போர் சிலருக்கு விளையாட்டாகவே ஆகிவிடுகிறது. போரை நடத்த சில அரசுகள் எவ்வளவு ஆசைப்படுகின்றன. சில கெரில்லா இயக்கங்களும் அரசுகளும் சமாதானத்தை விட போரைத்தான் அதிகம் விரும்புகின்றன. போரில் விளையாட அவை விரும்புகின்றன. போரை ஒரு விளையாட்டாகக்கொள்ளவும் ஒரு இளந்தலைமுறை போர் சார்ந்த விளையாட்டுமுறைகளை கைக்கொள்வதையும் அவை விரும்புகின்றன. உண்மையில் போர் வெற்றி-தோல்வி என்ற இரு சாத்தியப்பாடுகளைக் கொண்ட இரு தரப்பு விளையாட்டாக ஆக்கப்பட்டிருந்ததை நமது அரசாங்கம் ஏற்றுக்கொண்டுவிட்டது இல்லையா? ஆனால் எப்போதும் போரின் வெற்றிகளுக்குப் பின்னாலும் தோல்விகளுக்குப் பின்னாலும் மகிழ்ச்சி ஆரவாரங்களும் துயர் மண்டிய நினைவுகளும் ஒரு சேரக் கலந்தே கிடக்கின்றன.

இந்த நாட்களில் நாங்கள் எல்லோரது துப்பாக்கிகளையும் இரசிக்கும் அளவுக்கு போர் எங்களை ஆளாக்கி இருந்தது. இராணுவத்தினர் துப்பாக்கிகளோடு வரும் காட்சியும் அவர்களுடைய சீருடையும் சிறுவர்களை சுண்டி இழுக்கக்கூடியவை. துப்பாக்கிகளையும் சீருடைகளையும் காட்டியே பல சந்தர்ப்பங்களில் படைக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ளது. சிங்களப் பகுதிகளில் இராணுவத்தில் புதிதாய் இணையும் இளைஞர்களுக்கு அரசு கிராமப்புறப் பாடசாலைகளை அண்டிய வீதிகளில் அணி வகுப்பு மற்றும் இராணுவப் பயிற்சிகளை வழங்கியது. காரணம் சிறுவர்களின் இறுதிக்கட்டத்தில் இருந்தவர்களையும் படையில் சேர்த்துக்கொள்ளும் உளவியல் உத்தியாக அது இருந்தது. கிழக்கில் முஸ்லிம் புலிகள் கொல்லப்பட்ட பின் முஸ்லிம் பகுதியிலும் அரசு இதனைச் செய்தது.

எனக்கு இன்னும் நன்றாக ஞாபகம் இருக்கிறது. நாங்கள் பள்ளிக்கூடத்தில் அகதிகளாய் தஞ்சமடைந்திருந்த காலப்பகுதியில் படையினருக்கு பயிற்சியளித்து சீருடையணிந்து துப்பாக்கிகளுடன் ஊருக்குள் பிரதான வீதிகளில் அவர்கள் அழைத்து வரப்பட்டனர். இளைஞர்கள் மத்தியில் ஆசையைத் தூண்டும் ஒரு போரியல் நோக்கத்துக்காகவே அவர்கள் அவ்வாறு அழைத்துவரப்பட்டிருக்க வேண்டும். அந்தக் காட்சியைக்காணும் இளைஞர்கள் கவரப்பட்டு படையில் சேர்வார்கள் என்ற அரசின் தந்திரோபாய நடவடிக்கையாகவே அது அமைந்திருந்தது. அரசின் இந்த தந்திரோபாயம் அதற்கு உண்மையில் வெற்றியளித்தது. அகதி முகாம்களுக்குள் முடங்கிக் கிடந்த சில அப்பாவி இளைஞர்கள் இது போன்ற கவர்ச்சி விளம்பரங்களால் உந்தப்பட்டே போருக்குச் சென்றனர். பலிக்களத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த அகதிக் காலம் நாங்கள் விளையாட்டுக்களை கிட்டத்தட்ட முற்றாகக் கைவிட்ட காலம். அதிகம் கலவரமும் பீதியும் இந்த மக்களை கடுமையாக ஆட்கொண்டிருந்த காலம் அது. எவரும் தமது புத்திரர்களை கடுமையாகப் பாதுகாக்க எத்தனித்த காலம். எனினும், அதிகமும் இலங்கையின் கிராமப் புறங்களிலிருந்து தமிழ் இளைஞர்கள் எவர் கண்களுக்கும் அகப்படாமல் காணாமல் போய்க்கொண்டிருந்த காலம். இதுவே சிங்களக் கிராமங்களிலும் நடந்தது. அரசும் புலிகளும் இக்காலப்பகுதியில்தான் தத்தம் தரப்புக்கு ஆட்சேர்ப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர் என்று நினைக்கிறேன். அதற்கென அவர்கள் பல்வேறு தந்திரோபாய நடவடிக்கைகளைக் கையாண்டு கொண்டிருந்தனர். பெரும்பாலும் இது போன்ற கெரில்லா இயக்கங்களுக்கோ அரசபடைகளுக்கோ எங்களது கிராமங்களைப் போன்ற பகுதிகளிலிருந்தே இளைஞர்கள் அதிகமாக இணைக்கப்படுகின்றனர்.

ஈழப்போரைப் பேசும் பல்வேறு நாவல்களுக்கு மத்தியில் போர்க்கால சிறுவர்களின் அக உலகத்தையும், புற உலகத்தையும் ஆழமாகப் பேசும் ஒரு நாவல் வெளிவரவில்லை என்பதை இப்போது உணர்கிறேன்.



jiffry.hassan@thaiveedu.com




இரண்டாண்டுகளுக்கு முன் நள்ளிரவு 2 மணி இருக்கும். இராஜேந்திரசோழனிடமிருந்து கைபேசி அழைப்பு வந்தது. நல்ல தூக்கத்தில் இருந்தேன். அவர் நள்ளிரவு என்பதையே மறந்திருந்தார் என்பதை ஊகித்தேன். பேச்சும் கொஞ்சம் தெளிவில்லாமலே இருந்தது. அவர் சொன்னது இதுதான். ‘என் 50 ஆண்டுக்கால இலக்கியப் பயணத்தில் என் சிறுகதைகள் குறித்து இப்படி ஒரு கட்டுரை வரவில்லை. என் எழுத்துக்கள் குறித்து அதன் உள்ளுறைகளை இவ்வளவு நுணுக்கமாகவும் அதன் பெருமதிகளை இவ்வளவு சிறப்பாகவும் மதிப்பிட்டதில்லை. மிக்க சந்தோஷம் வேணுகோபால். எப்போ மயிலம் வர்றீங்க. உங்களோடு நிறைய பேசணும்’ என்றார். அவர் கதைகளின் பலம் பலவீனம் குறித்தும் அக்கட்டுரையில் எழுதியிருந்தேன். கிட்டத்தட்ட 25 பக்கங்கள் கொண்ட அக்கட்டுரையை ‘பேசும் புதிய சக்தி’ இதழ் அப்படியே வெளியிட்டிருந்தது. 76 வயது நிரம்பிய இராஜேந்திர-சோழன் நோயுடன் போராடிக்கொண்டிருக்கும் நிலையில் எந்த நேரம் என்பதே தெரியாமல் மனவெழுச்சியால் என்னுடன் பேசுகிறார் என்பதை அக்கணம் புரிந்துகொண்டேன். உங்கள் கதைகள் குறித்து நல்ல கட்டுரைகள் வந்திருக்கின்றனவா என்று கேட்டபோதெல்லாம் இதுவரை அப்படியான ஒரு மதிப்பீடும் வந்ததில்லை. அது பற்றி நான் எதிர்நோக்கவும் இல்லை என்று சொல்லியிருக்கிறார். அப்படி அவர் சொன்னாலும் ஒரு படைப்பாளியாக அவருக்கு வருத்தம் உண்டு. 76 வயதில் அவரது எழுத்துக்கள் குறித்து ஓரளவு முழுமையான ஒரு மதிப்பீட்டை கண்டதும் அவர் நள்ளிரவு என்பதை மறந்து என்னுடன் பேசினார். ஏதோ ஒரு நிறைவை 50 ஆண்டுகளுக்குப்பின் அவரை தொட்டிருக்கிறது. ஆனால் அந்த நோக்கத்தில் நான் எழுதவில்லை. எப்படியோ என் கட்டுரை அவர் கைக்கு சென்றிருக்கிறது. ஒவ்வொரு தமிழ் எழுத்தாள முன்னோடிகளுக்கும் இதுதான் நிலைமை.

மறுபடியும் ஒருநாள் மதியநேரம் அழைத்துப்பேசினார். உங்கள் மதிப்பீட்டோடும் என் எண்ணங்களைப் பகிர்கிறேன். மயிலம் வாருங்கள் என்றார். கொரோனா காலம் முடியாமல் இருந்ததால் இராஜேந்திரசோழனைப் போய் பார்த்து வருவதில் எனக்கு பயணச்சிக்கலும் இருந்தது. சென்று பார்க்க முடியவில்லை.

நான் படித்த முதல்கதை ‘புற்றில் உறையும் பாம்புகள்’. எதிராளியின் உளவியலை மிக நுணுக்கமாகத் திறந்துகாட்டிய கதை. முன்னோடிகளின் எந்த சாயலும் இல்லாமல் புதுசாக இருந்தது. அதில் அவரின் தனித்துவம் அழுத்தமாக வெளிப்பட்டிருந்தது. புத்தகங்களைத் தேடித்தேடி படித்துக்கொண்டிருந்த காலம். இராஜேந்திரசோழனின் ‘எட்டுக்கதைகள்’ தொகுப்பு பற்றி பலர் முக்கியத்துவம் கொடுத்து பேசிக்கொண்டிருந்தார்கள். விடியல் பதிப்பகம் இரண்டாம் பதிப்பாக கொண்டுவந்திருந்தது. 1996-ல் வாங்கிப் படித்தேன். ‘கோணல் வடிவங்கள்’, ‘தனபாக்கியத்தோட ரவ நேரம்’, ‘ஊனம்’, ‘புற்றிலுரையும் பாம்புகள்’, ‘எதிர்பார்ப்புகள்’, ‘இச்சை’ கதைகள் என்னுள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின. மனதின் விசித்திரங்களை ஒரு கணத்தில் புரட்டிப்போட்டு காட்டின. மொழியில் ஜாலமில்லை. பெரிய குறியீடுகள், இருண்மை இல்லை. படிமம் அது இது என்று எதுவுமில்லை. ஆனாலும் வாழ்க்கையை புதிய கோணத்தில் காட்டின. நடுநாட்டு மக்களின் பேச்சுமொழியையும் இயல்பான ஒரு உரைநடையையும் கைக்கொண்டு அக்கதையில் உச்சபட்சமான வெளிப்பாட்டை நிகழ்த்திக்காட்டி இருந்தார். வெளித்தெரியாமல் கொதித்துக்கொண்டிருக்கும் அக உலகத்தின் ஆட்டங்களைக் காட்டும் தனித்துவம் மற்றவர்களின் கதைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருந்தது. அக்கதைகள் என்னை மிகவும் கவர்ந்தன.

‘பறிமுதல்’, ‘எங்கள் தெருவில் ஒரு கதாப்பாத்திரம்’, ‘பயன்கள்’, ‘இடம்’, ‘உளைச்சல்’ என்று அவரது கதைகளைத் தொடர்ந்து படிக்கப் படிக்க 70-களில் எழுதவந்த அசலான கலைஞன் என்று என் மனது சொல்லியது. அவர் எழுதிய கதைகளின் பின் உள்ள ரகசியங்களைக் கேட்க நினைத்தேன். தனிப்பட்ட சந்திப்பில் அல்லது காலாற நடந்து நிலவு காயும் தோட்டத்து களத்து மேட்டில் அமர்ந்து கேட்க நினைத்தேன். அக்கதைகளின் அந்தரங்கங்கள் அப்படி இருந்தன. நினைத்தேன் தவிர இராஜேந்திரசோழனை தேடிச் செல்ல எனக்கு வாய்க்கவில்லை.

இருபது ஆண்டுகளுக்கு முன் அவரை மதுரையில் நேரில் சந்தித்தேன். ஆஜானுபாகுவான உயரம். மஞ்சளும் சிவப்பும் கலந்த ஜிப்பா, முன் நெற்றியில் சுருண்டுவிழுந்த முடி. ஓர் ஆண்யானை நடந்துவருவது போன்ற தோற்றம். நிமிர்ந்த பார்வை. உருவம் பயத்தைத் தந்தாலும் அவரது புன்னகை தோளில் கைபோட்டுக்கொள்ளும்படியாக இருந்தது. அப்போது அவருக்கு 55 வயது இருக்கலாம்.

‘சார் எங்கள் அமெரிக்கன் கல்லூரி மாணவர்களிடம் இலக்கியம் குறித்து பேசுறீங்களா. நான் ஏற்பாடு செய்கிறேன்’ என்றேன். ‘ஏற்பாடு என்ன ஏற்பாடு பேசலாம்’ என்றார். மாணவர்களிடம் அவர் சொன்னது. ‘நீங்கள் எழுதவேண்டும் என்று விரும்பினால் தி. ஜானகிராமனைப் படியுங்கள் போதும். எழுத்தின் கலை வசப்பட்டுவிடும்’ என்றார். தன் படைப்புகள் குறித்து ஒருவரிகூட சொல்லாமல் இலக்கியம் குறித்து பேசினார். அதிராத பாந்தமான அவரது பேச்சு ரொம்பவும் நெருக்கமாக இருந்தது.

தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் (2005) நாவல் கருத்தரங்கம் நடந்தது. அங்கு வந்திருந்தார். நாவல் குறித்த என் விமர்சனம் பெரும் சர்ச்சையை உருவாக்கியது. எழுதவரும் பெண்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்று ஒரு வாதம் கிளம்பியது. தலைமையேற்ற ராஜேந்திசோழன், ‘பெண்கள் எழுதவருவதை வரவேற்போம். தகுதி இல்லாத எழுத்துக்களை உற்சாகப்படுத்துவது இலக்கியத்திற்கு கேடு’ என்றார்.

உணவு இடைவேளைக்குப்பின் அறையில் நீண்டநேரம் பேசினோம். அவர் கொண்டுவந்த ‘மண்மொழி’ இதழில் என்னை எழுதும்படி அழைத்தார். அந்த சமயத்தில் தீவிர களச்செயல்பாட்டாளராக இருந்தார். ‘உங்களால் எழுதப்பட்டிருக்க வேண்டிய கதை உலகம் எழுதப்படாமல் இருக்கிறது சார். அது குறித்து வருத்தமில்லையா?’ என்று கேட்டேன். புன்சிரிப்புடன் ‘அதைவிட இப்போது நான் செய்கிற பணி முக்கியமென்றே நினைக்கிறேன்’ என்றார். கதைகள் எழுதாமல் போனதில் கவலையற்று களச்செயல்பாடுகளில் உற்சாகம் கொண்டே பேசினார். அதற்குப் பிறகும் சில ஆண்டுகள் கழித்து ‘நான் விரும்பி செய்த களச்செயல்பாடுகள் அப்படியப்படியே நின்றுவிட்டன. எழுத்தாளனாக முழு மூச்சில் செயல்பட்டிருந்தால் இலக்கிய உலகத்தில் இன்னும் சிறப்பான பங்களிப்பைத் தந்திருக்க முடியும். வருத்தமாகவும் இருக்கிறது’ என்றார்.

சில எழுத்தாளர்களுடன் நெருங்கிப் பழகமுடியும். சில எழுத்தாளர்களுடன் சற்றே விலகித்தான் உறவு வைத்துக்கொள்ள முடியும். இராஜேந்திரசோழன் அடுத்தவர்களின் நல்ல கருத்துக்களை எடுத்துக்கொள்ளும் பண்பாளர். காலத்தின் தேவையை உணர்ந்தவர். நெகிழ்வுகொண்டவரும் கூட. எவர் மீதும் பொறாமையோ உதாசீனமோ கொள்ளாத மனிதர். இந்த சமூகத்திற்கு ஏதோ ஒரு வகையில் நாம் பயன்பட வேண்டும் என்பதில் ஆழ்ந்தவர். பழக்கத்தில் அவரிடம் வெளிப்படும் தோழமை உறவு உடனே நெருக்கத்தை உண்டாக்கும்.

பவா செல்லதுரையின் மகன் வம்சி நான்காண்டுகளுக்கு முன் ராஜேந்திர சோழன் குறித்த ஆவணப்படம் ஒன்றை எடுத்துக்கொண்டிருந்தார். கோவை வந்திருந்ததாகவும் நீங்கள் ராஜேந்திரன் குறித்து உங்கள் எண்ணங்களை சொல்ல முடியுமா என்று கேட்டார். நாளை காலையில் பேசலாமா என்றேன். சார் இன்று இரவோடு கேமரா வாடகை முடிகிறது, இன்றே பேச முடியுமா என்றார், வரச்சொன்னேன். இரவு 10 மணிக்கு மேல் வீட்டிற்கு வந்து பதிவுசெய்தார். அந்த ஆவணப்பட வெளியீட்டுக்கு சென்னைக்கு அழைத்திருந்தார்கள், சென்றேன். ராஜேந்திரசோழன் வந்திருந்தார். மெலிந்த உருவத்தை பார்த்ததும் அவர் அருகில்கூட செல்லவில்லை. எனக்கு மிக வருத்தமாக இருந்தது. அந்த கம்பீரம் உருகுலைந்து போனதைப் பார்த்ததும், இந்த கோலத்தில் நான் பார்த்திருக்கக்கூடாது என்றே மனது தவித்தது. காலம் செய்த கோலத்திலிருந்து மீண்டு வந்தால் நன்றாக இருக்குமே என்று விரும்பினேன். பால் நிலாவின் தேய்வு வளரவில்லை.

சிறுகதை ஆசிரியராக நன்றாக அறியப்பட்டிருக்கும் ராஜேந்திரசோழன் பத்துக்கும் மேற்பட்ட நாடகங்கள் எழுதியிருக்கிறார். 1977-ல் சே. ராமானுஜம் ஏற்பாடு செய்த தேசிய நாடகப் பயிற்சி முகாமில் கலந்துகொண்டு நாடகம் குறித்த அக்கறையை வளர்த்துக் கொண்டவர். என்றாலும் நவீன நாடகத்தின் உத்திமுறைகளில் நாட்டம் கொள்ளாமல் தெரு நாடகத்தினையும், மேடை நாடகத்தினையும் உள்வாங்கிக்கொண்டு எளிய வடிவத்திலேயே எழுதினார். புனைகதைகளைவிட சமூகப்பிரச்சினைகளை நாடகங்களின் வழி மக்கள் முன் கொண்டுசெல்ல முடியும் என்ற பிடிமானத்தில் நாடகங்களை எழுதி மேடை ஏற்றினார். தான் எழுதிய நாடகங்களை காலத்திற்கு ஏற்றபடி செம்மையாக்கிக்கொள்வதில் தவறில்லை என்றார்.

‘விபத்து’ என்றொரு நாடகம் 1980-பதுகளில் ஆரம்பத்தில் எழுதப்பட்டது. சிறுகதையாக எழுதி பின் நாடகமாக மாற்றியிருக்கிறார். நீண்ட நாட்களாக ஸ்கூட்டர் வாங்க நினைத்தவர் ஸ்கூட்டர் வாங்குகிறார். மனைவி, பிள்ளையுடன் செல்லும் போது ஒரு கிழவர் மீது லேசாக இடித்துவிடுகிறார். யாருக்கும் சேதமில்லை. கிழவர் கொண்டுவந்த எண்ணெய் பாட்டில் கீழே விழுந்து சிந்திவிடுகிறது. எதிர் வீட்டு ஆசிரியர் சமாதானப்படுத்தி எண்ணெய்க்கும், ஒரு ஊசி போட்டுக்கொள்ளவும் 30ரூபா வாங்கித் தருகிறார். சந்தோசமாக விலகிச்செல்லும் சமயத்தில் நான்கு பேர் வந்து தகராறு செய்து 100 ரூபாயை விபத்துக்கு இழப்பீடாக வாங்குகின்றனர். அந்த 100 ரூபாயை அந்த கிழவருக்குத் தராமல் அபகரிக்கின்றனர். மக்கள் சேவைக்கு என்று வருபவர்கள் எவ்வளவு தூரம் கள்ளத்தனமாக இருக்கிறார்கள் என்பதை சொல்கிறது.

உலகளவிலும் தமிழகத்திலும் நாடகங்கள் எப்படியெல்லாம் தோன்றி மாற்றமடைந்து மாற்றமடைந்து வந்திருக்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு ‘அரங்காட்டம்’ என்ற நூலை எழுதியிருக்கிறார். அதில் உழைப்பு வேறு, கலை வேறு. ஒன்று உயிர் வாழ்தல் சார்ந்தது. மற்றொன்று சிந்தனை சார்ந்தது என்று பிரித்து அதனதன் தன்மைகள் குறித்து விளக்குகிறார். கலப்பை நிலத்தை உழுது பண்படுத்த பயன்படுகிறது. என்றாலும் அக்கலப்பை ஒரு தொழிலாளியின் மனநிலையை வெளிப்படுத்துவதில்லை. அதேசமயம் மனிதனின் அகநிலை தொழில் சார்ந்து வெளிப்படும். அந்தவகையில் கலையும் தொழிலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்று விளக்குகிறார்.

நாடகமானது கவிதை, கதை, திரைப்படம், தொலைக்காட்சித் தொடர்களிலிருந்து எப்படியெல்லாம் வேறுபட்ட கலைவடிவமாக இருக்கிறது என்று பல கருத்துக்களை எடுத்து விளக்கியிருக்கிறார். கதை, கவிதை தனிநபரை நோக்கியது. நாடகம் ஒரு கூட்டத்தாரால் ரசிக்கப்படுவது. திரைப்படத்தில் தெரிவது பொம்மை உருவங்கள். துண்டு துண்டாக காட்சிகள் எடுக்கப்பட்டு வெட்டி ஒட்டப்பட்டு இணைக்கப்பட்டவை. நாடகம் ஒவ்வொரு முறை மேடை ஏறும்போதும் உயிர்பெறுகிறது. அது ரத்தமும் சதையுமாக தெரியும் அசலான உருவங்கள். நாடகத்திற்கு இரண்டாவது, மூன்றாவது என்று அறிமுகம் தேவையில்லை. அது நேரடியான ஒரு கலை வடிவம்.

ஓவியம், சிற்பம் அசைவற்ற தன்மை கொண்டவை. நாடகம் எப்போதும் நிகழ்கிற நிகழ்வை கொண்டிருப்பது. உயிர் துடிப்பான நடிகர்களால் உணர்ச்சிகளையும் சிந்தனைகளை யும் வெளிப்படுத்தி பார்வையாளர்களை ஈர்ப்பது, என்றவித மாய் நாடகத்தின் தன்மையை விரிவாக எழுதியிருக்கிறார். நாடகம் என்ற கலை வடிவத்தைத் தெளிவாக அறிமுகப்படுத் தும் மிக நல்ல நூல் அரங்காட்டம்.

1990-களின் தொடக்கத்தில் பின்நவீனத்துவம் கலை இலக்கி யத்தளத்தில் பரபரப்பாகப் பேசப்பட்டது. அது வரையிலான அரசியல், தத்துவம், அறிவியல், பகுத்தறிவு, கொள்கைகள், கோட்பாடுகள் மீது கேள்விகளை எழுப்பியது. நவீனத்துவம் உண்டாக்கியிருக்கும் கட்டமைப்புகளை உடைத்து விமர்சனத் திற்குள்ளாக்கியது. மார்க்சியம் சமூகத்திற்கு எதிரான சீர ழிவை உண்டாக்கியது என்று கட்டுடைத்தது. மொழியால் உருவாக்கப்படும் படைப்புகளில் உன்னதம் என்ற ஒன்று இல்லை. அப்படி சொல்வது அபத்தம். பிரதி என்பதே ஒரு மொழி விளையாட்டுத்தான். பகுத்தறிவை பகுத்தறிவு பயங்க ரவாதம் என்றும் தருக்க முறையை தருக்க வன்முறை என் றும் நிறுவப்பட்ட சில சிந்தனைகள் மீது கேள்விகளை எழுப்பி தகர்க்க முனைந்தது. பின்நவீனத்துவம் என்று பேசுவ தில் பெரும் மோகம் ஒன்று உண்டானது. பின்நவீனத்துவம் குறித்து அறியாதவர்களை ஒன்றுமறியாத தத்திகள் போல பாவித்தது. இந்தச் சூழ்நிலையில் பின்நவீனத்துவத்தில் இருக்கும் போலியான கருத்து பாவனைகளை உடைத்து தன்னுடைய ‘பின்நவீனத்துவம் பித்தும் தெளிவும்’ நூலில் விரிவாக எழுதினார். பின்நவீனத்துவத்தில் இருக்கும் நல்ல அம்சங்களை எடுத்துக்கொண்டார். அதே சமயம் சமூகத்தை முன் நகர்த்தும் மார்க்சியம் போன்ற கொள்கைகளை ஒட்டு மொத்தமாக நிராகரிப்பதில் உள்ள குளறுபடிகளை சுட்டிக் காட்டினார். நவீன அறிவியலில் அலோபதி சுரண்டல்தன்மை மிக்கதாகவும் சித்த மருத்துவம் மனித சமூகத்திற்கு நல்ல வையாக இருப்பதையும் பின்நவீனத்துவம் கண்டுச் சொன் னதை ஏற்றுக்கொண்டார். ஆனால் முற்போக்கு சிந்தனை-களை இயக்கமற்ற நிலையாக்கி முடங்கச் செய்கிற பின்நவீ னத்துவக் கூத்துக்களைச் சுட்டிக்காட்டி நிராகரித்தார். ஒருவ கையில் பின்நவீனத்துவத்தால் பித்துப்பிடித்திருந்த சூழலை அந்நூலின் வழி ராஜேந்திரன் தெளிவாக்கினார்.

மார்க்சிய செயல்பாட்டாளராகவும், தொடர்ந்து தமிழ்தேசிய செயல்பாட்டாளராகவும் ஆற்றிய பணிகள் தனித்த வரலா றாக நிலைபெற்றிருக்கிறது. இந்த அனுபவங்கள் கதைகள் எழுதுவதற்கும் அடிப்படையாக அமைந்திருக்கின்றன. ‘சவாரி’, ‘சென்னையில் பார்க்க வேண்டிய இடங்கள்’, ‘எதிரி’, ‘வரிகள் வரிகள்’, ‘மதராசும் மன்னார்சாமியும்’, ‘புரட்சிப் பய ணம்’ முதலிய கதைகளில் முற்போக்காளர்கள் பொருட்படுத் தத் தவறும் இடங்களை முன்வைத்து விவாதத்திற்கு உள் ளாக்குகிறார். இதன் அடிப்படையில் தமிழில் மிகச்சிறந்த பகடிக்கதைகள் எழுதியவர்களில் ஒருவர் இராஜேந்திரசோழன்.

பெண்களைக் கண்ணீரும் கம்பலையுமாக காட்டப்பட்ட கோணத்திலிருந்து விலகி நாசூக்கை அவர்கள் மேல் போர்த் தாமல் அடாவடித்தனத்தோடு கிளம்பும் அத்தனை ஆவேசங் களையும் இயல்பாகக் காட்டியவர் இராஜேந்திரசோழன். வாயாடித்தனம் என்பது ஒரு இலக்கிய அழகியலைப் பெற் றது அவரால்தான். ஆண்களுக்கு முன், மொழியை ஓர் ஆயு தமாகப் பயன்படுத்திய பெண்களை இலக்கியப் பரப்பிற்குள் கொண்டுவந்தவர். அது இலக்கியத்தின் உச்சபட்ச விளைவுக ளைத் தந்தன. தெருச்சண்டையில் மூர்க்கமாகவும் அவை புனைவில் இலக்கியமாகும்போது வசீகரமாகவும் மாறின. அவர்களின் நக்கல், குதர்க்கம், வேகாலம், மூர்க்கம், துணிவு, வசை, வேலை, இச்சை எல்லாம் உள்ளத்தின் கோலங்களாக மாறின. தமிழின் நவீன இலக்கியப்பரப்பில் இத்தென்னார்க்காடு மக்களின் பேச்சுமொழி இவரது படைப்பு களில் குறிப்பமைதியின் பேரெழிலோடு வெளிப்பட்டன. காமத்தை ஆண்கள் மர்மமாகவும் பெண்கள் சூசகமாகவும் வெளிப்படுத்துவார்களாக இவர் கதைகளில் வெளிபடுகின்-றனர்.

ஜானகிராமன் தன் கண்களின் வழி கண்டவற்றை புனைவிற் குள் காட்சிகளாக மாற்றி ஒரு வசீகரத்தை உண்டாக்கினார். ராஜேந்திரசோழன் வாழ்வின் சித்திரங்களைக் காதுகளின் வலி உறிஞ்சிக்கொண்டு தன் இதயத்திலிருந்து உருவங்களா கத் தீட்டி உலவவிடுகிறார்.

70-களின் துவக்கத்தில் மனிதர்களை உலுக்கி எடுக்கும் தீவி ரத்தன்மை கொண்ட உளவியல் கதைகளை எழுதினார். ராஜேந்திரசோழனின் வருகையை ‘மற்றும் ஒரு ஜெயகாந்தன்’ என்று இலக்கிய வட்டாரத்தில் பேசினார்கள். ஆனால் ஜெய-காந்தன் பரிவுமிக்க தீர்வுகளை கதைப்பொருளாக்கியவர். ராஜேந்திரசோழன் மனித ரகசியங்களைக் கதைப்பொருளாக் கியவர்.

‘ஊனம்’ என்றொரு கதை பக்கத்து வீட்டுப் பெண்ணை பற் றிய கதை. எப்போதும் தன்னை அலங்காரம் செய்து கவர்ச் சியாகக் காட்டிக்கொள்பவள். அத்தெருவழியாக வருபவர்க ளையும் கடந்து செல்பவர்களையும் நிறுத்திவைத்து பேசி கிரக்கத்தை உண்டாக்குபவள். துணிந்து காசு கேட்பவள். கதைசொல்லியான பக்கத்து வீட்டுக்காரனோடு ஒரு நாள் பேசும் சந்தர்ப்பம் அமைந்தபோது, ‘நேத்து ஒரு கனவு, என்னை நீ வச்சிருக்கிறதா வந்திச்சு’ என்று நேருக்கு நேர் சொல்கிறாள். தெருவில் செல்லும் ஆடவர்களுடன் இவள் பேசுவதை தடுத்து நிறுத்தமுடியாது தவித்த கணவன் ஒரு சந்தர்ப்பத்தில் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொள்கி றான்.

அவளை, அவளின் நடத்தையை எல்லோரும் ஏசுகின்றனர். சாவு வீட்டைப் பார்க்கச் செல்கிறான் கதைசொல்லி. அவ ளைப் பார்த்ததும் ஒரு இரக்கம் தோன்றுகிறது. ஆர்ப்பாட்டம் அடங்கி ஒடுங்கிப்போய் அமர்ந்திருக்கிறாள். இழவு வீட்டுக் குச் சென்று வந்தவனைக் கொல்லையில் சென்று தலை-முழுகி வரும்படி மனைவி சொல்கிறாள். மனதிலிருந்து அவ னால் தலை முழுகமுடியவில்லை. கதைக்கு ஊனம் என்று தலைப்பு வைத்திருக்கிறார். தெருவையே கலகலத்து வைத் திருந்தவள். ஆண்களை நேருக்கு நேராக அழைத்துப் பேசி யவள், ஒடுங்குகிறாள். விதவை என்ற பார்வை அவளிடம் புதிய ஊனமாக ஒட்டிக்கொண்டதைச் சொல்வது போலவும் இருக்கிறது. பேச்சு ஒடுங்கி குறுகிப்போன ஒரு பெண்ணை பார்பது போலவும் இருக்கிறது. பல குறிப்பமைதிகளை கொண்டதாக மாறுகிறது. ஜெயகாந்தன் கதைகளில் குறிப்ப மைதி என்பதற்கே இடமில்லை.

இராஜேந்திரசோழன் தன் கதைகளுக்கு வைக்கும் தலைப்பு அர்த்தப்பரிமாணத்தில் பல அடுக்குகள் கொண்டதாக மாறு

கிறது. ‘பறிமுதல்’, ‘இச்சை’, ‘இடைவெளி’, ‘அவஸ்தை’, ‘எதிரி’, ‘விவஸ்தை’ என இவ்விதமான தலைப்புகள் கதைக் குள் பற்பல கோணங்களைக் காட்டுகின்றன.

‘இச்சை’ ஒரு கனவுக்கதை. இளைஞனுக்கு ஒரு கனவு வரு கிறது. ஊரைக்கடந்து காட்டுவழி செல்கிறான். சற்றுத்தள்ளி ஒரு நடுத்தர வயது பெண்ணைக் காண்கிறான். அவனைக்க டந்து பெண் நாயைத் துரத்திக்கொண்டு ஆண் நாய்கள் ஓடு கின்றன. ஓரிடத்தில் பெண்ணாய் நிற்க ஆண் நாய் ஒன்று கலவியில் ஈடுபடுகிறது. அவன் அந்தப் பெண்ணையும் நாய்க்கூட்டத்தையும் இச்சையோடு பார்க்கிறான். அவள் அவன் கையைப்பற்றி காட்டை நோக்கி இழுத்துச் செல்கி றாள். ஒரு பாழடைந்த மண்டபம் வருகிறது. அதை பார்த்த தும் அவன் அங்கேயே செல்லலாமா என்கிறான் வேண்டாம் என்று தலையாட்டுகிறாள். காட்டின் அடிவாரத்தை நோக்கி இழுத்துச் செல்கிறாள். செல்லும் வழியில் ஒரு குடிசை தெரி கிறது. அதன் முன் ஒரு கட்டில் இருக்கிறது. அங்கே செல்ல லாமா என்று கேட்கிறான், வேண்டாம் என்கிறாள். அடுத்து ஒரு புல்வெளி வருகிறது. அதை காட்டுகிறான், வேண்டாம் என்கிறாள். அவள் இழுத்துக்கொண்டு மலையேறுகிறாள். அவனுக்கு அலுக்கத்தொடங்குகிறது. இழுத்த இழுப்பில் இச்சை கூட வடிந்து போகிறது. மலை உச்சிக்கு செல்கின் றனர். பள்ளத்தாக்கும், பல சிகரங்களும், குன்றுகளும் தெரி கின்றன. விழுந்து விடுவோமோ என்ற பயம் ஏற்படுகிறது. மறுபடி அவனை இழுத்துக்கொண்டு அடிவாரத்திற்கு வருகி றாள். ஓரிடத்தில் நிற்கின்றனர். நின்றதும் திரும்பி பார்க்கி றான். இழுத்துக்கொண்டு வந்தவள் மறைந்துவிடுகிறாள். அவனுக்கு அச்சம் ஏற்படுகிறது. எதிரே பெரிய பாறை தெரி கிறது. பாறைக்கு அந்தப்பக்கமிருந்து ஒரு குரல் வருகிறது. ‘அம்மா என்னை விட்டுரும்மா’ என்று ஒரு குமருப்பெண் கெஞ்சிக்கொண்டிருக்கும் குரல் வருகிறது. அவள் மன்றாடு வது கேட்கிறது. அடுத்து அந்த பாறை மீது கற்பிணியான குமரி மல்லாந்து கிடந்தபடி தாயிடம் கெஞ்சுகிறாள். தாய் மூர்க்கத்துடன் ஒரு வாளை எடுத்து மகளை வெட்டி பிளக்க ஓங்குகிறாள். கனவிலிருந்து விழிக்கிறான். கதைக்கு ‘இச்சை’ என்று பெயர் வைக்கிறார்.

ஆடவனின் இச்சை பாலியல் வேட்கை மிகுந்ததாக இருக்கி றது. அந்த இளம் பெண்ணிற்கும் இச்சை இருந்திருக்கும். காமத்தை ஆசையோடு அனுபவிக்கவேண்டும் என்று இருந் திருக்கும். ஆனால் அந்த காமம் கண்ணீரால் தத்தளிக்கும் படி ஆக்குகிறது. ஆணுக்கு ஒன்றாகவும் பெண்ணுக்கு ஒன் றாகவும் நிறுத்துகிறது. பெண்ணின் காதலை ஏற்க மறுக்கி றது. காதல் ஒரு சுமையான சித்திரமாக மாறுகிறது. தமிழ்ச் சூழலில் தீர்க்கமுடியாத பிரச்சினையாக உக்கிரம்பெற்றே இருக்கிறது. இப்படி நாம் பல்வேறு விதங்களில் விடைக ளைத் தேடிச் செல்லும்படி நிரம்பி இருக்கிறது. நமக்குள்ளே நிறைய பேசும்படியான மௌனத்தால் நிறைந்திருக்கிறது.

இவரது கதைகளில் வறுமையின் கோலத்தைத் தீவிரமாகவே காட்டியிருக்கின்றன. அதில் எந்த இடத்திலும் எழுத்தாளரின் குரல் தலைதூக்குவதே இல்லை. அந்த வறுமையை வாசக னைத் தாக்குகிறது அவர்கள் மீது பறிவை உண்டாக்குகிறது. இன்னொரு வகையான கதைகளும் உண்டு. உழைக்கும் மனிதர்களின் உலகம் ஒரு புறம், சோம்பேறிகளின் உலகம் ஒரு புறம் இருப்பதையும் காட்டுகிறது. இவரது கதைகள் ஒற் றைத்தன்மை கொண்டவை அல்ல. பல ஒற்றையடிப் பாதை கள் வந்து சங்கமிக்கும் இடமாக அடர்த்தியால் பின்னப்பட்டு இருக்கின்றன. இது சிலருக்கு மட்டும் வாய்த்த நல்ல கலை அம்சம்.

இராஜேந்திரசோழன் ஒரு இடதுசாரி. எளியவர்கள் மீது அக்க றையும் அன்பும் கொண்டவர். அவர்களது முன்னேற்றத்திற் காகப் பாடுபட்டவர். ஆனால் கதைகளில் உளவியல் சார்ந்து பார்த்தவர். மற்ற எழுத்தாளர்கள் தங்கள் கதைகளில் முதலாளிவர்க்கத்தின் அறமின்மையை எழுதியபோது ராஜேந் திரசோழன் எளியவர்களின் வறுமையின் ஊடே ஆசாபாசங்க ளையும் துணிந்து எழுதினார். இன்னொரு விதத்தில் இடது சாரி இயக்கத்திற்குள் இருந்த போலிகளைப் பற்றி எழுதி னார். சில இடங்களில் முற்போக்காளர்கள் ஏன் பிற்போக்கா ளர்களாக இருக்கிறார்கள், உயர்ந்த கொள்கையாயினும் மனிதர்களின் வாழ்க்கையில் மார்க்சியர்கள் நெகிழ்ச்சியுடைய வராக சில சந்தர்ப்பங்களில் இருக்கவேண்டும் என்று காட்டு கிறார். இதனாலே இடதுசாரிகளால் கொண்டாடப்படாதவராக, முரண்பட்டவராக பார்க்கப்பட்டார். அவர் எழுத வந்த முதல் மூன்று ஆண்டுகளில் செம்மலரில் மட்டும் 30 கதைகளுக்கு மேல் எழுதியிருக்கிறார். அக்கதைகளில் மார்க்சியராக இருந் தும் தன் கலைப்பார்வையை மாற்றிக்கொள்ளாமலே எழுதியி ருக்கிறார். அவர் கொள்கையையும் மனிதனின் அகத்தையும் ஒருபோதும் குழப்பிக்கொண்டதில்லை. தன் பரிவை மாந்தர் கள் மீது சுமையாக ஏற்றி வைக்காமல் எழுதினார். சமீபத் தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய ‘இசைவு’ கதை ஆரம்ப காலத்தில் எழுதப்பட்டு பிரசுரிக்க வேண்டாம் என்று வைத்திருந்த கதைதான். அக்காலத்தில் பிரசுரிக்காமல் வைத்திருந்த 25 கதைகள் தற்போது கிடைத்துள்ளன. அதில் ஒன்றுதான் ‘இசைவு’.

காமத்தை வக்கிரமாகப் பார்க்காமல் மனிதர்களை அலைக்க ழிக்கவைக்கும் சக்தியாகப் பார்த்தார். அதே சமயம் மனிதர்க ளிடமிருந்தும் மனுஷிகளிடமிருந்தும் ஒரு சந்தர்ப்பத்தில் அது வடிந்து போகக்கூடிய தன்மையாக இருப்பதையும் காட்டி னார். ‘இடம்’, ‘எதிர்பார்ப்புகள்’ முதலிய கதைகளில் காமத் தின் பல்வேறு எண்ணங்களை காட்டியிருக்கிறார்.

சகஜமான வெளிப்பாடுகள் மீது ராஜேந்திரசோழன் கொண்டி ருந்த பெருவிருப்பம்தான் அனலடிக்கும் உயிர்ப்புள்ள அழுத்தமான மாந்தர்களை கதையுலகிற்குள் கொண்டுவர முடிந்தது என்று நினைக்கிறேன். இலக்கிய உலகத்தில் புயல் போல நுழைந்து பனி போல அமைதி கொண்டது ஒரு விசித்திரமாகவே இருக்கிறது. அந்த இலக்கிய வேகம் கைவிட்டுப் போனதை ராஜேந்திரசோழன் ஒரு சந்தர்ப்பத்தில் உணர்ந்தார். குடும்பச் சூழலும் அரவணைப்பும் இல்லாத நிலை தன் எழுத்தை முடக்கியதாக ‘பரிதாப எழுத்தாளர் பர தேசியார் பண்டிதர் புராணம்’ குருநாவலில் தன்னையே பக டைக்கு உள்ளாக்கி எழுதியிருக்கிறார். இந்நாவலை அவரது வாக்குமூலமாகக் கொண்டாலும், படைப்பாக்கத் தொடர்ச்சி அறுந்ததும் திரும்ப அதே தீவிரத்தோடு அவரால் அச்சக் தியை மீண்டும் மீட்டெடுக்க முடியவில்லை என்பதும் உண்மை.



venugopal@thaiveedu.com



மகுடம்
MAHUDAM 2023
2300 PHARMACY AVE,
SCARBOROUGH, ON M1W 1H8
MARCH 25TH SATURDAY
2023
5:00PM
மாபெரும் இன்னிசை, நடன நிகழ்வு
Punya
Mahisha
Hariharasudhan
Ananthan
DANCE PERFORMER'S
Irudaya Dance Company
Abinayalaya Natyalayam &
Sri Abiramy Dance Academy
Mega
MC
Prasanth
&
Sai Janani
KOKUVIL HINDU COLLEGE OSA CANADA
Tickets are available Contact:
Ravi Kana - 416 725 7284, Maithily- 416 388 3935
Nageswaran - 647 609 5392




நவீன தமிழ்க் கவிதைகளின் பண்புகள் பற்றி விளக்குவதற்கு முன்பாக நவீன தமிழ்க் கவிதை அல்லது தற்காலத் தமிழ்க் கவிதை என்ற சொல்லாடலை விளக்குவது பொருத்தமாக அமையும். பேராசிரியர்களான சி. மௌனகுரு, மௌ. சித்திர-லேகா, எம்.ஏ. நுஃமான் ஆகியோர் 'பழைய பண்டித மரபு வழிப்பட்ட நிலப் பிரபுத்துவ வாழ்க்கை அம்சங்களை உள்ள டக்கமாகக் கொண்ட பிரபந்த இலக்கிய வகைகளில் இருந்து மாறுபட்டு, நிகழ்கால வாழ்க்கை நிலைமைகளையும் - அதன் அடிப்பிறந்த வாழ்க்கை நோக்குகளையும் கருத்தோட் டங்களையும் உள்ளடக்கமாகக் கொண்ட கவிதைகளையே நவீன கவிதை என்ற தொடர் குறிக்கின்றது. நவீன உள்ளடக் கத்துக்கு ஏற்ப அதன் வடிவ அமைப்பிலும் சொற்கள், சொற்றொடர்கள், ஓசை ஒழுங்கு, வெளிப்பாட்டு முறை போன்றவற்றிலும் - இக்கவிதை முறை பழைய கவிதை இலக்கியங்களிலிருந்து எவ்வளவோ மாறியுள்ளது என்பதை யும் நாம் காண்கிறோம்.' எனக் குறிப்பிடுகின்றனர். இக்கருத் தானது நவீன தமிழ்க் கவிதைக்குப் பொருத்தமான விளக்கத் தைக் கொடுக்கிறது.

இதயங்கள் உள்ள இடங்களில் எல்லாம் கவிதையும் இருக் கும். உணர்வுகளும், அனுபவங்களும், வார்த்தைகளின் வசீக ரச் சேர்க்கையும் சேரும் போது கவிதையாகி விடுகின்றது. அவை, நவீன உள்ளடக்கம், உருவம், உத்தி ஆகியன கொண்டு மக்கள்மயமாகும் போது நவீன கவிதைகளாகி விடுகின்றன. நவீன கவிதைக்குரிய பண்புகளை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தே காண முடிகின்றது. 'மனித வர்க்கத்தின் வரலாற்றில் இந்த நூற்றாண்டைப்போல் வேறு எப்பொழுதும் சமுதாய உணர்வு இவ்வளவு ஆழமும், அகலமும் கொண்டிருக்கவில்லை' என டொமினிக் ஜீவா (1987, மல்லிகைக் கவிதைகள் முன்னுரை) வலியுறுத்துகிறார். இத்தகைய பெருமைமிக்க இருபதாம் நூற்றாண்டில் 'கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்' என்ற புதிய வேட்கையுடன் பாரதி தமிழ்க் கவிதை உலகில் அடியெடுத்து வைத்தார். 'தமிழ் மொழியைப் புகழில் ஏற்றும் கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லை எனும் வசை என்னால் ஒழிந்தது' என்று பெருமிதத்து டன் புறப்பட்டார் மகாகவி பாரதி. அவர் கவியரசர் என்பது புகழ்ச்சியன்று. உண்மை.

பாரதியின் வருகையுடன் தமிழ் இலக்கியம் புதிய பரிமாணம் பெறுகின்றது. தமிழ்க் கவிதையின் நவீனத்துவம் பாரதியின் கவிதைகளில் இருந்தே ஆரம்பமாகின்றது. ஆயினும் இன்று வரையும் தமிழில் மரபு சார்ந்த கவிதைகள் தோன்றுவதையும் நாம் காண முடிகின்றது. ஆகவே, நவீன கவிதையைத் தீர் மானிப்பதில் அது எழுதப்படும் காலம் ஒரு முக்கிமான கூறு அல்ல. காலத்தைவிட காலத்துக்குரிய குணாம்சமே முக்கி யத்துவம் பெறுகின்றது. அவ்வகையில் சமகாலத் தன்மை, சமகாலப் பிரக்ஞை உள்ள கவிதைகளையே நாம் நவீன கவிதை எனலாம். இங்கு சமகாலத் தன்மை எனும்போது இன்றைய மனிதர், இன்றைய வாழ்க்கை, இன்றைய பிரச் சினை, இன்றைய போக்குகள் என்பவற்றை இன்றைய மொழியில், இன்றைய காலகட்டத்துக்கேயுரிய வடிவங்களில் வெளிப்படுத்துபவை நவீன கவிதைகள் எனலாம்.

இதனையே பாரதி,

*'சுவை புதிது பொருள் புதிது*
*வளம் புதிது சொற் புதிது*
*சோதி மிக்க நவ கவிதை*
*எந்நாளும் அழியாத மகா கவிதை..'*

எனப் பாடினார்.

நவீன தமிழ் இலக்கியத்தின் வேர்கள் அனைத்தும் பாரதியி டம் வெளிப்பட்டன. தமிழ்க் கவிதையை நவீன யுகத்துள் இட் டுச் சென்றவன் பாரதியே என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. தமிழ்க் கவிதையை நவீனப்படுத்தியதில் பாரதி யின் பங்களிப்பை மூன்று நிலைகளில் நாம் காணலாம்.

நிகழ்கால வாழ்க்கை, சமூகப் பிரச்சினைகளைக் கவிப்பொரு ளாக்கியது. தேச விடுதலை, பெண் விடுதலை, சாதி விடு தலை, சாதி எதிர்ப்பு, சர்வதேச அரசியல், விசாலப் பார்வை எனக் கவிதையின் பொருட்பரப்பை விசாலமாக்கியது. புதிய கவிதை வடிவங்களை அறிமுகப்படுத்தியது. இதனைப் பார தியின் குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், சுயசரிதை போன்ற வற்றிலும், வசன கவிதை முயற்சிகளிலும் காணலாம். பார திக்குப் பின் வந்த கவிஞர்களில் அவரது இப்பரிசோதனை முயற்சிகள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. அத்தோடு நின் றுவிடாது,

*'காலத்திற் கேற்ற வகைகள் - அவ்வக்*
*காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்*
*ஞால முழுமைக்கும் ஒன்றாய் - எந்த*
*நாளும் நிலைத்திடும் நூலொன்றுமில்லை'*

எனப் பாரதி இயக்கவியல் போக்கை வலியுறுத்துகிறான்.

இத்தகைய போக்கு நவீன தமிழ்க் கவிதை மரபை விசாலப் படுத்த உதவின. இவ்வாறான இயக்கவியல் கருத்தியலை மஹாகவி உருத்திரமூர்த்தியின்(இலங்கை) கவிதை ஒன்றி

லும் காணலாம்.

*‘இன்றைய காலத்திருக்கும் மனிதர்கள்*
*இன்றைய காலத்தியங்கும் நோக்குகள்*
*இன்றைய காலத் தழும்புகள் எதிர்ப்புகள்*
*இன்றைய காலத் திக்கட்டுக்கள்’*

என்ற கவிதை வரிகள் கவிதையின் மொழியை எளிமைப்ப டுத்துவதாக அமைகின்றது. இந்த எளிமையாக்கத்துக்குரிய முழுப் பெருமையும் பாரதிக்கு மாத்திமே உரியதல்ல. 18-ம், 19-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த அருணாசலக் கவிராயர், கோபாலக்கிருஷ்ண பாரதியார், வடலூர் வள்ளலார், இராம லிங்க சுவாமிகள் போன்றோர் பாரதிக்குப் பாதை அமைத் துக் கொடுத்தவர்களாவர். பாரதி இக்கருத்தினைப் புலப்ப டுத்தும் வகையில் பாஞ்சாலி சபத முன்னுரையில் ‘எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினையு டைய காவியமொன்று இக்காலத்தில் செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருசத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோ ருக்கும் நன்கு பொருள் விளங்குவதுடன் காவியத்துக்குரிய நயங்கள் குறைவு படாமலும் நடத்துதல் வேண்டும்.’ என்றார். இக்கூற்று மொழியை, கருத்தை எளிமைப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. ஜனரஞ்சகமான எளிய செய் யுள் நடையில் சமூகம் சார்பான புதிய உள்ளடக்கத்தைப் புதிய பாணியில் வெளிப்படுத்தியவன் பாரதியே. இதன் மூலம் கவிதையின் எளிமை ஒரு புதிய பரிமாணம் பெற்றது எனலாம்.

இவ்வாறு கவிதையைப் பொறுத்தவரை புதிய உள்ளடக்கம், வடிவம், பரிசோதனை, எளிமையாக்கம் போன்ற அம்சங்க ளில் நவீனத்துவத்தின் பிரதான பண்புகளை நாம் பாரதியி டம் காண்கின்றோம்.

பழைய இலக்கியங்கள் மரபுகளைப் பேணி அதன் பண்பு கள் புறக்கணிக்கப்படாத வகையில் பாடப்பட்டன. அவற்றில் பின்வரும் பண்புகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

- யாப்பு மரபுகள், பொருள் வைப்பு என்பன பேணப்பட்டன.
- வரலாற்று உணர்வு பேணப்பட்டது. அதாவது, பக்தி, காதல், வீரம், கொடைத் திறன், நன்றியுணர்வு, பாசம், கற்பு ஆகியவற்றைப் பாடுபொருளாகக் கொண்டு கடவுள், அரசன் ஆகியோரைப் பாட்டுடைத் தலைவனாக வைத் துப் பாடினர்.
- பழைய இலக்கியங்களில் முன்னோர் மொழி, பொருளை பொன் போல் போற்றும் மரபு பேணப்பட்டது.
- கற்றறிந்த உயர்ந்தோர் குழாத்துக்காக மாத்திரம் எழுதப் பட்டமை.
- எளிய பதங்கள், பேச்சு வழக்குகள் கையாளப்படாமை, பழைய இலக்கியங்கள் ‘ஆசானும், அகராதியுமின்றி உட் புக முடியாத இரும்புக் கோட்டை’ என வர்ணிக்கப்படும் அளவுக்கு எழுதப்பட்டிருந்தன.

இத்தகைய பண்புகளை மரபு சார்ந்த பழைய கவிதைகளில் ஊடாட்டமாகக் காணலாம். இவ்வாறான புலமை மரபுகளில் இருந்தும் இலக்கணத் தளைகளில் இருந்தும் தம்மை முற்றி லும் விடுவித்துக் கொண்டு சிந்து, கண்ணி போன்ற மக்கள் இலக்கிய வடிவங்களைக் கவிதைப் பொருளுக்கு வரித்துக் கொண்டனர். பாரதியார் ‘குறுநில மன்னர்களின் அரண்மனை யிலும், சமயத் தலைவர்களின் மடங்களிலும் கவிராயர்களின் காராக் கிரகங்களிலும் சிறைப்பட்டுக் கிடந்த தமிழுக்கு விடு தலை அளித்து, அதற்கு ஓர் அகில இந்திய நோக்கையும், சர்வதேசப் பார்வையையும் அளித்தவர் மகாகவி பாரதியார்.’ என அ. பாண்டுரங்கன் (தமிழ் உலா, தொகுதி -1, பக் 178) குறிப்பிடுவது சிறந்த எடுத்துக்காட்டாகும்.

நவீன இலக்கியம், நவீன தமிழ்க் கவிதை, நவீன தமிழ்க் கவிதையின் வரையறை, பழைய மரபு சார்ந்த கவிதையின் பண்புகள் ஆகியன நோக்கப்பட்டன.

இனி நவீன கவிதையின் பண்புகளைச் சற்று நோக்கலாம்.

நவீனத்துவம் நவீன கல்வியின் ஆரம்பமாகும். நவீன கல்வி சுயசிந்தனைக்கு வழிவகுத்தது. ஆய்வு மனப்பாங்கைத் தூண்டியது. புதிய சிந்தனை, புதிய கல்வி, புதிய அனுபவம் ஆகியன மரபை மீற வழிவகுத்தது. அதனால் நவீன இலக்கி யத்தின் பண்புகளும் மாறுபட்டன. நவீன கவிதை இலக்கி யத்தின் பண்புகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- மரபை மீறும் பண்பு
- புதிய உள்ளடக்கம்
- வடிவப் பரிசோதனை
- எளிமையாக்கம்

ஆகியன.

நவீன கவிதையின் பொருள் உள்ளடக்கம் பற்றி மஹாகவி உருத்திரமூர்த்தி (இலங்கை) தீர்க்கதரிசனத்தோடு பின்வரு மாறு கூறுகின்றார்.

***‘இன்னவைதாம் கவியெழுத***
***ஏற்றபொருள் என்று பிறர்***
***சொன்னதை வைத்து, நீர் திருப்பிச்***
***சொல்லாதீர். சோலை, கடல்***
***மின்னல், முகில், தென்றலினை***
***மறவுங்கள் மீந்திருக்கும்***
***இன்னல், உழைப்பு, ஏழ்மை, உணர்வு,***
***என்பவற்றைப் பாடுங்கள்.’***

எனவும் ‘நிகழ்காலச் செய்திகளையும் பிரச்சினைகளையும் கவிதையில் ஆண்டு அதனை இன்றைய யுகத்துக்கு இழுத் துவரல் அவசியமாகும்.’ எனக் கூறுவது இயக்கவியல் போக் கினை வலியுறுத்துவதாக அமைகின்றது.

இவ்வாறு, நவீன தமிழ்க் கவிதையின் பண்புகள் பாரதியின் கைவண்ணத்தில் பழைய செய்யுள் அமைப்புக்களில் செப்ப னிடப்பட்டுப் புது வடிவம் பெற்று வெளிவந்தன. செய்யுள் அமைப்பில் பேரிலக்கியமாக விளங்கிய காவியத்துக்குப் பதி லாக உரை நடையின் பேரிலக்கியமாகிய நாவல் அறிமுக மாகியது. உரை நடையின் செல்வாக்குக் காரணமாகச் சிறு கதை, நவீன நாடகம் முதலானவை தமிழ் இலக்கியத்துக்குச் செழுமை சேர்த்தன. செய்யுளுக்கும் உரை நடைக்கும் இடை யிலான இடைவெளியைக் குறைக்கும் முகமான பரிசோ தனை முயற்சியாக வசன கவிதை அறிமுகமானது. காலப் போக்கில் தமது உருவத்தின் செல்வாக்குக் காரணமாகப் பலரதும் ஆதரவைப் பெற்றுப் புதுக் கவிதையாக வளரத்

தொடங்கியது. இத்தகைய நவீன இலக்கியங்களுக்குரிய அடித்தளத்தை உற்று நோக்கினால் புதுமை நாட்டம், சமுதாயச் சார்பு, வரலாற்றுப் பார்வை, எளிமை முதலான பண்புகளைப் பொதுப்படையாக உள்ளடக்கி இருப்பதை அவதானிக்கலாம். அதனால் பழந்தமிழ் இலக்கியங்களில் இருந்து வேறுபட்டு பொருள், வடிவம், எளிமை, சுவை என்பனவற்றில் முற்றிலும் புதியனவாக நவீன தமிழ்க் கவிதைகள் வெளிவந்தன.

பேராசிரியர் சி. தில்லைநாதன் ‘மரபுகளின் மாற்றங்களையும், புனரமைப்புக்களையும் கண்டவர்கள், அவற்றைப் புறக்கணித்துவிட்டுப் புதிய ஊற்றுக்களைத் தொட்டவர்களுமான இலக்கிய கர்த்தாக்களே இலக்கிய வரலாற்றின் மைல் கற்களாய் அமைவதை அவ்வரலாறு துலக்கும்’ எனக் கூறுவதில் இருந்து கவிதைக்குப் புதுவடிவம் கொடுத்து, செப்பனிட்டு, புதுமையை, மாற்றத்தைப் பிரக்ஞைபூர்வமாகப் பின்பற்றுபவர்கள் என்றும் புகழப்படுவர் என்பதை அறிந்து கொள்ளலாம்.

இதுவரை நோக்கியவற்றிலிருந்து நவீன தமிழ்க் கவிதையின் தன்மையை அல்லது அதன் சிறப்பியல்புகளைப் பின்வருமாறு சுருக்கமாக இனங்காணலாம்.

- நடப்பியல் வாழ்வுடன் நேரடித் தொடர்பு பூண்டிருத்தல்.
- சுரண்டல், அடக்குமுறை, அநீதி, மோசடி, ஊழல், பாகுபாடு முதலிய சமுதாயச் சீர்கேடுகளுக்காகக் குரல் கொடுத்தல்.
- உழைக்கும் வர்க்கத்துக்குச் சார்பாக நின்று, அந்த வர்க்கத்தின் நலனுக்கு முதலிடம் தரும் வகையில் அவர்களின் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
- உழைப்பின் வலியையும் பெருமையையும் வலியுறுத்தும் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
- மனிதகுலத்தின் சாதனையையும், மனித முயற்சியின் ஆற்றலையும் அழுத்திக் கூறல்.
- போராட்டத்தின் வாயிலாக அநீதிகள் அழிந்து, நீதி நிலை பெறும் என்னும் உண்மையை நிலை பெறச் செய்தல்.
- எதிர்காலம் பற்றிய தன்னம்பிக்கையை ஊட்டுதல்.
- புரட்டுகளையும், போலிகளையும் அம்பலப்படுத்திக் கேலி செய்து எதிர்ப்புணர்ச்சி காட்டல்.
- மனிதகுலம் முழுவதையும் பரிவுகாட்டி, அன்புடன் தழுவிக் கொள்ளும் மனிதநேயத்தைப் போற்றிக் கடைப்பிடித்தல்.

இத்தகைய சிறப்பியல்புகள் அல்லது பண்புகள் ஈழத்து நவீன தமிழ்க் கவிதைகளில் பெரும்பாலும் பின்பற்றப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. நவீன தமிழ்க் கவிதைகள் தமிழ்நாட்டில் அங்குள்ள சமகாலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, தோன்றி வளர்ச்சி அடைந்ததைப் போன்றே ஈழத்திலும், நாட்டுக்குரிய தனிப் பண்புகளையும், பாதிப்புக்களையும் கொண்டதாக வளர்ச்சி அடைந்துள்ளதை நாம் இப்போது தெளிவாக இனங்கண்டு கொள்கின்றோம். ஈழத்தைப் பொறுத்தவரை இக்கவிதை மரபு 1940-ம் ஆண்டுக்கு முற்பட்ட வளர்ச்சியைக் கொண்டதாகும். பேராசிரியர்களான சி. மௌனகுரு, மௌ. சித்திரலேகா, எம்.ஏ. நுஹ்மான் (1979, இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்) ஆகியோர் ‘ஈழத்து இலக்கிய வரலாற்றில் மறுமலர்ச்சிக் காலம் என்று சொல்லப்படுகின்ற 1940-ம் ஆண்டுகளிலேயே இங்கு இப்புதிய கவிதைமரபு தோன்றி வளர்ச்சியடையத் தொடங்கியது’ எனக் கூறுவதிலிருந்து ஈழத்தில் நவீன தமிழ்க் கவிதையின் ஆரம்பம் இனங்காணப்படுகின்றது.

எது எப்படி இருந்த போதிலும் தமிழ் நாட்டுக்கும் ஈழத்துக்கும் இடையிலான தமிழ்க் கவிதையின் போக்கில் உருவம் ஒன்றாக இருந்த போதிலும் உள்ளடக்கம், உத்தி என்பவற்றில் வேறுபாடுகள் காணப்படுவதைக் காணலாம். இத்தகைய பண்புகளின் வேறுபாட்டுக்கு அடிப்படைக் காரணமாகப் பலவற்றை இனங்காணலாம். இலங்கையின் தமிழ்க் கவிதைப்பரப்பில் 1956-ன் பின்னர் புதிய ஒரு சமூகப் பிரக்ஞையும், முற்போக்குச் சிந்தனையும் தென்படுவதை அவதானிக்கலாம். அதேபோல், 1983-ம் ஆண்டின் பின்னர் போர், அகதி வாழ்க்கை, இடம் பெயர்வு, புலம் பெயர்வு, அதோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், வடுக்கள், வாழ்வோட்டம், போர் மௌனிக்கப்பட்டதன் பின்னர் சமகால வாழ்க்கைமுறை, துன்ப, துயரங்கள், அறவழிப் போராட்டங்கள் தொடர்பான கவிதைகள் வெளிவந்து கொண்டிருப்பதைக் காணலாம். இத்தகைய போக்கினைத் தமிழ்நாட்டு நவீன தமிழ்க் கவிதைகளில் காணமுடியாது. நவீன தமிழக் கவிதைகளில் இப்பண்புகள் தமிழ்நாடு, ஈழம் ஆகியவற்றில் எவ்வாறு பின்பற்றப்படுகின்றன என்பது விரிவாக நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

**உசாத்துணை:**


- சி. மௌனகுரு, மௌ. சித்திரலேகா, எம்.ஏ. நுஹ்மான் (1979) இருபதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியம், வாசகர் சங்கம், கல்முனை.
- சு. வித்தியானந்தன் (1953) இலக்கியத் தென்றல், தமிழ் மன்றம்.
- எம்.ஆர். அடைக்கலசாமி (1994), இலக்கியக் கலை, கழக வெளியீடு. சென்னை.
- கா. கைலாசபதி (1980), நவீன இலக்கியத்தின் அடிப்படைகள், மக்கள் வெளியீடு, சென்னை.
- வி. செல்வநாயகம் (1997), தமிழ் இலக்கிய வரலாறு, ஸ்ரீலங்கா வெளியீடு. யாழ்ப்பாணம்.
- மு. வரதராசன் (1994) தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அக்கடமி, சென்னை.
- சி. தில்லைநாதன் (1973) வள்ளுவன் முதல் பாரதி வரை, தமிழ் புத்தகாலயம், சென்னை.
- நா. பார்த்தசாரதி (1969) புதிய பார்வை, நவபாரதி பிரசுரம், கோயம்புத்தூர்.
- க. அருணாசலம்(1984) பாரதியார் சிந்தனைகள், சோமு புத்தக நிலையம், சென்னை.
- சோ. இளவரசு(1998) இலக்கிய வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- ஆ. வேலுப்பிள்ளை (1985) தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பாரி புத்தகப் பண்ணை, சென்னை.
- மனோகரன், துரை(1993) தமிழ் இலக்கியம். பார்வையும் பதிவும், நியூ கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம், கண்டி.
- பாரதியார் கவிதைகள்(1991), பூம்புகார் பதிப்பகம், சென்னை.
- அ.ச. ஞானசம்பந்தன் (1989), பாரதியும் பாரதிதாசனும், கங்கை புத்தக நிலையம், சென்னை.
- எம்.ஏ. நுஹ்மான் (1984) மஹாகவி கவிதைகள், அன்னம் (பி) லிட், சிவகங்கை.
- கீதம் (1995,96) சங்கீத நாட்டியச் சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம்.
- மல்லிகைக் கவிதைகள்(1987) மல்லிகைப் பந்தல், யாழ்ப்பாணம்.




kuruparan.s@thaiveedu.com




வெவ்வேறு சமூகங்களில் அரசியல் அதிகாரமும் தலைமைத்துவமும் (Leadership) எவ்வாறு இருந்து வந்ததென்பதை வரலாற்று ரீதியாகப் புரிந்து கொள்ளத்தக்க வகையில் வெபர் பல ஆய்வுகளை வெளியிட்டார். தனித்துவம் மிக்க வெவ்வேறு வரலாற்றுக் கட்டங்களில் தோன்றிய அரசியல் மேலாதிக்க (Political Domination) வகைகளை அவர் ஒப்பீட்டு ஆய்வுக்கு உட்படுத்தினார்.

அரசியல் அதிகாரத் தலைமைத்துவ வகைகள் மூன்றை அவர் அடையாளப்படுத்தி வரையறை செய்தார். இம்மூன்று வகைகளாவன:

**மரபு வழிப்பட்ட அரசியல் ஆதிக்கம் (Traditional):**

இவ்வகையில் அதிகாரம் வரலாற்று மரபுடன் தொடர்புடையதாக இருக்கும் பிரபுக்கள் குடும்பங்களின் ஆண் வழியில் இவ்வதிகாரம் மரபுரிமையாகப் பெறப்படும்.

**கவர்ச்சி ஆளுமை அதிகாரம் (Charismatic Authority):**

ஒரு நபரிடம் காணப்படும் விசேட பண்புகள் அவருக்கேயுரிய இயற்கைக் கொடையாகும். அத்தகைய தலைவர் மீது பெருந்தொகையான மக்கள் நிபந்தனையற்ற விசுவாசத்தை வழங்குவர்.

**சட்ட வழியான அரசியல் அதிகாரம் (Legal Political Domination):**

இம்முறை சட்டத்தின் வழி அதிகாரத்தைப் பெறுபவர்களின் ஆட்சியாக இருக்கும். இதன் பிரதான இயல்பு அறிவு சார்ந்த தன்மை (Rationality). இம்முறை வினைத்திறன் மிக்கது, தற்சார்பற்றது (Impersonal), எழுந்தமான முடிவுகளுக்கு இதில் இடம் இல்லை. முறைசார் சட்ட விதிகளுக்கு அமைய முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

நவீன காலத்து மேற்கு நாட்டு ஜனநாயக அரசுகள் சட்டவழியான அரசியல் அதிகாரம் செயற்படும் நாடுகளாகும். இவற்றின் அரச நிருவாக யந்திரத்தை வெபர் அலுவலர் ஆட்சி (Bureaucracy) என்று குறிப்பிட்டார். அடுத்து அலுவலர் ஆட்சி முறையின் இயல்புகளைப் பற்றி ஆராய்வோம்.

பல்கலைக்கழகம், பொலிஸ்த் திணைக்களம், வங்கிகள், மருத்துவமனைகள் என்பன அலுவலர் ஆட்சிமுறை நிறுவனங்களுக்கு உதாரணங்களாகும். வெபரின் இலட்சிய மாதிரிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் அலுவலர் ஆட்சியின் முக்கிய இயல்புகளை அடுத்து நோக்குவோம்.

**படிநிலை அமைப்பு (Hierarchy):**

அலுவலர் ஆட்சியில் அதிகாரம் படிநிலை அமைப்பு உடையதாக இருக்கும். கீழ்நிலைப் பதவிகளில் உள்ளோர் மேல்நிலைப் பதவியில் உள்ளோரால் மேற்பார்வை செய்யப்படுவர். படிநிலைகளில் மேல்நோக்கிச் செல்கையில் பதவிகளின் எண்ணிக்கை குறைந்து செல்லும் நிறுவனம் ஒன்றின் ஒழுங்கமைப்பு வரைபடம் (Organisational Chart) பிரமிட் வடிவத்தை ஒத்ததாக இருக்கும்.

**திறமை (Merit):**

ஓர் நிறுவனத்தில் பல்வேறு பதவிகள் இருக்கும். ஒவ்வொரு பதவிக்கும் உரிய தகுதிகள் இவை இவையென வரையறை செய்யப்பட்டிருக்கும். கல்வித் தகுதி, அறிவுப் பயிற்சி, திறன் என்பனவற்றை உடைய ஒருவரே பதவியொன்றில் நியமனம் பெறுதல் முடியும். அடிப்படையான கல்வித் தகைமை உடை யோர் போட்டிப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்பன மூலம் தேர்ந்து எடுக்கப்படுவர்.

**அதிகார எல்லை (Jurisdiction):**

நிறுவனக் கட்டமைப்பின் ஒவ்வொரு பதவிநிலைக்கும் குறித்ததொரு அதிகார எல்லை இருக்கும். அவ்வதிகார எல்லைக்குட்பட்ட விடயங்களில் குறித்த உத்தியோகத்தருக்கு அறிவும் செயற்திறனும் இருக்கும். அப்பதவியில் உள்ளவருக்குக் கீழ் இருப்போர் அம்மேலதிகாரியின் அதிகார எல்லைக்குட்

பட்ட விடயங்கள் சார்ந்த கட்டளைகளையே ஏற்றுச் செயற்படுவர்.

**தற்சார்பின்மை (Impersonal):**

அதிகாரம் பதவிக்கு உரியதேயன்றித் தனி நபருக்கு உரியதல்ல. ஆகையால் அதிகாரம் தற்சார்பற்ற முறையில் (Impersonal) செலுத்தப்படுகிறது. அலுவலர் ஆட்சி அமைப்பின் முழுஅமைப்பிலும் தற்சார்பின்மை விரவிப் பரந்திருக்கும். பதவி நிலையினர் ஆட்பெயராலன்றிப் பேராசிரியர், இன்ஸ்பெக்டர், கப்ரன் முதலிய பதவிப் பெயர்களாலேயே அழைக்கப்படுவர்.

**வாழ்க்கைத் தொழில் (Career):**

நிறுவனத்தில் வேலைக்குச் சேர்பவர் தமது தொழிலை வாழ்க்கைத் தொழிலாகக் கொள்வார். தெளிவாக அடையாளம் காணப்பட்ட படி நிலைகள் ஊடாக வேலையாள் ஒருவர் பதவி உயர்ச்சி பெறுவார். சேவை மூப்பு, திறமை, சாதனைகள் என்பன மூலம் ஒரு வேலையாளைப் பற்றிய மதிப்பீடு



அமையும். ஜனநாயக நாடுகளில்/நிறுவனங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்குச் சட்டப் பாதுகாப்பு இருக்கும். ஒருவர் தான்தோன்றித்தனமான முறையில் தகுந்த காரணம் இன்றி வேலையில் இருந்து நீக்கப்படமுடியாது.

**பதிவேடுகள் (Records):**

அலுவலர் ஆட்சி முறையில் நடவடிக்கைகள் விதிகளாகவும் பிரமாணங்களாகவும் எழுத்தில் எழுதப்பட்டிருக்கும். விதிகளையும் பிரமாணங்களையும் பிரயோகித்துத் தனித்தனி விடயங்கள் குறித்த முடிவுகள் எடுக்கப்படும். நடவடிக்கைகள் யாவும் ஆவணப்படுத்தப்பட்டுக் கோவைப்படுத்தப்பட்டிருக்கும்.

## அலுவலர் ஆட்சி - ஒரு இலட்சிய மாதிரி:

அலுவலர் ஆட்சி வெபரின் இலட்சிய மாதிரிக்கு (Ideal Type) சிறந்ததோர் உதாரணமாகும். ஜனவரி 2023 தாய்வீடு இதழில் நாம் வெபரின் ஆய்வு முறையியல் பற்றி எழுதும் போது இலட்சிய மாதிரி பற்றி எழுதியிருந்ததை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இலட்சிய மாதிரி யதார்த்தத்தைப் பற்றிய அறிவைப் பெறுவதற்கான ஒரு பகுப்பாய்வுக் கருவியாகும் (Analytical Tool). அலுவலர் ஆட்சி என்ற இலட்சிய மாதிரி உலகின் எந்த நாட்டிலும் கண்டுகொள்ள முடியாத கற்பனை மாதிரி. அது வொரு அருவ மாதிரி (Abstract Model) ஆகிய கருத்துக்கள் அக்கட்டுரையில் விளக்கப்பட்டன. வெபரின் இலட்சிய மாதிரியை உண்மையான யதார்த்தத்துடன் ஒப்பிட்டு மாதிரிக்கும் உண்மை நிலைக்கும் இடையிலான விலகல்களை (Deviations) அடையாளம் கண்டு விலகல்களுக்கான சமூகக் காரணிகளைக் கண்டு கொள்ளலாம்.

- இலட்சிய மாதிரியில் சில பண்புக் கூறுகள் அழுத்தம் (Accentuation) பெறுகின்றன.
- யதார்த்தத்தின் தனியன்களான தோற்றப்பாடுகள் ஒருதலைப் பட்சமாக இலட்சிய மாதிரியில் அழுத்தம் பெற்றிருக்கும் (One sidedly Emphasised). அழுத்தப் பெற்றிருக்கும் பண்புக் கூறுகள் ஒன்றிணைந்த பகுப்பாய்வுக் கருவியே இலட்சிய மாதிரியாகும்.

இலட்சிய மாதிரிகள் பற்றிய மேற்படி விளக்கத்தின் பின்னணியில் அலுவலர் ஆட்சி என்ற இலட்சிய மாதிரியில் வெபர் அழுத்தம் கொடுத்துக் திரிபுபடுத்திய பண்புக் கூறுகள் எவை என்பது முக்கியமான வினாவாகும்.

- முதலாவதாக அலுவலர் ஆட்சியின் அறிவார்ந்த பண்பு (Rationality) வெபரால் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இம்மாதிரி ஆட்சி முறை அறிவார்ந்த நிருவாக முறையின் அதிஉயர் நிலையைச் சுட்டுவது. இது நடைமுறையில் எந்தவொரு நாட்டிலும் இருப்பதில்லை.
- மரபுவழி அதிகாரத்தின் (Traditional Authority) பண்புக் கூறுகளுக்கு எதிர்நிலையான பண்புகளை உடையது அலுவலர் ஆட்சி. இதனால் நடைமுறையில் உள்ள நிறுவன அமைப்புகளை மரபுவழி அதிகார முறையுடன் ஒப்பிட்டு வேறுபாடுகளைக் கண்டறியலாம்.
- கவர்ச்சி ஆளுமை மாதிரி (Charismatic Authority) சட்டவழி அதிகாரத்திற்கு மாறான எதிர்ப் பண்புகளை உடையது. குறிப்பாக அதன் நிலைத்து நிற்க முடியாத பண்பு (Impermanence) அலுவலர் ஆட்சிக்கு மாறுபட்டது. கவர்ச்சிமிக்க தலைவனின் மறைவுடன் அது நெருக்கடியை எதிர் நோக்கும். அத்தலைவனுக்குப் பின்னர் தலைமையை ஏற்போர் கவர்ச்சியற்றவர்களாக ஆகும்போது ஆட்சி அதிகா

ரம் வீழ்ச்சியுறும். அலுவலர் ஆட்சி இவ்வாறான நெருக்கடிக்கு உள்ளாவதில்லை. அது மேலும் மேலும் தன்னை வலுப்படுத்திக் கொண்டே நீடித்து நிற்கும்.

மேற்குறித்தவற்றைக் கவனத்தில் கொண்டு யதார்த்தத்தில் உள்ள குறை நிறைகள் மதிப்பிடப்படும்.

## அலுவலர் ஆட்சியின் தீமைகள்:

பொருளாதாரத் தொழில்நுட்ப மாற்றங்களின் பயனால் அறிவார்ந்த (Rational) நிறுவன வடிவமான அலுவலர் ஆட்சி வளர்ச்சி பெறும். காலப்போக்கில் அலுவலர் ஆட்சி சமூகத்தின் மீது பாதிப்புக்களை ஏற்படுத்தும் மரபுவழி அதிகார முறையை நீக்கி அறிவார்ந்த செயற்பாடுகளைக் கொண்டு வரும். அலுவலர் ஆட்சி ஜனநாயகத்தை வலுப்படுத்தவும் கூடும். ஜனநாயகத்தை இல்லாமல் செய்யவும் கூடும். பரீட்சைகளில் சித்தியெய்தி தகுதியை நிரூபிப்பவர்களுக்கே பதவிகள் திறமையின் (Merit) அடிப்படையில் வழங்கப்படும் என்ற நடைமுறை இதுவரை காலமும் ஏழ்மை காரணமாகக் கல்வியைப் பெற முடியாமல் இருந்தவர்களுக்குப் பதவிகளைப் பெறும் வாய்ப்பைக் கல்வியின் ஊடாக அலுவலர் ஆட்சி முறை வழங்குகிறது. ஆனால் இதற்கு மாறான நிலையும் ஏற்பட்டு விடலாம். கல்வியும் பயிற்சியும் உயர் வருமானம் உடையவர்க்கே கிடைக்கக் கூடியது. கல்வி வாய்ப்புக்களைத் தமது தனியுரிமையாக ஆக்கிக் கல்வியைக் கட்டுப்படுத்தும் உயர் குழுக்கள் உத்தியோக வாய்ப்புக்களை ஏழைகளுக்கு இல்லாமல் செய்து விடவும் கூடும். ஆகவே கல்வியைப் பெறும் வழிகளைக் கட்டுப்படுத்துதல் மூலம் வசதியற்ற வகுப்பினர் விளிம்புநிலைக்குத் தள்ளப்படலாம்.

## நிருவாக அரசு (Administrative State):

இங்கிலாந்தில் 1914 அளவில் நிருவாக அரசு உருவாகியிருந்தது. அதுவரை படித்தவர்கள் கூட அஞ்சல் அலுவலகம், பொலிஸ் நிலையம் என்பவற்றிற்கு அப்பால் அரசு என ஒன்றின் இருப்பை அறியாதவர்களாக இருந்தனர். 19-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் நிருவாக அரசுக்கான அடிப்படைகளை நிறுவியிருந்தன. மக்கள் வாக்குரிமையைப் பெற்றனர். மக்களின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். பிரதிநிதிகள் ஊடாக மக்களின் தேவைகள் எவை என்பதை தெரிவிப்பதான அரசியல் முறை உருவானது. பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்கும் ஆசிரியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், தொழிற்சாலைப் பரிசோதகர்கள், வரி அறவிடும் உத்தியோகத்தர்கள் எனப் பலவகைப் பதவிகளை வகித்தோர் மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் பிணைக்கப்பட்டனர். 1865 - 1900 ஆண்டுகளில் இங்கிலாந்தில் ஒழுங்காக்கல் சட்டங்கள் (Regulatory Laws) என்றவகைச் சட்டங்கள் பல இயற்றப்பட்டன. இவற்றின் விளைவாகத் தொட்டிலில் இருந்து சுடுகாடு வரை மனிதர் வாழ்வை ஒழுங்கமைக்கும் பிரமாண்டமான அலுவலர் ஆட்சி நிறுவனங்கள் உருவாகின. அலுவலர்களால் ஆளப்படும் ஆட்சி முறையே நிருவாக அரசு எனலாம். அரசின் நிருவாகிகளான அலுவலர்கள் நியமிக்கப்பட்டவர்கள், அவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்லர். நிருவாக அரசு அதிகாரம் அலுவலர்களின் அதிகாரமாக ஆகிவிடுவதால் அதிகாரிகள் (Bureaucrats) பலம்மிக்க அரசின் அங்கமாக விளங்குவர். மேற்கு நாடுகளின் ஜனநாயக அரசுகள் நிருவாக அரசுகளாகவும் மாறிவிட்டன. இதனால் அறிவார்ந்த முறையாக உருவாக்கப்பட்ட அலுவலர் ஆட்சி அதற்கு எதிரான பண்புகள் உடையதாக மாறிவிடும் ஆபத்துக்களும் தோன்றின.

## சுருக்கம்:

இக்கட்டுரையில் கூறப்பட்டவற்றைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

- வெபர் அரசியல் அதிகாரத் தலைமைத்துவ வகைகள் மூன்றைக் குறிப்பிட்டார். இவற்றுள் சட்டவழி அதிகாரத் தலைமைத்துவம் மேற்கு நாடுகளின் ஜனநாயக அரசுகளில் காணப்படுகிறது.
- சட்டவழி அதிகாரத்தைப் பெறும் தலைமைத்துவம் உடைய நாடுகளில் அரச யந்திரத்தை இயக்கும் அலுவலர் ஆட்சிமுறை செயற்படுகிறது.
- அலுவலர் ஆட்சியில் அறிவார்ந்த தன்மை (Rationality) முக்கியமான பண்பாகும். இது வினைத்திறன் மிக்க அமைப்பாகச் செயற்படுவதற்கு காரணமாக உள்ளது.
- படிநிலை அமைப்பு, திறமையின் படியான ஆட்சேர்ப்பு, அதிகார எல்லைகள் தெளிவாக வரையறுக்கப்பட்டிருத்தல் ஆகிய பண்புகள் அலுவலர் ஆட்சியை வினைத்திறன் மிக்கதாக ஆக்குகின்றன.
- அலுவலர் ஆட்சியில் சேர்ந்து கொள்ளும் அதிகாரிகள் உத்தியோகத்தை வாழ்க்கைத் தொழிலாகக் கொள்கின்றனர். திறமை, சேவை மூப்பு, அனுபவம், பயிற்சி என்ற தகுதிகளின் அடிப்படையில் பதவி உயர்வுகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. தற்சார்பற்ற முறையில் விருப்பு வெறுப்பற்ற முறையில் நடுநிலையுடன் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.
- முடிவுகளைச் செய்வதற்கு எழுத்தில் எழுதப்பட்ட விதிகளும் சட்டங்களும் வழிகாட்டுகின்றன. நடைமுறைகள் யாவும் ஆவணங்களாகக் கோவைப்படுத்தப்படுகின்றன.
- அலுவலர் ஆட்சி என்றும் இலட்சிய மாதிரியை நாடுகளில் நிலவும் யதார்த்த நிலையோடு ஒப்பிட்டுக் குறைகளையும் நிறைகளையும் கண்டு கொள்ளலாம், மதிப்பிடலாம்.
- தொட்டிலில் இருந்து சுடுகாடு வரை மனிதனின் வாழ்வின் எல்லாக் கூறுகளையும் கட்டுப்படுத்தும் நிருவாக அரசு (Administrative State) அலுவலர் ஆட்சியின் பண்புகளை விளக்கும் மாதிரியாக அமைந்துள்ளது.

### வாசிப்புக்குரிய நூல்கள்:


- சமூகவியல் - பேராசிரியர் க. வெங்கடேசன் வர்த்தமானன் பதிப்பகம் (2017)
- Classical Theory and Modern Studies – Introduction to Sociological Therory – Mark Abra Hamson PHI. New Delhi 2011


(மேற்படி நூல்களில் மக்ஸ் வெபர் குறித்த அத்தியாயங்களைப் பார்க்கவும்.)



shanmugalingam@thaiveedu.com

[ ஓர் அறிமுகக் குறிப்பு ]

# ஆறுமுக நாவலரும் மேனாட்டுப் புலமையாளர்களும்

- மைதிலி தயாநிதி



காலனிய யாழ்ப்பாணத்தில் ஆகமக்கோயில் வழிபாட்டை மையமாகக் கொண்டெழுந்த 'நவீன சைவத்தின்' சிற்பியாக விளங்கும் ஆறுமுகநாவலர் பழந்தமிழ் நூல்களைப் பிழைய றப் பதிப்பித்தும், செய்யுள் நூல்களை உரைநடையில் தந் தும், நூல்களுக்கு உரை எழுதியும் அக்காலத் தமிழ் வளர்ச் சிக்குப் பங்காற்றியவருள் ஒருவர். இலங்கையில் க.பொ.த உயர்தர வகுப்பில் தமிழ் கற்றோரில் நாவலரின் இலக்கணச் சுருக்கத்தை அறியாதார் எவருமிலர் எனலாம். அதே சமயம் காலனிய ஆட்சிக்காலத்தில் சாதியத்தை நிலைநிறுத்தவும், வேளாள ஆதிக்கத்தை நிலைநாட்டவும் அவர் உருவாக்கிய கருத்தியலும், அதை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடு களும் கண்டனத்திற்குரியவை என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

சைவத்திற்கும், தமிழிற்கும் நாவலர் ஆற்றிய பங்களிப்பைப் பாராட்டியும், அவரின் சாதிய அணுகுமுறையை விமர்சனரீதி யாக மதிப்பீடு செய்தும் நூல்களும், கட்டுரைகளும் தமிழில் எழுந்துள்ளன. எனினும், நாவலரின் வாழ்க்கை, மற்றும் சிந் தனை பற்றிய ஆங்கிலப் படைப்புகள் தமிழுடன் ஒப்பிடுகை யில் குறைவாகவே காணப்படுகின்றன. அவற்றில் சில உள் நாட்டு அறிஞர்களால் எழுதப்பட்டவை வேறு சில மேற்கத் தையப் புலமையாளர்களினால் எழுதப்பட்டவை. டெனிஸ்-ஹட்சன் எனும் புலமையாளர் (1992) நாவலர் பற்றிய பின்வ ரும் ஆங்கில ஆக்கங்களைக் குறிப்பிடுகின்றார்.

- S. Shivapadasundaram, Arumukha Navalar (Jaffna, 1950).
- V. Muttucumaraswamy, Arumuga Navalar: The Champion Reformer of the Hindus (1822-1879): A Biographical Study. new rev. ed. (Colombo, 1965).
- K.. Sivathamby, 'Hindu Reaction to Christian Proselytism and Westernization in 19th Century Sri Lanka,' Social Science Review (Colombo) 1 (1979): 41–75.
- S. Thanajeyarajasingham, The Educational Activities of Arumuga Navalar (Colombo, 1974).
- Sabapathy Kulendran, 'The Tentative Version of the Bible or 'The Navalar Version,' Tamil Culture 7 (1958): 229-50.

மேலும், இ. கிருஷ்ணகுமாரும், ஆ. சிவநேசச்செல்வனும் தயாரித்த ஆறுமுகநாவலரினதும், ஆறுமுகநாவலர் பற்றியது மான வெளியீடுகள்: தேர்ந்தெடுக்கப்பட்ட நூல் விபரப்பட்டி யலிலும் (1979) இலங்கையர்களின் ஆங்கில ஆக்கங்கள், நாவலர் பற்றிய குறிப்பு இடம் பெறும் பிறநாட்டவரால் எழு தப்பட்ட தமிழிலக்கிய வரலாற்று நூல்கள் என்பன உள்ளடக் கப்பட்டுள்ளன.

மேலைநாடுகளில் ஆங்கில மொழியிலே காலனிய யாழ்ப்பா ணத்தில் நாவலரின் செயற்பாடுகள் பற்றிய தனிக்கட்டுரை கள் எப்பொழுது முதல் எழுதப்படலாயின என்பது ஆய்வுக் குரியது. மாதவ் தேஷ்பாண்டேயும், பீட்டர் ஹூக்கும் பதிப் பித்த Aryan and Non Aryan in India (1979) எனும் நூலில் ஜோர்ஜ் ஹாட் எழுதிய 'The nature of Tamil devotion' எனும் கட்டுரையிலும், ஆர். எவ். யங்கின் முனைவர் பட்ட ஆய் வேட்டிலும் (1980), ஆர்.எஸ். பேரின்பநாயகத்தின் The Karmic Theater: Self, Society, and Astrology in Jaffna (1982) எனும் நூலிலும், டெனிஸ் ஹட்சனின் 'The Responses of Tamils to Their Study by Westerners 1608-1908' (1985) எனும் கட் டுரையிலும் நாவலர் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. என் வாசிப்புக்குக் கிடைத்த நாவலர் பற்றி ஆங்கிலத்தில் எழுதப்பட்ட தனிக்கட்டுரை 1989-ஐச் சேர்ந்தது. இதை எழுதி யவர் டக்மர் ஹெல்மன் - இராஜநாயகம் ஆவர்.

எனது கட்டுரை 1989-2016-ம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத் தில் மேனாட்டுப் பல்கலைக்கழகப் புலமையாளர்களினால் எழுதப்பட்ட நான்கு கட்டுரைகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்கிறது. அவை கூறும் பிரதான கருத்துகளைச் சுருக்க மாகத் தரமுயல்கிறது. இவ்வாய்வுக் கட்டுரைகள் மேனாட்டுப் புலமையுலகில் விவாதிக்கப்பட்டு வரும் முக்கியமான பிரச்சி னைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டு எழுதப்பட்டுள்ளன. எடுத் துக்காட்டு: சமய மறுமலர்ச்சியும் தேசிய எழுச்சியும் (டக்மர் ஹெல்மன் இராஜநாயகம்), காலனிய நாடுகளில் 'சமயம்' எனும் கருத்துருவாக்கத்தில் தொடர்பாடல் முறைகளின் செல் வாக்கு, மதச்சீர்திருத்தங்களில் அச்சியந்திரமும், உரைநடை யும் செலுத்திய செல்வாக்கு என்பனவே அவையாகும். இப்பி ரச்சினைகளின் பல்வேறு பரிமாணங்களை விளங்கிக் கொள் வதற்கு நாவலர் பற்றி எழுதப்பட்ட இக்கட்டுரைகள் பங்க ளிக்கின்றன. மேலும், இக்கட்டுரைகளிற் காணப்படும்


Bernard Bate


Navalar


Dennis D. Hudson

மேனாட்டுத் தத்துவம், சமயம், சமூகவியல், மானிடவியல் தொடர்பான கருத்தாக்கங்கள் மொழிபெயர்ப்பதற்குச் சிக்கலானவை. இச்சிறிய கட்டுரையில் அவை பற்றி விரிவாக விளக்குவது சாத்தியமில்லை. அவ்வகையில் இக்கட்டுரை நாவலர் பற்றி எழுதப்பட்ட கட்டுரைகளுக்கான மிகச்சுருக்கமானதோர் அறிமுகம் மட்டும் என்றே கொள்ள வேண்டும்.

## முதலாவது கட்டுரை:

Dagmar Hellmann-Rajanayagam, 'Arumuka Navalar: Religious reformer or national leader of Eelam', The Indian Economic and Social History Review, 26, 2 (1989).

1989-ம் ஆண்டு இலங்கைத் தமிழர்களின் தனிநாட்டுப் போராட்டம் வீறு கொண்ட காலத்தில் எழுதப்பட்ட இக்கட்டுரை, 1930-களிலும், 1950-களிலும் பின்னர் கட்டுரை எழுதப்பட்ட சமகாலத்திலும் நாவலரைச் சமூக சீர்திருத்தவாதியாக அல்லது தேசியதலைவராகக் கட்டமைக்கும் செயற்பாட்டினைக் கேள்விக்குட்படுத்துகிறது.

கட்டுரையாசிரியர் டக்மர் ஹெல்மன் - இராஜநாயகம் தனது கட்டுரைக்கு ஆதாரங்களாக நாவலரது எழுத்துகளையும், பிரசங்கங்களையும், நாவலர் இறந்து சொற்பகாலத்துள் வெளியான ஆறுமுகநாவலர் சரித்திரம் (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 1882), த. கைலாசபிள்ளை எழுதிய ஆறு-முகநாவலர் சரித்திரம் (சென்னை, 1919), கே.பி. இரத்தினத்தைப் பதிப்பாசிரியராக் கொண்ட நாவலர் நினைவுமலர் (சுன்னாகம், 1938) என்பனவற்றையும் கொள்கிறார். அவர் தனது கட்டுரை இரு நோக்கங்களைக் கொண்டது என்று கூறுகிறார்: முதலாவது, நாவலரின் சைவமறுமலர்ச்சி இந்திய துணைக் கண்டத்தில் உண்டான சமய மறுமலர்ச்சியிலிருந்து வேறான பண்புடையதாக இருப்பதுடன், கல்வி மற்றும் மொழி அபிலாஷைகளுடன் தொடர்புடையது என்பதைக் காட்டுதல். இரண்டாவது, பலசமயங்களில் சமய மறுமலர்ச்சி தேசிய எழுச்சிக்கான முன்னோடியாக இருந்திருப்பதை மறுக்கவியலாது எனினும், நாவலருக்கும், இலங்கைத் தமிழர்களின் சமீபத்தைய அபிலாஷைகளுக்குமிடையில் நேர்கோடொன்று வரைய முயலும் முயற்சி குறித்துக் கேள்வி எழுப்புதல்.

நாவலரது கொள்கைகளையும், கோட்பாடுகளையும் சமயம், மொழி, கல்வி எனும் தலைப்புகளில் ஆராயும் அவர், யாழ்ப்பாணத்தில் ஆதிக்கசாதியாக இருந்து வரும் வேளாளர்களுக்கே அவரது போதனைகள் கூறப்பட்டன என்றும், வைதிக நூல்கள் கூறும் வர்ணக்கோட்பாட்டை ஏற்றுக் கொண்ட நாவலர் சூத்திரரான வேளாளர்களை மூன்றாவது வர்ணமான வைசிய வர்ணத்தில் உள்ளடக்கி, அவர்களுக்குப் பூணூல் அணிவதற்கான, வேதம் முதலியவற்றை ஓதுவதற்கான உரிமையை அளித்தார் என்றும் குறிப்பிடுகின்றார். சுருங்கச்சொல்லின், நாவலரது கோட்பாடுகளும், செயற்பாடுகளும் வேளாள சமூகநலன்களைப் பாதுகாப்பனவாய் அமைந்தனவே அன்றி சமூகத்திலுள்ள பிராமணர் உட்பட எல்லாச் சாதியினரும் பயனுறும் வகையில் அமைந்திருக்கவில்லை என்பது அவர் கருத்து. கைலாசபதி, நாவலரின் சில செயற்பாடுகளை 1876-ம் ஆண்டில் கடும் பஞ்சகாலத்தில் உணவு வழங்கியமை, சட்டமன்ற உறுப்பினர் தெரிவிற்குப் போட்டியிட்ட சி. பிறிற்றோவிற்கு எதிராக நின்ற சேர்.பொன். இராமநாதனை ஆதரித்தமை போன்றவற்றை அக்கால சமூக, அரசியல் வாழ்வில் நாவலர் கொண்டிருந்த அக்கறையைப் பிரதிபலிப்பவை என்று கூறுவதை இராஜநாயகம் ஏற்றுக்கொள்ளவில்லை. பிற்கால ஆசிரியர்கள் இவற்றை தேசிய அல்லது அரசியல் விழிப்புணர்வு மற்றும் தலைமைத்துவத்திற்கான அபிலாஷைகளைப் பிரதிபலிப்பவையாக, காலனித்துவ ஆட்சியை நிராகரிப்பவையாக, ஈழத்திற்கான ஒரு ஆரம்ப தேசிய தலைமையைச் சுட்டுபவையாக வியாக்கியானம் செய்வதை அவர் மறுதலிக்கின்றார். நாவலரது சமய மறுமலர்ச்சிக்கும், பிற்காலத்தில் தோன்றிய தமிழ் தேசியவாதத்திற்குமிடையில் நேரடியான தொடர்பில்லை என்று ஆணித்தரமாகக் கூறுகின்றார். நாவலரின் கூற்றுகளையும், எழுத்துகளையும், பிற்கால வாழ்க்கை வரலாற்றாசிரியர்களும், அரசியல்வாதிகளும் தம் வாதங்களை மெய்ப்பிக்கும் வகையில் நாவலர் குறித்துக் கூறுவனவற்றிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க வேண்டும் என்றும் கூறுகிறார், அதே சமயம் '1930-களிலும், 1950-களிலும் அகில இலங்கைத் தமிழ்த் தேசியம் பேணிய குறுகிய மனப்பாங்கின் (par-ochialism) மீள் எழுச்சியானது, நாவலருக்கும் பிற்காலத் தமிழ்த் தேசியத்திற்கும் இடையில் தொடர்புண்டு என்பதைக் காட்டுகின்றது. இது ஒருவேளை 'தேசியம்' பற்றிய நமது கருத்துகளை மறுபரிசீலனை செய்வதற்கும் மறுவரையறை

செய்வதற்கும் வழிவகுக்கலாம்' என்று கூறிக் கட்டுரையை நிறைவு செய்கிறார்.

## இரண்டாவது கட்டுரை:

Dennis D Hudson, 'Arumuga Navalar and the Hindu Renaissance among the Tamils', in Religious Controversy in British India: Dialogues in South Asian Languages, ed. Kenneth W. Jones (Albany, State University of New York Press, 1992).

ஐக்கிய அமெரிக்காவில் இந்தியச் சமயங்கள் பற்றிக் கற்பித்தும், எழுதியும் வந்த முதன்மையான அமெரிக்க புலமையாளர்களில் ஒருவரான டெனிஸ் ஹட்சன் மேனாட்டுப் புலமையுலகில் நாவலர் சமயப்பணிகள் குறித்த ஆய்விற்கு முன்னோடி எனக் கருதத்தக்கவர். 1990களில் நாவலர் பற்றி முக்கியமான சில கட்டுரைகளை எழுதினார். அவற்றுட் சில வருமாறு:

'Arumuga Navalar and the Hindu Renaissance among the Tamils', in Religious Controversy in British India : Dialogues in South Asian Languages, ed. Kenneth W. Jones (Albany, State University of New York Press, 1992).

'Winning Souls for Siva: Arumuga Navalar's transmission of the Saiva Religion', in A Sacred Thread: Modern Transmissions of Hindu Tradition in India and Abroad, ed. Raymond Brady Williams (Chambersburg, Anima Publications,1992).

'A Hindu Response to the Western Torah' in Between Jerusalem and Benares: Companian Studies in Judaism and Hinduism , ed. Hananya Goodman (Albany, State University of New York Press, 1994).

'Tamil Hindu Responses to Protestants: Nineteenth-century Literati in Jaffna and Tinnevelly' in Indigenous Responses to Western Christianity, ed. Steven Kaplan (New York, New York University Press, 1995)

'How to Worship at Siva's temple', in Religions of India in Practice (Princeton University Press, 1995). (நாவலர் 1851-ல் எழுதியசிவாலய தரிசன விதி எனும் நூலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரை.)

இவற்றுள் இக்கட்டுரையில் சுருக்கமாக நோக்கப்படுவது டெனிஸ் ஹட்சன் எழுதிய 'ஆறுமுகநாவலரும் தமிழர்களிடையேயான இந்து சமயமறுமலர்ச்சியும்' என்ற கட்டுரையாகும். எவ்வாறு நாவலர் தமிழ் சைவ சித்தாந்த மரபினுள் நின்றவாறு, புறப்புறச்சமயங்களுள் ஒன்றாகக் கணிக்கத்தக்க கிறிஸ்தவமதத்தின் பரப்புரைகளை எதிர்கொண்டார் என்பதை அவர் கட்டுரை ஆராய்கிறது. எழுத்தாளர், பதிப்பாளர், விவாதவாதி (polemicist) என வெவ்வேறு செயற்பாட்டாளராக நாவலரைச் சித்தரிக்கின்ற அவர் அவற்றின் தாக்கத்தை மதிப்பிடவும் முயல்கிறார்.

'தமிழர்களிடையே புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்கு மிஷனறிமார் எடுத்துக் கொண்ட முயற்சியில் நாவலர் ஏற்படுத்திய தாக்கத்தை மதிப்பிடல் கடினம் நாவலர் இல்லாதிருந்தால் மதம் மாறியவர்கள் எத்தனை பேராக இருந்திருப்பர் என்பதைக் கணக்கிடலும் கடினம்' என்கிறார். ஆனால், நாவலரின் கிறிஸ்தவத்திற்கு எதிரான பன்முகப்பட்ட முயற்சிகளும், அவற்றை அவர் வழிவந்தோர் பின்பற்றியமையும் யாழ்ப்பாணத்தில் மதமாற்றத்தைக் கட்டுப்படுத்துவதில் வெற்றி கண்டன என்பதை ஏற்றுக்கொள்ளும் அவர், நாவலர் ஆகமங்களை அடிப்படையாகக் கொண்ட சைவத்தை வலியுறுத்தியமை, எல்லா இடங்களிலும் உள்ள உயர்சாதியினர் உள்ளூர்த் தெய்வங்களை ஆகம வழிப்பாட்டிற்குள் கொண்டு வருவதிலும், விலங்கு பலியிடும் வழக்கத்தை முற்றிலும் கைவிடுவதிலும் ஈடுபாடு காட்டியமைக்கு ஏதுவாக இருந்தது என்கிறார். அதே சமயம் நாவலரின் பணிகள் பல்வேறு தளங்களில் விமர்சனத்திற்குள்ளாக்கப்படுவதையும் குறிப்பிடுகின்றார்.

'இன்றைய தமிழ் உலகில், ஆறுமுக நாவலரின் சீர்திருத்தம் பலரால் மிகவும் பழமைவாதமாகவே பார்க்கப்படுகிறது. ஒரு புறம், சாதியக் கருத்தியலை அவர் ஆதரிப்பது' மதச்சார்பற்ற தேசியவாதத்தினால்' அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள முடியாதது. மறுபுறம், பிராமணர்கள் மற்றும் சமஸ்கிருதத்தின் நிலையை அவர் உயர்வாகக் கணிப்பது 'திராவிட தேசியவாதத்தினால்' ஏற்றுக்கொள்ள முடியாததொன்று.'

## மூன்றாவது கட்டுரை:

Bernard Bate, Arumuga Navalar, Saivite sermons, and the delimitation of Religion, c.1850. The Indian Economic and Social History Review, 42, 4 (2005).

மானிடவியற் பேராசிரியரான பேர்ணாட் பேட்டின் கட்டுரை நாவலரின் பிரசங்கமுறையானது மதம், சமூகம், அரசியல் எனும் துறைகளில் ஏற்படுத்திய தாக்கத்தை விரிவாக ஆராய்கிறது. அவர் கட்டுரையின் சாராம்சம் வருமாறு: நாவலர் மக்களுக்கு சைவசமய அறிவு ஊட்டுவதற்கு ஆலயங்களில் பயன்படுத்திய பிரசங்க முறையானது புரட்டஸ்தாந்து மிஷனறிமாரிடமிருந்து பெறப்பட்டது புரட்டஸ்தாந்து மிஷனறிமார் தேவாலயங்களில் தம் சமய உண்மைகளை விளக்குவதற்கு சமயவிரிவுரை (sermon) எனும் முறையைக் கடைப்பிடித்தனர். இதைப் பின்பற்றியே நாவலரும் சைவ ஆலயங்களில் பிரசங்க முறையை அறிமுகம் செய்தார். பிரசங்கம் என்பது ஆலயங்களில் முன்னர் செய்யப்பட்டு வந்த நிகழ்வு. ஆனால் 'பிரங்கம்' என்ற சொல்லால் அப்பொழுது குறிப்பிடப்பட்டது புனிதநூல்களைப் பாராயணம் செய்வதே ஆகும். ஆனால் ஒரு விடயத்தைத் தெரிந்தெடுத்து, அது பற்றிப் பல் எண்ணிக்கையினரான மக்கள் மத்தியில் அவர்கள் அனைவருக்கும் புரியும்படியான உரைநடையில் பேசுவது என்பது நாவலர் காலத்திற்கு முன்னர் இருந்ததொன்றன்று என்பது மனங்கொள்ள வேண்டியது. நாவலரே சைவக்கோயில்களில் இந்தப் 'பிரசங்கம்' எனும் புதிய நடைமுறையை அறிமுகம் செய்தார். நாவலரின் சரிதை ஆசிரியர் கைலாசபிள்ளை இத்தகைய பிரசங்க முறைமை முற்றிலும் புதியதொன்று என்று கூறுவதையும் பேட் மேற்கோளாகக் காட்டியுள்ளார். நாவலரின் பிரசங்க முறையானது சைவக் கோயில் நடைமுறையின் தன்மையை மாற்றியமைத்தது மட்டுமன்றி, சைவத்தை கிறிஸ்தவ வழிபாட்டு முறையின் அடிப்படையில் ஒரு 'மதமாக'

மாற்றுவதற்கும் வழிவகுத்தது என்று பேட் கூறுகின்றார்.

Religion எனும் வகையினம் (category) தமிழில் சமயம் அல்லது மதம் என்று கூறப்படுகின்றது. பரந்த அளவில் உள்ள நடைமுறைகளை எல்லை வரையறுத்துச் சுட்டும் இக் கருத்தாக்கம் கண்ட்வெல் சிமித்தின் நூல்கள் வெளியிடப்பட்ட 1950கள், 1960 களிலிருந்து வாதிக்கப்பட்டு வரும் விடயமாகும். தலால் அசாட், எஸ்.என். பாலகங்காதர, வலன்ரைன் டானியல், றிச்சர்ட் கிங் போன்றோரும் இது குறித்து எழுதியுள்ளனர்.. இவர்களின் அடிப்படையான வாதம் என்பது சமயம் என்பது மனித இனம் முழுவதுக்கும் பொதுவான வகையினம் (category) அன்று அது ஒரு கிறிஸ்தவக் கருத்தாக்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் காலனித்துவ அதிகார செயற்பாடுகளின் விளைவாக உருவானதொன்றாகும்.

காலனித்துவத்திற்கும் மதத்திற்குமிடையிலான தொடர்பு குறித்த புலமையாளர்களின் இக்கருத்துகளை ஏற்றுக்கொண்ட பேட் நாவலரின் பிரசங்கம் எனும் தொடர்பாடல் முறை சைவத்தை ‘மதம்’ ஆக்குவதில் முக்கிய பங்கு வகித்தது என்கிறார். இதன் அர்த்தம் சைவமானது புனிதநூல்கள், கிரியா நடைமுறைவிதிகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒத்திசைவு கொண்ட அமைப்புடையதாக முன்னர் இருக்கவில்லை என்பதல்ல. ஆனால், இன்று காணப்படும் ‘சைவம்’ நாவலர் தொடக்கி வைத்த தொடர்பாடல் முறைகள் மூலமாகவே உருவாக்கம் பெற்றது. இந்த புதிய வகையான தொடர்பாடல் நடைமுறை, புதிய வகையான அரசியல் செயலாண்மையும் புதிய சமூக கற்பனைகளும் உருவாக ஏதுவாயிற்று. கிறிஸ்தவ பிரசங்கங்களில் முதன் முதலில் தோற்றம் பெற்ற பொதுத்தமிழ், சைவத்தினால் உள்வாங்கப்பட்டு, கோயிலில் திரண்ட மக்கட் கூட்டத்திற்குச் சைவ அறிவு புகட்டப் பயன்படுத்தப்பட்டது. இவ் ஆலய மக்கள் கூட்டமே பின்னாளில் ’தமிழ்ப்பொதுசனம்’ என அழைக்கப்படலாயிற்று.

### நான்காம் கட்டுரை:

Richard S. Weiss, ‘ Religion and the emergence of print in colonial India: Arumuga Navalar’s publishing project’, The Indian Economic and Social History Review, 53, 4 (2016).

இந்திய சமயப் புலமையாளரான ரிச்சர்ட் வைசின் 2016-ல் வெளியான ‘காலனிய இந்தியாவில் மதமும், அச்சியந்திரத்தின் எழுச்சியும் - ஆறுமுகநாவலரின் வெளியீட்டுத்திட்டம்’ எனும் தலைப்பிலான கட்டுரை, 1852-ம் ஆண்டில் நாவலர் உரைநடையில் எழுதி வெளியிட்ட பெரியபுராணத்தை மையமாகக் கொண்டு பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் மதத்துறையில் அச்சியந்திரத்தின் தாக்கத்தை ஆராய்கிறது. இது இந்தியாவில் அச்சியந்திரத்தின் தாக்கத்தை, ஐரோப்பாவில் அச்சியந்திரம் ஏற்படுத்திய தாக்கம், கிறிஸ்தவ மத சீர்திருத்தம் என்பனவற்றின் முன்மாதிரிகளில் விளங்கிக் கொள்ள முயல்வது தவறு என்பதை நிறுவுகின்றது. பாரம்பரியமாக செய்யுளில்யாக்கப்பட்ட, சைவசமயத்தின் அங்கீகரிக்கப்பட்ட புனிதநூல்களைப் பரவலாகப் பலரும் அணுகக்கூடிய வகையில் உரைநடையில் கொடுப்பது, ஆலயங்களில் பிரசங்கம் செய்வது போன்ற செயற்பாடுகளினால் நாவலரைப் புலமையாளர்கள் கிறிஸ்தவ மத சீர்திருத்தவாதியான மார்ட்டின் லூதருக்கு ஒப்பிடுகின்றனர். நாவலர் புரட்டஸ்தாந்து மிஷனறிமார்களின் வழிமுறைகளைப் பின்பற்றினர் எனினும், லூதரின் சனநாயக மனப்பான்மையை நாவலர் ஏற்றுக்கொண்டவர் அல்லர் என்பது வைசின் வாதமாகும்.

நாவலர் சைவநூல்களைப் பரந்த அளவில் மக்கள் வாசித்து அறிய வழி செய்தார் எனினும், அவர் லூதரின் ‘sola scriptura’ (by scripture alone) என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டவர் அல்லர். அத்துடன் லூதரின் ‘priesthood of all believers’ என்ற கொள்கையும் அவருக்கு இணக்கமானதாக இருக்கவில்லை. லூதர் கருதியதற்கு மாறாக, நாவலர் நூல்களின் முக்கியத்துவம் அவை கிரியை முறைகளின் ஆதாரமாக இருக்கின்றமையினாலேயே எனக் கருதினார். எனவே, அவர் நூல்களுக்கு புலமைசார்ந்ததும், மதகுருவினால் அளிக்கத் தக்கதுமான விளக்கத்தின் அவசியத்தை வலியுறுத்தினார், சைவநூல்களை ஆசிரியர் இல்லாமல் கற்றுக்கொள்ள இயலாது ஆதலால் தகுந்தவர்களிடமிருந்து எல்லாச்சைவரும் தீட்சை பெறல் வேண்டும் என்று நாவலர் கூறினார். நாவலர் உயர்சாதி சைவர்களின் சாதி அடையாளத்தையும், கிரியை முறைமைகளையும் பேணவும், புரட்டஸ்தாந்து மிஷனறிமார்களின் இந்துமத விமர்சனங்களிற்குப் பதில் அளிக்கவும், அதே சமயம் சாதியையும், கிரியைகளையும் கேள்விக்குட்படுத்திய இராமலிங்க சுவாமிகள் போன்றவர்களைக் கண்டிக்கவும் உரைநடையையும், அச்சியந்திரத்தினையும் பயன்படுத்தினார் என்பது வைசின் கருத்தாகும்.

இதுகாறும் நாவலர் பற்றி எழுதப்பட்ட நான்கு தனிக்கட்டுரைகளின் கருத்துகள் மிகச் சுருக்கமாகக் கூறப்பட்டன., ஹார்வட் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்கு தர்ஷன் அம்பலவாணரால் சமர்ப்பிக்கப்பட்ட ‘Arumuga Navalar and the Construction of a Caiva Public in Colonial Jaffna’ எனும் ஆய்வேடும் இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியது. ஏறத்தாழ 450 பக்கங்களைக் கொண்ட அவ்வாய்வேடு தனியாகப் பேசப்படவேண்டியதொன்று.

மேற்குலகில் நாவலர் முதன்முதலில் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவமதப் பரம்பலுக்கு எதிரானவராகச் செயற்பட்டவராகத்தான் அறியப்பட்டிருந்தார். எனினும் பின்னர் அவர் கையாண்ட பிரசங்கமுறை, சமய நூல்களை உரைநடையில் தருவது முதலான சைவ சமயத்தை வலுப்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் குறித்தும் கட்டுரைகள் எழுதப்படலாயின. நாவலருக்கும், இராமலிங்க சுவாமிகளுக்குமிடையில் இருந்த முரண்பாடுகளும் ஆய்வாளர்கள் கவனத்தை ஈர்த்துள்ளன. எடுத்துக்காட்டாகப் பின்வரும் அண்மைக்கால ஆக்கங்களைக் குறிப்பிடலாம்: (அ) Srilata Raman, The Transformation of Tamil Religion: Ramalinga Swamigal (1823-1874) and Modern Dravidian Sainthood, Routledge, 2022), (M) Richard S. Weiss ‘The Publication of Tiruvarutpâ: The Authority of Canon and Print’, The Emergence of Modern Hinduism: Religion on the Margins of Colonialism, University of California Press, 2019. இவையனைத்தையும் ஒரு சேர நோக்கும்போது பத்தொன்பதாம் நூற்றாண்டின் தென்னாசிய வரலாற்றில் தவிர்க்க முடியாத ஆளுமையாக நாவலர் விளங்குகின்றார் என்பதை அவதானிக்க முடிகிறது.



maithilithayanithy@thaiveedu.com

# இசைத் தமிழ் பாடற்பரப்பும் சமகாலப் பயன்பாட்டு நிலையும்

26

- கௌசல்யா சுப்பிரமணியன்

தமிழிசை மூவரின் காலகட்டத்திற்குப் பின்னரான இசைத் தமிழ்ப் பாடற்பரப்பையும் அவற்றின் சமகாலப் பயன்பாட்டு நிலைகளையும் ஆராயும் இத்தொடரிலே கடந்த பத்துக் கட்டுரைகளில் மகாகவி சுப்பிரமணியப் பாரதியாரின் இசைத் தமிழ் ஆளுமை அம்சங்கள் பற்றியும் அவற்றின் உருவாக்கக் காரணிகள் பற்றியும் நோக்கிவருகிறோம். மேற்படிக் கட்டுரைகளின் ஊடாகப் பொ.ஊ.மு.(கி.மு.) 10-ம் நூற்றாண்டு முதல் பாரதியார் காலம் வரையான செழிப்பானதும் தொடர்ச்சியானதுமான இசைத்தமிழ் பாடற்பரப்பின் வரலாற்றைக் கண்டுணர முடிந்தது. அத்துடன் பாரதியின் தனித்தன்மைகள் என்றவகையிலான இசையாளுமைத் திறன்களையும் இனம் காணமுடிந்தது. ‘சுவை புதிது - பொருள் புதிது - சொல் புதிது’ என்ற வகையில் முகிழ்த்ததான அவரின் ‘சோதிமிக்க நவகவிதை’ பற்றியதொரு நிறைவான தொகுநிலைப் பார்வை இக்கட்டுரையில் முன்வைக்கப்படவுள்ளது. அத்துடன் பாரதியார் காலத்தையடுத்துத் தோன்றியதான ‘தமிழிசை இயக்க’த்தின் உருவாக்கத்திற்கு அவரின் பங்களிப்பு எத்தகையது என்பது பற்றிய ஒரு குறிப்பையும் முன்வைப்பதாக இக்கட்டுரை அமையவுள்ளது.

தமிழின் பண்டைய இலக்கியங்களின் போக்குகளையும் அவற்றுக்குப் பின்புலங்களாகத் திகழ்ந்தவையான சமய தத்துவப் பண்பாட்டு மரபுகளையும் பாரதியார் நன்கறிந்திருந்தவர். அதேவேளை சமகாலத்தின் மேற்குலக இலக்கியப் போக்குகளைக் - குறிப்பாக ஷெல்லி (1792-1822), கீட்ஸ் (1795-1821), பைரன் (1788-1824), டெனிசன் (1809-1892), வேட்ஸ் வர்த்து (1770-1850), வால்ட்விட்மன் (1819-1892), மிஸ் ரீஸ் (1856-1935) முதலியவர்களின் கவிதையாக்கங்களையும் அவர் கற்றுச் சுவைத்தவர். அவற்றின் தாக்கங்கள் இவரது பாடல்களில் பெரும்பான்மையும் உள்ளன. அவற்றின் ஆய்வு தனிக்கட்டுரைக்குரிய விடயப்பரப்புக் கொண்டவை. பாரதிக்குத் தேசப்பற்று, சமுதாயப்பற்று, நாட்டு விடுதலையுணர்வு, பெண்களை மதித்தல் முதலிய உணர்வுகள் மேற்படி மேற்குலகுசார்ந்த சிந்தனையூடாகப் பாரதிக்கு ஏற்பட்டதெனலாம். எட்டயபுரத்திலிருக்கும் காலங்களில் ‘ஷெல்லி தாசன்’ எனப் புனைப்பெயர் கொண்டிருந்தார் என்பதும் இத்தொடர்பில் நோக்குதற்குரியது. இதன் காரணமாகவே அவர் இந்தியமண்ணில் சமகாலத்தில் முளைவிட்ட தேசிய விடுதலையுணர்விலும் சமூக சமத்துவ சிந்தனைகளிலும் தம்மையும் இணைத்துக்கொண்டவர் என்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது. இவ்வாறாகத் தாம் கொண்டிருந்த ஈடுபாடுகள் மற்றும் இலக்கிய ஆளுமையுணர்வுகளுடனும் கவிதையுலகில் கால்பதித்தவர், அவர்.

இவ்வாறு கவிதை புனையத் தொடங்கிய அவர் பத்திரிகைகள், இதழ்கள் என்பவை சார்ந்து பலகாலம் பணியாற்றி வந்ததால் அவற்றில் தமது படைப்பாக்கங்களைப் பிரசுரித்து வந்தார். இவ்வாறு பாரதியார் பல்வேறு சந்தர்ப்பங்களில் இயற்றியும் பாடியும் வந்த பாடல்கள் அவர்காலத்தில் வெளிவந்த இதழ்கள், பத்திரிகைகள் என்பவற்றில் மட்டுமன்றித் துண்டுப்பிரசுரங்கள் என்ற நிலையிலுங்கூட பிரசுரமாகி மக்களை எழுச்சி கொள்ளச் செய்தன. இவ்வாறான இவருடைய ஆக்கங்களிற்பல அவர்காலத்திலும் பின்னரும் நூல்களாக வெளிவந்துள்ளன.

அவருடைய சில உணர்ச்சிமிகு பாடல்கள் அவராலேயே தேவைகருதி திரும்பவும் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகைப் பாடல்களை மக்கள் பலரும் ஒன்றுசேர்ந்து கூட்டாகப் பாடி வருகையில் உணர்ச்சிக்கேற்ப அப்பாடல்களின் கட்டமைப்புகளையும் அவர் மாற்றிவந்துள்ளார். சில பாடல்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை. அவருடைய காலத்தின்பின் பதிப்பித்தோரால் அவருடைய பாடல்கள் சில திருத்தங்களுடன் பதிப்பிக்கப்பட்டன என்பதையும் அறிய முடிகிறது. இவ்வாறு பல வழிகளில் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்ட இவரது பாடல்கள் இவருக்கு முன் வாழ்ந்த பலரது பாடல்களிலிருந்து பல்வேறு வகைகளில் வேறுபட்டிருந்ததோடு உள்ளடக்கத்தில் சிறப்புகள் பலவற்றைக் கொண்டிருந்தமையையும் பார்க்கிறோம்.

இவ்வாறான சிறப்புகள் கொண்ட இவரது பாடல்களிலமைந்துள்ள வேறுபாடான அம்சங்களில் முதலாவதாகச் சுட்டத்தக்கது இவரது ‘தேசியப்பார்வை’ யாகும். அந்நியராட்சியின் அடிமைத்தனத்தில் திழைத்திருந்த மக்களைத் தமது பாடல்களாலேயே விழிப்படையச் செய்தார். தமிழ்மொழியின் சிறப்புக்களையும் தமிழ்ப் பண்பாட்டினையும் மறந்து அந்நிய மோகம் கொண்டிருந்த மக்களைத் தட்டி எழுப்பி, பண்டைய தமிழ் நூல்களில் பொதிந்திருக்கும் தமிழர் பண்பாட்டினையும் அறவொழுக்க நியமங்களையும் புதுப் பொலிவுடன் அவர்களிடம் கொண்டு சேர்த்தவர். அடிமைத்தழையிலிருந்து மக்களை விடுவிக்கவும் சுதந்திர வேட்கையை மக்களிடம் புகுத்தவும் வீறுகொண்ட பாடல்களை உச்சஸ்தாயியில் பாடி ஒரு மக்கள் இயக்கமாகவே செயற்பட்டவர் என்பதனை அவர்

காலத்தில் வாழ்ந்தவர்களான வ.வே.சு. ஐயர், உ.வே.ச. முதலிய பல அறிஞர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

இவ்வாறான தேசபக்திப் பாடல்களைப் பாடுவதனூடாக ஒரு நாட்டின் சுதந்திர வேட்கையை ஊட்டக்கூடிய வல்லமையைப் பாரதியார் கொண்டிருந்தமையே முன்வாழ்ந்தோரிடமிருந்து இவரை வேறுபடுத்தும் தனித்துவமான முக்கிய அம்சமாகும். இவ்வகை சார்ந்தனவாக இவர் பாடல்கள் சில வற்றை இத்தொடரின் 22-ம் கட்டுரையில் நோக்கியிருந்தோம். இவை பல்வேறு வடிவங்களிலும் பல்வேறு சுவையுடனும் அனைத்து மக்களையும் சென்று சேரும் தன்மை கொண்டவையாகவும் எழுச்சியினையும் வைராக்கியத்தையும் அஞ்சா நெஞ்சத்தையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வல்லமை கொண்டவையாகவும் திகழ்ந்தன.

இவற்றில் 'பாரத சமுதாயம் வாழ்கவே - வாழ்க வாழ்க' என்ற பாடலில் வரும் இரண்டாவது சரணம் 'இனியொரு விதி செய்வோம்..' என்ற தொடக்கத்தையுடையதாகும். அப்பாடலில் '..தனியொருவனுக் குணவில்லை யெனில் ஜகத்தினை யழித்திடுவோம்..' என வீறுடன் வெளிப்படும் கூற்றானது பாரதியாரது அனைத்திந்தியாவையும் தழுவிநின்ற மனிதநேய நோக்கிற்குரிய சான்றாக அமைகிறது. 'வாழ்க நீ எம்மான்..' எனத் தொடங்கும் இன்னொரு பாடலில் '..விடுதலை தவறிக் கெட்டு பாழ்பட்டு நின்றதோர் பாரததேசம்..' எனச் சுட்டுகிறார். 'இவ்வாறாகப் பல பாடல்களில் வெளிப்படுத்தப்படும் உணர்வுகளே பாரதியாருக்கிருந்த சமூக உணர்வு, சமத்துவ நோக்கு, பொதுமக்கள் சார்பு, விடுதலை வேட்கை, புதுமை வேட்கை, தேசியநோக்கு முதலியவற்றைக் காட்டுவனவாக அமைந்திருக்கின்றன.'

இவ்வாறு சிறப்புகள் கொண்ட இவரது பாடல்களின் தனித் தன்மை என்றவகையில் இரண்டாவதாகச் சுட்டத்தக்கது 'தமிழ்மொழியின் மேல் இவர் கொண்டிருந்த அளவில்லாத ஈடுபாடு' ஆகும். பல மொழிகளைக் கற்று அவற்றிலுள்ள இலக்கியங்களை அறிந்திருந்தாலும் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்..' எனத் தமிழ்மொழியின் சிறப்பினை ஏனைய மொழிகளோடு ஒப்பீடு செய்து எடுத்துக் கூறுகிறார். இதற்குக் காரணம் தமிழ் மொழியினையும் அதன் பண்பாட்டு அம்சங்கள் பல வற்றையும் அறிந்திருந்தமையேயாகும். இவரது 'தோத்திரப் பாடல்கள்', 'ஞானப் பாடல்கள்', 'ஞானரதம்', 'சுயசரிதைப் பாடல்கள்', 'கண்ணன் பாட்டு', 'குயில்பாட்டு', 'நீதி நூல்கள்' முதலிய தலைப்புகளிலமைந்த பல பாடல்கள் தமிழ் மொழியின் இனிமையையும் அழகையும் மட்டுமல்லாது அம் மொழியின் பண்பாட்டு விழுமியங்களையும் உணர்த்துவனவாகும்.

'வேத பாரம்பரிய'த்தில் ஆழமாகக் காலூன்றி நின்றாலும் தமக்கு முற்பட்டவர்களும் சமகாலத்தவர்களுமான சிலரைப் போல (உ-ம்: சித்தர்கள், குமரகுருபரர், கவியோகி சுத்தானந்தபாரதி, வள்ளலார் போன்றவர்கள்) இல்வாழ்க்கையை விட்டு விலகிநின்று ஞானத்தைத் தேடித் துறவு வாழ்க்கையில் அலைந்து திரிந்தவரல்லர். இதனைப் பலரது வாழ்க்கை வரலாறுகளிலும் அவர்களின் பாடல்களிலும் முன்னைய கட்டுரைகள் பலவற்றில் நோக்கியிருந்தோம்.

இல்வாழ்க்கையைத் துறப்பதன்மூலமே வீடு பேறடையலாம் என்பதான முறைமையைக் கண்டித்துச் செயற்பட்டவர், பாரதியார். சிறார்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் ஒன்றுபட்ட சிறந்ததொரு சமுதாயம் உருவாவதற்கு வழிவகைகள் பலவற்றைப் புகட்டியவர். அனைத்து மக்களும் - அனைத்து உயிர்களும் - செல்வச்சீருடன் சிறப்புற்று வாழவேண்டுமென்ற எண்ணங்கொண்ட பாரதியார் 'சமத்துவம்', 'சகோதரத்துவம்' என்பவற்றைப் பேணிநின்றவர்.

மேற்கூறியவாறு வாழ்வதனூடாகவே அனைத்துச் செயல்களிலும் பொருள்களிலும் ஈசனை உணரும் தன்மை வாய்க்கப் பெறும் எனவும் அவர் கூறுகிறார். அவற்றுடன் இதனையே சிறந்த ஞானவழியெனக் கூறியதோடு வாழ்க்கையில் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் இம்மெய்ஞானத்தாலேயே அடையமுடியும் என்பதையும் தமது பாடல்களிலும் வாழ்க்கையிலும் எடுத்துக்காட்டிய புது நெறியாளனாக அவர் திகழ்ந்துள்ளார். இதன் மூலம் தேசிய உணர்வைக் கட்டியெழுப்பிச் சுதந்திரம் பெறலாம் எனவும் அவர் எண்ணியுள்ளார். இவ்வாறான எண்ணப்பாங்கிற்கு அவருக்கு உதவியநூல் பண்டைய இலக்கியமான திருக்குறளாகும். வீடுபேற்றைத் தவிர்த்து அறம் பொருள் இன்பம் ஆகியவற்றை மட்டும் இந் நூல் விரிவாகக் கூறுகிறது. அறத்தோடு வாழ்ந்து பொருளீட்டி இன்பமாக வாழ்தலை அது வலியுறுத்தி நிற்கிறது.

அவற்றோடு தமிழுக்கேயுரிய சிறப்புடன் திகழும் திருக்குறள் தவிர்ந்த ஏனைய நூல்களான 'சங்கநூல்கள், ஐம்பெருங்காப்பியங்கள், கம்பராமாயணம்' என்பவை வடமொழிக்கீடாக இல்வாழ்க்கை வாழ்வதற்குரிய நெறிமுறைகளையும் மெய்ஞானத்தைப் பெறும் வழிமுறைகளையும் சிறப்புடன் எடுத்துக் கூறுகின்றமையைக் காண்கிறார். 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமி தனில் யங்கணுமே பிறந்ததில்லை உண்மை வெறும் புகழ்ச்சியில்லை..' என்ற பாரதியாரது பாடலடிகள் இதனையே உணர்த்துவன. 'உயர் கம்பன் பிறந்த தமிழ்நாடு, வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம் படைத்த தமிழ்நாடு..' என இந்நூல்களில் பொதிந்துள்ள பண்பாட்டுக் கூறுகளின் பெருமைதனை மனதில் இருத்திக் கொண்டு பாடுகிறார் பாரதியார். இவ்வாறு தமிழ்மொழிமீது பாரதி கொண்ட ஈடுபாட்டினைக் காட்டும் இரு சந்தர்ப்பங்களை அடுத்து நோக்குவோம்.

அந்நியராட்சிச் சூழலில் ஆங்கிலக்கல்வி முறையைக் கண்டிக்கும் பாரதியாரின் 'சுயசரிதைப் பாடல்கள்' பகுதி இங்கு முதலாவதாக முக்கியத்துவப்படுகிறது. இப்பகுதியில் 'ஆங்கிலப் பயிற்சி' என்ற உபதலைப்பில் பாரதியார் 'தமிழரின் பண்பாடுகளின் ஊற்றுக்கண்களாகத் திகழும் மேற்படி நூல்கள் இல்லாத கல்வியால் பயனில்லை' என்பதைப் பாடல்களினூடு மிகச் சுவைபட எடுத்துக் கூறுகிறார். சென்ற கட்டுரையில் இப்பகுதி பாடலுடன் விளக்கியுரைக்கப்பட்டதைப் பார்க்க.

'மெல்லத் தமிழ் இனிச்சாகும் - அந்த மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்..' என யாரோவொரு பேதை கூறியதைக் கேட்ட மாத்திரத்தே பாரதியாருக்குக் கோபம் ஏற்படும் சந்தர்ப்பம் அடுத்து இங்கு இரண்டாவது சந்தர்ப்பமாக நோக்கப்படுகிறது.

அதாவது மேற்கே மிகவேகமாக வளர்ந்துவரும் விஞ்ஞான அறிவால் தமிழ்மொழி இருந்த இடம் தெரியாது போய்விடும் எனக் கூறுவோர்க்குப் பாரதியார், 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்..' என்கிறார். அவற்றோடு 'ஆயுதம் செய்வோம் நல்ல

காகிதம் செய்வோம் ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்..' எனக் கூறுவதனூடாகப் பாரததேசத்தை விஞ்ஞான அறிவிலும் வளர்ந்தோங்கச் செய்யமுடியும் எனக் கூறுகிறார். வாழ்க்கையை உடல் ரீதியாக அனுபவித்துச் சந்தோஷமாக வாழ்வதற்கு 'விஞ்ஞான அறிவும்' அதனால் கிடைக்கும் செல்வங்களும் வசதிவாய்ப்புகளும் அவசியமானவையாகும் என்பதையும் உணர்ந்திருந்தார். அதேசமயம் 'மெஞ்ஞான அறிவு' மனதைத் தூய்மைப்படுத்துவதற்கு அவசியமானதொன்றாகத் திகழ்வதால் அதனைத் தமிழிலுள்ள மேலே கூறப்பட்ட நூல்கள் பலவற்றைக் கற்பதாலேயே பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் அறிந்திருந்தார். கல்விச்சாலைகளை அமைப்பதனூடாக மேற்படி மெய்ஞானத்தினையும் விஞ்ஞானத்தினையும் புகட்டமுடியும் எனக்கூறுகிறார். வாழ்க்கையில் இவை இரண்டுமே தேவையானவைகளாகும் என்பதை வலியுறுத்தியவர் பாரதியார்.

பாரதியார் குழந்தைகளையும் சிறார்களையும் கருத்திற் கொண்டு பல பாடல்களைப் பாடியுள்ளார். இவை சென்ற கட்டுரையிலும் விளக்கியுரைக்கப்பட்டன. இவருக்குச் சமகாலத்தில் வாழ்ந்த பலரில் தேசிகவிநாயகம்பிள்ளை ஒருவரே குழந்தைகளையும் சிறார்களையும் மையப்படுத்திப் பாடல்களைப் பாடிய ஒருவராகக் கணிக்கப்படக்கூடியவர். இவரது ஆக்கங்கள் 21 ஆவது கட்டுரையில் விரிவாக நோக்கப்பட்டுள்ளன. இங்கு பாரதியாரின் குழந்தைகளை மையப்படுத்தியமைந்த பாடல் கவனத்திற்கு வருகிறது. 'நீதிநூல்கள்' பகுதியில் அமைந்த முக்கியமானதொரு பாப்பாப் பாடல் ஆகும். பாப்பா எனச் செல்லமாக அழைக்கப்படும் செல்லம் மாவாகிய இளைய மகளுக்கு அறிவுபுகட்ட பாரதியாரால் பாடப்பட்ட இப்பாட்டு 16 பாடல்களைக் கொண்டது. 'குருவி', 'பறவை', 'கோழி', 'காக்காய்', 'பசு', 'நாய்', 'குதிரை', 'மாடு', 'ஆடு' ஆகிய பறவைகள் மற்றும் மிருகங்கள் மேல் கருணை கொண்டு அவற்றைப் பேணிக்காக்க வேண்டுமென இவற்றிலமைந்த சில பாடல்கள் கூறுகின்றன. 'அனைவருடனும் கூடியிருத்தல் வேண்டும்' எனவும் 'சோம்பல் கொள்ளாது திடத்துடன் இருக்கவேண்டும்' எனவும் 'துன்பங்களைக் கடவுள் நீக்கிவிடுவார்' எனவும் 'பொய் சொல்லுவோர் பாவம் செய்பவர் போன்றோரைக் கடுமையாகச் சாடுவதான தன்மையிலும்' சில பாடல்கள் அறிவுரை கூறுகின்றன. 'சாதிகளில்லையடி பாப்பா உயர் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்ற பாடலில் 'நீதி', 'உயர்ந்த மதி', 'கல்வி', 'அன்பு' ஆகியவற்றை நிறைய உடையவர்களே மேலோர் எனக் கூறுப்படுகிறது. நிறைவுப்பகுதிப் பாடலிலே,

*'உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்*
*உண்மையென்றுணர்தல் வேண்டும்:*
*வயிரமுடைய நெஞ்சு வேணும் - இது*
*வாழும் முறைமையடி பாப்பா'*

என 'உயிர்களிடத்தில் அன்பு செய்தலை' யும் 'தெய்வத்தை நம்புதலை' யும் 'வயிரமான நெஞ்சுடன் இருத்தலை' யும் கூறி இப்பாடலை நிறைவு செய்கிறார். முதற்பாடல்களில் கூறியவற்றைத் தொகுத்துக் கூறுவதாக இந்நிறைவுப்பாடல் அமைகிறது. 'வாழும் நெறிமுறை' களைக் குழந்தைகளுக்கான மொழியில் பலவாறாக எடுத்துரைத்த பாரதியாரின் சிறப்பு இப்பாடலில் புலப்படுகிறது.

மேற்படி பாப்பாப் பாடலின் தலைப்பில் பொதுவாக நான்கு பாடல்களை எவருமே பாடிவந்ததாகத் தெரியவில்லை. அவை தேசத்தை நேசிக்கும் தன்மை கொண்ட பாடல்களாகும். 'தமிழ்த்திரு நாட்டைப் பெற்ற தாயென்றும் ஆன்றோர் தேசமென்றும் கும்பிடவும்', 'தமிழ்ச்சொல்லைத் தொழுது கும்பிடக்கூறியும்', 'இமயம் முதல் குமரி வரை உள்ளது நம் நாடு' என்றும் 'வேதமுடைய வீரர் பிறந்த இந்நாட்டில் ஹிந்துஸ்தானத்தை தெய்வம்' என்று கும்பிடுமாறும் கூறிய பாடல்களே அவை. குழந்தைகளுக்குத் தேசிய உணர்வை ஊட்ட வேண்டியது அவசியமானது என்பதை இப்பாடல்களால் உணர்த்தியவர் பாரதியார்.

இதுவரை நோக்கிய பாரதியின் தேசிய விடுதலையுணர்வு சார்ந்த பாடல்கள், தமிழ்மொழியின் தனித்துவத்தோடு உருவான ஞான மார்க்கம் சார்ந்த பாடல்கள், குழந்தைப் பாடல்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து 'பெண்விடுதலைப் பாடல்கள்' அடுத்து நோக்கப்படவுள்ளன.

பாரதியாருக்கு இவ்வுணர்வு காசியில் அவர் நிவேதிதாவைச் சந்தித்த சூழலில் முளைவிட்டதாகும். 'பெண்கல்வி', 'பெண் சுதந்திரம்', 'புதுமைப் பெண்' முதலிய பலவாறான தலைப்புகளில் அவர் தமது மேற்படி 'பெண்விடுதலையுணர்வு' சார் கருத்துகளைப் பாடல்களாகப் பதிவுசெய்துள்ளார். அவருடைய 'பாஞ்சாலி சபதம்' என்ற காவிய ஆக்கத்திலும் மேற்படி பெண்விடுதலையுணர்வும் முனைப்பாக வெளிப்பட்டுள்ளமையை முன்னரே நோக்கியுள்ளோம். அது 'பாரதமாதா' வின் விடுதலையைப் பேசுவதாகக் கூறும் நிலையில் தேசிய உணர்வை வெளிப்படுத்துவதாகக் காண்கிறோம். அதேவேளையில் பாஞ்சாலி என்ற பெண்ணின் குரலாக அது வெளிப்படுமிடத்து - அதாவது பெண்களுக்குரிய நீதியைக்கோரும் ஆக்கமாக அதனைத் தரிசிக்கும்போது - அது 'பெண்விடுதலையுணர்வு' சார்ந்த ஒரு படைப்பாகவும் திகழ்வதை உணர்ந்து கொள்ளமுடிகிறது.

பாரதியின் பாடற்பரப்பு பற்றியதொரு தொகுநிலைப் பார்வை இதுவரை முன்வைக்கப்பட்டது. அவருடைய பரந்துபட்ட உலக நோக்கையும் மனிதநேயம், சீவகாருண்ணியம் முதலிய அறஞ்சார் பண்புகளையும் இத்தால் அறிந்துகொள்ள முடிந்தது.

மேற்படிப் பார்வைகளின் நிறைவாக அவருடைய பாடல்கள் முன்னைய இசைப் பாடலாசிரியர்களின் பாடல்களிலிருந்து வேறுபடும் அம்சங்கள் இங்கு நோக்கப்படவுள்ளன. பண்முறையில் 'தேவாரத் - திவ்வியப் பிரபந்தங்க' ளையும் இராகங்களை அடிப்படையாகக் கொண்டு 'கீர்த்தனை' களையும் 'பதங்க' ளையும் பெருமளவில் தமிழில் இயற்றி இசையமைத்துப் பாடிவந்த வாக்கேயகாரர்களின் தமிழ்ப் பாடல்கள் யாவும் இறைவனை முன்னிலைப்படுத்திப் பாடிப்பரவும் நோக்கில் அமைந்தவையாகும். இவ்வரலாறு பொ.ஊ.மு. 5-ம் நூற்றாண்டில் காரைக்காலம்மையாரில் தொடங்கி இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இப்பாடல்கள் ஆரம்பத்தில் பதிக அமைப்பில் பாடப்பட்டு வந்தன. பின்னர் பொ.ஊ.மு. 10-ம் நூற்றாண்டின்பின் சித்தர்கள் முதலியோரால் தொடங்கப்பட்ட பாடல் முறைமைகளான-னவை மக்கள் மத்தியில் பாடப்பட்டுவந்த நாட்டாரியல் மெட்டுகளைப் பயன்படுத்தி அமைந்தவையாகும். இவர்கள் மக்களிடம் தமது பாடல்கள் சென்று சேரவேண்டுமென்ற நோக்கில் 'சிந்து', 'கும்மி', 'கண்ணி', 'ஆனந்தக்களிப்பு' போன்ற மெட்டுகளைப் பயன்படுத்திப் பாடி வந்தவர்களாவார்கள்.

இவர்களைத் தொடர்ந்து திருமுறைமரபை அடியொற்றிப் பாடல்களை இயற்றிவந்த குமரகுருபரர், தாயுமானவர், வீரமா

முனிவர், இராமலிங்க அடிகளார், திரிகூடராசப்ப கவிராயர், தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார், அண்ணாமலை ரெட்டி யார், மாயூரம் வேதநாயகம்பிள்ளை, வித்துவான் இலட்சும ணப்பிள்ளை, கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை போன்றவர் கள் மேற்படிப் பண்ணிசை மரபில் காலூன்றி நின்றுகொண்டு பின்வந்த சித்தர்கள் முதலியவர்களின் பாடல் மரபுகளையும் தழுவிக்கொண்டு பாடல்கள் புனைந்தோராவர். இவர்கள் 'கோவை', 'கலம்பகம்', 'உலா', 'அந்தாதி','குறவஞ்சி', 'பதிகம்', 'சதகம்', 'இரட்டைமணிமாலை', 'நான்மணி மாலை', 'வண்ணம்' முதலான சிற்றிலக்கிய வகைகளில் பாடல்கள் புனைந்தோராவர். இவர்களின் இவ்வகைப்பாடல் கள் 'விருத்தம்', 'வெண்பா', 'ஆசிரியப்பா' முதலிய மர பான யாப்பு வடிவங்களிலும் 'சிந்து', 'கும்மி', 'கண்ணி', 'கீர்த்தனை' முதலான இசைப்பாடல் வடிவங்களிலும் அமைந்தனவாகும். இவை யெல்லாம் முன்னைய கட்டுரைக-ளில் நோக்கப்பட்ட விரிவான செய்திகளேயாம்.

மேற்படிப் பாடல் மரபின் தொடர்நிலைகளையே நாம் பாரதி யின் பாடல்களிலும் தரிசிக்கிறோம். அவ்வாறான தொடர்ச்சி யில் முக்கிய வேறுபாட்டம்சம் என நாம் காண்பது அவரு டைய பாடற் பொருண்மைகளில் அவர் மேற்கொண்டுள்ள மாற்றங்களேயாகும். குறிப்பாக இறைபக்தி மற்றும் அகப் பொருள் முதலான பாரம்பரியமான பொருண்மைகளுக்கு அப்பால் தேசபக்தி மற்றும் சமூகக் குறைபாடுகள் மீதான அறச்சீற்றம் முதலான புதுப் பொருண்மைகளை நோக்கி தமிழ்ப்பாடல்மரபை அவர் இட்டுச்சென்றுள்ளார். சமூகச் சிந்தனையுள்ளவராகப் பொறுப்புடன் திகழ்ந்துள்ளார். இவ்வ கையிலேயே அவர் முன்னையவர்களிலிருந்து குறிப்பிடத் தக்க அளவுக்கு வேறுபட்டுள்ளார்.

இதுவரை பாரதியாரின் பாடல்கள் ஏனையவர்களின் பாடல்க ளிலிருந்து வேறுபடும் அம்சங்கள் முன்வைக்கப்பட்டன. இதனை நிறைவுசெய்யவுள்ள நிலையில் பாரதியார் தமதுகா லத் தமிழ்நாட்டின் இசைப்பாடற்சூழல் தொடர்பாகக் கொண் டிருந்த எண்ணப்பாங்கு பற்றிய ஒரு முக்கிய குறிப்பை இங் குமுன்வைக்க விழைகிறேன்.

அவருடைய காலகட்டத்தில் மேடைகளிலும் வேறு பிரபுக்கள் சபைகளிலும் பாடுபவர்கள் பெரும்பாலும் தெலுங்கு மற்றும் வடமொழி சார்ந்த இசைப் பாடல்களையே பாடிவந்துள்ளனர். இவ்வாறான சூழலை உற்றுநோக்கிய பாரதியார் அதனை விமர்சிக்கும் வகையில் 1916-ம் ஆண்டில் 'சுதேச மித்திரன்' இதழில் ஆறு கட்டுரைகள் எழுதியுள்ளார். இக்கட்டுரைகள் 'சங்கீத விஷயம்' என்ற தலைப்பில் பின்னர் நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

இக்கட்டுரைகளில் கூறப்பட்ட முக்கிய விடயம் 'மேற்படி பிற மொழிப் பாடல்கள் தமிழ் ரசிகர்களுக்கு அந்நியப்பட்டுள்ளன வாக அமைந்துள்ளன' என்பதேயாகும். அதாவது தாய்மொழி யில் இசைப்பாடல்கள் பாடப்படாத சூழ்நிலையே அவரால் இங்கு விமர்சிக்கப்பட்டுள்ளது.

மேலும் அக்கட்டுரைகளில் அவர், வேற்றுமொழியில் பாடுவ தால் விளையும் தீங்குகளைப் பட்டியலிடுகிறார். உச்சரிப்பு தவறாகச் சுட்டப்படுதலைக் கண்டிக்கிறார். சொற்கள் பொருட்பொருத்தமின்றிப் பிரிக்கப்பட்டுப் பாடப்படும் பொழுது அதன் பொருள் மாறுபடுவதை அவர் கண்டித்துள் ளார். பாடலின் பொருள் தெரிந்தாலேயே அதனை உணர் வோடு பாடமுடியும் எனக்கூறுகிறார். அன்றேல் பாட்டு கொலை செய்யப்பட்டுவிடும் என்கிறார். பொருள் தெரியாது பாடுபவர்களையும் திரும்பத் திரும்ப ஒரே பாடலைப் பாடுப வர்களையும் அவற்றைக் கேட்பவர்களையும் பரிகாசம் செய் கிறார். 'தமிழ்நாட்டுச் சனங்களுக்கு இரும்புக்காது இருப்ப தால் திரும்பத்திரும்ப ஏழெட்டுப்பாட்டுகளை வருடக்கணக்கா கக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்' என்கிறார். பிறமொழியில் பாடுவதால் இசைஞானம் மறைந்துபோகும். அதன் விளைவாக நமக்கேயுரிய பக்தியும் மறைந்து போகும் எனக் கூறுகிறார்.

'தமிழில் உள்ள சாகித்தியங்கள் துருப்பிடித்துக் கொண்டி ருக்கின்றன. அவற்றை இசைவாணர்கள் துலக்கிக் கச்சேரி யில் பாடி தமிழ் மக்களை மகிழ்விக்க வேண்டும்' எனக் கூறு கிறார். 'தேவாரம்', 'திருவாசகம்', 'நாலாயிரம் திவ்ய பிரபந் தம்', 'ராமநாடகம்', 'தமிழிசை மூவர் பாடல்கள்', 'கோபால கிருஷ்ணபாரதியார் பாடல்கள்', 'அண்ணாமலை ரெட்டி-யார்', 'கவிராயர் பாடல்கள்' முதலிய தமிழ்ப் பாடல்களை மீட்டெடுத்துப் பாடச் சொல்கிறார். சங்கீத மும்மூர்த்திகளின் பாடல்கள் ஆரம்பத்தில் பாடுவது கடினமாகவே இருந்தது. பாடப்பாட அவை மெருகேறுகிறது. அதுபோல் பாடாது காணப்படும் தமிழ்ப் பாடல்களை வித்வான்கள் பாடிப்பா டியே சிறந்த பாடல்களைத் தேர்ந்தெடுக்க முடியும். அவற் றைப் பாடி புதிய கற்பனை, நளினங்கள், குழைவுகள் என் பன தோன்றச் செய்ய வேண்டும். இவற்றை மக்களுக்குமுன் பாடி வருகையிலேயே அவர்களுக்கும் ஞானம் கிடைக்கும். இதனால் ரசிகர்கள் கூட்டம் மேலோங்கும். பக்தி, நேர்மை, உண்மை, இடைவிடாத உழைப்பு இருந்தால் நல்ல பாடல் களை இயற்றி இசையுடன் பாடமுடியும். தாள வாத்தியத்தின் ஒலிகள் இசையினைக் கொன்றுவிடக்கூடாது என்பதிலும் கவ னமெடுக்கவேண்டும் என்கிறார். கருணை ரஸம், சிருங்கார ரஸம் என்பவற்றோடு ஏனைய ரஸங்கள் கொண்டும் பாடல் கள் பாடப்படவேண்டும் என்கிறார். பூர்வீகமான எமது இசை யைப் பாதுகாக்காது விட்டால் நமது சிறந்த கலை அழிந்து போய்விடும் என எச்சரிக்கிறார். இதனால் அடுத்த இளம் தலைமுறையினருக்கே பாதிப்பு ஏற்படும் என்கிறார்.

இவ்வாறாகத் தமதுகால தமிழகத்தின் இசைப்பாடற் சூழல் தொடர்பாக அவர் எடுத்துப்பேசிய விடயங்கள் அவருக்குப் பின் இருபதாண்டு காலப்பகுதியில் தமிழகச்சூழலில் உரு வான 'தமிழிசை இயக்கம்' என்ற பண்பாட்டு எழுச்சிக்கு வித் துகளாக அமைந்துள்ளன என்பதை வரலாறு உணர்த்திநிற்கி றது. மேற்படி தமிழிசை இயக்கமானது ராஜா சர் அண்ணாம லைச் செட்டியார், ரசிகமணி டி.கே.சி., ராஜாஜி, கல்கி முதலி யோரால் முன்னெடுக்கப்பட்டதாகும். இவ்வியக்கம்சார்ந்து தமிழிசையை வளர்த்த முக்கிய இசைப் பாடலாசிரியர்கள் என்றவகையிலே பாபநாசம் சிவன், தண்டபாணிதேசிகர், கவி யோகி சுத்தானந்த பாரதி, கீழ்வேளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, பெரியசாமி தூரன் முதலியோர் குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடையோராவர். இவ்வாறானோரின் தமிழிசைப் பாடல்களின் உருவாக்கத்துக்கு பாரதியார் ஒருவகையில் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார் என்பது மனநிறைவைத்த ரும் செய்தியாகும்.

(தொடரும்)



kawsalya.s@thaiveedu.com

# தமிழ்வலை - 89

‘தாய்வீடு’ சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் ‘தமிழ்வலை’யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | ■ | ■ | ■ | 1 | ■ | ■ | ■ | 2 | 3 |
| ■ | 4 | | 5 | | | 6 | | ■ | |
| ■ | | ■ | 7 | | ■ | | ■ | 8 | |
| ■ | | ■ | ■ | ■ | ■ | ■ | 9 | ■ | |
| 10 | | | | ■ | 11 | | | | |
| | ■ | ■ | ■ | 12 | ■ | ■ | | ■ | |
| 13 | | | | | | | | ■ | |
| | ■ | ■ | ■ | | ■ | ■ | | ■ | |
| | ■ | 14 | | ■ | 15 | ■ | ■ | ■ | |
| ■ | 16 | | ■ | 17 | | | | | |

## தமிழ்வலை-89 வினா

**இடமிருந்து வலம்**

2 காலை நேரத்தைக் குறிக்கும் முதல் எழுத்துகள் (1-1)
4 இலங்கையிலும் இந்தியாவிலும் பேர்போன வானொலிக் கலைஞர்(4-3)
7 ஒரு பொருளை வாங்கச் செலுத்தும் தொகை
8 திறப்பு
10 இந்து சமுத்திரத் தீவு
11 வணக்கம்
13 இலங்கையின் நான்காவது பிரதமர்
14 அடியேன்
16 ஒரு மீன்
17 ஆயுதம்

**மேலிருந்து கீழ்**

1 தொந்தரவு
3 செல்வம் அருளானந்தம் எழுதிய அனுபவப் புனைவு(5-5)
4 கடற்பாம்பு
5 இரண்டு
6 திரும்பி வா
9 செத்துங் கொடுத்தான்...
10 ஒரு கனி
12 பேர்போன இலக்கியத் திறனாய்வாளரின் முதல் எழுத்துகள் (1-1-1)
14 ஒரு பறவை
15 சிற்றாறு


**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி**
**மினன்னஞ்சல் முகவரி:**
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**


## தமிழ்வலை - 88க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | ரு | ணை | 2 தி | ல | 3 கா | ■ | ■ | 4 சா | மை |
| னி | ■ | ■ | ரு | ■ | ல | ■ | 5 த | ■ | ■ |
| ■ | 6 க | ரி | கா | ல | ன் | ■ | ளை | ■ | 7 த |
| 8 ஜெ | ■ | ■ | ணி | ■ | ■ | 9 இ | ய | ன | ம் |
| ய் | ■ | 10 தி | ■ | ■ | 11 ம | ■ | சி | ■ | ப |
| 12 ச | ங் | க | 13 தி | ■ | னி | ■ | ங் | ■ | ல |
| ங் | ■ | ■ | ண் | ■ | கை | ■ | க | ■ | கா |
| 14 க | ட் | ட | ணை | ம் | ■ | ■ | ம் | ■ | ம |
| ர் | ■ | ■ | ம் | ■ | ■ | 15 வா | ■ | 16 ஓ | ம் |
| ■ | 17 கூ | றை | ■ | 18 வே | ட | ர் | ■ | ■ | ■ |

## தமிழ்வலை-88 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

ஜெகதீசன் எஸ், ஸ்கார்பரோ
சுமதி சிவநேசன், ரொறன்ரோ
கி. நிமலினி, இலங்கை.
சிவகுமார் நிவேதா, ரொறன்ரோ
ஜோன் பப்டிஸ் ஜோசராசா, ஸ்கார்பரோ
விநோதா வசீகரன், மார்க்கம்.

### பரிசுபெறும் போட்டியாளர்

## நவம் பூமணி

**ரொறன்ரோ**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும். பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.






# கம்பனின் கருவூலம் திறந்து...

**14**

-மாவிலி மைந்தன்
சி. சண்முகராஜா

சென்ற இதழில் பாலகாண்டத்தின் 12-வது படலமாகிய கார் முகப் படலத்தில் சிவதனுசு என அழைக்கப்படும் வில்லை இராமன் நாணேற்றி முறித்த செய்திகளோடு கம்பரின் கவிந யத்தைப் படித்து இன்புற்றோம். இக்கட்டுரைப் பகுதியில் சனக மகாராசனது தூதுவர்கள் கொண்டு வந்த திருமண ஓலையைப் பெற்ற தயரத மன்னன் தனது பரிவாரங்களுடன் மிதிலை நகருக்குப் புறப்படுகின்ற செய்திகளைக் கூறும் பிரி வாகிய எழுச்சிப் படலத்திலும் மிதிலைக்கு அவர்கள் செல் லும் வழியில் சந்திர சைலம் என்னும் மலைப்பகுதியில் தங் கியிருந்த போது கண்ட காட்சிகளைக் கூறும் 14-வது படல மாகிய வரைக்காட்சிப் படலத்திலும் வரும் செய்திகளையும் கம்பரின் சில செய்யுள்களின் கவிநயத்தோடு அனுபவித்து மகிழ்வோம்.

சனகனின் தூதுவர்கள் கொணர்ந்த ஓலையை வாசித்தபோது தனது மூத்த மகனாகிய இராமனது வில்திறனையும் திரும ணச் செய்தியையும் அறிந்து பெருமகிழ்ச்சியில் அவனது தோள்கள் பூரிக்கின்றன.

*வெற்றிவேல் மன்னவன் தக்கன் வேள்வியில்*
*கற்றைவார் சடைமுடிக் கணிச்சி வானவன்*
*முற்ற ஏழுலகையும் வென்ற மூரிவில்*
*இற்றபே ரொலிகொலன்(று) இடித்தது ஈங்கென்றான்.*

- கம்ப. பால. 819

வெற்றியைத் தருகின்ற வேலாயுதத்தையுடைய தயரத மன் னன், நீண்ட சடைமுடியையும் மழுப்படையையும் உடைய கடவுளாகிய சிவபெருமான் தக்கனின் வேள்வியை அழித்த போது ஏழுலகம் முழுவதையும் வெல்வதற்குக் காரணமாய் இருந்த வலிமை பெற்ற வில்லாக இருந்த அச்சிவ தனுசு முறிந்து விழுந்ததனால் எழுந்த பேரொலிதானோ அன்று இங்கே கேட்ட ஒலி என வியந்தான் என்கிறார் கம்பர்.

அந்த மகிழ்ச்சியில் தமது படைகளும், அரச குமாரர்களும் மிதிலை நகரத்தை நோக்கிச் செல்லுமாறு தயரதன் முரசறை யுமாறு பணிக்க, வள்ளுவன் யானைமேல் முரசேற்றி இராம னுடைய திருமணத்துக்கு அனைவரையும் முன்செல்லுமாறு அரசனின் கட்டளையை முரசறைந்து தெரிவிக்கின்றான்.

*சாற்றிய முரசொலி செவியிற் சாருமுன்*
*கோற்றொடி மகளிரும் கோல மைந்தரும்*
*வேற்றரு குமரரும் வென்றி வேந்தரும்*
*காற்றெறி கடலெனக் களிப்பில் ஓங்கினர்.*

- கம்ப. பால. 823

அறைந்த பேரிகையின் பேரோசை காதில் விழுவதற்கு முன் னரே அழகிய வளையணிந்த மகளிரும், அழகிய ஆடவரும், வேல் வீரர்களாகிய படைவீரர்களும், வெற்றி பொருந்திய அரசர்களும் காற்றினால் மோதப்படும் கடலைப்போலப் பெருமகிழ்ச்சியால் பூரித்தார்கள் என்கிறார் கம்பர். முரச றைந்த செய்தி காதில் விழுந்த உடனேயே சலனமற்றிருந்த கடல் நீர் காற்றின் வேகம் தொட்டவுடன் அலையாக எழுதல் போலக் காற்றோடு வந்த அந்த இனிய செய்தி இவர்கள் எல்லோர் மனதிலும் மகிழ்ச்சி அலைகளை எழுப்பின எனக் ‘காற்றெறி கடலெனக் களிப்பில் ஓங்கினார்’ என்னும் புதுமை யான உவமையை இங்கே கம்பர் எடுத்தாண்டிருப்பது அவ ரது கவியாற்றலை எடுத்துக்காட்டுகிறது.

மிதிலை நோக்கிப் படையினரும், ஆடவரும், மகளிரும் தேர் களிலும், யானைகள், குதிரைகள் மீதும், நடந்தும் செல்கின்ற காட்சிகளைக் கம்பர் வருணிக்கின்றார்.

*இணையெடுத் திடையிடை நெருக்க ஏழையர்*
*துணைமுலைக் குங்குமச் சுவடும் ஆடவர்*
*மணிவரைப் புயங்களின் சாந்தும் ஆழ்கிமெல்*
*அணையெனப் பொலிந்ததக் கடல்செல் ஆறரோ.*

- கம்ப. பால. 830

பெருங் கடல்போலச் செல்லும் மக்களின் திரள் மிகுதியால் ஏற்பட்ட நெருக்கத்தினால் மங்கையர்களின் தனங்களில் அணிந்திருந்த குங்குமக் குழம்பும், ஆடவர்களின் மலை போன்ற தோள்களில் பூசியிருந்த சந்தனக் குழம்பும் உதிர்ந்து வழியெங்கும் மெல்லிய படுக்கைபோலானது என் னும் தற்குறிப்பேற்ற அணியுடன் கூடிய கம்பரின் அழகிய கற்பனை நிறைந்த செய்யுள்களில் இதுவும் ஒன்று. இவ்வாறு செல்கின்ற மக்கட் பெருக்கத்தை வருணிக்கின்ற கம்பரின் இன்னுமொரு செய்யுள் இவ்வாறு வருகிறது.

*உழுந்திட இடமிலை உலக மெங்கணும்*
*அழுந்திய உயிர்க்கெலாம் அருட்கொம் பாயினான்*
*எழுந்திலன் எழுந்திடைப் படரும் சேனையின்*
*கொழுந்துபோய்க் கொடிமதில் மிதிலை கூடிற்றே.*

- கம்ப. பால. 838

துன்பத்துள் ஆழ்ந்திருக்கின்ற உயிர்களுக்கெல்லாம் அருள் புரிகின்ற ஊன்று கோலாகிய தயரதன் இன்னும் எழுந்து புறப்படவில்லை. எனினும் அயோத்தியிலிருந்து சென்ற படை வீரர்களும் மக்களும் உலகெங்கும் உழுந்து கூட விழ இட மில்லாதவாறு கொடிகளால் சூழப்பெற்ற மதில்களையுடைய மிதிலை நகரை அடைந்துவிட்டனர் எனப் படைகளும் மக்க ளும் ஒரே காலத்தில் புறப்பட்டதால் மிதிலைவரை காணப் பட்ட மக்கள் நெருக்கத்தை உயர்வு நவிற்சி அணியில் வரு ணிக்கின்ற கம்பர் இந்தச் செய்யுளில் ஒரு நுட்பமான கருத்தை வைத்துள்ளார்.

மிக நெருக்கமாக இருக்குமிடத்தைப் பற்றிச் சொல்லும்போது எள்ளுப் போடும் அளவுக்குக் கூட இடமில்லை என்று கூறுவ துண்டு. ஆனால் இச்செய்யுளில் உளுந்திட இடமில்லை எனக் கம்பர் கூறுவது ஏன்? இராமனின் திருமணம் என்னும் மங்கல நிகழ்ச்சியைக் காண மக்கள் கடல் போல் திரண்டு செல்கின்றார்கள். எள்ளை மங்கலப் பொருளாகக் கருதும் வழக்கம் இல்லாததால் அதற்குப் பதிலாக மங்கலப் பொரு ளான உழுந்தை இச்செய்யுளில் எடுத்தாண்டுள்ளார் கம்பர். அதேவேளை யுத்தகாண்டத்தில் இராமனின் அம்புகள் துளைத்து இறந்து வீழ்ந்துகிடந்த இராவணனைக் குறித்துப் பாடிய செய்யுளில் 'எள்ளிருக்கும் இடமின்றி உயிரிருக்கும் இடம்நாடி இழைத்தவாறோ' எனக் கம்பர் பாடியுள்ளதையும் இங்கே ஒப்பு நோக்கிப் பார்க்கும்போது கம்பரின் சிந்தனை ஆற்றலை நன்கு அறியக் கூடியதாக இருக்கிறது.

*குடையொடு களிறும் தொங்கற் குழாங்களும்*
*கொடியின் காடும்*
*இடையிடை மயங்கி எங்கும் வெளிக்கரந்*
*திருளைச் செய்ய*
*படைகளும் முடியும் பூணும் படர்வெயில் பரப்பிச் செல்ல*
*இடையொரு கணத்தி னுள்ளே இரவுண்டு பகலுமுண்டே*

- கம்ப. பால. 870

கரிய குடைகளும், கரிய பெரிய உடல்களையுடைய யானை களும், பீலிக் குஞ்சங்களும் ஒன்றோடொன்று கலந்து எந்த இடத்திலும் வெற்றிடமில்லாதவாறு மறைத்து இருளை உண் டாக்குகின்றன. வில், வாள் முதலிய படைக்கலங்களும், மணிமுடிகளும் ஆபரணங்களும் வீசுகின்ற ஒளி பரந்த வெய் யில் போல் பரவுகின்றது. அவர்கள் செல்லும் இடம் முழுவ தும் ஒரே நேரத்தில் இரவும் பகலும் உள்ளது போலாயிற்று என்னும் கம்பரின் கற்பனைத் திறனும், 'இடையொரு கணத் தினுள்ளே இரவுண்டு பகலுமுண்டே' என அதனைக் குறிப்பி டும் முரண் தொடை உத்தியும் போற்றத்தக்கது.

தயரதனின் மனைவியரான கைகேகி, சுமித்திரை, கோசலை ஆகியோர் சிவிகைகளில் செல்லும் காட்சிகளையும் பரதன், சத்துருக்கன் ஆகியோரும் அமைச்சர்களும், முனிவர்களும், அந்தணர்களும் எனத் தயரதனின் பரிவாரங்கள் எல்லாம் மிதிலை நோக்கிச் செல்லுகின்ற காட்சிகளையும் பல இனி மையான செய்யுள்களில் கம்பர் வருணிக்கின்றார்.

*பொற்றொடி மகளிர் ஊரும் பொலன்கொள்தார்ப்*
*புரவி வெள்ளம்*
*சுற்றுறு கமலம் பூத்த தொடுகடற் திரையிற் செல்லக்*
*கொற்றவேல் மன்னர் செங்கைப் பங்கயக்*
*குழாங்கள் கூம்ப*
*மற்றொரு கதிரோன் என்ன மணிநெடுந் தேரிற் போனான்.*

- கம்ப. பால. 890

பொன் வளையல்களை அணிந்த மகளிர் ஏறிச் செல்கின்ற பொன்னாலான மாலைகளை அணிந்த குதிரைகளின் கூட்டம் சுற்றிலும் பொருந்திய தாமரை மலர்கள் பூத்திருக்கும் பெருங்கடல் அலைகளைப் போலச் சென்று கொண்டிருக்க, வெற்றி பொருந்திய வேற்படையையுடைய அரசர்களின் செந் நிறத் தாமரைகளாகிய கைகள் குவிந்து வணங்கி நிற்கத் தயரதன் மணிகள் கட்டிய நீண்ட தேரிலே இன்னொரு கதிரவ னைப் போலச் சென்றான் என்னும் பொருள் தரும் இச் செய் யுளில் கம்பனின் வெவ்வேறு கவித்திறன்களைக் காண்கி றோம்.

தாமரையை மலர்விக்கும் கதிரவனிலும் வேறுபட்டுத் தாமரை மலர்களைக் கூம்பச்செய்யும் இன்னொரு கதிரவனாகத் தயர-தனை உருவகித்திருக்கும் 'செங்கைப் பங்கயக் குழாங்கள் கூம்ப மற்றொரு கதிரோன்' என்னும் சொற்றொடர் நயக்க வைக்கிறது. இது வேற்றுமை அணி என்னும் அணிநயத்தைக் கொண்டது. மேலும், மகளிரைச் சுமந்து செல்லும் புரவி வெள்ளத்தைக் கமலம் பூத்த தொடுகடற் திரை என உருவ கப் படுத்தியுள்ளது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. கடலிலே தாமரை வளர்வதில்லை. 'கமலம் பூத்த தொடுகடல்' என்னும் வருணனை இல்பொருள் உவமை அணி என்னும் அணிநயத் தில் அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

தயரதனும் அவனது சேனையும் செல்கின்ற வழியிலே சந்திர சைலம் என்னும் மலையை அடைந்து அங்கே இரவுப் பொழுதைக் கழிக்கின்றார்கள். அதற்காக அங்கே நடைபெ றும் ஏற்பாடுகள் பற்றிய செய்திகளை 30-க்கும் மேற்பட்ட செய்யுள்களில் கம்பர் மிக அழகாக எடுத்துக் கூறியுள்ளார். அந்த மலையைச் சுற்றித் தயரதனும் அவனது சேனைகளும் இருப்பதைக் கம்பர் இவ்வாறு கூறுவார்:

*சுற்றிய கடல்க ளெல்லாம் சுடர்மணிக் கனகக் குன்றைப்*
*பற்றிய வளைந்த வென்னப் பரந்துவந் திறுத்த சேனை*
*கொற்றவர் தேவி மார்கண் மைந்தர்கள் கொம்ப னார்வந்து*
*உற்றவர் காண லுற்ற மலைநிலை யுரைத்து மன்றே.*

- கம்ப. பால. 927

நாற்கடலும் சுடர்விடுகின்ற கனக மணிகளையுடைய மேரு மலையைக் கவர்ந்து கொள்ளும் பொருட்டு சூழ்ந்து வளைத் ததைப் போல அந்தச் சேனைகள் பரவி வந்து அந்தச் சந் திர சைலத்தின் சாரலில் தங்கின. அந்தச் சேனைகளிலுள்ள அரசர்களும் அவர்களது மனைவியரும் அரச குமாரர்களும் பூங்கொம்புகளையொத்த அரச குமாரிகளும் அங்கே வந்து தங்கிய அம்மலையைப் பற்றி உரைப்போம் என்கிறார் என் கிறார் கம்பர். சேனைகளால் சூழப்பட்டிருந்த மலைச் சாரல் காட்சியை, 'சுற்றிய கடல்கள் எல்லாம் சுடர்மணிக் கனகக் குன்றைப் பற்றிய வளைந்த தென்ன' என்று கம்பர் தற்குறிப் பேற்ற உவமையணி நயத்துடன் வருணித்துள்ளார்.

*மாந்தளிர் அனைய மேனிக் குறத்தியர் மாலை சூட்டிக்*
*கூந்தலங் கமுகின் பாளை குழலினோ டொப்புக் காண்பார்*
*ஏந்திழை அரம்பை மாதர் எரிமணிக் கடகம் வாங்கிக்*
*காந்தளம் போதிற் பெய்து கைகளோடு ஒப்புக் காண்பார்.*

- கம்ப. பால. 998

அந்த மலையில் மாந்தளிரை ஒத்த உடல் நிறத்தோடு கூடிய குறமகளிர் மலர்மாலைகளைக் கமுகின் பாளைக

ளுக்கு அணிவித்துத் தம் கூந்தலுக்கு ஒப்புமை காண்பார்கள். ஆபரணங்கள் அணிந்த தெய்வமகளிர் நெருப்பைப் போலச் செந்நிறமாக ஒளிவிடுகின்ற மணிகள் பதித்த கடகம் என்னும் அணியைக் கழற்றி காந்தள் மலர்களிலே அணிவித்து அதனைத் தம் கைகளோடு ஒப்புமை காண்பார்கள் எனச் சந்திர சைல மலையின் அழகைப் பலவாறு கம்பர் வருணிக்கின்றார். மலையில் வாழும் குறமகளிரும், தெய்வப் பெண்களும் இவ்வாறு ஒப்புமை காணும் வகையில் அம்மலை மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் மகிழ்வதற்கு இடமாயிற்று என்பார் அவர்.

*புகலும் வாளரிக் கண்ணியர் பொற்பதம்*
*புகலும் வாளரிக் கண்ணியர் பூண்முலை*
*அகிலும் ஆரமும் ஆரவங் கோங்குமே*
*அகிலும் ஆரமும் ஆரவங் கோங்குமே*

- கம்ப. பால. 954

இந்தச் செய்யுளில் முதலாவது அடியிலுள்ள அதே சொற்கள் வேறு பொருளில் இரண்டாவது அடியில் வந்திருக்கின்றன. அதேபோல மூன்றாவது அடியில் அமைந்து வந்த அதே சொற்கள் நான்காவது அடியில் அப்படியே ஆனால் வேறு பொருளில் அமைந்து வந்திருக்கின்றன. வடமொழியில் யமகம் என அழைக்கப்படுகின்ற மடக்கு என்னும் உத்தியைக் கொண்ட சொல்லணியால் அமைந்த செய்யுள் இது. முதலடியிலுள்ள 'புகலும் வாளரிக்கு அண்ணியர் பொற்பதம்' என்பது சிறப்பித்துச் சொல்கின்ற வாள்போல் கொடிய சிங்கத்தையொத்த ஆடவர்களின் அழகிய தோள்களில் எனப் பொருள் பட, அடுத்த அடியில்வரும் 'புகலும் வாளரிக் கண்ணியர் பூண்முலை' என்பது ஒளிபொருந்திய செவ்வரி படர்ந்த மடவாரின் அணிகலன்கள் அணியப்பெற்ற மார்புகள் சேர்தலும் எனப் பொருள்படுகிறது. அதேபோல மூன்றாவது அடியில் வரும் 'அகிலும், ஆரமும், ஆரவங்கோங்குமே' என்பது அந்த மகளிரின் மார்பில் பூசப்பட்டிருந்த சந்தனக் குழம்பும், முத்து வடங்களும், அந்த ஆடவர்களின் தேள்களில் சேர்ந்து சிறக்கவும் எனப் பொருள் பட, நான்காவது அடியில் வரும் அதே சொற்கள் அவர்களின் தோள்களுக்கு ஒப்பாகின்ற அந்த மலையினிடத்திலே சந்தன மரங்களும் குங்கம மரங்களும், கோங்கிலவ மரங்களும் நிறைந்திருக்கின்றன எனப் பொருள்பட மிகவும் அற்புதமாக அச்செய்யுளில் சொற்சிலம்பம் ஆடியிருக்கின்றார் கம்பர்.

இதனைப் போன்ற 10 செய்யுள்கள் சந்திர சைல மலையை வருணிக்கும் வகையில் கம்பரால் இப்படலத்தில் படைக்கப் பட்டுள்ள சிறப்பைக் காணலாம். இவ்வாறாக எழுச்சிப் படலத்திலும் வரைக் காட்சிப் படலத்திலும் வரும் அத்தனை செய்யுள்களிலும் இயற்கையையும், அங்கு வந்துள்ள சேனைகளின் சிறப்புகளையும் கம்பர் தனது கற்பனைத் திறன் கூட்டி வருணித்துப் பாடியுள்ளதைக் காணலாம். இதனை அடுத்துவரும் படலங்களிலும் நாம் நயந்து சுவைக்கக் கூடிய செய்யுள் அடங்கிய கட்டுரையை அடுத்த இத ழில் எடுத்து வருகிறேன்.

(வளரும்...)



shanmugarajah@thaiveedu.com



# தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும்

36

- நா. சுப்பிரமணியன்

இத்தொடரில் கடந்த கட்டுரையிலே தமிழின் முதற்பேரிலக்கியங்கள் என்ற கணிப்புக்குரியவையான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றை மையப்படுத்தி நிகழ்ந்துள்ள ஆய்வுகள் பற்றிய பார்வை தொடங்கியுள்ளது. இத்தொடரிலே முதலில் 'சிலப்பதிகார ஆய்வுகள்' பற்றிய முக்கிய பார்வைகள் என்ற வகையிலே அதன் பொதுவான வரலாற்றியக்கத்தைத் தெரிந்துகொள்ளும் நோக்கில் உருவான நூல்களை நோக்கத் தொடங்கியுள்ளோம். இவ்வகையில் முதலாவதாகக் கவனத்துக்கு இட்டுவரப்பட்டது டாக்டர் க. பஞ்சாங்கம் அவர்களால் எழுதப்பட்டு 1993-ல் வெளிவந்ததான 'சிலப்பதிகாரத் திறனாய்வுகள் - ஒரு பார்வை' என்ற ஆக்கமாகும். அதன் முதலிரு இயல்களின் உள்ளடக்க அம்சங்களைக் கடந்த கட்டுரையில் நோக்கினோம். அடுத்துவரும் இரு இயல்களின் உள்ளடக்க அம்சங்கள் இங்கு கவனத்துக்கு இட்டுவரப்படவுள்ளன.

'சிலப்பதிகார மாற்று வடிவங்கள்' என்ற தலைப்பிலமைந்ததான மூன்றாம் இயலானது 'சிலப்பதிகாரத்தின் கதையம்சங்கள்' சார்ந்து உருவான பல்வேறு ஆக்கங்களையும் விமர்சன நோக்கில் வகைப்படுத்தி விளக்கும் செயற்பாடாக அமைந்ததாகும். அவ்வகையில் இதிலே முதற் கவனத்துக்கு இட்டுவரப்பட்டவை 'சிலப்பதிகாரக் கதைசார் செய்திகளைக் கொண்ட ஆக்கங்களாகும். இவ்வகையிலே சிலப்பதிகாரத்துக்கு முற்பட்டவையான புறநானூறு, நற்றிணை, பதிற்றுப்பத்து ஆகிய சங்கத் தொகை நூல்களில் இடம்பெற்றுள்ள சில பாடல்கள் முதலிலே கவனத்துக்கு முன்வைக்கப்பட்டுள்ளன. அடுத்து சிலப்பதிகாரத்துக்குப் பிற்பட்டவையான உரைநூல்களில் இடம்பெற்றுள்ள இருபாடல்களும் இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவற்றிலொன்று கால யாப்பிலக்கண ஆக்கமான யாப்பருங்கல நூலின் விருத்தியுரையில் இடம்பெற்றதாகும். மற்றப்பாடல் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்துக்குத் தெய்வச்சிலையார் என்பாரெழுதிய உரையில் இடம்பெற்றுள்ளதாகும்.

மேற்படி சங்கத்தொகை நூல்களின் பாடல்கள் தரும் தகவல்கள் சிலப்பதிகாரக் கதையம்சசார் எண்ணக்கருக்கள் மற்றும் சில செய்திகள் ஆகியன அவ்வாக்கம் உருவாவதற்கு முன்பே இலக்கிய நிலையில் பதிவாகியிருந்தன என்பதான ஊகத்துக்கு இட்டுச்செல்வனவாகும். குறிப்பாக, புறநானூறு என்ற தொகை நூலிலே 142 முதல் 147 வரையான எண்களிலமைந்த பாடல்கள் சிலப்பதிகாரத்தின் தலைமைப் பாத்திரமான 'கண்ணகி'யைப் போல, 'தனது கணவனை இன்னொரு பெண்ணிடம் இழந்து, துயருற்ற மனைவியொருத்தியின் அவலநிலையைக் காட்சிப்படுத்துவனவாகும். அவ்வாறு துயருற்ற பெண்ணின் பெயரும் 'கண்ணகி' என்பதுதான் இங்கு தனிக் கவனத்துக்குரிய அம்சமாகும்.

அக்கண்ணகி 'வையாவிக்கோ பெரும் பேகன்' என்ற வள்ளலின் மனைவியாவாள். அவள் கணவனது பிரிவால் எய்திய பெருந்துயரைக் கண்டு மனம்நொந்த புலவர்கள் பலரின் பாடல்களே மேற்சுட்டிய 142 முதல் 147 வரையான புறநானூற்றுப் பாடல்களாகும். பேகனின் பிரிவால் பெருந்துயரெய்திய அம்மனைவியின் பெயர் 'கண்ணகி' என்பது 143 - 147 வரையான எண்களிலமைந்த மேற்படி பாடல்களின் அடிக்குறிப்புகளில் காணப்படும் செய்தியாகும். 'பேகனால் துறக்கப்பட்ட கண்ணகி காரணமாக அவனைப் பாடியது' என அந்த அடிக்குறிப்புப் பதிவுகள் அமைந்துள்ளன. இவ்வாறு புறநானூற்றுப் பாடல்களில் இடம்பெற்றனவும் அவ்வகையில் ஏற்கெனவே இலக்கியநிலையில் பதிவாகியுள்ளதுமான ஒரு பெண்ணின் கதையே - அதாவது ஒரு 'கண்ணகியின் கதை'யே - பின்னாளில் சிலப்பதிகாரமாகப் பேரிலக்கிய வடிவெய்தியது என்ற ஊகத்துக்கு இடமளிக்கும் ஒரு சான்றாக இது இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

நற்றிணை என்ற தொகைநூலின் 216-ம் பாடலில் 'ஒரு முலையறுத்த திருமாவுண்ணி' என்ற ஒரு தொடர் உள்ளது. (அடி: 9) இது 'பிரிவுத்துயர் தாங்காது தனது கொங்கையையே அறுத்தெறிந்த ஒரு பெண்ணைப் பற்றிய குறிப்பாக' அமைந்ததாகும். சிலப்பதிகாரத்திலே 'கண்ணகி தனது ஒரு முலையைத் திருகியெறிந்து மதுரையை எரியூட்டினாள்' என்ற செய்தியுள்ளது என்பதறிவோம். அவ்வாறான கதைநிகழ்வுக்கான ஒரு முன்னோடிக் குறிப்பாக மேற்படி 'திருமாவுண்ணி' பற்றிய செய்தி ஊகிக்கப்படுகிறது.

பதிற்றுப்பத்து தொகைநூலின் ஐந்தாம் பத்திலே அதன் 'பதிகம்' என்ற பகுதியிலே 4 முதல் 7 வரையான அடிகள் சேர மன்னர்களிலொருவனான கடல் பிறக்கோட்டிய செங்குட்டு-

வன் என்பான் பத்தினித் தெய்வத்தை வடிப்பதற்கான கல்லெடுக்கும் நோக்கில் வடதிசையில் படைநடத்திச் சென்ற வீரச் செயலைக் குறிப்பனவாகும். அவ்வடிகள் வருமாறு:

*'கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டி*
*கான்நவில் கானம் கணையில் போகி*
*ஆரிய அண்ணலை வீட்டி, பேரிசை*
*இன்பல அருவிக் கங்கை நண்ணி...'*

இவ்வாறு வரும் இவ்வடிகள் தரும் செய்தியானது சிலப்பதிகாரத்தின் 'வஞ்சிக்காண்ட'த்தில் செங்குட்டுவன் என்ற சேர மன்னனின் வீரச்செயலாக விரித்துப் பேசப்படுவதாகும்.

சங்கத்தொகை நூல்களில் இடம்பெற்றவையான மேற்படி பாடற்சான்றுகள் தரும் தகவல்களை நோக்கும்போது, 'சிலப்பதிகாரக் கதையம்சம்சார் எண்ணக்கருக்கள் மற்றும் சில செய்திகள் ஆகியன அவ்வாக்கம் உருவாவதற்கு முன்பே இலக்கிய நிலையில் பதிவாகியிருந்தன' என்பதான ஊகத்துக்கு இடமளிப்பனவாகவுள்ளன என்பது வெளிப்படை.

(மேற்படி புறநானூற்றுப் பாடல்களில் 'கண்ணகி' என்ற பெயர் இடம்பெறவில்லை என்பதும் அவற்றின் அடிக்குறிப்புப் பகுதிகளிலேயே அப்பெயர் காணப்படுகின்றதென்பதும் இங்கு நுனித்து நோக்கவேண்டிய விடயமாகும். அவ்வகையில் அப்பெயரானது பிற்சேர்க்கையாக இருக்கலாம் என்பதும் - அதாவது, 'புறநானூற்றுத் தொகைநூலைப் பின்னாளில் உரை செய்தவர்கள் மற்றும் ஏடுபெயர்த்தெழுதியவர்கள் யாரோ ஒருவர் சிலப்பதிகாரக் கண்ணகியை வாசித்த அருட்டுணர்வால் பேகன் மனைவிக்கு அப்பெயரைச் சூட்டியிருக்கலாம்' என்பதும் நமது சிந்தனைக்குரியதாகும்.)

யாப்பருங்கல விருத்தியுரையில் இடம்பெற்றதாக இங்கு எடுத்துக்காட்டப்படும் பாடல் வருமாறு:

*'கண்டகம் பற்றிக் கடகமணி துளங்க*
*ஒண்செங் குருதியுள் ஓ ஓ கிடப்பதே - கொண்டிக்*
*கெழுதகைமை யில்லேன் கிடந்திடப் பன்னாள்*
*அழுதகண் ணீர்துடைத்த கை.*

- யாப்பருங்கலம் 93-ஆம் நூற்: விருத்தியுரை

தொல்காப்பியத் தெய்வச்சிலையாருரையில் இடம்பெற்றுள்ள பாடல்:

*'காதலியைக் கொண்டு கவுந்தியுடன் கூடி*
*மாதரிக்குக் காட்டி மனையி னகன்றுபோய்க்*
*கோதி லிறைவனது கூடற்கட் கோவலன்சென்*
*றேத முறுதல் வினை'*

- தொல். சொல். நூ:100 உரை

'வெண்பா' என்ற பாவகைசார் மேற்படி இரு பாடல்களின் சொற்பொருண்மைகள் வெளிப்படை.

இவற்றுள் முதலாவது பாடலானது கோவலன் கொலையுண்டிறந்துகிடந்த நிலையைக் கண்ட கண்ணகியின் புலம்பலாகும். பின்னையது கோவலனை வழிநடத்திய வினைப்பயன் பற்றிய கவிக்கூற்று எனக் கொள்ளக்கூடியதாகும். இவ்விரு பாடல்களும் சிலப்பதிகாரத்துக்கு முன்போ அல்லது பின்போ அதன் கதையம்சமானது வெண்பாவினால் பாடப்பட்டிருக்கலாம் என்று அனுமானிப்பதற்கு இடமளிப்பனவாகும்.

'சிலப்பதிகாரக் கதைசார் செய்திகளைக் கொண்டவை என்ற வகையிலான மேற்சுட்டிய எடுத்துக் காட்டுகளையடுத்து இவ்வியலில் கவனத்துக்கு இட்டுவரப்பட்டவை 'சிலப்பதிகாரக் கதையம்சங்கள்சார்ந்து பின்னாளில் உருவான' ஆக்கங்களாகும். இவை இங்கு இருவகையினவாக நோக்கப்படுகின்றன. இவற்றுள் முதலாவது வகையெனப்படுபவை 'உள்ளடக்கநிலையில் மாறாமல் உருவநிலையில் மட்டும் மாறி வெளிப்பட்டுள்ள' ஆக்கங்களாகும். இரண்டாவது வகையினவாக இங்கு சுட்டப்பட்டுள்ளவை, 'பொருண்மை மற்றும் வடிவநிலை ஆகிய இரண்டிலும் மாறியமைந்த' வையாகும்.

மேற்சுட்டிய முதல்வகைசார் ஆக்கங்களுக்குச் சான்றுகளாகக் கடந்த நூற்றாண்டில் நாடக அமைப்பில் வெளிவந்தவையான மூன்று ஆக்கங்கள் இங்கு சுட்டப்பட்டுள்ளன. அரங்க வேங்கடாசலம் பிள்ளையவர்களின் 'சிலப்பதிகார நாடகம்' (1949), கு. திருமேனியின் 'நாடகச் சிலம்பு' (1959), மு.வை. அரவிந்தனின் 'சிலம்புச்செல்வி - சிலப்பதிகார இலக்கிய நாடகம்' (1977) என்பனவே அவை. இவ்வாக்கங்களை டாக்டர் க. பஞ்சாங்கமவர்கள், 'சிலப்பதிகாரக் கதையை இலகுவான நடையில் மக்களிடம் இட்டுச் செல்லுதல்' என்ற நோக்கின் வெளிப்பாடுகளாகவே கணித்துள்ளார். இதனைத் தெளிவுறுத்தும் முகமாக அவர் முன்வைத்துள்ள மேற்கோள் ஒன்று இங்கு பதிவுபெறவேண்டிய முக்கியத்துவமுடையதாகும்.

*'...உரைகளை முற்றும் பயில்வதற்கியலா இக்காலத்தே, மக்கள் எல்லோர்க்கும் இந்நூலின் வரலாற்று உணர்ச்சி, இந்நூலின் சிறப்பு உணர்ச்சிகளைப் பரப்பும் நோக்கத்துடன் இக்கழகம் இந்நூலின் உரைநடை நாடக நூலாக ஒன்று வெளியிட எண்ணி அதனை அங்ஙனமே இயற்ற வல்லுநராகிய கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளையவர்களால் முற்றுவித்து வெளியிடுகின்றது.'*

(அரங்க வேங்கடாசலம் பிள்ளையவர்களின் சிலப்பதிகார நாடகம் நூலின் பதிப்புரையின் ஒரு பகுதியாக அமைந்த இம்மேற்கோட் குறிப்பானது டாக்டர் க. பஞ்சாங்கமவர்களின் இந்நூலின் 38 - 39-ம் பக்கங்களில் இடம்பெற்றுள்ளது.)

மேற்குறித்த இரண்டாவது வகைமைக்கான - அதாவது 'பொருண்மை மற்றும் வடிவநிலை ஆகிய இரண்டிலும் மாறியமைந்த' ஆக்கங்களுக்கான சில சான்றுகளாக காங்கேயனின் கண்ணகி வழக்குரை, புகழேந்திப் புலவரின் கோவலன் கதை, நா.நூ. சங்கரதாஸ் சுவாமிகளின் கோவலன் சரித்திரம், பாரதி தாசனின் கண்ணகி புரட்சிக் காப்பியம், மு. கருணாநிதியின் சிலப்பதிகாரம் - நாடகக் காப்பியம் என்பன இங்கே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. மேற்சுட்டியவற்றுள் கண்ணகி வழக்குரை மற்றும் கோவலன் கதை ஆகியன இடைக்கால - பொ.ஊ.பி. (கி.பி) 13 - 18-ம் நூற்றாண்டுகட்கு உட்பட்ட கால - ஆக்கங்களாகக் கணிக்கப்படுவனவாகும். ஏனையவை 20-ம் நூற்றாண்டில் எழுந்தவை.

இவற்றுள் கண்ணகி வழக்குரையானது ஈழத்தின் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடைய ஒன்றாகும். ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றிலே யாழ்ப்பாணத் தமிழ்வேந்தர்கால - அதா

வது பொ.ஊ.பி.14 - 17-ம் ஆண்டுகால - இலக்கியமாகக் கணிக்கப்படும் இவ்வாக்கம் கலையம்சத்திலும் கதைமாந்தர் சித்தரிப்பிலும் கட்டமைப்பிலும் சிலப்பதிகாரத்தினின்று பல அம்சங்களில் வேறுபட்டதாகும். குறிப்பாகச் சிலப்பதிகாரத்தில் மானுடப்பெண்ணாகச் சித்தரிக்கப்பட்ட கண்ணகியை இவ்வாக்கம் சைவமதத்தின் தாய்த் தெய்வமான உமையின் அவதாரமாகவே காட்சிப்படுத்துவதாகும். இம்மாற்றமானது புராணமரபுசார் சிந்தனைகளின் செல்வாக்கால் நிகழ்ந்ததென்பது உய்த்துணரக்கூடிய செய்தியேயாகும். மேற்படி மாற்றத்துக்கேற்ற வகையில் இவ்வாக்கமானது கதையம்சங்களிலும் பல வேறுபாடுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. (இவ்வாக்கம் பற்றிப் பின்னர் நாம் தனியாகவே நோக்கவுள்ளதால் இவ்வியலில் இவ்வாக்கம்பற்றி டாக்டர் க. பஞ்சாங்கமவர்கள் முன்வைத்துள்ள குறிப்புகள் மட்டுமே இங்கு கவனத்துக்கு இட்டுவரப்படுகின்றன.)




மேற்படி கண்ணகி வழக்குரை மற்றும் கோவலன் கதை ஆகிய இரண்டையும் 'நாட்டுப்புறப்பாடல் வடிவிலமைந்த' ஆக்கங்களாக அவர் காண்கிறார். கண்ணகி வழக்குரை தொடர்பான எடுத்துரைப்பிலே இலங்கையிலே மட்டக்களப்பில் கண்ணகி வழிபாட்டுமரபில் பாடப்பட்டு வருவனவும் 'நாட்டுப்புறப்பாடல் வடிவிலமைந்த' வையுமான 'கண்ணகையம்மன் உடுக்குச் சிந்து எனப்படும் ஊர்சுற்றும் காவியம்' மற்றும் 'கண்ணகையம்மன் குறத்திப் பாடல்' ஆகியன பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சிலப்பதிகாரத் திறனாய்வுகள் - ஒரு பார்வை: ப. 41.)

மேற்சுட்டிய கண்ணகி வழக்குரை மற்றும் கோவலன் கதை ஆகிய இரண்டையும் பற்றிய பார்வையிலே அவற்றின் உருவாக்கப் பின்புலங்கள் - குறிப்பாக இடைக்காலத்தின் சமூகப் பண்பாட்டுச்சூழல் ஆகியன தொடர்பாக விரிவான பல தகவல்கள் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் தொடர்ச்சியாக இவ்விரு ஆக்கங்களின் பொருண்மை தொடர்பாக - அதாவது சிலப்பதிகாரத்தின் பொருண்மையிலிருந்து இவற்றின் கதையம்சங்கள் மாறியமைந்துள்ளமை தொடர்பாக இவ்வியல் நமது கவனத்துக்கு இட்டுவரும் செய்தியொன்று இங்கு பதிவுபெறவேண்டிய முக்கியத்துவமுடையதாகும். அச்செய்தி வருமாறு:

*'...இவ்விரண்டும் அக்காலத் தமிழ்ச் சமூகத்தின் தேவைக்கு ஏற்பச் சிலம்பின் கதையை மாற்றியுள்ளன. இடைக்கால உரையாசிரியர்கள் உருவாக்கிய, 'பத்தினி'யைப் பாடுதல் என்ற மையத்தை உடைத்து, பரத்தை ஒழுக்கத்தைக் கடிதல் என்று சிலம்பிற்குப் புதிய மையத்தைக் கற்பித்துள்ளனர்.'* (மேற்படி நூல் : ப.41)

சங்கரதாஸ் சுவாமிகளின் கோவலன் சரித்திரம் என்ற நாடகம் பற்றிய அவதானிப்பிலே இங்கு சுட்டப்படும் முக்கியச் செய்திகளிலொன்று, அது பொருண்மையிலே 'சிலப்பதிகாரத்தின் கதையம்சம் சார்ந்ததாக அல்லாமல் புகழேந்திப் புலவரின் கோவலன் கதையின் தொடர்ச்சியாகவே அமைந்துள்ளது என்பதாகும். இத்தொடர்பிலே இன்னொரு செய்தி இவ்வாக்கம் வடிவநிலையிலே 'மேடைநாடக மரபின் தேவைக்கேற்ற உரைநடையுடன் இசைப்பாடலும் கலந்ததாக உருவாக்கப்பட்டுள்ளது' என்பதாகும். (மேற்படி நூல் : ப: 40, 43)

பாரதிதாசனின் கண்ணகி புரட்சிக் காப்பியம், மு. கருணாநிதியின் சிலப்பதிகாரம் நாடகக் காப்பியம் ஆகியன அவர்களுடைய திராவிட இயக்கசார்பு மற்றும் அரசியற்சார்பு என்பவற்றுக்கேற்ப சிலப்பதிகாரக் கதை நிகழ்வுகளுக்குப் புதுவகை விளக்கங்களை முன்னிறுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டவையாகும். அத்தேவைகளுக்கேற்பக் கதையம்சங்களில் சில மாற்றங்களையும் அவ்வாக்கங்கள் கொண்டுள்ளன. இவ்வாறான இவ்விரு ஆக்கங்களின் இயல்புகள் பற்றியும் சற்று விரிவாகவே இவ்வியல் பேசுகிறது. மேலும் 'வேறு சில மாற்று வடிவங்கள்' என்ற துணைத் தலைப்பில் மேலதிக செய்திகள் சிலவற்றையும் கூட இம்மூன்றாமியலானது நமது கவனத்துக்கு இட்டுவந்துள்ளது.

இதனையடுத்து சிலப்பதிகாரத் திறனாய்வுகள் - ஒரு பார்வை என்ற நூலின் நான்காம் இயல் இங்கு நமது கவனத்துக்கு வருகிறது. 'இயக்கங்களும் சிலப்பதிகாரத் திறனாய்வும்' என்ற தலைப்பிலான இந்த நான்காம் இயலும் இதனையடுத்து அமைந்ததான 'இருபதாம் நூற்றாண்டுத் திறனாய்வும் சிலப்பதிகாரமும்' என்ற தலைப்பிலான ஐந்தாம் இயலும் இந்நூலின் மையப்பகுதிகள் என்ற கணிப்புக்குரியனவாகும்.

மேலே தொடக்கமுதல் நாம் நோக்கிவந்தவையான முதல் மூன்று இயல்களும் சிலப்பதிகாரம் தொடர்பான ஆய்வுக்குரியவையான அடிப்படைத் தரவுகள் பற்றிய பார்வைகளாக அமைந்தவையாகும். இங்கு நோக்கப்படவுள்ளவையான இந்நாலாம் இயலும் தொடர்ந்து நோக்கப்படவுள்ளவையான 5-ம் இயலும், 'கடந்த இரு நூற்றாண்டுகள்சார் காலப்பகுதிகளில் சிலப்பதிகாரம் அணுகப்பட்டும் புரிந்து கொள்ளப்பட்டும் திறனாய்வு செய்யப்பட்டும் வந்துள்ள முறைமைகள்' தொடர்பான செறிவானதும் நிறைவானதுமான வரலாற்றுக்காட்சிகளை நம்முன் வைப்பனவாகும். அவ்வகையிலேயே இந்நூலின் மையப்பகுதிகள் என்பதான கணிப்புக்குரியனவாகின்றன. இவற்றுள் முதலில் 'இயக்கங்களும் சிலப்பதிகாரத் திற

னாய்வும்' என்ற தலைப்பிலான நான்காமியலை நோக்கலாம்.

## இயக்கங்களும் சிலப்பதிகாரத் திறனாய்வும்:

சிலப்பதிகாரத்தை அணுகுதல் மற்றும் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றில் கடந்த இரு நூற்றாண்டுகளிலே நிலவிவந்துள்ள பல்வேறு முரண்பட்ட நிலைகளை நமது கவனத்துக்கு இட்டுவருகிறது. அக்காலப் பகுதியில் நிலவிவந்த பார்வைகளில் ஒருவகையின இந்தியப் பெருநிலத்தின் பண்டைப் பண்பாட்டுச் செல்வங்களில் ஒன்றாகக்கருதி அதனை மதித்துப் போற்றும் உணர்வுநிலைகள் சார்ந்தவை. இன்னொரு வகையின அதனைத் திராவிட இன உணர்வு என்ற தளத்தில் மட்டும் நின்று புரிந்துகொள்ளவும் விமர்சிக்கவும் முற்பட்டவையாகும். வேறொரு வகைப் பார்வைகள் அவ்வாக்கத்தின் சமயச் சார்புநிலை பற்றிய விவாதத்தில் ஈடுபட்டவை. மேலே நோக்கியவை தவிர, அந்நூல் புலப்படுத்தும் சமூகச்சூழல் - குறிப்பாகச் சாதிநிலைகள் - பற்றிய சமகால நிலைசார்ந்த விமர்சனங்களும்கூட அக்காலப் பகுதியில் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன.

மேற்சுட்டியவாறான பலநிலைப் பார்வைகளின் ஊடாகவும் சிலப்பதிகாரம் வாசிக்கப்பட்டும் விமர்சிக்கப்பட்டும் வந்துள்ள முறைமைகளையே 'இயக்கங்களும் சிலப்பதிகாரத் திறனாய்வும்' என்ற இந்த இயல் திறனாய்வு நோக்குடன் இங்கு விவரித்துள்ளது. இதிலே மேற்படி பலநிலைப் பார்வைகளின் சமூகப் பின்புல அம்சங்கள் - அதாவது அவ்வகைப் பார்வைகளுக்கான சமூக இயக்கநிலைகள் - நமது கவனத்துக்கு இட்டுவரப்பட்டுள்ளன. மேற்படி இயக்கநிலைகள், 'இந்திய விடுதலை இயக்கம்', 'சைவசமய இயக்கம்', 'திராவிட இயக்கம்', 'சாதிய இயக்கம்' ஆகிய நால்வகையினவாக இங்கே வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் சிலப்பதிகாரத்தை வாசிக்கவும் விமர்சிக்கவும் முற்பட்ட முறைமைகள் பற்றிய தகவல்களே இவ்வியலூடாக நமது கவனத்துக்கு இட்டுவரப்பட்டுள்ளன.

இவற்றுள் 'இந்திய விடுதலை இயக்கம்' சார்ந்த பார்வையானது இந்தியத் தேசியம் என்ற உணர்வடிப்படை கொண்டதாகும். இந்நோக்குச்சார்ந்து சிலப்பதிகாரத்தை அணுகியவர்கள் அவ்வாக்கத்தை இந்தியப் பெருநிலத்தின் பண்பாட்டுமரபின் சிறப்புமிக்க இலக்கியப் பதிவுகளிலொன்றாகப் போற்றியும் விளக்கியுரைத்தும் வந்துள்ளனர். இவ்வாறு சிலப்பதிகாரத்தை இந்தியத் தேசிய இலக்கியமாக நோக்கியவர்கள் என்றவகையில் மகாகவி பாரதியார், திரு. ப. அருணாசலம், விடுதலைப் போராட்டவீரர் பொ. திரிகூடசுந்தரம், 'சிலம்புச்-செல்வர்' என்ற சிறப்புப்பெயர் தாங்கியவரான ம.பொ. சிவ-ஞானம், சாமி. சிதம்பரனார், ஆர்.கே. சண்முகம் செட்டியார், எஸ். வையாபுரிப்பிள்ளை, நா. வானமாமலை முதலிய பலர் இங்கு சுட்டப்படுகின்றனர் அவர்களுட் சிலரின் பார்வைகள் வருமாறு:

இவர்களுள் முதற்கவனத்துக்கு இட்டுவரப்படுபவர் மகாகவி பாரதியார் ஆவார். அவரே சிலப்பதிகாரத்தை முதன் முதலில் இந்தியத் தேசிய இலக்கியமாகக் கொண்டாடியவர் என்று குறிப்பிடும் டாக்டர் க. பஞ்சாங்கமவர்கள் அத்தொடர்பிலே பாரதியார் கட்டுரைகள் என்ற நூலிலிருந்து இரு சான்றுகளை இங்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

*'சாகுந்தல நாடகம், துளசிதாசர் செய்திருக்கும் இராமசரித மானசம், கம்ப ராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், ஆண்டாள் திருமொழி... இவை அனைத்துக்கும் பொதுப் பெயராவது ஆரியசம்பத்து'*

*'சிலப்பதிகாரம் பாரதம் முழுவதற்குமான பொதுச்சொத்து'*

பூம்புகார் பிரசுரமாக வெளிவந்த பாரதியார் கட்டுரைகள் என்ற நூலின் 344 - 345-ம் பக்கங்களிலிருந்து இச்சான்றுகள் இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. (பார்க்க: சிலப்பதிகாரத் திறனாய்வுகள் - ஒரு பார்வை: பக். 55-56) மேற்படி முதலாவது சான்றின் இறுதியிலிடம்பெற்றுள்ள 'ஆரியசம்பத்து' என்ற சொல்லானது 'இந்திய தேசத்தின் சொத்து' என்பதான பொருளைத் தருவதாகும்.

திரு. ப. அருணாசலமவர்களின் கருத்தாக இங்கு எடுத்துக் காட்டப்படும் செய்தி, 'சிலப்பதிகாரம் காட்டும் பண்பாடு குமரிக்கும் வேங்கடத்திற்கும் உட்பட்ட பண்பாடு மட்டுமல்ல, இமயம் முதல் குமரி வரையில் பரந்துகிடந்த ஒரு பண்பாடாகும்' என்பதாகும்.

திரு. ப. அருணாசலமவர்களின் இக்கருத்தானது அவருடைய சிலப்பதிகாரச் சிந்தனை என்ற நூலாக்கத்தினின்று (ப.2) இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது. (மேற்படி நூல் : ப.56)

ம.பொ. சிவஞானம் அவர்கள் இந்தியத் தேசிய இயக்கத்திலும் தமிழ்த்தேசிய உணர்விலும் ஈடுபாடு கொண்டவர் என்பதறிவோம். அவர் சிலப்பதிகாரத்தின் ஆசிரியரான இளங்கோ வடிகளைத் தேசிய ஒருமைப்பாட்டிற்கு வழிகாட்டிய முதற் கவிஞராகக் கண்டவராவார். இத்தொடர்பிலே அவர் கூற்றுகளான இரு சான்றுகள் இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

*'இந்தியாவில் தோன்றிய மகா கவிகளுள்ளே தேசிய ஒருமைப்பாட்டிற்கு வழிகாட்டிய முதற்கவிஞர் சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவடிகள் ஆவார்.'*

*'அடிகள் தமிழினத்தை, இந்திய சமுதாயத்தை ஒருமைப்படுத்த விரும்பிய 'தேசியவாதி'.*

இவ்விரு கூற்றுகளும் முறையே ம.பொ.சி. அவர்களின் சிலப்பதிகார ஆய்வுரை (ப.2) மற்றும் சிலப்பதிகாரத் திறனாய்வு (ப.264) ஆகிய ஆக்கங்களிலிருந்து இங்கு எடுத்தாளப்பட்டுள்ளன. (மேற்படி நூல்: ப.56) ம.பொ.சி அவர்களின் மேற்படிப் பார்வைகள் சார்ந்த மேலதிக விளக்கங்களும் இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

மேற்கூறியவாறா 'இந்திய விடுதலை இயக்கம்' சார்ந்துநின்று நோக்கியவர்களில் ஒரு சாரார். அவ்வியக்கத்தின் ஒரு முக்கிய சிந்தனைப் பிரிவான 'காந்தி இயம்' (காந்தியம்) சார்ந்தவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் மேற்படி காந்திய நோக்குநிலை நின்று சிலப்பதிகாரக் காவியத்தின் நிகழ்ச்சிகளையும் அதன் கதை மாந்தர்களின் இயங்

குநிலைகளையும் மதிப்பிட்டுள்ள முறைமைகளும் இங்கு விரிவாகவே நமது கவனத்துக்கு இட்டுவரப்பட்டுள்ளன.

‘சைவ சமய இயக்கம்’ என இங்கு குறிப்பிடப்படுவது 19-ம் நூற்றாண்டிலே இராமலிங்க அடிகளார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆகியோர் முன்வைத்த சிந்தனைகள் சார்ந்து தமிழக ஈழச் சூழல்களில் நிகழ்ந்த சைவ எழுச்சி நிலைகளையேயாகும். மேற்படிச் சிந்தனைகளைப் பேணிநின்று இயங்கியவர்களில் ஒருசாரார் தமிழரின் சைவமரபின் தொன்மைபற்றியும் பண்டைய தமிழிலக்கியங்களின் உள்ளடக்க அம்சங்கள் சமயச் சார்புநிலைகள் மற்றும் அவற்றை இயற்றிய ஆசிரியர்களின் சமயநிலைகள் ஆகியன பற்றியும் ஆழமாகச் சிந்திக்க முற்பட்டோராவர். இத்தகு சூழலில் சிலப்பதிகாரம் புரிந்து கொள்ளப்பட்ட முறைமைகள் மற்றும் அவைதொடர்பில் முன் வைக்கப்பட்டு வந்துள்ள விவாதநிலைசார்ந்த கருத்துகள் ஆகியன இங்கு விரிவாகவே பதிவாகியுள்ளன.

இச்சூழல் தொடர்பான டாக்டர் க. பஞ்சாங்கம் முன்வைத்துள்ள முக்கிய அவதானிப்பொன்று வருமாறு:

*‘இளங்கோவடிகளைச் சமணர் என்றும், பத்தினி வழிபாடு என்னும் புதியமதத்தைச் சார்ந்தவர் என்றும், சமயப் பொதுமைக் கொள்கையுடையவர் என்றும் கருதுகிற போக்கு இருந்தாலும், சைவசமய எழுச்சியின் காரணமாக சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்று காட்டுவதற்கான முயற்சியே மேலோங்கித் தெரிகிறது.’* (மேற்படிநூல்: ப.62)

இவ்வாறு குறிப்பிடும் அவர், சிலப்பதிகாரத்தின் மாற்று வடிவங்கள் என மூன்றாமியலில் குறிப்பிடப்பட்டவற்றுள் காங்கேயனின் கண்ணகி வழக்குரை, புகழேந்திப் புலவரின் கோவலன் கதை ஆகியன சைவசமய நூல்களாகவே படைக்கப்பட்டன எனவும் குறிப்பிடுகிறார். அத்துடன் சிலப்பதிகாரத்தை அச்சேற்றிய முதல்வர்களான தி.சு. சுப்புராயச் செட்டியார் உ.வே. சாமிநாதையர் ஆகியோர் அவ்வாக்கத்தைச் சைவம் சார்ந்ததாகவே கணித்துள்ளனர் என்பதையும் கவனத்துக்கு இட்டுவருகிறார். மேலும், இளங்கோவடிகளைச் சைவராகவே தரிசித்தவர்கள் என்றவகையில் பேராசிரியர் ஆ. சிலிங்களார், ந.மு. வேங்கடசாமி நாட்டார், வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை ஆகியோர் இங்கு குறிப்பிடப்படுகின்றனர்.

இவ்வாறு குறிப்பிடுமிடத்து, உ.வே.சா அவர்களுக்கு இளங்கோ அடிகளின் சமயம் தொடர்பாக ஐயம் இருந்தது என்பதையும் சுட்டத் தவறவில்லை. ‘இளங்கோ அடிகள் சைனரென்று ஐயுறுவதற்கும் இடமுண்டு’ என்பதான அவருடைய எழுத்துச் சான்றொன்றையும் இங்கு அவர் பதிவு செய்துள்ளார். பார்க்க: மேற்படி நூல்: ப.64)

மேலே நோக்கியவாறு இளங்கோவடிகளைச் சைவராகக் காணும் முயற்சிக்கு பலத்த எதிர்ப்பும் அக்காலத்தில் நிலவியுள்ளது என்பது இங்கு சுட்டப்பட்டுள்ளது. இதற்கு ஒரு சான்றான பேராசிரியர் அ. சக்கரவர்த்தி என்பாரின் கண்டனத் தொனியுடனான ஒரு குறிப்பும் இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அக்குறிப்பு வருமாறு:

*‘செல்வாக்கு நிறைந்த சிலர் தமிழ்ப் பண்பாட்டைப் புதுப்பிக்கின்றோம் என்ற பெயரில் சமணர் இயற்றிய நூல்களைச் சமணரல்லாதார் இயற்றியதாகக் காட்டுகின்றனர்... பழந்த மிழ்ப் பண்பாட்டை உண்மையிலேயே இவர்கள் புதுப்பிக்க நினைத்தால், இவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். பண்பாட்டு வளர்ச்சி என்பது ஆராய்ச்சியில் நேர்மையில்லாத போது வெறுங்கதையாகத்தான் போய்விடும்’*

பேராசிரியர் அ. சக்கரவர்த்தியவர்களின் இக்கண்டனக் குறிப்பானது அவர், ‘ஜீவபந்து’ டி.எஸ். ஸ்ரீபால் என்பாரின் ‘இளங்



டாக்டர் க. பஞ்சாங்கம்

கோவின் சமயம் யாது?’ என்ற தலைப்பிலான நூலுக்கு எழுதிய Forward இலிருந்து இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது. (பார்க்க: மேற்படி நூல்: பக். 64-65) இலக்கியத்தை அணுகுவதில் அக்காலச் சமய இயக்கங்கள் செலுத்திநின்ற செல்வாக்கைக் காட்டும் ஒரு சான்றாகப் பேராசிரியர் அ. சக்கரவர்த்தியவர்களின் மேற்படிக் குறிப்பானது திகழ்கின்றமை வெளிப்படை.

மேற்சுட்டிய பார்வைகள் தவிர ‘இளங்கோவடிகளை, ‘எச்சமயத்தையும் சாராத பொதுமை நெறியாளராகவும்’, ‘பத்தினி வழிபாட்டு நெறியினராகவும்’ காணும் முயற்சிகள் நிலவிவந்துள்ளமையும் இவ்வியலிலே விரிவாகவே எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ‘பொதுமை நெறியினர்’ என்ற பார்வையை முன் வைத்தவர்களாகப் பேராசிரியர் மு. வரதராசனார் மற்றும் சாமி. சிதம்பரனார் ஆகியோரும். ‘பத்தினி வழிபாட்டு நெறியினராகத் தரிசித்தவர்’ என ம.பொ.சி அவர்களும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளனர். (பார்க்க: மேற்படி நூல்: ப.66)

இவ்வியலிலே அடுத்து, ‘திராவிட இயக்கம்’ சார் பார்வைகள் கவனத்துக்கு இட்டுவரப்பட்டுள்ளன. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் முளைவிட்டதான ‘திராவிட இயக்க’ மானது கடவுள் நம்பிக்கை, சடங்காசாரங்கள் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வு நிலைகள் முதலியவற்றுக்கு எதிரான

தளத்தில் முளைவிட்டதென்பதும் அவ்வகையில் இது 'பார்ப் பனிய எதிர்ப்பு', 'வடமொழிசார் பண்பாட்டுக் கோலங்கள் மீதான எதிர்ப்பு' முதலியவற்றை முன்வைத்து இயங்கிநின் றது என்பதும் பொதுவாக நாமறிந்த செய்திகளேயாகும். இவ் வாறான இவ்வியக்கம் சிலப்பதிகாரத்தை அணுகிய முறை மைகள் இரு முக்கிய நோக்குநிலைகளில் அமைந்தது என் பதே இங்கு எடுத்துரைக்கப்பட்ட முக்கிய செய்தியாகும். இவற்றுள் முதலாவது நோக்குநிலையானது அந்நூலை, 'ஆரியக்கோட்பாட்டு நூல்' எனச்சுட்டிப் புறக்கணிக்கும் முறைமையிலமைந்ததாகும். இரண்டாவது நோக்குநிலையா னது மேற்சுட்டியதற்கு மாறாக, அதனைத் 'தமிழ்ப் பண் பாட்டு நூல்' என்ற பார்வையினூடாகப் பேணிக்கொள்ள முற் பட்டதாகும்.

மேற்படி முதலாவது நோக்குநிலைசார் அணுகுமுறையை மேற்கொண்டவர்களில் முக்கியமானவர் மேற்படி திராவிட இயக்கத்தின் தலைவராகத் திகழ்ந்தவரும் 'பெரியார்' என்ற சிறப்புப் பெயரால் சுட்டப்படும் ஈ.வே. ராமசாமி அவர்களா வார். இவர் 'பார்ப்பனிய எதிர்ப்பு' மற்றும் 'ஆரியப் பண்பாட் டெதிர்ப்பு' ஆகிய கொள்கைகளினடிப்படையில் பக்தியிலக் கியங்கள், பெரியபுராணம், கம்பராமாயணம் முதலியவற் றைப் புறக்கணித்தவர் என்பதும் 'கம்பராமாயண எரிப்பு' முயற்சியிலீடுபட்டவர் என்பதுங்கூட பொதுவாக நமறிந்த செய்திகளேயாம். சிலப்பதிகாரம் தொடர்பாகவும் அவர் இதே வகையான நோக்குநிலையைத்தான் கைக்கொண்டிருந்தார் என்பது இங்கு சான்றுகளுடன் சுட்டப்பட்டுள்ளது. இவ்வகை யில் பெரியாருடைய கூற்றுகளாக இங்கு எடுத்துக்காட்டப்பட் டுள்ள இரு சான்றுகள் வருமாறு:

*'சிலப்பதிகாரமானது ஆரியத்தைப் பரப்புகிற ஒரு நூலென் பது அல்லாமல் வேறு என்ன? ஆரம்பம் முதல் இறுதிவரை ஆரியந்தானே காட்சியளிக்கிறது'*

*'கண்ணகி என்று கூறப்பட்டிருக்கிற பெண்ணுக்குச் சிறிதா வது அறிவு, தன்மானம் இருந்தது என்று யாராவது ஒப்புக் கொள்ள முடியுமா?'*

இவ்விரு கூற்றுகளும் திரு. வே. ஆனைமுத்து அவர்களின் பெரியார் பற்றிய தொகுப்பு நூலிலிருந்து (பக்: 1264) இங்கு எடுத்தாளப்பட்டுள்ளன. (பார்க்க: மேற்படி நூல்: ப.70)

பெரியாரின் மேற்படிக் கூற்றுகளுக்கு இங்கு விளக்கம் அவ சியமில்லை. அவரின் நோக்குநிலைகளை அடியொற்றிவர்க ளில் ஒருவரான வெ.ச. சுப்பிரமணிய ஆச்சாரி என்பார் எழு திய 'சிலப்பதிகாரமும் ஆரியக்கற்பனையும்' என்ற நூல் பற் றிய குறிப்புகளும் இங்கு சுட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான பெரியார் மற்றும் அவரை அடியொற்றியோரின் நோக்குநிலையானது திராவிட இயக்கம் சார்புடைய சிந்தனை யாளர்கள் பலராலேயே அக்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது மட்டுமன்றிப் பலர் அதனை மறுக்கவும் முற்பட்டனர் என்பதும் இங்கு கவனத் துக்கு இட்டுவரப்பட்டுள்ளது. குறிப்பாக, சாமி சிதம்பரனார் கா. அப்பாத்துரை, பேராசிரியர் இலக்குவனார், அறிஞர் அண்ணா முதலிய பலர் பெரியாருடைய பார்வையை மறுத லித்துள்ளனர் என்பது சுட்டப்பட்டுள்ளது. 'பெரியார், சிலம்பை சாடுகின்ற தன்மையை 'ஆரியமாயைக்கு அப்பாற் பட்ட மாயை' என்றும், 'இனத்தை எதிர்க்கும் இனக்குரல்' என் றும் கா. அப்பாத்துரையார் எழுதினார்' என்ற தகவலும் இங்கு பதிவாகியுள்ளது. (பார்க்க: மேற்படி நூல்: ப.71)

அடுத்து, 'சாதிய இயக்கம்சார் பார்வைகள்' தொடர்பாக...

தமிழகத்தினதும் அதனை உள்ளடக்கியதான இந்தியப் பெருநிலத்தினதும் சமூகக் கட்டமைப்பானது பல்வேறு சாதிக ளையும் இனக்குழுக்களையும் கொண்டதாக இயங்கிவருவது என்பது பொதுவாக நாமறிந்த செய்தியேயாம். ஐரோப்பிய ராட்சிச் சூழலிலே - குறிப்பாக, 19-ம் நூற்றாண்டின் கல்விச் சூழல், தொழில்களின் வளர்ச்சி, இடப்பெயர்வுகள் முதலிய வற்றால் மேற்படி பல்வேறு சமூகப் பிரிவுகளும் தத்தம் அடையாளங்களைப் பற்றி ஆழமாகச் சிந்திப்பதற்கும் விவா திப்பதற்குமான தேவைகள் ஏற்பட்டன. இவற்றின் தொடர்ச்சி யாகச் சாதி அடையாளங்களுடனான இயக்கங்கள் பல அம் மண்ணில் உருவாயின. இவ்வாறு உருவாகிவந்த இயக்கச் சூழல்கள் சார்ந்த உணர்வோட்டங்களுடன் சிலப்பதிகாரத்தை வாசிக்க முற்பட்டோரில் ஒருசாராரின் வாசிப்பு மற்றும் விமர்ச னம் ஆகிய வகைசார் வெளிப்பாடுகளே இவ்வியலிலே 'சாதிய இயக்கம் சார் பார்வைகள்' என்ற வகையில் நமது கவனத்துக்கு இட்டுவரப்பட்டுள்ளன.

சிலப்பதிகாரக் கதைமாந்தர் பல்வேறு சாதிகளைச் சார்ந்தோ ராவர். முக்கிய கதைமாந்தரான கண்ணகி மற்றும் கோவலன் ஆகிய இருவரும் வணிகர் சமூகத்தினராவர். இவர்கள் தவிர அரசர்கள் பார்ப்பனர்கள் முதலான வேறுபல சமூகங்கள்சார் கதைமாந்தர்களும் இதில் இடம்பெற்றுள்ளனர். 'பொற்கொல் லர்' என்ற சமூகம் சார்ந்த ஒருவர் அதே சமூகப் பெயருடன் 'பொற்கொல்லன்' என்ற சாதிச் சுட்டுடன் இக்கதையில் இடம் பெற்றுள்ளார். மேற்சுட்டிவாறான பல்வேறு சமூகம்சார்ந்த கதைமாந்தரும் கடந்த நூற்றாண்டின் மேற்சுட்டிய 'சாதிய இயக்கம்சார் பார்வைகள்' ஊடாக நோக்கப்பட்டுள்ள நிலை களே இங்கு நமது கவனத்துக்கு இட்டுவரப்பட்டுள்ளன.

மேற்சுட்டியவாறான வெவ்வேறு சாதிவகை சார்ந்தோர்பற்றிய பார்வைகளாக வெளிப்பட்டவற்றுள் முக்கியமானவையாக இங்கு கவனத்துக்கு முன்வைக்கப்பட்டவை 'பார்ப்பனக் கதைமாந்தர்' மற்றும் பொற்கொல்லன் ஆகியவர்களை மையப்படுத்தி வெளிப்படுத்தப்பட்ட பார்வைகளேயாகும். இவற்றுள் பார்ப்பனக் கதைமாந்தர் பற்றியதாக வெளிப்பட் டவை முக்கிய பார்வையொன்று அச்சமூகஞ்சார் கதைமாந் தரை 'குறித்த ஒரு சமூகக் குழுவாக'த் தனிவகையில் அடை யாளம் சுட்டும் வகையில் அமைந்ததாகும். இப்பார்வையா னது அக்கதைமாந்தர்கள் அவ்வாக்கத்தில் படைக்கப்பட்ட மைக்கான காரணத்தை ஊகிக்கும் முயற்சியாகவும் அமைந் துள்ளது என்பதே இங்கு கவனத்துக்கு இட்டுவரப்பட்ட முக் கிய செய்தியாகும்.

சிலப்பதிகாரத்தின் கதைமாந்தருள் பார்ப்பனக் கதைமாந்த ராக இங்கு நிற்பவர்கள் நால்வர். தேவந்தி, மாங்காட்டு மறையோன், கோசிகமாணி, மாடல மறையோன் ஆகியோரா வர். இவர்களுள் தேவந்தி கதைத் தலைவியான கண்ணகி யின் நெருங்கிய தோழியாவாள். மாங்காட்டு மறையோன் என் பான் வழிகூறுபவனாகவும் வைதிகமதப் பெருமை பேசுபவ

னாகவும் இயங்கி நிற்பவன். கோசிகமாணி என்பான் மாதவி யின் மடலைக் கோவலனிடம் கையளிப்பவன். மாடல மறை-யோன் பெருஞ் சிறப்புகளுக்குரியவனாகவும் கோவலனால் வணங்கப்படுபவனாகவும் இதில் காட்சிப்படுத்தப்படுபவன். இவ்வாறான இந்நால்வரையும் 'அந்தணப் பாத்திரங்கள்' எனத் தனிவகையாக அடையாளப்படுத்தி விளக்கம் தர முற் பட்டவர், மேலே எம்மால் முன்னரே நோக்கப்பட்டவரான ம.பொ. சிவஞானம் ஆவார். அவர் தாம் எழுதிய சிலப்பதி காரத் திறனாய்வு என்ற நூலிலேயே இவ்வாறான அடையா ளப்படுத்தலையும் விளக்க முயற்சியையும் மேற்கொண்டுள் ளார். அவருடைய விளக்கமாக இங்கு எடுத்துக்காட்டப்பட் டுள்ள குறிப்பொன்று வருமாறு:

'நால் வருணப் பாகுபாட்டில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் மனப்பான்மை இடைக்காலத்தில் 'உரம்' ஏறியது என்றாலும் சிலப்பதிகாரக் காலத்திலேயே இந்தக் குறைபாடு தலையெ டுத்துவிடவே, இளங்கோ அடிகள் சங்ககாலத்தில் நிலவிய, வருண ஒற்றுமையை வற்புறுத்த இவ்வாறு படைத்துள்ளார்.' (பார்க்க: மேற்படி நூல்: ப.79)

ம.பொ.சி. அவர்களின் இக்குறிப்பானது அவரது சிலப்பதிகா ரத் திறனாய்வு என்ற நூலின் 88 - 89-ம் பக்கங்களிலிருந்து எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரம் கதைமாந்தரை தோன்றிய காலச்சூழலிலி ருந்து வெளியே இட்டுவந்து, அவர்களின் இயங்குநிலைக ளுக்கு 20-ம் நூற்றாண்டு இயக்கச் சூழல்களின் தேவைகருதி வலிந்து தரப்பட்ட விளக்கமாக இக்கூற்று அமைந்துள்ளமை வெளிப்படை.

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் 'பொற்கொல்லன்' என்ற பாத் திரமானது 'தீவினையாளன்' என்ற கணிப்புக்குரியதாகும். கதைத் தலைவனான கோவலன் விற்பனைக்குக் கொணர்ந்த தான கண்ணகியின் காற்சிலம்பை, 'பாண்டிமாதேவின் திருடு போன காற்சிலம்பு' எனப் பொய் கூறியதன்மூலம் கோவல-னைத் திருடனாகப் பாண்டிய மன்னனுக்கு அடையாளங் காட்டியவன் அவனே. அவ்வகையில் அவனே கோவலன் கொலையுண்டு இறப்பதற்கான மூல காரணன் ஆகிறான். இளங்கோவடிகள் இப்பாத்திரத்துக்கு கோவலன், மாசாத்து-வன் என்பதுபோல தனி அடையாளமான ஒரு பெயரை வழங் காமல் அவனுடைய தொழில்சார்ந்த அடையாளமான 'பொற் கொல்லன்' என்ற பெயரை வழங்கியுள்ளமையே இங்கு 'சாதிய உணர்வுநிலை' சார் பார்வையிற் கவனத்தைப் பெற் றுள்ள பிரச்சினையம்சமாகும்.

குறிப்பாக இளங்கோவடிகளின் இப்பாத்திரத்தின் தீய குணாம்சத்தை அடையாளப்படுத்தும் வகையில் அவனுக்கு அடைமொழிகளாக வழங்கியுள்ள 'கூற்றத் தூதன்', 'பொய்த் தொழிற் கொல்லன், கருந்தொழிற் கொல்லன்' ஆகிய தொடர்கள் பொற்கொல்லர் சமூகத்தினரையே பழிப்பனவாக அமைந்துள்ளன என அச்சாதியினருள் ஒருசாரார் கருதமுற் பட்ட நிலையானது சிலப்பதிகாரம் மீதான வெறுப்பாக வெளிப்படத் தொடங்கியது.

இவ்வாறான வெறுப்புணர்வை மேலும் தூண்டக்கூடிய வகை யில் சிலப்பதிகாரத்தில் இன்னொரு குறிப்பும் இடம்பெற்றி ருந்தது. 'வெற்றிவேல் செழியன் என்ற பாண்டியமன்னன் பத் தினித் தெய்வத்திற்குப் பொற்கொல்லர் ஆயிரவரைப் பலி யிட்டு வழிபாடியற்றினான்' என்பதே அக்குறிப்பாகும். இக்கு றிப்பு சிலப்பதிகாரத்தின் 'நீர்ப்படைக் காதை'யின் 127-130-ம் அடிகளில் இடம்பெற்றதாகும். இச்செய்தியானது பொற் கொல்லர் சமூகத்தினரின் சுயமரியாதையையே பாதிப்பதாக உணரப்பட்டது.

இவ்வாறாக 'பொற்கொல்லன் என்ற கதைமாந்தனின் பெயர் சுட்டப்பட்டுள்ள முறைமைகள்' மற்றும் 'பொற்கொல்லர் பலி யீடு' என்ற செய்தி ஆகியன பொற்கொல்லர் சமூகத்தின் சுய மரியாதையைப் பாதிக்கும் வகையிலமைந்தவை என்பதாக அச்சமுதாயம் சார்ந்தோருள் ஒருசாரார் உணர முற்பட்டனர். அவ்வாறான சூழ்நிலைகளில் அவர்களால், 'சிலப்பதிகாரம் வெறுத்தொதுக்கப்படலாகாது' என்பதற்காக அச்சமூகத்தி னரை அமைதிப்படுத்த வேண்டிய தேவை 20-ம் நூற்றாண் டின் சிலப்பதிகாரச் சிந்தனையாளர்கள் பலருக்கும் ஏற்பட்டி ருந்தது. இவ்வாறான நிலையில் அச்சிந்தனையாளர்கள் சிலப்பதிகாரத்திலிடம்பெற்றுள்ள அந்நிகழ்வுகளுக்கு காரண காரிய நிலைகளிலான விளக்கங்கள் தர முயன்றுள்ளனர். இவர்களுள் படைப்பாளிகளாகத் திகழ்ந்த சிலர், 'பொற் கொல்ல'னின் பாத்திரப் பண்புக்கு இழுக்கு ஏற்படாதவகை யில் கதை நிகழ்வில் மாற்றங்களை மேற்கொண்டுள்ளனர்.

காரணகாரிய விளக்கந்தர முற்பட்டோரில் முக்கியமானவராக இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளவர் மேற்சுட்டிய ம.பொ.சி அவர்களாவார். அவர், தமது சிலப்பதிகாரத் திறனாய்வு என்ற நூலிலே 'சிலப்பதிகாரமானது கற்பனையுங்கலந்த காவியம்' என்பது உட்பட்ட சில விளக்கங்களைத் தந்ததுடன், 'பொற்கொல்லர் ஆயிரவர் பலியிடப்பட்டதான குறிப்பானது ஒரு இடைச்செருகல்' என்ற குறிப்பையும் முன்வைத்து, அச்ச மூகத்தினரை அமைதிப்படுத்த முயன்றுள்ளார். (பார்க்க: மேற்படி நூல்: பக். 82 - 83.) கதை நிகழ்வுகளில் மாற்றங் கள் செய்தவர்களாக இங்கு எடுத்துக்காட்டப்படுபவர்களில் முக்கியமானவர் கலைஞர் மு. கருணாநிதியவர்களாவார். அவர் தமது சிலப்பதிகாரம் - நாடகக் காப்பியம் என்ற ஆக் கத்தில் 'பாண்டிமா தேவியின் சிலம்பைத் திருடியது அரண் மனை அதிகாரி' என்பதாகக் கதைநிகழ்வில் மாற்றம் செய்தி ருந்தார் என்பது இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இவ்வா றான மாற்றமானது அவரின் அரசியல் நிலைப்பாடு சார்ந்த தாகும்.

டாக்டர் க. பஞ்சாங்கம் அவர்களின் சிலப்பதிகாரத் திறனாய் வுகள் - ஒரு பார்வை என்ற நூலின் 'இயக்கங்களும் சிலப்ப திகாரத் திறனாய்வும்' என்ற தலைப்பிலான நான்காம் இய லில் இடம்பெற்றுள்ள பரந்துபட்ட தகவல்களின் சாராம்சமான சில செய்திகளே இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அடுத்து இந்நூலின் 'இருபதாம் நூற்றாண்டுத் திறனாய்வும் சிலப்பதிகாரமும்' என்ற தலைப்பிலான ஐந்தாம் இயலை நோக்குவோம்.

(தொடரும்)



subramanian.n@thaiveedu.com

# வீணாய்ப் போனவன்



**அகரன்**

கோலாலம்பூர் நகர மத்தியிலிருந்து கிளாங் நோக்கி செல் லும் இரண்டாம் இலக்க KTM மின் வண்டியில் ஸ்ரீ சத்தியா என்ற தரிப்பிடம் ஆறாவதாக இருக்கிறது. 120 km வேகத் தில் அந்த வண்டி இயங்கும். அந்த வண்டியில் தான் பத்து நாட்களின் முன்பு ஸ்ரீ சத்தியா என்ற பகுதிக்கு நந்தன் வந் திருந்தான்.

இலங்கையில் இருந்து அவசரமாக வெளியேறி நாற்பத்தி ஐந்தாவது நாள் மலேசியப் போலீசாருக்குப் பயந்து ஓடிக் கொண்டிருந்த நந்தன் எங்கு செல்வது என்று தெரியாமல் முழித்தான். ஓடிய ஓட்டத்தில் நெஞ்சு முதுகோடு ஒட்டிவிடும் போல் இருந்தது. தன் காற்சட்டைக்குள் கடிதம் இருக்கிறதா என்று சரிபார்த்தான். தன்னை யாரும் பார்க்கிறார்களா என்று அவதானித்தவன் தண்டவாளத்தருகே குந்தி இருந்து சுடு மூச்சை இழுத்து விட்டான். கண்ணுக்கெட்டும் தூரத்தில் ஸ்ரீ சத்யா நிலையம் தெரியவும் அதை நோக்கி நடக்கலானான். அப்போது அந்தச் சம்பவம் நடந்திற்று.

அன்று எப்போது விடியும் என்று இருந்தது. விடிந்ததும் எப்போது முடியும் என்றிருந்தது. நந்தன் வேலை முடிந்ததும் மேசையில் சிந்தி இருந்த இரத்தப் பிசுறுகளைக் கையால் வழித்து அந்த மேசையில் ஒரு கடிதம் எழுதக்கூடிய இடத் தைத் தயார் செய்தான். மூலையில் கிடந்த துணியால் அங்கே சிந்தி இருந்த சதைத் துணுக்குகளைத் துடைத்து மாமிசமற்ற இடமாக மாற்ற முயற்சித்தான். அதிகாலை

இரண்டு மணியிலிருந்து வெட்டிய கால், நெஞ்சு, இறக்கை, தொடை என்று ஒவ்வொரு துண்டுகளையும் பிரித்து தகுந்த பைகளில் இட்டு அனுப்ப வேண்டும். மறுநாள் மதியம் வரை எண்ணி...எண்ணி... அவன் கண்களும் உடலும் சோர்ந்து போய் இருந்தது. உடல் எங்கும் குருதி தெறித்து உடை ஒரு சிவப்பு ஓவியமாகி அவனுக்கு மாமிச அழகை வழங் கியது.

அவன் இதே மேசையில் தான் தூங்கவும் வேண்டும். அருகே இருக்கும் பைதான் அவன் உடைமைகள். அவற்றை ஒரு பொலித்தீன் பையால் சுற்றி இருந்ததால் இரத்தக்கறைகளில் இருந்து அவற்றை பாதுகாக்க முடிந்திருந்தது.

தன் உடைகளை மாற்றினான் இல்லை. தன்னிடம் இருந்த 3310 நோக்கியா கைபேசியைப் பார்த்தான். ஒருவரும் அழைத்த பாடில்லை. அம்மம்மாவை நினைத்தபோது அவ னுக்கு வெப்பியாரம் கூடிக்கொண்டே வந்தது.

சிவந்திருந்த கண்களும் அரும்பி இருந்த பூனை மீசையும், கன்னத்தில் கோடு போட்டிருந்த குருதியும் அவனது முகத்தை அமானுசகால யுத்த வீரன் போல காட்டிற்று.

சரவணன் அண்ணனிடம் ‘ஒரு ஒற்றையும் பேனையும் தருவீங் களா?’ என்றான். அவருக்கு அவன் மொழி புரிந்ததாகத் தெரியவில்லை.

‘என்னப்பா... வா... வா... சாப்பிடலாம். மூஞ்சியக் கழுவிடு. தோ... முஞ்சி எல்லாம் ரத்தச் சகதி’ என்றார்.

அவனோ அழுகை வந்தவனாக ‘அண்ணா எனக்குக் கடிதம் எழுத ஒற்றையும் பேனையும் வேணும்’ என்றான்.

‘என்னப்பா தாள் வேணுங்கிறியா? சிங்களம் பேசாதப்பா நமக்கு ஒன்னும் புரியாது. தமிழ்லயே பேசிடு...’ என்று சரவ ணன் கடவாயில் அரைச் சிரிப்போடு தன் பை இருந்த இடம் நோக்கிச் சென்றான்.

நந்தனை உத்துப் பார்த்த சரவணன் தாள்களும் பேனை ஒன் றையும் கொடுத்தபடி.., ‘இங்கே வாப்பா. என்ன மூஞ்சி சரி யில்ல? ஒன்னும் யோசிக்காத நாம இருக்கிறம்ல்ல’ என்றான்.

இந்த வார்த்தை முடிந்த போது நந்தனின் முதுகைத்தான் சர வணன் பார்த்தான். அவனது கண்ணில் இருந்து நீர் பொல பொல என்று கொட்டியபடி இருந்தது. அதை சரவணனுக்குக் காட்ட அவன் விரும்பவில்லை.

‘சரவணா விட்டுரு... அவங்க ஊர்ல சண்டேயாமல்ல... அப் புறம் பேசிக்கலாம் விட்டிரு’ என்றான் அமீர்.

‘நந்தன் தமிழா? சிங்களமா?’ என்று கண்ணப்பன் அமீரைப் பார்த்து கேட்டான்.

‘ஏ... லூசுப்பயலே...’ என்று கண்ணப்பனை விழித்த அமீர் ‘சிங்களவங்க தமிழ் பேச மாட்டாங்க... அவங்க பெயர் வித் தியாசமா இருக்கும்... சமரசிங்க... குணசிங்க... நம்ம ஊருல அதிக தமிழர் இருக்கிறாங்க என்ற பயத்தில்தான் அவங்க அங்க வாழுற தமிழரை எதிர்க்கிறாங்க...’ என்று தன் அரசி யல் அறிவைப் பரப்பிவிட்டபடி இருந்தார்.

கண்ணப்பன் இடையில் குறுக்கிட்டு ‘எப்படி அமீரு எல்லாம் அறிந்து வெச்சிருக்கீங்க?’ என்றான்.

நந்தனை அவர்கள் உரையாடல் வந்தடையாமல் கதவைச் சாத்தினான்.

மேசையில் சென்றிருந்து அம்மம்மாவிற்குக் கடிதம் எழுத ஆரம்பித்தான்.

நந்தன் இலங்கையிலிருந்து மலேசியா வந்து சேர்ந்து 45 நாட்கள் கடந்து விட்டிருந்தது. இலங்கையில் உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு பல்கலைக்கழகத் தெரிவிற்காக அவன் காத்திருந்தான்.

அவனும் அவனது அம்மம்மாவும் நாகன்குளம் என்ற கிரா மத்தில் இருந்தார்கள். வன்னி மாவட்டத்தில் இருந்த 800 குளங்களில் வவுனியாவிற்கும் மன்னாருக்கும் இடையில் அரச பதிவுகளில் இல்லாமல் போன குளம் நாகன்குளம். அவனைப் பள்ளிக்கும், கல்வி நிலையங்களுக்கும் சைக்கி ளில் ஏற்றிச் செல்லும் நண்பன் முதல் நாள் இரவு சுட்டுக் கொல்லப்பட்டதால் அவசர அவசரமாக அம்மம்மா அவனை மலேசியாவுக்கு அனுப்பி வைத்தார். 30 நாட்கள் சுற்றுலா விசாவில் சென்றவனுக்கு அவனைப் போலவே அலைந்து திரிந்த சில இளைஞர்கள் கிடைத்தார்கள். அவர்கள் மூலம் பெற்ற வேலை தான் கோலாலம்பூர் மின் வண்டி நிலையத் திலிருந்து மேற்குப் பக்கமாகச் செல்லும் இடத்தில் முப்பது நிமிடங்களில் ஸ்ரீ சத்யா என்ற நிறுத்தத்தின் அருகே இருக் கின்ற ‘கோழி கொலை செய்யும் தொழிலகம்’ அதன் வெளிப் புறம் மிக அழகானது. வெள்ளைப் பூச்சுப் பூசி அலங்கரிக் கப்பட்டிருந்தது. உள்ளே இவன் சென்றபோது ஏற்கனவே ஐந்து தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் வேலை செய்து கொண்டி ருந்தார்கள். ஒவ்வொரு நாளும் இரவு 12 மணிக்கு பார ஊர் திகளில் ஆயிரத்தில் இருந்து ஆயிரத்து ஐநூறு கோழிகள் கொண்டுவரப்படும். அத்தனை கோழிகளையும் இரவிரவாக வெட்டி அதிகாலை 4 மணியிலிருந்து வருகின்ற வண்டிகளில் கோலாலம்பூரில் உள்ள உணவகங்களுக்கு அனுப்புவது தான் அவர்களுடைய தொழில். அந்த நிறுவனம் ஒரு மலேசி யத் தமிழருக்குச் சொந்தமானது. அதனால் தன் நிறுவனத் தில் வேலை செய்பவர்களுக்கு அவர் தாராள மனதுடன் இருந்தார். அவர்கள் அனைவருமே அந்த இடத்திலேயே வேலை செய்து அங்கே வாழ அவர் அனுமதி வழங்கினார். மீதிக் கோழித்துண்டுகளை வைத்து அதற்குள் தண்ணீரும் தூளும் உப்பும் இட்டு அவித்து வெள்ளைச்சோற்றுடன் மதி யமும், இரவும் உணவு உண்ணவும் அவர்கள் அனுமதிக்கப் பட்டார்கள்.

மலேசியாவில் நிற்பதற்கான அனுமதி நாட்கள் முடிந்த நிலையில் பெருங்கொடையாக 500 வெள்ளிப் பணத்திற்கு நந்தனுக்குக் கிடைத்த வேலை பெரும் கொடைதான். ‘இலங்கை தமிழருக்கு உதவும் நல்ல மனதிலேயே அந்த வேலையை வழங்குவதாக அந்த நிறுவன முகாமையாளர் தன் நிறுவன அதிபரின் நல் இயல்புகளைக் கூறிக்கொண் டார். ‘ஊரில் நடைபெறும் யுத்தத்தின் லாபத்தைத் தான் அனுபவிப்பதாக நந்தனுக்கு வெடுக்கென பதறிற்று மூளை.

நண்பனின் கொலையால் துவண்டு போயிருந்த அவன் மலே சியாவில் வேறு வழியற்று ஆயிரம் கோழிகளைக் கொலை செய்யும் தொழிலில் ஈடுபடுவது உயிர் வாழ்தலுக்கு அவசிய

மாயிற்று.

கொலையும் கொல்லுதலும் உயிர்களின் நிலைகளா? என்று அவன் மனம் உளற ஆரம்பித்தது. தனது 18-வது வயதிலேயே தனித்து விடப்பட்ட உணர்வும், சூனியமான எதிர்காலமும் சுழியில் சிக்கிய இலைபோல் அவனை ஆக்கி இருந்தது. 'எப்படியாவது இங்கிருந்து வெளியேறிவிட வேண்டும்' தனக்குத்தானே கூறிக்கொண்டிருந்தான். ஆனால் எங்கு செல்வது? எப்படிச் செல்வது? என்று ஒரு ஒளியும் அவனுக்குத் தெரியவில்லை. வீசா இல்லாததால் மலேசியப் பொலிசார் கைது செய்தால் எதிர்காலம் மேலும் கேள்விக்குறியாகிவிடும். அவன் மலேசியா வந்ததும் ஒரே ஒருமுறை அயல் வீட்டுக்காரியான சுமதி அக்காவின் உதவியோடு தன் அம்மாவிடம் பேசி இருக்கிறான். அவள் முதன் முதல் தொலைபேசி பேசுவதால் அவன் பேசுவதைக் கேட்காது, 'பக்குவமாய் இருந்திடப்பு... பக்குவமா இருந்திடப்பு...' என்று மட்டுமே சொல்லிக் கொண்டிருந்தாள். அவன் பேசியதை அவள் கேட்கவில்லை.

அம்மம்மாவின் நினைவுகளோடு மலேசியாவில் தோன்றிய நிலவைப் பார்த்துப் பேசிவிட்டுத் தூங்கிப் போனான். அவன் தூக்கமெங்கும் கோழிகள் கழுத்தை அமீரும், காசீமும் வெட்டும்போது எழும் ஒலி ஒலித்துக்கொண்டே இருந்தது. 'பிறப்பு-மரணம் இதற்கிடையில் நிகழும் மரணப் பயணம் வாழ்க்கை' என்று தனக்கு மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டான். நேற்று மாலை அவனது நண்பன் ஒருவன் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு வந்து விட்டதாகவும் அவன் மாவட்டத்தில் முதல் மதிப்பெண் பெற்றிருக்கிறான் என்றும் செய்தி அனுப்பி இருந்தான்.

13 வருடங்கள் அரைப் பசியோடும், அம்மம்மாவின் உழைப்பிலும் அவள் மரக்கறி, தேங்காய் வித்து 'எப்படியும் என் ராசா படிச்சு கம்பஸ் போய்விடு.' என்று தினமும் முட்டையிட்ட கோழிபோல் கொக்கரித்ததற்குப் பலன் கிடைத்துள்ளது. ஆனால் மீண்டும் இலங்கைக்கு எப்படி செல்வது? அதற்கான பணம் அவனிடமில்லை. தன் நகைகள் எல்லாவற்றையும் விற்று அனுப்பி வைத்தாள். மீண்டும் செல்வதை அனுமதிப்பாளா? என்று இரவுபூராவும் கலங்கும் நிலையில் வேலை செய்து கொண்டிருந்தான். தன் நிலையையும், எதிர்காலத்தையும் அவளுக்கு ஒரு கடிதம் மூலம் தெரிவித்து எப்படியாவது மீண்டும் சென்றுவிட வேண்டும் என்று முடிவெடுத்தான்.

*என் அம்மம்மாவிற்கு,*

*அம்மம்மா நான் ஒரு மோசமான நிலையில் இருந்து உனக்கு இதை எழுதுகிறேன். எப்படியாவது இங்கிருந்து என்னை மீட்டு விடுவதற்கு ஏதாவது செய். நீ காலம் காலமாகச் சொன்ன கம்பசுக்கு நான் தெரிவு செய்யப்பட்டு விட்டேன். எப்படியாவது இலங்கைக்கு மீண்டும் நான் வந்துவிட வேண்டும்.*

*என் உடலெல்லாம் எப்போதும் கோழி ரத்தம் தோய்ந்திருக்கிறது. நீ நினைத்துப் பார், ஒருநாள் கூட உன்னால் இந்த இடத்தில் நிற்க முடியாது. ஒவ்வொரு இரவும் ஆயிரத்து ஐந்நூறு கோழிகளை வெட்டும் போது அவற்றின் மரண ஒலியைக் கேட்டபடி இரவிரவாக எப்படி உன் பேரன் இருக்க முடியும்? என்று சிந்தித்துப் பார். பகலில்தான் தூங்க வேண்டும். பகலில் என் கனவெங்கும் கோழிகளின் சத்தமாகவே இருக்கிறது. இங்கு வேலை செய்பவர்கள் 15, 10, 5 வருடங்களாகத் தமிழகத்தில் இருந்து வந்து வேலை செய்கிறார்கள். தமிழகக் கிராமங்களில் வாழும் தங்கள் ஏழைக் குடும்பங்களுக்காக அவர்கள் தங்கள் இளம் காலங்களையெல்லாம் இந்த நிறுவனத்துக்குள்ளே செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு எந்த இன்பமும் இல்லை. நீ சிந்தித்துப் பார் எனக்கு 18 வயது. 10 வருடங்கள் இந்த நிலையில் நான் எப்படி இருக்க முடியும்?*

*அம்மம்மா என் எதிர்காலத்தை நினைத்தால் எனக்கு அழுகை அழுகையாக வருகிறது. எப்படியாவது நான் மீண்டு வந்து பல்கலைக்கழகத்தில் படித்தேயாக வேண்டும். என்னைவிட நீதானே நான் பல்கலைக்கழகம் சென்று பெரிய படிப்பாளியாக வரவேண்டும் என்று ஆசைப்பட்டாய்?*

*இப்போது அங்கு வரவேண்டாம் என்று மட்டும் சொல்லாதே. நான் இனி யாருடனும் தொடர்போ, விடுதலை - சுதந்திரம் என்றோ பேசமாட்டேன். ஒரு சினேகிதப் பெடியள்ளோடும் சேரமாட்டேன் என்று உனக்குச் சத்தியம் செய்கிறேன்.*

*ஒரு மண்புழு போல மறைந்திருந்து எப்படியாவது பட்டம் பெற்று உன்னைக் கவனமாகப் பார்ப்பேன்.*

*அப்படி இருந்தும் என்னில் உனக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் நான் வளவை விட்டு எங்கும் போகாமல் வீட்டிலேயே தோட்டம் செய்து வாழ்ந்துடுவேன். என்னால் இங்கு கடக்கும் ஒவ்வொரு இரவும் அச்சமாக இருக்கிறது.*

*நேற்றுப் பசிக் கொடுமையால் இந்தக் கட்டடத்தின் அருகே இருக்கும் மலாய்க்காரனின் சாப்பாட்டுக்கடையில் இரண்டு ரொட்டி வேண்டிச் சாப்பிடச் சென்றேன். நான் தனியே இருந்து சாப்பிட ஆரம்பித்தபோது தமிழர்கள் போன்ற தோற்றத்தோடு தலையெங்கும் விதவிதமான சாயங்களைப் பூசியபடி நான்கு வண்ணத்தடியன்கள் என்னைச் சுற்றி அமர்ந்தார்கள். எனது ரொட்டியை என்னைக் கேட்காது பிய்த்து அவர்கள் சாப்பிட்டார்கள். 'இளைய தளபதியின் பாட்டு ஒன்றைப் பாடுடா வீணாப் போனவனே!' என்றார்கள். எனக்குக் கோபமும் கண்ணீரும் சேர்ந்து வந்து விட்டது. எனது ரொட்டியைச் சாப்பிட்டுக் கொண்டே என்னைத் திட்டியபடி இருந்தனர். நான் என்ன செய்வேன்? அவர்கள் அடிக்கடி 'வீணாப் போனவனே' என்று சொன்ன அந்தக் கொடிய வார்த்தை உண்மை என்றே நினைக்க ஆரம்பித்துவிட்டேன். ஆனாலும் அவர்கள் வாயில் துப்பாக்கியால் சுட வேண்டும் போல் இருந்தது.*

*சொந்த மொழி பேசுபவனின் அடக்குமுறையைவிட வேற்று மொழி பேசுபவனின் அடக்குமுறை ஒன்றும் வலியது அல்ல அம்மம்மா. நேற்று கிட்டத்தட்ட அவர்கள் என்னைத் தாக்கும் நிலைக்கு வந்திருந்தார்கள். என்னிடம் பணம் இருக்கிறதா என்று இலங்கையில் ராணுவம் குண்டு இருக்கிறதா என்று உடலைத் தடவிப் பார்ப்பதைப் போலத் தடவிப் பார்த்தார்கள். நான் ஒரு பட்டமரம் போல் நின்று கொண்டிருந்தேன். இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த அந்த மலாய் முதலாளி அங்கு வந்து என்னை அவர்களிடம் இருந்து மீட்டெடுத்தார். எனது உடல் நடுங்கிக் கொண்டே இருந்தது.*

*நெருப்பு என்மீது பற்றி எரிவது போல் இருந்தது.*

*அப்போதுதான் வசந்தன் வவுனியாவில் இருந்து நான் பல்க லைக்கழகம் தெரிவான விவரத்தை அனுப்பி இருந்தான்.*

*அம்மம்மா... நீ எனக்காக நிறையத் துன்பப்பட்டு விட்டாய். யாருமேயற்ற என்னைத் தனியாளாக இருந்து வளர்த்து விட் டாய். இனிவரும் காலம் யாருமற்ற உன்னை அருகில் இருந்து காப்பது எனது கடமை. எந்த ஆபத்திலும் இனி உன்னை என்னால் பிரிந்து வாழ முடியாது. இந்த மலேசிய 45 நாட்களுமே போதுமானது.*

*எப்படியாவது எனக்கு 75 ஆயிரம் ரூபாய் யாரிடமாவது கடன் வேண்டி அனுப்பிவிடு. 45 ஆயிரம் ரிக்கற்றுக்கு 30 ஆயிரம் இங்கு மேலதிகமாய் நான் நின்றதுக்குமான தண் டப்பணம். இல்லாவிட்டால் இவர்கள் என்னைப் பிடித்து குண்டியில் 15 அடிகள் சவுக்கால் அடிப்பார்கள். என்னிடம் இருக்கும் எல்லாவற்றையும் பறிப்பார்கள். கக்கூசை விடச் சின்ன அறையில் சல்லிக் கல்லுக்கு மேல் என்னைப் பூட்டி வைப்பார்கள். பிருட்டத்தில் வாழ்நாள் எல்லாம் வலி எடுத்து நான் வாழ வேண்டி வரும். உன்னைக் கடன்காரியாக்கு வதை இட்டு எனக்கு வெட்கமாக உள்ளது. நான்கு தென்னைகளையும் சிறிய நிலத்தையும் வைத்து என்னை இத்தனை ஆண்டுகள் யாரிடமும் கடன் படாமல் வளர்த்து விட்டாய்.*

*உனக்கு நான் சத்தியம் செய்கிறேன். நான் எப்படியாவது உழைத்து இந்தக் கடனைத் தீர்த்து விடுவேன்.*

*அவசரப்பட்டுக் கொடுமையான வட்டிக்கு யாரிடமும் வேண் டாதே. எனக்குப் படிப்பித்த தயா டீச்சர் முருகன் கோயில் அருகில் இருக்கிறார். அவரிடம் கேட்டுப்பார். அவர் என் மீது அளவற்ற பற்றுக் கொண்டவர். எப்படியாவது உனக்கு உதவுவார்.*

*நமக்கு என்ன நடந்தாலும் நமது மண்ணில் நடக்கட்டும். உன்னை விட்டு இனி ஒருபோதும் நான் பிரிந்திருக்க மாட் டேன். நீ கடிதத்தை சுமதி அக்காவிடம் கொடுத்துப் படிக் கச் சொல்லிக் கேட்டுக் கொண்டிருப்பாய். இந்தக் கடிதம் படித்து முடித்ததும் எப்படியாவது சுமதி அக்காவுடன் சென்று என் இலக்கத்துக்கு ஒரு முறை அழைத்து என் னோடு பேசு அம்மம்மா. சுமதி அக்காவிற்கு எனது நன்றி.*

*இப்படிக்கு உனது பேரன்*
*நந்தன்.*

கடிதத்தை எழுதி முடித்ததும் அதை எப்படி அனுப்புவது என்று யோசித்தான். அப்போது மலேசியச் சூரியன் மேற்கில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தது. அந்த வாசல் பக்கமாய் கல்லூரி விட்டு வரும் சீனப் பெண் நினைவுக்கு வந்தாள். அவள் முகம் எப்போதும் சிரித்தபடி இருக்கும். சில நாட்க ளாக காலையிலும் - மாலையிலும் அவனைப் பார்த்து புன் னகைக்க ஆரம்பித்தவர்களிடம் கேட்கலாமா என்று யோசித் தான்.

தூக்கத்திலிருந்து சரவணன், கண்ணப்பன், காசிம், அமீர், முத்துசாமி ஆகியோர் எழுந்து தங்கள் குடும்பங்களோடு பேசிக் கொண்டிருப்பது கேட்டது.

சரவணனிடம் கடித உறை இருக்கிறதா? என்று கேட்டுப் பார்க்க நினைத்தான். அப்போது அங்கே வாகனத்தின் சத்த மும் யாரோ மலாயில் பேசுகின்ற ஒலியும் கேட்டது.

அந்தக் கதவில் உள்ள திறப்பின் துவாரத்தால் ஒற்றைக் கண்ணை விட்டுப் பார்த்தான். மலேசியப் போலீசார் அவர்க ளின் வீசாவையும், கடவுச்சீட்டையும் பரிசோதித்துக் கொண்டி ருந்தார்கள்.

மெதுவாகக் கண்ணப்பன் ‘நந்தா ஓடிடு... மாமாக்கள் விசா பாக்குறாங்க...’ என்று கதவருகே வந்து நைந்த குரலில் இரைந்தான்.

அவனைத் திடீர் அதிர்ச்சி மூழ்கடித்தது. குண்டுவீச்சு விமா னத்தைக் கண்டு ஓடும் சிறுவன் போல பின்னே இருந்த சாள ரத்தை நோக்கி ஓடினான். அதன் சிறிய துவாரத்தால் புகுந்து பின்பக்கத்தில் குதித்து ஒற்றையடிப் பாதை ஊடாக ஓடிக் கொண்டே இருந்தான். அவன் சட்டையின் பாதி கிழிந்து காற்றில் பின் துரத்தியது.

ஓடும் போதும் ஒரு பயம் ஏற்பட்டது. வேறு யாராவது ஓடுவ தைப் பார்த்து தகவல் கொடுத்தாலும் என்று ஓட்டத்தைக் குறைத்து மெதுவாகத் திரும்பிப் பார்த்தான். போலீசைக் காணவில்லை. வேகமாகத் தண்டவாளத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான். தண்டவாளத்தை அண்டி எந்த மனிதர்களும் இல்லை. அப்போதுதான் தன் கையில் இருந்த கடிதத்தை யும் மடித்து காற்சட்டைக்குள் வைத்தான்.

அப்போது தன் தோற்றத்தைப் பார்த்த போது... ரத்த அழுக் கால் காய்ந்து கிடந்தது உடை. இந்த உடைகூட ஆபத் தைத் தரும் என்ற பயம் எழுந்தது. அங்கும் இங்கும் பார்த்த போது தண்டவாளம் மட்டுமே நீண்டிருந்தது. எத்திசை நோக்கி செல்வது என்று சிந்தித்தபடி சற்றுக் குந்தி இருந் தான்.

ஸ்ரீ சத்தியா நிறுத்தத்துக்குச் சென்றால் சில வேளை அந்தச் சீனப் பெண்ணை சந்திக்கலாம். என்று நினைத்தபடி அதன் திசையில் தண்டவாளத்தில் நடக்க ஆரம்பித்தான். சூரியன் அவனை நோக்கிச் சிரித்துக்கொண்டிருந்தது. இடது கையால் அதை மறைத்துக் கொண்டு நடந்தான். கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஸ்ரீ சத்யா நிறுத்தம் தெரிந்தது. சூரியனைப் பார்த் தபடி ஒரு பெண் நின்றிருப்பது தெரிந்தது. அவள் அந்தச் சீனப் பெண்ணாகவே இருக்க ஊரில் உள்ள கடவுள்களை வேண்டிக்கொண்டான்.

சூரியன் அவளது நிழலை வீம்புக்கு நீட்டியபடி இருந்தது. இதயப் படபடப்பு பறை மேளம் போல் அடித்துக் கொண்டி ருந்தது.

பின்னால் வந்த மின் வண்டியின் ஓசை இதயச் சத்தத்தை விட சிறியதாகத் தான் இருந்திருக்க வேண்டும்.



akaran@thaiveedu.com



# ஆதலால் காதல் செய்

- பொன்னையா விவேகானந்தன்

'தம்பி, கொஞ்சம் நிறுத்து.. இந்தச் செடிக்கு ஒரு லீற்றர் தண்ணீர் போதுமானது. நீ அதிகமாக விடுகின்றாய்'

நீர் பாய்ச்சுவதை நிறுத்திவிட்டுச் சற்றுக் கடுப்போடு திரும்பிப் பார்த்தான் மணிமாறன்.

ஒரு எழுபது, எழுபத்தைந்து வயதிருக்கலாம். ஒரு வெள்ளையினத்து மூதாட்டி நின்றுகொண்டிருந்தாள்.

'நான் கடந்த ஓராண்டாக இங்கு பணியாற்றுகின்றேன். எனக்குத் தெரியும் எவ்வளவு தண்ணீர் விடவேண்டுமென்று' மணிமாறன் தொனியில் 'நீ உன்ர வேலையைப் பார்' என்ற பொருள் தெறித்தது.

மூதாட்டி புன்முறுவலித்தபடி, 'இந்தச் செடியின் பெயர் Forsythia. இதன் வேர்களில் அதிக நீர் தேங்கி நின்றால் செடி பெரிதாக வளராது. நீர் குறைவாக இருந்தால் நீரைத் தேடி வேர்கள் நீட்சியடையும். வேர்கள் கீழே நீண்டு சென்றால் மேலே செடியும் வளரும். மண்ணின் கனிமங்களும் தாவரத்தில் சேரும். பூங்காவில் பணியாற்றும் உனக்கு இது தெரிந்திருக்க வேண்டும்' ஆறேழு அடிகளுக்கு மேல் வளரக்கூடிய இந்தச் செடியின் அடர்ந்த மஞ்சள் நிறப் பூக்களின் இன்பத்தை நீ அனுபவித்ததுண்டா? முதலில் தாவரங்களின் அழகை அனுபவிக்கக் கற்றுக்கொள். ஒவ்வொரு செடியிலும் அன்பு கொள்வாய்.

மூதாட்டில் குரலில் சிறு கண்டிப்பு வெளிப்பட்டது.

இப்படியொரு பதிலை மணிமாறன் எதிர்பார்க்கவில்லை. அதற்குப் பதில் சொல்லும் மொழியும் அவனிடம் இருக்கவில்லை. மூதாட்டியும் அவனிடமிருந்து எதையும் எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை. தன்பாட்டில் மீண்டும் நடக்கத்

தொடங்கினார். ஆனால் மணிமாறனின் பார்வை மூதாட்டி யையே பின்தொடர்ந்தது.

தன் விரல்களால் செடிகளின் தளிர்களைத் தடவி, நலம் விசா ரித்தபடியே நடந்துகொண்டிருந்தார் அவர்.

அதன்பின் அவனால் நீர் பாய்ச்ச முடியவில்லை. எந்தச் செடிக்கு எவ்வளவு தண்ணீர் விடுவது? மூதாட்டி அவனுக் குள் குழப்பங்களைக் கிளறிவிட்டுச் சென்றிருந்தாள். தாவரங் கள் பற்றி அறியாமல் பணத்துக்காக வேலைக்குச் சேர்ந்தது எத்துணை தவறு? இனியேனும் தாவரங்களைப் பற்றிக் கற்ற றிய வேண்டும் என முடிவெடுத்துக்கொண்டான். எனினும் கடுந்தொனியில் மூதாட்டியிடம் பேசியது அவனை உறுத்தி யது.

அதற்குப் பிறகு அவன் நினைவுகளில் அந்த மூதாட்டி வந்து செல்வதை அவனால் தடுக்க முடியவில்லை.

இது மணிமாறனுக்குக் கிடைத்தவொரு பருவகாலப் பணி. இரண்டாண்டுகளுக்கு முன்புதான் இப்பணியில் இணைந்தி ருந்தான். தொடக்கத்தில் பெரும் ஈடுபாடு இல்லையெனினும் பின்னாளில் செடிகளோடானதொரு நெருக்கம் அவனுக்குள் ஏற்பட்டிருந்தது. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் ஒக்டோ பர் வரை இந்தப் பணி இருக்கும்.

இடையே ஓரிரு வாரங்கள் கடந்திருக்கும். மணிமாறன் பூங் காவின் புற்றரைகளின் மேல் விழுந்து கிடந்த இலைகளை யும் சிறு கஞ்சல்களையும் துப்பரவு செய்துகொண்டிருந்தான். பூங்காவுக்கு வந்தோர் பலர் ஆங்காங்கே இருந்த இருக்கை களில் காணப்பட்டனர். சிறுவர்கள் சிலர் புற்றரைகளில் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அவன் பார்வையில் ஏதோ தட்டுப்பட, சட்டென நிமிர்ந்து ஒரு இருக்கையைப் பார்த்தான். அவர்தான்.. அதே மூதாட்டி தான். ஒரு இருக்கையில் அமர்ந்தபடி நூலொன்றை வாசித் துக் கொண்டிருந்தார்.

இடையே எப்போதேனும் ஒருநாள் அந்த மூதாட்டியைக் காணக் கிடைத்தால் மன்னிப்புக் கேட்க வேண்டும் என நினைத்திருந்தான். அதற்கு இதுதான் நேரம். மூதாட்டியை நோக்கி நடந்தான். அவருக்கு ஒரு புறத்தில் அவருடைய கைப்பையும் மறுபுறத்தில் காலணிகளும் வைக்கப்பட்டிருந் தன.

அருகில் சென்றவன் ‘அம்மா’ என்றான். நூலின் எழுத்துக ளுக்குள் புதைந்திருந்த அவரை இவ்வுலகுக்கு அழைத்து வர மற்றுமொரு முறை சற்று அழுத்தமாக ‘அம்மா’ என்ற ழைக்க வேண்டியிருந்தது.

நிமிர்ந்தவர், மணிமாறனைப் பார்த்து, ‘நான் இந்த இடத்தை விட்டு அகல வேண்டுமா?’ என்றார்.

‘இல்லை.. இல்லை.. நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.’

‘நீ யாரப்பா? உனக்கு நான் யாரப்பா? நான் ஏன் உன்னை மன்னிக்க வேண்டும்?’ மூதாட்டி மாறனை முற்றிலுமாக மறந் துவிட்டிருந்தார்.

மணிமாறன் பணிவோடு நடந்தவற்றைக் கூறினான்.

மூதாட்டி முன்வரிசைப் பற்கள் சிறிதளவில் தெரியும்படியாக முறுவலித்தார். ‘நீ உன் பணியைச் செய்துகொண்டிருந்தாய். உன் தவறை உனக்கு உணர்த்தி, என் கடமையைச் செய் தேன். இருவரும் அந்த ஒரு புள்ளியில் சந்தித்துக் கொண் டோம். அவ்வளவுதான். இதில் நீ மன்னிப்புக் கோருவதற்கும் நான் அதை வழங்குவதற்குமான இடங்கள் இல்லையே’ என் றவர், மேலே அண்ணாந்து உயர்ந்தோங்கியிருந்த மரமொன் றைப் பார்த்தார்.

பிறகு மாறன் பக்கம் திரும்பிய அவர். ‘என்றாலும் உன் பண்பு எனக்குப் பிடித்திருக்கின்றது. உனக்கு நேரம் இருந் தால் உன்னோடு கொஞ்சம் பேசலாமா?’ என்றார்.

பூங்காவின் மூத்த பராமரிப்பு மேலாளர் ஒருவர் கூறியது அவ்வேளை அவன் நினைவுக்கு வந்தது.

‘இந்தப் பூங்காவில் உங்கள் பணி செடி, மரங்களைப் பேணுவது மட்டுமல்ல, இங்கு வருவோரைப் பேணுகின்ற பொறுப்பும் உங்களுக்கு உண்டு. பூங்காவுக்கு வருவோர் சிலர் தனிமையில் வாழ்பவர்களாக மூதாளர்களாக இருக்க லாம். அவர்களில் சிலர் இங்குள்ள செடிகள் மரங்களுடன் பேசுவதற்காகவே வருவார்கள். அவ்வாறானோர் உங்களோடு பேச முயன்றால், அவர்களோடு பொறுமையாகப் பேசுங்கள். இதுவும் உங்கள் பணியின் ஒரு பகுதிதான்’

மூதாட்டியின் அருகே அமர்ந்தான் மாறன்.

அதிகளவு சுருங்கியிராத நீல விழிகளால் மூதாட்டி பரிவோடு மணிமாறனைப் பார்த்துப் பேச ஆரம்பித்தார்.

‘என் சொந்த ஊர் Watford. இங்கிருந்து ஏறக்குறைய முந் நூறு கிலோமீற்றர்களுக்கப்பால் இருக்கும் ஓர் அழகான விவ சாயக் கிராமம். என் தந்தை ஒரு சிறந்த விவசாயி. சிறு புல் பூண்டுகளிடம் கூட பாசமாக இருப்பார்.’

‘அதே பாசம் உங்களிடமும் இருக்கிறது என நினைக்கின் றேன்.’

‘இல்லை.. நிச்சயமாக இல்லை. பயிர்களைத் தாக்கவரும்

பூச்சி, புழுக்களுக்கும் அவர் உணவளிப்பார். அதோ பார், அந்தச் செடிமீது ஒரு சிறு வண்டு அமர்கின்றதே அதன் பெயர் தெரியுமா? Japanese Beetles. இலைகளைத் தின்று தீர்க்கும் இதை மன்னிக்கும் மனப்பக்குவம் எனக்கு இல்லை.'

'அந்த அழகான கிராமத்திலிருந்து ஏன் இங்கு வந்தீர்கள்?'

'காதல். அக்கிராமத்திலேயே என் காதலனும் இருந்தான், ஜேம்ஸ் கென்றீஸ். விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன்தான், படித்துத் தொலைத்துவிட்டான். திருமணமானதும் நகரத்துக்கு வந்துவிட்டோம். அந்தக் கிராமத்து இயற்கை அழகும் சுற்றாடலும் இங்கு இல்லை என்றாலும் எங்கள் மகிழ்ச்சிக்குக் குறைவிருக்கவில்லை. இருவரும் நன்றாகவே சம்பாதித்தோம். குழந்தைகள் இருவர் அடுத்தடுத்துப் பிறந்தார்கள். பராமரிப்பு நிலையங்களும் நாங்களுமாகக் குழந்தைகளை வளர்த்தோம். குழந்தைகள் பெரியவர்களானார்கள். தங்கள் விருப்பப்படியே வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள்.

'உங்கள் கணவர்..?'

மூதாட்டி அமைதியானார். அண்ணாந்து மேலே பார்த்தார். அவர் பார்வைக்கும் வானத்துக்குமிடையே அருகிருந்த மரத்தின் கிளைகள் விரிந்திருந்தன.

'மகனே.. ஒன்று தெரியுமா? நானும் என் கணவரும் இறுதிவரை எமது பிள்ளைகளுக்கு ஒரே பெற்றோராக இருந்தோம். எமது பிள்ளைகள் அதை அடிக்கடி பெருமையாகச் சொல்லிக் கொள்வார்கள்.'

சிறிய அமைதிக்குப் பிறகு, 'என் கணவர் என்னோடுதான் இருக்கின்றார், ஆனால் அவர் உடலைத்தான் எரித்துவிட்டோம்' பேச்சு நின்றுபோக, கண்கள் கசியத் தொடங்கியிருந்தன.

அக் கண்ணீரைக் கைகளால் துடைக்காமல் அவை புற்களின் மீது விழுமாறு குனிந்தார். அந்தத் துளிகள் புற்களை நனைத்து மண்ணைத் தொட்டிருக்க வேண்டும்.

மணிமாறன் எதுவும் பேசவில்லை, ஆதரவாக அவர் தோள்களைத் தொட்டு நிமிர்த்தினான். அந்தத் தொடுகை மூதாட்டிக்கு ஆறுதலாக இருந்திருக்க வேண்டும். அவர் ஆசுவாசமாக வெளியேற்றிய மூச்சுக்காற்று அதை உணர்த்தியது.

மணிமாறன் பேச்சைத் தொடர்ந்தான். 'உங்கள் வழக்கத்தில் உடலைப் புதைப்பதுதானே வழக்கம்?'

'மகனே.. நான்தான் உடல் எரிக்கப்பட வேண்டும் என விரும்பினேன். என்னை எதிர்த்தார்கள். நான் முடிவில் பிடிவாதமாக இருந்தேன். இந்த நிலம் முற்றுமுழுதாகத் தாவரங்களுக்குச் சொந்தமானது. எமது ஆக்கிரமிப்புக்கு ஓரளவு இருக்க வேண்டும். தாவரங்களின் நிலத்தில் ஒருசிறு பகுதியை நாம் காலகாலத்துக்கும் எடுத்துக்கொள்வது எந்தவகையில் நியாயம்?' மூதாட்டின் தெளிவான பேச்சு, மாறனின் சிந்தனைத் தளத்தைத் தொட்டிருக்க வேண்டும். அமைதியாக இருந்தான். மூதாட்டி தொடர்ந்தாள்.

'கென்றீஸ்.. இந்தப் பூமிக்குள் நான் சந்தித்த மிகச் சிறந்த மனிதர். நான் அவரை மட்டுமே சுற்றிப் பின்னிப் படர்ந்திருந்தேன். அதுவே என்னையும் என் வாழ்க்கையையும் பேரழகாக்கியது. மகனே உனக்குத் தெரியுமா? எங்கள் சமூகத்தில் மணமுறிவுகளும் மறுமணங்களும் அதிகம். எமது ஐம்பது ஆண்டுகால மணவாழ்வில் இது பற்றி ஒரு கணமேனும் நாம் சிந்தித்ததில்லை. இதனால் எம்மினத்துப் பெண்கள் பலருக்கும் என்மீது பொறாமை. ஒரே கணவரோடு ஐம்பதாண்டு காலமா? வாழ்க்கை அலுப்புத் தட்டவில்லையா? என்றெல்லாம் கேட்பார்கள். 'கென்றீஸ்' என் வாழ்வின் முழுமை. அதை உணரும் தெளிவு அவர்களுக்கு இல்லை.' அவர் குரலில் ஒரு பெருமையுணர்வு தொனித்தது.

சற்று அமைதியாக இருந்த மூதாட்டி, மணிமாறனைப் பார்த்து ''மகனே நீ இந்தியனா?' என்று கேட்டார்.

'இந்தியாவுக்கு அருகில் இலங்கையைச் சேர்ந்தவன், தமிழன்.'

'ஓ.. நான் அறிந்திருக்கின்றேன். ரொறண்ரோ நகரில் உயர் தெருவை மறித்துப் போராடிய இனந்தானே. உங்கள் போராட்டம் முடிந்துவிட்டதா?'

'இப்போது போராட்டம் இல்லை, ஆனால் போராட முற்பட்டதற்கான காரணங்கள் அப்படியே உள்ளன. சரி அது கிடக்கட்டும்.. உங்கள் பிள்ளைகள் எங்கே?'

மீண்டும் புன்முறுவலோடு வழமைக்குத் திரும்பினார் மூதாட்டி. 'இருவருமே நல்ல பிள்ளைகள். பாலூட்டியது மட்டும்தான் நான். கென்றீஸ் அவர்களை அற்புதமாக வளர்த்தார். இந்தக் கனடாவுக்குள்தான் ஆளுக்கொரு திசையில் வாழ்கின்றார்கள். அவ்வப்போது வருவார்கள்.'

'அதுசரி மகனே.. உனக்குத் திருமணம் ஆகிவிட்டதா?'

'இன்னும் இல்லை.'

'காதல் செய்.. அக்காதலை மட்டுமே இறுதிவரை காதலி. கென்றீசைப் போல் காதல் செய்.' இதைக் கூறும்போது மூதாட்டி சற்று உணர்ச்சிவயப்பட்டவராகத் தெரிந்தார்.

மணிமாறன் பேச்சை மாற்ற, 'தனியாகவா இருக்கின்றீர்கள்?' என்றான்.

'முன்பே சொன்னேன். நான் தனியாக இல்லை. என்னோடு கென்றீஸ் வாழ்கின்றார். நான் எப்போதும் தனியாக இருந்ததில்லை. என்னால் இருக்கவும் முடியாது. வீட்டில் நான்

கென்றீசுடனும் கடவுளுடனும் பேசிக்கொண்டிருப்பேன். கோடைகாலங்களில் பூங்காக்களுக்குச் சென்று மரங்களோடு பேசுவேன். இப்போது உன்னோடு பேசிக்கொண்டிருக்கின்றேன்.' சற்றே சிரித்தபடி 'எனக்கு மரங்களின் மொழியும் தெரியும்' என்றார்.

'மகனே.. செடி, மரங்களோடு பழகும் வாய்ப்பு ஒரு வரம் என்று நினைத்துக்கொள். கை, கால், வாய் இல்லையென்றாலும் அவைக்கு உன்னைப் புரிந்துகொள்ளும் சக்தியுண்டு, நீயும் அவற்றைப் புரிந்து கொள்ள முயற்சி செய். சரி.. உன் பணிநேரத்தை நான் பழுதாக்கக் கூடாது. போ.. கடமைகளைச் செய். செடிகளும் மரங்களும் உன்னைத் தேடக்கூடும்.' மூதாட்டி கைப்பையைத் தோளில் மாட்டிக்கொண்டு காலணிகளைக் கையில் எடுத்துக்கொண்டார். புற்றரையைத் தாண்டி நடைபாதையை அடைந்தவுடன் காலணிகளை அணிந்து கொண்டு நடக்க முற்பட்டார்.

மூதாட்டியை நெருங்கிய மாறன், ஏதோ கேட்க முற்பட,

'மகனே.. இத்தனை நாளும் எப்படி இங்கிருந்து சென்றேனோ அப்படியே இன்றும் சென்றுவிடுவேன். புதிதாக என்மீது அக்கறை செலுத்த ஆரம்பிக்காதே. நாளை இங்கே வரும்போது நீ எங்கே என்று நான் தேடினாலும் நான் எங்கே என்று நீ தேடினாலும் இருவருக்குமே அது சுமையாகிவிடும்.'

'அம்மா உங்கள் பெயர்?'

'இந்தப் பூங்காவில்தானே வேலை செய்கின்றாய். ஒருநாள் தெரிந்து கொள்வாய்.'

மூதாட்டி நடையில் தளர்ச்சி தெரியவில்லை.

மூதாட்டியின் கதையில் புதுமையொன்றும் இல்லை. எனினும் வெள்ளையினத்தவரிடையே காதலைப் போற்றும் உறவுகளும் இருக்கின்றன என்பது மணிமாறனுக்கு ஆச்சரியமாகவே இருந்தது.

அதற்குப் பின் அந்தக் கோடைகாலத்தில் மணிமாறன் மூதாட்டியைக் காணவில்லை. அவன் பூங்காவின் வேறு பணிகளுக்கு மாற்றப்பட்டிருந்தமையும் அதற்குக் காரணம்.

ஆண்டொன்று ஓடியபின், மீண்டும் வசந்தகாலத்தில் மணிமாறன் பூங்காவில் பணியைத் தொடங்கியிருந்தான். மரங்களின் அடிப்பகுதியைத் தூய்மைப்படுத்தி மழைநீர் தேங்குமளவுக்குச் செப்பனிடுவது அவன் பணி.

அவ்வேளை ஒரு மரத்தின் கீழ் பொறிக்கப்பட்டிருந்த பட்டயத்தைப் பார்த்தான். ஜேம்ஸ் கென்றீஸ் நினைவாக நடப்பட்ட மரம் என்றும் அது 2002ம் ஆண்டு மே மாதம் நடப்பட்டதாகவும் அதில் எழுதியிருந்தது.

மணிமாறனுக்கு ஒருநொடியில் எல்லாமே விளங்கியது. சட்டெனத் திரும்பி அந்த மரத்தின் கீழிருந்த இருக்கையைப் பார்த்தான். அதே இருக்கை. உடல் சற்றுப் படபடக்கவே அதில் அமர்ந்தான். மூதாட்டி அவன் எண்ணத்தில் பேருருக்கொண்டெழுந்தாள். அவன் நினைவில் ஏதோ பொறி தட்டியவனாக சட்டென எழுந்து அருகே புதிதாக நடப்பட்டிருந்த ஒரு சிறிய மரத்தை நோக்கி ஓடினான்.

அதில் மார்டினோ கென்றீஸ் நினைவாக நடப்பட்ட மரம் என்றும் 2022 செப்ரெம்பரில் நடப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மார்டினோ கென்றீஸ்.. இனி இது
மணிமாறனால் மறக்கப்பட
முடியாத பெயர்.



vivekanandan.p@thaiveedu.com



# சாம்பரில் திரண்ட சொற்கள்




## - தேவகாந்தன்

எவ்வளவோ மாற்றங்கள் சூழலில்போல் தனி மனித வாழ்வுகளிலும். அண்மையில் பிரான்ஸிலிருந்து வந்த கரவெட்டியைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு முதியவர் நெல்லியடி பஸ் நிலையத்தில் கொழும்பு செல்ல சொகுசு பஸ்சுக்கு காத்து நிற்கையில் ‘நெல்லியடி கரவெட்டியை விழுங்கியிட்டுது’ என்றிருந்தாராம். அந்த சத்தத்தை புவனேஸ்வரி கேட்டிருக்கவில்லை. ஆனாலும் அது ஆட்களில் ஏறியேறி வெளிகடந்து சென்று அவரை அடைந்திருந்தது. அது உண்மையென அப்போது அவர் எண்ணித் தலையசைத்தார்.

‘கரவை வேலன் கோவை’ பிரபந்தம் பாடப்பட்ட காலத்து கரவெட்டியைவிட ஊர் எவ்வளவோ மாறிவிட்டதுதான். ஒரு நூற்றாண்டு சீரிய வளர்ச்சியுடன் இன்று இறுதி யுத்தம் முடிந்த பின்னான கட்டுமானமும் அது கொண்டிருக்கிறது. கோவில்கள் வர்ண வர்ண மயமாக புனருத்தாரணம் கொண்டிருந்தன. வீடுகள் புதுக்கியும் திருத்தியும் கட்டப்பட்டதாகயிருந்தன. மனிதர்களிலும் முந்திய வறுமையும் வசதியீனங்களும் பெருமளவு கடந்து போய்விட்டதாய்த் தெரிந்தது.

ஆனால் வாழ்வியல்...? மக்களின் கலாச்சாரம்...?

காலத்தில் எல்லாம் மாறுபவைதான். அப்போது அது வளர்ச்சியின் ஊற்றம் கொண்டதாகயிருக்கும். அன்றைய வளர்ச்சி நிலையை அவர், வீக்கமென உணர்ந்திருந்தார்.

உயர்ந்த திண்ணையில் உயர நின்றிருந்த ‘கந்தப்பு மனை-’யென முகப்பில் பித்தளைத் தகட்டில் எழுத்துக்கள் கொண்டிருந்த வித்துவான் வீரகத்தியின் வீடு பாழ்படத் தொடங்கியிருந்தது. வேல்க் கம்பு பொதிந்த வேலி இடிக்கப்பட்டு மதிலாய்க் கட்டியிருந்தார் அந்த வீடு வளவை சீதனமாய்ப் பெற்றிருந்த சுவிஸிலிருக்கும் மலரின் தங்கை. வெளி அச்சறுக்கைக்கு அது போதும்தான். அத்துடன் புவனேஸ்வரியின் ‘ஒரு கண்’ கவனிப்பும் இருக்கிறது. ஆனால் உள்ளுடனை கறையான் அரித்துக்கொண்டிருந்தது சுவர்கள் மக்கிக்கொண்டிருந்தன.

இப்போது அங்கே வித்துவான் இல்லை. அவர் மனைவி அன்னபூரணம் இல்லை. பக்கத்து வீட்டில் புவனேஸ்வரியின் அம்மா அன்னலட்சுமி இல்லை. எதிர்ப்பக்கத்தில் தகரப் படலை வீட்டில் குடியிருந்த செல்லம்மா இல்லை. அவளது பெரியம்மா பவளமாச்சி எப்போதோ இல்லாமல் போயிருந்தார். அந்தக் கூரை வீட்டில் நடனசுந்தரத்தின் உறவினருக்கு அறிமுகமான தென்மராட்சிக் குடும்பமொன்று அப்போது இருந்துகொண்டிருந்தது.

கல்யாணமாகி மூன்று குழந்தைகளைப் பெற்று ஒன்றை இயக்கத்துக்குக் கொடுத்துவிட்டு, மற்ற இரண்டை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு கணவன் இறந்துபோக தனியனாகிவிட்ட புவனேஸ்வரி, பௌதிகத்தின் மாற்றம்போல் குடும்பங்களில் விழுந்த சிதைவுகளையும் தன் வீட்டு சாய்மனையில் கிடந்து எண்ணியபடி அரை நூற்றாண்டுக் காலவெளியில் மீள மீளப் பயணித்துக்கொண்டிருக்கிறார்.

குடும்ப விவகாரங்களைப் பேசவும், மனத்து உள்ளின் வலி-களை பரிமாறித் தணிக்கவும் மனிதரற்ற தனிமை அது. கரவெட்டி மனிதரால் நிறைந்து போய்த்தான் கிடக்கிறது. ஆனால் உறவுகள்...? அதனால் தானே ஒன்றினை நினைக்கவும், தனக்குள்ளாக ஓரவலத்தைப் புறுபுறுத்துத் தணியவும் செய்தவண்ணமாய் காலத்தைக் கடத்திக்கொண்டு இருக்கிறார். நினைப்பதைத் தவிர மனத்துக்கும் வேறு வேலை என்னதான் இருக்கிறது?

இந்தச் சராசரி இயங்குதலை விசைப்படுத்தியிருக்கிறது இரண்டு நாட்களின் முன்னர் அவர் தம்பி மயில்வாகனத்தடன் நிகழ்த்திய தொலைபேசி உரையாடல்.

முன்பானால் கடிதங்கள் வரும். இப்போது அதன் சிரமமும் நேரமின்மையும் கருதி யாரும் கடிதமெழுதுவதில்லை. வாழ்த்து அட்டைகள்கூட அனுப்புவதில்லை. கணினித் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் எல்லாம் மாறிப்போயிற்று. இப்போது ஆளை ஆள் பார்த்து கதைக்கிற வசதி வந்திருக்கிறது. கதைத்து முடிய எந்த உணர்வும் கருத்தும் உருப்படியாய் எஞ்சுவதில்லை. கடிதமானால் இரண்டாவது மூன்றாவது வாசிப்புகளுக்கும் வாய்ப்பிருக்கும். அதில் சொற்களின் உள்ளே உள்ளொன்று வைத்துப் புறமொன்று சொன்ன, கன



வுகளை மறைத்துவைத்த கூறுகளையும் அகழ்ந்தெடுக்கும் சிலாக்கியம் இருந்தது.

ஆனாலும் மயில்வாகனத்தின் பேச்சு புவனேஸ்வரியின் நினைவுகளைக் கீழ் மேலாகப் புரட்டிப் போட்டுத்தான் விட்டி ருக்கிறது. சிவயோகமலர் ரொறன்ரோவில் இருப்பது வேறு விஷயமாக அங்கு சென்றவேளை தெரியவந்ததாகவும், வீட றிந்து காணச் சென்றபோது அவரும் கணவரும் ஆஸ்பத்திரி போயிருந்ததாக வீட்டுக்காரர் சொன்னதும் அவர் சொல்லியி ருந்தார். மலரின் உடல்நிலை சர்க்கரை வியாதியால் மிகவும் சீர்கெட்டிருப்பதும், மனநிலையும் ஆரோக்கியமாக இல்லை யென்பதும் அவர் தெரிவித்ததுதான்.

கேட்டுத் துடித்துப்போனார் புவனேஸ்வரி. எப்படி இருந்தாள், இப்படி ஆகிவிட்டாளேயென்று மனம் பதறினார்.

சிவயோகமலர் இலங்கையிலிருந்த காலம்வரை, இடையிட்ட ஒரு மூன்று நான்கு ஆண்டுகள் தவிர, அவர்களுக்குள் மிகுந்த நெருக்கம் இருந்திருந்தது. மிகுந்த வாரப்பாடான விசாரிப்புகள் இருந்திருந்தன. ஆனால் வெளிநாட்டிலிருந்த மகனிடம் சிவயோகமலர் ஓடிப்போனதிலிருந்து அவர் புவ னேஸ்வரிக்கு தொலைந்தவரானார். ஊரில் அப்போதும் ஆசி ரியராகக் கடமையாற்றியபடியிருந்த அவரது கணவர் நடன சுந்தரத்தை ஒருபோது வழியில் கண்டபோதுதான் அந்தச் சிறிய உரையாடலில் மலரின் நலத்தை அவர் அறிந்தார்.

அப்போது நடந்த உரையாடலின் ஒரு கீறு அவரால் எப்போ தும் மறக்காதபடி நெஞ்சில் ஆழப் பதிந்திருந்தது. புவ-னேஸ்வரி கேட்டார்: 'நாடிருக்கிற நிலையில, இஞ்சயிருந்து கஷ்ரப்படாமல் நீங்களும் மலரோட போயிருக்கலாம், அண்ணை.'

'ரண்டு பேரும் போறதெண்டா... அந்தளவு காசுக்கு எங்க போறது? மலர் வில்லங்கப்படுத்தினாதான், காணியொண்டை

வித்திட்டாவது வெளிக்கிடலாமெண்டு. நான்தான் வேண்டா மெண்டிட்டன். பென்சனெடுக்க இன்னும் மூண்டு வரியமி ருக்கு. அதுக்குள்ள வேலையை விட்டிட்டு ஓடுதெண்டா, என் னெண்டு?' என்றார் அவர்.

பின்பு நடனசுந்தரமும் முன்புபோல் அவ்வப்போதேனும் காணப்படவில்லை.

யுத்தம் எல்லா இயல்பு நிலைகளையும் தலைகீழாய் மாற்றி யிருந்த வகையில் ஒருவரின் இருப்புபற்றிய முழுமையான தகவல்கள் எவரையும் அடையும் சாத்தியமாயிருக்கவில்லை. விரைந்து தத்தமது வீடுகளுக்குள் ஓடிப்போய் புகல்கொண்டு விடவே எவரும் செய்துகொண்டிருந்தனர்.

புவனேஸ்வரிக்கு தனக்கும் மலருக்குமிடையில் ஏற்பட்டிருந்த விலகலின் காலம், உறவுக் காலத்தை மனத்தில் முந்திக் கொண்டு எழுந்தது.

அது முழுமையாக தன்னை விரித்தெடுத்து காட்சிகளானது.

மலர் வீட்டு வாசல்புறத்தில் தூங்கு செம்பரத்தைகள் நிறை யப் பூத்து பனியில் நனைந்தபடி தொங்கிக்கொண்டு இருக் கின்றன. மெதுவாய்க் கண் பரத்தி அவற்றின் அழகை அனு பவிப்பவளாக புவனேஸ்வரி அப்போது இல்லை.

அவளுக்கும் மலருக்கும் இடையிலான நெருக்கத்தில் ஒரு கோடு விழுந்திருக்கிறது. அது அவளை எரிச்சலடைய வைக் கிறத்து கோபிக்க வைக்கிறத்து முகத்தை இருண்டுபோகவும், சிலவேளை அவளை அழவும் செய்விக்கிறது. அவள் அதிலி ருந்து தெளிய உக்கிரமாய் முயல்கிறாள். அவ்வப்போது தெளியவும் செய்கிறாள். ஆனால் மறுபடி இழந்த நட்பின் நினவு மேலெழுந்து அவளை வதையின் வட்டத்துள் இழுத்து மூழ்கச்செய்துவிடுகிறது.

செவ்வந்தி அங்கே வரத் தொடங்கிய பிறகுதான் மலர் அந்த மாதிரி மாறிப்போனாளென்ற எண்ணத்தை புவனேஸ்வரியால் லேசுவில் மனத்திலிருந்து விலக்க முடியவில்லை. அவளுக் கும் மலருக்குமிடையே எவ்வளவோ இருந்தன. செவ்வந்தி வந்ததோடுதான் ஒரு புள்ளியில்போல எல்லாம் கலைந்துபோ யிற்று. தன் வாழ்வின் சமநிலையே குலைந்ததுபோல் அவள் தடுமாறிப்போனாள்.

மிகச் சின்ன வயதில் சம்பவித்த தன் தகப்பனின் மரணத்தை அவள் எப்போதாவது நினைப்பதுண்டு. அந்த யோசனை மலரின் ஒதுக்கத்தின் பின்னால் அடிக்கடி வந்தது கண்டாள். பத்து வயதுப் பாலகியாயிருந்தவளுக்கு தன் குடும்பத்தின் பொறுப்புணர்தல் அவள் தந்தையின் மரணத்துடன் அவளில் ஏறியது.

நல்லாம்பியென்று ஊரில் அறியப்பட்டிருந்த அவள் தந்தை யின் மரணம் கண்மூடித் திறப்பதற்குள்போன்ற ஒரு மாயப் பொழுதில் சம்பவித்தது. ஒன்றுக்கிருக்க உள்வேலியோரம் போனவர் திரும்பிவர அந்தளவு நேரமாகிறதாவென எட்டிப் பார்த்த அன்னலட்சுமியின் கண்களில் கோவணம் தெரிய வேட்டி ஒதுங்கிப் போய் அந்த வெய்யிலில் அவர் மல் லாந்து கிடக்கக் காணப்பட்டார். அவள் வாயிலிருந்து எழுந்த ஓலத்தில் தெருவில் போனவர்கள்தான் ஓடிவந்து அவ ரது மரணத்தை அறிவித்தார்கள்.

நல்லாம்பிக்கு இயல்பிலேயே பலவீனமான சரீரம். அந்தச் சரீரத்தோடுதான் வெய்யில் மழை பாராமல் தன் பழைய சைக்கிளில் அவர் ஊரெங்கும் திரிந்தார். காற்றுப் போயோ, செயின் அறுந்தோ அந்த ஓட்டைச் சைக்கிளை நல்லாம்பி தள்ளிக்கொண்டு போனதைத்தான் அவர் அதில் ஏறி ஓடிச் சென்றதைவிட கன தடவைகள் அந்த ஊர் மக்கள் பார்த்தி ருக்கிறார்கள்.

அவருக்கு காணி உறுதி எழுதுகிற வேலை. வயல் நிலம், குடியிருப்புக் காணிகளின் ஈடு, விற்பனை, உரித்து மாற்றங் களை எழுதி காணிக் கந்தோரில் பதிந்து அதற்கான உறுதி களைப் பெற்றுக் கொடுப்பது சிரமமான வேலை. காலால் 'எட்டு' வைத்து அளந்த காணிகளை பரப்பு, குழியென 'நாடா' பிடித்து துல்லியமான அளவுக்குள் கொண்டுவரும் போது அளவைகள் பக்கத்துக் காணிகளின் எல்லைகளோடு மோதிக்கொண்டும் நிற்கும். மாற்றாந்தாய்ப் பிள்ளைகளென உரிமை கோரிக்கொண்டு உறுதிகளில் குறிப்பிடப்படாத புதிய உரித்தாளிகள் வருவார்கள். அவ்வாறான பிரச்னைக-ளில் கச்சிதமாகக் காரியமாற்றத் தெரிந்திருந்ததில் நல்லாம் பிக்கு அந்த ஊரில் மட்டுமில்லை, அடுத்தடுத்த ஊர்களிலும் வலு கியாதி. இதைவிட அந்தக் கியாதிக்கு இன்னோர் அம்ச மும் காரணமாக இருந்தது.

அக்கால காணி உறுதிகளின் எழுத்துக்கள் ஓலைச் சுவடிக ளினதை நிகர்த்தனவாய் இருந்தன. அவற்றின் சொற்பாவ னைகள் புழங்கு தமிழ்போல் விஸ்தாரம் கொண்டவை. காணி உறுதித் தமிழ் தனிவகையான தமிழாக கற்றவராலேயே சொல்லுவதாகிவிட்டிருந்தது. பாட்டெழுதும் வல்லபம்கொண்ட புலவருக்குக்கூட உறுதித் தமிழ் இலகுவாயிருக்கவில்லை. அதன் சவாலில் பலபேர் தோற்றார்கள். ஆனால் சின்ன வய திலிருந்து நல்லாம்பிக்கு அந்த மொழி தகப்பன் பாட்டனின் தொழிலாகவும் உறுதி எழுதுதல் இருந்தவகையில் பழக்கமா கிப்போயிருந்தது. அத்துடன் கோணல் காணிகளின் பரப்பு அளவீட்டில் ஆள் சரியான விண்ணன்.

அத்திறமைகள் கணிசமான வரும்படியை அவருக்கு அளித் தவேளை, பிள்ளையார் குளத்துப் பக்கமாய் பத்துப் பரப்பு வயலின் காலபோக வேளாண்மை அவரைச் சிரமமின்றி குடும்பத்தை நடாத்தவும் முடிந்தவராக்கிற்று.

வியாதியென்று படுக்கையில் கிடந்தறியார் நல்லாம்பி. ஆயி னும் இறுதி நோயென ஒன்று வந்திருக்கிறது. சிலர் கிறுதி தூக்கியெறிந்தது என்றார்கள் வேறு சிலர் சுவாதக் குத்துத் தான் வந்திருக்கும் என்றார்கள். 'எதுவானாலும் புண்ணி யாத்மா, பொசுக்கென்று மரண துன்பமின்றி போய்ச் சேர்ந் தது' என்பது உறவினர் சிலரின் அபிப்பிராயம்.

ஏதொன்றையும் எண்ணும் நிலையில் இல்லாதிருந்திருந்தார் அன்னலட்சுமி. தினசரிக் கடமைபோல நாலு அயல் வீடுகள் போய் ஊர்த் துளவாரம் பிடுங்காமல் தூக்கம் பிடிக்காதவர், அயல் மறந்தார் ஊர்க் கதைகள் மறந்தார் மயில்வாகனத்தை யும் புவனேஸ்வரியையும்கூட மறந்தார். அந்த அவலத்திலி ருந்து மீள அவருக்கு ஓராண்டுக்கு மேலே பிடித்தது. அப் போதும் நினைவு தெளிந்த அளவுக்கு அவரது உடல்நிலை தேறவில்லை. அதனால் பொறுப்பு முழுவதும் புவனேஸ்வரி யின் சின்னத் தோள்களில் ஏறுவது தவிர்க்க முடியாததா யிற்று.

அப்போதுதான் வித்துவான் வீட்டில் வசித்த ஆச்சியிடம், தான் பள்ளிக்கூடம்விட்டு நின்றுவிட்டால் கோழி ஆடென வளர்த்து வீட்டுப் பிரச்னைகளை பெருமளவு சமாளிக்கலா மென்ற தன் எண்ணத்தைப் பிரேரித்தாள் புவனேஸ்வரி.

வெகுநேரம் யோசித்த ஆச்சி கடைசியில், ‘இதுக்கு வேற வழியும் இல்லைத்தா’னென அந்த முடிவை அனுவதித்தார். மேலே வித்துவான் வீரகத்தி சொல்ல எதுவுமிருக்கவில்லை.

நல்ல தலைமையாசிரியர், நல்ல உபாத்தியாயர்கள், நல்ல சங்கீத ஆசிரியையென எட்டாம் வகுப்புவரையிருந்த அந்த தமிழ்க் கலவன் பாடசாலையில் எட்டாம் வகுப்புவரை படித் துவிட எண்ணியிருந்தவளுக்கு ஆறாவதோடு நின்றுவிடுவ ததை மனம் ஒப்ப மறுத்தது. ஆனால் நாளடைவில் தன் னொத்த வயதுப் பிள்ளைகளுடன் விளையாடி, தனக்கு மூத்த பிள்ளைகளுடன் உரையாடி, மூத்த முதிர்ந்த பெண்க ளின் கதையாடல்களில் கவனமாகி தன் இழப்பின் வலியை ஈடுசெய்யப் பயின்றுகொண்டாள்.

அவளுக்கு வேறோர் உலகத்தை அது காட்டியது. சின்ன மனத்தில் பெரிய விஷயங்களை எண்ண அவள் பழகினாள்.

செவ்வந்தியின் வருகையால் சம்பவித்த மலரின் விலக்கம் தந்தையின் மரணத்தாலும், தாயின் மனக் குழப்பத்தினாலும் ஏற்பட்ட தனிமையை மறுபடி அவளிடத்தில் கொண்டுவந்து கொடுத்ததுபோல் ஆயிற்று. தன் அன்பு இளக்காரமாய்ப் போன எரிச்சல், அதற்குக் காரணமான தன் சுய ஆளுமை யின் பலஹீனம் எல்லாம் அவளை தன்னுள் குமையச் செய் தன. அவளே எரிச்சல்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு ஜென்மமா னாள்.

தன் கோபம் மலரிலா செவ்வந்தியிலா யாரிலென அவ ளுக்கே தெரிந்திருக்கவில்லை. தாயில், தம்பியில், சில வேளை அன்னபூரணம் மாமியில்கூட அவளுக்கு எரிச்சல் வந்தது.

மலரும் செவ்வந்தியும் கடைகளுக்கு, கோயிலுக்கு சேர்ந்து செல்லுகையில் மணியும் பிறேக்கும் இல்லாத சைக்கிள் வந்து மோதியோ, பின்வளவு மாமரத்து ஊஞ்சலில் அவர்கள் ஆடி விளையாடும் பொழுதுகளில் ஊஞ்சல் கயிறறுந்து விழுந்தோ சிறு விபத்துகள் நடக்க புவனேஸ்வரியின் மனம் சாபமிட்டுக்கொண்டு இருந்தது. அவர்களை எதிர்கொள்ளும் வெறுப்பில், வெள்ளிக் கிழமைகளில் சிவன் தரிசனம் முடிய வீட்டுக் கூடத்தில் வித்துவான் நிகழ்த்தும் திருவிளையாடற் புராண கதைகூறல் கேட்கச் செல்வதையும் தவறவிடலானாள்.

ஆனாலும் நடுவேலிக் கடவைக்கூடாக மிகுந்த சுவாதீனத்து டன் அவளது மாமன் வீடு போய்வருகை இருந்தது. மலர் வீட்டில் நிற்கிற வேளைகளில் அந்தச் சுவாதீனம் இன்னும் அழுத்தமாய்த் தொழிற்பட்டதுபோல் இருந்தது. தேவையில் லாத விஷயங்களுக்கும் சிரித்துச் சிரித்து மாமிக்குப் பதில் சொன்னாள். சிலவேளை கேள்விகளுக்கும் பதில்சொல்லாமல் சிரித்துக்கொண்டு நிற்கச்செய்தாள். ஆச்சியே அவளது அகண்ட புதுச் சிரிப்புகளில் ஆச்சரியப்பட்டார். மலருடன் திட்டமாய்ப் பேசுவதை புவனேஸ்வரி ஒதுக்கி அனுபவித்த சுகமானது, உண்மையில் சுகமில்லையென்பதை அவள்மட் டுமே அறிந்திருக்க முடியும்.

காலம் ஓடியது.

மூன்றாண்டுகள் விரைந்து கடந்தன.

அது மலருக்கு இறுதிப் பரீட்சைக்கு சிறிது முன்னான காலம்.

மயில்வாகனம் தனக்குப் பின்னால் ஊசியைத் தொடரும் நூல்போல மாமன் வீடு இழுபட்டுக்கொண்டு வருவதின் கார ணத்தை புவனேஸ்வரி அறியாமலில்லை. ஆனால் அதற்காக அவளால் வருத்தப்படத்தான் முடிந்தது.

வசீகரன் மேலான அவளது ஈடுபாட்டின் ரகசியத்தை எப்ப டியோ அவளால் அறிந்துகொள்ள முடிந்திருந்தது. அது ஒரு நுட்பமான மூதறிவு.

ஒரு முழுப் போயா நாளில் பவளமாச்சியின் கதைகூறல் நிகழ்வுக்கு போன இடத்தில் ஆச்சியே கூறிவிட்டார், ‘ஊர் ஞாயம் புறிக்கிறதில கொம்மாவை மிஞ்சியிட்டாய்போல...?’ என.

‘ஞாயம் புறித்த’லில் ஓர் ஒற்றைச் சொல்லிலிருந்தும் அதன் பருவரையை வடித்தெடுக்க அவளால் முடிந்திருந்ததுதான்.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரி விடுதியில் நின்று படிக்கும் நடனம், வாரா வாரம் வெள்ளி சனி ஞாயிறுகளில் வீட்டுக்கு ஓடிவந்துவிடுகிற ஒரு காலமிருந்தது. அதுபற்றி நாத்து நட, புல்லுப் புடுங்க போகிற பெண்களிடத்திலும், கூப்பன் கடைக்கு போய்வருகிற பெட்டைகளிடத்திலும் ஐமிச்சப் பேச் சுக்கள் எழுந்திருந்தன. ‘ஆரோ நாசம் புடிச்சவளின்ர பேச் சது’ என்ற யாரோவின் பேச்சில் அது நசித்துப்போகப் பார்த் தது. ஆனால் புவனேஸ்வரிதக்குத் தெரிந்தது, அதில் எது வோவோர் உண்மை இருக்கிறதென.

காலை மாலை வேளகளில் படலையில் நடனம் தொங்கிநிற் பது தெரு விடுப்புப் பார்க்கவல்ல, மலரைக் காணவேயென் பதை அவளால் தெரிய முடிந்திருந்தது. மலரும் அவ்வப்

போது புத்தகமும் கையுமாகவோ இல்லாமலோ விறாந்தையில் அவன் பக்கமே திரும்பாமல், எப்போதும் சிரிக்காத அந்த முகத்தில் இன்னும் கொஞ்சம் கடுகடுப்பை அப்பிக் கொண்டு வந்து வந்து போவதும் உண்மையில் வெறுப்பின் அடையாளமில்லை என்பதும் அவளுக்கு நிச்சயமாயிற்று.

இந்த நிலையிலேதான் வசீகரன் கடிதம் கொடுக்கிற இரகசியத்தை செவ்வந்தியின் இன்னொரு கூட்டாளி வெள்ளைச்சியிடமிருந்து உருவியெடுத்தாள் புவனேஸ்வரி. அவளுக்கு பெரிய வேதனையாகப் போய்விட்டது. நடனத்துக்காகவும் அவள் இரக்கப்பட்டாள். அதுபோலவே அவளது இரக்கம் இப்போது தம்பி மயிலுக்காகச் சுரந்துகொண்டிருந்தது.

வசீகரன் மேலான மலரின் உறவு இன்னும் முதிரவேண்டும் என்பதே அவ்வுறவுபற்றி அறிந்த கணத்தில் அவளிடத்தில் எழுந்த ரகசிய ஆசை. அதனால் செவ்வந்தியின் கூட்டுறவு மலரின் ஒழுக்கத்தைச் சீரழித்ததென வித்துவான் அவளை 'வீட்டுப் பக்கமே வரக்குடாது' எனக் கலைத்துவிடவேண்டுமென அவள் விரும்பினாள்.

ஆனால் செவ்வந்தியில் குறைசொல்ல முடியாத வேறோர் இடர் இடையில் குதித்தேறியது.

மலரின் எதிர்பார்ப்புக்கு, வித்துவான் அன்னபூரணம் ஆகியோரது எதிர்பார்ப்புக்கும் மாறாகத்தான், மலரின் பரீட்சைப் பேறுகள் அமைந்தபோது உண்மையில் புனேஸ்வரி அவளில் அனுதாபப்பட்டாள். அந்த அலை ஓய்வதற்கு முன்னால் வீட்டில் ஒரே புகைமூட்டம். உணர்வுகள் உராய்ந்து தீப்பற்றாமல் புகைந்துகொண்டிருந்தன. வசீகரனின் விஷயம் வீட்டில் தெரிந்துவிட்டதென்பது புவனேஸ்வரிக்குப் புலனாகியது. அதை யோசித்து முடிப்பதற்குள், மலரை அழைத்துக் கொண்டு தஞ்சாவூர் செல்ல வித்துவான் கொழும்புக்கு பயணப்பட்டுவிட்டார்.

அதிர்ச்சியென்பதன் முழு தாற்பரியமும் அந்தச் சொல்லில் புவனேஸ்வரி அன்று உணர்ந்தாள்.

அறுபதுகளின் மேல் இலங்கை அரசியல் நிலைமைகளில் அழுத்தம் திரள ஆரம்பித்துவிட்டதெனலாம். தென்னிலங்கையிலிருந்து வடவிலங்கைவரையான மக்களின் வாழ்வுப் புலமே பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியது. ஆயினும் பெரும்புயலை எதிர்பார்த்த கரைபோல தேசம் நெருக்குண்டிருந்தும், காலத்தின் இயங்குதற் சீரில் பெருமாற்றமேதும் வெளிப்படக் காணப்படவில்லை. அது மலரின் தஞ்சாவூரிலிருந்தான திரும்புகைக்கு ஏற்ற ஒரு காலமாகத்தான் இருந்தது.

தஞ்சாவூரிலிருந்து மலர் திரும்பியதும், கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமாய் கச்சேரிகளுக்கு வீணை வாசிக்க ஆயத்தம் பண்ணியபடி அவள் இரண்டிடங்களிலும் மாறி மாறித் தங்கியிருந்தாள்.

வழக்கம்போல் திடுதிப்பென்று கொழும்பு துறைமுகப் பிரிவில் அதிகாரியாய்க் கடமையாற்றிய ஒருவருக்கு அவளை பெண்பார்க்க ஏற்பாடுசெய்தார் வித்துவான் வீரகத்தி. பெண் பார்க்கிற வைபவம் கொழும்பில் நடந்தது.

அந்த மண ஏற்பாட்டை மலரும் மனப்பூர்வமாகத்தான் ஏற்றுக் கொண்டாளென்று அன்னபூரணம் மாமியின் பேச்சில் அறிந்தபோது அவள் ஆச்சரியம் மேவினாள்.

ஒருமுறை ஊருக்கு வந்த மலரிடமே அவள் அதுபற்றிக் கேட்டாள். மாப்பிள்ளையும் குடும்பத்தாரும் தான் வீணை வாசிப்பதை கல்யாணத்தின் பின்னரும் அனுமதிப்பதால் தனக்கு அந்தத் திருமணம் சம்மதமே என்றாள் மலர்.

'மழை வா! வெய்யில் போ!' பாட்டுப் பாடிய காலத்திலிருந்து முளைவிட்டு வந்த நடனத்தின்மீதான உள்ளார்ந்த ஆதர்ஷத்தினை அதன்மூலம் முடிவுக்குக் கொண்டுவருகிறாளா சிவயோகமலர்? புவனேஸ்வரி கேட்க மனமுந்தினாலும் ஒரு சிரமத்தில் அடக்கிக்கொண்டாள்.

அவ்வாறாக ஏற்பாடான அந்தத் திருமணம் மணமகன் குடும்பத்தில் நேர்ந்த ஒரு விபத்து மரணத்தால் ஓராண்டுக்கு தாமதித்து, மேலும் ஆறு மாதத்திற்குள்ளாக திருமணமே காரணம் எதுவும் வெளித் தெரியாதபடி குழம்பிப்போனது. எல்லோரும்போல் புவனேஸ்வரியும் திகைத்தாள். அந்தளவு திகைப்பைக்கூட மலரின் முகத்தில் காணாதபோது அதை அவள் பெரிய ஆச்சரியமாகக் கருதினாள். அதன் காரணமும் அவள் மலரிடம் கேட்க மனமுந்தி பின்னர் தவிர்த்துக் கொண்டாள்.

ஆனால் மாமன் வீரகத்தி தன் சகோதரியிடம் மயிலைக் கேட்க அவள் புவனேஸ்வரியின் முகத்தை விடைக்காக ஏறிட்டபோது அவளிடத்தில் ஒரேயொரு கேள்விதான் நின்றிருந்தது. மலருக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த திருமணம் நின்றுபோனதற்கு அவளைத் தஞ்சாவூர் அனுப்பவைத்த அதே காரணமா அல்லது இன்னொன்றா காரணமாயிருந்தது?

அதை அவள் மாமனிடமே கேட்க முடியாததில் மலர்- மயில் இருவருக்கிடையில் ஒரு மயிரளவிலிருந்த ஜாதகப் பொருத்தமின்மையை அழுத்தமாக வற்புறுத்தினாள். மயிலும் இயக்கக் கூட்டங்களுக்கென்றும் நோட்டீசு ஒட்டவென்றும் போய்வந்து கொண்டிருந்தமை அந்தளவில் ரகசியமாய்த் தெரியவர மாமனும் வேறு சாட்டின்றி அந்த முயற்சியைக் கைவிட்டார்.

மலரோ எதுவும் நடவாததுபோல் தஞ்சாவூரில் பழகிய தன் முகத்தில் லேசாயேனும் சிரிப்பை ஒட்டும் விந்தையைச் செய்தபடி நிர்விகற்பமற்று இருந்திருந்தாள்.

அந்த நிலை ஒரு வாரம் நீடிக்கவில்லை. மலருக்கு நடனசுந்தரத்துடன் கல்யாணம் நிச்சயமாகிவிட்ட விஷயத்தை வித்துவானே எதிர்ப்படும் ஊர் முக்கியத்தர்களை வலிய அணுகி தெரிவித்துக்கொண்டிருந்தார். அப்போது அவர் முகத்தில் விளங்கிய கலகலப்பைக் கண்டிருக்கவேண்டுமே!

உள்ளுக்குள்ளாயேனும் சில சொந்தங்கள் மலரினதும் நட

னத்தினதும் பொருத்தமின்மையைப் பேசியபோது, புவனேஸ்வரிமட்டும் எண்ணினாள், நீண்டகால உள்மன விருப்பங்களினதும், ஒற்றைப்போக்கான மனநிலைகளதும் அளவீட்டில் அது வலு பொருத்தமான இணையென.

பலரும் கவனமுறாத இன்னோர் அம்சத்தையும் அந்தத் தொடர்பில் புவனேஸ்வரி கண்டிருந்தாள்.

நடனசுந்தரத்தின் பள்ளிக் கால கல்வித் திறமைகள் பள்ளிகள் அளவிலேயே பெயரீட்டி அவனுக்குக் கொடுத்தன. அதில் ஏதாவது மனக்குறுக்கத்தை மலர் அடைந்ததற்கான வெளிப்பாடான அம்சமேதும் அவளில் புவனேஸ்வரி கண்டிருக்கவில்லை. ஆனால் அவள் மனக் குறுக்கமடைந்ததும், அதை வெளியாகவே சொல்லிக்கொண்டதுமான ஓரம்சம் இருந்தது. அது இலங்கை ஓவியக் கண்காட்சிகளில் நடனசுந்தரத்தின் ஓவியத் திறமை போற்றப்பட்டமை.

'பேப்பர் வாங்க காசிருக்குமோ தெரியா, என்னத்தில கீறி அந்தத் திறமையை நடனம் வளத்திருக்கும்?'

அந்த மனவெக்கை தஞ்சாவூர் சென்று பெரும் கலைஞர் சபேசய்யரிடம் வீணை கற்றதோடு அவள் அழிந்துபோனாள். அப்போது அவளும் பலரறிந்த வீணைக் கலைஞர். மேடைகள் அவ்வப்போதுதான் கிடைத்தாலும் சங்கீத வித்துவமுள்ளவர்களுக்கு வாசிக்க அவளால் முடிந்திருந்தது. அது அவளை அவனுக்குச் சமாந்தரமாக நிமிர வைத்தது.

நடனம் - மலர் திருமணம் முடிய, வித்துவானே முன்னின்று புவனேஸ்வரியின் திருமண ஏற்பாட்டையும் செய்துமுடித்தார்.

1983 ஆடி வந்தது. கலவர காலத்தின் பின் மயிலை வீட்டுள் பொத்திப் பொத்தி வைத்துக் காப்பாற்றும் நிலைமையாகி விட்டது புவனேஸ்வரிக்கும் அன்னலட்சுமிக்கும்.

மயிலின் அத்தான் சுந்தரமூர்த்தி மிகவும் சாந்தமானவராக, அதேவேளை நடைமுறை விவகாரங்களில் கூர்மையான அவதானமுள்ளவராக இருந்தார். அவர் புவனேஸ்வரியிடம் கூறினார்: 'நீங்கள் இந்தமாதிரி மயிலை வெளியில விடாமல் வீட்டில பூட்டிவைச்சுக் காப்பாத்தியிடேலாது, புவனா. பெடியள் வெளிநாட்டுக்கு ஓடிக்கொண்டிருக்கிறாங்கள் கனபேர் ஈரோப்புக்குப் போய்ச் சேந்திட்டாங்கள். மயிலையும் அனுப்புங்கோ. அதுதான் சரியான பாதுகாப்பாயிருக்கும்.'

புவனேஸ்வரி அவருடைய ஆலோசனையைச் சந்தேகப்படவில்லை. அவளுக்கும் ஊர் நிலவரம் தெரிந்திருந்தது.

சுந்தரமூர்த்தியே தேவையான பணத்துக்கு ஒழுங்குசெய்து கொடுத்தார். கரவெட்டியிலிருந்து கிளம்பி ஆண்டு ஒன்றாகிற வரையில் பிரான்ஸ் போய்விட்ட செய்தியைத் தாங்கி மயிலின் கடிதம் ஒருநாள் புவனேஸ்வரிக்கு வந்தது.

அன்று வீட்டில் ஒரு கொண்டாட்ட நாளாய் இருந்தது.

சுந்தரமூர்த்திக்கும் சில காலத்தின் பின் கொழும்புக்கு மாற்றலாகியது.

அம்மா அதற்குள் தவறிப்போயிருந்தார். சுந்தரமூர்த்தியும் புவனேஸ்வரியும் இரண்டு பிள்ளைகளும் வெள்ளவத்தையென்கிற தென்னிலங்கையின் பிரசித்திபெற்ற தமிழ்ப் பகுதியில் வந்து குடியேறினார்கள்.

அது பூகம்ப பூமியில் குடியேறிவிட்ட மனநிலையை அவர்களுக்குக் கொடுத்தாலும் அதிலிருந்து அவர்கள் விரைவில் மீண்டார்கள்.

அங்கே அவளுக்கு கிடைத்த அனுபவங்கள் அளப்பரியவை ஒருவகையில் பயங்கரமானவை. அவற்றையும் தாங்கி உடைக்க முடியா நெஞ்சுரத்துடன் ஏறக்குறைய சுந்தரமூர்த்தி இல்லாமல் போனபிறகும் முப்பது ஆண்டுகளை அங்கே புவனேஸ்வரி கழித்தாள்.

அங்கேதான் மலருடனான இரண்டாம் கட்ட சந்திப்பை கைபிடித்து நடத்திச்சென்று மிஸ் ஆசீர்வாதத்தின் தொடர்பு புவனேஸ்வரிக்கு ஏற்படுத்துகிறது. அதுதான் தனிமனித வாழ்வின் காலடிகள் எவ்வளவு அவதானமாக வைக்கப்படவேண்டியன என்பதும், அவை தவறும்பட்சத்தில் எவ்வளவு பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேர்கிறதென்பதும் புவனேஸ்வரி தெரிந்தாள்.

அவளொரு அழிவின் தரிசன சாட்சியம்.

மயிலிடமிருந்து வந்த தொலைபேசி உரையாடலில் விரைவு விரைவாக நாற்பது ஐம்பது ஆண்டுகளை மனத்தில் மீட்டுப் பார்க்க புவனேஸ்வரிக்கு வேளை இருந்தது. இனிமேல் அவற்றை விரித்தெண்ண வாய்ப்பு வரலாம், வராமலும் போகலாம். யாருக்கு எதுதான் நினைத்தபடி நடந்திருக்கிறது அந்தக் காலகட்டத்தில், இவருக்கு நடக்குமென நிச்சயமாய்ச் சொல்ல? மேலும் அவரே ஓர் அழிவின் சாட்சியாக இருக்கிற வகையில் அநாயாசமாய் அதைச் செய்துவிடவும்கூடாது.

அது கூண்டேறக்கூடாத சாட்சி.

ஆனால் அவரில்லையேல் யாரேனும் நினைக்கவும்வேண்டும்.

அதுவே தொடுப்புகளின் இணைப்பாக, உறவுகளின் தொடுப்பாக பலபேருக்கு இருந்துகொண்டிருக்கிறது.

புவனேஸ்வரி தன் இருப்பின் விறைப்பைப் போக்க சாய்மனை யிலிருந்து எழுந்தார்.

அல்வாய் சிவனாலயத்தில் கண்டாமணி ஒலித்துக்கேட்டது.

(தொடரும்...)



devakanthan@thaiveedu.com

# ஒரு பயணிக்கு முதியவரின் அறிவுரை



–வில்லியம் சரோயன்

தமிழில் – என்.கே.மகாலிங்கம்

ஒரு முறை என் மாமா மெலிக், ப்றெஸ்னோவிலிருந்து நியுயோர்க்கிற்கு பயணம் செய்தார். அவர் புகைவண்டியில் ஏறுவதற்கு முன் காரோ என்ற அவருடைய மாமா அவரைக் காண வந்து பயணங்களில் உள்ள ஆபத்துகளை அவருக்கு எடுத்துச் சொன்னார்.

நீ புகைவண்டியில் ஏறியவுடன் உன்னுடைய இருக்கையைக்

கவனமாகத் தெரிவு செய்து கொண்டு அதன் பின் அதில் இரு. அங்குமிங்கும் பார்க்காதே, என்றார் அந்த முதியவர்.

ஓம் என்று சொன்னார் என்னுடைய மாமா.

புகையிரதம் வெளிக்கிட்ட சில கணங்களில் சீருடை அணிந்த இருவர் வந்து உன்னுடைய பயணச் சீட்டைக் கேட்பார்கள். அவர்களை கண்டு கொண்ட மாதிரி நீ காட்டிக் கொள்ளாதே. அவர்கள் ஏமாற்றுக்காரர்கள்.

அது எனக்கெப்படித் தெரியும்?

உனக்குத் தெரியும். நீ இப்பொழுது சின்னக் குழந்தை அல்ல.

ஓம், மாமா.

இருபது மைல்கள் கடந்த பின் இணக்கமான ஒரு இளைஞன் வந்து உனக்கு ஒரு சிகரெற் தருவான். நீ புகைப்பதில்லை என்று அவனுக்குச் சொல். சிகரெற்றுக்குள் ஊக்க மருந்து இருக்கும்.

ஓம், மாமா.

நீ புகைவண்டியிலுள்ள உணவுக்கூடத்திற்குப் போகும் வழியில் மிக அழகான ஒரு இளம் பெண் வேண்டுமென்றே உன்னை மோதுவாள். ஏறக்குறைய உன்னைத் தழுவுவது போல. இடித்த பின் பெரிதாக மன்னிப்பு கேட்பாள். கவர்ச்சியானவள். நீ இயல்பாகவே அவளுடைய சிநேகிதத்தை விரும்புவாய். உன்னுடைய இயல்பான விருப்பத்தைக் கைவிட்டு விட்டு போய்ச் சாப்பிடு. அவள் ஒரு ஏமாற்றுக் காரி.

அப்படியென்றால் என்ன? என்று என்னுடைய மாமா கேட்டார்.

ஒரு வேசை என்று சொல்லி முதியவர் சத்தம் போட்டார். தொடர்ந்து, போய் சாப்பிடு. நல்ல உணவுக்கு ஆணை கொடு. உணவகத்தில் கூட்டம் அதிகமாக இருந்தால் அந்த அழகான பெண் உன்னுடைய இருக்கைக்கு முன்னால் வந்து இருப்பாள். இருந்தால் அவளுடைய கண்களைப் பார்க்காதே. அவள் கதைத்தால் காது கேட்காதவன் போல் நடி.

ஓம், மாமா.

காதுகேட்காதவன் போல இருப்பது தான் அதிலிருந்து தப்புவதற்குரிய ஒரே வழி என்றார் முதியவர்.

ஒரே வழி என்றால்?



வில்லியம் சரோயன் 1908-1981 - அமெரிக்க நாடகாசிரியர், நாவலாசிரியர், சிறுகதை ஆசிரியர். இவர் ஆமெர்னிய அமெரிக்கர். கலிபோர்ணியாவில் பிறந்தவர். இவரின் தந்தை ஓட்டோமன் பேரரசிலிருந்து அமெரிக்காவில் குடியேறியவர். சரோயன் ஆர்மேனியக் குடியேறிகளின் வாழ்க்கை பற்றி விரிவாக எழுதியுள்ளார். இவருடைய சிறந்த படைப்புக்களாக அறியப்பட்டவை: The Time of Your Life, My Name is Aram, My Heart's in the Highlands. இங்கே மொழியாக்கம் செய்யப்பட்ட கதை இரண்டாவதாக மேலே குறிப்பிட்ட நூலிலிருந்து எடுக்கப்பட்டது. 1940-இல் நாடகத்திற்கான புலிற்சர் பரிசு இவருக்குக் கிடைத்தது. 1943-இல் The Human Comedy என்ற அவருடைய நாவலைத் தழுவி எழுதிய சினிமா நாடகத்திற்காக அதிசிறந்த கதைக்கான அகடெமி விருது கிடைத்துள்ளது.

இவர் ஹெமிங்வே, ஸ்ரைன்பேக், போக்னர் போன்றவர்களுடன் ஒப்பிடக் கூடியவர். இருபதாம் நூற்றாண்டு அமெரிக்க இலக்கியத்தில் முக்கியமானவர். ஆனால் 'இருபதாம் நூற்றாண்டில் குறைத்து மதிப்பிடப்பட்ட ஒருவர் இவர்' என்று ஒரு விமர்சகர் இவரைப் பற்றிச் சொல்கிறார். இவர் மக்களையும் அமெரிக்காவையும் மிகவும் நேசித்தவர். வாழ்வில் பிறர் தரிசிக்காத இலக்கிய உலகை இவர் படைத்துள்ளார்.

மோசமான எல்லா நரகங்களிலும் இருந்தும் சீரழிவிலிருந்தும் உன்னைக் காப்பாற்றிக் கொள்ள காது கேளாதவன் போல நடி. நான் பல இடங்களுக்கும் பயணித்திருக்கிறேன். நான் என்ன சொல்கிறேன் என்பது எனக்குத் தெரியும்.

ஓம் மாமா.

இனிமேல் இதைப்பற்றி நாம் கதைக்க வேணாம்.

ஓம் மாமா.

நாங்கள் இந்த விஷயத்தைப் பற்றித் திரும்பவும் கதைக்க வேணாம். அது முடிந்து விட்டது. எனக்கு ஏழு குழந்தைகள். என்னுடைய வாழ்க்கை நிறைவானது, நீதியானது. அதைப் பற்றி இன்னொரு தரம் நாங்கள் சிந்திக்கத் தேவையில்லை. என்னிடம் நிலம் இருக்கிறது. முந்திரிச் செடிகள், மரங்கள், மந்தைகள் இருக்கின்றன, பணம் இருக்கிறது. ஆனால் ஒருத்தனிடம் எல்லாம் இருக்கத் தேவையில்லை.

ஓம், மாமா.

உணவகத்திலிருந்து நீ திரும்பி வரும்போது புகை பிடிக்கும் ஒருத்தனை சந்திப்பாய். சிலர் சீட்டுக்கள் விளையாடிக்

கொண்டிருப்பார்கள். விளையாடுபவர்கள் நடுத்தர வயதுடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் தங்கள் விரல்களில் மிகவும் உயர்ந்த விலையுள்ள மோதிரங்கள் அணிந்திருப்பார்கள். உன்னைப் பார்த்து நட்புடன் தலையை அசைப்பார்கள். அவர்களில் ஒருத்தன் தங்களுடன் விளையாட்டில் சேர்ந்து கொள்ள அழைப்பான். அவர்களுக்குச் சொல்லு, நோ ஸ்பீக் இங்கிலீஷ் என்று. அப்படி மாமா தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார்.

ஓம், மாமா.

அவ்வளவுந்தான்.

மிக்க நன்றி என்றார் மாமா.

இன்னொன்று என்றார் மாமா. இரவு படுக்கப் போகும்போது, உன் பைக்குள்ளிருந்து காசை எடுத்து சப்பாத்துக்குள் வை. பின் சப்பாத்தை தலையணைக்குக் கீழே வைத்திரு. இரவு முழுவதும் தலையை தலையணையில் வைத்திரு. நித்திரை கொள்ளாதே.

ஓம், மாமா.

அவ்வளவுந்தான்.

முதியவர் போய் விட்டார். அடுத்த நாள் என்னுடைய மாமா மெலிக் புகையிரதத்தில் ஏறி, அமெரிக்காவை ஊடறுத்து நியு யோக்குக்குப் பயணம் செய்தார். அங்கே சீருடையில் வந்த இரண்டு பேரும் மோசடிக்காரர் அல்ல. ஊக்க மருந்து வைத்த சிகரெற்றுடன் ஒரு இளைஞன் தோன்றவில்லை. உணவகத்தில் மேசையின் குறுக்கே அழகான இளம் பெண் இருக்கவில்லை. சீட்டுக் கட்டு விளையாடிக் கொண்டு ஒருவரும் இருக்கவில்லை. என்னுடைய மாமா முதல் நாள் காசை எடுத்து சப்பாத்துக்குள் வைத்து சப்பாத்தை தலையணைக்குக் கீழே வைத்து அதில் தலையை வைத்துப் படுத்திருந்தார். முழு இரவும் நித்திரை கொள்ளவில்லை. ஆனால் அடுத்த நாள் அந்த சடங்கைக் கைவிட்டு விட்டார்.

இரண்டாவது நாள் அவரே இன்னொரு இளைஞனுக்கு சிகரெற் ஒன்றைக் கொடுத்தார். அவன் அதை வாங்கிக் கொண்டான். உணவகத்தில் ஒரு மேசையில் இருந்த இளம் பெண்ணுக்குப் பக்கத்தில் அவரே போய் அமர்ந்து கொண்டார். பிரத்தியேகமாகப் புகைபிடிக்கும் இடத்தில் போய் அமர்ந்து போக்கர் சீட்டு விளையாடினார். நியு யோர்க்கிற்குப் போய்ச் சேருவதற்கு முன்பே புகைவண்டியிலுள்ள அனைவரையும் மாமாவுக்குத் தெரிய வந்துவிட்டது. அவர்களுக்கும் அவரைத் தெரிந்து விட்டது. ஒகையோவிற்கு ஊடாக புகைவண்டி போய்க் கொண்டிருக்கும்போது என்னுடைய மாமாவும் அவரிடம் சிகறெற் வாங்கிக் குடித்தவரும் வாசர் என்ற இடத்திற்குச் சென்று கொண்டிருந்த இரண்டு இளம் பெண்களும் சேர்ந்து நாலுபேருமாக த வோபோஷ் ப்ளூஸ் என்ற பாடலைப் பாடினார்கள்.

பயணம் மிகவும் இனிமையாக இருந்தது.

என்னுடைய மாமா மெலிக் நியு யோர்க்கிலிருந்து திரும்பி வந்தபோது அவருடைய மாமாவான காரோ அவரைத் திரும்பவும் பார்க்க வந்தார்.

நீ நன்றாக இருக்கிறாய், என்றார் அவர். நான் சொன்னதன்படி நடந்தாயா?

ஓம் மாமா என்றார் என்னுடைய மாமா.

முதியவர் வெளியில் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தார்.

என்னுடைய அனுபவத்தால் இன்னொருவர் நல்ல பயனடைந் துள்ளார் என்றார் அவர்.



mahalingam.k@thaiveedu.com


சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

**Uthayan Alex Sivasambu** B.Sc. (Hons), M.B.A

Broker

**Ottawa: 613.276.SALE (7253)**
**Toronto: 416.659.SELL (7355)**

alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



# நகரும் காய்கள், வீழும் தேசங்கள்

28
உலகப் பேரரசுகள்
எழுந்த சாதனைகளும்
வீழ்ந்த வேதனைகளும்

நிமால் நாகராஜா

தஞ்சையை சுற்றி சிறியதொரு தேசமாக மிளிரத் தொடங்கிய சோழர்களின் ஆட்சியை, தன் ஒருவனின் ஆட்சிக்காலத்திலேயே மாபெரும் சாம்ராஜ்ஜியமாக மாற்றிக் காட்டிய பெருவீரனான ராஜராஜன், தன் மனதுக்கு விரும்பிய ராஜராஜீஸ்வரம் கோயிலை கட்டிய திருப்தியில் அடுத்த இரண்டு வருடங்களில், பொ.ஆ.பின் 1014-ல் இறந்து போனான்.

தமிழர்களின் பெருமையை, வீரத்தை, நிர்வாகத் திறமையை, பெருங்கடல்களை வெற்றி கொண்ட வித்தையை ஆயிரம் வருடங்களுக்கு முன்பே ஆணித்தரமாக உலகெங்கும் காட்டிப் போன அந்த பெருவீரன் இறந்த சமாதிகூட இப்போது எங்களிடம் இல்லை என்பது வரலாற்றுத் துயரம். தனது ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த முக்கிய விடயங்களை எல்லாம் கல்லிலே பொறித்த அந்த மகாவீரனின் கல்லறை எங்கே இருந்திருக்கும் என்பதில் இன்றும் கூட தெளிவில்லை. தனது இறுதிக் காலத்தை அவன் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள உடையளூர் பகுதியில் கழித்ததாகவும், அங்கே தான் அவனது உடல் அடக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் சரித்திர ஆசிரியர்கள் நம்புகிறார்கள்.

ராஜராஜனுக்கு பிறகு, சிம்மாசனத்தில் ஏறியவனுக்கு வீரத்தையும், விவேகத்தையும் கற்றுக் கொடுக்கத் தேவையிருக்கவில்லை. தந்தையின் காலத்திலேயே படைத்தளபதியாக, மாதண்டநாயகனாக வலம் வந்து களம் பல கண்ட ராஜேந்திரசோழனுக்கு தந்தை விட்டுச் சென்ற சாம்ராஜ்ஜியம் போதுமானதாக இருக்கவில்லை.

சோழர்களின் வரலாற்றிலேயே மிகப்பலம் பொருந்திய படைகளை கொண்டவனும், தென்கிழக்காசிய கடல்களை கம்பீரமாக கடந்து சென்ற பெரும் கடற்படையினை கொண்டு சுற்றி இருந்த நாடுகளை தன் காலடியில் வீழ்த்தியவனுமான ராஜேந்திர சோழனின் காலம் தான் சோழர்களின் மிகப்பெரும் பொற்காலம்.

ராஜேந்திர சோழனின் காலத்தில் இலங்கைக்கும் இடி விழுந்தது. அவனின் எள்ளுப்பாட்டன் பராந்தகன், பாண்டியனோடு போர் புரிந்த போது, தோற்றுப் போன பாண்டியர்கள் தங்களது மணிமுடியையும், செங்கோலையும் இலங்கையில் ஒளித்து வைத்திருந்தனர்.

பாண்டியரின் கௌரவத்தின் அடையாளமாக இருந்த மணிமுடியை இலங்கை மீது படையெடுத்து கைப்பற்றிக் கொண்டான் ராஜேந்திர சோழன். கூடவே இலங்கை மன்னன் ஐந்தாம் மகிந்தனை சிறைபிடித்து சோழதேசம் கொண்டு வந்தான். மகிந்தன் சோழதேசத்து சிறையிலேயே இறந்து போனான்.

இப்போது பேரரசன் ராஜேந்திர சோழனின் பார்வை வடக்கு நோக்கி பதிந்தது. அவனது தலைமையில் படைகள் நகர்ந்தது. அவனது பெரும்படையை எதிர்க்க முடியாமல் வரிசையாக நாடுகள் அடிபணிந்தன.

இப்போது கோதாவரி நதிக்கரையில் சோழப் பெரும்படை வந்து நிற்கின்றது. அதற்கு அப்பாலும் பெரும் சாம்ராஜ்ஜியங்கள் இருக்கின்றன. அவற்றையும் வெற்றி கொள்ள சோழப்படை தயாராகின்றது.

சோழச் சக்கரவர்த்தி சக்கரகோட்டம் என்ற பகுதியில் ஒரு பகுதி படையோடு தங்கியிருக்க, மிகுதிப் படை அரையன் ராஜராஜன் என்ற தளபதியின் கீழ் வடக்கு நோக்கி, கங்கை நதியை நோக்கி முன்னேறத் தொடங்குகிறது.

இரண்டு வருடங்கள் நீடித்த இந்தப் படையெடுப்பு தான், சோழர்களுக்கு பெருந் தொகையான செல்வத்தை வாரி வழங்கியது. சோழர் படை நடந்த வழியெங்கும் தோற்றோடிய, சரணாகதி அடைந்த அரசுகளின் செல்வங்கள் சோழர்கள் வசம் வந்து சேர்ந்தது.

வங்காள தேசத்தில் பரந்திருந்த பால சாம்ராஜ்ஜியம் மிகப் பலம் பொருந்தியது. அதன் சக்ரவர்த்தி மஹிபாலன் போருக்கு வருகிறான்.

சோழர் படையோ தங்கள் தலைநகரத்திலிருந்து மிகத் தொலைவிலிருக்கிறது. அதை தவிர தொடர்ச்சியான போர்களினால் களைத்தும் போயிருக்கிறது. மஹிபாலனின் படை-யோ தனது சொந்த தேசத்தில் வெகு உற்சாகமாக போர்க்களத்திற்கு வருகிறது. தங்களது வெற்றியையிட்டு அவர்களுக்கு சந்தேகம் கிடையாது.

ஆனாலும் மிக நீண்ட கால போர் அனுபவமும், அதீத வீரமும் கொண்ட சோழர் படையின் முன்னால் எதுவும் பலிக்கவில்லை. பால சாம்ராஜ்ஜியம் மண்டியிடுகிறது.

புனிதமாக கருதப்படுகின்ற கங்கை நதியின் நீரை குடங்க

ளில் நிரப்பி, தோற்றுப் போய் மண்டியிட்ட மன்னர்களின் தலைகளில் வைத்தபடியே சோழர் தலைநகரம் வந்து சேர்ந் தான் ராஜேந்திர சோழன்.

ஆனாலும் கங்கையின் புனித நீர் வந்து சேர்ந்த இடம், நூற்று எழுபத்தாறு ஆண்டுகளாக சோழர்களின் தலைநகர மாக புகழ்பெற்றதும், தந்தை ராஜராஜன் கட்டிய பிரமிக்க வைக்கும் பெரிய கோயில் அமைந்திருந்ததுமான தஞ்சாவூர் நகரம் கிடையாது.

ராஜேந்திர சோழனுக்கு தஞ்சையை கைவிட்டு, புதிய தலை நகரம் ஒன்றை மிகப் பிரமாண்டமாக உருவாக்கும் கனவு நீண்டகாலமாக இருந்தது. வடக்கு நோக்கிய படையெடுப்பு தந்த அளவற்ற செல்வத்தால் கஜானா நிறைந்து வழிந்தது. புதிய தலைநகரம் அமைவதற்கான சரியான தருணம் இது.

புனித கங்கை நீர் தெளிக்கப்பட்டு, 'கங்கை கொண்ட சோழ-புரம்' என வரலாற்றில் புகழ்பெறப் போகும் புதிய தலைநக ரம் பெரும் கோட்டை கொத்தளங்களுடன் உருவாகத் தொடங்கியது. அரச அதிகாரமும், நிர்வாகமும் புதிய நக ருக்கு இடம் மாறவே, தஞ்சாவூர் தனது முக்கியத்துவத்தை, தன் அழகை மெது, மெதுவாக இழக்கத் தொடங்கியது.

அதன் பிறகு தஞ்சாவூர் தனது பழைய பெருமையை அடை யாமலே, இருநூறு வருடங்களுக்கு பின்பு, பாண்டிய மன் னன் சுந்தர பாண்டியன் கைகளில் அகப்பட்டு சின்னாபின்ன மாகி சிதைந்து போனது.

இந்திய துணைக் கண்டத்தின் வட எல்லை வரை வெற்றி கொண்ட சோழச்சக்கரவர்த்தியின் கண்கள் இப்போது இந்து மகா சமுத்திரத்தின் கிழக்குத் திசையினைநோக்கி விரிகின்றன.

பொ.ஊ.பி. பத்தாம் நூற்றாண்டில், சோழப் பேரரசின் மேற்கே அரேபிய தேசத்திலும், கிழக்கே சீன தேசத்திலும் காட்சிகள் மாறுகின்றன. பாத்திமைட்ஸ் பேரரசு அரேபிய பிர தேசத்தில் கோலோச்சத் தொடங்க, சீனாவில் சோங் சாம்ராஜ் ஜியம் வலுவாக மேலெழும்புகின்றது. இரண்டு பெரும் பேரர சுகளோடும் வாணிபம் செய்வது மிகுந்த செல்வத்தை தரக் கூடியது.

சீன தேசத்துடனான சோழ வணிகத்தின் பாதையில், மலாக்கா நீரிணையை உள்ளடக்கியபடி அப்போது வலிமை மிக்க ஸ்ரீவிஜய பேரரசு பரந்திருந்தது. அதன் சக்கரவர்த்தி சைலேந்திர குல மன்னனான சங்கராம விஜயோத்துங்கவர்-மன். ஸ்ரீவிஜய பேரரசும், சோழப் பேரரசும் நீண்ட காலமாக நட்புறவு கொண்டவை. சோழரின் மிக முக்கியமான துறைமு கமான நாகப்பட்டினத்தில் சைலேந்திர மன்னர்கள், ஒரு பௌத்த சூடாமணி விகாரத்தை ராஜராஜ சோழனின் ஆதரவு டன் கட்டியும் கொடுத்திருந்தனர்.

சீனாவுடனான வணிகத்தில் ஸ்ரீவிஜயம் கொடி கட்டிப் பறந் தது. தனது கடல் பிரதேசத்திற்குள்ளால் பயணிக்கும் வெளி நாட்டுக் கப்பல்கள் அனைத்தும் தனது துறைமுகங்களில் தங்கி வரி கட்ட வேண்டும் எனவும் ஸ்ரீவிஜயம் நிபந்தனை விதித்தது. வரி கட்டாமல் தப்பியோடும் வணிகக் கப்பல் களை ஸ்ரீவிஜயத்தின் கடற்படை கலைத்துப் பிடித்து கொள் ளையடித்தது. ஸ்ரீவிஜயம் செல்வத்தில் மிதந்தது.

சீனவுடனான நேரடி வணிகத்திற்கு தயாராகிக் கொண்டிருக் கும் சோழ தேசத்திற்கு ஸ்ரீவிஜய சாம்ராஜ்ஜியம் மறைமுகத் தடையாக இருந்தது.

அரசியல் சதுரங்கத்தில் நண்பனும் எதிரியாகும் காலம் வரும். அது ஸ்ரீவிஜய சாம்ராஜ்ஜியத்திற்கும் நிகழ்ந்தது.

சோழரின் பெரும் கடற்படை தனது நீண்ட பயணத்தை தொடங்கியது.

ஸ்ரீவிஜயத்தின் பாரிய கடற்படை மலாக்கா நீரிணையின் முகத்துவாரத்தில் நிலை கொண்டிருந்தது. ஸ்ரீவிஜயத்தின் தலைநகரை அடைய அதுவே இலகுவான, குறுக்கு வழி. ஆனால் சோழர் கடற்படை தென் திசை நோக்கி நீண்ட தூரம் பயணித்து, சுந்தா நீரிணை வழியாக ஸ்ரீவிஜயத்தின் தலைநகரை அடைந்து அதனை சூறையாடியது.

ஸ்ரீவிஜயம் திகைத்துப் போனது. சோழர்கள் தங்கள் மீது படை யெடுப்பார்கள் என அது கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

தற்போதைய இந்தோனிசியா, மலேசியா, சிங்கப்பூர், தென் தாய்லாந்து தேசங்களில் பரந்திருந்த ஸ்ரீவிஜய பேரரசையும், அதன் அண்டை அரசுகளையும் சோழர் படை கபளீகரம் செய்யத் தொடங்கியது.

பொ.ஊ.பி. 1025-ம் ஆண்டில் நிகழ்ந்த சோழர்களின் இந்தப் படையெடுப்பு அன்றைய ஸ்ரீவிஜயத்தை மட்டுமல்ல, இன் றைய சில சரித்திர ஆசிரியர்களைக் கூட திகைக்க வைத்தி ருக்கிறது.

ஆனால், ராஜராஜ சோழனும், ராஜேந்திர சோழனும் கண்ட பெருங்கனவை நனவாக்கிய இந்தப் படையெடுப்பின் ஆரம்ப புள்ளி நாற்பது வருடங்களுக்கு முன்னரே இலங்கை மீதான முதல் கடற்படையெடுப்பின் போதே போடப்பட்டு விட்டது.

தெற்கே இலங்கை, மாலைதீவு, மேற்கே கேரள கடற்பிரதே சங்கள், கிழக்கே வங்காள விரிகுடா என ஒன்றன் பின் ஒன் றாக தந்தையும், தனயனும் வெற்றி கொண்டதன் காரணம் வெறும் நிலம் பிடிப்பது மட்டுமல்ல, மொத்த தென் கிழக்கா சிய பெருங்கடல் பிரதேசங்களையும் தங்கள் கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வந்து முழு வாணிபத்தையும் சோழ சாம்ராஜ் ஜியத்தின் கைகளுக்குள் கட்டுப்படுத்துவது தான் என்பதை ஆய்வாளர்கள் வியப்போடு பார்க்கிறார்கள்.

அடுத்த பல தசாப்தங்களுக்கு தென்கிழக்காசிய கடல்களில் புலிக்கொடியை பறக்க விட்டபடி சோழர் கடற்படை கம்பீர மாக வலம் வந்தது. தமிழர்களின் வாணிபம் கொடி கட்டிப் பறந்தது. சோழ சாம்ராஜ்ஜியத்தில் செல்வம் குவியத் தொடங்கியது.



nimal.nagaraj@thaiveedu.com



BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474


FOR SALE/ LEASE
FOR ALL YOUR REAL ESTATE NEEDS
கனவு இல்லம்
கைகளில் வர...
உங்கள் வீடு விற்பனை முகவர்...
#1
RE/MAX
Outstanding Agent
for Outstanding Results.
RE/MAX
Excel Realty Ltd.,
Bus: 905.475.4750 Fax: 905.475.4770 50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
RAJ NADARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 416.333.6115
nanohomes@gmail.com


கடன் தொல்லையா?
BANK
CREDIT CARD
ROBERT JONES
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை
கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?
சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்
Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்
அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com


BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center
for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000



BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS
REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



# வீடு வாங்க விற்க...

**18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்**

## ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

### வாங்கப் போகிறீர்களா?

- ☒ தரமான வீடு தவறிப்போகாது
- ☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- ☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
- ☒ பெருவருவாய் தரும் முதலீடு

### விற்கப் போகிறீர்களா?

- ☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
- ☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- ☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- ☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
















HOMELIFE
GRAND MASTER CLUB

Chairman's Club Award Winner 2015

Platinum Club Winner 2022

Chairman's Club Award Winner 2016

Chairman's Club Award Winner 2017

## Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: **416-786-0760**
info@vela4homes.com
www.vela4homes.com

**Homelife/Future Realty Inc.** Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8




அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
Gas Furnace CO
AATEK
HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in
customs homes Ductwork System
416.414.2280


Buy, Sell
Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasingham
Realtor
416.937.8090


SABONA


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 673.9863
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan
Subramaniam
Free Home Evaluation with No Obligation
416-816-0141


Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough


Finding Homes to
Fit Your Lifestyle
Suba Aynkharan
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX
COMMUNITY
REALTY INC.


NO MEDICAL
UP TO $500,000
50 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INSURANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
Kapital Care
Mortgage Inc.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


வீடு | வணிகம்
Residential | Commercial
★ BUY ★ SELL ★ LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!
• Home Evaluation
• Home Staging
• Professional Photography
• Social Media Marketing
• Just Listed & Feature Sheet


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
CENTURY 21
Percy Fulton Ltd.
Ravi Kana
Cell 416.725.7284 (RAVI)


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
Kapital Care
Mortgage Inc.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
416.261.1544

AEREN Thiyagarajah
647-888 3500
DILEEP Thangavel
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

$8475⁰⁰
416-888-9492
Swapna Chan, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749

HomeLife Today Realty Ltd.
Kuna Nagalingam
Sujatha Kunasegar
416.402.4545

RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225

Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
PYRAMIDGROUP

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
RE/MAX ACE

Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120

Sri Vallipuranathar
Credit Solution Centre
416.439.0224
416.450.5011

Suba Aynkharan
416-732-4444
RE/MAX COMMUNITY REALTY INC.

Uthayon Alex Sivasambu
Broker
COLDWELL BANKER

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com
RE/MAX ACE

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
CHANDRAN RASALINGAM
President & CEO
iNFORCE LIFe Financial Services Inc.
416-321-6000
QUALITY ADVICE YOU CAN TRUST

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
416 505 8532

DR. YALINI ARAVINTHAN BDS, DDS.
DENTIST
YAL Smiles
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524

RE/MAX NORTH REALTY
LATHAN VARATHARAJAH